# எழும்பிப் பிரகாசித்த இயேசுவின் சீடர்கள்!

எலன் ஜி. உவைட்

# THE ACTS OF THE APOSTLES

Ellen G White

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தேவனுடைய சபையின்மீதுள்ள அவரது நோக்கம்! | 1 |
| 2. | பன்னிருவருக்குப் பயிற்சி! | 9 |
| 3. | பெரும் ஏற்பாடு! | 17 |
| 4. | பெந்தெகொஸ்தே நாள்! | 27 |
| 5. | ஆவியின் வரம்! | 39 |
| 6. | ஆலய வாசலில்...! | 49 |
| 7. | மாய்மாலத்திற்கு எதிரான ஒரு எச்சரிக்கை! | 63 |
| 8. | சனகரீப் சங்கத்திற்கு முன்னால்...! | 71 |
| 9. | ஏழு சீடர்கள்! | 81 |
| 10. | ஸ்தேவான் கிறிஸ்துவின் முதல் இரத்தசாட்சி! | 91 |
| 11. | சமாரியாவில் நற்செய்தி! | 97 |
| 12. | உபத்திரவப்படுத்தியவன் ஊழியக்காரனாக மாறினான்! | 107 |
| 13. | ஆயத்தத்தின் நாட்கள்! | 119 |
| 14. | சத்தியத்தைத் தேடும் ஒருவன்! | 127 |
| 15. | சிறைச்சாலை என்ன செய்யும்? | 139 |
| 16. | அந்தியோகியாவில் நற்செய்தியின் தூது! | 151 |
| 17. | சுவிசேஷத்தின் கட்டியக்காரர்கள்! | 161 |
| 18. | பரமனின் பணியில் பயமில்லாத பவுல்! | 171 |
| 19. | யூதர்களும் புறஜாதியினரும்! | 181 |
| 20. | பவுலாரின் ஊழிய வாஞ்சை! | 193 |
| 21. | எல்லைகளுக்கும் அப்பால் சொல்லப்பட்ட நற்செய்தி! | 203 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 22. | தெசலோனிக்கேயர்! | 213 |
| 23. | அத்தேனே (ஏதன்ஸ்) பட்டணத்தில் பவுல் அடிகளார்! | 223 |
| 24. | கொரிந்து சபை! | 235 |
| 25. | தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்! | 247 |
| 26. | கொரிந்துவில் அப்பொல்லோ! | 261 |
| 27. | எபேசு பட்டணத்தில் இயேசுவைப்பற்றிய செய்தி! | 273 |
| 28. | வீழ்ச்சியடைந்த விக்கிரக ஆராதனை! | 283 |
| 29. | சபைகளுக்கேற்ற சத்திய ஆலோசனைகள்! | 289 |
| 30. | ஒரு உயர்ந்த நிலையை அடைய அழைக்கப்படுதல்! | 299 |
| 31. | செவிசாய்க்கப்பட்ட தூது! | 313 |
| 32. | ஒரு தாராளமான சபை! | 325 |
| 33. | இன்னல்களுக்கிடையில் இயேசுவின் ஊழியம்! | 337 |
| 34. | தேவனுடைய ஊழியத்தில் ஒரு நல்ல போராட்டம்! | 351 |
| 35. | யூதர்களுக்கு இரட்சிப்பு! | 365 |
| 36. | கலாத்திய சபையில் மருள விழுகை! | 375 |
| 37. | எருசலேமை நோக்கிய பவுலின் கடைசிப் பயணம்! | 381 |
| 38. | ஒரு சிறைக் கைதியாக—பவுல்! | 391 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 39. | செசரியாவில் விசாரணை | 409 |
| 40. | பவுல் மேல் முறையீடு செய்கிறான்! | 419 |
| 41. | பவுலே..., நீ என்னைச் சம்மதிக்கச் செய்கிறாய்! | 425 |
| 42. | கப்பல் பயணமும் கப்பல் சேதமும்! | 431 |
| 43. | ரோமாபுரியில் பவுல்! | 439 |
| 44. | இராயனின் வேலைக்காரர்கள்! | 453 |
| 45. | ரோமாபுரியிலிருந்து எழுதப்பட்டது! | 461 |
| 46. | பரம தேவனால் பாதுகாக்கப்பட்ட பவுல்! | 477 |
| 47. | பவுலாரின் இறுதிச் சிறைவாசம்! | 481 |
| 48. | நீரோவின் முன் பவுல்! | 485 |
| 49. | பவுலின் கடைசிக் கடிதம்! | 491 |
| 50. | பவுலாருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது! | 503 |
| 51. | விசுவாசமிக்க ஒரு துணை மேய்ப்பன்! | 509 |
| 52. | இறுதிவரை உறுதியாக நின்றவன்! | 525 |
| 53. | அன்பான வேண்டகோள்! | 535 |
| 54. | ஒரு விசுவாசமிக்க சாட்சி! | 543 |
| 55. | கிருபையினால் மறுரூபமடைதல்! | 555 |
| 56. | பத்மு தீவு! | 567 |
| 57. | வெளிப்படுத்தின விசேஷம்! | 577 |
| 58. | வெற்றிகரமான சபை! | 593 |

இளம் வயதில் இறையருளைப் பெற்றதினால்
எண்ணில்லா தரிசனங்கள் கண்டவராம்
வளமில்லாக் குடும்பத்தில் வாழ்ந்திடினும்
வறுமையிலும் செம்மையினைக் கொண்டவராம்!

அருளொளியால் இவர்யாத்த நூல்களெல்லாம்
அவனியில் அணையாத விளக்காய் நின்று
மருளிருளில் மயங்கிவாழும் மக்களுக்கு
மகிமைமிகு ஒளியாக இலங்கிநிற்கும்!

"அம்மையார்" என்று தமிழ் உலகினிலே
அட்வெந்து மக்களாலே அழைக்கப்படும்
செம்மைமிகும் சிறப்புகள் உடையவராம்
சிறப்பான நூல்கள்பல தந்தவராம்!

எத்தனையோ சிறப்புக்கள் உண்டிவர்க்கு
எடுத்துரைத்தல் எளிதல்ல எந்தனுக்கு!
முத்தனைய பெயருக்கு உரியவராம்
மூதாட்டியாய் வாழ்ந்த எலன் ஜி. ஒயிட்!

—பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா

# நூலாசிரியரைப்பற்றி...!

அன்பான சகோதர –சகோதரிகளே!

இறையருளால் எலன் ஜி. உவைட் அம்மையார் அவர்கள் 2000 பரம தரிசனங்களைக் காணுகின்ற பேறினைப் பெற்றார்கள்; அதுமாத்திரமல்ல, தான் கண்ட தரிசனங்களை அவ்வப்போது எழுதியும் வெளியிட்டார்கள்.

அம்மையார் அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 26; விசுவாசிகளுக்கும் உடன் ஊழியர்களுக்கும், சபைத் தலைவர்களுக்குமாக எழுதிய கடிதங்களின் எண்ணிக்கையோ கணக்கிடமுடியாதது; ஏராளமானது! மேலும், ரிவியூ அன்ட் ஹெரால்ட், சைன்ஸ் ஆப் தி டைம்ஸ் போன்ற இதழ்களில் சத்தியத்தை விளக்கிட அம்மையார் எழுதிய கட்டுரைகளின் எண்ணிக்கை 5000–த்திற்கும் அதிகம்; அம்மையார் எழுதிய அனைத்தும் பல தொகுதிகளாக—கோடிக்கணக்கில்—பல மொழிகளில் கடந்த 150 ஆண்டுகளாக வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் ஏறத்தாழ எழுபது ஆண்டுகளாக ஆண்டவரால் பயன்படுத்தப்பட்ட எழுத்தாணியாக இருந்தார்கள். அம்மையார் எழுதிய புத்தகங்கள் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பாடப்புத்தகங்களாக்கப்பட்டு, சபைக்கும் சமுதாயத்திற்கும், வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, நித்தியத்திற்குரிய சத்தியத்தையும் வழங்கிவருகின்றன. விஞ்ஞானிகளுக்கும் அம்மையார் ஒரு விந்தையாக விளங்கினார்கள். மூன்றாவது வகுப்புவரை படித்தவர்கள்தான் என்றாலும், இறையருள் கைவரப்பெற்ற தன்னார்வ உழைப்பினாலும், பன்முகத் திறமையினாலும், இன்முகம் காட்டி, இறைப்பணியாற்றி, பெற்றோர்களுக்கு அன்பான மகளாகவும், கணவருக்கு அருமையான மனைவியாகவும், பிள்ளைகளுக்கு பண்பான தாயாகவும், சமுதாயத்திற்குச் சாட்சியாகவும், சபைக்கு வழிகாட்டியாகவும், ஆண்டவரால் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசியாகவும் வாழ்ந்து, நித்திரைக்குச் சென்றிருக்கிறார்கள்! ஆவியானவரது ஏவுதலால், அவர் நமக்கு விட்டுச்சென்ற அவரது எழுத்துக்கள் நூல்வடிவம் பெற்று தொடர்ந்து பேசுகிறது—பேசுகிறது—பேசிக்கொண்டேயிருக்கிறது! படிப்போம்! பயன்பெறுவோம்! பண்படுவோம்! பரமனருள் பெற்றிடுவோம்!

# 1

# தேவனுடைய சபையின்மீதுள்ள அவரது நோக்கம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 1–9)**
**திருவசன ஆதாரம் : ஏசாயா 56:7**

மனிதர்களுடைய இரட்சிப்பிற்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஏதுகரமாக சபை இருக்கிறது. உலகத்திற்கு நற்செய்தியைக் கொண்டுசெல்லவேண்டியது அதன் பணியாக உள்ளது. தேவனுடைய பரிபூரணம், அவரது போதுமான தன்மை, ஆகியவைகளைத் தமது சபையின் மூலமாக, உலகத்திற்குப் பிரதிபலிக்கச்செய்யவேண்டும் என்பது, ஆரம்பத்திலிருந்தே அவரது திட்டமாக உள்ளது. இருளிலிருந்து அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டுள்ள அதன் அங்கத்தினர்கள், அவரது மகிமையை வெளிக்காட்டவேண்டியவர்களாக உள்ளனர். சபையானது கிறிஸ்துவின் கிருபையின் கருவூலமாக இருக்கிறது. காலப்போக்கில் "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்" முடிவானதும் முழுமையானதுமான தேவனுடைய அன்பின் வெளிக்காட்டல் சபையின் மூலமாக வெளிக்காட்டப்படும் (எபேசியர் 3:10). (1)

சபையைப்பற்றி வேதவாக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் ஏராளமானவையாகவும் ஆச்சரியமானவையுமாக உள்ளன. "என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" (ஏசாயா 56:7); "நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்;" "நான் அவர்களுக்கு கீர்த்தி பொருந்திய ஒரு நாற்றை எழும்பப்பண்ணுவேன்; அவர்கள் இனி தேசத்திலே பஞ்சத்தால் வாரிக்கொள்ளப்படுவதுமில்லை, இனிப் புறஜாதிகள் செய்யும் அவமானத்தைச் சுமப்பதுமில்லை. தங்கள்

தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் தங்களோடே இருக்கிறதையும், இஸ்ரவேல் வம்சத்தாராகிய தாங்கள் என் ஜனமாயிருக்கிறதையும், அவர்கள் அறிந்துகொள்வார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்"– எசேக்கியேல் 34:26,29–31. (2)

"நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன்; உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை; நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." "நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்" (ஏசாயா 43:10–12; 42:6,7) என்றார். (3)

"பின்னும் கர்த்தர்: அநுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன்; நீர் பூமியைச் சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப்பண்ணவும்; கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப்போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்: அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள்; சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும். அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல்படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார். என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த்தப்படும்....

"வானங்களே, கெம்பீரித்துப் பாடுங்கள்; பூமியே, களிகூரு; பர்வதங்களே, கெம்பீரமாய் முழங்குங்கள்; கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார்.

ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (ஏசாயா 49:8–16) என்கிறார். (4)

கலகம்செய்துள்ள ஒரு உலகத்தில், தேவன் அவரது சபையை ஒரு கோட்டையாகவும் அடைக்கலப் பட்டணமாகவும் ஏற்படுத்தியிருக்கிறார். சபைக்கு எதிராகச் செய்யப்படும் எந்தவிதமான நம்பிக்கைத் துரோகமும், மனித இனத்தைத் தமது ஒரே பேறான குமாரனின் இரத்தத்தினால் கிரயத்திற்கு வாங்கினவருக்கெதிராகச் செய்யப்படும் நம்பிக்கைத் துரோகமாக இருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே விசுவாசமுள்ள ஆத்துமாக்கள் ஒன்று சேர்ந்து சபையை ஏற்படுத்தியிருக்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும், கர்த்தர் தம்முடைய காவல்காரர்களை உடையவராக இருந்தார். அவர்கள் தாங்கள் வாழ்ந்திருந்த தலைமுறையினருக்குமுன் விசுவாசமுள்ள சாட்சிகளாக இருந்தனர். இந்தக் காவல்காரர்கள் எச்சரிக்கையின் தூதைக் கொடுத்திருந்தனர். தங்களுடைய போருடையைக் கழற்றிவைக்கும்படி அழைக்கப்பட்டபோது, மற்றவர்கள் அந்தப் பணியை எடுத்துக்கொண்டனர். பூமியிலுள்ள சபை, பரலோகத்திலுள்ள சபையுடன் இணையும்படி, தேவன் இந்த சாட்சிகளை, அவருடனுள்ள உடன்படிக்கைக்குள் கொண்டுவந்தார். அவருடைய சபைக்கு ஊழியம்செய்யும்படி, அவர் தூதர்களை அனுப்பியிருக்கிறார். அவருடைய ஜனங்களை மேற்கொள்ளப் பாதாளத்தின் வாசல்கள் இயலாதவைகளாக உள்ளன. (5)

உபத்திரவம், போராட்டம், இருள் இருந்த நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தேவன் அவரது சபையைத் தாங்கியிருந்திருக்கிறார். அவர் ஆயத்தம்செய்யாத ஒரு மேகமும் அதின்மீது விழுந்திருக்கவில்லை. அவருடைய வேலைக்கு எதிராக வேலைசெய்ய, அவர் முன்காணாத எந்த ஒரு எதிரியின் வல்லமையும் எழுந்ததில்லை. அவர் முன்னறிவித்துள்ளபடி அனைத்தும் நடந்துள்ளன. அவர் தமது சபையைக் கைவிடப்பட்டதாக விட்டுவிடாமல், என்ன நிகழவுள்ளது என்பதைத் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்திருக்கிறார். ஆவியின் ஏவுதலினால், அவருடைய தீர்க்கதரிசிகள் எவைகளை முன்அறிவித்திருக்கிறார்களோ அவைகள் நடந்திருக்கின்றன. அவரது நோக்கங்களனைத்தும் நிறைவேறும். அவரது நியாயப்பிரமாணம் அவரது சிங்காசனத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. தீமையின் எந்த வல்லமையினாலும் அதனை அழிக்கமுடியாது. சத்தியமானது ஆவியினால் ஏவப்பட்டு, தேவனால் காக்கப்பட்டுள்ளது. அனைத்து எதிப்புகளின்மீதும் அது வெற்றிபெறும். (6)

ஆவிக்குரிய இருண்ட யுகங்களின்போது, தேவனுடைய சபை, மலையின்மேல் அமைக்கப்பட்ட ஒரு பட்டணத்தைப்போல் இருக்கிறது. காலத்திலிருந்து காலத்திற்கும், தொடர்ச்சியான தலைமுறைகளுக்கு ஊடாகவும், பரலோகத்தின் தூய்மையான கோட்பாடுகள் அதின் எல்லைகளுக்குள்ளாக விரிந்துகொண்டிருக்கின்றன. பலவீனமானதாகவும் குறைகளுள்ளதாகவும் காணப்பட்டிருந்தபோதிலும், தேவன் தமது மேலான கவனத்தை விசேஷமாக வைக்கின்ற ஒரு பொருளாக சபை உள்ளது; அது அவரது கிருயையின் அரங்கமாக உள்ளது. இருதங்களை மாற்றக்கூடிய கிருபையை வெளிக்காட்டுகின்ற அதின்மீது அவர் மகிழ்ச்சி உள்ளவராக இருக்கிறார். (7)

“தேவனுடைய இராஜ்யத்தை எதற்கு ஒப்பிடலாம்” என்று கிறிஸ்து கேட்டார். உலகத்தின் இராஜ்யங்களை பரலோகத்தின் ஒரு மாதிரியாக அவரால் ஒப்பிட முடியவில்லை. அதனுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்படி, சமுதாயத்தில் அவர் ஒன்றையும் காணவில்லை. மாம்சப்பிரகாரமான வல்லமையின் உயர்ச்சியினால், பூமியின் அரசுகள் ஆளப்படுகின்றன. ஆனால் கிறிஸ்துவின் அரசாங்கத்திலிருந்து மாம்சப்பிரகாரமான ஒவ்வொரு ஆயுதமும் பலவந்தம் செய்யும் ஒவ்வொரு கருவியும் நீக்கம்செய்யப்பட்டுள்ளன. இந்த இராஜ்யம் மானுடத்தை மேன்மைப்படுத்தி, அதனை உயர்த்தவேண்டியதாக உள்ளது. பரிசுத்தமான வாழ்க்கையினாலும் பலவிதமான வரங்களினாலும் நிறைந்ததாகவும், பரிசுத்த ஆவியின் நன்கொடைகளைப் பெற்றதாகவும் தேவனுடைய சபை இருக்கிறது. அதின் அங்கத்தினர்கள் யாருக்கு உதவுகிறார்களோ அவர்களின் மகிழ்ச்சியில் தங்களுடைய மகிழ்ச்சியைக் கண்டடையவேண்டும். (8)

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதற்கென்று, அவர் தமது சபையின் மூலமாக நிறைவேற்றுவதற்கென்று வடிவமைத்திருக்கின்ற செயல்கள் ஆச்சரியமானவை. குணப்படுத்தும் ஆற்றைப்பற்றிய தரிசனத்தில், எசேக்கியேலுக்கு இந்த வேலையைப்பற்றிய ஒரு காட்சி கொடுக்கப்பட்டது. “அவர் என்னை நோக்கி: இந்தத் தண்ணீர் கிழக்குதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், வனாந்தரவழியாய் ஓடி கடலில் விழும்; இது கடலில் பாய்ந்து, விழுந்தபின்பு, அதின் தண்ணீர் ஆரோக்கியமாகும். சம்பவிப்பது என்னவென்றால், இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவபிராணிகள் யாவும் பிழைக்கும்; இந்தத் தண்ணீர் அங்கே வந்தபடியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும்; இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும். அப்பொழுது என்கேதிதுவக்கி எனெக்லாயிம்மட்டும் மீன்பிடிக்கிறவர்கள் அதின் கரையிலே நிற்பார்கள்;

அதெல்லாம் வலைகளை விரிக்கிற ஸ்தலமாயிருக்கும்; அதின் மச்சங்கள் பெரிய சமுத்திரத்தின் மச்சங்களைப்போலப் பல ஜாதியும் மகா ஏராளமுமா யிருக்கும். ஆனாலும் அதினுடைய உளையான பள்ளங்களும் அதினுடைய மடுக்களும் ஆரோக்கியமாகாமல், உப்பாகவே விட்டுவிடப்படும். நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவை களின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள்”—எசேக்கியேல் 47:8–12. (9)

உலகத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதற்காக, ஆதிமுதலே தேவன் தமது ஜனங்களின்மூலமாகச் செயலாற்றியிருக்கிறார். பண்டைய எகிப்து தேசத்திற்கு ஜீவ ஊற்றாக இருக்கும்படி, யோசேப்பை ஏற்படுத்தியிருக்கிறார். யோசேப்பின் நேர்மையினால், அந்த ஜனங்கள் அனைவரது உயிர்களும் பாதுகாக்கப்பட்டிருந்தன. பாபிலோனின் ஞானிகளின் உயிர்களனைத்தையும் தேவன் தானியேலின்மூலமாகக் காப்பாற்றினார். இந்த விடுதலைகள், நமக்குப் பொருட்பாடங்களைப்போல உள்ளன. அவை, யோசேப்பும் தானியேலும் வணங்கியிருந்த தேவனுடனிருந்த தொடர்பின்மூலமாக, உலகத்திற்குக் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை சித்தரித்துக்காட்டுகின்றன. எந்த ஒருவருடைய இருதயத்தில் இயேசு தங்கியிருக்கிறாரோ, எந்த ஒருவர் அவருடைய அன்பை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகிறாரோ— அவர், மானுடத்திற்கு ஆசீர்வாதம் கிடைக்கும்படி தேவனுடன் சேர்ந்து பணியாற்றுபவராக இருக்கிறார். மற்றும் உள்ளவர்களுக்குக் கொடுக்கும்படி இரட்சகரிடமிருந்து அவர் கிருபையைப் பெற்றக்கொள்ளுவதுபோல், அவரது சம்பூரணத்திலிருந்தும் ஆவிக்குரிய வாழ்க்கையின் அலையானது பாய்ந்துசெல்லுகிறது. (10)

மனிதர்களுக்குத் தமது சுபாவத்தை வெளிப்படுத்துவதற்கென்று தேவன் இஸ்ரவேலைத் தெரிந்துகொண்டார். இந்த உலகத்தில் இரட்சிப்பின் கிணறுகளாக அவர்கள் இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். தேவனுடைய சித்தத்தின் வெளிப்படுத்தலான பரலோகத்தின் வார்த்தைகள் (பத்துக்கற்பனைகள்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இஸ்ரவேலரின் ஆரம்ப நாட்களில் அவர்களது கறைபடிந்த நடத்தைகளின்மூலமாக உலகத்தின் ஜாதிகள் தேவனைப்பற்றிய அறிவை இழந்திருந்தனர். ஒரு சமயத்தில் அவர்கள் அவரை அறிந்திருந்தனர்; ஆனால் “அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும்,

ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது"—ரோமர் 1:21. அப்படி இருந்த போதிலும், தேவன் தமது இரக்கத்தினால் அவர்களைத் துடைத்து நீக்கி அழித்தொழிக்கவில்லை. அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின்மூலமாக அவருடன் அவர்கள் அறிமுகமானவர்களாகுவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று அவர் நோக்கம் கொண்டார். பலிமுறை ஆராதனைபற்றிய போதனைகளின்மூலமாக, சகல ஜாதிகளுக்கு முன், கிறிஸ்து உயர்த்திக்காட்டப்படவேண்டியவராக இருந்தார். அவரை பார்ப்பவர்கள் அனைவரும் ஜீவனை அடைந்தாகவேண்டும். யூத சமுதாயத்தின் பொருளாதாரத்திற்கு (ஆட்சிமுறைக்கு) கிறிஸ்து அஸ்திவாரமாக இருந்தார். பொருட்கள் அடையாளங்கள் ஆகியவைகளாயிருந்த அந்த அமைப்பு, சுவிசேஷத்தைப்பற்றிய தீர்க்கதரிசனத்தின் அடக்கமா யிருந்தது. இரட்சிப்பின் திட்டம் என்னும் வாக்குத்தத்தம் அதை முன்வைப்பதுடன் பிணைக்கப்பட்டிருந்தது. ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய ஜனங்களாக இருக்கும்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலுகைகளைப்பற்றிய அவர்களுடைய பார்வையை இழந்தவர்களாக இருந்தனர். அவர்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள், உலகத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரவில்லை. அவர்களுடைய அனுகூலங்கள் அனைத்தையும் அவர்கள் தங்களுடைய சுய மகிமைக்கென்றே செலவிட்டிருந்தனர். சோதனையிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களை உலகத்திலிருந்து தூரமாக அடைத்துக் கொண்டிருந்தனர். அஞ்ஞானிகளின் நடத்தைகளுக்கிசைவாக நடப்பதைத் தவிர்ப்பதற்காக, அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களுடன் கூட்டுச்சேரக்கூடாது என்று தேவன் ஏற்படுத்தியிருந்த கட்டுப்பாடுகளை, அவர்களுக்கும் மற்றெல்லா ஜாதியினருக்கும் இடையில் பிரிவினையாக இருக்கக்கூடிய ஒரு சுவரைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தியிருந்தனர். அவர் அவர்களிடம் அவசியப்பட்டிருந்த சேவைகளை, அவர்கள் கொள்ளையிட்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய மத சம்மந்தமான மனிதர்களால் கொடுக்கப்பட்டிருந்த வழிகாட்டுதல்களையும், பரிசுத்தமான உதாரணத்தையும் கொள்ளையிட்டிருந்தனர். (11)

சடங்காச்சாரம் என்னும் குழியில் ஆசாரியர்களும் அதிபதிகளும் அசையாது நிலைநின்றிருந்தனர். சட்டப்பூர்வமான ஒரு மதத்தில் அவர்கள் திருப்தி உள்ளவர்களாக இருந்தனர். பரலோகத்தின் ஜீவனுள்ள சத்தியங்களை மற்றுள்ளவர்களுக்குக் கொடுப்பது அவர்களால் முடியாததாகியிருந்தது. தங்களுடைய சுயநீதியே தங்களுக்குப் போதும் என்று அவர்கள் எண்ணியிருந்தனர். அவர்களுடைய மதத்திற்குள் புதிய

மூலக்கூறு கொண்டுவரப்பட்டாக வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. மனிதர்களின்மீதிருந்த தேவனுடைய நல்ல எண்ணத்தை, அது தங்களுக்குச் சம்பந்தமில்லாத ஏதோ ஒன்று என்று எண்ணி, அதனை ஏற்றுக்கொள்ளாமல், அவர்களுடைய நல்ல கிரியைகளினால் உண்டாகக்கூடிய அவர்களுக்குச் சொந்தமான புண்ணியத்துடன் அதை இணைத்திருந்தனர். பரிசேயர்களின் சடங்காச்சாரங்களினாலும் மனிதர்களின் தடைகளினாலும் உண்டுபண்ணப்பட்டிருந்த மதத்துடன்கூடிய அன்பினால் செயலாற்றினதால், ஆத்துமாவைச் சுத்திகரிக்கின்ற விசுவாசம் ஐக்கியப்படுவதற்கான இடம் காணப்படவில்லை. (12)

"நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?"—எரே. 2:21. "இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி; அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது; அவன் தன் கனியின் திரளுக்குச் சரியாய்ப் பலிபீடங்களைத் திரளாக்குகிறான்; தங்கள் தேசத்தின் செழிப்புக்குச் சரியாய்ச் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்கள்"—ஓசி. 10:1. "எருசலேமின் குடிகளே, யூதாவின் மனுஷரே! எனக்கும் என் திராட்சத்தோட்டத்துக்கும் நியாயந்தீருங்கள். நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன? இப்போதும் நான் என் திராட்சத்தோட்டத்துக்குச் செய்வதை உங்களுக்கு அறிவிப்பேன்; அதின் வேலியை எடுத்துப்போடுவேன்; அது மேய்ந்துபோடப்படும்; அதின் அடைப்பைத் தகர்ப்பேன்; அது மிதியுண்டுபோம். அதைப் பாழாக்கிவிடுவேன்; அதின் கிளை நறுக்கப்படாமலும், களைகொத்தி எடுக்கப்படாமலும் போவதினால், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்; அதின்மேல் மழை பெய்யாதபடிக்கு மேகங்களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார். சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ, முறைப்பாடு"—ஏசா. 5:3–7. "நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள்"—எசே. 34:4. (13)

யூதத் தலைவர்களிடம் அதிக ஞானம் இருப்பதினால் அவர்களுக்குப் போதனை அவசியமில்லையென்றும், தாங்கள்

அதிகமான நீதி உடையவர்களாக இருப்பதினால் தங்களுக்கு இரட்சிப்பு அவசியமில்லையென்றும், மிக மேலான கனத்தை உடையவர்களாக இருப்பதினால் தங்களுக்குக் கிறிஸ்துவிடமிருந்து வரக்கூடிய கனம் தேவையில்லையென்றும் எண்ணியிருந்தனர். இரட்சகர் அவர்களிடமிருந்த, அவர்கள் தவறாகப் பயன்படுத்தியிருந்த சலுகைகளையும், அற்பமாக எண்ணியிருந்த செயல்களையும், மற்றவர்களிடம் ஒப்படைத்தார். தேவனுடைய மகிமை வெளிப்படுத்தப்பட்டு, அவரது வார்த்தை ஸ்தாபிக்கப்பட்டாகவேண்டும். வனாந்தரத்திலே உள்ள நகரங்களிலே, தேவனுடைய இரட்சிப்பு அறியச் செய்யப்படவேண்டும். யூதத் தலைவர்கள் செய்யத் தவறிவிட்ட வேலையைச் செய்யும்படி சீஷர்கள் அழைக்கப்பட்டனர். (14) ★

# 2

# பன்னிருவருக்குப் பயிற்சி!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 17–24)**
**திருவசன ஆதாரம் : யோவான் 16:33**

கிறிஸ்து அவரது ஊழியத்தை முன்கொண்டு செல்லுவதற்காக, யூத சமுதாயத்திலிருந்த கற்றறிந்தவர்களையோ, பேச்சுத்திறமை உள்ளவர்களையோ, யூத சனகரீம் சங்கத்தினரையோ, அல்லது ரோம நாட்டின் வல்லமையையோ தெரிந்துகொள்ளவில்லை. பணிசெய்யும் எஜமானராக இருந்த அவர், சுயநீதியுள்ள யூத ஆசிரியர்களைக் கடந்துசென்று, தாழ்மை மிக்க கல்வி அறிவில்லாதவர்களாக இருந்த மனிதர்களை உலகத்தைக் கலக்கவிருந்த சத்தியத்தை அறிவிக்கும்படி தெரிந்தெடுத்தார். அவரது சபையின் தலைவர்களாக இவர்களுக்குப் பயிற்சியளித்து கல்வி புகட்ட நோக்கம் கொண்டார். இவர்கள் தங்கள் பங்காக மற்றவர்களுக்குக் கற்பித்து, சுவிசேஷத்தின் தூதுடன் அவர்களை வெளியே அனுப்பவேண்டும். தங்களுடைய பணியில் அவர்கள் வெற்றியுள்ளவர்களாக இருப்பதற்கு, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வல்லமை கொடுக்கப்படவேண்டும். மனித பலத்தினாலோ அல்லது மனித ஞானத்தினாலோ சுவிசேஷம் அறிவிக்கப் படாமல், தேவனுடைய வல்லமையினால் அறிவிக்கப்படவேண்டும். (1)

உலகம் இதுவரை அறிந்திருக்கிற சகல ஆசிரியர்களுக்கும் மேலான பெரும் ஆசிரியரின் போதனைகளின்கீழ் சீடர்கள் மூன்றரை ஆண்டுகள் இருந்தனர். நேரடியான தொடர்பு, உறவு ஆகியவைகளின்மூலமாக அவருடைய ஊழியத்தைச் செய்வதற்குக் கிறிஸ்து அவர்களுக்குப் பயிற்சி அளித்தார். ஒவ்வொருநாளும் அவர்கள் அவருடன் நடந்தும் பேசியும், களைத்தும் பாரஞ்சுமந்தும், நோயிலும் துன்பத்திலும் இருந்தவர்களை மகிழ்விக்கும்படி அவர் பேசியிருந்த வார்த்தைகளைக் கேட்டும், அவரது வல்லமையின் வெளிக்காட்டுதலை கண்டும் இருந்தனர். சில சமயங்களில் மலைச்சரிவுகளில் அவர்களுக்கு நடுவில் உட்கார்ந்து போதித்திருந்தார்.

சில சமயங்களில் கடலருகிலும் பாதையில் நடந்துகொண்டும் தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அவர் வெளிப்படுத்தியிருந்தார். தெய்வீகத் தூதைப் பெற்றுக்கொள்வதற்கு எங்கெல்லாம் இருதயங்கள் திறக்கப் பட்டிருந்தனவோ, அங்கெல்லாம் இரட்சிப்பின் பாதையைப்பற்றிய சத்தியங் களை அவர் விவரித்துக்காட்டியிருந்தார். இதைச் செய்யுங்கள் அல்லது அதைச் செய்யுங்கள் என்று அவர் சீஷர்களுக்குக் கட்டளையிடாமல், “என்னைப் பின்பற்றி வாருங்கள்” என்றார். அவர் ஜனங்களுக்கு எவ்விதமாகப் போதித்தார் என்பதை அவர்கள் காணும்படி, தமது பயணத்தின்போது நகரங்களுக்கும் பேரூர்களுக்கும் அவர்களை அவருடன் அழைத்துச் சென்றிருந்தார். அவர்கள் அவருடன் இடம்விட்டு இடம் பயணம் செய்திருந்தனர். அவர்கள் அவருடைய சிக்கனமான செலவுகளில் பங்கு பெற்றிருந்து, சில சமயங்களில் அவரைப்போலவே அடிக்கடி பசியும் களைப்புமுள்ளவர்களாக இருந்தனர். ஜனக்கூட்டம் மிகுந்த தெருக்களிலும் ஏரிக்கரையிலும் தனிமையான பாலைவனத்திலும் அவருடன் இருந்தனர். வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் அவரைக் கண்டனர். (2)

அந்தப் பன்னிருவரை அபிஷேகஞ்செய்தது, சபையை அமைக்கின்ற ஏற்பாட்டின் முதல்படியாக இருந்தது. கிறிஸ்து பிரிந்துசென்றபின், அவர்கள் பூமியில் அவருடைய பணியைச் செய்யவேண்டியதாக இருந்தது. “பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்” ஏற்படுத்தினார் (மாற்கு 3:13–14) என்று இந்த அபிஷேகத்தைப்பற்றி வேதவாக்கியம் கூறுகின்றது. (3)

அவர் போதனை செய்துகொண்டிருக்கும் அந்தக் காட்சியைப் பாருங்கள். பரலோகத்தின் மகத்துவமானவர் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிருவராலும் சூழப்பட்டிருப்பதைப் பாருங்கள். அவர்களுடைய வேலைக்கு அவர்களை அவர் வேறுபடுத்திவைக்க இருக்கிறார். பலவீனமான இந்த ஏதுகரங்களினால் அவரது வார்த்தையினாலும் ஆவியினாலும் இரட்சிப்பை அனைவருக்கும் சமீபமான இடத்தில் வைப்பதற்கு அவர் அவர்களை வடிவமைக்கிறார். (4)

இந்தக் காட்சியை தேவனும் தேவதூதர்களும் மகிழ்ச்சியுடனும் களிகூருதலுடனும் காண்கின்றனர். இந்த மனிதர்களின்மூலமாகப் பரலோக ஒளி பிரகாசிக்கும் என்பதைப் பிதா அறிந்திருந்தார். அவருடைய குமாரனுக்குச் சாட்சியாக, அவர்களால் பேசப்பட்டிருந்த வார்த்தைகள்,

காலத்தின் முடிவுவரை தலைமுறை தலைமுறையாக எதிரொலிக்கும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். (5)

அவரது சாட்சிகளாக—கிறிஸ்துவைக்குறித்து கண்டிருந்தவைகளையும் கேட்டிருந்தவைகளையும் உலகத்திற்கு அறிவிக்கும்படி சீடர்கள் செல்லவேண்டியதிருந்தனர். அவர்களுடைய பதவி, கிறிஸ்துவிற்கடுத்ததாக, மனிதர்கள் இதுவரை அழைக்கப்பட்டிருந்த பதவிகளனைத்திலும் மிக முக்கியமானதாக இருந்தது. மனிதர்களை இரட்சிப்பதற்காக, அவர்கள் தேவனுடன் சேர்ந்து பணியாற்றவேண்டியவர்களாக இருந்தனர். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் பிரதிநிதிகளாகப் பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களும் இருந்ததுபோல, சுவிசேஷ சபையின் பிரதிநிதிகளாக இந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் இருக்கின்றனர். (6)

யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையில் நின்றிருந்த பிரிவினை யாகிய நடுச்சுவரை இடிக்கவும், மனிதஇனம் முழுவதற்கும் இரட்சிப்பை பிரசங்கிக்கவும் தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது கிறிஸ்து ஆரம்பித்தார். அவர் ஒரு யூதராக இருந்தபோதிலும், சமாரியர்களுடன் தாராளமாகக் கலந்திருந்து, நிந்திக்கப்பட்டிருந்த ஜனங்களுடன் சம்பந்தப்பட்டிருந்த பரிசேய சம்பிரதாயங்களை இல்லாமல் செய்திருந்தார். அவர்களது மேஜையிலிருந்து உணவருந்தி, அவர்களது கூரைகளின்கீழ் உறங்கி, அவர்களது தெருக்களில் போதனை செய்திருந்தார். (7)

இஸ்ரவேலருக்கும் மற்ற ஜாதியினருக்குமிடையே "பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத்" தகர்க்கிற—"புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ... கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத் தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்கள்" (எபேசியர் 2:14; 3:3) என்கிற சத்தியத்தை இரட்சகர் அவரது சீஷர்களுக்கு விவரிக்க ஏக்கத்தோடு இருந்தார். அவர் கப்பர்நகூமில் இருந்த நூற்றுக்கதிபதியின் விசுவாசத்திற்குப் பரிசளித்தபோதிலும், சீகாரிலிருந்தவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த நேரத்திலும், இந்த சத்தியம் ஒரு பகுதியாக வெளிக்காட்டப்பட்டது. சீரோபோனிக்கியாவைச் சந்தித்து அங்கிருந்த கானானிய ஸ்திரியின் மகளைச் சுகப்படுத்தின சந்தர்ப்பத்தில் அந்த சத்தியம் மேலும் வெளிப்படையாக வெளிக்காட்டப்பட்டது. இரட்சிப்பிற்கு தகுதி யற்றவர்கள் என்று கருதப்பட்டிருந்த அநேக ஆத்துமாக்களுக்கிடையில், சத்திய ஒளியின்மீது பலர் பசியோடு இருந்தனர் என்பதை சீடர்கள் புரிந்துகொள்ள இந்த அனுபவங்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவின. (8)

சீஷர்கள் அன்பின் தூதைச் சுமந்தவர்களாக சகல ஜாதிகளிடத்திற்கும் செல்லுவதற்கேதுவாக, தேவனுடைய இராஜ்யத்தில் எல்லைப்பிரிவினைகள்

இல்லை, ஜாதிகள் இல்லை, மேன்மக்கள் என்பது இல்லை என்னும் சத்தியத்தை அவர்களுக்குப் போதிக்க இயேசு வகைதேடினார். என்றாலும் "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லை களையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப்போஸ்தலர் 17:26,27) என்கிறதை அதன் முழுமையில் மிகவும் தாமதமாகவே அவர்கள் உணர்ந்துகொண்டனர். (9)

குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் இந்த முதல் சீஷர்களுக்கிடையில் இருந்தன. அவர்கள் உலகத்தின் ஆசிரியர்களாக வெவ்வேறான குணங்களை குறிக்கவேண்டியிருந்தனர். அழைக்கப்பட்டிருந்த வேலையை வெற்றிகரமாக முன்கொண்டு செல்லுவதற்காக, இயற்கையான சிறப்பியல்புகளிலும், வாழ்க்கையின் பழக்கங்களிலும் மாறுபட்டவர்களாக இருந்தனர். இந்த மனிதர்கள் உணர்வுகளிலும் எண்ணத்திலும் செயல்களிலும் ஒற்றுமையிலும் ஒன்றுபட்டவர்களாக வரவேண்டிய அவசியம் இருந்தது. இந்த ஒருமைப்பாட்டைக் கொண்டுவருவதுதான் கிறிஸ்துவின் குறிக்கோளாக இருந்தது. இந்த முடிவை அடைவதற்காக, அவர்களை தம்முடன் இணைந்திருக்க அவர் வகைதேடினார். அவர்களுக்கான அவரது உழைப்பின் பாரம்: "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, ... நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்" "என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்" (யோவான் 17:21,23) என்று அவருடைய பிதாவிடத்தில் அவர் ஏறெடுத்த ஜெபத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் சத்தியத்தின்மூலமாகப் பரிசுத்தமடையவேண்டும் என்பது அவருடைய தொடர்ச்சியான ஜெபமாக இருந்தது. சர்வ வல்லமையுள்ள ஒரு கட்டளை உலகத் தோற்றத்திற்கு முன்பே கொடுக்கப்பட்டிருந்தது என்னும் நிச்சயத்துடன் அவர் ஜெபம் செய்தார். ஒரு சாட்சியாக இருக்கும்படி இராஜ்யத்தின் நற்செய்தி சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். பரிசுத்த ஆவியானவரின் சர்வ வல்லமையுடன் ஆயுதமணியப்பட்ட சத்தியமானது தீமையுடனுள்ள போரில் வெற்றி அடையும். ஒரு நாள் அவருடைய அடியார்களின்மேல் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட கொடி, வெற்றிகரமாக உயர்த்தப்படும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். (10)

கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியம் அதன் முடிவை சமீபித்தபோது, அவரது நேரடியான மேற்பார்வையின்றி சீடர்கள் அந்தப் பணியை முன்கொண்டு செல்லவேண்டும் என்பதை அவர் உணர்ந்தபோது, அவர்களுக்குத் தைரியமூட்டவும் எதிர்காலத்திற்கென்று அவர்களை ஆயத்தப்படுத்தவும் அவர் வகைதேடினார். தவறான நம்பிக்கைகளினால் அவர் அவர்களை வஞ்சிக்கவில்லை. என்ன நிகழவிருக்கிறது என்பதை அவர் ஒரு திறந்த புத்தகத்தை வாசிப்பதுபோல வாசித்துக் காட்டியிருந்தார். ஓநாய்களுக்கிடையில் ஆடுகள் விடப்படுவதைப்போல, அவர்களை விட்டுவிட்டு அவர் பிரிந்து செல்லநேரிடும் என்பதை அறிந்திருந்தார். அவர்கள் சனகரீம் சங்கத்தினரால் புறம்பாக்கப்பட்டு சிறைகளில் தள்ளப்படுவார்கள் என்பதையும், உபத்திரவங்களை அனுபவிப்பார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர்தான் மேசியா என்று சாட்சிகொடுப்பதினால் அவர்களில் சிலர் மரணதண்டனையை அனுபவித்தாகவேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். இவைகளில் சிலவற்றை அவர் அவர்களிடம் கூறியிருந்தார். அவர்களுக்கு வரவிருக்கும் சோதனையின்போது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைக்கவேண்டும் என்பதற்காகவும், மீட்பராக அவர் இருக்கிறார் என்று அவரில் அவர்கள் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்காகவும், அவர்களது எதிர்காலத்தைப்பற்றி அவர்களிடம் அவர் பேசினபோது, வெளிப்படையாகவும் நிச்சயத்துடனும் பேசினார். (11)

நம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டக்கூடிய வார்த்தை களையும் அவர் அவர்களிடம் பேசினார். “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்”– யோவான் 14:1–4. உங்களுக்காகவே நான் இந்த உலகத்திற்கு வந்தேன்; உங்களுக்காகவே நான் செயலாற்றிக்கொண்டிருக்கிறேன்; நான் தூரமாகச் சென்றாலும் உங்களுக்காவே இன்னும் அக்கரையுடன் கிரியைசெய்வேன். என்னை உங்களுக்கு வெளிப்படுத்துவதற்காக வந்தேன். நான் என்னுடைய பிதாவினிடத்திற்கும் உங்களுடைய பிதாவினிடத்திற்கும், உங்கள் சார்பாகப் பாசப்பிணைப்பை ஏற்படுத்துவதற்காகச் செல்லுகிறேன் என்றார். (12)

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்"(யோவான் 14:12) என்றார். இப்படிக் கூறினதால், அவர் செய்ததைவிட மிகவும் மேலான காரியங்களைச் சீடர்கள் செய்வார்கள் என்று கிறிஸ்து பொருள்கொள்ளாமல், அவர்களுடைய பணி பெரும் பரிமாணத்தை உடையதாக—விசாலமானதாக இருக்கும் என்பதற்காகக் கூறினார். (13)

அற்புதங்களைச் செய்வதைப்பற்றிமட்டும் அவர் குறிப்பிடாமல், பரிசுத்த ஆவியின் இடைப்படுதலின்கீழ் நடக்கக்கூடிய அனைத்தையும்குறித்து அவர் கூறினார். "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (யோவான் 15:26,27) என்றார். (14)

இந்த வார்த்தைகள் ஆச்சரியமான விதத்தில் நிறைவேறின. பரிசுத்தஆவியானவர் இறங்கினபின் சீடர்கள் அவர்மீதுள்ள அன்பினாலும் அவர் எவர்களுக்காக மரித்திருந்தாரோ அவர்கள்மீதுள்ள அன்பினாலும் நிரப்பப்பட்டார்கள். அதனால் அவர்கள் பேசின வார்த்தைகளினாலும், ஏறெடுத்த ஜெபங்களினாலும், இருதயங்கள் உருகியிருந்தன. அவர்கள் ஆவியின் வல்லமையினால் பேசினார்கள். அந்த வல்லமையின் செல்வாக்கின் கீழ் ஆயிரக்கணக்கானவர்கள் மாற்றமடைந்தனர். (15)

கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக சீஷர்கள் உலகத்தின்மீது தீர்மானமான உணர்த்துதல்களை உண்டுபண்ணவேண்டியவர்களாக இருந்தனர். தாழ்மையான மனிதர்களாக இருந்தனர் என்ற காரணத்தால் அவர்களுடைய செல்வாக்கு குறையாமல், அதனை அதிகரிக்கச்செய்யும். ஏனெனில் அவர்களது பேச்சைக் கேட்பவர்களின் மனங்கள், காணக்கூடாதவராக இருந்தும், அவர்களுடன் கிரியை செய்திருந்த இரட்சகரிடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அப்போஸ்தலர்களின் ஆச்சரியமான போதனைகளும், தைரியத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணக்கூடிய அவர்களது வார்த்தைகளும், தங்களுடைய சொந்த வல்லமையினால் எதையும் செய்யாமல், கிறிஸ்துவின் வல்லமையினால்தான் செய்திருந்தனர் என்பதை எல்லோருக்கும் நிச்சயப்படுத்தும். யூதர்கள் எவரைச் சிலுவையில் அறைந்திருந்தார்களோ, அவர்தான்—ஜீவாதிபதியாக—ஜீவனுள்ள தேவனின் குமாரனாக இருந்தாரென்றும், அவர் செய்திருந்த கிரியைகளையே அவரது

நாமத்தில் தாங்கள் செய்கின்றனர் என்றும், அவர்கள் தங்களைத் தாழ்த்தி அறிவிக்கவேண்டும். (16)

அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின நாள் இரவில், சீஷர்களிடமிருந்து பிரிந்து செல்லுகின்ற அவரது உரையாடலில், இரட்சகர் தாம் தாங்கியிருந்த பாடுகளையும் இனி அனுபவிக்கவிருக்கின்ற பாடுகளையும்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அவருக்கு முன்னிருந்த அவமானத்தைப்பற்றி அவர் பேசாமல், ஜெயம் அடைகிறவர்களுக்காகக் காத்திருக்கிற பேரின்பத்தை நோக்கும்படியாக, அவர்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்தக்கூடியவைகளை அவர்களுடைய மனங்களுக்குக் கொண்டுவர அவர் வகைதேடினார். அவர் தமது அடியார்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்ததைவிடவும் அதிகமாகச் செய்வார் என்றும் , அவரிடத்திலிருந்து அன்பும் மன உருக்கமும் பாய்ந்துசென்று, ஆத்தும ஆலயத்தைச் சுத்தப்படுத்தி, அவரைப்போன்ற குணமுடையவர்களாகச் செய்யும் என்றும், அவரது சத்தியம் ஆவியின் வல்லமையைத் தரித்துக்கொண்டு முன்னேறிச் சென்று வெற்றிபெறும் என்றும் தமது உள்ளுணர்விலே மகிழ்ந்தார். (17)

“என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்”—யோவான் 16:33. கிறிஸ்து தோல்வியடையவில்லை; அதைரியமடையவுமில்லை. சீஷர்களும் அதைப்போன்றே தாங்கும் தன்மையை உடைய விசுவாசத்தைக் காட்டவேண்டியவர்களாக இருந்தனர். அவர் கிரியை செய்திருந்ததுபோல, அவரது பலத்தைச் சார்ந்து அவர்களும் கிரியை செய்யவேண்டும். வெளிப்படையாகத் தோன்றக்கூடிய இயலாமைகளினால், அவர்களது பாதை தடைசெய்யப்பட்டிருப்பதுபோல் காணப்பட்டிருந்தபோதிலும், அவருடைய கிருபையினால் அவர்கள் எதைப் பற்றியும் நம்பிக்கை இழக்காமல் ஒவ்வொரு காரியத்திலும் நம்பிக்கைவைத்து முன்செல்லவேண்டியவர்களாக இருந்தனர். (18)

கிறிஸ்து செய்யப்படும்படி அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலையை முழுவதுமாக முடித்திருந்தார். மனிதர்களுக்கிடையில் அவருடைய பணியைத் தொடரவேண்டியவர்களாகவிருந்த அவர்களை அவர் ஒன்று சேர்த்திருந்தார். “என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை

உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.” “நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.”– யோவான் 17:10,11, 20–23. (19) ★

# 3

# பெரும் ஏற்பாடு!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 25–34)**
**திருவசன ஆதாரம் : மத்தேயு 28:19–20**

கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய சீடர்கள் அதைரியத்தினால் மிகவும் அதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தனர். அவர்களுடைய ஆண்டவர் நிராகரிக்கப்பட்டு ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டார். "மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" (மத்தேயு 27:42) என்று ஆசாரியர்களும் அதிபதிகளும் பரிகாசமாக அறிவித்திருந்தனர். சீஷர்களின் சூரியனானவர் மறைந்துவிடவே இரவு அவர்களுடைய இருதயங்களின்மீது படிந்தது. "அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்" (லூக்கா 24:21) என்னும் வார்த்தைகளை அவர்கள் திரும்பத்திரும்பக் கூறினர். "பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்ய மாட்டார்கள்" (லூக்கா 23:31) என்னும் அவருடைய வார்த்தைகளைத் தனிமையானவர்களாகவும் இருதயத்தில் நோயுற்றவர்களாகவும் இருந்த அவர்கள் நினைத்துக்கொண்டனர். (1)

சீஷர்களுக்கு எதிர்காலத்தைத் திறந்துகாட்டப் பலதடவைகள் இயேசு முயன்றிருந்தார். ஆனால் அவர் என்ன சொல்லுகிறார் என்பதைப் பற்றிக் கவலைகொள்ளாதவர்களாக அவர்கள் இருந்தனர். இதனால், அவரது மரணம் அவர்களுக்கு ஒரு ஆச்சரியமானதாக—எதிர்பாராததாக இருந்தது! அதன்பின்பு, அவர்கள் கடந்தகாலத்தையும் தங்களுடைய நம்பிக்கையின்மையையும் திரும்பிப்பார்த்தபோது, துயரம் நிறைந்தவர்களானார்கள். கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டபோது, அவர் மீண்டும்

உயிர்த்தெழுந்து வருவார் என்று அவர்கள் நம்பவில்லை. மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுவார் என்பதை அவர் வெளிப்படையாகக் கூறியிருந்தார். ஆனால் அதின் பொருள் என்ன என்பதில் அவர்கள் குழப்பமடைந்தவர்களாக இருந்தனர். இந்த புரிந்துகொள்ளும் தன்மை இல்லாமை அவர்களை அவரது மரணத்தின்போது, முற்றிலும் நம்பிக்கை இழந்தவர்களாக்கிவிட்டிருந்தது. மிகவும் கசப்பானவிதத்தில் அவர்கள் ஏமாற்றமடைந்திருந்தனர். அவர்களுடைய அறிவின் எல்லைக்குக் குறுக்காக சாத்தான் வைத்திருந்த இருளைக்கடந்து, அவர்களுடைய விசுவாசம் செல்லவில்லை. அனைத்தும் தெளிவற்றதுபோலவும், மர்மமானதுபோலவும் அவர்களுக்குக் காணப்பட்டன. இரட்சகரின் வார்த்தைகளை அவர்கள் நம்பியிருந்தால் எவ்வளவு வருத்தத்தை அவர்கள் தவிர்த்திருக்கமுடியும்! (2)

மனச்சோர்வு, வருத்தம், நம்பிக்கையின்மை ஆகியவைகளால் நொறுக்கப்பட்டிருந்த சீடர்கள், மேல்வீட்டில் ஒன்றுகூடி, அவர்களது அன்பான ஆசிரியரின் முடிவுதான் அவர்களுக்கும் உண்டாகும் என்று பயந்து, கதவுகளைப் பூட்டித் தாழிட்டிருந்தனர். இந்த இடத்தில்தான் இரட்சகர் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் அவர்களுக்குத் தரிசனமானார். (3)

கிறிஸ்து நாற்பது நாட்கள் பூமியிலிருந்தார். சீடர்களுக்கு முன்னிருந்த ஊழியத்திற்காக அவர்களை ஆயத்தம்செய்துகொண்டு, அவர்கள் இதுவரையும் புரிந்துகொள்ளாமலிருந்தவைகளை அவர்களுக்கு விளக்கிக்கொண்டிருந்தார். அவருடைய வருகை, அவர் யூதர்களால் நிராகரிக்கப்படுதல், அவரது மரணம் ஆகியவைகளின் தீர்க்கதரிசன குறிப்புகள் நிறைவேறியிருந்ததைப்பற்றி அவர் பேசினார். இந்தத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலை, அவர்களுடைய எதிர்கால ஊழியத்தின்போது அவர்கள் உணரவேண்டுமென்று அவர் கூறினார். “அப்பொழுது வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்” (லூக்கா 24:45–48) என்றார். (4)

அவர்கள் கிறிஸ்துவுடன் செலவுசெய்திருந்த இந்த நாட்களில் ஒரு புது அனுபவத்தை ஆதாயப்படுத்திக்கொண்டனர். வேதவாக்கியங்களை நிகழ்ந்தவைகளின் வெளிச்சத்தில் அவர்களுக்கு அன்பான ஆண்டவர்

விளக்கினபோது, அவர்மீதிருந்த அவர்களுடைய விசுவாசம் முற்றிலுமாக நிலைநிறுத்தப்பட்டது. “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்” (2 தீமோத்தேயு 1:12) என்னுமிடத்தை அவர்கள் அடைந்திருந்தனர். அவர்களுடைய ஊழியத்தின் தன்மை—அதின் விசாலம் ஆகியவைகளையும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சத்தியங்களை உலகத்திற்கு அறிவிக்கவேண்டியவர்களாக இருந்தனர் என்பதையும் அவர்கள் காணவும் உணரவுந்தொடங்கியிருந்தனர். கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்திருந்த சம்பவங்கள்—அவரது மரணம் உயிர்த்தெழுதல், இவைகளைச் சுட்டிக்காட்டியிருந்த தீர்க்கதரிசனங்கள், இரட்சிப்பின் திட்டத்தினுடைய இரகசியங்கள், பாவங்களுக்கு மன்னிப்பைத் தரக்கூடிய இயேசுவின் வல்லமை ஆகிய அனைத்திற்கும் அவர்கள் சாட்சிகளாக இருந்தனர். அவர்கள் அவைகளை உலகத்திற்கு அறிவிக்கவேண்டியவர்களாக இருந்தனர். மனந்திரும்புவதின்மூலமாகவும், இரட்சகரின் வல்லமையினாலும் உண்டாகக்கூடிய சமாதானம் இரட்சிப்பு ஆகியவைகளின் நற்செய்தியை அவர்கள் அறிவிக்கவேண்டியவர்களாக இருந்தனர். (5)

கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளிச் செல்லுமுன் அவருடைய சீடர்களுக்கு அவர்களுடைய பொறுப்பைக் கொடுத்தார். உலகத்திற்குப் பொக்கிஷமாக இருக்கக்கூடிய நித்திய ஜீவன் என்னும் சொத்தின்மீதுள்ள பொறுப்பைச் செயல்படுத்துகின்றவர்களாக அவர்கள் இருக்கும்படி அவர் அதனை அவர்களுக்குச் சாசனம் செய்திருந்தார். உலகத்திற்காக நான் தியாகபலியாகச் செலுத்திய எனது ஜீவனுக்கு நீங்கள் சாட்சிகளாக இருக்கிறீர்கள் என்று அவர் அவர்களிடம் கூறினார். இஸ்ரவேலருக்காக நான் செய்த எனது ஊழியத்தை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். என்னுடைய ஜனங்கள் ஜீவனை அடையும்படி என்னிடம் வராமலிருந்தபோதிலும், ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்கள் விருப்பத்தின்படி எனக்குச் செய்திருந்தபோதிலும், அவர்கள் என்னை நிராகரித்திருந்தபோதிலும், குமாரனை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை இன்னும் கொண்டுள்ளனர். என்னிடத்தில் வந்து, தங்களுடைய பாவங்களை அறிக்கைசெய்கின்ற அனைவரையும் நான் தாராளமாக ஏற்றுக்கொள்ளுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள்; என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருக்காலும் புறம்பே தள்ளுவதில்லை. இரக்கத்தின் இந்தத் தூதை, எனது சீடர்களான உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன். அது யூதர்கள்—புறஜாதிகள் ஆகிய இருவருக்கும் கொடுக்கப்படவேண்டும். முதலில் இஸ்ரவேலருக்கும், அதன்பின் சகல ஜாதியினருக்கும் பாஷைக்காரர்களுக்கும் ஜனங்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். விசுவாசிக்கக்கூடிய அனைவரும் ஒரு சபையில் ஒன்றாகச் சேர்க்கப்படவேண்டும். (6)

சுவிசேஷ ஊழியம்தான் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பெரும் மிஷனரி ஊழியத்தின் அதிகாரப்பத்திரமாக இருக்கிறது. இரக்கத்தின் அழைப்பை அனைவருக்கும் கொடுத்து, ஆத்துமாக்களுக்காக சீடர்கள் அக்கரையுடன் பணியாற்றவேண்டியவர்களாக இருந்தனர். ஜனங்கள் அவர்களிடம் வரவேண்டுமென்று அவர்கள் காத்திருக்கக்கூடாது. அவர்கள் தங்களுடைய தூதுடன் ஜனங்களிடம் செல்லவேண்டியவர்களாக இருந்தனர். (7)

சீடர்கள் அவர்களுடைய ஊழியத்தைக் கிறிஸ்துவின் பெயரால் முன்கொண்டு செல்லவேண்டியவர்களாக இருந்தனர். பாவிகளை இரட்சிக்கும் ஜீவ வல்லமை உடையதாக இருக்கும் அவரது நாமத்தின்மேல் மனிதர்களின் கவனத்தைக் கட்டும்படி அவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும் இருக்கவேண்டும். இரக்கம் வல்லமை ஆகியவைகளுக்கு ஆதாரமாக இருப்பவரில் அவர்களது விசுவாசம் மையங்கொண்டிருக்கவேண்டியதாக இருந்தது. அவருடைய நாமத்தினால் அவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களைப் பிதாவினிடத்திற்கு ஏறெடுக்கவும், வல்லமையைப்பெறவும் வேண்டும். பிதா—குமாரன்—பரிசுத்தஆவியின் நாமத்தில் அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின் நாமம் அவர்களது சங்கேத வார்த்தையாகவும் அவர்களுடைய தனிப்பட்ட தன்மையின் சின்னமாகவும், அவர்களது ஒற்றுமையின் பிணைப்பாகவும், அவர்களது செயல்களின் அதிகாரமாகவும், அவர்களது வெற்றியின் ஆதாரமாகவும் இருக்கவேண்டியதாக இருந்தது. அவரது நாமம் பொறிக்கப்படாத எதுவும் அவரது இராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படக்கூடாததாக —இனங்கண்டுகொள்ளக்கூடாததாக இருந்தது. (8)

விசுவாசிக்கின்ற அனைவரையும் சபைக்குள் சேர்க்கும்படி என்னுடைய நாமத்தில் முன்செல்லுங்கள் என்று கிறிஸ்து சீடர்களிடம் கூறியபோது, அவர்கள் எளிமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம் என்பதை அவர் வெளிப்படையாக அவர்கள்முன் வைத்தார். எந்த அளவிற்கு ஆடம்பரமும் பகட்டும் குறைவாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு நன்மைக்கான அவர்களுடைய செல்வாக்கு பெரிதாக இருக்கும். கிறிஸ்து எவ்விதமாக மிக எளிமையான விதத்தில் பேசியிருந்தாரோ அதேவிதமான—எளிமையான விதத்தில் சீடர்கள் பேசவேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுக்கு அவர் போதித்திருந்த போதனைகளை அவர்கள் அவர்களது பேச்சைக் கேட்பவர்களிடம் உணர்த்தியாகவேண்டும். (9)

சீடர்களுடைய பணி எளிதாக இருக்கும் என்று கிறிஸ்து கூறவில்லை. அவர்களைச் சுற்றி அவர்களுக்கெதிராக, அணிவகுத்து நிற்கும் பெரும் தீமையின் கூட்டணியை அவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

"துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபேசியர் 6:12) என்றார். ஆனால் தனித்து நின்று போரிடும்படி அவர்கள் விட்டுவிடப்படமாட்டார்கள். அவர் அவர்களுடன் இருப்பாரென்று அவர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். அவர்கள் விசுவாசத்துடன் முன் செல்லவேண்டுமானால் சர்வ வல்லவரின் கேடயத்தின்கீழ் முன்செல்லவேண்டும். தைரியமும் பலமும் உள்ளவர்களாக இருக்கும்படி அவர் அவர்களை அழைத்தார். ஏனெனில் தூதர்களைவிட அதிகமான வல்லமைமிக்க ஒருவர்—பரலோக சேனைகளின் தலைவராக உள்ள ஒருவர்—அவர்களுடைய அணியில் இருப்பார். அவர்களுடைய பணியை மேற்பார்வை செய்வதற்கு அவர் முழு ஏற்பாட்டையுஞ்செய்து, வெற்றியின் பொறுப்பை தம்மீது எடுத்திருந்தார். அவருடைய வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்திருக்கும்வரை, அவருடன் பிணைக்கப்பட்டவர்களாக வேலை செய்திருக்கும்வரை, அவர்களால் தோல்வியடையமுடியாது. சகல ஜாதிகளிடத்திற்கும் செல்லுங்கள் என்று அவர் கட்டளையிட்டிருந்தார். பூமியில் மனிதர்கள் கூடியிருக்கும் தூரமான பகுதிகளுக்கெல்லாம் செல்லுங்கள்; அங்கும் எனது சமுகம் உங்களுடன் இருக்கும் என்பதைப்பற்றின நிச்சயத்தை உடையவர்களாக இருங்கள் என்றார். விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் செயலாற்றுங்கள். நான் உங்களைக் கைவிட்டுவிடுகிற ஒரு நேரம் ஒருபோதும் வராது என்றார். உங்களுடைய கடமையைச் செய்வதற்கு உதவிசெய்தும், வழிகாட்டிக்கொண்டும், தேற்றிக்கொண்டும், பரிசுத்தப்படுத்திக்கொண்டும், தாங்கிக்கொண்டும், மற்றவர்களுடைய கவனத்தை பரலோகத்தை நோக்கும்படிச் செய்கிற உங்களுடைய வாத்தைகளில் உங்களுக்கு வெற்றியைத்தந்துகொண்டும் எப்பொழுதும் நான் உங்களுடனேகூட இருப்பேன் என்றார். (10)

மனிதனின் சார்பாகவுள்ள கிறிஸ்துவின் தியாகபலி முழுமையான தாகவும் நிறைவானதாகவும் இருக்கிறது. பாவ நிவாரணத்தின் நிபந்தனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தில் செய்வதற்கென்று அவர் வந்திருந்த பணி நிறைவேற்றப்பட்டிருந்தது. அவர் இராஜ்யத்தை வென்றிருந்தார். அதனை சாத்தானிடத்திலிருந்து கைப்பற்றி, சகலத்திற்கும் சுதந்தரவாளியானார். பரலோக சேனையால் கனப்படுத்தப்படுவதற்கென்று அவர் தேவனுடைய சிங்காசனத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். எல்லையில்லாத அதிகாரத்தை உடையவராக, தமது சீடர்களுக்கு பொறுப்பைக் கொடுத்தார். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக்

கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28: 19,20) என்றார். (11)

கிறிஸ்து தமது சீடர்களை விட்டுப் பிரிந்துசெல்லுவதற்குச் சற்றுமுன்பாக மறுபடியும் ஒரு முறை அவருடைய இராஜ்யத்தின் தன்மையைப்பற்றி அவர்களிடம் வெளிப்படையாக அறிவித்தார். அதைப் பற்றி அவர்களிடம் இதற்குமுன் கூறியிருந்தவைகளை நினைவுக்குக் கொண்டுவந்தார். உலகப்பிரகாரமான ஒரு இராஜ்யத்தை இந்த உலகத்தில் ஏற்படுத்துவது அவரது நோக்கமல்ல என்பதை அவர் அறிவித்தார். தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து பூமிக்குரிய ஒரு அரசராக ஆட்சிசெய்யும்படி அவர் நியமிக்கப்படவில்லை. "அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப்போஸ்தலர் 1:6,7) என்றார். பார்க்கும்படி அவர்களை அவர் தகுதிப்படுத்தியிருந்ததற்கும் அதிகமாக, தூரமாக எதிர்காலத்தைப் பார்ப்பது அவர்களுக்கு அவசியமில்லாததாக இருந்தது. நற்செய்தியின் தூதை அறிவிப்பது அவர்களது பணியாக இருந்தது. (12)

கிறிஸ்துவின் காணக்கூடிய பிரசன்னம் அவர்களிடமிருந்து பின்னிழுத்துக்கொள்ளப்படவேண்டியதாக இருந்தது. ஆனால் ஒரு புதிய இலவசமான—அங்கீகாரம்பெற்ற வல்லமை அவர்களுடையதாக இருக்கவேண்டியதாக இருந்தது. அவர்களுடைய ஊழியத்திற்கென்று அவர்களை முத்திரையிடும்படி பரிசுத்தஆவி அதன் நிறைவுடன் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது. அவர் அவர்களை நோக்கி: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்." "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப்போஸ்தலர் 1:4,8) என்றார். (13)

கடினமான இருதயங்களை அல்லது உலகப்பிரகாரமான தன்மை, சுயநலம் என்னும் கடினமான மேற்பரப்பை எப்படிப்பட்ட தர்க்கவியல் வாதத்தாலும் உருகச்செய்யமுடியாது அல்லது உடைத்து உள்ளே செல்லமுடியாது என்பதை இரட்சகர் அறிந்திருந்தார். அவருடைய சீடர்கள்

பரலோகத்திலிருந்துள்ள இலவசமான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்; வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கும் ஒருவரைப்பற்றிய ஜீவனுள்ள அறிவினால் அனலடைந்த இருதயங்களினாலும் பேச்சுத்திறனடைந்த உதடுகளினாலும் அறிவிக்கப்படும்போதுமட்டுமே, சுவிசேஷம் பலனுள்ளதாக இருக்கும். அதற்குச் சீடர்கள் பரலோகத்திலிருந்துள்ள இலவச ஈவினால் ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருக்கவேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். தீமையின் அலை, அவர்களுக்கெதிராக ஆழமாகவும் பலமாகவும் ஓடியிருந்ததினால் சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஊழியத்திற்கு, பெரும் திறமை அவசியமானதாயிருக்கும். அந்தகார சக்திகளின் தலைவனாக விழிப்பும் தீர்மானமும் உடையவனான ஒருவன் இருக்கிறான். எனவே, தேவன் கொடுக்கும் உதவியான—அவரது ஆவியினால்மட்டுமே, கிறிஸ்துவின் அடியார்களால் சரியான காரியத்திற்காகப் போர்செய்ய முடியும். (14)

சீடர்கள் அவர்களுடைய ஊழியத்தை எருசலேமில்ஆரம்பிக்கவேண்டும் என்று கிறிஸ்து அவர்களிடம் கூறியிருந்தார். மனித இனத்திற்காக அவர் செய்த ஆச்சரியமான தியாகபலியின் சாட்சியாக அந்த நகரம் இருந்தது. அங்கு மானுடத்தின உடையை அணிந்துகொண்டு, அவர் மனிதர்களுடன் நடந்தும் பேசியும் இருந்தார். பரலோகம் பூமிக்கு எவ்வளவு அருகில் வந்தது என்பதைச் சிலர்மட்டுமே அறிந்திருந்தனர். அங்கு அவர் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார். நசரேயனாகிய இயேசுதான் மேசியா என்று எருசலேமிலிருந்த அநேகர் இரகசியமாக நம்பியிருந்தனர். ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் வஞ்சிக்கப்பட்ட அநேகர் அங்கு இருந்தனர். இவர்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டாகவேண்டும். மனந்திரும்பும்படி அவர்கள் அழைக்கப்படவேண்டியவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின்மூலமாக மட்டுமே பாவமன்னிப்பைப் பெறமுடியும் என்னும் ஆச்சரியமான சத்தியம் வெளிப்படையாக்கப்படவேண்டியதாக இருந்தது. கடந்த சில வாரங்களில் நடந்த கிளர்ச்சியூட்டும் சம்பவங்களினால் எருசலேம் முழுவதும் கலங்கியிருந்தபோது, சீடர்களின் பிரசங்கம் ஆழமான உணர்த்துதல்களை உண்டுபண்ணவேண்டியதாக இருந்தது. (15)

பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இந்த உலகத்தை மீட்பதற்காக அவர் செய்யும் ஊழியத்தில் அவர்கள் அவருடன் ஒருமித்திருக்க வேண்டியவர்களாக இருந்தனர் என்னும் உண்மையை இயேசு அவருடைய உழியத்தின்போது, தொடர்ச்சியாக சீடர்களின் முன் வைத்திருந்தார். அப்பன்னிருவரையும், அதற்குப்பின் எழுபதுபேரையும் தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றி அறிவிக்கும்படி அனுப்பினபோது,

அவர்கள் மற்றவர்களுக்குப் போதிப்பது அவர்களது கடமை என்பதை அறிவித்தார். அவருடைய ஊழியங்கள் அனைத்திலும் தனிப்பட்டவிதமாக ஊழியஞ்செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளித்திருந்தார். இது, அவர்களுடைய எண்ணிக்கை அதிகமானதும், விரிவடைந்தும் காலப்போக்கில் பூமியின் கடைசிப்பகுதிவரைக்கும் செல்லவேண்டியதாகவும் இருந்தது. இரட்சிப்பைப்பற்றிய மகிழ்ச்சிமிக்க செய்தி அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்பது அவர்களுக்கு அவர் கொடுத்த கடைசிப் பாடமாக இருந்தது. (16)

கிறிஸ்து அவர்களுடைய பிதாவினிடத்திற்கு எழுந்தருளிச் செல்ல வேண்டிய நேரம் வந்தபோது அவர் பெத்தானிவரை அவர்களை நடத்திச் சென்றார். இங்கு அவர் சற்று தரித்தபோது, அவர்கள் அவரைச் சூழ்ந்தனர். அவரது பாதுகாக்கும் கவனம் அவர்கள்மீது இருக்கிறது என்னும் நிச்சயத்தைக் காட்டுவதுபோல் அவர் தமது கரங்களை விரித்து நீட்டினவராக அவர்களைவிட்டு மெதுவாக உயரே எழுந்தருளிச் சென்றார். “அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்”—லூக்கா 24:51. (17)

அவர்களைவிட்டு உயரே எழுந்தருளிச் சென்றுகொண்டிருந்த அவர்களது கர்த்தரைக் கடைசியாகப் பார்ப்பதற்காக, அவர்கள் தங்களுடைய தலைகளை மேலே உயர்த்திப் பார்த்துக்கொண்டிருந்தபோது, மகிழ்ந்து களிகூர்ந்துகொண்டிருந்த பரலோகத் தூதர்களின் அணியினால் அவர் வரவேற்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டார். உன்னதத்திலுள்ள மாளிகைகளுக்கு அவர்கள் அவரை நடத்திச்சென்றபோது, “பூமியின் ராஜ்யங்களே, தேவனைப் பாடி, ஆண்டவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். ஆதிமுதலாயிருக்கிற வானாதி வானங்களின்மேல் எழுந்தருளியிருக்கிறவரைப் பாடுங்கள்; இதோ, தமது சத்தத்தைப் பலத்த சத்தமாய் முழங்கப்பண்ணுகிறார். தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துங்கள்; அவருடைய மகிமை இஸ்ரவேலின்மேலும், அவருடைய வல்லமை மேகமண்டலங்களிலும் உள்ளது” (சங்கீதம் 68:32–34) என்று ஆர்ப்பரித்தனர். (18)

சீடர்கள் தொடர்ந்து “வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்திநின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்”—அப்போஸ்தலர் 1:10,11. (19)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய வாக்குத்தத்தம் சீடர்களின் மனங்களில் எப்பொழுதும் பசுமையாகக் காக்கப்பட்டிருந்தது. பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றுகொண்டிருந்த எந்த இயேசுவை அவர்கள் நோக்கிக்கொண்டிருந்தார்களோ அந்த இயேசு, இங்கு கீழே அவருடைய சேவைக்கென்று எவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளுவதற்காக மறுபடியும் வருவார். "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று கூறிய அதே குரல், பரலோக இராஜ்யத்திலுள்ள அவரது சமுகத்திற்கு அவர்களை வரவேற்கும். (20)

நிழலாட்டமாக இருந்த ஆராதனையில், பிரதான ஆசாரியன் தனது ஆசாரிய உடையைக் கழற்றிவைத்துவிட்டு, வெண்ணங்கி தரித்து, சாதாரணமான ஒரு ஆசாரியனைப்போல ஊழியம்செய்ததைப்போல கிறிஸ்து தமது இராஜரீக உடையை ஒருபக்கமாக வைத்துவிட்டு, மானுடத்தைத் தம்மில் அணிந்துகொண்டு, தாமே பலியாகவும் (மிருகமாகவும்), தாமே ஆசாரியராகவும் ஊழியஞ்செய்தார். பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தனது ஊழியத்தைச்செய்து முடித்தபின்னர், தனது பிரதான ஆசாரிய உடையுடன் காத்துக்கொண்டிருக்கும் சபையின் முன்பாக வந்ததுபோல, கிறிஸ்து வெண்மையினும் வெண்மையான உடையை அணிந்தவராக இரண்டாம் முறை வருவார். "அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல் பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது" (மாற்கு 9:3). அவர் தமது மகிமையுடனும் தமது பிதாவின் மகிமையுடனும் வருவார். தூதர்களின் சேனைகள் அனைத்தும் அவரது பாதையில் அவரோடு—புடைசூழ அணிவகுத்து வருவார்கள். (21)

இவ்வாறாக, "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:3) என்னும் கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் நிறைவேறும். அவரை நேசித்து, அவருக்காகக் காத்திருந்தவர்களுக்கு அவர், மகிமையும் கனமும் அழியாமையும் உள்ள கிரீடத்தைச் சூட்டுவார். மரித்த நீதிமான்கள் அவர்களுடைய கல்லறைகளை விட்டு வெளியே வருவார்கள். உயிரோடிருப்பவர்கள் ஆகாயத்தில் தங்களுடைய கர்த்தரைச் சந்திக்கும்படி எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அழிவுக்குரிய எந்தச் செவியும் இதுவரை கேட்டிராத இனிய குரலில்: "உங்கள் போராட்டங்கள் முடிந்துவிட்டன"என்கிற இயேசுவின் குரலைக் கேட்பார்கள். "அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால்

ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்தேயு 25:34) என்பார். (22) ★

# 4

# பெந்தெகொஸ்தே நாள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 35–46)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 2:1–39**

சீடர்கள் ஒலிவ மலையிலிருந்து எருசலேமிற்குத் திரும்பி வந்தபோது, அவர்களுடைய முகங்களில் துயரம், குழப்பம், தோல்வி ஆகியவைகளின் உணர்ச்சிகளைக் காணலாம் என்று எண்ணி, மக்கள் அவர்களைப் பார்த்தனர். ஆனால் அவர்களிடத்தில் மகிழ்ச்சியையும் வெற்றியையும் கண்டார்கள். சீடர்கள் இப்பொழுது அவர்களுடைய நம்பிக்கைகளில் உண்டான ஏமாற்றத்திற்காக துக்கங்கொண்டாடுபவர்களாக இருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய உயிர்த்தெழுந்த இரட்சகரைக் கண்டிருந்தனர். அவர் பிரிந்துசெல்லும்போது கொடுத்த வாக்குத்தத்தங்கள் அவர்களுடைய செவிகளில் தொடர்ச்சியாக ஒலித்துக்கொண்டிருந்தன. (1)

கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, பிதாவினிடத்திலிருந்துள்ள வாக்குத்தத்தமான ஆவியின் அபிஷேகத்திற்காக அவர்கள் எருசலேமில் காத்திருந்தனர். அவர்கள் ஒன்றும் செய்யாதவர்களாகக் காத்திருக்கவில்லை. "நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்" (லூக்கா 24:53) என்று ஆவணம் (வேத வாக்கியம்) கூறுகின்றது. (2)

இயேசுவின் பெயரால், அவர்களுடைய மன்றாட்டுக்களைப் பிதாவின் சமுகத்தில் வைப்பதற்காக, அவர்கள் ஒன்றுகூடவும் செய்திருந்தனர். அவர்களது பிரதிநிதியாகவும் பரிந்துபேசுபவராகவும் ஒருவர் பரலோகத்தில் தேவசிங்காசனத்தினிடத்தில் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். "அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை

அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவான் 16:23–24) என்னும் வாக்குறுதியை பக்திவிநயமான அச்சத்துடன் மீண்டும் கூறிக்கொண்டு அவர்கள் பணிந்து ஜெபித்திருந்தனர். (3)

வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக சீடர்கள் காத்திருந்தபோது, உண்மையான மனந்திரும்புதலுடன் அவர்கள் தங்களுடைய இருதயங் களைத் தாழ்த்தி, அவர்களுடைய நம்பிக்கையின்மையை அறிக்கை செய்திருந்தனர். கிறிஸ்து, தமது மரணத்திற்குமுன் அவர்களிடம் கூறியிருந்த வார்த்தைகளை அவர்கள் நினைவிற்குக் கொண்டுவந்தபோது, அவைகளின் கருத்தை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தனர். அவர்களுடைய ஞாபகத்திலிருந்து கடந்துசென்றிருந்த சத்தியங்கள் மறுபடியும் அவர்களது மனங்களுக்குக் கொண்டுவரப்பட்டன. அவர்கள் அவைகளை ஒருவருக்கொருவர் திரும்பக் கூறிக்கொண்டனர். தங்களுடைய இரட்சகரை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருந்ததற்காக, தங்களையே நொந்துகொண்டனர். ஒரு ஊர்வலத்தின் காட்சியைப்போல அவரது ஆச்சரியமான வாழ்க்கையின் காட்சிகள், காட்சிக்குப்பின் காட்சியாக அவர்கள்முன் கடந்துசென்றன. அவருடைய தூய்மையையும் பரிசுத்தமான வாழ்க்கையையும்பற்றி அவர்கள் தியானம் செய்தபோது, கிறிஸ்துவின் சுபாவத்தின் இனிமைக்கு அவர்களால் சாட்சிகொடுக்கமுடிந்தால், எந்த ஒரு உழைப்பும் கடினமாக இருக்காது; எந்தத் தியாகமும் பெரிதாக இருக்காது என்பதை அவர்கள் உணர்ந்தனர். ஓ! கடந்த மூன்று ஆண்டுகளின் வாழ்க்கையை மீண்டும் வாழ முடிந்தால் எப்படி வேறுவிதமாகச் செயல் பட்டிருந்திருப்பார்கள் என்று யோசித்தனர். அவர்களால் அவர்களது ஆண்டவரைமட்டும் மறுபடியும் பார்க்கமுடிந்தால்—எவ்வளவு ஆழமாக அவரை நேசித்திருந்தனர் என்பதையும், நம்பிக்கையற்ற வார்த்தையாலும் செயலினாலும் அவரை வருத்தப்படுத்தினதற்காக எவ்வளவு உண்மையாக வருந்தியிருந்தனர் என்பதையும் அவருக்குக் காண்பிக்க எவ்வளவு ஊக்கமாக முயன்றிருப்பார்கள்! ஆனால் மன்னிப்பைப் பெற்றிருந்தனர் என்னும் எண்ணத்தினால் அவர்கள் ஆறுதல் அடைந்திருந்தனர். அவர்களால் முடிந்தவரைக்கும் அவர்களது நம்பிக்கையின்மைக்குப் பரிகாரமாக—பாவநிவாரணமாக—உலகத்திற்குமுன் அவரைத் தைரியத்துடன் அறிக்கை செய்வதற்கு அவர்கள் தீர்மானித்திருந்தனர். (4)

மனிதர்களைச் சந்திப்பதற்கும், நாள்தோறுமுள்ள உறவுகளில் பாவிகளைக் கிறிஸ்துவிடம் நடத்துவதற்கும் வார்த்தைகளைப் பேசவும்

தாங்கள் தகுதியுடையவர்களாக வேண்டுமென்று சீடர்கள் வலிமைமிக்க அக்கரையுடன் ஜெபம் செய்திருந்தனர். சகலவிதமான வேற்றுமைகளையும் மேலாதிக்கத்திற்கான ஆசைகள் அனைத்தையும் தூரமாகக் களைந்துவிட்டு நெருங்கி வந்தனர். தேவனிடத்தில் அதிகமாக நெருங்கிவந்தபோது, கிறிஸ்துவுடன் இவ்வளவு நெருக்கமாக உறவாடுவதற்கு அனுமதிக்கப்பட்டது எப்படிப்பட்ட சிலாக்கியம் என்பதை உணர்ந்தனர். தங்களுடைய புரிந்து கொள்ளும் தன்மையிலிருந்த மந்தத்தையும், தங்களுடைய நன்மைக்காக அவர் போதிக்க முயன்றிருந்தவைகளைப் புரிந்துகொள்வதில் தோற்று எத்தனை முறை அவரை வருத்தப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் நினைத்தபோது, துயரம் அவர்களுடைய இருதயங்களை நிரப்பினது. (5)

ஆயத்தம் செய்திருந்த இந்த நாட்கள் இருதயங்களை ஆழமாக ஆராய்ந்த நாட்களாக இருந்தன. சீடர்கள் தங்களுடைய ஆவிக்குரிய தேவையை உணர்ந்து, ஆத்தும ஆதாயம் செய்யும் பணியில் தங்களைத் தகுதிப்படுத்தும் பரிசுத்தமான அபிஷேகத்திற்காக கர்த்தரை நோக்கி அழுதனர். சாதாரணமாகத் தங்களுக்கு ஒரு ஆசீர்வாதம் வேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை. ஆத்துமாக்களின் இரட்சிப்பு என்னும் பாரத்தால் அழுத்தப்பட்டவர்களாக அவர்கள் இருந்தனர். சுவிசேஷம் உலகத்திற்குக் கொண்டுசெல்லப்படவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து, கிறிஸ்து வாக்குத்தத்தஞ்செய்திருந்த வல்லமையை வேண்டியிருந்தனர். (6)

முற்பிதாக்களின் காலத்தில், பரிசுத்தஆவியின் செல்வாக்கு குறிப்பிட்ட விதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அதின் நிறைவில் அது ஒருபோதும் நிகழ்ந்திருக்கவில்லை. இப்பொழுது இரட்சகரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக—இந்த ஈவிற்காக—சீடர்கள் விண்ணப்பித்தார்கள். பரலோகத்தில் கிறிஸ்து தமது பரிந்துபேசுதலை இதனுடன் கூட்டிக்கொண்டார். பரிசுத்தஆவியின் ஈவை அவர்கள்மீது ஊற்றுவதற்காக அவர் அந்த ஈவிற்காக மன்றாடினார். (7)

“பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.” (8)

காத்துக்கொண்டும் ஜெபித்துக்கொண்டுமிருந்த சீடர்களின்மீது ஒவ்வொரு இருதயத்தையும் சென்றடைந்தஆவி, முழுமையாக வந்தது. முடிவில்லாத ஒருவர் தமது சபைக்குத் தம்மை வல்லமையுடன் வெளிப்படுத்தினார். அந்தச் சம்பவமும், அந்தச் செல்வாக்கும் யுகங்களாகக்

கட்டுப்படுத்திவைக்கப்பட்டதுபோல் இருந்தது. இப்பொழுது பரலோகம் ஆவியின் கிருபையின் ஐசுவரியங்களை சபையின்மீது ஊற்றுவதற்குத் தகுதியடைந்ததற்காக மகிழ்ந்து களிகூர்ந்தது. ஆவியின் செல்வாக்கின்கீழ் பாவத்திற்கு வருந்துகின்ற வார்த்தைகளும் பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான துதியின் பாடல்களுடன் கலந்தன. நன்றியறிதலின் வார்த்தைகளும் தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளும் கேட்கப்பட்டன. நிகரற்றதும் புரிந்துகொள்ள முடியாததுமான அன்பின் ஞானத்தைக் காணவும் போற்றவும் பரலோகம் முழுவதும் கீழே குனிந்தது. ஆச்சரியத்தினால் இழக்கப்பட்டுப்போன சீடர்கள்: “அன்பு இங்கே இருக்கிறது” என்று வியந்து கூவினர். அருளப்பட் ஈவை அவர்கள் பற்றிக்கொண்டனர்.அதைத் தொடர்ந்தது என்ன? வல்லமையினால் புதிதாகக் கூர்மையாக்கப்பட்டு, பரலோகத்தின் மின்னல்களினால் பதப்படுத்தப்பட்ட, ஆவியின் பட்டயம் நம்பிக்கையின்மையைப் பிளந்துகொண்டு, அதன் பாதையில் சென்றது. ஒரேநாளில் ஆயிரக்கணக்கானவர்கள் மாறினர். “நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.” “சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்” (யோவான் 16:7,13) என்று இயேசு கூறினார். (9)

கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றதால் அவருடைய அடியார்கள் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர் என்பதற்கான அடையாளமாக இது இருந்தது. ஏனெனில் அவர்கள் தங்களுடைய வேலைக்குள் பிரவேசிப்பதற்குமுன், அதற்காகக் காத்திருக்க வேண்டியவர்களாக இருந்தனர். பரலோகத்தின் வாசலுக்குள் கிறிஸ்து கடந்துசென்றபோது, தூதர்களின் போற்றுதல்களுக்கிடையில் அவர் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டார். இந்தச் சடங்கு நிறைவேறிமுடிந்தவுடன், பரிசுத்த ஆவியானவர் வல்லமைமிகுந்த வேகத்துடன் சீடர்கள்மேல் இறங்கினார். உண்மையாகவே கிறிஸ்து நித்தியகாலமாகப் பிதாவுடன் இருந்தபோது, எந்தவிதமான மகிமையை உடையவராக இருந்தாரோ அந்த மகிமையை அடைந்தார். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அருள் ஊற்றப்பட்டுவிட்டது என்பது பரலோகத்தின் அருட்செய்தியாக இருந்தது. அவரது வாக்குத்தத்தத்தின்படி அவர் ஆசாரியராகவும், அரசராகவும் பரலோகத்திலும் பூமியிலுமுள்ள சகலஅதிகாரங்களையும் பெற்றுக்கொண்டார் என்பதின் அடையாளமாகவும், தமது ஜனத்திற்காக

அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் என்பதின் அடையாளமாகவும், பரலோகத்திலிருந்து தமது ஜனங்களிடத்திற்குப் பரிசுத்த ஆவியை அனுப்பிவைத்தார். (10)

"அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப்போஸ்தலர் 2:3,4). பரிசுத்த ஆவியானவர் அக்கினி நாவுகளின் வடிவத்தை எடுத்துக்கொண்டு, அங்கு கூடியிருந்தவர்களின்மீது தங்கினார். இது அப்பொழுது, சீடர்களுக்கு அருளப்பட்ட ஒரு ஈவாக இருந்தது. அவர்கள் இதுவரை அறிந்திராத பல பாஷைகளை சரளமாகப் பேசுவதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தினதின் அடையாளமாக இருந்தது. அப்போஸ்தலர்கள் ஆர்வமிக்க வாஞ்சையுடன் ஊழியம்செய்யவேண்டும் என்பதையும், அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தில் காணப்படக்கூடிய வல்லமையின் எடுத்துக்காட்டாகவும் அக்கினியின் தோற்றம் இருந்தது. (11)

"வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள்." யூதர்கள் சிதறிப்போனபோது ஏறத்தாழ மனிதர்கள் குடியிருக்கும் உலகத்தின் சகல பகுதிகளுக்கும் சென்றிருந்து, அவர்களுடைய அயல்நாட்டு வாழ்க்கையில் பலவிதமான மொழிகளைப் பேசுவதற்குக் கற்றிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் யூதர்களில் அநேகர், எருசலேமில் தங்கியிருந்து, அப்பொழுது அங்கு நடந்துகொண்டிருந்த சமய சம்பந்தமான பண்டிகைகளில் கலந்திருந்தனர். அங்கு கூடியிருந்தவர்கள் ஒவ்வொருவரும் தெரிந்திருந்த மொழிகளைப் பேசியிருந்தனர். இந்த மொழி வேற்றுமை சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு பெரும் இடையூறாக இருந்திருக்கும். எனவே தேவன் ஒரு அற்புதமான விதத்தில் அப்போஸ்தலர்களின் குறைபாட்டினை நிவர்த்திசெய்து, பரவலான பயன்பாட்டுத்தன்மைக்காக அவர்களை பயன்படுத்தினார். அவர்களால் அவர்களுடைய வாழ்க்கை முழுவதிலும் எவைகளை நிறைவேற்ற முடியாமலிருந்ததோ, அவைகளை அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்றினார். இப்பொழுது அவர்கள் எவர்களுக்காக ஊழியஞ்செய்துகொண்டிருந்தனரோ, அவர்களது மொழிகளில் மிகச்சரியான விதத்தில் பேசி, அயல்நாட்டினருக்கும் சுவிசேஷத்தின் சத்தியங்களை அவர்களால் அறிவிக்கமுடியும். இந்த அற்புதமான ஈவு, அவர்களது ஊழியம் பரலோகத்தின் முத்திரையைப் பெற்றிருக்கிறது என்பதற்கு ஒரு

பலத்த சான்றாக இருந்தது. அந்த நேரத்திற்குப்பின் சீடர்களின் மொழி, அது தாய்மொழியானாலும் அல்லது பிறமொழியானாலும் தூய்மையானதாகவும் எளிமையானதாகவும் மிகச் சரியானதாகவும் இருந்தது. (12)

“அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.” “எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேய ரல்லவா?” (அப்போஸ்தலர் 2:2,7) என்றார்கள். (13)

இந்த ஆச்சரியமான வெளிக்காட்டுதலில் ஆசாரியர்களும் அதிபதிகளும் பெருமளவில் கோபாவேசமடைந்தனர். ஆனால் அவர்களது விரோதமான எண்ணங்களை அவர்கள் வெளிக்காட்டத் துணியவில்லை. ஏனெனில், மக்களின் வன்முறைக்குத் தங்களைக் காட்டிக்கொள்வதற்கு அவர்கள் பயந்தனர். நசரேயனாகிய இயேசுவை அவர்கள் கொன்றிருந்தனர். ஆனால் இங்கு கல்வியறிவு இல்லாத மனிதர்களான அவருடைய ஊழியக்காரர்களாக இருந்த கலிலேயர்கள் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றில் அப்பொழுது பேசப்பட்டிருந்த அனைத்து மொழிகளிலும் பேசிக்கொண்டிருந்தனர். சீடர்களின் அற்புதமான இந்த வல்லமைக்கு ஏதாவது இயற்கையான காரணம் கூறவேண்டுமென்று அந்த ஆசாரியர்கள் தீர்மானம்செய்து, பண்டிகைக்காக ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த புதுத் திராட்சரசத்தை அவர்கள் அதிகமாகப் பானம் செய்துவிட்டதினால்தான்—போதையில் இவ்விதமாகப் பேசுகின்றனர் என்றனர். அங்கிருந்த மிகவும் அறியாமைமிக்க ஜனங்களில் சிலர், இந்தக் கருத்தை, உண்மையென்று நம்பினார்கள். ஆனால் அதிகமான நுண்ணறிவுடையவர்களம், பல மொழிகளையும் புரிந்திருந்தவர்கயும், சீடர்களால் பயன்படுத்தப்பட்ட மொழிகளின் சரியான தன்மைக்குச் சாட்சி பகர்ந்தனர். (14)

ஆசாரியர்களின் இந்தக் குற்றச்சாட்டுக்கு மறுமொழியாக இந்த நடைமுறை விளக்கம், யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேறுதலாக உள்ளது. அதில் ஒரு சிறப்பான வேலைக்கு மனிதர்களைத் தகுதிப்படுத்த இப்படிப்பட்ட வல்லமை வரும் என்று அவன் முன்னறிவித்திருக்கிறான் என்பதைச் சுட்டிக்காட்டிய பேதுரு: “அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணிவேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால்

உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்" (அப்போஸ்தலர் 2:14–17) என்று கூறினான். (15)

மிகத்தெளிவுடனும் வல்லமையுடனும் பேதுரு, கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்கு "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப்போஸ்தலர் 2:22–24) என்று சாட்சி பகர்ந்தான். (16)

அந்தக் காட்சி ஆர்வத்தை உண்டாக்குகின்ற ஒன்றாக இருந்தது. இயேசுவில் உள்ளதுபோன்ற சத்தியத்தை சீடர்கள் சாட்சியாகக் கொடுப்பதைக் கேட்பதற்காக எல்லாத் திசைகளிலிருந்தும் மக்கள் வந்துகொண்டிருப்பதைக் காணுங்கள். அவர்கள் ஆலயம் நிரம்பிவழியும்படி கூடுகின்றனர். ஆசாரியர்களும் அதிபதிகளும் அங்கு உள்ளனர். அவதூறு சொல்லும் கடுமையான முகச்சுளிப்பு இன்னும் அவர்களுடைய முகங்களில் உள்ளது. அவர்களுடைய இருதயங்கள் கிறிஸ்துவுக்கெதிரான வெறுப்பை உடையனவாக இன்னும் உள்ளன. உலக மீட்பரைச் சிலுவையில் அறைந்தபோதுண்டான அவர்களுடைய கைகளிலுள்ள இரத்தக்கறைகள் இன்னும் சுத்தஞ்செய்யப்படாதவைகளாக உள்ளன. ஒடுக்குதல் மரண தண்டனை அளித்தல் என்னும் கொடிய கரத்தின்கீழ் அப்போஸ்தலர் களைப் பயப்படுத்தி, அவர்களைக் கோழைகளாக்கிப் பார்க்கலாமென்று எண்ணியிருந்தனர். ஆனால் சகலவிதமான பயங்களுக்கும்மேலாக அவர்கள் உயர்த்தப்பட்டு, ஆவியினால் நிரப்பப்பட்டு, நசரேயனாகிய இயேசுவின் தெய்வீகத்தை அறிவித்துக்கொண்டிருப்பதை அவர்கள் காணுகின்றனர். சமீப காலத்தில் அவமானப்படுத்தப்பட்டு, பரிகசிக்கப்பட்டு, கொடுமையான கரங்களினால் அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்ட அவர், தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள ஜீவாதிபதியாக இருக்கிறார். (17)

அப்போஸ்தலர்களின் பேச்சைக் கேட்டிருந்தவர்களில் சிலர் கிறிஸ்துவை ஆக்கினைக்குட்படுத்தியதிலும் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த செயல்களிலும் தீவிரமாகப் பங்குவகித்தவர்களாக இருந்தனர். அவனைச் சிலுவையில் அறையுங்கள் என்னும் கீழ்த்தரமான மக்களின் குரல்களுடன் அவர்களுடைய குரல்களும் கலந்திருந்தன. நீதிமன்றத்தின்முன் இயேசுவும் பரபாசும் நின்றிருந்தபோது: "எவனை நான் உங்களுக்கு வடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ?" என்று பிலாத்து கேட்டபோது: "பரபாசை" விடுதலையாக்க வேண்டும் என்று கூச்சலிட்டிருந்தனர். (18)

சிலுவையில் அறையப்பட்டவர் தேவகுமாரனாக இருந்தார் என்று இப்பொழுது சீடர்கள் அறிவித்துக்கொண்டிருப்பதை அவர்கள் கேட்டனர். ஆசாரியர்களும் அதிபதிகளும் நடுங்கினார்கள். மன உணர்த்துதலும் வேதனையும் மக்களைப் பற்றிக்கொண்டன. "இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்" கவனித்துக்கொண்டிருந்தவர்களுக்கிடையில் இருந்த சிலர் தங்களுடைய நம்பிக்கையில் உண்மையுள்ள, பக்திமிக்க யூதர்களாக இருந்தனர். பேசியிருந்தவனின் வார்த்தைகளைத் தொடர்ந்திருந்த வல்லமை இயேசு உண்மையாகவே மேசியா என்னும் மனதிருப்தியை அவர்களில் உண்டுபண்ணியது. (19)

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்று சொன்னான். (20)

மனஉணர்த்துதலை அடைந்திருந்த உள்ளங்களில் பதியும்படி பேதுரு: ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் அவர்கள் வஞ்சிக்கப்பட்டபடியினால் அவர்கள் கிறிஸ்துவை நிராகரித்தனர் என்றும், ஆலோசனைகளுக்காக இந்த மனிதர்களைப் பார்ப்பதில் தொடர்ந்தால், தங்களுக்குமுன்பு அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளட்டும் என்று காத்திருந்தால், ஒருபோதும் இயேசுவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் வற்புறுத்திக் கூறினான். இந்த வல்லமைமிக்க மனிதர்கள் தெய்வபக்தியின் வேஷத்தைத் தரித்து, உலக செல்வங்களின்மீதும் மகிமையின்மீதும் ஆசைகொண்டிருந்து, ஒளியைப் பெற கிறிஸ்துவிடம் வர மனமில்லாதவர்களாக இருந்தனர். (21)

பரலோக வெளிச்சத்தின் செல்வாக்கின்கீழ், சீடர்களுக்குக் கிறிஸ்து விளக்கியிருந்த வேதவாக்கியங்கள், பூரணமான சத்தியத்தின் பளபளப்புடன் சீடர்கள் முன் தோன்றின. மூடப்பட்டவைகளின் திரை இப்பொழுது நீக்கப்பட்டுவிடவே, அவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கத்தையும் அவரது இராஜ்யத்தின் தன்மையையும் மிகத்தெளிவாகப் புரிந்துகொண்டனர். இரட்சகரின் வல்லமையுடன் அவர்களால் பேசமுடிந்திருந்தது. அவர்களது பேச்சைக் கேட்டிருந்தவர்களுக்கு அவர்கள் இரட்சிப்பின் திட்டத்தை விவரித்தபோது, அநேகர் மன உணர்த்துதலையும் மனதிருப்தியையும் அடைந்திருந்தனர். ஆசாரியர்களால் உட்புகுத்தப்பட்டிருந்த பாரம்பரியங்களும் மூட நம்பிக்கைகளும் அவர்களது மனங்களிலிருந்து தூரமாக அடித்துச் செல்லப்படவே, இரட்சகரின் போதனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. (22)

"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்." (23)

கிறிஸ்துவின் மரணத்துடன் அவரது பணி நின்றுவிட்டது என்று யூதர்கள் நினைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் அதற்குப் பதிலாக, அவர்கள் பெந்தெகொஸ்தே நாளின் ஆச்சரியமான காட்சிகளைச் சாட்சிகளாகக் கண்டனர். இதுவரை அறியப்படாமலிருந்த ஒரு வல்லமை சீடர்களுக்கு தேவ அங்கீகாரமாக அருளப்பட்டு, அதினால் அவர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதையும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் அவர்களது வார்த்தைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையும் அவர்கள் கண்டனர். யூதமார்க்கத்தின் பலமான கோட்டையாக இருந்த எருசலேமில், ஆயிரக்கணக்கானவர்கள் நசரேயனாகிய இயேசுதான் மேசியா என்னும் தங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டனர். (24)

பெரும் அளவிலான ஆத்துமாக்கள் அறுவடையைக்கண்டு, சீடர்கள் ஆச்சரியமடைந்தவர்களாகவும், அதிகமான மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் இருந்தனர். இவ்விதமாக ஆச்சரியமானவிதத்தில் திரளானவர்கள் சபைக்குள் வந்துசேருவதைத் தங்களுடைய சொந்த முயற்சியின் பலன்கள் என்று அவர்கள் கருதவில்லை. மற்ற மனிதர்களின் உழைப்பிற்குள் தாங்கள் பிரவேசித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்தனர். ஆதாமின் விழுகையின் நாளிலிருந்து கிறிஸ்துவின் வார்த்தைகளாகிய விதைகளை மனித இருதயங்களில் விதைப்பதற்கு அவர் அவைகளைத் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டிருந்த ஊழியக்காரர்களிடம் ஒப்படைத்திருந்தார். பூமியில் அவர் வாழ்ந்திருந்த நாட்களின்போது, சத்தியத்தின் விதையை விதைத்து, அதற்குத் தமது இரத்தத்தை நீராகப் பாய்ச்சியிருந்தார்.

பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்றிருந்த மாற்றங்கள் இந்த விதைப்பின் பலனாகவும் கிறிஸ்துவின் பணியின் அறுவடையாகவும் இருந்து, அவரது போதனையின் வல்லமையை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. (25)

அப்போஸ்தலர்களின் வாதங்கள் தெளிவானவைகளாகவும் மனத் திருப்தியை உண்டுபண்ணக்கூடியவைகளாகவும் இருந்திருந்தபோதிலும், அவைகள் அப்படிப்பட்ட சாட்சிகளாக நின்றிருந்தபோதிலும் அவைகளால் தவறான எண்ணங்களை நீக்கியிருக்க முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் தமது தெய்வீக வல்லமையினால் அந்த வாதங்களை இருதயங்களுக்குள் அனுப்பினார். அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் சர்வ வல்லமையுள்ளவரின் அம்புகளைப்போல கூர்மையுள்ளவைகளாக, மகிமையின் கர்த்தரை நிராகரித்துச் சிலுவையிலறைந்த பயங்கரமான பாவத்தைப்பற்றின மனஉணர்த்துதலை மனிதர்களிடம் கொண்டுவந்திருந்தது. (26)

பரலோக வெளிச்சத்தைப் பெந்தெகொஸ்தேநாள் அவர்களிடம் கொண்டுவந்தது. கிறிஸ்து அவர்களுடன் இருந்தபோது அவர்களால் புரிந்துகொள்ள முடியாமலிருந்த சத்தியங்கள் இப்பொழுது விவரித்துக் காட்டப்பட்டன. அவர்கள் இதற்குமுன் ஒருபோதும் அறிந்திராத ஒரு விசுவாசத்துடனும் நிச்சயத்துடனும் பரிசுத்த வார்த்தையின் போதனைகளனைத்தையும் ஏற்றுக்கொண்டனர். அதற்குப்பின், கிறிஸ்து தேவகுமாரனாக இருந்தார் என்பது அவர்களுக்கு விசுவாசத்தினாலான ஒரு காரியமாக இருக்கவில்லை. அவர் மானுடத்தைத் தமது உடையாக அணிந்திருந்தபோதிலும் உண்மையாகவே மேசியாவாக இருந்தார் என்னும் அவர்களுடைய அனுபவத்தை அவர்கள் நம்பிக்கையுடன் உலகத்திற்குக் கூறினார்கள். தேவன் அவர்களுடன் இருந்தார் என்னும் மன உணர்த்துதலை அந்த நம்பிக்கை அதனுடன் சுமந்துசென்றிருந்தது. (27)

இயேசுவின் நாமத்தைக்குறித்து அவர்களால் நிச்சயத்துடன் பேசமுடிந்திருந்தது. ஏனெனில் அவர் அவர்களது நண்பராகவும் மூத்த சகோதரராகவும் இருக்கவில்லையா? கிறிஸ்துவுடன் மிக நெருக்கமான ஐக்கியத்தில் கொண்டுவரப்பட்டு, அவர்கள் பரலோகத்தின் இடங்களில் அவருடன் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் அவருக்காகச் சாட்சிகொடுத்தபோது, தங்களுடைய யோசனைகளை எவ்விதமான எரியும் மொழியால் போர்த்தியிருந்தனர்? மிக அதிகமாக நிறைந்ததும், மிக ஆழமானதும், அதிகமான தூரம் செல்லக்கூடியதாகவுமிருந்த அனுதாபத்தினால் அவர்களுடைய இருதயங்கள் மிகுதியாகப் பாரமடைந்திருந்தன. அது கிறிஸ்துவின் வல்லமைக்குச் சாட்சி பகர்ந்துகொண்டு, பூமியின் கடைசி

எல்லைவரைக்கும் செல்லும்படி அவர்களை முன்னோக்கித் தள்ளியிருந்தது. அவர் ஆரம்பித்துவைத்திருந்த பணியை முன்கொண்டுசெல்லுவதற்கு அவர்கள் ஏக்கத்தால் நிரப்பப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் தாங்கள் பரலோகத்திற்குட்பட்டுள்ள கடனின் பெரிய தன்மையையும் அவர்களுடைய பணியில் உள்ள பொறுப்பையும் உணர்ந்திருந்தனர். பரிசுத்தஆவி என்னும் தேவனுடைய இலவச அங்கீகாரத்தினால் பலப்படுத்தப்பட்டு, அவர்கள் சிலுவையின் வெற்றியை விரிவுபடுத்தவேண்டும் என்ற வைராக்கியத்தினால் நிரப்பப்பட்டவர்களாக முன்சென்றனர். ஆவி அவர்களை அசைத்து பேசச்செய்தது. கிறிஸ்துவின் சமாதானம் அவர்களுடைய முகத்திலிருந்து பிரகாசித்தது. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை அவருடைய சேவைக்கென்று அர்ப்பணம் செய்திருந்தனர். அவர்களுடைய முகத்தோற்றங்களால் அவர்கள் எதற்குச் சரணடைந்திருந்தனர் என்னும் சாட்சியைத் தாங்கியிருந்தனர்! (28) ★

# 5

# ஆவியின் வரம்

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 47–56)**
**திருவசன ஆதாரம் : யோவான் 16:14; 14:26.**

ஆவியைப்பற்றிய வாக்குத்தத்தத்தைக் கிறிஸ்து சீடர்களுக்குக் கொடுத்தபோது, அவர் பூமிக்குரிய தமது ஊழியத்தின் முடிவை நெருங்கி யிருந்தார். அவர்மீது சுமரவுள்ள பாவத்தைச் சுமக்கும் ஒருவராக, பாவத்தின் பாரத்தைப்பற்றிய உணர்வையும் உடையவராக சிலுவையின் நிழலில் நின்றுகொண்டிருந்தார். பலி ஆடாக தம்மைக் கொடுப்பதற்குமுன் அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிகவும் முக்கியமானதும் பூரணமானதுமான ஈவைப்பற்றியும், அவர்களுக்கு கிடைக்கும் விதத்தில் மிகச் சமீபமாக இருக்கக்கூடிய அவரது கிருபையைப்பற்றியும் அவர்களுக்குப் போதித்தார். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென் றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:16,17). அவருடைய பிரதிநிதியாக இருந்து, பலத்த ஒரு கிரியையைச் செய்வதற்காக பரிசுத்த ஆவியானவர் வரவேண்டிய நேரத்தை அவர் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஒன்றுதிரண்டிருந்த ... குவிந்திருந்த— தீமை தடுக்கப்படவேண்டியதாகவிருந்தது. (1)

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டதினால் உண்டான பலன் என்ன? மனிதர்கள் குடியிருந்த உலகத்தின் கடைசிப் பகுதிவரைக்கும் உயிர்த்தெழுந்த ஒரு இரட்சகரைப்பற்றிய மகிழ்ச்சிமிக்க செய்தி எடுத்துச்செல்லப்பட்டது. மீட்கும் கிருபையைப்பற்றிச் சீடர்கள்

அறிவித்தபோது, இந்தத் தூதின் வல்லமைக்கு இருதயங்கள் இணங்கின. மாற்றம் அடைந்தவர்கள் சகல திசைகளிலுமிருந்து சபைக்குள் திரள் கூட்டமாக வந்துசேருவதை அது கண்டது. விலைமதிக்கமுடியாத முத்தைத் தேடிக்கொண்டு, பாவிகள் விசுவாசிகளுடன் ஒன்றுசேர்ந்தனர். பின்வாங்கிப் போயிருந்தவர்கள் திரும்பவும் மாறினர். சுவிசேஷத்தின் மிகக் கசப்பான எதிரிகளாக இருந்த சிலர், அதின் வீரர்களாக மாறினார்கள். “அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்; தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாகத் தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்”–சகரியா 12:8. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனது சகோதரனில் தெய்வீக அன்பு அனுதாபம் ஆகியவைகளின் வெளிப்படுத்தல்களைக் கண்டான். ஒரு ஆர்வம் மேற்கொண்டு நின்றது. முன்னுக்கு வரும் ஒரு முயற்சி மற்றவைகளை எல்லாம் விழுங்கியிருந்தது. கிறிஸ்துவின் சுபாவத்தைப்போன்ற சுபாவத்தை வெளிப்படுத்துவதும், அவரது இராஜ்யம் விரிவடைவதற்கென்று உழைப்பதும் விசுவாசியின் பேராவலாக இருந்தது. (2)

“கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ் தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது”–அப்போஸ்தலர் 4:33. அவர்களுடைய உழைப்பின்கீழ், சத்தியத்தின் வார்த்தையை பெற்றுக்கொண்டு, அவர் களுடைய இருதயங்களை சமாதானத்தினாலும் நம்பிக்கையினாலும் நிரப்பியிருந்தவைகளை மற்றுள்ளவர்களுக்குக் கொடுக்கும்படித் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருந்தவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதர்களாக சபையில் கூட்டப்பட்டனர். பயமுறுத்தல்களினால் அவர்களை கட்டுப்படுத்தவோ அல்லது அச்சுறுத்தவோ முடியவில்லை. அவர்கள் இடம்விட்டு இடம்சென்றபோது. கர்த்தர் அவர்கள்மூலமாகப் பேசினார். ஏழைகள் அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டனர். தெய்வீகக் கிருபையினால் அற்புதங்கள் செய்யப்பட்டன. (3)

மனிதர்கள் தங்களை அவருடைய ஆவியின் கட்டுப்பாட்டிற்கு ஒப்புக் கொடுக்கும்போது, தேவனால் பலமான விதத்தில் செயல்படமுடியும். (4)

பரிசுத்த ஆவியைக்குறித்த வாக்குத்தத்தம் எந்த ஒரு வயதுக்குள்ளும் இனத்திற்குள்ளும் எல்லைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உலகத்தின் முடிவுவரைக்கும் அவருடைய ஆவியின் தெய்வீகச் செல்வாக்கு இருக்கும் என்று கிறிஸ்து அறிவித்தார். கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இன்றுவரைத் தங்களை முற்றிலுமாகக் கீழ்ப்படியச்செய்துள்ள அனைவருக்காகவும் தேற்றரவாளன்

அனுப்பப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டுள்ள அனைவருக்கும் ஒரு ஆலோசகராகவும் பரிசுத்தப்படுத்துகிறவராகவும் வழிகாட்டியாகவும் சாட்சியாகவும் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் வந்திருக்கிறார். விசுவாசிகள் எந்த அளவிற்கு அதிக நெருக்கமாக தேவனுடன் நடந்துள்ளனரோ, அந்த அளவிற்கு அவர்கள் அதிகமான வல்லமையுடன் மீட்பின் அன்பிற்கும் அவரது இரட்சிக்கும் கிருபைக்கும் சாட்சி பகர்ந்திருந்தனர். நூற்றாண்டுகளின் ஊடாக அதிகமான உபத்திரவத்தையும் சோதனையையும் அனுபவித்திருந்தவர்கள், தங்களுடைய வாழ்க்கையில் ஆவியின் பிரசன்னத்தை அதிகமான அளவில் அனுபவித்திருந்தவர்கள், இந்த உலகத்தில் அடையாளங்களாகவும் ஆச்சரியங்களாகவும் நின்றிருக்கின்றார்கள். மாறுதலைச் செய்யக்கூடிய மீட்பின் அன்பின் வல்லமையை அவர்கள் தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக வெளிப்படுத்தியிருந்தனர். (5)

உன்னதத்திலிருந்துள்ள வல்லமையினால் நிரப்பப்பட்டவர்கள் அதின் காரணமாக சோதனைகளிலும் பரீட்சைகளிலுமிருந்து விடுபட்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் சத்தியத்திற்காகவும் நீதிக்காவும் சாட்சி கொடுத்தபோது, அவர்களுடைய கிறிஸ்தவ அனுபவங்களை அவர்களிட மிருந்து கொள்ளையிடவிரும்பின சத்துருவால் அவர்கள் திரும்பத் திரும்பத் தாக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்து இயேசுவிற்குள்ளாக அவர்கள் பூரணமான ஆண்களும் பெண்களுமாக ஆவதற்காக தேவன் கொடுத்திருந்த சகல வல்லமைகளுடனும் முயலும்படி அவர்கள் வற்புறுத்தப்பட்டிருந்தனர். மேலும் மேலும் உயர்ந்துசென்று, பரிபூரணமடைவதற்கான புதிய கிருபைக்காக நாள்தோறும் ஜெபித்திருந்தனர். பரிசுத்தஆவியின் செயலின்கீழ் மிகவும் பலவீனமானவர்களாக இருந்தவர்களுங்கூட தேவன்மீது விசுவாசம் வைப்பதினால் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வல்லமைகளை முன்னேற்றமடையச் செய்வதற்குக் கற்றிருந்தனர். பரிசுத்தமடைவதற்கும் மேன்மையான தன்மையை அடைவதற்கும் நயமடைவதற்கும் கற்றிருந்தனர். அவர்களை வனைகின்ற பரிசுத்த ஆவியின் செல்வாக்கிற்கு அவர்கள் கீழ்ப்படிந்தபோது, அவர்கள் தெய்வத்துவத்தின் நிறைவைப்பெற்று, தெய்வீக சாயலில் வடிவாக்கப்பட்டனர். (6)

பரிசுத்த ஆவியானவரைக் கிறிஸ்துவின் பிரதிநிதியாக அனுப்பி வைப்பதாக அவர் பிரிந்துசெல்லுகின்ற நேரத்தில் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தில் காலதாமதம் எந்தவிதமான மாறுதலையும் உண்டு பண்ணவில்லை. மனிதர்களுக்கு நேராகப் பூமியை நோக்கி, தேவ கிருபையின் ஐசுவரியங்கள் பொழியப்படாமலிருப்பதற்கு தேவனுடைய

பகுதியில் எதுவும் காரணமாக இருப்பதில்லை. நிறைவேறியிருந்திருக்க வேண்டிய விதத்தில் நிறைவேறாமலிருப்பது காணப்பட்டால், அது அந்த வாக்குத்தத்தத்தை எந்தவிதமாக வரவேற்றிருந்திருக்குமோ அந்த விதத்தில் வரவேற்காமலிருந்ததே காரணமாகும். எல்லோரும் விரும்பியிருந்தால் எல்லோரும் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்திருப்பாகள். பரிசுத்த ஆவியின் அவசியம் எங்கெல்லாம் அற்பமான காரியமாக எண்ணப்பட்டிருந்ததோ அங்கெல்லாம் ஆவிக்குரிய வறட்சி, ஆவிக்குரிய இருள், ஆவிக்குரிய வீழ்ச்சி, மரணம் ஆகியவை காணப்பட்டிருக்கின்றன! சபையின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் தெய்வீக வல்லமை அவசியமானதாக இருப்பதுடன் அது மற்ற ஆசீர்வாதங்களையும் தொடர்ச்சியாகக் கொண்டுவருகிறது. ஆனால் அற்ப காரியங்களின்மீது கவனம் செலுத்தப்படும்போது, ஏராளமான விதத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் இல்லாமலாகிவிடுகின்றன. (7)

நாம் வல்லமையை அடைந்துகொள்ளுவதற்கு இது உபாத்தியாக இருக்கும்போது, ஆவியின் வரங்களுக்காக நாம் ஏன் பசிதாகம் இல்லாதிருக்கிறோம்? நாம் அதைப்பற்றிப் பேசாதிருக்கிறோம்? பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல பரிசுகளைக் கொடுக்க விருப்பமுள்ளவர்களாக இருப்பதைவிட, தமக்குச் சேவைசெய்ய விரும்புகிறவர்களுக்கு கர்த்தர் பரிசுத்த ஆவியைக் கொடுக்க அதிகமான விருப்பம் கொண்டிருக்கிறார். நாள்தோறும் ஆவியின் ஸ்நானத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு ஊழியக்காரனும் தேவனிடம் தனது விண்ணப்பத்தை ஏறெடுக்கவேண்டும். திட்டத்தை வரைந்து, அதனை ஞானமாகச் செயல்படுத்துவதை அறிந்துகொள்வதற்கான சிறப்பான உதவிக்காகவும் பரலோக ஞானத்திற்காகவும் மன்றாடுவதற்காக கிறிஸ்தவ பணியாளர்களின் கூட்டம் ஒன்றுசேரவேண்டும். சிறப்பாக ஊழியக் காலத்திலுள்ள தெரிந்துகொள்ளப்பட்ட தூதுவர்கள் செழுமையான விதத்தில் ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதற்காக, ஜெபம்செய்யவேண்டும். தேவனுடைய ஊழியக்காரர்களுடனுள்ள ஆவியின் பிரசன்னம் உலகத்தின் கனமும் மகிமையும் கொடுக்கமுடியாத வல்லமையை, சத்தியத்தை அறிவிப்பதற்கு ஆயத்தமுள்ள ஊழியக்காரர்களுக்குக் கொடுக்கும். (8)

தேவனுக்கென்று தன்னை அர்ப்பணம் செய்துள்ள ஊழியக்காரனுடன், அவன் எந்த இடத்திலிருந்தாலும் ஆவியானவர் தங்கியிருக்கிறார். சீடர்களுக்குக் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் நமக்குக் கூறப்பட்டுள்ள வார்த்தைகளாகவும் உள்ளன. தேற்றரவாளன் அவர்களுடையவராக இருந்ததுபோல, நம்முடையவராகவும் இருக்கிறார். உலகத்தின் வெறுப்பிற்கு இடையிலும் தங்களுடைய சொந்த தோல்விகளையும் தவறுகளையும் உணர்ந்திருக்கின்ற வேளையிலுமுள்ள ஒவ்வொரு ஆத்துமாவின் முயற்சியும்

போராட்டமான ஒவ்வொரு அவசர காலத்திலும் தேவையான பலத்தை ஆவியானவர் கொடுத்துத் தாங்குகிறார். மனத்துயரிலும் துன்பத்திலும் வெளித்தோற்றம் இருளானதாகவும் எதிர்காலம் குழப்பமானதாகவும், உதவியற்றுத் தனித்து விடப்பட்டிருப்பதுபோல் காணப்படும்போது, உணரும்போது இப்படிப்பட்ட நேரங்களில் நாம் விசுவாசத்துடன் ஜெபம் செய்யும்போது, அதற்கு மறுமொழியாகப் பரிசுத்த ஆவி இருதயத்திற்கு ஆறுதலைக் கொண்டுவருகிறார். (9)

அசாதாரணமான சூழ்நிலைகளில் ஒருவன் ஆவிக்குரிய உற்சாகத்தை வெளிக்காட்டுவதினால் அவன் கிறிஸ்தவனாக இருக்கிறான் என்பது முடிவாகிறதில்லை. பரிசுத்தம் என்பது பேரானந்தமோ கொண்டாட்டமோ அல்ல. அது தனது சித்தத்தைப் பூரணமாக தேவனுக்குச் சரணடையச் செய்வதாகும். அது தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிவதற்கான விருப்பமாகும். அது நமது பரலோகப் பிதாவின் சித்தப்படி செய்வதாகும். அது பரீட்சையின்போதும் இருளிலும் அதைப்போலவே ஒளியிலும் தேவன்மீது நம்பிக்கைவைப்பதாகும். அது பார்வையினால் நடக்காமல், விசுவாசத்தினால் நடப்பதாகும். அது கேள்விக்கிடமில்லாதவிதத்தில் தேவனைச் சார்ந்திருக்கும் அவரது அன்பில் இளைப்பாறுவதுமாகும். (10)

பரிசுத்த ஆவி என்ன விதமானவராக இருக்கிறார் என்று விளக்கம் கொடுப்பதற்கு நாம் தகுதியானவர்களாக வேண்டும் என்பது முக்கியமானதல்ல. “பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.” “சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்” (யோவான் 15:26; 16:13) என்று கிறிஸ்து நம்மிடம் கூறுகிறார். (11)

பரிசுத்த ஆவியானவரின் தன்மை ஒரு தேவ இரகசியமானதாக உள்ளது. அதனைப்பற்றிக் கர்த்தர் மனிதர்களுக்கு வெளிக்காட்டாததினால் மனிதர்களால் அதைப்பற்றி விளக்கம் தர இயலாது. விநோதமான பார்வைகளை உடைய மனிதர்கள் வேதவாக்கியங்களின் பகுதிகளைக் கொண்டுவந்து, ஒரு மனித இயல்பான நிர்மாணத்தைத் தங்கள்மீது வைக்கலாம். ஆனால் இந்தப் பார்வைகளை ஒப்புக்கொள்வது சபையைப் பலப்படுத்தாது. மனிதனின் புரிந்துகொள்ளும் சக்தியைவிட மிக அதிகமான—

ஆழமானதாகவுள்ள அப்படிப்பட்ட தேவ இரகசியங்களில் மௌனமே பொன்னாகத் திகழ்கிறது. (12)

கிறிஸ்துவின் வார்த்தைகளில் பரிசுத்த ஆவியின் பணியைப்பற்றிக் குறிப்பானவிதத்தில் சொல்லியிருக்கிறது. “அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்”(யோவான் 16:8). பாவத்தைப்பற்றிய உணர்த்துதலைப் பரிசுத்த ஆவியானவர்தான் கொண்டுவருகிறார். ஆவியின் எழுப்பும் செல்வாக்கிற்கு பாவி பதிலளித்தால் அவன் மனந்திரும்பும்படி கொண்டுவரப்பட்டு, ஆவியின் அவசியங்களுக்கும் கீழ்ப்படிதலின் முக்கியத்திற்கும் எழுப்பப்படுவான். (13)

நீதியின்மேல் பசிதாகமுள்ளவனான—மனந்திரும்பிய பாவிக்கு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியைச் சுட்டிக் காட்டுகிறார். “அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்;” “என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்”–யோவான் 16:14; 14:26. (14)

மீட்பரின் மரணத்தினால் உண்டுபண்ணப்பட்ட இரட்சிப்பை பயனுள்ளதாகச்செய்வதற்கான புத்துயிரூட்டும்ஒரு கருவியாக இருக்கும்படிக்கு, ஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார். கல்வாரிச் சிலுவையின்மீது செலுத்தப்பட்ட பெரும் தியாகபலியின்மீது கவனம் செலுத்தும்படி மனிதர்களை இழுக்கவும், தேவனுடைய அன்பை உலகத்திற்கு விவரித்துக்காட்டவும், மனஉணர்த்துதலை அடைந்துள்ள ஆத்துமாவிற்கு வேதவாக்கியங்களில் உள்ள விலைமதிப்புமிக்க பொருட்களைத் தொடர்ச்சியாகத் திறந்துகாட்டவும், ஆவியானவர் வகைதேடிக்கொண்டிருக்கிறார். (15)

பரிசுத்த ஆவியானவர் பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதலைக் கொண்டுவந்தபின்—நீதியின் தரத்தை மனிதனின்முன் வைத்தபின் பூமிக்குரிய காரியங்களின்மீதுள்ள பற்றுகளைப் பின்னிழுக்கச் செய்து, ஆத்துமாவைப் பரிசுத்தமடையவேண்டும் என்ற வாஞ்சையினால் நிரப்புகிறார். அவர் “சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்” (யோவான் 16:13) என்று இரட்சகர் அறிவித்தார். மனிதர்கள் (பரலோக சாயலில்) வனையப்படவிரும்பினால், அங்கு முழு மனிதனிலும் பரிசுத்தமடைதல் என்பது கொண்டுவரப்பட்டிருக்கும். ஆவியானவர் தேவனுடைய பொருட்களை எடுத்து. அவைகளினால் ஆத்துமாவின்மீது முத்திரையிடுவார். பாதையில் ஒருவரும் தவறிவிடவேண்டிய அவசியமில்லாதவிதத்தில் அவருடைய வல்லமையினால் வாழ்க்கைப் பாதை தெளிவாக்கப்பட்டிருக்கும். (16)

விழுந்துபோன இனத்தின்மீதுள்ள அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, மனிதக்கருவிகளின்மூலமாக ஆதியிலிருந்தே தேவன் அவருடைய பரிசுத்த ஆவியின்மூலமாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறார். இது முற்பிதாக்களின் வாழ்க்கையின்மூலமாக வெளிக்காட்டப்பட்டிருந்தது. மோசேயின் நாட்களில் வனாந்தரத்திலிருந்த சபைக்கும் அவர்களுக்குப் போதனைசெய்தவற்குத் தேவன் தமது நல் ஆவியைக் கொடுத்திருந்தார் (நெகேமியா 9:20). அப்போஸ்தலர்களின் நாட்களிலும் அவருடைய சபைக்கான பரிசுத்த ஆவி என்னும் முகவரின்மூலமாக, அவர் வல்லமையாகச் செயலாற்றினார். முற்பிதாக்களைத் தாங்கியிருந்த அதே வல்லமை, விசுவாசத்தையும் தைரியத்தையும் காலேபுக்கும் யோசுவாவிற்கும் கொடுத்திருந்த அதே வல்லமை, அப்போஸ்தல சபையைத் திறனுள்ளதாகச் செய்திருந்த அதே வல்லமை, பின்வந்த காலங்கள் நெடுகிலும் தேவனுடைய விசுவாசப் பிள்ளைகளைத் தாங்கி வந்திருக்கிறது. வால்டென்னியக் கிறிஸ்தவர்கள் இருண்ட காலத்தின்போது, சீர்திருத்தத்தின் பாதையைப் பரிசுத்த ஆவியின் வல்லமையின்மூலமாக ஆயத்தம் செய்திருந்தனர். நவீன சபைகளை ஏற்படுத்துவதற்கான பாதையை அமைப்பதற்கும், சகல ஜாதிகள் மக்கள் ஆகியோரின் மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்ப்பதற்கும் முன்னோடிகளாக இருந்தவர்களின் முயற்சிகளை அதே வல்லமைதான் வெற்றிபெறச் செய்திருந்தது! (17)

பூமியில் அவரது நோக்கத்தை அறியச்செய்வதற்கு தேவன் இன்றும் அவருடைய சபையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். இன்று சிலுவையின் முன்னறிவிப்பாளர்கள் நகரங்களிலிருந்து நகரத்திற்கும், தேசங்களிலிருந்து தேசத்திற்கும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான பாதையை ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கின்றனர். தேவப்பிரமாணத்தின் தரம் உயர்த்திக் காட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. சர்வ வல்லவரின் ஆவியானவர் மனிதர்களின் இருதயங்களை அசைக்கிறார். அதன் செல்வாக்கிற்குப் பதிலளிப்பவர்கள், தேவனுக்கும் அவருடைய சத்தியத்திற்கும் சாட்சிகளாகின்றனர். கிறிஸ்துவின் மூலமாகவுள்ள இரட்சிப்பின் பாதையைப்பற்றி தங்களுக்கு வெளிப்படையாகக் கிடைத்த ஒளியை மற்றுமுள்ளவர்களுக்குக் கொடுப்பதற்காகத் தங்களை அர்ப்பணம் செய்துள்ள ஆண்களையும் பெண்களையும் அநேக இடங்களில் காணலாம். பெந்தெகொஸ்தே நாளில் ஆவியினால் ஞானஸ்நானம் அடைந்தவர்களைப்போல, அவர்கள் தங்களுடைய ஒளியைப் பிரகாசிக்கச்செய்வதில் தொடரும்போது, ஆவியின் வல்லமையை அதிகமாக—மேலும் அதிகமாகப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறாக, பூமி தேவனுடைய மகிமையினால் ஒளிப்படுத்தப்படவேண்டியதாக உள்ளது. (18)

அப்படியல்லாமல், நிகழ்காலத்திலுள்ள வாய்ப்புக்களை ஞானமாக முன்னேற்றமடையச்செய்யாத அநேகர் உள்ளனர். இவர்கள் மற்றவர்களுக்கு அறிவூட்டக்கூடிய தங்களுடைய திறமை பெருமளவிற்கு அதிகரிக்கப்படவேண்டும் என்று எண்ணுகின்றனர். இவர்கள் அதற்காக ஆவிக்குரிய புத்துணர்வு கிடைக்கக்கூடிய காலத்திற்காக சோம்பேறிகளாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் நிகழ்காலத்திலுள்ள கடமைகளையும் சலுகைகளையும் அலட்சியம் செய்கின்றனர். தங்களுடைய ஒளி முழுவதையும் மங்கும்படி விட்டுவிடுகின்றனர். அவர்கள் தங்களுடைய பகுதியாக எந்த முயற்சியும் இல்லாதவர்களாக இருந்து, சிறப்பான ஆசீர்வாதங்களைப் பெறுபவர்களாக இருப்பார்கள் என்று அதற்கான ஒரு காலத்தை எதிர்நோக்கி இருக்கின்றனர். அப்படி உண்டாவதினால் அவர்கள் மாற்றமடைந்து, ஊழியஞ்செய்வதில் தகுதி அடைவார்கள் என்றும் எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர். (19)

காலத்தின் முடிவின்போது. இந்தப் பூமியில் தேவனுடைய பணி முடிவடைந்துகொண்டிருந்தபோது, பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின்கீழ் அர்ப்பணம் செய்துள்ள விசுவாசிகளால் மேற்கொள்ளப்படும் அக்கறைமிக்க முயற்சிகள் தெய்வீக ஆதரவின் சிறப்பான அடையாளங்களுடன் சேர்ந்து வரும் என்பது உண்மையாக உள்ளது. தேவனுடைய சபையின்மீது அசாதாரணமான அளவில் ஆவிக்குரிய கிருபை அருளப்படுவதை எபிரெயத் தீர்க்கதரிசிகள் கீழ்த்திசை நாட்டில் விதைப்புக்காலம் அறுவடைக்காலம் ஆகியவைகளில் பெய்யக்கூடிய முன்மாரி பின்மாரி ஆகியவைகளால் உருவகப்படுத்தியிருந்தனர். அப்போஸ்தலர்களின் நாட்களில் நிகழ்ந்த ஆவியின் அருள்மாரி—முன்மாரியின் ஆரம்பமாக இருந்தது. பலன் மகிமைமிக்கதாக இருந்தது. காலத்தின் முடிவின்போது, மெய்யான சபையுடன் பரிசுத்த ஆவியின் பிரசன்னம் மெய்யான சபையில் தங்கவேண்டியதாக இருக்கிறது. (20)

ஆனால் பூமியின் அறுவடையின் முடிவு சமீபிக்கும்போது, மனித குமாரனுடைய வருகைக்காக சபையை ஆயத்தஞ்செய்வதற்கென்று சிறப்பான ஆவியின் கிருபை வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அருள்மாரி ஊற்றப்படுதல்—பின்மாரிக்குச் சமமாக்கப்பட்டுள்ளது. அதிகரிக்கும் இந்த வல்லமைக்காக, கிறிஸ்தவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை பின்மாரியின் நேரத்தில் அறுவடையின் கர்த்தரிடத்திற்கு அனுப்பவேண்டியவர்களாக உள்ளனர். அதற்கு மறுமொழியாகக் கர்த்தர் "மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப்பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்." "அவர் தக்கபடி உங்களுக்கு

முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்”—சகரியா 10:1; யோவேல் 2:23. (21)

சகலவிதமான ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ளவருடன் இன்றுள்ள சபை அங்கத்தினர்கள் ஜீவனுடைய தொடர்புள்ளவர்களாக இல்லாதவரை, அவர்கள் அறுவடையின் நேரத்திற்கு ஆயத்தமாக இருக்கமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய விளக்குகளைச் சீர்செய்து, சீராக எரியும்படி வைக்காவிட்டால் அவர்களுடைய சிறப்பான அவசியத்தின் நேரத்தின்போது, அதிகரித்த கிருபையைப் பெற்றுக்கொள்ளுவதில் தவறிவிடுவார்கள். (22)

புதுக்கிருபையின் விநியோகத்தைத் தொடர்ச்சியாகப் பெறுபவர்கள் மட்டுமே அவர்களுடைய அன்றாடத் தேவைக்கான வல்லமையையும் அந்த வல்லமையைப் பயன்படுத்தும் தகுதியையும் பெறுவார்கள். (23)

சிறப்பான ஈவாகிய தேவனுடைய இலவச அங்கீகாரம் ஆவிக்குரிய வல்லமையின் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, ஆத்தும ஆதாயஞ்செய்வதற்கு உரிய ஆச்சரியமான பொருத்தத்தை அவர்கள் அடைவார்கள். தேவன் அவருடைய உபயோகத்திற்குப் பயன்படக்கூடிய பாத்திரங்களாக தங்களை வனையும்படி அவர்கள் நாள்தோறும் தங்களை தேவனுக்கு விட்டுக்கொடுக்கின்றனர். எட்டக்கூடிய தூரத்தில் இருக்கக்கூடிய சேவையைச் செய்வதற்கு அவர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களை நாள்தோறும் அவர்கள் முன்னேற்றமடையச்செய்கின்றனர். அவர்கள் மிகவும் தாழ்மையான ஊழியஞ்செய்யும் வீட்டுச்சூழ்நிலையில் இருந்தாலும்சரி, நாள்தோறும் ஆண்டவருக்காகச் சாட்சிகொடுத்துக்கொண்டிருக்கின்றனர். (24)

கிறிஸ்துவின் இந்த பூமிக்குரிய வாழ்க்கையின்போது, அவருக்குத் தேவையாக இருந்த கிருபையின் புதிய விநியோகத்திற்காக நாள்தோறும் அவர் தமது பிதாவைத் தேடியிருந்தார். இவ்விதமான தேவனுடனுள்ள தொடர்பில் மற்றுள்ளவர்களைப் பலப்படுத்தவும் ஆசீர்வதிக்கவும் சென்றிருந்தார் என்னும் அறிவினால் தன்னை அர்ப்பணம் செய்யும் ஊழியக்காரனுக்கு ஆச்சரியமான ஆறுதல் இருக்கிறது. தேவகுமாரன் தமது பிதாவை நோக்கி ஜெபத்தில் குனிந்திருப்பதைக் காணுங்கள். அவர் தேவகுமாரனாக இருந்தாலுங்கூட ஜெபத்தினால் அவருடைய விசுவாசத்தைப் பலப்படுத்தி, பரலோகத்துடனுள்ள உறவினால் தீமையைத் தடைசெய்யவும், மனிதர்களின் தேவைக்காக ஊழியஞ்செய்யவும் அவசியமான வல்லமையைத் தம்மிடம் சேகரித்துக்கொள்கிறார். பலவீனங்களினால் சூழப்பட்டு, பாவமும்

வேதனையுமுள்ள உலகத்தில் வாழ்ந்துகொண்டிருந்துங்கூட அவருக்குச் சேவைசெய்ய விரும்புபவர்களின் அவசியங்களை நமது இனத்தின் மூத்த சகோதரராக இருக்கும் அவர் அறிந்திருக்கிறார். அவர் தமது தூதர்களாக அனுப்புவதற்குப் பொருத்தமானவர்கள் பலவீனமான, தவறுகின்ற மனிதர்களாக உள்ளனரா என்பதைப் பார்க்கின்றார். ஆனால் அவருடைய சேவைக்கென்று தங்களை முற்றிலுமாகக் கொடுக்கும் அனைவருக்கும் தெய்வீக உதவியை வாக்குத்தத்தஞ்செய்கிறார். விசுவாசத்தினால் தேவனிடத்திற்கு அக்கறையுடனும் விடாமுயற்சியுடனும் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களும்—முற்றிலுமாக தேவனையே சார்ந்திருக்கும்படி நடத்துகின்ற விசுவாசமும்—பாவத்திற்கெதிரான போரில் மனிதர்களுக்கு பரிசுத்த ஆவியின் உதவி கிடைக்கும்படி கொண்டுவரப்படும் என்பதற்காக அவருடைய சொந்த உதாரணமானது ஒரு நிச்சயமாக உள்ளது. (25)

பூமியின் அறுவடையை முதிரச்செய்தவற்காக சபைக்குத் தேவன் கொடுத்திருக்கின்ற வாக்குத்தத்தத்தைப் பெறுவதற்கும், அந்த வல்லமையைப் பயன்படுத்துவதற்கும் கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்றும் ஒவ்வொரு ஊழியக்காரனும் ஆயத்தமுள்ளவனாக இருப்பான். சுவிசேஷத்தின் முன்னறிவிப்பாளர்கள் காலைதோறும் கர்த்தருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு தங்களுடைய அர்ப்பணத்தின் பிரதிக்கினையைப் புதுப்பிக்கும்போது, அவர் எழுப்புதலையும் பரிசுத்தமாக்கப்படுதலையும் உண்டுபண்ணுகின்ற அதின் வல்லமையுடன் தமது ஆவியின் பிரசன்னத்தை அனுமதிப்பார். அந்த நாளின் கடமைகளைச் செய்வதற்கு அவர்கள் முன்செல்லும்போது, காணமுடியாத ஏதுகரமாக இருக்கும் பரிசுத்த ஆவி அவர்களைத் தேவனுடன் சேர்ந்துள்ள ஊழியக்காரர்களாக இருக்கும்படி தகுதிப்படுத்துகின்றது என்னும் நிச்சயத்தை அவர்கள் உடையவர்களாக இருக்கின்றனர். (26) ★

# 6

# ஆலய வாசலில் ... !

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 57–69)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 3; 4:1–31.**

கிறிஸ்துவின் சீடர்கள் தங்களுடைய திறமையின்மையைப்பற்றி ஆழமான உணர்வுள்ளவர்களாக இருந்தனர். தங்களுடைய பலவீனத்தை அவரது பலத்துடனும் தங்களுடைய அறியாமையை அவரது ஞானத்துடனும் தங்களுடைய மதிப்பில்லாத் தன்மையை அவரது நீதியுடனும், தங்களுடைய ஏழ்மையை அவரது வற்றாத செல்வத்துடனும் இணைப்பதற்காக தாழ்மையுடனும் ஜெபத்துடனும் ஈடுபட்டனர். இவ்வாறாக பலப்படுத்தப்பட்டு ஆயுதந்தரிக்கப்பட்ட அவர்கள், தங்களுடைய ஆண்டவரின் ஊழியத்தை முன்கொண்டு செல்லுவதற்குத் தயங்கவில்லை. (1)

பரிசுத்த ஆவியானவர் கீழிறங்கின அக்கறைமிக்க ஜெபவேளைக்குச் சிறிது நேரத்திற்குப்பின், பேதுருவும் யோவானும் தொழுகைக்காக ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருந்தனர். அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலில் சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க சப்பாணி ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனுடைய வாழ்க்கை அவனது பிறப்பின்போதிருந்தே வேதனையும் இயலாமையும் மிக்கதாக இருந்தது. நலமாக வாழும் வாய்ப்பை இழந்த அந்த மனிதன், தான் சுகமடைவதற்காக இயேசுவைக் காணவேண்டுமென்று அதிக நாட்களாக ஏக்கமுடையவனாக இருந்தான். ஆனால் அவன் ஏறத்தாழ உதவியற்றவனாக இருந்தான். அவன் மாபெரும் வைத்தியரான இயேசு ஊழியஞ்செய்துகொண்டிருந்த காட்சியிலிருந்து தூரமாக இருந்தான். கடைசியில் அவனுடைய வேண்டுகோள்கள் அவனது சில நண்பர்களை இழுக்கவே, அவர்கள் அவனை ஆலய வாசலுக்குமுன் கொண்டுவந்து உட்காரவைத்தனர். அங்கு வந்து சேர்ந்தபோது, அவனுடைய நம்பிக்கைகள் எவரை மையமாகக் கொண்டிருந்ததோ, அவர் கொடூரமான விதத்தில் கொலைசெய்யப்பட்டுவிட்டார் என்பதை அறிந்தான். (2)

அவன் எவ்வளவு காலமாக இயேசுவால் சுகப்படுத்தப்படலாம் என்ற வாஞ்சைமிக்க நம்பிக்கையுடன் இருந்தான் என்பதை அறிந்திருந்தவர்களின் அனுதாபத்தை அவனுடைய ஏமாற்றம் எழுப்பிவிட்டது. எனவே, ஆலயத்தைக் கடந்துசெல்லக்கூடியவர்கள் அவன்மீது இரக்கம்வைத்து, அவனுடைய அன்றாடத் தேவைகளுக்கு உதவுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் அவனை நாள்தோறும் ஆலயத்திற்குக் கொண்டுவந்திருந்தனர். பேதுருவும் யோவானும் அவனைக் கடந்து சென்றபோது, அவன் அவர்களிடம் பிச்சை கேட்டான். சீடர்கள் அவன்மீது மனதுருகினர். "பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான். அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்றான். பேதுரு அவனுடைய தரித்திரத்தை அறிவித்தபோது, அந்தச் சப்பாணியின் முகம் வாடிவிட்டது; ஆனால் அப்போஸ்தலன் என்னிடத்தில் உள்ளதை நான் உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எழுந்து நட என்று தொடர்ந்தபோது, அவனது முகம் பிரகாசமடைந்தது.(3)

"வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு: தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்." (4)

"குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள்." இயேசு செய்ததைப்போன்ற அற்புதங்களை சீடர்களாலும் செய்யமுடிந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர். நாற்பது ஆண்டுகளாக உதவியற்ற சப்பாணியாக இருந்து, தனது கை கால்களை முழுவதுமாகப் பயன்படுத்த முடிந்ததில் களிகூர்ந்து, வேதனையிலிருந்து விடுதலையடைந்து இயேசுவை விசுவாசித்த அந்த மனிதன் அங்கேயிருந்தான். (5)

மக்களின் வியப்பைச் சீடர்கள் கண்டபோது, பேதுரு: "இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள்

சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?" என்றான். இந்த சுகம் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினாலும் அதன் புண்ணியத்தினாலுமே நடந்தது என்பதை அவன் உறுதிப்படுத்தினான். "அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும்முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்றான். (6)

ஜீவாதிபதியை நிராகரித்து அவரை மரணத்திற்குள்ளாக்கின யூதர்களின் பெரும் பாவத்தை அப்போஸ்தலர்கள் வெளிப்படையாகப் பேசினார்கள். ஆனால் அவர்களது பேச்சைக் கேட்டிருந்தவர்கள் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது என்பதில் கவனமுள்ளவர்களாக இருந்தனர். "பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலைபண்ணவேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்." "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன். கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்" என்று கூறினான். மனந்திரும்பி குணப்பட பரிசுத்த ஆவி அவர்களை அழைக்கிறார் என்று சொல்லி, அவர்கள் சிலுவையிலறைந்த ஒருவரின் இரக்கத்தின்மூலமாகவே அல்லாமல், அவர்களுக்கு இரட்சிப்பைப்பற்றிய நம்பிக்கை இல்லையென்று அறிவித்தான். அவர்மீதுள்ள விசுவாசத்தினால்மட்டுமே அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படக்கூடும் என்றான். (7)

"ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறு தலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" என்றான். (8)

"நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள். அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி

தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார்" என்றான். (9)

இவ்வாறாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து சீடர்கள் பிரசங்கித்தார்கள். இந்த சாட்சிக்காகக் காத்துக்கொண்டிருந்த அநேகர் இதைக் கேட்டபோது, விசுவாசித்தார்கள். அது கிறிஸ்து பேசியிருந்த வார்த்தைகளை அவர்களுடைய மனங்களுக்குக் கொண்டுவந்தது.அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டிருந்தவர்களின் அணியில் நிற்பதைத் தெரிந்துகொண்டனர். இரட்சகர் விதைத்திருந்த விதை வளர்ந்து கனிகொடுத்தது. (10)

"அவர்கள் ஜனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில், ஆசாரியர் களும் தேவாலயத்துச் சேனைத்தலைவனும் சதுசேயரும் அவர்களிடத்தில் வந்து, அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும்" சினமடைந்தனர். (11)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் ரோம அரசின் காவ லாளிகள் உறங்கிக்கொண்டிருந்தபோது, சீடர்கள் அவருடைய உடலைத் திருடிக்கொண்டுபோய்விட்டார்கள் என்னும் பொய்யான அறிக்கையை ஆசாரியர்கள் அருகிலும் தூரத்திலும் பரப்பினார்கள். அவர்கள் கொலைசெய்திருந்த ஒருவரின் உயிர்த்தெழுதலைப் பேதுருவும் யோவானும் பிரசங்கித்துக்கொண்டிருந்ததில் அவர்கள் விரோதமடைந்தனர் என்பது ஆச்சரியமானதாக இருக்கவில்லை. மிகக் குறிப்பாகச் சதுசேயர்கள் பெருமளவில் எழுப்பப்பட்டனர். அவர்கள் மிக மேலாகப் பேணியிருந்த கோட்பாடு ஆபத்தில் இருக்கிறது என்பதையும் அவர்களது புகழ் கழுமரத்திற்குச் சென்றுள்ளதென்பதையும உணர்ந்தனர். (12)

புதிய விசுவாசத்திற்கு மாறினவர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துக்கொண்டிருந்தது. இந்தப் புது ஆசிரியர்களைத் தடைசெய்யாமல் விட்டுவிட்டால் அவர்களுடைய சொந்தச் செல்வாக்கு இயேசு பூமியில் இருந்த காலத்தில் இருந்ததைவிட அதிகமான அளவிற்கு ஆபத்திற்குள்ளாகிவிடும் என்பதைப் பரிசேயர்களும் சதுசேயர்களும் ஒத்துக்கொண்டனர். அதன்படி ஆலயத்தின் காவலாளிகளுக்குத் தலைவனாக இருந்தவன், பல சதுசேயர்களின் உதவியுடன் பேதுருவையும் யோவானையும் கைதுசெய்து, சிறையில் வைத்தான். அதே நாளில் அவர்களை விசாரிப்பது மிகவும் காலதாமதமாகியிருந்தது. (13)

மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதில் சீடர்களின் எதிரிகள் மனதிருப்திப்பட முடியாதவர்களாக இருந்தனர். சந்தேகப்படுவதற்கு

இடமில்லாதவிதத்தில் அந்தச் சான்று மிகத் தெளிவானதாக இருந்தது. அப்படியிருந்தபோதிலும் இயேசுவை மரணத்திற்குட்படுத்தியதில் அவர்கள் செய்திருந்த பயங்கரமான செயலுக்காக மனம் வருந்துவதை மறுக்கின்ற விதத்தில் அவர்கள் மிகவும் கடினமான இருதயங்களை உடையவர்களாக இருந்தனர். அப்போஸ்தலர் பேசியிருந்தவைகளினாலும் அவர்களது செயல்களினாலும் தெய்வீக ஏவுதலின்கீழ் யூதர்களின் அதிபதிகளுக்கு ஏராளமான சான்றுகள் கொடுக்கப்பட்டபோதிலும், அவர்கள் சத்தியத்தின் தூதை உறுதியாகத் தடுத்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்தவிதமாகக் கிறிஸ்து வந்திருக்கவில்லை. அவர்தான் தேவகுமாரன் என்னும் மனநிறைவைச் சில சமயங்களில் அவர்கள் அடைந்திருந்தபோதிலும், தங்களுடைய மனஉணர்த்துதலை அடக்கி அவரைச் சிலுவையில் அறைந்திருந்தனர். தேவன் தமது இரக்கத்தினால் மேலும் அதிகமான சான்றினைக் கொடுத்தார். இப்பொழுது அவர்கள் அவரிடத்திற்குத் திரும்பும்படி மற்றொரு சந்தர்ப்பத்தை கொடுத்தார். அவர்கள் ஜீவாதிபதியைக் கொலைசெய்திருந்தனர் என்று அவர்களிடம் கூறும்படி தேவன் அவர்களிடத்திற்குச் சீடர்களை அனுப்பியிருந்தார். இந்தப் பயங்கரமான குற்றச்சாட்டால் மனந்திரும்பும்படி அவர்களுக்கு இன்னொரு அழைப்பைக் கொடுத்தார். ஆனால் அவர்கள்— தங்களுடைய சுயநீதியில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்துகொண்டிருந்த யூத ஆசிரியர்கள், கிறிஸ்துவைக் கொலைசெய்த குற்றத்தை அவர்கள்மீது சுமத்தின மனிதர்கள், பரிசுத்த ஆவியின் ஏவுதலினால்தான் பேசுகின்றனர் என்பதையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். (14)

கிறிஸ்துவுக்கு எதிரான ஒரு நடத்தையில் தங்களை ஒப்புக் கொடுத்துவிட்டபோது, தடையின் ஒவ்வொரு செயலும் அதே பாதையைப் பின்பற்றிச் செல்லுவதற்கு ஆசாரியர்களுக்கு தூண்டும் விசையாக இருந்தது. அவர்களுடைய பிடிவாதம் அதிகமதிகமான தீர்மானத்தை உடையதாக இருந்தது. அது, இணங்கமுடியாமலிருந்தது என்பதாக இல்லாமல், இணங்கமாட்டோம் என்பதாக இருந்தது. அவர்கள் குற்றமுள்ளவர்களாக, மரணத்திற்குத் தகுதியானவர்களாக மட்டுமிராமல் தேவகுமாரனை மரணத்திற்குட்படுத்தியிருந்ததினால், இரட்சிப்பிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தனர். ஏனெனில் அவர்கள் தேவனுக்கு எதிராக ஆயுதமணிந்திருந்தனர். பிடிவாதமாக ஒளியை நிராகரித்து, ஆவியானவர் கொண்டுவந்திருந்த மனஉணர்த்துதலைத் தடைசெய்திருந்தனர். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தும் செல்வாக்கு அவர்களில் செயலாற்றவே, அவர்கள் தேவன்மூலமாகக் கிரியை செய்திருந்தவர்களை தவறானவர்களென்று கூறியிருந்தனர். தேவனுக்கு எதிராகவும், தமது ஊழியக்காரர்களின்மூலமாக அறிவிக்கும்படி கொடுத்திருந்த அவரது தூதுகளுக்கு எதிராகவும் அவர்கள் கொண்டிருந்த

கலகத்தின் ஆழ்ந்த வெறுப்பு, ஒன்றன்பின் ஒன்றான தடுக்கும் செயல்களினால் வலிமை அடைந்தது. யூதத்தலைவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுடைய மனந்திரும்ப மறுக்கும் செயலினால் தங்களுடைய கலகத்தைப் புதிதாக்கிக்கொண்டு, விதைத்திருந்தவைகளை அறுவடை செய்வதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தனர். (15)

மனந்திரும்பாத பாவிகளுக்கெதிராக, அவர்கள் செய்த பாவங் களுக்காக அல்ல, மனந்திரும்பும்படி அழைக்கப்படும்போது கொடுக்கப் படுகிற ஒளிக்கு எதிராக, கடந்த காலத்தில் செய்திருந்த அதே பாவங்களைத் திரும்பச் செய்வதைத் தெரிந்துகொண்டு மனந்திரும்ப மறுப்பதில் தொடர்வதால்தான் தேவகோபம் அறிவிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியினாலுண்டான மன உணர்த்துதலின் வல்லமைக்கு யூதத்தலைவர்கள் கீழ்ப்படிந்திருப்பார்களானால் அவர்கள் மன்னிக்கப்பட்டிருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் இணங்குவதற்கு மறுப்பதில் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். அதைப்போலவே தங்களது தொடர்ச்சியான மறுப்பின் காரணமாக, பரிசுத்த ஆவி அவர்களை ஆதீனப்படுத்துவதற்கு முடியாத இடத்தில் தங்களை வைக்கின்றனர். (16)

சப்பாணியைச் சுகப்படுத்தின அந்தநாளைத் தொடர்ந்து, அன்னாவும் காய்பாவும் ஆலயத்தின் மற்ற பெரிய மனிதர்களும் அதைப்பற்றி விசாரணைசெய்வதற்காக ஒன்றுகூடிச் சந்தித்தபோது, சிறையிலிருந்தவர்கள் விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்டனர். இதே அறையில் இந்த மனிதர்களில் சிலருக்குமுன்பாக பேதுரு வெட்கக்கேடான விதத்தில் தனது கர்த்தரை மறுதலித்திருந்தான். இப்பொழுது அவனைப்பற்றிய சொந்த விசாரணைக்காகத் தோன்றயிருந்தபோது, இது அவனது மனதில் தெளிவாகத் தோன்றியது. அவனுடைய பழைய கோழைத்தனத்தை மீட்டுக்கொள்ள இப்பொழுது அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. (17)

அவனது விசாரணையின்போது உடனிருந்தவர்கள், பேதுரு அவனது ஆண்டவரைப்பற்றிய விசாரணையின்போது எவ்விதமாக நடந்திருந்தான் என்பதை நினைவுகூர்ந்து, சிறைவாசம் அல்லது மரணதண்டனையினால் அவனைப் பயப்படுத்திவிடலாம் என்று தங்களுக்கிடையில் பேசியிருந்தனர். ஆனால் விசாரணைக்காகச் சனகரீம் சங்கத்திற்குமுன் கொண்டுவரப்பட்டிருந்த பேதுரு, கிறிஸ்துவைப்பற்றிய விசாரணையின்போது, தனது மிகப்பெரும் தேவைமிக்க நேரத்தில் உணர்ச்சிவசப்படுபவனாகவும் சுயநம்பிக்கை உடையவனாகவும் இருந்து, கிறிஸ்துவை மறுதலித்திருந்த பேதுருவைவிட மிகப்பெருமளவிற்கு வித்தியாசமுடையவனாக இருந்தனர். அவனது விழுகையின்போதிருந்து அவன் மாற்றமடைந்திருக்கிறான். அதற்குப்பின்

அவன் அகந்தையுள்ளவனாகவும் பெருமைபாராட்டுபவனாகவும் இல்லாமல், அடக்கமுடையவனாகவும் சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காமலும் இருக்கிறான். அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான். அவன் முன்னர் மறுதலித்திருந்த பெயரை இப்பொழுது கனப்படுத்துவதினால் தனது மருளவிழுகையினால் உண்டாயிருந்த கறையை நீக்கும் தீர்மானமுடையவனாக இருந்தான். (18)

இயேசு சிலுவையிலறையப்பட்டதையும் உயிர்த்தெழுந்ததையும் குறிப்பிடுவதை இதுவரை ஆசாரியர்கள் தவிர்த்திருந்தனர். ஆனால் இப்பொழுது தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்ற, சப்பாணியாக இருந்த மனிதன் எவ்விதமாகச் சுகப்படுத்தப்பட்டான் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் விசாரிக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். “நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்.” (19)

பரிசுத்தமான தைரியத்துடனும் ஆவியின் வல்லமையினாலும் பேதுரு பயமில்லாதவனாக அவர்களை நோக்கி: “ஜனத்தின் அதிகாரி களே, இஸ்ரவேலின் மூப்பர்களே, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக்குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானனென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக்கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத் தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக் கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” என்று அறிவித்தான். (20)

தைரியமிக்க இந்தத் தற்காப்பு, யூதத் தலைவர்களைத் திடுக்கிடச் செய்தது. சனகரீம் சங்கத்தின் முன்பாகக் கொண்டுவரப்படும்போது சீடர்கள் பயத்தினாலும் குழப்பத்தினாலும் மேற்கொள்ளப்பட்டுப்போவார்கள் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் அதற்குப் பதிலாக, இந்த சாட்சிகள் எதிரிகளை மௌனப்படுத்தும் மனதிருப்திமிக்க வல்லமையுடன் கிறிஸ்து பேசியிருந்ததைப்போலப் பேசினார்கள். “வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்” என்று கிறிஸ்துவைப்பற்றிப் பேதுரு அறிவித்தபோது, பேதுருவின் குரலில் பயத்தின் சாயல் காணப்படவில்லை! (21)

இங்கு ஆசாரியர்களுக்குத் தெரிந்த ஒரு உருவகத்தை பேதுரு பயன்படுத்தினான். தீர்க்கதரிசிகள் ஆகாதென்று நிராகரிக்கப்பட்ட கல்லைக்குறித்துப் பேசியிருக்கிறார்கள். ஒரு சமயத்தில் கிறிஸ்துதாமே ஆசாரியர்களையும் மூப்பர்களையும் நோக்கி: “வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார். (மத்தேயு 21:42–44). (22)

அப்போஸ்தலர்களின் பயமில்லாத வார்த்தைகளைக் கவனித்திருந்த ஆசாரியர்கள்: “அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள்” என்று அறிந்துகொண்டார்கள். (23)

ஆச்சரியமான கிறிஸ்துவினுடைய மறுரூபக் காட்சியின் முடிவில் “அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத்தவிர வேறொருவரையும் காணவில்லை” (மத்தேயு 17:8) என்று சீடர்களைக்குறித்து எழுதப்பட்டுள்ளது. “இயேசுவைத்தவிர” என்னும் இந்த வார்த்தைகளில்தான் ஆதிகால சபையின் வரலாற்றைக் குறிப்பிட்டதாக்கியிருந்த ஜீவனுடைய வல்லமையினுடைய இரகசியம் அடங்கியிருக்கிறது. சீடர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளை முதலில் கேட்டிருந்தபோது, அவர்களுக்கு அவர் அவசியம் என்பதை உணர்ந்தனர். அவரைத் தேடி, கண்டு, பின்தொடர்ந்தார்கள். தேவாலயத்திலும் உணவுமேஜையிலும் மலைச்சரிவுகளிலும் வயல் வெளிகளிலும் அவர்கள் அவருடன் இருந்தனர். ஒரு ஆசிரியருடன் மாணவர்கள் இருப்பதுபோல் அவர்கள் அவருடனிருந்து நித்திய சத்தியத்தின் பாடங்களை நாள்தோறும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்தனர். (24)

இரட்சகர் உயரே எழுந்தருளிச் சென்றபின்பும், அன்பும் ஒளியும் நிறைந்த அவரது பிரசன்னம் இன்னும் அவர்களுடன் இருந்தது என்பதை உணர்ந்திருந்தனர். அது நேரடியாக இருப்பதுபோன்ற ஒரு பிரசன்னமாக இருந்தது. அவர்களுடன் நடந்தும், பேசியும், ஜெபித்தும் இருந்த அவர், அவர்களுடைய இருதயங்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொண்டுவரும்படிப் பேசியிருந்தார். சமாதானத்தின் தூதுகள் அவரது உதடுகளின்மேல் இருந்தது. இரட்சகராகிய இயேசு அவர்களிடத்திலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். தூதர்களின் இரதம் அவரை

ஏற்றுக்கொண்டபோது: “உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” (மத்தேயு 28:20) என்னும் வார்த்தைகள் அவரிடமிருந்து அவர்களுக்கு வந்திருந்தன. மனித உருவுடன் அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச்சென்றார். அவர் இன்னும் அவர்களுடைய நண்பராகவும் இரட்சகராகவும் தேவசிங்காசனதிற்குமுன் இருக்கிறார் என்பதையும் அவரது அனுதாபம் மாறவில்லையென்பதையும், பாடுபட்டுக்கொண்டிருக்கும் மானுடத்துடன் அவர் எப்பொழுதும் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டிருப்பார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அவரால் மீட்கப்பட்டவர்களின் விலையின் ஞாபகமாகத் தமது காயப்பட்ட கரங்களையும் பாதங்களையும் காட்டி, அவரது இரத்தத்தின் புண்ணியத்தை அவர் தமது பிதாவின் சமுகத்தில் காட்டிக்கொண்டிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இந்த எண்ணம் அவருக்காக நிந்தனைகளைத் தாங்கிக்கொள்ள அவர்களைப் பலப்படுத்தியது. அவர் நேரடியாக அவர்களுடனேகூட இருந்ததைவிட, இப்பொழுது அவருடனுள்ள அவர்களது ஐக்கியம் மிகவும் பலமுள்ளதாக இருந்தது. அவர்களுக்குள் வாசம்செய்து கொண்டிருந்த ஒரு கிறிஸ்துவின் ஒளி, அன்பு, வல்லமைகளை மனிதர்கள் கண்டு ஆச்சரியமடையும்படி அவர்கள்மூலமாக வெளியில் பிரகாசித்தது. (25)

பேதுரு தனது தற்காப்பிற்காக பேசியிருந்த வார்த்தைகளின்மீது கிறிஸ்து தமது முத்திரையைப் பதித்தார். அவர்களுக்கு மிக அருகில் மிக ஆச்சரியமான விதத்தில் சுகமாக்கப்பட்ட மனிதன் நம்பச்செய்யும்விதத்தில் நின்றிருந்தான். சில மணி நேரங்களுக்குமுன்புவரை உதவியற்ற ஒரு சப்பாணியாக இருந்த இந்த மனிதனின் தோற்றம், இப்பொழுது முழுமையான உடல்நலத்தைத் திரும்பப்பெற்றதாக இருந்து, பேதுருவின் வார்த்தைகளில் இருந்த சாட்சிக்கு சிறப்பைக் கூட்டியது. ஆசாரியர்களும் அதிபதிகளும் மௌனமாயிருந்தனர். பேதுருவின் அறிக்கையை அவர்கள் மறுக்க முடியாதவர்களாக இருந்தனர். ஆனால் சீடர்களின் போதனைகளை நிறுத்தவேண்டும் என்னும் தீர்மானத்தில் கொஞ்சங்கூடக் குறைவானவர்களாக இருக்கவில்லை. (26)

கிறிஸ்துவின் கிரீடம் போன்ற அற்புதம்—மரித்த லாசருவை எழுப்பினது! இயேசுவின் செல்வாக்கையும் அவரது ஆச்சரியமான செயல்களையும் அழித்துவிடவேண்டும் என்ற ஆசாரியர்களின் தீர்மானத்தின்மீது முத்திரை பதித்திருந்தது. ஏனெனில் அவை வேகமாக மக்கள்மீது அவர்களுக்கிருந்த செல்வாக்கை அழித்துக்கொண்டிருந்தன. அவர்கள் அவரைச் சிலுவை யில் அறைந்திருந்தனர். ஆனால் அவரது பெயரால் செய்யப்படும்

அற்புதத்தையும் அல்லது அவர் போதித்திருந்த சத்தியத்தையும் அவர்களால் நிறுத்தமுடியவில்லை என்பதற்கு மனநிறைவை உண்டுபண்ணும் ஒரு சான்று இங்கு உள்ளது. சப்பாணியைச் சுகப்படுத்தினதும், சீடர்களின் பிரசங்கமும், எருசலேம் நகரத்தை உணர்ச்சிக் கொந்தளிப்பினால் நிரப்பியிருந்தது. (27)

ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்களுடைய குழப்பத்தை மறைப்பதற்காகத் தங்களுக்கிடையில் ஆலோசனை செய்வதற்காக அப்போஸ்தலர்களைக் கொண்டுசெல்லும்படி கட்டளையிட்டனர். அந்த மனிதன் சுகப்படுத்தப்பட்டிருக்கிறான் என்பதை மறுப்பது பயனற்ற ஒன்று என்பதை அவர்கள் அனைவரும் ஒத்துக்கொண்டிருந்தனர். பொய்ப்பிரசாரங்களினால் அந்த அற்புதத்தை அவர்கள் சந்தோஷமாக மறைத்திருந்திருப்பார்கள். ஆனால் அது முடியாததாக இருந்தது. ஏனெனில் அது பட்டப்பகலின் வெளிச்சத்தில் திரளான ஜனங்களுக்குமுன்பாக நிகழ்ந்திருந்தது. ஆயிரக் கணக்கானவர்களின் பார்வைக்கு அது முன்னதாகவே வந்திருந்தது. சீடர்களின் கிரியைகள் நிறுத்தப்படாவிட்டால், இயேசு அநேகரைத் தமது அடியாராக ஆதாயப்படுத்திக்கொள்வார் என்று உணர்ந்தனர். அவர்களுடைய அவமதிப்பு அவர்களைப் பின்தொடரும். ஏனெனில் தேவகுமாரனைக் கொலைசெய்த குற்றத்திற்கும் அவர்கள் ஆளாவார்கள். (28)

சீடர்களை அழித்துவிடவேண்டும் என்ற வாஞ்சை அவர்களிடம் இருந்தாலுங்கூட சீடர்கள் இயேசுவைப்பற்றிப் பேசினாலோ அல்லது இயேசுவின் பெயரால் செயலாற்றுவதைத் தொடர்ந்தாலோ அவர்கள் அச்சுறுத்தினதைவிட அதிகமாக ஒன்றையும் செய்ய அவர்கள் துணியவில்லை. அவர்களை மறுபடியும் சனகரீம் சங்கத்தின்முன் அழைத்து, இயேசுவின் பெயரால் அவர்கள் பேசவோ அல்லது செயலாற்றவோ கூடாது என்று கட்டளையிட்டனர். ஆனால் "பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்க ளுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே" என்றார்கள். (29)

சீடர்கள் அவர்கள் அழைக்கப்பட்டிருந்த பரிசுத்தமான அழைப்பின் மீது கொண்டிருந்த அசையாத நேர்மைக்காகவும் அந்த மனிதர்களை ஆசாரியர்கள் சந்தோஷத்துடன் தண்டித்திருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் ஜனங்களுக்காகப் பயந்தனர். ஏனெனில் "நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால்" ஜனங்களுக்குப் பயந்தார்கள். அப்படியே திரும்பத்திரும்பக் கூறப்பட்டுள்ள அச்சுறுத்தல்களுடனும் தடை உத்தரவுகளுடனும் அப்போஸ்தலர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (30)

பேதுருவும் யோவானும் கைதிகளாகச் சிறையில் இருந்தபோது, யூதர்களின் குரோதத்தை அறிந்திருந்தமற்ற சீடர்கள் கிறிஸ்துவிற்கு எதிராக இழைக்கப்பட்ட அதேவிதமான கொடுமை, சீடர்களின்மீதும் இழைக்கப்பட்டுவிடும் என்று பயந்து, அந்த சகோதரர்களுக்காக இடைவிடாமல் ஜெபித்திருந்தனர். அப்போஸ்தலர்கள் விடுவிக்கப்பட்டவுடன் அவர்கள் மற்ற சீடர்களைத் தேடிச்சென்று தங்களைப்பற்றிய விசாரணையின் பலனை அவர்களுக்குத் தெரிவித்தார்கள். விசுவாசிகளின் மகிழ்ச்சி மிகவும் அதிகமானதாக இருந்தது. “அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு: கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர். புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும், கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே. அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்.” (31)

“இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும்” என்றார்கள். (32)

ஊழியப்பணியில் அவர்களுக்கு அதிகமான பலம் கொடுக்கப்பட வேண்டுமென்று சீடர்கள் ஜெபம்செய்தார்கள். ஏனெனில் கிறிஸ்து பூமியிலிருந்தபோது எந்தவிதமான எதிர்ப்பைச் சந்தித்திருந்தாரோ அதேவிதமான தீர்மானமுடைய எதிர்ப்பை அவர்களும் சந்திக்க நேரிடும் என்பதை அவர்கள் கண்டனர். ஒருமைப்பாடுமிக்க அவர்களுடைய ஜெபங்கள் விசுவாசத்தினால் பரலோகத்தை நோக்கி உயர்ந்துகொண்டிருந்தபோது, பதில் வந்தது! அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது! அவர்கள் பரிசுத்த ஆவியின் அங்கீகரிக்கப்பட்ட அருளினால் புதிதாக நிரப்பப்பட்டனர்! அவர்களுடைய இருதயங்கள் தைரியத்தினால் நிறைந்துவிடவே எருசலேமில்

தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதற்காக அவர்கள் மறுபடியும் சென்றனர். "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்." தேவன் அவர்களுடைய முயற்சிகளை ஆச்சரியமான விதத்தில் ஆசீர்வதித்தார். (33)

இயேசுவின் பெயரால் இனிமேல் பிரசங்கம் செய்யக்கூடாது என்ற கட்டளைக்கு மறுமொழியாக, எந்த ஒரு கொள்கைக்காக சீடர்கள் பயமில்லாதவர்களாக நின்றிருந்தார்களோ, அவர்கள் தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும், உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள் என்று அறிவித்தனர். 1529–ம் வருடத்தில் ஸ்பைர்ஸ் என்னுமிடத்தில் நடந்த ஆலோசனைச் சங்கத்தில் இளவரசர்கள் கூடியிருந்தபோது, மதச்சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தி, சீர்திருத்தக் கோட்பாடுகளை பரப்புவதை தடைசெய்யும் பேரரசனின் கட்டளை முன் வைக்கப்பட்டது. உலகத்தின் நம்பிக்கை நொறுக்கப்பட்டுவிட இருப்பதுபோல் காணப்பட்டது. இந்தக் கட்டளையை இளவரசர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? இன்னும் இருளிலுள்ள திரளானவர்களிடமிருந்து, சுவிசேஷத்தின் ஒளி மூடப்படவேண்டுமா? உலகத்திற்கான பலத்த பிரச்சனைகள் கழுமரத்தின் மீதிருந்தன. சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் ஒன்றுசேரவே, இந்தக் கட்டளையை நாம் நிராகரிப்போமாக; மனச்சாட்சி சம்பந்தப்பட்ட காரியங்களின்மீது பெரும்பான்மைக்கு வல்லமை இல்லையென்று அவர்கள் ஏகமனதாக முடிவுசெய்தனர்.—Merle d'Aubigne, History of the Reformation, b. 13, ch. 5. (34)

இந்தக் கொள்கையை இன்று நமது நாளில் நாம் உறுதியாகக் காக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். சுவிசேஷ சபையின் ஸ்தாபகர்களாலும் தேவனுடைய சாட்சிகளினாலும் உயர்த்திப்பிடிக்கப்பட்டிருந்த சத்தியம் மதச் சுதந்திரம் ஆகியவைகளின் கொடி அன்றிலிருந்து நூற்றாண்டுகளைக் கடந்துவந்து, அதின் இறுதிப் போரில் நமது கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேவன் தமது வார்த்தையைப் பற்றின அறிவினால் எவர்களை ஆசீர்வதித்திருக்கிறாரோ அவர்களிடம் இந்தப் பெரும் ஈவுக்கான பொறுப்பு இருக்கிறது. மனித அரசாங்கம் தேசச் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்று என்று நாம் அதனை இனம் கண்டுகொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். அதின் சட்டப்பூர்வமான எல்லைக்குள் அதற்கு நாம் கீழ்ப்படிவது நமது பரிசுத்தமான கடமையாக இருக்கிறது. ஆனால் அதன் உரிமைபாராட்டுதல்கள் (மனித அமைப்பின் உரிமை பாராட்டுதல்கள்) தேவனுடையவைகளுடன் முரண்படும்போது,

நாம் மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட, தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டும். தேவனுடைய வார்த்தை மனிதச் சட்டங்களனைத்திற்கும் மேலானதாக இனம்கண்டுகொள்ளப்படவேண்டும். சபை உரைக்கிறது என்பதற்காக கர்த்தர் உரைக்கிறார் என்பதை ஒரு பக்கமாக வைக்கமுடியாது. உலகப்பிரகாரமானவைகளின் கிரீடங்களுக்கு மேலாக, கிறிஸ்துவின் கிரீடம் உயர்த்தப்படவேண்டியதாக உள்ளது. (35)

அதிகாரங்களை எதிர்க்கும்படி நாம் அவசியப்படுத்தப்படவில்லை. சட்டம் ஒழுங்கு ஆகியவைகளுக்கு எதிராகப் பேசியிருக்கிறோம் என்று தோன்றுவதற்கு இடம்கொடுக்காதபடி நாம் பேசினவைகளும் எழுதினவைகளும் கவனமாக ஆலோசிக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். அவசியமில்லாதவிதத்தில், நமது பாதையை அடைக்கின்ற விதத்தில், நாம் எதையும் பேசவும் செய்யவும் கூடாது. நாம் நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள சத்தியங்களை முன்கொண்டுசெல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்! இந்த வேலையைச் செய்வதிலிருந்து நாம் மனிதர்களால் தடுக்கப்பட்டால் அப்பொழுது நாம் அப்போஸ்தலர்கள் பேசினதைப்போலவும் செய்ததைப்போலவும் “தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானியுங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே” என்று பேசலாம், செய்யலாம். (37) ★

# 7

# மாய்மாலத்திற்கு எதிரான ஒரு எச்சரிக்கை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 70–76)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 4:32—5:11**

சுவிசேஷத்தின் சத்தியங்களை சீடர்கள் எருசலேமில் அறிவித்த போது, அவர்களுடைய வார்த்தைக்குத் தேவன் சாட்சிகொடுத்தார். திரள்கூட்டமானவர்கள் விசுவாசித்தார்கள். இந்த ஆரம்பகால விசுவாசிகளில் அநேகர் மதவிரோதமிக்க யூதர்களால் அவர்களுடைய குடும்பங்களிலிருந்தும் நண்பர்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டனர். அவர்களுக்கு உணவும் தங்குமிடமும் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமானதாக இருந்தது. (1)

“அவர்களின் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருக்கவில்லை” என்பதையும் தேவைகள் எவ்விதமாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தன என்பதையும் வேதவாக்கியங்கள் கூறுகின்றன. (2)

இவ்வாறாக, விசுவாசிகளுக்கு மத்தியில் பணமும் பொருட்களும் உடையவர்களாக இருந்தவர்கள், அவசர நிலையைச் சந்திப்பதற்காக அவைகளை உற்சாகத்துடன் தியாகம் செய்திருந்தனர். தங்களுடைய வீடுகளையும் அல்லது நிலங்களையும் விற்று, அந்தப் பணத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலர்களுடைய பாதத்தில் வைத்தனர். “அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது.” (3)

விசுவாசிகளிடம் உண்டாயிருந்த இந்தத் தாராள மனப்பான்மை ஆவியின் அருள்மாரியினால் ஏற்பட்டதாக இருந்தது. சுவிசேஷத்தினிடத்திற்கு மாறினவர்கள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஊழியத்தின் வெற்றி என்னும் பொதுவான

வாஞ்சை அவர்களைக் கட்டுப்படுத்தியிருந்தது. அவர்களுடைய ஜீவியங்களில் பேராசைக்கு இடம் இருக்கவில்லை. தங்களுடைய சகோதரர்களின்மீதிருந்த அன்பு, அவர்கள் ஆதரித்திருந்த காரியம், ஆகியவை பணத்தின்மீதும் உடமைகளின்மீதும் அவர்களுக்கிருந்த ஆசையைவிடப் பெரியதாக ஆத்துமாக்களை அதிக விலை உயர்ந்ததாகக் கணக்கிடச்செய்தது. (4)

வாழ்க்கையை தேவனுடைய ஆவியானவர் கைப்பற்றிக்கொள்ளும் போது, எப்பொழுதும் இவ்விதமாகத்தான் இருக்கும். கிறிஸ்துவின் அன்பினால் தங்களுடைய இருதயங்கள் நிரப்பப்பட்டவர்கள், நம்மை ஐசுவரியவான்களாக்குவதற்காகத் தம்மைத் தரித்திரராக்கிக்கொண்டவரின் உதாரணத்தைப் பின்பற்றுவார்கள். பணம், நேரம், செல்வாக்கு ஆகிய ஈவுகள் அனைத்தையும் அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுள்ளனர். இவைகளை அவர்கள் சுவிசேஷ ஊழியத்தை முன்கொண்டுசெல்வதற்கான பொருள் என்றே மதிப்பார்கள். ஆதிகால சபையில் இப்படித்தான் இருந்தது. அதைப்போலவே இக்காலத்து சபையில் ஆவியின் வல்லமையினால் அங்கத்தினர்கள் தங்களுடைய பற்றுதலை உலகப்பிரகாரமான பொருட்களின்மீதிருந்து எடுத்து, தங்களுடைய உடன்மனிதர்கள் சுவிசேஷத்தைக் கேட்கவேண்டும் என்பதற்காக தியாகங்களைச்செய்ய வேண்டும். அப்போது அறிவிக்கப்பட்ட சத்தியம் அதைக் கேட்பவர்களின்மீது வல்லமைமிக்க செல்வாக்கை உடையதாக இருப்பது காணப்படும். (5)

விசுவாசிகளிடம் காணப்பட்டிருந்த அனுதாபத்தின் உதாரணத்திற்கு எதிர்மாறாக அனனியா சப்பீராளின் நடத்தை இருக்கிறது. இதைத் தீர்க்கதரிசன ஆவி துல்லியமாக ஒப்பிட்டு எழுதும்போது, அது ஆதிகாலச் சபையின் வரலாற்றின்மீது கடுமையான கறையைக் விட்டுச்செல்கிறது. அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்கும் சலுகையில் மற்றவர்களுடன் சேர்ந்து, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டிருந்த இவர்களும் பங்குபெற்றிருந்தனர். “அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர்” (அப்போஸ்தலர் 4:31). இந்த சமயத்தில், மற்ற விசுவாசிகளுடன்சேர்ந்து அனனியா, சப்பீராளும் அங்கிருந்தனர். அங்கிருந்த அனைவரிலும் ஆழ்ந்த மன உணர்த்துதல் காணப்பட்டிருந்தது. தேவஆவியின் நேரடியான செல்வாக்கின்கீழ், அவர்களும் தங்களுடைய ஆஸ்தியை விற்று, அந்தப் பணத்தை கர்த்தருக்குக் கொடுப்பதாக ஆணையிட்டிருந்தனர். (6)

அதன்பின், பேராசையின் உணர்வுக்கு இணங்கினதால் அவர்கள் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினார்கள். அவர்கள் தாங்கள் கொடுத்த

வாக்குத்தத்தத்திற்காக வருந்தி, கிறிஸ்துவின் காரியத்திற்காக பெரிய காரியங்களைச் செய்யவேண்டும் என்ற வாஞ்சையினால் ஆசீர்வாதமாகும்படி அனலாகியிருந்த இனிய செல்வாக்கை விரைவில் இழந்திருந்தனர். அவர்கள் மிகவும் அவசரப்பட்டுவிட்டதாகவும் அவர்களுடைய முடிவைப்பற்றி மீண்டும் ஆலோசிக்கவேண்டும் என்றும் எண்ணினார்கள். அவர்கள் அந்தக் காரியத்தைப்பற்றி தங்களுக்குள்பேசி, தங்களுடைய ஆணையை நிறைவேற்றக்கூடாது என்று முடிவுசெய்தனர். அப்படியானாலும் தங்களுடைய ஏழைச் சகோதரர்களின் தேவைகளுக்காகத் தங்களுடைய ஆஸ்திகளைக் கொடுத்தவர்கள் விசுவாசிகளுக்கிடையில் மிகவும் மேலானவர்களாக மதிக்கப்பட்டிருந்ததை அவர்கள் கண்டனர். பக்திவிநயத்துடன் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்துள்ளதில் சுயநலமிக்க அவர்களுடைய ஆத்துமாக்கள் மனவெறுப்புள்ளதாகி இருப்பதை அறியநேர்ந்தால், அது வெட்கக்கேடாக இருக்கும் என்று எண்ணி, தங்களுடைய ஆஸ்தியை விற்று, விற்ற தொகையின் ஒரு பெரும் பகுதியைத் தங்களுக்கென்று வைத்துக்கொண்டு, விற்ற எல்லாப் பணத்தையும் பொதுநிதிக்குக் கொடுத்துவிட்டதுபோல் நடித்துவிட முடிவுசெய்தனர். இவ்வாறாக, தங்களுடைய சகோதரர்களின் மேலான மதிப்பையும் அதே நேரத்தில் பெறலாம் என்று முடிவுசெய்தனர். (7)

ஆனால் மாய்மாலத்தையும் தவறையும் தேவன் வெறுக்கின்றார். தேவனுடனுள்ள இடைப்படுதலில் அனனியாவும் சப்பீராளும் மோசடி செய்து பரிசுத்த ஆவியிடம் பொய்பேசினார்கள். அவர்களுடைய பாவம் பயங்கரமான நியாயத்தீர்ப்பினால் சந்திக்கப்பட்டது. அனனியா தனது காணிக்கையுடன் வந்தபோது, “பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான்.” (8)

“அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.” (9)

“அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ?” என்று பேதுரு கேட்டான். பொது நன்மைக்காகத் தனது ஆஸ்தியைத் தியாகம் செய்யும்படி காரணமற்ற செல்வாக்கு எதுவும் அனனியாவை

வற்புறுத்தியிருக்கவில்லை. அவன் தனது தெரிந்துகொள்ளுதலின்படியே நடந்திருந்தான். ஆனால் சீடர்களை ஏமாற்றும் முயற்சியில் அவன் சர்வ வல்லவரிடத்தில் பொய் கூறியிருந்தான். (10)

“ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள். பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்களும் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான். உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம்பண்ணினார்கள். சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.” (11)

அந்த இளம்சபை சன்மார்க்க நெறியிலிருந்து தவறிவிடாதபடி அதனைக் காப்பதற்கு இந்த அடையாளமான வெளிக்காட்டுதல் அவசியம் என்பதை முடிவில்லாத ஞானம் கண்டது. அவர்களது எண்ணிக்கை விரைவாக அதிகரித்துக்கொண்டிருந்தது. மாற்றமடைந்தவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஆண்களும் பெண்களும் தேவனை சேவிப்பதாகக் கூறிக்கொண்டிருந்து, பிசாசைத் தொழுதுகொண்டிருந்தால், சபை ஆபத்துக்குள்ளாகியிருந்திருக்கக் கூடும். மனிதர்களால் தேவனை வஞ்சிக்க முடியாதென்பதற்கும், இருதயத்தில் மறைத்துவைத்திருக்கும் பாவத்தை அவர் கண்டுபிடிக்கிறார் என்பதற்கும், அவர் பரிகசிக்கப்பட அனுமதிக்கமாட்டார் என்பதற்கும், இந்த நியாயத்தீர்ப்பு சாட்சி பகர்ந்தது. அது பாசாங்கையும் மாய்மாலத்தையும் தவிர்ப்பதற்கும், தேவனைக் கொள்ளையிடுகின்ற காரியத்தில் எச்சரிக்கையாக இருப்பதற்காகவும் சபைக்கு ஒரு எச்சரிக்கையாக வடிவமைக்கப்பட்டிருந்தது. (12)

பேராசை, மோசடி, மாய்மாலம் ஆகியவைகளின்மீதுள்ள தேவனின் வெறுப்புபற்றி இந்த உதாரணம், ஒரு அபாய அடையாளமாக இருக்கும்படி இது ஆரம்பகால சபைக்குமட்டும் கொடுக்கப்படாமல், எதிர்காலத் தலைமுறையினருக்காவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அனனியாவும் சப்பீராளும் முதலில் பேணியிருந்தது பேராசையாகும். அவர்கள் கர்த்தருக்கென்று

வாக்குத்தத்தம் செய்திருந்ததின் ஒரு பகுதியைத் தங்களுக்கென்று வைத்துக்கொள்ள விரும்பினது அவர்களை மோசடிக்குள்ளும் மாய்மாலத்திற்குள்ளும் நடத்தினது. சுவிசேஷத்தை அறிவிப்பது என்பது, அவரது ஜனங்களின் உழைப்புகள் ஈவுகள் ஆகியவகைளைச் சார்ந்ததாக இருக்கும்படி தேவன் அறிவித்திருந்தார். மனமுவந்த காணிக்கைகளும் தசமபாகமும் கர்த்தருடைய ஊழியத்தின்மீதுள்ள பக்தியாக அமைகின்றன. மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருளில் ஒரு பகுதியின்மீது—தசமபாகத்தின் மீது—தேவன் உரிமைபாராட்டுகிறார். இதைவிட அதிகமாகக் கொடுப்பார்களா இல்லையா என்பதைப்பற்றிக் கூறும்படி அவர் மனிதர்களைச் சுதந்தரமாக விட்டுவிடுகிறார். ஆனால் பரிசுத்த ஆவியின் செல்வாக்கினால் காக்கப்பட்டிருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதாக ஒரு பிரதிக்கினை செய்யப்படுகிறது. அவ்விதமாக அப்பணிக்கப்பட்ட பங்கின்மீது அதற்குமேல் அப்படிப் பிரதிக்கினை செய்தவனுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை! மனிதர்கள் அவர்களுக்குள் கொடுத்துக்கொள்ளும் வாக்குத்தத்தங்கள் கட்டுப்படுத்தும்போது, தேவனுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் அதிகமாகக் கட்டுப்படுத்தாதா? எழுத்தின்மூலமாக மனிதர்கள் செய்கின்ற ஒப்பந்தத்தைவிட மனச்சாட்சி என்னும் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் வாக்குத்தத்தங்கள் குறைவான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்குமா? (13)

வழக்கமில்லாதவிதமாகத் தெளிவுடனும் வல்லமையுடனும் தெய்வீக ஒளி இருதயத்திற்குள்பிரகாசிக்கும்போது, வழக்கமானசுயநலம் அதின்பிடியைத் தளர்த்திவிடும்போது, தேவனுடைய காரியத்திற்கென்று கொடுப்பதற்கான ஒரு தன்மை உண்டாகிறது. ஆனால் தாங்கள்செய்த வாக்குத்தத்தத்தை சாத்தானின் பகுதியிலிருந்துண்டாகக்கூடிய எதிர்ப்பு எதுவும் இல்லாமல், நிறைவேற்றிவிடலாம் என்று ஒருவரும் சிந்திக்கவேண்டிய அவசியம் இல்லை. பூமியின்மீது மீட்பரின் இராஜ்யம் ஏற்படுவதில் அவன் சந்தோஷமுடையவனாக இருப்பதில்லை. இடப்பட்ட ஆணை மிக அதிகமென்றும், அது ஆஸ்தியைச் சேர்க்கின்ற அவர்களுடைய முயற்சியையும், குடும்பத்தினர்களுடைய வாஞ்சைகளை நிறைவேற்றுவதையும் கூனிப்போகச்செய்துவிடும் என்னும் கருத்தை சாத்தான் கொடுக்கிறான். (14)

தேவன்தான் ஆஸ்தியினால் மனிதர்களை ஆசீர்வதிக்கிறார். அவரது காரியத்தை முன்கொண்டுசெல்லுவதற்குக் கொடுக்கும்படியான தகுதியை அவர்கள் அடையும்படி அவர் இதைச் செய்கிறார். அவர் சூரிய ஒளியையும் மழையையும் அனுப்புகிறார். அவர் பயிர்களை வளரச் செய்கிறார். அவர் உடல்நலத்தையும் செல்வத்தைச் சம்பாதிப்பதற்கான திறமையையும்

தருகிறார். நமக்குரிய ஆசீர்வாதங்களனைத்தும் நிறைவான அவரது கரத்திலிருந்து வருகிறது. அதற்குப்பதிலாக தோத்திரக்காணிக்கையையும், நன்றியறிதல் காணிக்கையையும், குற்ற நிவாரணக் காணிக்கையையும், அதிகரித்தவைகள் அனைத்திலிருந்தும் பத்திலொரு பங்கையும், தாராளமான காணிக்கையையும், கர்த்தருடைய பணியை முன்கொண்டுசெல்லுவதற்கு ஏராளமாக உண்டாயிருக்கும்படி, தசமபாகத்தையும் காணிக்கைகளையும் செலுத்துபவர்களாக ஆண்களும் பெண்களும் இருக்கவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். (15)

ஆனால் சுயநலத்தின்மூலமாக, மனிதர்களின் இருதயங்கள் கடினமடைகின்றன. அனனியாவையும் சப்பீராளையும்போலத் தங்களைக் கிறிஸ்தவர்களாக, தேவனுடைய சபைக்கடுத்த காரியங்களை நிறைவேற்று வதுபோல் காட்டிக்கொண்டு, தங்களுடைய கிரயத்தின் ஒரு பகுதியைத் தங்களிடம் வைத்துக்கொள்ள இருதயக்கடினமுள்ளவர்களாகி விடுகின்றனர். சுயநலமான காரியங்களைச் செயல்படுத்துவதற்காக, அநேகர் பணத்தைத் தாராளமாகச் செலவிடுகின்றனர். அநேக ஆண்களும் பெண்களும் விருப்பமில்லாத மனதுடன் தேவனுக்கு மிகவும் குறைவான காணிக்கையைக் கொண்டுவருகின்றனர். அதே நேரத்தில் தங்களுடைய சௌகரியத்தையும் ருசியையும்பற்றி ஆலோசிக்கின்றனர். தேவனுடைய பொருட்களெல்லாம் எவ்விதமாகப் பயன்படுத்தப்பட்டன என்பதைப்பற்றிய ஒரு கணக்கை அவர் ஒருநாள் கேட்பார் என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். அனனியாவும் சப்பீராளும் கொடுத்த தர்மத்தை அவர் எவ்விதமாக ஏற்றுக்கொண்டிருந்தாரோ அதைவிட அதிகமான விதத்தில் அவர்களுடைய தர்மத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார். (மனமில்லாது கொடுப்பவைகளை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்). (16)

பொய்சத்தியம் செய்தவர்கள் பெற்றுக்கொண்ட கடுமையான தண்டனையிலிருந்து, சகலவிதமான மாய்மாலங்களின்மீதும் வஞ்சகங் களின்மீதுமுள்ள அவரது வெறுப்பு எவ்வளவு ஆழமானதாகவும் அவமதிப்பானதாகவும் இருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எல்லாவற்றையும் கொடுத்துவிட்டதாக அவர்கள் நடித்தபோது, அனனியாவும் சப்பீராளும் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சென்னார்கள். அதின் பலனாக அவர்கள் அந்த வாழ்க்கையையும், வரவிருக்கின்ற வாழ்க்கையையும் இழந்துபோனார்கள். அவர்களைத் தண்டித்த அதே தேவன், இன்று சகலவிதமான தவறான தன்மைகளையும் ஆக்கினைக்குட்படுத்துகிறார். பொய் உதடுகள் அவருக்கு அருவருப்பானவை. “தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய

ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை" (வெளிப்படுத்தல் 21:27) என்று அவர் அறிவிக்கிறார். உண்மை கூறுவது தளர்ந்த கைகளாலும் நிச்சயமற்ற பிடியினாலும் பற்றிக்கொள்ளப்படாமலிருப்பதாக. சத்தியத்தின் காரியத்தில் விரைவாக விளையாடுவதும், இளப்பமாக இருப்பதும், ஒருவருடைய சுயநலமான திட்டங்களுக்குப் பொருந்தும்படி பாசாங்கு செய்வதும்— விசுவாசக்கப்பல் உடைகிறது என்பதன் பொருள். ஆகையால், "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்" நில்லுங்கள். உண்மையில்லாதவைகளைப் பேசும் ஒருவன் தனது ஆத்துமாவை ஒரு மலிவான சந்தையில் விற்கிறான். அவசரமான நிலைமைகளில் அவனது தவறான தன்மைகள் உதவுவதுபோல் காணப்படலாம். நேர்மையான வியாபாரத்தினால் அவன் அடையமுடியாத லாபத்தை, இவ்விதமாக அடைந்துகொள்ளலாம் என்பதுபோல் காணப்படலாம். ஆனால் முடிவில் ஒருவரையும் நம்பச்செய்யமுடியாத ஒரு இடத்தை அவன் அடைகிறான். அவன் பொய்சொல்லுபவனாக இருக்கும்போது, மற்றவர்களுடைய வார்த்தைகளில் அவன் நம்பிக்கை உடையவனாக இருப்பதில்லை. (17)

அனனியா சப்பீராளின் காலத்தில் தேவனுக்கு எதிரான மோசடி வேகமாகத் தண்டிக்கப்பட்டது. சபையின் பிற்கால வரலாற்றில் அதேவிதமான பாவம் திரும்பவும் செய்யப்பட்டிருந்தது. நமது காலத்திலுள்ள அநேகராலும் அது செய்யப்பட்டிருக்கிறது. இதில் தேவனுடைய பிரியமின்மை உடனடியாக வெளிக்காட்டப்படாமலிருந்தபோதிலும், அது அப்போஸ்தலர்கள் காலத்தில் நிகழ்ந்ததைவிட மிகவும் வெறுக்கப்பட்டதாக, அவருடைய பார்வையில் இப்பொழுதும் இருக்கிறது. எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது! இந்தப் பாவத்தைப்பற்றிய தேவனுடைய அதிகமான வெறுப்பை அவர் தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறார்! அப்படிப்பட்டவர்கள் மாய்மாலத்திற்கும் பேராசைக்கும் தங்களை அழித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை நிச்சயமாக அறியலாம். (18) ★

# 8

# சனகரீம் சங்கத்திற்கு முன்னால்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 77–86)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 5:12–42**

அவமானம், சித்திரவதை ஆகியவைகளின் கருவியாக இருந்த சிலுவைதான் உலகத்திற்கு நம்பிக்கையையும் இரட்சிப்பையும் கொண்டு வந்திருந்தது. தேவனுடைய வார்த்தை ஒன்றைத்தவிர செல்வமும் ஆயுதங்களுமாகிய ஒன்றும் இல்லாத தாழ்மையான மனிதர்களாக சீடர்கள் இருந்தனர். அப்படியிருந்தும், மாட்டுத்தொழுவத்தின் முன்னணையும் சிலுவையும் எல்லா எதிர்ப்புக்களுக்கும் எதிராக அடைந்த வெற்றியின் ஆச்சரியமான கதையை உலகத்திற்குக் கூறுவதற்காக, அவர்கள் கிறிஸ்துவின் பலத்தால் முன்சென்றிருந்தனர். பூமிக்குரிய கனம், அங்கீகாரம் எதுவும் இல்லாத விசுவாச வீரர்களாக அவர்கள் இருந்தனர். இந்த உலகத்தை அசைத்த பேச்சுத்திறமை அவர்களது உதடுகளில் இருந்தது. (1)

இயேசுவைப்பற்றிய மிக ஆழமான—தவறான எண்ணம் எருசலேமில் நிலவியிருந்தது. ஒரு குற்றவாளியாகச் சிலுவையில் அறையப்பட்டிருந்த அவரைப்பற்றி மிக அதிகக் குழப்பமான எண்ணங்கள் இருந்தன. கிறிஸ்துவின் செயல்கள், ஊழியங்கள் அவருடைய சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், பரமேறிச்சென்றது ஆகியவைகளைக்குறித்த ஜீவ வார்த்தைகளைச் சீடர்கள் தைரியத்துடன் யூதர்களுக்குமுன்வைத்துப் பேசுவதில் தொடர்ந்திருந்தனர். அப்போஸ்தலர்களின் தெளிவான தைரியமிக்க சாட்சியை ஆசாரியர்களும் அதிபதிகளும் ஆச்சரியத்துடன் கேட்டனர். உயிர்த்தெழுந்த இரட்சகரின் வல்லமை உண்மையாகவே சீடர்களின்மீது விழுந்திருந்தது. விசுவாசிகளின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரிக்கும்படி அவர்களுடைய பணியுடன் அடையாளங்களும் அற்புதங்களும் தொடர்ந்தன. சீடர்கள் கடந்து செல்ல வேண்டியதாக இருந்த தெருக்கள் நெடுகிலும் ஜனங்கள் தங்களுடைய

பிணியாளிகளைக் கிடத்தியிருந்தனர். “பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.” இங்கு அசுத்த ஆவிகளினால் பிடிக்கப்பட்டவர்களுங்கூடக் கொண்டுவரப்பட்டிருந்தனர். கூட்டத்தினர்கள் அவர்களை வளைந்துகொண்டிருந்தனர். சுகமடைந்தவர்கள் தேவனைப்போற்றி, மீட்பரின் நாமத்தை மகிமைப்படுத்தியிருந்தனர். (2)

ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களுக்கு மேலாகக் கிறிஸ்து உயர்த்தப்பட்டிருப்பதைக் கண்டனர். சதுசேயர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று அப்போஸ்தலர்கள் அறிவிப்பதை கேட்டபோது, அவர்கள் சீற்றமடைந்தனர். ஏனெனில் அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றிப் பேசவும் அவரது பெயரால் அற்புதங்கள் செய்யவும் அனுமதிக்கப்பட்டால், உயிர்த்தெழுதல் இல்லையென்னும் அவர்களுடைய கோட்பாடு எல்லோராலும் நிராகரிக்கப்பட்டுவிடும். அப்பொழுது சதுசேயர்களின் சமய நம்பிக்கையைக் கொண்டிருக்கும் கூட்டம் இல்லாமலாகிவிடும் என்று உணர்ந்தனர். சீடர்களின் போதனைகளின் தன்மை யூதச் சடங்காச்சாரங்களைத் தகர்த்து, பலிமுறைகளினால் பயனில்லை என்றாகிவிடும் என்பதை உணர்ந்தபோது, பரிசேயர்கள் மிகவும் கோபமடைந்தனர். (3)

இதுவரை இந்தப் புதிய போதனையை அமர்த்திவிடுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளனைத்துமே வீணாகியிருந்தன. ஆனால் இப்பொழுது பரிசேயர்களும் சதுசேயர்களுமாகிய இரு கூட்டத்தாரும் சேர்ந்து, சீடர்களின் ஊழியம் நிறுத்தப்பட்டாகவேண்டும் என்று தீர்மானித்தனர். ஏனெனில், அது இயேசுவின் மரணத்திற்கு இவர்கள் தான் குற்றவாளிகள் என்பதை மெய்ப்பித்துக்கொண்டிருந்தது. ஆசாரியர்கள் கோபத்தினால் நிறைந்து, பேதுருவின்மீதும் யோவானின்மீதும் அவர்களது வன்முறைக் கரங்களை வைத்து, அவர்களைப் பொதுச்சிறையில் அடைத்தனர். (4)

தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கான தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் யூதர்களின் தலைவர்கள் தவறியிருந்தனர். கர்த்தர் தமது சத்தியத்தின் கருவூலங்களாக இருக்க எவர்களை ஏற்படுத்தியிருந்தாரோ அவர்கள் தங்களிடம் வைக்கப்பட்டிருந்த சத்தியத்தில் நம்பிக்கை விசுவாசம் இல்லாதவர்களாக இருக்கவே, அந்த வேலையைச் செய்யும்படி வேறு மனிதர்களை தெரிந்தெடுத்துக்கொண்டார். இந்தத் தலைவர்கள் அவர்கள் பேணியிருந்த கோட்பாடுகளை ஒரு பக்கமாக வைக்கின்றவர்களுக்கு

எதிராக, நீதியுள்ள கோபம் என்பதற்குத் தங்களுடைய குருட்டுத்தனத்தினால் முழுவழியையும் திறந்துவிட்டனர். அவர்கள் தாங்களே வேதவாக்கியங்களைச் சரியான விதத்தில் புரிந்துகொள்ளவில்லை அல்லது அதைத் தவறாக வியாக்கியானம் செய்தனர் அல்லது வேதவாக்கியங்களைத் தவறாக ஒப்பிட்டுக்காட்டியிருந்திருக்கக் கூடும் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். புத்தியை இழந்த மனிதர்களைப்போல: நாங்கள் மக்களுக்குப் போதித்திருக்கின்ற கோட்பாடுகளுக்கு எதிர்மறையாகப் போதிக்கிறதற்கு இவர்களுக்கு அதுவும் மீன்பிடிக்கிறவர்களான இவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? என்று கேட்டார்கள். இந்த எண்ணங்களிலுள்ள போதனைகளை அமர்த்திவிடவேண்டும் என்பதில் தீர்மானமுடையவர்களாக இருந்த அவர்கள், அந்தப் போதனைகளை முன்வைத்துக்கொண்டிருந்தவர்களைச் சிறைப்படுத்தினார்கள். (5)

இப்படிப்பட்ட நடத்துதல்களுக்குச் சீடர்கள் அச்சமடைந்தவர்களாகவோ பணிந்தவர்களாகவோ இருக்கவில்லை. கிறிஸ்துவினால் கூறப்பட்டிருந்த வார்த்தைகளைப் பரிசுத்த ஆவி அவர்களுடைய மனங்களுக்குக் கொண்டுவந்தார். "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளை யெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்." "அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்." "அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்"–யோவான் 15:20,21; 16:2,4. (6)

பரலோகத்தின் தேவன் இப்பிரபஞ்சத்தை ஆளுகைசெய்யும் வல்லமைமிக்கவர். சீடர்களின் சிறைப்படுதலின் காரியத்தை அவர் தமது சொந்தக் கரங்களில் எடுத்துக்கொண்டார். ஏனெனில் மனிதர்கள் அவரது பணிக்கு எதிராக யுத்தஞ்செய்துகொண்டிருந்தனர். இரவில் கர்த்தருடைய தூதன் சிறையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டுவந்து "நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்" என்றான். இந்தக் கட்டளை யூத அதிபதிகளின் கட்டளைக்கு நேர் எதிரானதாக இருந்தது.

நாங்கள் நியாயாதிபதிகளிடம் ஆலோசனைசெய்து, அவர்களிடமிருந்து அனுமதிபெறாதவரை இதை எங்களால் செய்யமுடியாது என்று அப்போஸ்தலர்கள் கூறினார்களா? இல்லை! சொல்லுங்கள் என்று தேவன் கூறியிருந்தார். "அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம்பண்ணினார்கள்!" (7)

விசுவாசிகளுக்கு மத்தியில் பேதுருவும் யோவானும் தோன்றி, சிறையைக் காவல்செய்துகொண்டிருந்த வீரர்களின் கூட்டத்திற்கிடையிலிருந்து நேரடியாக தூதன் தங்களை எவ்விதமாக அழைத்துச் சென்றான் என்பதையும், தடங்கல் செய்யப்பட்டிருந்த பணியைத் தொடர்ந்துசெய்யும்படி கட்டளையிட்டதையும் தெரிவித்தபோது, சகோதரர்கள் ஆச்சரியத்தினாலும் மகிழ்ச்சியினாலும் நிரப்பப்பட்டார்கள். (8)

அதே நேரத்தில் பிரதான ஆசாரியனும் அவனோடிருந்தவர்களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தாரையும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரெல்லாரையும் வரவழைத்தார்கள். சீடர்கள் கலகம்செய்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தவும், அனனியா, சப்பீராள் ஆகியோரைக் கொலைசெய்தனர் என்று குற்றஞ்சாட்டவும் முடிவுசெய்திருந்தனர். கலகக்காரர்களை இந்தக் காரியத்தை அவர்களுடைய கரங்களில் எடுத்துக்கொள்ளும்படித் தூண்டிவிட்டால், அவர்கள் இயேசுவிடம் எப்படி நடந்துகொண்டார்களோ அதேவிதமாக சீடர்களிடமும் நடந்துகொள்ளுவார்களென்று ஆசாரியர் களும் அதிபதிகளும் நம்பினார்கள். கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொள்ளாமலிருந்த அநேகர் யூத அதிகாரிகளின் ஒருதலைப்பட்சமான ஆளுகையினால் களைப்புற்றவர்களாக இருந்து, ஏதாவது மாறுதல் ஏற்படவேண்டுமென்பதற்காக கவலையுள்ளவர்களாக இருந்தனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். திருப்தியில்லாதவர்களாக இருக்கும் இவர்கள், அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்டிருக்கும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள நேரிட்டால், மக்கள் அனைவரின் கோபமும் மதத்தலைவர்களுக்கு எதிராக எழும் என்றும், அப்பொழுது கிறிஸ்துவைக் கொலைசெய்ததற்கு பதில் கூறவேண்டியதுவரும் என்றும் எண்ணி, ஆசாரியர்கள் பயந்து, இதைத் தடுக்க பலத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர்கள் முடிவுசெய்தனர். (9)

சிறையிலிருந்தவர்களைத் தங்கள்முன் கொண்டுவருவதற்கு அவர்கள் ஆட்களை அனுப்பினபோது, சிறைக்கதவுகள் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்கின்றன என்றும், சிறைக்காவலாளிகள் அங்கே உள்ளனர் என்றும், ஆனால் சிறைவைக்கப்பட்டவர்கள் எங்கேயும் காணப்படவில்லையென்றும்— கூறப்பட்ட வார்த்தைகள் அவர்களில் ஏற்படுத்தின ஆச்சரியம் மிகவும் பெரிதாக இருந்தது. (10)

விரைவில் “இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள்” என்ற மலைப்பூட்டும் வார்த்தைகள் வந்தன. “உடனே சேனைத்தலைவன் சேவகரோடேகூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால், பலவந்தம்பண்ணாமல் அவர்களை அழைத்துக்கொண்டுவந்தான்” (11)

அப்போஸ்தலர்கள் ஆச்சரியமான விதத்தில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தபோதிலும், விசாரணையிலிருந்தும் தண்டனையிலிருந்தும் காப்பாற்றப்பட்டிருக்கவில்லை. “நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள்” என்று கிறிஸ்து அவர்களுடன் இருந்தபோது கூறியிருந்தார். அவர்களை விடுவிக்கும்படி ஒரு தூதனை அனுப்பினதன்மூலம், தேவன் தமது அன்பின் அடையாளத்தையும் அவரது பிரசன்னத்தின் நிச்சயத்தையும் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். இப்பொழுது அவர்கள் எந்த ஒருவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறார்களோ, அவருக்காகப் பாடுகளை அனுபவிக்கவேண்டியதும் அவர்களது பங்காக இருக்கிறது. (12)

தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள் ஆகியவர்களின் வரலாற்றில் தேவன்மீதுள்ள ராஜவிசுவாசத்திற்கு அநேக மேன்மைமிக்க உதாரணங்கள் உள்ளன. சிறைவாசம், சித்திரவதை, தேவப்பிரமாணத்தை மீறுவதைவிட மரணத்தை அனுபவித்தல் ஆகியவைகளைக் கிறிஸ்துவின் சாட்சிகள் சகித்திருக்கின்றனர். பேதுருவும் யோவானும் விட்டுச்சென்றுள்ள ஆவணம் சுவிசேஷ காலத்தில் நிகழ்ந்துள்ள வரலாற்றுச் சிறப்பை உடையதாக உள்ளது. அவர்களை அழிக்கவேண்டும் என்பதில் முனைப்புள்ளவர்களாக இருந்த மனிதர்களுக்குமுன் அவர்கள் இரண்டாவது தடவையாக நின்றிருந்தபோது, அவர்களுடைய வார்த்தைகளிலிருந்து அல்லது சுபாவத்திலிருந்து பயத்தையும் அல்லது தயக்கத்தையும் அறிந்துகொள்ள முடியவில்லை. “நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள்” என்று பிரதான ஆசாரியன் கூறினபோது, “பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது” என்றனர். ஒரு தூதன் தான் அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து தேவாலயத்தில் போதனைசெய்யும்படி கட்டளையிட்டிருந்தான். அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதின்மூலமாக அவர்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர். அவர்களுக்கு என்ன நேரிட்டாலும் அதைச் செய்தாகவேண்டும். (13)

அப்பொழுது எழுப்புதலின் ஆவி சீடர்களின்மீது வந்தது. அங்கு கூடியிருந்து குற்றஞ்சாட்டியவர்கள் கிறிஸ்துவின் மரணத்திற்கான குற்றவாளிகளாக இருந்தனர். “நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி” என்றார்கள் (அப்போஸ்தலர் 5:30–32). (14)

இந்த வார்த்தைகளினால் யூதர்கள் சட்டத்தைத் தங்களது சொந்தக் கைகளில் எடுத்துக்கொள்ளவும் மேற்கொண்டு விசாரணை எதுவும் இல்லாமலும், ரோம நாட்டு அதிபதிகளிடமிருந்துள்ள அதிகாரம் எதுவும் இல்லாமலும் அந்தச் சிறைக்கைதிகளை மரணத்திற்கு உட்படுத்தவும் முடிவுசெய்யுமளவிற்குச் சீற்றமடைந்தனர். ஏற்கனவே கிறிஸ்துவின் இரத்தத்திற்கு குற்றவாளிகளாக இருந்த அவர்கள், இப்பொழுது சீடர்களின் இரத்தத்தினால் தங்களுடைய கைகளைக் கறைப்படுத்திக்கொள்ள ஆவலுள்ளவர்களாக இருந்தனர். (15)

ஆனால் அந்த ஆலோசனைச் சங்கத்தில் சீடர்கள் பேசியிருந்த வார்த்தைகளில் தேவனுடைய குரலை இனங்கண்டுகொண்டிருந்த ஒரு மனிதன் இருந்தான். அவன் பரிசேயனும் நற்புகழ் வாய்ந்தவனும் கற்றறிந்தவனும் மேலான அந்தஸ்தை உடையவனுமாயிருந்தான். அந்த கமாலியேல் ஆசாரியர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற வன்முறை நடவடிக்கைகள் பயங்கரமான விளைவுகளுக்கு நடத்திச்செல்லும் என்பதைத் தெளிவாகக் கண்டான். அங்கு இருந்தவர்களிடம் கைதிகளை அந்த இடத்திலிருந்து கொண்டுசெல்லும்படி கேட்டுக்கொண்டான். அதில் இடைபடவிருந்தவர்களின் நோக்கங்களை அறிந்திருந்தான். கிறிஸ்துவைக் கொலைசெய்தவர்கள் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்ற எதற்கும் தயங்கமாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். (16)

அதன்பின், அவன் பெரும் நிதானத்துடனும் அமைதியாகவும் சங்கத்தாரை நோக்கி: “இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப்பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவர்களுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே,

கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்" (அப்போஸ்தலர் 5:35–39) என்றான். (17)

இந்தப் பார்வைகளிலிருந்த நியாயத்தின் தன்மையை ஆசாரியர்கள் கண்டு, கமாலியேலுடன் இசைந்துபோகும்படி கடமைப்படுத்தப்பட்டனர். இருந்தபோதிலும் அவர்களது தவறான எண்ணமும் வெறுப்பும் கட்டுப்படுத்தப்பட முடியாததாக இருந்தது. சீடர்களை அடித்தபின், அவர்களுடைய உயிர்களுக்கு ஆபத்து உண்டாகக்கூடிய விதத்தில் இயேசுவின் பெயரால் பிரசங்கம் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டு, மனவிருப்பமேயில்லாமல் விடுதலைசெய்தனர். "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமான மடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத் திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்"–அப்போஸ்தலர் 5:41–42. (18)

கிறிஸ்து சிலுவையிலறையப்படுவதற்குமுன், சமாதானத்தை தமது சீடர்களுக்கு சாசனம் செய்து கொடுத்திருந்தார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). இந்தச் சமாதானம் உலகத்திற்கு இசைவாக இருப்பதினால் உண்டாகும் சமாதானம் அல்ல; தீமையுடன் சமாதானம் செய்து, கிறிஸ்து ஒருபோதும் சமாதானத்தை விலைக்கு வாங்கவில்லை. கிறிஸ்து சீடர்களிடம் விட்டுச்சென்ற சமாதானம் வெளிப்படையானதைவிட கலகம் எதிர்ப்புகள் ஆகியவைகளுக்கிடையிலும் எப்பொழுதும் தங்கியிருக்கக்கூடியதான உள்ளான சமாதானமாக இருந்தது. (19)

கிறிஸ்து "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்" (மத்தேயு 10:34) என்றார். அவர் சமாதானப் பிரபுவாக

இருந்தபோதிலும், பிரிவினைக்குக் காரணமாக இருந்தார். மனித இருதயங்களில் சந்தோஷத்தின் செய்திகளை அறிவிக்கவும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணும்படியும் வந்தவர், மிக ஆழமாக எரிந்து மனித இருதயத்தில் வலிமைமிக்க வெறியை எழுப்பக்கூடிய எதிர்வாதத்தைத் திறந்தார். “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு” “என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்.” “பெற்றோராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள் உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்” (யோவான் 16:33; லூக்கா 21:12,16) என்றுங்கூட அவர் எச்சரித்திருக்கிறார். (20)

இந்தத் தீர்க்கதரிசனம் ஒரு குறிப்பிடக்கூடியவிதத்தில் நிறைவேறியிருக்கிறது. மனித இருதயங்களில் செயலாற்றப்படும்படி சாத்தானால் வகுக்கப்பட்டுள்ள கோபம், நிந்தனை, கொடூரம் ஆகிய ஒவ்வொன்றும் இயேசுவின் அடியார்களைச் சந்தித்திருக்கின்றன. அது குறிப்பிடக்கூடியவிதத்தில் மறுபடியும் நிறைவேறும். ஏனெனில், மாம்சப் பிரகாரமான இருதயம் இன்னும் தேவப்பிரசன்னத்திற்கு எதிரான பகையாக இருந்து, அதின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாததாக இருக்கும். அப்போஸ்தலர்களின் காலத்தில் உலகம் கிறிஸ்துவின் கொள்கைகளுடன் இசைவற்றதாக இருந்ததைவிட, இன்று அதிகமான இசைவுள்ளதாக இல்லை. அவனைச் சிலுவையில் அறையுங்கள் என்று குரலெழுப்பும்படி தூண்டியிருந்த அதே வெறுப்பு—சீடர்களை உபத்திரவப்படுத்தும்படி நடத்தப்பட்டிருந்த அதே வெறுப்பு—கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடம் இப்பொழுதும் கிரியை செய்கிறது. சிறைவாசம், நாடு கடத்தப்படுதல், மரணம் ஆகியவைகளுக்கு ஆண்களையும் பெண்களையும் இருண்டகாலத்தில் அனுப்பின அதே ஆவி, பரிசுத்த பர்த்தலொமியோவின் படுகொலைக்குத் திட்டந்தீட்டி நடத்தின அதே ஆவி, புதுப்பிக்கப்படாத இருதயங்களில் குரோதமான பலத்துடன் இன்னும் செயலாற்றிக்கொண்டிருக்கிறது. சரியானதற்கும் தவறானதற்கும் இடையில் உள்ள போராட்டத்தில் சத்தியத்தின் வரலாறு எப்பொழுதும் ஆவணமாக உள்ளது. இந்த உலகத்தில் எதிர்ப்பு, அபாயம், பாடுகள் ஆகியவைகளின்முன்தான் எப்பொழுதுமே சுவிசேஷம் அறிவிப்பது முன்கொண்டு செல்லப்பட்டுள்ளது. (21)

கிறிஸ்துவிற்காகக் கடந்த காலத்தில் உபத்திரவங்களை அனுபவித்திருந்தவர்களின் பலம் எது? அது தேவனுடனுள்ள ஐக்கியம்!

பரிசுத்த ஆவியுடனுள்ள ஐக்கியம்! கிறிஸ்துவுடனுள்ள ஐக்கியம்! நிந்தையும் உபத்திரவமும் அநேகரை பூமிக்குரிய நண்பர்களிடமிருந்து பிரித்திருக்கிறது. புயலினால் தாக்கப்பட்டிருந்த ஆத்துமா, சத்தியத்திற்காக நிந்தையை அனுபவித்துக்கெண்டிருக்கும்போது, அதன் இரட்சகரால் நேசிக்கப்பட்டிருப்பதைப்போல ஒருபோதும் அதிகமாக நேசிக்கப்படுவதில்லை. “நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்” (யோவான் 14:21) என்று கிறிஸ்து கூறினார். பூமிக்குரிய நியாயசங்கங்களின் முன் சத்தியத்திற்காக விசுவாசி நிற்கும்போது, அவனருகில் கிறிஸ்து நிற்கிறார். சிறைச்சுவர்களுக்குள் அவன் அடைபட்டிருக்கும்போது, கிறிஸ்து தாமே தம்மை அவனுக்கு வெளிக்காட்டி, அவரது அன்பினால் அவனது இருதயத்தை உற்சாகப்படுத்துகிறார். கிறிஸ்துவிற்காக அவன் மரணத்தை அனுபவிக்கும்போது, அவர்களால் சரீரத்தைக் கொல்லமுடியும் ஆனால் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தமுடியாது. “ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” “நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்”—யோவான் 16:33; ஏசாயா 41:10. (22)

“கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள். பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார். நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடிக்கு, ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.” “அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்; அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்”—சங்கீதம் 125:1-3; 72:14. (23)

“சேனைகளின் கர்த்தர் அவர்களைக் காப்பாற்றுவார்; அவர்கள் பட்சித்து, கவண்கற்களால் கீழ்ப்படுத்திக்கொள்வார்கள்; அவர்கள் குடித்துக் களிப்பினால் ஆரவாரிப்பார்கள்; பானபாத்திரங்கள்போலவும் பலிபீடத்தின் கோடிகளைப்போலவும் நிறைந்திருப்பார்கள். அந்நாளில் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமான மந்தையாகிய அவர்களை இரட்சிப்பார்; அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள்”— சகரியா 9:15,16. (24) ★

# 9

# ஏழு சீடர்கள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 87–96)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 6:1–7.**

“அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்”– அப்போஸ்தலர் 6:1. (1)

ஆதிகால சபை பல வகுப்பினரையும் ஜாதிகளையும் சேர்ந்த ஜனங்களால் ஆக்கப்பட்டிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட நேரத்தில் வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள் (அப்போஸ்தலர் 2:5). எருசலேமில் கூடிவந்திருந்த எபிரெய விசுவாசத்தை உடையவர்களுக்கு மத்தியில் பொதுவாக கிரேக்கர்கள் என்று அறியப்பட்டவர்கள் இருந்தனர். இவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் நீண்ட காலமாக அவநம்பிக்கையும் எதிர்ப்பும்கூட இருந்திருந்தது. (2)

அப்போஸ்தலரின் உழைப்பின்கீழ் மாற்றமடைந்திருந்தவர்கள் மென்மையாக்கப்பட்டவர்களாகவும் கிறிஸ்தவ அன்பினால் ஐக்கியமானவர்களாகவும் இருந்தனர். முன்னைய தவறான எண்ணங்களுக்குப் பதிலாக அனைவரும் ஒருவருடன் ஒருவர் இசைவுள்ளவர்களாக இருந்தனர். இந்த ஒற்றுமை தொடருகின்ற காலம்வரை, சுவிசேஷ சத்தியம் முன்னேறுவதைத் தடைசெய்வதற்கு தனக்கு வல்லமை இருக்காது என்பதை சாத்தான் அறிந்திருந்தான். முன்னைய எண்ணங்களின் பழக்கங்களைத் தனக்கு அனுகூலமாக எடுத்துக்கொண்டு, அந்த நம்பிக்கையினால் ஒற்றுமையின்மையின் மூலக்கூறுகளை சபையில் அறிமுகப்படுத்துவதற்கு அதுவே ஏற்ற அடையாளம் என்று அவன் நம்பினான். (3)

இவ்வாறாகச் சீடர்களின் தொகை பெருகினபோது, முன்பு விசுவாசத்திலிருந்த சகோதரர்களை பொறாமையுடன் பார்க்கின்ற பழக்கமுடையவர்களாகவும், தங்களுடைய ஆவிக்குரிய தலைவர்களின்மீது குற்றம் காண்பவர்களாகவும் இருந்தவர்களில் சந்தேகத்தை எழுப்பிவிடுவதில் சத்துரு வெற்றியடைந்திருந்தான். "கிரேக்கரானவர்கள், ... எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்" விசுவாசிகளுக்கிடையில் பிரிவினையை உண்டுபண்ணும் சத்துருவின் முயற்சிக்கு இடங்கொடுக்காமல் இருப்பதற்காக அதிருப்தியை உண்டுபண்ணக்கூடிய சந்தர்ப்பங்களையெல்லாம் நீக்குவதற்கு இப்பொழுது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதாக இருந்தது, (4)

இயேசுவின் சீடர்கள் அவர்களுடைய அனுபவத்தில் ஒரு நெருக்கடியை அடைந்திருந்தனர். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அப்போஸ்தலர்களின் தலைமையின்கீழ் ஒற்றுமையுடன் உழைத்திருந்ததினால் சுவிசேஷத்தின் தூதுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணி, விரைவாக முன்னேறிக்கொண்டிருந்தது. சபை தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டிருந்தது. இந்த அங்கத்தினர்களின் அதிகரிப்பு பொறுப்பாக இருந்தவர்களின்மீது அதிகமான பாரங்களைக் கொண்டு வந்திருந்தது. ஒரு மனிதனாலோ அல்லது ஒரு குழுவினராலோகூட சபையின் எதிர்காலச் செழுமையை அபாயத்திற்குள்ளாக்காமல் இந்த பாரத்தைச் சுமப்பது முடியாததாக இருந்தது. சபையின் ஆரம்ப நாட்களில் ஒரு சிலரால்மட்டும் மிகவும் விசுவாசத்துடன் சுமக்கப்பட்டிருந்த பொறுப்புக்களை அதற்கும்மேலாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய அவசியம் இருந்தது. இதுவரை அப்போஸ்தலர்கள் தாங்களாகச் சுமந்திருந்த பாரங்களை மற்றவர்கள்மீது வைப்பதினால், சபையில் சுவிசேஷ ஒழுங்கைப் பூரணப்படுத்துவதற்காக அப்போஸ்தலர்கள் இப்போது ஒரு முக்கியமான நடவடிக்கையை எடுத்தாகவேண்டும். (5)

சபையின் செயலாற்றும் சக்திகளை நல்லவிதமாக நிர்வாகம் செய்வதற்கு ஒரு திட்டத்தை வரைய விசுவாசிகளின் கூட்டத்தைக்கூட்டும்படி அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டனர். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பணியை முன்கொண்டு செல்லுவதற்காக சபையின் சகல காரியங்களையும் கவனிப்பதிலிருந்தும், ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கின்றதுபோன்ற சுமைகளிலிருந்தும் ஆவிக்குரிய தலைவர்கள் விடுதலைபெறவேண்டிய நேரம் வந்திருக்கிறது என்று அப்போஸ்தலர்கள் கூறினர். "ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ

ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்"–அப்போஸ்தலர் 6:3,4. இந்த உபதேசம் பின்பற்றப்பட்டது. ஜெபம்செய்து கைகளை வைப்பதினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு மனிதர்கள்—சீடர்கள் என்னும் அவர்களுடைய வேலைகளைச் செய்தவற்கென்று பிரித்து வைக்கப்பட்டனர். (6)

விசேஷமான வேலைகளுக்கென்று ஏழு மனிதர்களை ஏற்படுத்தினது சபைக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம் என்பதை மெய்ப்பித்தது. இந்த உதவிக்காரர்கள் தனிப்பட்ட தேவைகளின்மீதும் அதைப்போலவே சபையின் பொதுவான பொருளாதாரக் காரியங்களிலும் கவனமிக்க ஆலோசனைகள் உடையவர்களாக இருந்தனர். தங்களுடைய நிர்வாக ஆலோசனைகளினாலும் தெய்வபக்திமிக்க உதாரணத்தினாலும் அவர்கள் தங்களுடைய உடன் அதிகாரிகளுக்கும் சபையின் பல காரியங்களையும் மொத்தமாக ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்கும் முக்கியமான உதவியாளர்களாக இருந்தனர். (7)

இந்த ஒழுங்குமுறை தேவன் ஏற்படுத்தின ஒழுங்கின்படி இருந்தது என்பது அதின் உடனடியான நல்ல பலன்களில் காணப்பட்டிருந்தது. தேவவசனம் விருத்தியடைந்தது. சீடருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். சபையின் அங்கத்தினர்கள் அதிகமாவதற்கு அப்போஸ்தலர்களுக்குக் கிடைத்த சுதந்திரமும் அந்த ஏழு உதவிக்காரர்களிடத்திலும் காணப்பட்ட வைராக்கியமும் வல்லமையும் காரணமாக இருந்தது. ஏழைகளின் தேவைகளைக் கவனிப்பதற்கென்று இந்த ஏழு உதவிக்காரர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டனர் என்னும் உண்மை காரணமாக விசுவாசத்தைப் பரிசோதிப்பதிலிருந்து அவர்கள் தவிர்க்கப்பட்டிருக்கவில்லை. அப்படி அல்லாமல் மற்றவர்களுக்கு சத்தியத்தைப் போதிப்பதில் அவர்கள் பூரணமான பெரும் ஆர்வத்துடனும் வெற்றியுடனும் ஈடுபட்டிருந்தனர். (8)

கிறிஸ்துவின் சேவைக்கென்று தங்களை ஒப்புக்கொடுக்க விருப்பமுள்ளவர்களாக கனமும் நேர்மையுமிக்க ஆத்துமாக்கள் எங்கெல்லாம் இருந்ததோ அங்கெல்லாம் ஆசீர்வாதமும் ஒளியுமுடைய மையங்களை ஏற்படுத்துதலென்னும் தொடர்ச்சியாக விரிவடைந்துகொண்டிருந்த பணி ஆதிகால சபையினிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது, சுவிசேஷத்தை அறிவிப்பது உலகளாவியவிதமாக பரவவேண்டியதாக இருந்தது. கிறிஸ்தவ ஐக்கியத்தில் அந்த தூதுவர்கள் ஒற்றுமையாக இல்லாதவரை, தேவனுக்குள் கிறிஸ்துவுடன் ஒன்றாக உள்ளனரென்பதை உலகத்துக்கு வெளிப்படுத்தாதவரை அவர்களால் அவர்களுடைய முக்கியமான ஊழியத்தை நிறைவேற்ற முடியாமலிருந்தது.

அவர்களுடைய தெய்வீகத்தலைவர் பிதாவை நோக்கி: "பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" என்று ஜெபிக்கவில்லையா? "நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது" என்று தமது சீடர்களைப்பற்றி அவர் அறிவிக்கவில்லையா? "ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும்" "நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக," என்று அவர் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்யவில்லையா? (யோவான் 17:11,14,23,21). எந்த ஒருவரால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அவர்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தார்களோ அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் வல்லமையும் அவருடன் நெருக்கமான தொடர்பை வைத்துக்கொள்ளுவதில்தான் சார்ந்திருந்தது. (9)

அவர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டிருக்கும்போதும் பரலோக தூதர்களின் ஒத்துழைப்பை பெற்றிருக்கும்போதும் மட்டுமே தொடர்ந்து பரிசுத்த ஆவியின் வல்லமையைப்பற்றின நம்பிக்கை உடையவர்களாக இருக்கமுடியும். இந்த தெய்வீக ஏதுகரங்களின் உதவியுடன் உலகத்திற்குமுன் அவர்களால் ஒரு ஐக்கிய முன்னணியை வைக்கவும், அந்தகாரத்தின் வல்லமைகளுடன் இடைவிடாமல் போரிடவும் அவர்களால் முடிந்திருந்தது. அவர்கள் ஒற்றுமையுடன் உழைக்கத் தொடரும்போது, அவர்களுக்கு முன்பாகப் பாதையைத் திறந்துகொண்டு, பரலோகத்தின் தூதர்கள் முன்செல்லக்கூடும். சத்தியத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு இருதயங்கள் ஆயத்தமடைந்திருக்கவேண்டும். அப்பொழுது அநேகர் கிறிஸ்துவிற்கென்று ஆதாயப்படுத்தப்படுவார்கள். அவர்கள் ஒற்றுமை உள்ளவர்களாக இருக்கும்வரையில் "சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய்" (உன்னதப்பாட்டு 6:10) சபை முன்னேறிச்செல்லும். முன்னேறிச் செல்லுகின்ற அவளுடைய முன்னேற்றத்தை ஒன்றினாலும் நிறுத்திவைக்கமுடியாது. சபை அவளது தெய்வீக ஊழியமான சுவிசேஷத்தை அறிவிப்பதை மகிமையாக நிறைவேற்றிக்கொண்டு, வெற்றிமேல் வெற்றியடைந்து முன்னோக்கிச் செல்லுவாள். (10)

எருசலேமில் அமைக்கப்பட்ட சபை, மற்ற இடங்களில் உள்ள சபைகளில் சத்தியத்தின் தூதர்கள் சுவிசேஷத்திற்கு மாறுபவர்களை வெற்றியாக ஆதாயம் செய்தவற்கு ஒரு முன்மாதிரியாக இருந்து ஊழியஞ்செய்யவேண்டியதாக இருந்தது. சபையின் பொது நிர்வாகத்தை வகிக்கும் பொறுப்பு எவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ, அவர்கள் "தேவனுடைய மந்தையை ...

இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும்" (1 பேதுரு 5:2,3) சீடர்கள் கனம்பொருந்தினவர்கள் என்னும் சான்றினை உடையவர்களாகவும் இருக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். இந்த மனிதர்கள் அவர்களுடைய நிலையை ஒற்றுமையுடன் சரியான பக்கத்தில் நிறுத்தி, உறுதியுடனும் தீர்மானத்துடனும் இருக்கவேண்டியவர்களாக இருந்தனர். இவ்வாறாக, அவர்கள் மந்தையனைத்தின்மீதும் ஒற்றுமையை உண்டுபண்ணுகின்ற செல்வாக்கை உடையவர்களாக இருப்பார்கள். (11)

பின்னர் ஆதிகால சபையின் வரலாற்றில் உலகத்தின் பல பாகங்களிலும் விசுவாசிகளான அநேக கூட்டத்தினர் சபைகளாக அமைக்கப்பட்டபோது, சபையை நிர்வகிப்பது இசைவான செயல் உள்ளதாக இருக்கும்படி மேலும் பூரணப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு அங்கத்தினரும் தனது பங்கைச் சரியான விதத்தில் செய்யும்படி உபதேசிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த தாலந்தை ஞானமாகப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருந்தனர். சிலர் பரிசுத்த ஆவியின் சிறப்பான அனுக்கிரகத்தைப் பெற்றவர்களாக இருந்தனர். "முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷை களையும்" (1 கொரிந்தியர் 12:28) ஏற்படுத்தினார். ஆனால் இவ்விதமாக உழைக்கும் எல்லா வகுப்பினரும் இசைவுடன் உழைக்கவேண்டியவர்களாக இருந்தனர். (12)

"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர்

நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார். எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்." (1 கொரிந்தியர் 12:4-12). (13)

பூமியிலுள்ள தேவனுடைய சபையின் தலைவர்களாக இருக்கும்படி அழைக்கப்பட்டவர்களின் பொறுப்பு பக்திவிநயமானது. தேவனுடைய ஆட்சி நடைபெற்றிருந்த நாட்களில் மிகவும் அதிகமான பாரத்தை, மோசே ஒருவனாகத் தனியாகச் சுமந்துகொண்டிருந்தபோது, அதின் பாரத்தினால் அவன் விரைவில் நலிந்துபோவதற்கிருந்த நிலையில், பொறுப்புக்களை ஞானமாகப் பகிர்ந்துகொடுக்கும்படி எத்திரோவினால் ஆலோசனை கொடுக்கப்பட்டான். "இப்பொழுது என் சொல்லைக்கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன்; தேவனும் உம்மோடுகூட இருப்பார், நீர் தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இரும்; விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோய், கட்டளைகளையும் பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் நடக்கவேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும். ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும்" என்றான். (14)

சபையில் பொறுப்பான நிலையில் இருக்கும்படி தேவனுடைய ஏற்பாட்டினால் ஏற்படுத்தப்பட்டவர்களுடைய நேரமும் பலமும் சிறப்பான ஞானத்தையும் விசாலமான இருதயத்தையும் கோருகின்ற பாரமிக்க காரியங்களில் செலவிடப்படவேண்டும். சாதாரணமான காரியங்களைக் கையாளுவதற்குத் தகதியானவர்கள் இருக்கும்போது, இந்தக் காரியங்களுக்காக அப்படிப்பட்டவர்களிடம் மேல்முறையீடு செய்வது தேவனுடைய ஒழுங்கிலில்லை. "பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும். இந்தப்பிரகாரம் நீர் செய்வதும், இப்படித் தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், உம்மாலே தாங்கக்கூடும்; இந்த ஜனங்கள் எல்லாரும் தாங்கள் போகும் இடத்துக்குச் சுகமாய்ப் போய்ச் சேரலாம்" என்று எத்திரோ முன்மொழிந்தான். (15)

இந்தத் திட்டத்திற்கு இசைவாக, "மோசே தன் மாமன் சொல்கேட்டு, அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஜனங்கள்மேல் தலைவராக்கினான். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்தார்கள்; வருத்தமான காரியங்களைமாத்திரம் மோசேயினிடத்தில் கொண்டுவந்தார்கள்; சிறிய காரியங்களையெல்லாம் தாங்களே தீர்த்தார்கள்." (யாத்திராகமம் 18:19-26). (16)

பின்பு தலைமைதாங்கிச்செல்லுகின்ற பொறுப்புகளைத் தன்னுடன் பகிர்ந்துகொள்ளும்படி எழுபது மூப்பர்களைத் தெரிந்தெடுத்து, தனக்கு உதவியாளர்களாக இருக்கும்படி மேன்மைமிக்கவர்களையும் நியாயம் செய்வதில் திறமையும் அனுபவமும் உள்ளவர்களையும் தெரிந்தெடுப்பதில் மோசே கவனமுள்ளவனாக இருந்தான். அவர்களை அபிஷேகம் செய்கின்ற நேரத்தில் சபையில் ஞானமுள்ள அதிபதியாக இருப்பதற்குத் தேவையான சில தகுதிகளை விவரித்தான். "அக்காலத்திலே உங்களுடைய நியாயாதிபதிகளை நான் நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரரின் வியாச்சியங்களைக் கேட்டு, இருபட்சத்தாராகிய உங்கள் சகோதரருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள். நியாயத்திலே முகதாட்சிணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கக்கடவீர்கள்; மனிதன் முகத்திற்குப் பயப்படீர்களாக; நியாயத்தீர்ப்பு தேவனுடையது, உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன்" (உபாகமம் 1:16-17) என்றான். (17)

தாவீது அவனுடைய ஆட்சியின் முடிவின்போது, அவனுடைய நாளில் தேவனுடைய பணியின் பாரத்தைத் தாங்கியிருந்தவர்களுக்கு பக்திவிநயமான ஒருபோதனையைக் கொடுத்தான். "கோத்திரங்களின் தலைவரும், ராஜாவைச் சேவிக்கிற வகுப்புகளின் தலைவரும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவுக்கும் ராஜகுமாரருக்கும் உண்டான எல்லா ஆஸ்தியையும் மிருகஜீவன்களையும் விசாரிக்கிற தலைவருமாகிய இஸ்ரவேலின் சகல பிரபுக்களையும், பிரதானிகளையும், பலசாலிகளையும், சகல பராக்கிரமசாலிகளையும் தாவீது எருசலேமிலே கூடிவரச்செய்தான்." "என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம்

அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.” (1 நாளாகமம் 28:1.9). (18)

தலையாய பொறுப்புக்களை வகிக்கும்படியான பதவிக்கு அழைக்கப்பட்ட சாலொமோனுக்கு, தாவீது ஒரு சிறப்பான போதனையைக் கொடுத்தான். “என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்; நீ திடன்கொண்டு அதை நடப்பி என்று சொன்னான்.” (1 நாளாகமம் 28:9,10). (19)

மோசே, தாவீது ஆகியவர்களின் காலத்தில் தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியிலிருந்த அதிபதிகளுக்கு வழிகாட்டுவதற்காக இருந்த அதேவிதமான பக்தியும் நீதியும் நிறைந்த கொள்கைகள் சுவிசேஷ காலத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சபையினை மேற்பார்வைசெய்வதற்கு பின்பற்றப்படவேண்டியதாக உள்ளது. சகல சபைகளிலும் காரியங்களைக் கிரமமாக ஏற்படுத்தும்படி செயலாற்றுவதற்கும், அதிகாரிகளாக இருக்கும்படிப் பொருத்தமானவர்களை அபிஷேகம் செய்வதற்கும் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் தலைமைத்துவத்தில் காணப்படவேண்டியதாக இருந்த மேலான தரத்தை அப்போஸ்தலர்கள் கடைப்பிடித்திருந்தனர். சபையில் தலைமை வகிக்கின்ற பொறுப்பில் இருக்கும்படி அழைக்கப்பட்டவர்களான கண்காணியானவர்கள் “தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானபிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்தபுத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்”—தீத்து 1:7-9. (20)

ஆதிகாலக் கிறிஸ்தவ சபையில் கடைப்பிடிக்கப்பட்டிருந்த ஒழுங்குகள் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை அணிந்துகொண்டிருந்து, சீராகவும்

ஒழுங்குடனும் முன்சென்றிருந்த சேனையைப் போல—முன்செல்லும் தகுதியை உடையதாக இருந்தது. (21)

விசுவாசிகளின் கூட்டத்தினர் நாட்டின் விசாலமான பரப்பில் ஆங்காங்கே பரப்பப்பட்டிருந்தபோதிலும் ஒரே சரீரத்தின் அங்கங்களாக இருந்தனர். அனைவரும் ஒருவருடன் ஒருவர் இசைந்து முன்சென்றிருந்தனர். ஒரு சபையில் பிரிவினை உண்டானபோது, பின்னர் அது அந்தியோகியா சபையிலும் வேறிடங்களிலும் உண்டானபோது, விசுவாசிகளால் தங்களுக்குள் ஒத்துப்போக முடியாமலிருந்தபோது, அப்படிப்பட்ட காரியங்கள் பிரிவினையை உண்டுபண்ணும்படி அனுமதிக்கப்படாமல், வெவ்வேறு சபைகளின் விசுவாசிகள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பிரதிநிதிகள் அப்போஸ்தலர்கள் மூப்பர்களாகிய பொறுப்புமிக்க பதவிகளில் இருந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறாகத் தனிப்பட்ட இடங்களில் இருந்த சபைகளைத் தாக்குகின்ற சாத்தானின் முயற்சிகளை எல்லோரது சார்பிலுமாக உள்ள ஒருமைப்பட்ட நடவடிக்கைகளால் சந்திக்கப்பட்டிருந்தன. இவ்வாறாக, சத்துருவின் சிதறடித்து அழிக்கும் திட்டங்கள் முறியடிக்கப்பட்டன. (22)

“தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது” (1 கொரிந்தியர் 14:33). சபைக் காரியங்களை நடத்துகின்ற கிரமத்தில் ஒழுக்கமும் முறையும் பழைய காலத்திலிருந்ததைவிட இக்காலத்தில் குறைவாக இருக்கக்கூடாதென்று தேவன் முக்கியப்படுத்துகிறார். தேவனுடைய பணியின்மீது அவரது அங்கீகாரத்தின் முத்திரையை அவர் பதிக்கும் விதத்தில் அவரது பணிகள் முழுமையுடனும் சரியான விதத்திலும் கொண்டுசெல்லப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார். தேவ கிருபையாகிய நற்செய்தியை உலகத்திற்குக் கொடுப்பதில் எல்லோரும் ஒன்றாக இணைந்து, ஒவ்வொரு ஏதுகரமும் பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்பட்டதாக இருந்து, கிறிஸ்தவன் கிறிஸ்துவுடனும், சபை சபையுடனும், மனிதக் கருவிகள் தெய்வீகத்துடனும் கூட்டுறவுகொண்டு, ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். (23) ★

# 10

# ஸ்தேவான்—கிறிஸ்துவின் முதல் இரத்தசாட்சி!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 97–102)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 6:5–15;7**

ஸ்தேவான், ஆழ்ந்த பக்தியும் விசாலமான விசுவாசமும் உடையவனான—அந்த ஏழு உதவிக்காரர்களில் முதல் மனிதனாக இருந்தான். அவன் பிறப்பினால் ஒரு யூதனாக இருந்திருந்தபோதிலும், கிரேக்க மொழியைச்பேசி, கிரேக்கர்களின் சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் அறிந்தவனாக இருந்தான். எனவே, கிரேக்க யூதர்களின் ஜெப ஆலயங்களில், சுவிசேஷத்தைப் பிரசங்கம்செய்யும் வாய்ப்பினை உடையவனாக இருந்தான். கிறிஸ்துவின் காரியத்தில் அவன் மிகவும் தீர்மானமானவனாக இருந்து, தனது விசுவாசத்தைத் தைரியமாக அறிவித்திருந்தான். கற்றறிந்த ரபிமார்களும் நியாயப்பிரமாணம்பற்றிய முனைவர்களும் ஒரு பொது விவாதத்தினால் அவன்மீது எளிதில் வெற்றியடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று. அவன் பரிசுத்தஆவியின் வல்லமையுடன் பேசினதுமட்டுமன்றி, தீர்க்கதரிசனங்களின் ஒரு மாணவனாகவும் இருந்தான் என்பதும், நியாயப்பிரமாணம் சம்பந்தப்பட்ட காரியங்களில் கற்றறிந்தவனாகவும் இருந்தான் என்பதும் வெளிப்படையானதாக இருந்தது. அவன் பரிந்துபேசியிருந்த சத்தியத்தை தற்காத்து நின்றிருந்ததுமட்டுமன்றி, தனது எதிரிகளை முற்றிலுமாகத் தோற்கடிக்கவும் செய்திருந்தான். "ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக்கொள்ளுங்கள். உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும்கூடாத வாக்கையும் ஞானத்தையும்

நான் உங்களுக்குக் கொடுப்பேன்” என்னும் இந்த வாக்குத்தத்தம் அவனில் நிறைவேறியது (லூக்கா 21:14–15). (1)

ஆசாரியர்களும் அதிபதிகளும் ஸ்தேவானின் பிரசங்கத்திலிருந்த வல்லமையைக் கண்டபோது, கசப்பான வெறுப்பினால் நிரப்பப்பட்டனர். அவன் அவர்கள்முன்வைத்த சான்றுக்கு இணங்குவதற்குப் பதிலாக, அவனை மரணத்திற்குட்படுத்துவதினால் அவனது குரலை மௌனப்படுத்திவிடலாம் என்று தீர்மானித்தனர். யூதர்கள் சட்டத்தை அவர்களது கைகளில் எடுத்துக்கொண்டு, சிறையில் கைதிகளாக இருந்தவர்களைத் தங்களுடைய சமுதாயத்தின் சம்பிரதாயத்தின் அடிப்படையில் விசாரணைசெய்து, ஆக்கினைக்குட்படுத்திக் கொலைசெய்து, அந்த சம்பவங்களைப்பற்றி ரோம அரசின் அதிகாரிகள் எதுவும் கூறாமலிருப்பதற்காக பல தடவைகளில் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்திருந்தனர். தங்களுக்கு ஆபத்தில்லாத விதத்தில் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை மறுபடியும் தொடரலாம் என்பதில் ஸ்தேவானின் எதிரிகள் சந்தேகப்படாமலிருந்தனர். நடக்கக்கூடிய காரியத்தின் பலனுக்கான பொறுப்பை எற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்து, அதினால் ஸ்தேவானைப் பிடித்து சனகரீம் சங்கத்தின்முன் விசாரணைக்காகக் கொண்டுவந்தனர். (2)

சிறைக்கைதியின் வாதத்தை மறுப்பதற்காகச் கற்றிலுமிருந்த நாடுகளிலிருந்து கற்றிந்த யூதர்கள் கட்டளையால் வரவழைக்கப்பட்டிருந்தனர். தர்சுப்பட்டணத்தானான சவுல், அங்கே இருந்தான். அவன் ஸ்தேவானுக்கு எதிரான நடவடிக்கையில் ஒரு முன்னணிப் பங்கை உடையவனாக இருந்தான். அபாயகரமானதும் பொய்த்தோற்றமானதுமான கோட்பாடுகளை ஸ்தேவான் பிரசங்கம்செய்துகொண்டிருக்கிறான் என்று சொல்லி, தனது பேச்சுத் திறமையையும் ரபிமார்களின் தர்க்கவியலையும் உபயோகித்து மக்களிடம் மனநிறைவை உண்டுபண்ண முயன்றான் அவன். ஆனால் ஸ்தேவானில்—மற்ற ஜாதியினருக்கிடையில் சுவிசேஷத்தைப் பரப்புவதில் தேவனுடைய நோக்கத்தை முழுவதுமாகப் புரிந்திருந்த—ஒருவனைக் கண்டான். (3)

ஸ்தேவானுடைய தெளிவானதும் அமைதியானதுமான ஞானத்தை ஆசாரியர்களும் அதிபதிகளும் மேற்கொள்ள முடியாதவர்களாக இருந்ததினால், அவனை ஒரு உதாரணமாக வைக்கவும், இப்படியாகப் பழிவாங்குதல் அவர்களுடைய வெறுப்பைத் திருப்திப்படுத்தவும், அவனது விசுவாசத்தைப் பின்பற்றும் மற்றவர்களை பயப்படுத்தவும் தடைசெய்யவும் தீர்மானித்தார்கள். அவன் தேவாலயத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் எதிராக தேவதூஷணம் சொன்னதைக் கேட்டதாக பொய்ச்சாட்சி கூறும்படி,

பொய்ச்சாட்சிக்காரர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். "நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவான்" என்று இவன் சொல்லக்கேட்டோம் என்று அந்த சாட்சிகள் அறிவித்தார்கள். (4)

தேவதூஷணம் கூறினான் என்ற குற்றச்சாட்டிற்குப் பதில்கூறுவதற்காக ஸ்தேவான் நியாயாதிபதிகளின்முன் நின்றபோது, ஒரு பரிசுத்தமான ஒளி அவன் முகத்தின்மீது பிரகாசித்தது. "ஆலோசனைசங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன்முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்." இந்த ஒளியைக்கண்ட அநேகர் பயந்து நடுங்கி, தங்களுடைய முகங்களை முக்காடிட்டு மறைத்துக்கொண்டார்கள். ஆனாலும் அந்த அதிபதிகளின் முரட்டுத்தனமான அவநம்பிக்கையும் தவறான எண்ணமும் அசையவில்லை. (5)

ஸ்தேவானின்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளைப்பற்றிக் கேள்வி கேட்கப்பட்டபோது, அவன் தனது பதிலை—தற்காப்பை—அந்த மன்றத்திலிருந்த அனைவரும் கேட்கக்கூடியவிதத்தில்—மிகவும் தெளிவான—கிளர்ச்சியூட்டும் குரலில் கொடுக்கத் தொடங்கினான். அந்த சபையில் இருந்தவர்கள் வாய்மூடி மௌனமாக இருக்கக்கூடிய விதத்திலான வார்த்தைகளின் குரலில், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் வரலாற்றை ஒத்திகைசெய்துகாட்டப் புறப்பட்டான். யூத சமுதாயத்தின் நிலைப்பாட்டைப்பற்றியும், இப்பொழுது கிறிஸ்துவின்லமாக வெளிக்காட்டப்பட்டுள்ள அதின் ஆவிக்குரிய விளக்கத்தைப்பற்றியும், அவன் ஒரு பூரணமான அறிவின் விளக்கத்தைக் காட்டினான். மேசியாவைப்பற்றி மோசே முன்னறிவித்திருந்த வார்த்தைகளை அவன் திரும்ப கூறினான். (6)

"உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப்பண்ணுவார். அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" என்று சொன்னவன் இந்த மோசேயே. இரட்சிப்பிற்காக யூதர்கள் எந்த நியாயப்பிரமாணத்தின்மீது நம்பிக்கைவைத்திருப்பார்களோ அது, இஸ்ரவேலர்களை விக்கிரக ஆராதனையிலிருந்து காப்பாற்றுவதற்குத் தகுதியில்லாததாக இருந்ததென்று காட்டிய அதே நேரத்தில், தேவன் மீதுள்ள தனது ராஜ விசுவாசத்தையும் யூத விசுவாசத்தையும் வெளிப்படையாக எடுத்துக்காட்டினான். யூதவரலாறு முழுவதுடனும் அவன் கிறிஸ்துவை சம்பந்தப்படுத்திக்காட்டினான். சாலொமோன் கட்டின தேவாலயக் கட்டிடம்பற்றியும், சாலொமோன், ஏசாயா ஆகியோரின் வார்த்தைகளைப்பற்றியும் குறிப்பிட்டான்: "ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். வானம் எனக்குச்

சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது; எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது; இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா" என்ற வசனங்களையும் சுட்டிக்காட்டினான் (அப்போஸ்தலர் 7:48–49). (7)

ஸ்தேவான் இந்தக் கட்டத்தை அடைந்தபோது, மக்களுக்கிடையில் ஒரு சந்தடி உண்டாயிற்று. அவன் தேவாலயத்தைப்பற்றிய பேசின அதே விதமாகக் கிறிஸ்துவைத் தீர்க்கதரிசனங்களுடன் சம்பந்தப்படுத்தினபோது, ஆசாரியன் தன்னைத் திகிலடைந்தவன்போல் காட்டி, தனது ஆசாரிய வஸ்திரத்தைக் கிழித்தான். இச்செயல்மூலமாக அவனுடைய குரல் என்றென் றைக்குமாக மௌனப்படுத்தப்படஉள்ளது என்பது ஸ்தேவனுக்கு ஒரு அடையாளமாக இருந்தது. அவனது வார்த்தைகள் சந்தித்த தடையை அவன் கண்டு, தான் தனது கடைசிச் சாட்சியைக் கொடுத்துக்கொண்டிருப்பதாக அறிந்தான். அவன் தனது பிரசங்கத்தின் நடுவிலிருந்தபோதிலும், அதை அவன் திடீரென்று முடித்துவிட்டான். (8)

அவன் இதுவரை தொடர்ந்திருந்த வரலாற்றுத் தொடரைவிட்டு விலகி, கோபாவேசமானவர்களாக இருந்த அவனுடைய நியாயாதிபதிகளிடம் திரும்பி: "வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள் " (அப். 7:51,52) என்று உரத்த சத்தமுடன் கூறினான். (9)

அவனது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் கோபமுடையவர்களானார்கள். மனிதர்களைவிட மோசமானவிதத்தில், இரையின்மீது பாயும் மிருகங்களைப்போல் நடந்து, அவன்மீது தங்கள் பற்களை கடித்துக்கொண்டு பாய்ந்தனர். தன்னைச் சுற்றியிருந்த கொடூரமான முகங்களுக்குமுன், அந்தக் கைதி தனது முடிவை வாசித்தான். ஆனால் அவன் தடுமாறவில்லை. மரணபயம் அவனைவிட்டு நீங்கியிருந்தது. கோபாவேசமடைந்த ஆசாரியர்களும், உணர்ச்சியால் உந்தப்பட்ட கூட்டத்தினரும் அவனுக்கு பயங்கரமானவர்களாகத் தோன்ற வில்லை. அவன் முன்னிருந்த காட்சி, அவனது பார்வையைவிட்டு மறைந்து போயிற்று. பரலோகத்தின் வாசல்கள் அவனுக்குத் திறக்கப்பட்டிருந்தன. அதன் வழியாகப் பார்த்தபோது, அவன் தேவனுடைய பிரகாரத்தின்

மகிமையையும், தமது ஊழியக்காரனை ஏற்றுக்கொள்ளுவதற்காகத் தமது சிங்காசனத்தை விட்டு எழுந்து ஆயத்தமாக நிற்கின்ற கிறிஸ்துவையும் அவன் கண்டான். “அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்” என்று அவன் வியந்து கூவினான். (10)

தன்னுடைய கண்கள் கண்டுகொண்டிருந்த காட்சியை அவன் விவரித்தபோது, அவனை உபத்திரவப்படுத்துபவர்களுக்கு அது தாங்கக் கூடாததாக இருந்தது. அவனுடைய வார்த்தைகளைக் கேட்காமலிருப்பதற்காக, அவர்கள் தங்களுடைய செவிகளைப் பொத்திக்கொண்டு, உரத்த சத்தமிட்டுக்கொண்டு, அவன்மீது பாய்ந்து, ஒருமனப்பட்டு, அவனை நகரத்திற்கு வெளியே இழுத்துச்சென்று கல்லெறிந்தார்கள். “அப்பொழுது கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு, ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச்சொல்லி, நித்திரையடைந்தான்.” ஸ்தோவனின்மீது சட்டப்படியான தண்டனை எதுவும் விதிக்கப்படவில்லை. ஆனால் இந்த வழக்கில் புலனாய்வு எதுவும் செய்யாதிருப்பதற்காக பெரும் தொகைகள் ரோம அதிகாரிகளுக்கு லஞ்சமாகக் கொடுக்கப்பட்டது. ஸ்தேவனின் இரத்தசாட்சியான மரணத்தைக் கண்டிருந்த அனைவரிலும் அது ஆழ்ந்த உணர்த்துதலைக் கொண்டுவந்தது. அவனது முகத்தின்மீது பதிக்கப்பட்டிருந்த தேவனுடைய முத்திரையைப்பற்றிய ஞாபகமும் அவனுடைய வார்த்தைகளும் அவைகளைக் கேட்டிருந்தவர்களின் ஆத்துமாக்களைத்தொட்டு, அதைக் கண்டிருந்தவர்களின் மனங்களில் தங்கி அவன் அறிவித்திருந்த சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தது. அது சபைக்குக் காயத்தை உண்டுபண்ணுகின்ற ஒரு பரீட்சையாக இருந்தது; ஆனால் சவுலுக்குள் மன உணர்த்துதலின் பலனை உண்டுபண்ணினது. அந்த இரத்த சாட்சியின் விசுவாசம், ஒரே சீரான தன்மை ஆகியவைகளையும் அவனது முகத்தின்மீது தங்கியிருந்த மகிமையையும் தன்னுடைய ஞாபகத்திலிருந்து அவனால் நீக்கமுடியவில்லை. (11)

ஸ்தேவானின் விசாரணை, மரணம் ஆகிய காட்சிகளில் ஒரு கட்டுக்கடங்காத ஆர்வம் உடையவனாக இருந்ததுபோல் சவுல் காணப் பட்டிருந்தான். மனிதர்களால் கனவீனப்படுத்தப்பட்டிருந்த அதே நேரத்தில், ஸ்தேவான் தேவனால் கனப்படுத்தப்பட்டான் என்னும் அவனது இரகசியமான மனஉணர்த்துதலினால், அதன்பின் அவன் கோபமடைந்தான். தேவனுடைய சபையை உபத்திரவப்படுத்துவதிலும், கிறிஸ்தவர்களை அவர்களுடைய

வீடுகளுக்குத் தேடிச்சென்று கண்டுபிடித்து வேட்டையாடி சிறைவாசத்திற்கும் மரணதண்டனைக்கும் ஆசாரியர்களிடமும் அதிபதிகளிடமும் ஒப்படைப்பதிலும் சவுல் தீவிரமானவனாக இருந்தான். உபத்திரவப்படுத்துவதை நடப்பிப்பதில் அவனுக்கிருந்த வைராக்கியம், எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பெரும் பயத்தை உண்டுபண்ணுவதாக இருந்தது. இந்தக் கொடூரமான செயலைத் தடுப்பதற்கு ரோம அதிகாரிகள் சிறப்பான எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல், அவர்களுடைய ஆதரவைப்பெற்றுக் கொள்ளுவதற்காக, யூதர்களுக்கு இரகசியமாக உதவியிருந்தனர். (12)

ஸ்தேவானின் மரணத்தின்போது, சவுல் செயல்பட்டிருந்தவிதத்தைக் கருத்தில்கொண்டு, ஸ்தேவானின் மரணத்திற்குப் பின்னர் அவனை சனகரீம் சங்கத்தின் அங்கத்தினராக்கினர்! தேவகுமாரனுக்கு எதிராகக் கலகம்செய்வதில் சிறிதுகாலத்திற்கு அவன் சாத்தானின் கையில் வல்லமையான கருவியாக இருந்தான். ஆனால் இப்பொழுது அவன், எந்த சபையை உடைத்துக்கொண்டிருக்கிறானோ அந்த சபையைக் கட்டுவதற்கு, அந்தக் கடுமை தணியாத உபத்திரவம் செய்பவன்—சபைகளைக் கட்டுவதற்கான வேலையில் ஈடுபடுத்தப்படவேண்டியவனாக இருந்தான். இரத்தசாட்சியாக மரித்த ஸ்தேவானின் இடத்தை நிரப்பவும், அவரது நாமத்தை (இயேசு கிறிஸ்துவின்) பிரசங்கம் செய்யவும், அந்த நாமத்திற்காகப் பாடுகளைச் சகிக்கவும், அவரது இரக்கத்தின்மூலமாக உண்டாகக்கூடிய இரட்சிப்பை தூரமான இடங்களுக்கும் விசாலமான இடங்களுக்கும் பரப்பவும் சாத்தானைவிட வல்லமை உள்ள ஒருவர் சவுலை தேர்ந்தெடுத்தார். (13) ★

# 11

# சமாரியாவில் நற்செய்தி!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 103–111)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 8**

ஸ்தேவானின் மரணத்திற்குப்பின்னர், எருசலேமில் இருந்த விசுவாசிகளுக்கெதிராகக் கட்டுக்கடங்காத உபத்திரவம் எழும்பியது. மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறடிக்கப்பட்டுப்போனார்கள். “சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, ஸ்திரீகளையும் புருஷர்களையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்.” இந்தக் கொடுமையான செயலில், அவனுக்குண்டாயிருந்த வைராக்கியத்தைப்பற்றி அவன் பிற்காலத்தில்: “முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்.... சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய்” அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன் (அப்போஸ்தலர் 26:9–11) என்றான். பவுலாரின் இந்த—சொந்த வார்த்தைகளிலிருந்து, ஸ்தேவான் ஒருவன்மட்டுமே மரணத்திற்குள்ளாக்கப்படவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். (1)

அபாயமிக்க அந்த நேரத்தில், சிலுவையிலறையப்பட்ட இரட்சகரின் மீதுள்ள தனது விசுவாசத்தை அச்சமின்றி அறிக்கை செய்வதற்கு நிக்கொதேமு முன்வந்தான். நிக்கொதேமு சனகரீம் சங்கத்தின் ஒரு அங்கத்தினனாக இருந்து, மற்றவர்களுடன் சேர்ந்து இயேசுவின் ஆச்சரியமான செயல்களை சாட்சியாகக் கண்டபோது, தேவனால் அனுப்பப்பட்டவர் இவர்தான் என்னும் மன உணர்த்துதலினால் தானாகவே ஈர்த்துக்கொள்ளப்பட்டான். அந்தக் கலிலேய ஆசிரியருடனுள்ள அனுதாபத்தை வெளியில்

ஒப்புக்கொள்ளமுடியாத அளவிற்கு அதிகமான அகந்தை உடையவனாக இருந்த அவன், ஒரு இரகசியமான நேர்காணலுக்கு வகைதேடியிருந்தான். இந்த நேர்காணலின்போது, இரட்சிப்பின் திட்டத்தையும் உலகத்திற்கான அவரது ஊழியத்தின் தன்மையைப்பற்றியும் இயேசு அவனுக்கு விவரித்தார். அப்படியிருந்தும்கூட, நிக்கொதேமு தயங்கினான். அவன் சத்தியத்தை தன்னுடைய இருதயத்தில் மறைத்துவைத்திருந்தான். மூன்று வருடங்களுக்கு வெளிப்படையான கனி ஒன்றும் காணப்படாமலிருந்தது; ஆனால் நிக்கொதேமு இயேசுவை மறக்கவில்லை. நிக்கொதேமு பகிரங்கமாக கிறிஸ்துவை அறிக்கைபண்ணாவிடினும், சனகரீம் சங்கத்திலே அவரை அழிக்கும்படி செய்த திட்டங்களையெல்லாம் திரும்பத்திரும்ப தகர்த்துக்கொண்டிருந்தான். கடைசியாக கிறிஸ்து சிலுவையிலே உயர்த்தப்பட்டபோது, ஒலிவ மலையிலே நேர்காணலின்போது, “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்” (யோவான் 3:14,15) என்று தன்னிடம் அவர் பேசியிருந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்தான். இயேசுவில் உலக இரட்சகரை அவன் கண்டான். (2)

இயேசுவை அடக்கம் செய்வதில் உண்டாயிருந்த செலவை நிக்கொதேமு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புடன் பகிர்ந்துகொண்டான். சீடர்கள் தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று வெளிப்படையாகக் காட்டுவதற்குப் பயந்திருந்தனர். ஆனால் நிக்கொதேமுவும் யோசேப்பும் அவர்களுக்கு உதவிசெய்யத் தைரியமாக முன்வந்திருந்தனர். அந்த இருண்ட நேரத்தில், செல்வந்தர்களும் கனமுமிக்கவர்களாக இருந்த மனிதர்களின் உதவி பெருமளவிற்கு அவசியமானதாக இருந்தது. இறந்துபோன அவர்களது ஆண்டவருக்காக, ஏழைகளாக இருந்த சீடர்களால் எதைச் செய்யமுடியாமலிருந்திருக்குமோ—அதை, அவர்கள் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அவர்களுடைய செல்வமும் செல்வாக்கும், ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியவர்களின் தீமைசெய்யும் எண்ணங்களிலிருந்து சீடர்களை பெருமளவிற்குப் பாதுகாத்திருந்தன. (3)

குழந்தைப் பருவத்திலிருந்த சபையை அழிப்பதற்கு இப்பொழுது யூதர்கள் முயன்றுகொண்டிருந்தபோது, அதனைப் பாதுகாப்பதற்கு நிக்கொதேமு முன்வந்தான். அதற்குமேல், எச்சரிப்புக்களும் கேள்விகளும் வந்திருந்தபோதிலும், மேலான சபையைத் தாங்கவும், சுவிசேஷப் பணியை முன்கொண்டுசெல்லவும், அவன் தனது செல்வத்தினால் உதவி செய்திருந்தான். கடந்துசென்ற நாட்களில் அவனுக்கு மரியாதை செலுத்தியிருந்தவர்கள்,

இப்பொழுது அவனைப் பரிகசித்து உபத்திரவப்படுத்தினார்கள். இந்த உலகப் பொருட்களில் அவன் தரித்திரனானான்; அப்படியிருந்தபோதிலும், அவனது விசுவாசத்திலிருந்து அவன் தடுமாறவில்லை. (4)

எருசலேமிலிருந்த சபையின்மீதுண்டான உபத்திரவம் சுவிசேஷத்தின் பணிக்கு ஒரு உத்வேகத்தைப் பெரும் பலனாகக் கொடுத்தது. அந்த இடத்திலிருந்த தேவவசனத்தின் ஊழியத்திற்கு வெற்றி உண்டாயிருந்தது. உலகமனைத்திற்கும் செல்லுங்கள் என்னும் இரட்சகரின் கட்டளையை நினைவில் வைக்காமல், சீடர்கள் எருசலேமிலேயே தரித்திருக்கக்கூடிய ஒரு அபாயம் இருந்தது. தீவிரமான சேவையினால் மட்டுமே தீமையைத் தடுப்பதற்கான பலம் கிடைக்கிறது என்பதை மறந்தவர்களாக, எருசலேமிலுள்ள சபையை எதிரியின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதைவிட முக்கியமான வேலை எதுவும் அவர்களுக்கு இல்லையென்று எண்ணத்தொடங்கினார்கள். சுவிசேஷத்தைக் கேட்டிராத மற்றவர்களுக்காக ஊழியம்செய்யும்விதத்தில், அவரது பிரதிநிதிகள் அயல்நாடுகளுக்குச் சிதறிப்போகும்படி அவர், அவர்கள்மீது உபத்திரவம் வருவதற்கு அனுமதித்தார். எருசலேமிலிருந்து விரட்டப்பட்ட விசுவாசிகள் எங்கும் சுற்றித்திரிந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். (5)

“ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி ... உபதேசம்பண்ணுங்கள்” (மத்தேயு 28:19,20) என்று இரட்சகரால் கட்டளை பெற்றிருந்தவர்களுக்கிடையில், வாழ்க்கையின் கீழான நிலைமையிலிருந்த அநேகர் இருந்தனர். இவர்கள் தங்களுடைய கர்த்தரை நேசிக்கக் கற்றிருந்த ஆண்களாகவும் பெண்களாகவும், அவருடைய சுயநலமற்ற ஊழியத்தின் உதாரணத்தைப் பின்பற்றும் தீர்மானத்தை உடையவர்களாகவும் இருந்தனர். இரட்சகரின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, அவருடனிருந்த சீடர்களிடத்திலும், அதேவிதமாக இந்தக் கீழ்மட்டத்திலுள்ளவர்களிடத்திலும், விலைமதிப்புமிக்க நம்பிக்கை ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின்மூலமாக, உண்டாகக்கூடிய இரட்சிப்பு என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியை, அவர்கள் உலகத்திற்கு எடுத்துச்செல்லவேண்டியவர்களாக இருந்தார்கள். (6)

உபத்திரவத்தின்மூலமாக சிதறடிக்கப்பட்டபோது, ஊழிய வாஞ்சையினால் நிரப்பப்பட்டவர்களாக அவர்கள் முன்சென்றனர். அவர்கள் தங்களுடைய ஊழியத்தின் பொறுப்பையும் உணர்ந்திருந்தனர். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருந்த உலகத்திற்குக் கொடுக்கும்படி, அவர்களது கரங்களில் ஜீவ அப்பம் இருந்ததை அவர்கள் அறிந்திருந்தனர். தேவையுள்ள அனைவருக்கும் இந்த ஜீவ அப்பத்தைப் பிட்டுக்கொடுப்பதற்கு, அவர்கள்

கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டவர்களாக இருந்தனர். கர்த்தர் அவர்கள்மூலமாகச் செயலாற்றினார். அவர்கள் எங்கெல்லாம் சென்றிருந்தார்களோ, அங்கெல்லாம் நோயாளிகள் சுகப்படுத்தப்பட்டனர்; ஏழைகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டிருந்தது. (7)

எருசலேமிலிருந்து துரத்தப்பட்டவர்களில், ஏழு சீடர்களில் ஒருவனான பிலிப்புவும் இருந்தான். “அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டும் கண்டும், அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களைவிட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.” (8)

யாக்கோபின் கிணற்றினருகில், கிறிஸ்துவுடன் பேசியிருந்த சமாரிய ஸ்திரீக்கான கிறிஸ்துவின் தூது கனிகொடுத்திருந்தது. அவரது வார்த்தைகளைக் கவனித்திருந்த ஸ்திரீ அதற்குப்பின், அந்த நகரத்து மனிதர்களிடத்திற்குச் சென்று, “நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.” அவர்கள் அவளுடன் சென்று, இயேசு பேசியதைக்கேட்டு, அவரை நம்பினார்கள். அவர்கள் இன்னும் அதிகமாகக் கேட்கவேண்டுமென்ற ஆவலில், தங்களுடன் அவர் தங்கியிருக்கவேண்மென்று அவரிடம் மன்றாடினார்கள். அவர் அவர்களுடன் இரண்டு நாட்கள் தங்கினார். “அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்தார்கள்.” (9)

அவருடைய சீடர்கள் எருசலேமிலிருந்து துரத்தப்பட்டபோது, அவர்கள் சமாரியாவை ஒரு பாதுகாப்பான அடைக்கலப்பட்டணமாகக் கண்டார்கள். சுவிசேஷத்தின் இந்தத் தூதர்களை சமாரியர்கள் வரவேற்றனர். யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறினவர்கள், அவர்களது கசப்பான சத்துருக்களுக்கிடையிலிருந்து விலைமதிப்புமிக்க ஒரு அறுவடையை ஒன்றுசேர்த்தார்கள். (10)

சமாரியாவில் பிலிப்புவின் பணி, பெரும் வெற்றியினால் குறிப்பிடப்பட்டது. இதனால் தைரியமடைந்த அவன், உதவிக்காக எருசலேமிலிருந்து மனிதர்களை அழைக்க ஆட்களை அனுப்பினான். “நீங்கள் எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” (அப்போஸ்தலர் 1:8)

என்னும் கிறிஸ்துவின் வார்த்தைகளின் பொருளை, அப்போஸ்தலர்கள் இப்பொழுது பூரணமாக உணர்ந்துகொண்டனர். (11)

பிலிப்பு இன்னும் சமாரியாவிலிருந்தபோது, "நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ" என்று ஒரு பரலோகத் தூதன் அவனை இயக்கினான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அந்த அழைப்பைப்பற்றி அவன் கேள்வி கேட்கவும் இல்லை; அவன் கீழ்ப்படிவதற்குத் தயங்கவுமில்லை; ஏனெனில், தேவனுடைய சித்தத்திற்கு இசைந்திருக்கவேண்டும் என்ற பாடத்தை அவன் கற்றிருந்தான். (12)

"அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து, ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்." இந்த எத்தியோப்பிய மனிதன், நற்கீர்த்தியும் பெரும் செல்வாக்கையும் உடையவனாக இருந்தான். கிறிஸ்தவத்திற்கு மாறினால், அவன் பெற்றுக்கொண்ட ஒளியை மற்றவர்களுக்குக் கொடுப்பான் என்றும், சுவிசேஷத்திற்குச் சாதகமான பலத்த செல்வாக்கைப் பயன்படுத்துவான் என்றும் தேவன் கண்டிருந்தார். ஒளியைத் தேடியிருந்த இவனைத் தூதர்கள் கவனிக்கவே, அவன் இரட்சகரிடமாக இழுக்கப்பட்டுக்கொண்டிருந்தான். பரிசுத்தஆவியின் ஊழியத்தினால், ஒளியினிடத்திற்கு நடத்தக்கூடிய ஒருவனுடன் தொடர்புகொள்ளும்படி கர்த்தர் அவனைக் கொண்டுவந்தார். (13)

பிலிப்பு அந்த எத்தியோப்பியனிடத்திற்குச்சென்று, அவன் வாசித்துக் கொண்டிருந்த தீர்க்கதரிசனத்திற்கு விளக்கம் கொடுக்கும்படி நடத்தப்பட்டான். "ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம்

எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும் என்பதே.” (14)

“மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.” (15)

வேத வாக்கியங்கள் அவனுக்கு விளக்கப்பட்டபோது, அவனுடைய இருதயம் ஆர்வத்தினால் கிளர்ச்சியடைந்து, சீடன் பேசிமுடித்தபோது, கொடுக்கப்பட்ட ஒளியை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தது. சுவிசேஷத்தை மறுப்பதற்கான ஒரு சாக்குப்போக்காக, மிகவும் மேலான தனது உலகப்பிரகாரமான நிலையை அவன் வைக்கவில்லை. “இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியுமாக இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.” (16)

“அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரியும் அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். ஆனால் பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம்பண்ணி, செசரியாவுக்கு வருகிறவரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தான்.” (17)

தேவனுடைய வார்த்தையைக்கேட்டு, அவர் அனுப்பும் எந்த இடத்திற்கும் செல்லக்கூடிய, பிலிப்பைப் போன்ற மிஷனரிமார்களால் போதிக்கப்பட அவசியமாக உள்ள, பெரும் வகுப்பினரின் பிரதிநிதியாக அந்த எத்தியோப்பியன் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறான். வேதவாக்கியங்களின் மெய்யான முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளமுடியாதவர்களாக, வேதவாக்கியத்தை வாசித்துக்கொண்டிருக்கின்ற அநேகர் உள்ளனர். (18)

உலகமுழுவதிலும் ஆண்களும் பெண்களும் துயரமிக்க ஏக்கத்துடன் பரலோகத்தை நோக்கிக்கொண்டிருக்கின்றனர். ஒளிக்காகவும் கிருபைக்காகவும்

பரிசுத்த ஆவிக்காகவும் ஏங்கிக்கொண்டிருக்கும் ஆத்துமாக்களிடமிருந்து ஜெபங்களும், கண்ணீர்களும், விசாரிப்புகளும் மேல்நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. இராஜ்ஜியத்திற்குள் சேர்க்கப்படுவதற்காகவே, அதன் எல்லைக்கோட்டில் அநேகர் காத்துக்கொண்டிருக்கின்றனர். (19)

சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருந்து, ஒளியைத் தேடிக்கொண்டிருந்த ஒருவனிடத்திற்குப் பிலிப்புவை ஒரு தூதன் வழிநடத்தியிருந்தான். இன்று எந்த ஊழியக்காரர்கள், தங்களுடைய நாக்குகளைப் பரிசுத்தப்படுத்தவும், இருதயங்களைப் பயன்படுத்தி மேன்மைப்படுத்தவும், பரிசுத்தஆவியை அனுமதிக்கின்றார்களோ, அவர்களது அடிச்சுவடுகளுக்கு தூதர்கள் வழிகாட்டுவார்கள். பிலிப்புவினிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்த தூதன், எத்தியோப்பியனுக்கான ஊழியத்தைத் தானாகவே செய்திருந்திருக்கமுடியும்; ஆனால் இது தேவன் செயலாற்றும் வழி அல்ல; மனிதர்கள் தங்களுடைய உடன் மனிதர்களுக்காகப் பணியாற்றவேண்டும் என்பது அவருடைய திட்டமாக இருக்கிறது. (20)

முதல் சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அறக்கட்டளையில் காலம் நெடுகிலும் உள்ள விசுவாசிகள் பங்குபெற்றுள்ளனர். சுவிசேஷத்தைப் பெற்றிருக்கும் ஒவ்வொருவரும், பரிசுத்தமான சத்தியத்தை உலகத்திற்குக் கொடுக்கும்படி அதனைப் பெற்றிருக்கின்றனர். தேவனுக்கு விசுவாசமுள்ள ஜனங்கள் யாவரும், எப்பொழுதும் தீவிரமாகச் செயல்படும் விசுவாசிகளாக இருந்திருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய ஆதாரங்களையெல்லாம் அவர்களுடைய நாமத்தின் கனத்திற்கென்று அர்ப்பணம்செய்து, அவர்களது தாலந்துகளையும் அவருடைய சேவைக்கென்று ஞானமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். (21)

கடந்த காலத்தில் சுயநலமற்றவர்களாகக் கிறிஸ்தவர்கள் செய்திருந்த ஊழியம், நமக்கு ஒரு பொருட்பாடமாகவும் ஏவுதலாகவும் இருக்க வேண்டும். நற்காரியங்களைச் செய்வதில், தேவனுடைய சபையின் அங்கத்தினர்கள் வைராக்கியமுடையவர்களாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்கள் உலகப்பிரகாரமான ஆசைகளை விட்டுவிலகி, நன்மைசெய்கிறவராக எங்கும் சுற்றித் திரிந்தவரின் அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும். அனுதாபம், மனஉருக்கம் ஆகியவைகளால் நிறைக்கப்பட்ட இருதயத்துடன், உதவி தேவையானவர்களுக்கும் பாவிகளுக்கும் இரட்சகரின் அன்பைப்பற்றிய அறிவைக்கொண்டுவந்து, ஊழியம் செய்யவேண்டியவர்களாக உள்ளனர். அப்படிப்பட்ட வேலை கடினமான முயற்சியை உடையதாக இருக்கிறது. ஆனால் அது செல்வமிக்க பரிசைக்கொண்டுவருகிறது. நோக்கத்தில் உண்மையுள்ளவர்களாக அதில் ஈடுபடுபவர்கள், இரட்சகருக்காக

ஆத்துமாக்கள் ஆதாயம்செய்யப்பட்டிருப்பதைக் காண்பார்கள்; ஏனெனில் தெய்வீக ஏற்பாட்டை நடைமுறையாகச் செயல்படுத்துவதில் உண்டாகும் செல்வாக்கு தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. (22)

இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக முன்செல்லுகின்ற பொறுப்பு, அபிசேஷகம்பண்ணப்பட்ட ஊழியக்காரரின்மீதுமட்டும் தங்கியிருப்பதில்லை. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள ஒவ்வொருவரும் அவர்களுடைய உடன் மனிதர்களின் இரட்சிப்பிற்காக ஊழியம்செய்யும்படி அழைக்கப்பட்டுள்ளனர். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக"—வெளி. 22:17. இந்த அழைப்பைக் கொடுக்கும் பொறுப்பு, சபை முழுவதையும் உட்படுத்துகிறது. இந்த அழைப்பைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், வாருங்கள் என்னும் தூதை மலைகளிலிருந்தும் பள்ளத்தாக்குகளிலிருந்தும்கூறி, எதிரொலிக்கச்செய்யவேண்டும். (23)

ஆத்துமாக்களை இரட்சிக்கின்ற பணி, ஊழியக்காரரை மட்டுமே சார்ந்ததாக இருக்கிறது என்று யூகிப்பது சாவுக்கேதுவான ஒரு தவறாக இருக்கிறது. திராட்சைத் தோட்டத்தின் எஜமானர், தாழ்மையும் அர்ப்பணிப்புமுள்ள எந்த ஒரு விசுவாசியின்மீது ஆத்துமாக்களைப்பற்றிய பாரத்தை வைத்திருக்கிறாரோ அந்த மனிதனுக்கும், கர்த்தர் எவர்கள்மீது பெரும் பொறுப்புக்களை வைத்திருக்கிறாரோ அவர்களுக்கும் மற்ற விசுவாசிகளும் நிர்வாகிகளும் தைரியத்தைக் கொடுக்கவேண்டும். இரட்சகரின் கட்டளை அவரது நாமத்தின்மீது விசுவாசமுள்ள அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தேவனுடைய சபையின் தலைவர்களாக நிற்பவர்கள் உணரவேண்டியவர்களாக உள்ளனர். தலைகளின்மீது கைவைத்து ஊழியத்திற்கென்று பிரதிஷ்டைசெய்யப்படாத அநேகரை, தேவன் அவருடைய திராட்சைத் தோட்டத்திற்கு அனுப்புவார். (24)

இரட்சிப்பின் தூதைக் கேட்டிருக்கின்ற—நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் வேலைசெய்யாதவர்களாக சந்தை வெளிகளில் உள்ளனர். இவர்கள் ஊழியத்தின் ஏதாவதொரு பகுதியில் ஈடுபடுத்தப்படவேண்டும். "நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன" என்று இவர்களிடம் கிறிஸ்து கூறிக்கொண்டு, "நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப்போங்கள்" (மத்தேயு 20:6,7) என்று மேலும் கூறுகிறார். இந்த அழைப்பிற்கு அநேகர் மறுமொழி கொடுக்காமல் இருப்பது ஏன்? ஏனெனில், அவர்கள் தங்களுக்குள்ளாக அதனைச் சாக்குப்போக்காக நினைக்கின்றனர். அர்ப்பணம் செய்துள்ள, ஆயிரக்கணக்கான மனிதர்களால், பிரசங்கமேடைக்கு வெளியில் செய்யப்படவேண்டிய பெரும் பணி இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்களாக. (25)

ஒவ்வொருவரும் தங்களுடைய திறமைக்குத் தக்கபடி, அவருக்கென்று பணியாற்றுவதற்கு சபை முழுவதையும் ஊழியத்தின் ஆவி பற்றிக்கொள்ளவேண்டுமென்று நீண்டகாலமாக தேவன் காத்திருக்கிறார். தேவனுடைய சபையின் அங்கத்தினர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை, தேவையாக களங்களிலும்—வீட்டிலும்—நாட்டிலும் சுவிசேஷ ஊழியத்தின் நிறைவாகச் செய்யும்போது, விரைவில் உலகம் முழுவதும் எச்சரிக்கப்பட்டிருக்கும்; அப்பொழுது கர்த்தராகிய இயேசு வல்லமையுடன் பூமிக்குத் திரும்பிவருவார். “ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்”—மத்தேயு 24:14. (26) ★

# 12

# உபத்திரவப்படுத்தியவன் ஊழியக்காரனாக மாறினான்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 112–122)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 9:1–18**

**சு**விசேஷத்தை அறிவிப்பதில் உண்டாயிருந்த வெற்றியினால் அதை முழுமையாக எதிர்ப்பதற்காக எழுப்பப்பட்டிருந்த யூதத்தலைவர்களுக்கு மத்தியில், முக்கியமானவனாக இருந்தவன் தர்சுபட்டணத்தானான சவுல் என்பவன். பிறப்பினால் அவன் ரோம நாட்டுப்பிரஜையாக இருந்தாலும், வம்சாவளியில் அவன் இஸ்ரவேலின் பென்யமீன் கோத்திரத்தானாக, "எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத் திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவனாக" இருந்தவன் (பிலிப்பியர் 3:5–6). சிறப்பான எதிர்காலத்தையுடைய ஒரு இளைஞனாக அவன் ரபிமார்களால் கருதப்பட்டிருந்தான். பழைய விசுவாசத்தைப் பாதுகாக்கும் திறமையும் வைராக்கியமுமுள்ள ஒரு பாதுகாவலனாக அவன் விளங்குவான் என்று அவன்மீது மேலான நம்பிக்கையை அவர்கள் பேணியிருந்தனர். சனகரீம் சங்கத்தின் அங்கத்தினராக அவன் உயர்த்தப்பட்டது, அவனை வல்லமைமிக்க ஒரு பதவியில் வைத்தது. (1)

ஸ்தேவானைப்பற்றிய விசாரணையிலும் தண்டனையிலும் சவுல் முக்கியமான பங்கை வகித்திருந்தான். அந்த இரத்தசாட்சியிடம் காணப்பட்டிருந்த குறிப்பிடப்படும்படியான தேவப்பிரசன்னத்தின் சான்றுகள், இயேசுவின் அடியார்களுக்கு எதிராக அவன் கடைப்பிடித்திருந்த காரியத்தினுடைய நீதியின்மீது சந்தேகப்படும்படி சவுலை நடத்தினது; அவனது மனம் ஆழமாகக் கலக்கப்பட்டிருந்தது. அவன் எவர்களுடைய ஞானத்தின்மீதும் நியாயத்தின்மீதும் முழு நம்பிக்கை வைத்திருந்தானோ,

அந்த ஆசாரியர்கள், அதிபதிகளின் வாதங்கள் ஸ்தேவானைக்குறித்து: அவன் தேவதூஷணம் கூறுகிறான் என்றும், இரத்தசாட்சியான அவன் பிரசங்கித்த கிறிஸ்து ஒரு வேஷதாரி என்றும் குறிப்பிட்டதனால், பரிசுத்தமான பதவிகளில் ஊழியம் செய்துகொண்டிருப்பவர்கள் சரியானவர்களாக இருக்கவேண்டும் என்னும் மனத்திருப்தியை முடிவில் அவனுக்குள் உண்டுபண்ணினது. (2)

கடுமையான பரீட்சை இல்லாமல், சவுல் இந்த முடிவிற்கு வரவில்லை. ஆனால் முடிவில் அவனது கல்வி, தவறான எண்ணம், வயதுசென்ற ஆசிரியர்களின்மீது அவன் வைத்திருந்த மரியாதை, தனது பிரசித்தத்தின்மீதிருந்த அகந்தை ஆகியவை அவனை மனசாட்சியின் குரலுக்கும் தேவகிருபைக்கும் எதிராகக் கலகத்தைத் தழுவச்செய்தது. ஆசாரியர்களும் வேதபாரகர்களும் சரியானவர்கள் என்னும் முழுமையான முடிவை எடுத்துக்கொண்டு, இயேசுவின் சீடர்களால் போதிக்கப்பட்டிருந்த கோட்பாடுகளை எதிர்ப்பதில் மிகவும் கசப்புள்ளவனானான். இயேசுவின்மீது வைத்த விசுவாசத்திற்காகவே, பரிசுத்தமான ஆண்களையும் பெண்களையும், சிலரை சிறைவாசத்திற்கும் சிலரை மரண தண்டனைக்கும் உட்படுத்திய நியாயசங்கத்திற்கு இழுத்துக்கொண்டுவந்த அவனுடைய செயல், புதிதாக அமைக்கப்பட்டிருந்த சபைக்குத் துயரத்தைக் கொண்டு வந்து, அநேகர் பாதுகாப்பைத்தேடி ஓடிப்போவதற்கும் காரணமாக இருந்தது. (3)

இந்த உபத்திரவத்தினால், எருசலேமிலிருந்து “சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.” அவர்கள் சென்றிருந்த நகரங்களுக்கு மத்தியில் தமஸ்கு நகரமும் ஒன்றாக இருந்தது. புதிய விசுவாசமானது இங்கு அநேகரை மாற்றியது. (4)

விழிப்புமிக்க முயற்சியினாலும், கடினமான உபத்திரவத்தினாலும் இந்த மதப்புரட்டை அமர்த்திவிடலாம் என்று ஆசாரியர்களும் அதிபதிகளும் நம்பினார்கள். புதிய சோதனைக்கு எதிராக, முடிவாக எருசலேமில் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்போன்ற நடவடிக்கையை, மற்ற இடங்களிலும் கொண்டுசெல்லவேண்டும் என்பதை இப்பொழுது அவர்கள் உணர்ந்தனர். தமஸ்குவில் செய்யப்படவேண்டும் என்று அவர்கள் விரும்பின இந்தச் சிறப்பான பணிக்குத் தனது சேவையைக் கொடுக்க சவுல் முன்வந்தான். “சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய், இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.” இப்படியாக, “நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதி-

காரமும் உத்தரவும் பெற்று" (அப்போஸ்தலர் 26:12) வாலிப வயதின் பலத்துடனும் ஊக்கத்துடனும், தவறான வைராக்கியத்தினைப்பற்றிய தீவிரத்துடனும், தர்சு பட்டணத்தானாகிய சவுல் நினைவில் நிற்கக்கூடிய அந்தப் பயணத்தை மேற்கொண்டான். மாறுபட்ட நிகழ்ச்சிகளானது அவனது வாழ்க்கையின் போக்கை மாற்றவேண்டியதாக இருந்த பயணத்தை அவன் மேற்கொண்டான். (5)

அந்தப் பயணத்தின் கடைசிநாளில், மத்தியான வேளையில், களைப்புற்ற அந்தப் பயணிகள் தமஸ்குவை நெருங்கியபோது, அவர்கள், சுற்றிலுமிருந்த மலைகளிலிருந்து வந்த குளிர்ச்சிமிக்க ஓடைகளின் நீரினால், செழிப்புமிக்க நீண்ட நிலப் பரப்புக்களையும் அழகிய தோட்டங்களையும், பழமுதிர்ச்சோலைகளையும் காட்சியாகக் கண்டனர். பாழடைந்த தரிசு நிலங்களின் வழியாக மேற்கொண்டிருந்த நீண்டதூரப் பயணத்திற்குப்பின் அப்படிப்பட்ட காட்சிகள் உண்மையாகவே புத்துணர்வை உண்டுபண்ணுபவையாக இருந்தன. சவுல் அவனது தோழர்களுடன் சேர்ந்து, கனிதரும் சமவெளிகளையும் கீழே இருந்த அழகிய பட்டணத்தையும் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தபோது, "திடீரென்று" அவன் பின்பு அறிவித்துபோல, "சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனேகூடப் பிரயாணம்பண்ணினவர்களையும் சுற்றி" (அப்போஸ்தலர் 26:13) பிரகாசிக்கக் கண்டான். அந்த ஒளி, அழிவிற்குரிய கண்களால் பார்க்கமுடியாத அளவிற்கு, அதிக மகிமையானதாக இருந்தது. சவுல் குருடனாக்கப்பட்டு—திகைத்து, தரையில் சாஷ்டாங்கமாக விழுந்தான். (6)

அந்த ஒளி அவர்களைச்சுற்றிப் பிரகாசித்துக்கொண்டிருந்தபோது: "சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரெயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" (அப்போஸ்தலர் 26:14) என்றார். (7)

பயத்தினால் நிறைந்து, அந்த ஒளியின் பிரகாசத்தினால் குருடாகிப்போன சவுலின் தோழர்கள் ஒரு குரலைக் கேட்டார்கள்; ஆனால் ஒரு மனிதனையும் காணவில்லை. ஆனால் பேசப்பட்ட வார்த்தைகளின் பொருளையும், அவனுடன் பேசினவர்—தேவகுமாரன் என்பதையும் சவுல் தெளிவாகப் புரிந்துகொண்டான். அவனுக்குமுன் நின்றிருந்த மகிமைமிக்க ஒருவரில், அவன் சிலுவையில் அறையப்பட்ட ஒருவரைக் கண்டான். தாக்கப்பட்ட அந்த யூதனின் ஆத்துமாவின்மீது இரட்சகருடைய முகத்தின் சொரூபம் என்றென்றைக்குமாகப் பதிக்கப்பட்டது. பேசப்பட்ட வார்த்தைகள்

திடுக்கிடச் செய்யும் வல்லமையுடன் அவனது இருதயத்தைச் சென்றடைந்தது. அவனது கடந்தகால வாழ்க்கையிலிருந்த அறியாமையையும் தவறையும், பரிசுத்த ஆவியின் அறிவூட்டுதலின் தற்போதைய அவசியத்தையும் வெளிப்படுத்திக்கொண்டு, இருளடைந்திருந்த அவனது மனத்தின் அறைகளில், ஒளி வெள்ளம் பாய்ச்சப்பட்டது. (8)

இயேசுவின் அடியார்களை உபத்திரவப்படுத்துவதினால், உண்மையில் சாத்தானின் வேலையைதான் செய்துகொண்டிருக்கிறேன் என்பதை இப்பொழுது சவுல் கண்டான். சரி என்பதைப்பற்றிய அவனது மன உணர்த்துதலும் அவனது சொந்தச் செயலும், அவன் ஆசாரியர்களின்மீதும் அதிபதிகளின்மீதும் வைத்திருந்த உள்ளடக்கமான நம்பிக்கையைப் பெருமளவிற்கு ஆதாரமாகக் கொண்டதாக இருந்திருந்தது என்பதை அவன் கண்டான். உயிர்த்தெழுதலின் சம்பவமானது சீடர்களின் கலைத்திறன்மிக்க கற்பனை என்று அவர்கள் கூறியபோது, அவன் அவர்களை நம்பியிருந்தான். இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டவராக—இயேசு—தாமே நின்றபோது, சீடர்கள் உரிமைபாராட்டியிருந்தவைகளில் இருந்த உண்மையைப்பற்றி சவுல் மனத் தெளிவை உடையவனாக மாற்றப்பட்டான். (9)

பரலோக ஒளி, ஒளிப்படுத்திய அந்த நேரத்தில், குறிப்பான விதத்தில்—விரைவாக—சவுலின் மனம் செயல்பட்டது. பரிசுத்த எழுத்துக்களில் இருந்த தீர்க்கதரிசன ஆவணங்கள் அவனது புரிந்து கொள்ளுதலுக்கென்று திறக்கப்பட்டன. யூதர்கள் இயேசுவை நிராகரித்தது, அவர் சிலுவையில் அறையப்பட்டது, உயிர்த்தெழுந்து பரமேறிச்சென்றது ஆகிய யாவும் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்ததையும் அவர்தான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த மேசியா என்பதையும் அவனுக்கு மெய்ப்பிப்பதைக் கண்டான். ஸ்தேவான் இரத்தசாட்சியாகவிருந்த நேரத்தில், அவன் செய்த பிரசங்கம் சவுலின் மனத்திற்குள் வலுவுடன் கொண்டுவரப்பட்டது. “அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்” (அப்போஸ்தலர் 7:55–56) என்றபோது, அந்த இரத்தசாட்சி உண்மையாகவே தேவனுடைய மகிமையைக் கண்டிருந்தான் என்பதை உணர்ந்தான். இந்த வார்த்தைகளைத் தேவதூஷணமென்று ஆசாரியர்கள் கூறியிருந்தனர்; ஆனால் அவை உண்மை என்பதை சவுல் இப்பொழுது அறிந்தான். (10)

உபத்திரவம் செய்யும் ஒருவனுக்கு இவை அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு வெளிப்படுத்தலாக இருந்தது! வாக்குத்தத்தம்செய்யப்பட்ட மேசியா நசரேயனாகிய இயேசுவாக இந்த பூமிக்கு வந்திருந்தார் என்பதையும், அவர் எவர்களை இரட்சிப்பதற்காக வந்திருந்தாரோ அவர்களால், நிராகரிக்கப்பட்டு,

சிலுவையிலறைப்பட்டார் என்பதையும் சவுல் இப்பொழுது நிச்சயமாக அறிந்துகொண்டான். இரட்சகர் கல்லறையிலிருந்து வெற்றியுடன் எழுந்து, பரலோகத்திற்குச் சென்றிருக்கிறார் என்பதையும் அவன் அறிந்துகொண்டான். தெய்வீக வெளிப்படுத்தலின் அந்த விநாடியில், சிலுவையிலறையப்பட்டு, உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றி சாட்சிகொடுத்திருந்த ஸ்தேவானும் சவுலின் சம்மதத்துடன் பலியாக்கப்பட்டான் என்பதையும், அதற்குப்பின் அவனைக் கருவியாகக் கொண்டதன்மூலமாக, இயேசுவின் விலைமதிப்புமிக்க அநேக அடியார்கள், கொடூரமான உபத்திரவங்களினால் தங்களுடைய மரணத்தைச் சந்தித்திருந்தனர் என்பதையும் சவுல் நினைவுகூர்ந்தான். (11)

ஸ்தேவானின்மூலமாக இரட்சகர் சவுலிடம் பேசியிருந்தார். அவனுடைய தெளிவான காரணம் காட்டுதல் மறுக்கமுடியாததாக இருந்தது. இரத்தசாட்சியின் முகம் கிறிஸ்துவின் மகிமையின் ஒளியைப் பிரதிபலித்துக்கொண்டிருந்ததை—“அவன் முகம் தேவதூதன் முகம்” போலிருந்ததை—கற்றறிந்த அந்த யூதன் கண்டிருந்தான் (அப்போஸ்தலர் 6:15). தனது எதிரிகளுக்கு நேராக ஸ்தேவான் காட்டியிருந்த சகிப்புத் தன்மையையும், அவனது மன்னிக்கும் தன்மையையும், அவன் சாட்சியாகக் கண்டிருந்தான். தன் நிமித்தமாகச் சித்திரவதை செய்யப்படுவதற்கும் துன்புறுத்தப்படுவதற்கும் ஆளாக்கப்பட்டிருந்தவர்களின் துயர்தாங்கும் மன உரத்தையும் மகிழ்ச்சியையும் அவன் கண்டிருந்தான். சிலர் தங்களுடைய விசுவாசத்திற்காக மகிழ்ச்சியுடன் ஜீவனை விடுவதையும் அவன் கண்டிருந்தான்! (12)

இவைகளனைத்தும் இயேசுதான் வாக்குத்தத்தம்செய்யப்பட்டிருந்த மேசியா என்னும் மன உணர்த்துதலை, வெற்றிகொள்ளும் விதத்தில், அவனது மனதில் வல்லமையாக, சில சமயங்களில்—இந்த மனஉணர்த்துதலுக்கு எதிராக—கொண்டுவந்தது. அவன் இரவு முழுவதும் போராடியிருந்தான். அந்தக் காரியமானது இயேசு மேசியாவாக இருக்கவில்லை என்னும் அவனுடைய நம்பிக்கையையும், அவருடைய அடியார்கள் பொய்த் தோற்றத்தினால் வஞ்சிக்கப்பட்ட மதவெறியர்கள் என்பதையும் மறுப்பதில் முடிந்திருந்தது. (13)

இப்பொழுது: சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? என்று கிறிஸ்து சவுலிடம் கேட்டிருந்தார். ஆண்டவரே, நீர் யார்? என்னும் அந்தக் கேள்விக்கு: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்று அதே குரலில் பதில் கொடுக்கப்பட்டது. இங்கு, கிறிஸ்து பெருமான் தம்மை அவரது மக்களுடன் அடையாளப்படுத்திக் காட்டுகிறார். இயேசுவின் அடியார்களை உபத்திரவப்படுத்தினதில், சவுல் பரலோகத்தின் கர்த்தருடன் நேரடியாகப்

போரிட்டிருந்தான். அவர்களுக்கெதிராக—தவறாகக் குற்றம்கூறி—சாட்சி கொடுத்ததினால், அவன் உலக இரட்சகருக்கெதிராகத் தவறாகக் குற்றம்கூறி, சாட்சிகொடுத்திருந்தான். (14)

அவனுடன் பேசிய ஒருவர்தான் நசரேயனாகிய இயேசுவாக—வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த மேசியாவாக—இஸ்ரவேலின் ஆறுதலாக—மீட்பராக இருந்தார் என்பதில், சவுலின் மனதில் சந்தேகம் எதுவும் நுழையவில்லை. அவன் நடுங்கித் திகைத்து: "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார். (15)

அந்த மகிமை மறைந்தபின், சவுல் தரையிலிருந்து எழுந்தபோது, முற்றிலுமாகப் பார்வையை இழந்தவனாக இருப்பதை உணர்ந்தான். கிறிஸ்துவின் மகிமையின் பிரகாசமானது, சாவுக்கேதுவான அவனது கண்களால் தாங்கிக்கொள்ளமுடியாத அளவிற்கு அதிகமான உக்கிரமுள்ளதாக இருந்தது. அது நீங்கினபோது, அவனது பார்வையை இரவின் இருள் பற்றிக்கொண்டது. இந்தக் குருட்டுத்தன்மை, இயேசுவின் அடியார்களை உபத்திரவப்படுத்தினதற்காக தேவனிடமிருந்து உண்டான ஒரு தண்டனையாக இருக்கிறது என்று அவன் நம்பினான். பயங்கரமான இருளில் அவன் தடவினபோது, பயத்திலும் வியப்பிலுமிருந்த அவனது தோழர்கள்: "அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவிற்குக் கொண்டுபோனார்கள்". (16) அந்தச் சம்பவம் நடந்த அன்று காலையில், பிரதான ஆசாரியர்கள் அவன்மீது வைத்திருந்த நம்பிக்கையின் காரணமாக, சுயதிருப்தியான உணர்ச்சிகளுடன் சவுல் தமஸ்குவை நெருங்கியிருந்தான். சாவுக்கேதுவான பொறுப்புகள் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. புதிய விசுவாசம் தமஸ்குவில் பரவாதபடி, கூடுமானால் தடுப்பதற்கென்று யூத மதத்தின் தாற்பரியங்களை முன்கொண்டு செல்லுவதற்கென்றும், அவன் ஏற்படுத்தப்பட்டிருந்தான். அவனது ஊழியம் வெற்றியினால் முடிசூட்டப்படவேண்டும் என்பதில் அவன் தீர்மானமுடையவனாக இருந்திருந்து, அவன் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அனுபவங்கள் அவனுக்கு முன்னிருந்தன என்றும் எதிர்நோக்கியிருந்தான். (17)

ஆனால் அவனது நகர்ப்பிரவேசமானது, அவன் எதிர்பார்த்திருந்ததற்கும் மாறாக, எவ்விதமாக எதிரானதாக இருந்தது! குருட்டுத் தன்மையினால் தாக்கப்பட்டு, உதவியற்றவனாக, பாவஉணர்வினால் சித்திரவதைசெய்யப்பட்டவனாக, மேற்கொண்டு, எந்தவிதமான நியாயத்தீர்ப்பு அவனுக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாதவனாக, அவன் யூதா

என்னும் சீடனுடைய வீட்டைத்தேடிச் சென்றான். அங்கு தன்னைக்குறித்துச் சிந்திக்கவும், ஜெபம்செய்யவும் போதுமான வாய்ப்பும் தனிமையும் அவனுக்குக் கிடைத்திருந்தது. (18)

“சவுல் மூன்று நாட்களாகப் பார்வை இல்லாதவனாகவும் புசியாதவனாகவும் குடியாதவனாகவும் இருந்தான்”. இந்த நாட்களின் ஆத்தும வேதனை அவனுக்கு பல வருடங்களைப்போலிருந்தன. அவன் மறுபடியும்மறுபடியும் ஆத்தும வேதனையுடன், ஸ்தேவான்—இரத்த சாட்சியாக அவன் எடுத்திருந்த பங்கைப்பற்றி, நினைத்துக்கொண்டிருந்தான். பரலோகத்தின் ஒளியினால் ஸ்தேவானின் முகம் பிரகாசித்திருந்தபோதும்கூட, ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரிலிருந்த விரோதமும் தவறான எண்ணமும் அவனைக் கட்டுப்படுத்துவதற்கு அவன் அனுமதித்த குற்றத்தை, ஆழ்ந்த வெறுப்புடன் சிந்தித்திருந்தான். மிகுந்த பலத்துடன் கொண்டுவரப்பட்டிருந்த சான்றுகளுக்கெதிராக, அவன் தனது கண்களையும் செவிகளையும் மூடிக்கொண்டிருந்ததையும், ஒய்வு ஒழிச்சலின்றி, நசரேயனாகிய இயேசுவின் விசுவாசிகளை உபத்திரவப்படுத்தினதையும், துயரத்துடனும் நொறுங்கின இருதயத்துடனும் மீண்டும் மீண்டும் எண்ணிப்பார்த்தான். (19)

அவன் தன்னைத்தான் சோதித்ததும் இருதயத்தைத் தாழ்த்தினதுமான நாட்கள், தனிமையில் கழிக்கப்பட்டிருந்தன. சவுல் தமஸ்குவிற்கு வருவதன் நோக்கம் விசுவாசிகளுக்கு எச்சரிக்கையாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்களை வஞ்சிப்பதற்காக அவன் செயலாற்றுவானென்று அவர்கள் பயந்து, அவனுக்குத் தங்களுடைய அனுதாபத்தைக் காட்டாமல் (கிறிஸ்தவ விசுவாசிகள்), அவனை விட்டு விலகியிருந்தனர். அவன், எந்த மனம்மாறாத யூதர்களுடன் சேர்ந்து விசுவாசிகளை உபத்திரவப்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்தானோ, அவர்களிடம் மேல்முறையீடு செய்கின்ற விருப்பமற்றவனாக சவுல் (இப்பொழுது) இருந்தான். ஏனெனில் அவர்கள் அவனுடைய கதையைக்கூடக் கேட்கமாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். இவ்வாறாக, அவன் சகலவிதமான மனித அனுதாபங்களிலிருந்தும் தூரமாக அடைக்கப்பட்டவன்போல் காணப்பட்டிருந்தான். அவனது ஒரே நம்பிக்கை இரக்கமுள்ள தேவனின்மீது மட்டுமே இருந்தது. அவன், உடைந்த இருதயத்துடன் அவரை நோக்கி மன்றாடினான். (20)

அவன் தேவனுடன் மட்டும்—தனிமையாக அடைக்கப்பட்டிருந்த நீண்ட நேரங்களின்போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையைப்பற்றிய நேக வேதவாக்கியங்களை நினைத்துப்பார்த்தான். அவனது உள்ளத்தில் கொண்டுவரப்பட்டிருந்த மனஉணர்த்துதலின் கூர்மையான ஞாபகத்துடன்,

தீர்க்கதரிசனங்களை மிகக் கவனமாக—தொடர்ச்சியாக கவனித்தான். இந்தத் தீர்க்கதரிசனங்களின் பொருள்களை அவன் பிரதிபலித்தபோது, தனது பழைய புரிந்துகொள்ளுதலில் இருந்த தன்னுடைய குருட்டுத்தன்மையைப்பற்றியும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவராக இருந்த மேசியாவை நிராகரித்து நடத்தியிருந்த அவர்களது பொதுவான—குருட்டுத்தன்மையைப்பற்றியும் அறிந்து ஆச்சரியப்பட்டான். அறிவூட்டப்பட்டிருந்த அவனது பார்வையில், இப்பொழுது அனைத்துத் தவறான எண்ணமும் அவிசுவாசமும் அவனுடைய ஆவிக்குரிய உணரும் தன்மையை மறையச்செய்து, தீர்க்கதரிசனத்திலிருந்த மேசியாவே நசரேயனாகிய இயேசு என்பதை அறிந்துகொள்ளுவதைத் தடைசெய்திருந்தன என்பதை அவன் அறிந்துகொண்டான். (21)

பரிசுத்த ஆவியினால் உண்டான மன உணர்த்துதலின் வல்லமைக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்தபோது, அவனது வாழ்க்கையிலிருந்த தவறையும், தேவனுடையகற்பனைகள்பாராட்டும்உரிமைகளின்அதிகமானபலன்களையும் அவன் கண்டான். தனது நற்செயல்களால் நீதிமானாக்கப்பட்டிருப்பதில் நம்பிக்கைகொண்டிருந்த அந்த அகந்தைமிக்க பரிசேயன், இப்பொழுது தனது சொந்தமான தகுதியின்மையை அறிக்கைசெய்து, சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்துள்ள இரட்சகரின் புண்ணியங்களை மன்றாடி, தாழ்மையுடன் ஒரு சிறுபிள்ளையைப்போல தேவனுக்கு முன்பாகக் குனிந்தான். பிதாவுடனும் குமாரனுடனும் முழுமையான இசைவுள்ள ஐக்கியத்தை அடைந்துகொள்ள சவுல் ஏங்கினான். மன்னிப்பு, ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகியவைகளுக்கான அவனது வாஞ்சையின் வலிமையில், கிருபையின் சிங்காசனத்திற்கு நேராக, அவன் தனது விண்ணப்பங்களை ஏறெடுத்தான். (22)

மனம் வருந்தின (பாவத்திற்காக) அந்தப் பரிசேயனின் ஜெபங்கள், வீணானவைகளாக இருக்கவில்லை. அவனது இருதயத்தின் ஆழத்திலிருந்த எண்ணங்களும் உணர்வுகளும் தெய்வீகக் கிருபையினால் மறுரூபமடைந்தன. அவனுடைய மேலான அறிவுத்திறன்கள் தேவனுடைய நித்தியமான நோக்கத்துடன் இசைவாகும்படி கொண்டுவரப்பட்டிருந்தன. கிறிஸ்துவும் அவருடைய நீதியும் உலகம் முழுவதையும்விட, சவுலிற்கு மிகவும் அருமையானவைகளாயின. (23)

பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதலை மனிதர்களுக்குள் கொண்டுவரக்கூடிய, பரிசுத்தஆவியின் அற்புதமான வல்லமைக்கு சவுலின் மாற்றம் குறிப்பிடக்கூடிய ஒரு சான்றாக இருக்கிறது. நசரேயனாகிய இயேசு தேவப்பிரமாணத்தை ஒதுக்கியிருந்தாரென்றும், அதற்கு எந்தவிதமான பலனும் இல்லையென்று போதித்திருந்தாரென்றும் அவன் நிச்சயமாக நம்பியிருந்தான். ஆனால் தனது மதமாற்றத்திற்குப் பின் சவுல், அவருடைய

பிதாவின் பிரமாணத்தை (பத்துக் கற்பனைகளை) மெய்ப்பிக்கும் முக்கியமான நோக்கத்துடன் உலகத்திற்குள் வந்திருந்தவர்தான் இயேசு என்று இனங்கண்டுகொண்டான். யூத முறைமை முழுவதிலுமுள்ள பலிமுறைகளுக்கு இயேசுதான் ஆதியானவராக இருக்கிறார் என்பதில் அவன் மனத்தெளிவு அடைந்தவனாக இருந்தான். சிலுவையில் அறையப்படுதலில், நிஜம் நிழலைச் சந்தித்தது என்பதையும், இஸ்ரவேலின் மீட்பரைப்பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை, இயேசு நிறைவேற்றியிருந்தார் என்பதையும் அவன் கண்டிருந்தான். (24)

சவுலின் மாற்றம்பற்றிய ஆவணத்தில், முக்கியமான கொள்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது எப்பொழுதும் மனதில் தங்கியிருக்கவேண்டும். கிறிஸ்துவின் நேரடியான சமுகத்திற்கு சவுல் கொண்டுவரப்பட்டிருந்தான். மிகமுக்கியமான வேலையைச் செய்வதற்கென்று கிறிஸ்து விரும்பியிருந்த ஒருவனாகவும், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பாத்திரமாகவும், அவன் இருந்தான். அப்படி இருந்தபோதிலும், அவனுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த வேலையைப்பற்றிக் கர்த்தர் உடனடியாக அவனிடம் எதுவும் கூறவில்லை. அவர் அவனை அவனது பாதையில் கைதுசெய்து, பாவத்தைப்பற்றிய மனஉணர்த்துதலை உண்டுபண்ணினார். ஆனால் நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று பவுல் கேட்டபோது, அவனைப்பற்றிய தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளும்படி, விசாரித்துக்கொண்டிருந்த அந்த யூதனை சபையுடன் தொடர்புகொள்ளும் நிலையில் வைத்தார். (25)

சவுலின் இருளை ஒளிப்படுத்தும்படி பிரகாசித்த அந்த ஆச்சரியமான ஒளி, கர்த்தருடைய செயலாக இருந்தது. ஆனால் அவனுக்காகச் சீடர்களால் செய்யப்படவேண்டிய ஒரு வேலையும் இருந்தது. வெளிப்படுத்துதலையும் மன உணர்த்துதலையும் கொண்டுவருகின்ற பணியைக் கிறிஸ்து செய்திருந்தார். ஆனால் சத்தியத்தை அவனுக்குப் போதிக்கும்படி, தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமையில், மனம் வருந்திக்கொண்டிருந்த அவன் இப்பொழுது வைக்கப் பட்டிருந்தான். (26)

சவுல் யூதாவின் வீட்டில் தனித்திருந்து, ஜெபம் செய்வதிலும் விண்ணப்பத்தை ஏறெடுப்பதிலும், தொடர்ந்திருந்தபோது, “தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்;

அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்.” (27)

அந்த தேவனுடைய வார்த்தைகளை அனனியாவினால் எளிதில் நம்பமுடியவில்லை. எனெனில், எருசலேமில் பரிசுத்தவான்களைக் கசப்பான விதத்தில் சவுல் உபத்திரவப்படுத்தியிருந்த அறிக்கையானது அருகிலும்—தூரத்திலும்—எங்கும் பரவியிருந்தது. அவன் அதனைத் தவிர்க்கும் எண்ணத்துடன், “ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்கு கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்” என்னும் கட்டளை கண்டிப்பானதாக இருந்தது—அப்போஸ்தலர் 9:17–18. (28)

தேவதூதனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவனாக அனனியா, இயேசுவின் நாமத்தின்மீது விசுவாசமுள்ளவர்களாக இருந்த அனைவருக்கும் அச்சுறுத்தல்களை சமீப காலத்தில் வெளிக்காட்டியிருந்த அந்த மனிதனைத் தேடிச்சென்று, மனம்வருந்தி பாடனுபவித்துக்கொண்டிருந்தவனின் தலையின் மீது தனது கரங்களை வைத்து, “சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்”—அப்போஸ்தலர் 9:17–18. (29)

இவ்வாறாக, இயேசு அவரால் ஏற்படுத்தப்பட்ட சபைக்கு அதிகாரத்தைக்கொடுத்து, பூமியின்மீது அவரால் ஏற்படுத்தப்பட்டிருந்த அவரது ஏதுகரத்தின்கீழ் சவுலை வைத்தார். பூமியில் அவரது பிரதிநியாக இருக்கும்படி, இப்பொழுது கிறிஸ்து ஒரு சபையை ஏற்படுத்தினார். மனம் வருந்தும் பாவியை ஜீவனுக்குரிய பாதையில் நடத்துகின்ற பொறுப்பு அதற்குரியதாக இருக்கிறது. (30)

அநேகர் தங்களுக்குக் கிடைத்துள்ள ஒளிக்காகவும் அனுபவத்திற்காகவும் பூமியின்மீது அவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடியார்களைவிட்டு விலகி—தனிப்பட்டவர்களாக—கிறிஸ்துவிற்குமட்டுமே

கணக்குக்கொடுக்கவேண்டியவர்களாக உள்ளனர் என்னும் யோசனையை உடையவர்களாக உள்ளனர். பாவிகளின் நண்பராக இயேசு இருந்து, அவர்களது துன்பங்களினால் அவரது இருதயம் தொடப்பட்டதாக உள்ளது. பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள சகல வல்லமைகளையும் உடையவராக அவர் இருக்கிறார். ஆனால் மனிதர்களுக்கு அறிவூட்டவும் இரட்சிப்பை தரவும் அபிஷேகம்பண்ணியிருக்கும் உபாத்திகளை அவர் மதிக்கிறார். உலகத்திற்கு ஒளியைக் கொடுக்கின்ற ஒரு வாய்க்காலாக, அவர் ஏற்படுத்தியிருக்கும் சபையினிடத்திற்கு பாவிகளை நடத்துகிறார். (31)

சவுல் தனது குருட்டுத்தனமான தவறினாலும், தவறான எண்ணத்தினாலும், தான் துன்பப்படுத்திக்கொண்டிருந்த கிறிஸ்துவைப்பற்றிய ஒரு வெளிப்படுத்தலுக்கிடையில், உலகத்திற்கு ஒளியாக இருக்கும் சபையுடன், நேரடியான தொடர்புகொள்ளும்படி வைக்கப்பட்டான். இந்தக் காரியத்தில் அனனியா கிறிஸ்துவையும் அவருக்குப் பதிலாக செயலாற்ற பூமியின்மீதுள்ள அவரது ஊழியக்காரர்களையும் குறிப்பிட்டுக் காட்டுகிறான். சவுலின் கண்கள் பார்வையடையும்படி, கிறிஸ்துவிற்குப்பதிலாக, அனனியா அவனது கண்களைத் தொடுகிறான். கிறிஸ்துவிற்குப்பதிலாக, அவன் தனது கரங்களை சவுலின் தலையின்மீது வைத்து, கிறிஸ்துவின் பெயரால் ஜெபித்தபோது, சவுல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுகிறான். கிறிஸ்துவின் பெயராலும் அவரது அதிகாரத்தினாலும் மட்டுமே அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. கிறிஸ்துவே ஊற்றாக இருக்கிறார். சபையானது தொடர்புகொள்ளும் வாய்க்காலாக இருக்கிறது. (32) ★

# 13

# ஆயத்தத்தின் நாட்கள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 123–130)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 9:19–30**

பவுல் ஞானஸ்நானத்திற்குப்பின் தனது உபவாசத்தை முடித்துக் கொண்டு, தமஸ்குவிலுள்ள சீடருடனே சிலநாள் தங்கியிருந்து, தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். ... எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" என்றும், நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த மேசியா, நசரேயனாகிய இயேசுதானென்றும் தைரியமாக அறிவித்தான். தீர்க்கதரிசனத்திலிருந்துள்ள அவனுடைய வாதங்கள் முடிவானவைகளாக இருந்ததினாலும், அவனது முயற்சிகள் தேவனுடைய வல்லமையுடன் வெளிக்காட்டப்பட்டதினாலும், யூதர்கள் குழப்பமடைந்தவர்களாகவும் அவனுக்குப் பதில்கூற முடியாதவர்களாகவும் இருந்தனர். (1)

பவுலின் மாற்றம்பற்றிய செய்தி, யூதர்களுக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது! விசுவாசிகளைக் கைதுசெய்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படி பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரமும் உத்திரவும்பெற்று தமஸ்குவிற்குப் பயணம்செய்திருந்தவன், இப்பொழுது சிலுவையிலறைப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டும், அதற்கு ஏற்கனவே சீடர்களாக இருந்தவர்களின் கைகளை பலப்படுத்திக்கொண்டும், முன்பு கசப்பானவிதத்தில் அவன் எதிர்த்திருந்த விசுவாசத்திற்கு புதிதாக மாறுபவர்களைத் தொடர்ச்சியாக கொண்டுவந்துகொண்டுமிருந்தான். (2)

பவுல் முன்னர் யூதமார்க்கத்தின் பாதுகாவலனாகவும், இயேசுவின் அடியார்களை உபத்திரவப்படுத்துவதில் களைப்பற்றவனாகவும் அறியப்

பட்டிருந்தான். தைரியமுள்ளவனாகவும், சுதந்திரமுள்ளவனாகவும் முயற்சி யுள்ளவனாகவும் இருந்த அவனுடைய தாலந்துகளும் பயிற்சியும் எந்த ஒரு பதவியையும் வகிப்பதில், ஏறத்தாழ அவனைத் தகுதி உள்ளவனாக்கியிருந்தது. மிக ஆபூர்வமான தெளிவுடன் அவன் வழிகாட்டக்கூடியவனாக இருந்தான். வீழ்த்தும் அவனுடைய கேலிப் பேச்சுகள், எதிரியை அவனுடன் போட்டியிடமுடியாத ஒளியை உடையவனாக்கியிருந்தது. அபூர்வமான தாலந்துகளை உடையவனாக இருந்த மனிதன், முன்பு எவர்களை உபத்திரவப்படுத்தியிருந்தானோ, அவர்களுடன் இப்பொழுது ஒன்றுசேர்ந்து, இயேசுவின் நாமத்தினால், அச்சமின்றிப் பிரசங்கித்துக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். (3)

ஒரு தளபதியின் மரணம் அவனது சேனைக்கு இழப்பாக உள்ளது; அது சத்துருவுக்கு அதிக பலத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மனிதன் எதிரியின் அணியுடன் சேர்ந்துகொள்ளும்போது, அவனுடைய சேனைகள் இழக்கப்படுவது மட்டுமின்றி, அவன் எவர்களுடன் சேர்ந்துகொள்ளுகிறானோ, அவர்களுக்கு முடிவான அனுகூலத்தையும் கொண்டுவருகிறது. தர்சுப் பட்டணத்தானான சவுல், தமஸ்குவிற்குச் செல்லும் அவனுடைய பாதையில், எளிதில் மரணமடையும்படி கர்த்தரால் தாக்கப்பட்டிருந்திருக்கமுடியும். அதினால் உபத்திரவம் செய்யும் பெலன் அதிகமான அளவிற்குப் பின்னடைவு செய்யப்பட்டிருந்திருக்கக்கூடும்; ஆனால் தேவன் தமது தெய்வீக ஏற்பாட்டினால், சவுலின் உயிரைக் காத்ததுமட்டுமன்றி, அவனை மனம்மாறச் செய்ததினால், மேலும் ஒரு வீரனை எதிரியின் அணியிலிருந்து கிறிஸ்துவின் அணிக்கு மாற்றினார். மிகத் திறமையான பேச்சாளனாகவும் கடுமையான விமரிசகனாகவும் உறுதியான நோக்கத்துடனும் அசையாத தைரியத்துடனும் இருந்த பவுல், ஆரம்பகால சபைக்குத் தேவையான தகுதிகளையெல்லாம் பெற்றிருந்தான். (4)

தமஸ்குவில் சவுல் கிறிஸ்துவைப் பிரசங்கித்திருந்தபோது, அவனது பிரசங்கத்தைக்கேட்ட அனைவரும் ஆச்சரியமடைந்து, "எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியரிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா" என்றார்கள். பவுலின் விசுவாச மாற்றமானது உணர்ச்சிகளின் உந்துதலினாலோ அல்லது மதவெறியினாலோ உண்டாகாமல், மேற்கொள்ளச்செய்யும் சான்றுகளினால் கொண்டுவரப்பட்டது என்று அறிவித்தான். அவனது சுவிசேஷ அறிவிப்பில், கிறிஸ்துவின் முதலாம் வருகையுடன் சம்பந்தப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களை வெளிப்படையாக்க வகைதேடியிருந்தான். நசரேயனாகிய இயேசுவில், இந்தத் தீர்க்கதரிசனங்கள் எழுத்தின்படியே நிறைவேறி உள்ளன என்று

அவன் முடிவாக எடுத்துக்காட்டினான். அதிக உறுதியான தீர்க்கதரிசனத்தை அஸ்திவாரமாகக் கொண்டதாக அவனுடைய விசுவாசம் இருந்தது. (5)

தேவனிடத்திற்கு மனம்திரும்பி, மனந்திரும்புதலைச் சந்திக்கின்ற கிரியைகளைச் செய்யும்படி, பவுல் மக்களிடம் வேண்டுகோள்விடுப்பதில் தொடர்ந்தபோது, அவன் அதிகமாகப் பெலனடைந்து, தமஸ்குவில் குடியிருந்த யூதர்களைக் கலங்கச்செய்து, இயேசுதான் உண்மையான கிறிஸ்து என்று மெய்ப்பித்தான். ஆனால் அநேகர் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, அவனது தூதிற்கு பதில் கொடுக்க மறுத்திருந்தனர். அவனது மனமாற்றத்தினால் அவர்களில் உண்டாயிருந்த ஆச்சரியமானது, விரைவில் அவர்கள் இயேசுவிடம் காட்டியிருந்ததுபோன்ற வலிமைமிக்க வெறுப்பாக மாறியிருந்தது. (6)

தமஸ்குவில் பவுல் தனது ஊழியத்தைத் தொடரமுடியாத அளவிற்கு எதிர்ப்பு மிகவும் பயங்கரமாகப் பெரிதாக வளர்ந்தது. தற்காலிகமாக அந்த இடத்தைவிட்டு விலகிச் செல்லும்படி அவனுக்குக் கட்டளையிட, ஒரு தூதன் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டபோது, அவ்விடத்தைவிட்டு அவன் "அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய்," (கலாத்தியர் 1:17) அங்கு பாதுகாப்பாகத் தங்கினான். (7)

இங்கு, பாலைவனத்தின் தனிமையில், அமைதியாக ஆராய்வதற்கும் தியானம்செய்வதற்கும் பவுலுக்குப் போதுமான வாய்ப்புக் கிடைத்தது. அவன் தனது கடந்தகால அனுபவங்களை அமைதியுடன் திருப்பிப்பார்த்து, மனந்திரும்புதல் என்னும் நிச்சயமான செயலைச் செய்தான். அவனுடைய மனந்திரும்புதல் ஏற்றுக்கெள்ளப்பட்டது என்றும், அவனது பாவம் மன்னிக்கப்பட்டுவிட்டது என்றும் அறியும்வரை, அவன் தேவனைத் தன் முழுஇருதயத்துடனும் தேடினான். வரவிருக்கின்ற அவனது ஊழியத்தில், அவனுடன் இயேசு இருப்பார் என்னும் நிச்சயத்திற்காக அவன் ஏங்கியிருந்தான். அவனது வாழ்க்கையை இதுவரை வடிவமைத்திருந்த தவறான எண்ணங்களையும் பாரம்பரியங்களையும் அவனது ஆத்துமாவிலிருந்து வெறுமையாக்கி, சத்தியத்தின் ஆதாரமாக இருப்பவரிடமிருந்து அவன் போதனைகளைப் பெற்றுக்கொண்டான். இயேசு அவனுடன் தொடர்புகொண்டு, அவனை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தி, அவன்மீது மிக அதிகமான அளவிற்கு ஞானத்தையும் கிருபையையும் அருளினார். (8)

மனிதனுடைய சிந்தனை தேவனுடைய சிந்தனையுடனும், முடிவுள்ளது முடிவில்லாததுடனும் தொடர்புகொள்ளும்படி கொண்டுவரப்படும்போது, அதன் பலன் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளின் அனுமானத்திற்கும் அப்பாற்பட்டதாகிவிடுகிறது. இப்படிப்பட்ட தொடர்பில் மிகமேலான கல்வி

காணப்படுகிறது. அது முன்னேற்றமடையச்செய்யும் தேவனுடைய மார்க்கமாக இருக்கிறது. “நீர் அவரோடே பழகிச் சமாதானமாயிரும்” (யோபு 22:21) என்பது மனித இனத்திற்கான அவருடைய தூதாக இருக்கிறது. (9)

பவுல் அனனியாவுடன் செய்த நேர்காணலின்போது, பவுலுக்குக் கொடுக்கப்பட்ட பக்திவிநயமான கட்டளை, அவனது இருதயத்தில் அதிகமான பாரத்துடன் தங்கியிருந்தது. அந்த வார்த்தைக்கு மறுமொழியாக: “சகோதரனாகிய சவுலே, நீ பார்வையடைவாயாக” என்று கூறியபோது, பவுல் முதல் தடவையாக இந்த பக்திமானான அனனியாவைக் கண்டான். அப்பொழுது அவன்: “நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்”– அப்போஸ்தலர் 22:13–16. (10)

சவுலின் தமஸ்குவிற்கான பயணத்தின்போது அவனை ஆட்கொண்ட இயேசு கூறியிருந்த வார்த்தைகளுக்கு இசைவாக இந்த வார்த்தைகள் இருந்தன. “நீ கண்டவைகளையும், நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து, உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுய ஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே, பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்”–அப்போஸ்தலர் 26:16–18. (11)

இந்தக் காரியத்தைப் பவுல் அவனுடைய இருதயத்தில் சிந்தித்தபோது, அவன் அழைக்கப்பட்டதன் பொருளை அதிகமதிகமாகவும் தெளிவாகவும் புரிந்துகொண்டான். தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டதை அவன் புரிந்துகொண்டான். அவனுடைய அழைப்பு “மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலும்” வந்திருந்தது (1கொரிந்தியர் 1:1: கலாத்தியர் 1:1). அவன்முன் இருந்த பணியின் மகத்துவம், சுவிசேஷத்தை

"கிறிஸ்துவின் சிலுவை வீணாய்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்க", அவர்களுடைய "விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு," அவனுடைய பேச்சும் பிரசங்கமும் "மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருக்க" (1 கொரிந்தியர் 1:17; 2:4,5) வேதவாக்கியங்களை அதிகமாக ஆராயும்படி அவனை நடத்தியது. (12)

பவுல் வேதவாக்கியங்களை ஆராய்ந்தபோது: "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி, தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" என்பதை அறிந்தான். அப்படியே சிலுவையின் ஒளியில் உலகத்தின் ஞானத்தைப் பார்த்து, "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்றான் (1 கொரிந்தியர் 1:26–29; 2:2). (13)

பவுல் அவனது பிற்கால முழுவதிலும் அவனுடைய ஞானம், பலம் ஆகியவைகளின் ஆதாரம்பற்றிய பார்வையை ஒருபோதும் இழக்காதவனாக இருந்தான். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" (பிலிப்பியர் 1:21) என்று அவன் பல வருடங்களுக்குப்பின் அறிவிப்பதைக் கேளுங்கள். மறுபடியும், "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்" தகுதியடைய விரும்புவதைக் கூறுகிறான் –பிலிப்பியர் 3:8–10. (14)

அரேபியாவிலிருந்து பவுல் மறுபடியும் தமஸ்குவிற்குத் திரும்பி வந்து, இயேசுவின் பெயரால் தைரியமாய்ப் பிரசங்கித்தான். அவனது வாதத்திலிருந்த ஞானத்திற்குமுன் எதிர்த்துநிற்கமுடியாதவர்களாக இருந்த யூதர்கள், அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள். அவன் தப்பிச்செல்லுவதைத் தடுக்கும்படி, அந்த நகரத்தின் வாசல்கள் இரவும், பகலும் காவல்செய்யப்பட்டிருந்தன. இந்த நெருக்கடியானது தேவனை அக்கறையுடன் தேடும்படி அவனை வழிநடத்தினது. முடிவில் அவர்கள், இராத்திரியிலே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு கூடையிலேவைத்து, மதில்வழியாய் இறக்கிவிட்டார்கள் (அப்போஸ்தலர் 9:25). (15)

பவுல் தமஸ்குவிலிருந்து தப்பித்தபின், அவனுடைய மாற்றத்திலிருந்து மூன்று வருடம் கழிந்தபின், எருசலேமிற்குச் சென்றான். இந்த சந்திப்பின் நோக்கம்பற்றி பின்பு அவன் “பேதுருவைக் கண்டுகொள்ளும்படி” (கலாத்தியர் 1:18) செல்வது அவனது முதன்மையான நோக்கமாக இருந்தது என்று அறிவித்தான். உபத்திரவப்படுத்தும் பவுல் என்று முன்பு நன்கு அறியப்பட்டிருந்த அவன், அந்த நகரத்திற்கு வந்து சேர்ந்தபின், சீடர்களுடனே சேர்ந்துகொள்ளப்பார்த்தான். அவர்கள் அவனைச் சீடனென்று நம்பாமல், எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். மதவிரோதமிக்கவனாக இருந்த ஒரு பரிசேயன், சபையை அழிப்பதற்கென்று அதிகமாகச் செயல்பட்டிருந்த ஒருவன், கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறவனாக மாறிவிடமுடியும் என்று நம்புவது அவர்களுக்கு இயலாததாக இருந்தது. அப்பொழுது பர்னபா என்பவன், அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலர்களிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்ட விதத்தையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். (16)

அதைக்கேட்டபோது, சீடர்கள் அவனை அவர்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டனர். அவனுடைய கிறிஸ்தவ அனுபவத்தின் உண்மையைப்பற்றி, விரைவில் அவர்கள் ஏராளமான சான்றுகளை உடையவர்களானார்கள். புறஜாதிகளுக்கு எதிர்கால அப்போஸ்தலனானவன் இப்பொழுது அவனுடைய பழைய தோழர்கள் வாழ்ந்திருந்த நகரத்தில் இருந்தான். இரட்சகரின் வருகையினால் நிறைவேறியிருந்த மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை இந்த யூதத் தலைவர்களுக்கு வெளிப்படுத்த அவன் ஏக்கமுடையவனாக இருந்தான். ஒரு சமயத்தில் எவர்களுடன் அறிமுகமானவனாக இருந்தானோ, அந்த இஸ்ரவேலின் தலைவர்கள், அவன் எவ்விதமாக உண்மையும் கனமும் உடையவனாக இருந்திருந்தானோ, அதைப்போலவே அவர்களும் இருப்பார்கள் என்று பவுல் நிச்சயமாக உணர்ந்திருந்தான். ஆனால் அந்த

யூத சகோதரர்களின் ஆவியைப்பற்றி அவன் தவறாகக் கணக்கிட்டிருந்தான். அவர்களுடைய விரைவான மாற்றம்பற்றி, அவன் கொண்டிருந்த நம்பிக்கை கசப்பான ஏமாற்றத்தில் வீழ்ச்சி அடைந்தது. அவன் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் தைரியமாகப் பேசி, கிரேக்கர்களுக்கு எதிராக விவாதம் செய்திருந்தபோதிலும், யூத சபையின் தலைவர்களாக நின்றிருந்தவர்கள், விசுவாசிப்பதற்கு மறுத்து, அவனைக் கொலைசெய்யச் சென்றார்கள். துயரம் அவனுடைய இருதயத்தை நிரப்பினது, தனது உயிரைக் கொடுப்பதினால் சத்தியத்தைப்பற்றிய அறிவுக்குச் சிலர் வரக்கூடுமானால், அவன் விருப்பத்துடன் தனது ஜீவனைக் கொடுத்திருப்பான். ஸ்தேவான் இரத்தசாட்சியானதில், அவன் வகித்திருந்த தீவிரமான பங்கைப்பற்றி அவன் அவமானத்துடன் சிந்தித்தான். இப்பொழுது தவறாகக் குற்றம்சாட்டினதால், ஒருவன்மீது தங்கியிருக்கும் (பவுலின்மீது தங்கியிருக்கும்) கறையைத் துடைத்து நீக்கவேண்டும் என்ற அக்கறையில், ஸ்தேவான் எதற்காக ஜீவனைக் கொடுத்திருந்தானோ, அந்த சத்தியத்தை மெய்ப்பிக்க அவன் வகைதேடியிருந்தான். (17)

விசுவாசிக்க மறுத்தவர்களின் சார்பாக, பாரமடைந்தவனான சவுல் அதன்பின்பு சாட்சிகூறியிருந்ததுபோல, தேவாலயத்தில் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, அவன் ஒரு தரிசனம் கண்டான். அதில் பரலோகத்தின் செய்தியாளர் அவன்முன் தோன்றி: "நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல், சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ" (அப்போஸ்தலர் 22:18) என்றார். (18)

பவுல் எருசலேமில் தங்கியிருந்து, எதிர்ப்பைச் சந்திக்கலாம் என்னும் விருப்பமுடையவனாக இருந்தான். அங்கு தங்கியிருப்பதினால் பிடிவாதமான சில யூதர்களுக்கு மனத் தெளிவை ஏற்படுத்தமுடியுமானால், அப்படிச்செய்வதற்காக அங்கு தங்குவதினால், அவனுடைய உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடுமானால்கூட ஓடிப்போவது கோழைத்தனமான ஒரு செயல் என்று அவனுக்குத் தோன்றினது. எனவே, "உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து, ஜெப ஆலயங்களிலே அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே" என்று பதில் கூறினான். ஆனால் தேவனுடைய ஊழியக்காரன் அவனுடைய ஜீவனை அவசியமில்லாமல் ஆபத்துக்குட்படுத்துவது என்பது தேவனுடைய

நோக்கத்திற்கு இசைவானதாக இருக்கவில்லை. எனவே, "நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" (அப்போஸ்தலர் 22:19–21) என்று அந்தப் பரலோகச் செய்தியாளர் கூறினார். (19)

இந்தத் தரிசனத்தைப்பற்றி அறிந்த சகோதரர்கள், கொலை செய்யப்பட்டுவிடுவான் என்ற பயத்தினால், பவுல் எருசலேமைவிட்டு விரைவில் இரகசியமாகத் தப்பிச்செல்லுவதை விரைவுபடுத்தினார்கள். "சகோதரரோ, அதை அறிந்து, அவனைச் செசெரியாவிற்கு அழைத்துக்கொண்டுபோய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்." பவுல் புறப்பட்டுச்சென்றது, யூதர்களிடமிருந்து உண்டாயிருந்த உக்கிரமான எதிர்ப்பைத் தற்காலிகமாக நிறுத்தியிருந்தது. அதினால் சபைக்கு ஒரு இளைப்பாறுதலின் நேரம் உண்டாயிற்று. அதினால் விசுவாசிகளோடு அதிகமானோர் சேர்க்கப்பட்டனர். (20) ★

# 14

# சத்தியத்தைத் தேடும் ஒருவன்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 131–142)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 9:32—11:18**

அப்போஸ்தலனாகிய பேதுரு அவனது ஊழியத்திற்கிடையில் லித்தா ஊரில் இருந்த விசுவாசிகளைச் சந்தித்தான். அங்கு எட்டு வருடங்களாகத் திமிர்வாதத்தினால் படுக்கையில் கிடந்த ஐனேயா என்னும் ஒருவனை அவன் சுகப்படுத்தியிருந்தான். "பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான். லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்"–அப்போஸ்தலர் 9:32–34. (1)

லித்தாவிற்கு அருகில் யோப்பா என்னும் ஒரு பட்டணம் இருந்தது. அங்கு தொற்காள் என்னும் ஒரு ஸ்திரீ வாழ்ந்திருந்தாள். அவளது நற்செயல்களின் காரணமாக அவள் மிகவும் நேசிக்கப்பட்டிருந்தாள். அவள் இயேசுவின் ஒரு மதிப்புமிக்க சீஷியாக இருந்தாள். அவளது வாழ்க்கையானது அன்புமிக்க செயல்களினால் நிறைந்திருந்தது. எவர்களுக்கெல்லாம் சௌகரியமான உடைகள் தேவை, எவர்களிடமெல்லாம் பிரியம்காட்டப்படவேண்டியது அவசியம் என்பதை அவள் அறிந்திருந்தாள். ஏழைகளுக்கும் துயரப்படுபவர்களுக்கும் அவள் தாராளமாக உதவிசெய்திருந்தாள். அவளுடைய நாக்கைவிட அவளுடைய திறமைமிக்க விரல்கள் அதிகத் தீவிரமானவைகளாக இருந்தன. (2)

"அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு

எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள்.” தொற்காள் வாழ்ந்திருந்த ஊழியமிக்க வாழ்க்கையின் காரணமாக, அவர்கள் துக்கங்கொண்டாடினார்கள் என்பதும், அசைவில்லாததாக இருந்த அவளது உடலின்மீது அவர்களது கண்ணீர்த்துளிகள் விழுந்தன என்பதிலும் ஆச்சரியம் எதுவும் இருக்கவில்லை. (3)

அவர்களுடைய துயரைக் கண்டபோது, அந்த அப்போஸ்தலனின் இருதயம் அனுதாபத்தினால் தொடப்பட்டது. அதன்பின் அழுதுகொண்டிருந்த நண்பர்களை அந்த அறையைவிட்டு அனுப்பும்படிக் கூறியபின், அவன் கீழே முழங்காலில் நின்று, தொற்காளின் ஜீவனையும் உடல் நலத்தையும் திரும்பக் கொடுக்கவேண்டுமென்று, தேவனை நோக்கி மிகவும் ஊக்கமாக ஜெபித்தான். பின்பு அந்த உடலின் பக்கமாகத் திரும்பி: “தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.” தொற்காள் சபைக்குப் பெரும் சேவையைச் செய்திருந்தாள். அவளுடைய திறமையும் சக்தியும் இன்னும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியும், அவருடைய வல்லமையை வெளிக்காட்டுவதினால் கிறிஸ்துவின் காரியம் பலப்படுத்தப்படும்படியும் சத்துருவின் தேசத்திலிருந்து அவளைத் திரும்பிக்கொண்டுவருவது பொருத்தமானது என்பதையும் தேவன் கண்டார். (4)

பேதுரு யோப்பாவில் இருந்தபோதுதான், செசரியாவிலுள்ள கொர்நேலியுவிற்கு சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும்படி தேவனால் அழைக்கப்பட்டான். (5)

கொர்நேலியு ரோம நாட்டைச்சேர்ந்த ஒரு நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். அவன் செல்வந்தனாகவும் உயர்குடிப்பிறப்பை உடைய ஒரு மனிதனாகவும் இருந்தான். அவனுடைய பதவி, நம்பிக்கைக்கும் கனத்திற்கும் பொருத்தமான ஒன்றாக இருந்தது. அவன் பிறப்பு, பயிற்சி, கல்வி ஆகியவைகளில் ஒரு அஞ்ஞானியாக இருந்திருந்தபோதிலும், யூதர்களுடனுள்ள தொடர்பின்மூலமாக, தேவனைப்பற்றிய அறிவை அடைந்து, அவரை தனது உண்மையான இருதயத்துடன் தொழுது, ஏழைகளின்மீது மன உருக்கமுள்ளவனாக இருப்பதின் மூலமாகத் தனது விசுவாசத்திலிருந்த உண்மையைக் காட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய நற்செயல்களினால், தூரத்திலும் அருகிலும் இருந்தவர்களால் அறியப்பட்டவனாக இருந்தான்.

அவனுடைய நீதியான வாழ்க்கை, யூதர்கள்—புறஜாதியினர் ஆகிய இரு சாராருக்கும் மத்தியில், அவனை புகழ்மிக்கவனாகச் செய்திருந்தது. அவன் எவர்களுடனெல்லாம் தொடர்புகொண்டிருந்தானோ, அவர்களுக்கெல்லாம் அவனது செல்வாக்கு ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. “அவன் தேவபக்தி உள்ளவனும் தன் வீட்டார் அனைவரோடு தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தான, தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்” என்று வேதவாக்கியங்கள் அவனைப்பற்றி, சிறப்பாகக் கூறுகின்றன. (6)

தேவனே வானத்தையும் பூமியையும் படைத்தவர் என்று நம்பி, கொர்நேலியு அவர்மீது பக்திசெலுத்தியிருந்து, அவரது அதிகாரத்தை ஒப்புக்கொண்டு, வாழ்க்கையின் சகல காரியங்களிலும் அவரது ஆலோசனையைத் தேடியிருந்தான். அவன் தனது குடும்பவாழ்க்கையிலும் அலுவலுக்கடுத்த கடமைகளிலும் யேகோவாவிற்கு உண்மையுள்ளவனாக இருந்தான். தனது வீட்டில் தேவனுடைய பலிபீடத்தை உண்டுபண்ணியிருந்தான்; ஏனெனில், அவன் தனது திட்டங்களையும் அல்லது பொறுப்புகளையும் தேவனுடைய உதவி இல்லாமல் செய்வதற்கு முயலாதவனாக இருந்தான். தீர்க்கதரிசனங்களை நம்பி, மேசியா வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்த போதிலும், கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம் ஆகியவைகளினால் வெளிப்படுத்தபட்டிருந்த சுவிசேத்தைப்பற்றிய ஒரு அறிவை அடையாதவனாக கொர்நேலியு இருந்தான். அவன் யூத சபையின் ஒரு அங்கத்தினனாக இருக்கவில்லை. அதனால் ரபிமார்களால் அஞ்ஞானியென்றும் அசுத்தமானவ னென்றும் பார்க்கப்பட்டிருந்தான். ஆனாலும், கவனிக்கும் பரிசுத்தமானவர், ஆபிரகாமைப்பற்றி: “அவனை அறிந்திருக்கிறேன்” என்று கூறியவர், கொர்நேலியுவையும் அறிந்திருந்து, பரலோகத்திலிருந்து ஒரு தூதை நேரடியாக அவனுக்கு அனுப்பியிருந்தார். (7)

கொர்நேலியு ஜெபம்செய்துகொண்டிருந்தபோது, தூதன் அவன்முன் தோன்றினான். அந்த நூற்றுக்கு அதிபதி, தனது பெயரைக் கூறி அழைக்கப்பட்டதைக் கேட்டதும், அந்தத் தூதன் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறானென்று அறிந்திருந்தபோதிலும், பயந்து, “ஆண்டவரே, என்ன” என்றான். அப்பொழுது அவன்: “உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்போ பட்டணத்திற்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது என்றான்.” (8)

இந்தக் கட்டளையின் மிகச் சரியான தன்மையும், பேதுரு யாருடன் தங்கியிருந்தானோ அவனுடைய தொழிலையும் குறிப்பிட்டதும், வாழ்க்கையின் எல்லா நிலைமைகளிலும் இருக்கும் மனிதர்களின் வரலாற்றையும் தொழிலையும் பரலோகம் அறிந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. மிகத் தாழ்மையான தொழிலாளியின், அதேபோல அரியணையின்மீது அமர்ந்திருக்கும் அரசனின் அனுபவங்களுடன் தேவன் பழக்கமுள்ளவராக இருக்கிறார். (9)

“நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி”. இவ்வாறாக தேவன், அவருடைய சுவிசேஷத்தின்மீதும், அவரது அமைப்பாகிய சபையின்மீதுமுள்ள கருதுதலின் சான்றினைக் கொடுத்தார். சிலுவையின் கதையைக் கொர்நேலியுவிற்குக் கூறும்படி அந்த தூதன் அனுப்பப்பட்டிருக்கவில்லை. மனித பலவீனங்களுக்கும் சோதனைகளுக்கும் கீழ்ப்பட்டவனான ஒரு மனிதன்—கொர்நேலியுவைப்போன்ற ஒரு மனிதன்—சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றி கூறவேண்டியவனாக இருந்தான். (10)

மனிதர்களுக்கு மத்தியில் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கும்படி, விழுந்துபோகாத தூதர்களை அவர் ஒருபோதும் தெரிந்துகொள்ளாமல், இரட்சிக்கப்பட வகைதேடும் மனிதர்களிடத்திற்கு அனுப்ப, அவர்களைப்போன்ற ஆசாபாசங்களை உடைய மனிதர்களையே தேவன் தெரிந்துகொள்ளுகிறார். மானுடத்தை சமீபிக்கும்படி கிறிஸ்து மனித உருவை எடுத்துக்கொண்டார். உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவருவதற்கு தெய்வீகமும் மானுடமும் கலந்த ஒரு இரட்சகர் அவசியமாக இருந்தார். “கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை” (எபேசியர் 3:8) உலகத்திற்கு அறியச்செய்யும் பரிசுத்தமான நம்பிக்கையின்பணி, ஆண்களிடமும் பெண்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (11)

தேவன் அவருடைய ஞானத்தினால் சத்தியத்தைத் தேடிக் கொண்டிருப்பவர்களைத் தங்களுடைய உடன் மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கொண்டுவருகிறார். ஒளியைப் பெற்றிருப்பவர்கள் இருளில் இருப்பவர்களுக்கு அதைப் பகிர்ந்துகொடுக்கவேண்டும் என்பது பரலோகத்தின் திட்டமாக உள்ளது, ஞானத்திற்கு மாபெரும் ஆதாரமாக இருப்பவரிட மிருந்து தனது திறமையைப்பெற்று, மனதிலும் இருதயத்திலும் மாற்றத்தை உண்டுபண்ணக்கூடிய வல்லமையின் சுவிசேஷச் செயல்களின் கருவியாகவும் எதுகரமாகவும் இருக்கும்படியாக மானுடம் செய்யப்பட்டுள்ளது. (12)

கொர்நேலியு அந்த தரிசனத்திற்கு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்தான். அந்தத் தூதன் சென்றபின், அந்த நூற்றுக்கு அதிபதி, அவனது இரண்டு

வீட்டு வேலைக்காரர்களையும் தனக்குத் தொடர்ச்சியான பாதுகாவலர்களாக இருந்த சேனைவீரர்களில் பக்திமிக்க ஒருவனையும் அழைத்து, அவர்களுக்கு இந்தக் காரியங்களையெல்லாம் அறிவித்து, யோப்பா பட்டணத்திற்கு அனுப்பிவைத்தான். (13)

அந்தத் தூதன் கொர்நேலியுவை சந்தித்தபின், யோப்பாவில் தங்கியிருந்த பேதுருவிடம் சென்றான். அந்த நேரத்தில் பேதுரு தான் தங்கியிருந்த மேல்வீட்டில் ஜெபித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது "அவன் மிகுந்த பசியடைந்து, சாப்பிட மனதாயிருந்தான். அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து" என்று நாம் வாசிக்கிறோம். பேதுரு சரீரப்பிரகாரமான உணவிற்காக மட்டும் பசியடைந்தவனாக இருக்கவில்லை. அவன் மேல்வீட்டிலிருந்து யோப்பா பட்டணத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்த்தபோது, தனது நாட்டு மக்களுக்காகவும் பசியடைந்தவனாக இருந்தான். அவன் வேதவாக்கியங்களிலிருந்து கிறிஸ்துவின் பாடுகள், மரணம் ஆகியவை சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவதற்கு வல்லமைமிக்க வாஞ்சை உள்ளவனாக இருந்தான். (14)

பேதுரு தான் கண்ட தரிசனத்தில் "வானம் திறந்திருக்கிறதாகவும் நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு. அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது"–அப்போஸ்தலர் 10:11–16. (15)

இந்தத் தரிசனம் பேதுருவிற்குக் கடிந்துகொள்ளுதல், உபதேசம் ஆகிய இரண்டையும் கொண்டுவந்திருந்தது. அது கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக புறஜாதியினர் யூதர்களுடன் உடன் சுதந்திரவாளிகளாகும் ஆசீர்வாதத்தை—தேவனுடைய நோக்கத்தை அவனுக்கு வெளிக்காட்டியிருந்தது! இதுவரை எந்த ஒரு சீடனும் புறஜாதியினருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருக்கவில்லை. அவர்களது மனங்களில் கிறிஸ்துவின் மரணத்தினால் நீக்கப்பட்டிருந்த

பிரிவினையாகிய நடுச்சுவர் இன்னும் நின்றுகொண்டிருந்தது. அவர்களுடைய ஊழியம் யூதர்களுக்கு மத்தியில் மாத்திரமானதாகக் குறுகியிருந்தது. ஏனெனில் அவர்கள் புறஜாதியினரை, சுவிசேஷத்தின் ஆசீர்வாதத்திலிருந்து புறம்பாக்கப்பட்டவர்களாகத் தவிர்த்திருந்தனர். இப்பொழுது கர்த்தர் தமது உலகளாவிய—விசாலமான திட்டத்தைப் பேதுருவிற்குப் போதிக்க வகை தேடியிருந்தார். (16)

பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் செய்திருந்த பிரசங்கங்களைக் கவனிப்பதில் புறஜாதியினரில் அநேகர் ஆர்வமிக்கவர்களாக இருந்தனர். கிரேக்க யூதர்களில் அநேகர் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்களாக மாறியிருந்தனர். ஆனால் புறஜாதியார்களுக்கிடையில் நிகழ்ந்திருந்த மனமாற்றத்தில், கொர்நேலியுவின் மாற்றம் முதலாவதாகவும் முக்கிய மானதாகவும் இருக்கவேண்டியதாக இருந்தது. (17)

கிறிஸ்துவின் சபைக்கு, முற்றிலுமாகப் புதுவிதமான ஒரு வேலைக்குள் பிரவேசிக்கவேண்டிய நேரம் வந்திருந்தது. யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியிருந்த அநேக யூதர்களால், புறஜாதியினருக்குப் பூட்டப்பட்டிருந்த கதவு இப்பொழுது திறக்கப்படவேண்டியதாக இருந்தது. சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டிருந்த புறஜாதியினர் விருத்தசேதனம் என்னும் சடங்காச்சாரத்தைக் கடைப்பிடிக்காமலேயே, யூத சீடர்களுக்குச் சமமாகக் கருதப்படவேண்டியவர்களாக இருந்தனர். (18)

யூதப் பயிற்சியினால், பேதுருவின் மனதில் புறஜாதியினருக்கு எதிராக இருந்த உறுதிமிக்க தவறான எண்ணத்தை மேற்கொள்ளுவதற்கு, எவ்வளவு கவனமாகக் கர்த்தர் செயலாற்றினார்! ஒரு துப்பட்டியையும் அதிலிருந்தவைகளையும் ஒரு தரிசனத்தில் காட்டுவதன்மூலமாக, இந்தத் தவறான எண்ணத்திலிருந்து அப்போஸ்தலனின் மனதைத் திருப்பி விடுவதற்காகவும், பரலோகத்தில் பட்சபாதம் இல்லை என்னும் முக்கியமான சத்தியத்தைப் போதிக்கவும், தேவனுடைய பார்வையில் யூதர்களும் புறஜாதியினரும் சமமானவர்கள் என்பதையும், கிறிஸ்துவின் மூலமாக அஞ்ஞானிகள் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களிலும் சலுகைகளிலும் பங்குபெறுவார்களென்பதையும் போதிக்கவும் அவர் வகைதேடினார். (19)

அந்த தரிசனத்தின் பொருளைப்பற்றி பேதுரு சிந்தித்துக் கொண்டிருந்தபோது, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனிதர்கள் யோப்பா பட்டணத்திற்கு வந்து, பேதுரு தங்கியிருந்த வீட்டின் வாசலுக்கு முன்வந்து நின்றார்கள். அப்பொழுது ஆவியானவர்: “இதோ, மூன்று மனுஷர்கள் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல்

அவர்களுடனே கூடப் போ, நானே அவர்களை அனுப்பினேன்” என்று அவனுக்குச் சொன்னார். (20)

இது பேதுருவுக்கு ஒரு சோதனையான கட்டளையாக இருந்தது. அவன் விருப்பமில்லாதவனாக, அந்த வேலையைச் செய்வதற்கு ஒவ்வொரு அடியையும் எடுத்துவைத்தான். ஆனால் அவன் கீழ்ப்படியாமலிருக்கத் துணியவில்லை. “அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய், இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான். நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான்.” அவர்களுடைய பயணத்தின் நோக்கத்தைக்கூறிட அவர்கள்: “நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும் யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சிபெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டிற்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி, பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார்” என்றார்கள். (21)

தேவனிடமிருந்து தற்போது கிடைத்த கற்பனைக்கு கீழ்ப்படிந்து, அவர்களுடன் செல்லுவதற்கு அப்போஸ்தலன் வாக்குத்தத்தம் செய்தான். மறுநாள் காலையில் அவனுடன் ஆறு சகோதரர்களையும் கூட்டிக்கொண்டு, செசரியாவிற்குச் செல்லப் புறப்பட்டான். புறஜாதியினரைச் சந்திக்கும்போது, அவன் என்னவெல்லாம் சொல்லுகிறான் மற்றும் செய்கிறான் என்பதற்கு, இவர்கள் சாட்சிகளாக இருந்தார்கள். ஏனெனில், யூத போதனைகளை மீறிச் செய்த காரியங்களுக்கு கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும் என்று பேதுரு அறிந்திருந்தான். (22)

பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்குள் பிரவேசித்தபோது, கொர்நேலியு அவனை சாதாரணமாகச் சந்திக்கின்ற ஒருவனாக வந்தனம் செய்யாமல், பரலோகத்தினால் கனப்படுத்தப்பட்டு, தேவனால் அவனிடத்திற்கு அனுப்பப்பட்ட ஒருவனாக எண்ணி, வந்தனம் செலுத்தினான். ஒரு பிரபுவின்முன் அல்லது மிக மேலான மேன்மையான மனிதனின் முன், குனிந்து வணங்குவதும் பிள்ளைகள் பெற்றோரைக் குனிந்து வணங்குவதும் கீழ்த்திசை நாட்டுச் சம்பிரதாயமாக உள்ளது. ஆனால் கொர்நேலியு தேவனால் அனுப்பப்பட்ட ஒருவன்முன், பக்தியினால் கீழ்ப்படிந்து, அப்போஸ்தலனின் பாதங்களில் விழுந்து அவனை வணங்கினான். பேதுரு திகைப்படைந்தவனாக, அந்த நூற்றுக்கு அதிபதியைத் தூக்கி நிறுத்தி: “எழுந்து நில், நானும் உன்னைப்போல் ஒரு மனிதன் தான்” என்றான். (23)

கொர்நேலியுவினால் பேதுருவை அழைக்க அனுப்பப்பட்டவர்கள் பயணத்தில் சென்றிருந்தபோது, அந்த நூற்றுக்கு அதிபதி, தன் உறவின்

முறையாரையும், தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூட வரவழைத்து, அவனைப்போலவே அவர்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்பதற்காகக் காத்திருந்தனர். பேதுரு வந்தபோது, அவனது பேச்சைக் கேட்பதற்காக, ஒரு பெரும் கூட்டத்தினர் ஒன்று சேர்ந்திருப்பதை அவன் கண்டான். (24)

அங்கு கூடியிருந்தவர்களிடம் பேதுரு, முதலில் புறஜாதியாருடன் யூதர்கள் கலந்திருப்பது சட்டவிரோதமான ஒன்று என்றும், இப்படிச் செய்வது சடங்காச்சாரமான தீட்டு என்றும் பார்க்கப்பட்டிருந்தது என்று கூறி, யூத சம்பிரதாயத்தைப்பற்றிப் பேசினான். அவர்களை நோக்கி: "அந்நிய ஜாதியானோடே கலந்து, அவனிடத்தில் போக்கு வரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு, தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது, நான் எதிர் பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்திற்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்." (25)

அப்பொழுது கொர்நேலியு, அவனது அனுபவத்தையும் தூதன் முடிவாகக் கூறினதையும் சொல்லி, "அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான்.". (26)

அப்பொழுது பேதுரு: "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்றான். (27)

அதற்குப்பின், கவனமாகக் கேட்டிருந்தவர்களுக்கு அந்த அப்போஸ்தலன் கிறிஸ்துவைப் பிரசங்கித்தான். அவருடைய வாழ்க்கை, அவர் செய்த அற்புதங்கள், அவர் காட்டிக்கொடுக்கப்பட்டது, அவர் சிலுவையில் அறையப்பட்டது, அவரது உயிர்த்தெழுதல், அவர் பரலோகத்திற்கு எழுந்தருளியது, மனிதனின் பிரதிநிதியாகவும் பரிந்து பேசுபவராகவும் பரலோகத்தில் அவர் செய்துகொண்டிருக்கும் ஊழியம் ஆகியவைகளைப்பற்றிப் பேசினான். (28)

பாவியின் ஒரே நம்பிக்கையாகக் கிறிஸ்து இருப்பதை அங்கே இருந்தவர்களுக்குப் பேதுரு சுட்டிக்காட்டியபோது, அவன் கண்டிருந்த

தரிசனத்தின் முழு அர்த்தத்தையும் அவன் தானே புரிந்துகொண்டபோது, அவன் அவர்கள்முன் வைத்துக்கொண்டிருந்த சத்தியத்தின் ஆவியினால், அவனது இருதயம் எரிந்து பிரகாசித்தது. (29)

பரிசுத்த ஆவியின் இறங்குதலினால், திடீரென்று அந்தப் பிரசங்கத்திற்குத் தடங்கல் உண்டானது. "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில், வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும், பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே கூடவந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்." (30)

"அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்". (31)

இவ்வாறாக, அந்நியர்களும் பரதேசிகளுமாக இருந்தவர்களைப் பரிசுத்தவான்களின் உடன் நகரத்தார்களும் தேவனுடைய வீட்டாராகவும் ஆக்கிக்கொள்ளுவதற்கு சுவிசேஷம் கொண்டுவரப்பட்டது. கொர்நேலியு அவனது வீட்டார் ஆகியோரின் மாற்றம், களஞ்சியத்தில் சேர்க்கப்படவேண்டிய அறுவடையின் முதற்பலனாக இருந்தது. இந்த வீட்டாரிலிருந்து நகரம் முழுவதற்கும், கிருபையின் பணி விசாலமாகச் சுமந்துசெல்லப்பட்டது. (32)

இன்று கர்த்தர் மிகவும் மேலானவர்களுக்கிடையிலிருந்தும் மிகவும் கீழானவர்களுக்கிடையிலிருந்தும், ஆத்துமாக்களைத் தேடிக் கொண்டிருக்கிறார். உலகத்திலுள்ள கர்த்தரின் பணியுடன் தங்களை இணைத்துக்கொள்ளும்படி, கர்த்தர் விரும்புகின்றவர்களாக கொர்நேலியுவைப் போன்ற அநேகர் உள்ளனர். அவர்களுடைய அனுதாபம் கர்த்தருடைய பிள்ளைகளுடன் இருக்கிறது. ஆனால் உலகத்துடன் அவர்களை இணைக்கும் கட்டுகள், அவர்களை உறுதியாகப் பிடித்துக்கொள்ளுகின்றன. தங்களுடைய நிலையைக் கிறிஸ்துவிற்கென்று எடுத்துக்கொள்ளுவதற்கு அவர்களுக்கு சன்மார்க்க தைரியம் அவசியமானதாக உள்ளது. பெரும் அபாயத்திற்குள் இருக்கும் இந்த ஆத்துமாக்களுக்காக அவர்களுடைய பொறுப்புகள், உறவுகள் காரணமாகச் சிறப்பான முயற்சிகள் செய்யப்படவேண்டும். (33)

மேல்வகுப்பினருக்குச் சுவிசேஷத்தைச் சுமந்துசெல்லுவதற்கு அக்கறையும் தாழ்மையுமான ஊழியக்காரர்களை தேவன் அழைக்கிறார். உண்மையான மனமாற்றத்திற்காக அற்புதங்கள் நிகழ்த்தப்படவேண்டும்.

இப்பொழுது அறியப்படாமலுள்ள அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டாகவேண்டும். ஆச்சரியத்தைச் செய்கின்ற தேவனுடைய வல்லமைக்கு அப்பாற்பட்டவர்களாக, பூமியிலுள்ள மிகப் பெரிய மனிதர்களும்கூட இல்லை. அவருடன் சேர்ந்து பணியாற்றுபவர்கள், வாய்ப்பைப் பயன்படுத்துபவர்களாக இருந்தால், கடமையை தைரியத்துடனும் விசுவாசத்துடனும் செய்தால், அப்பொழுது பொறுப்பான மனிதர்களையும் நுண்ணறிவும் செல்வாக்கும் உள்ள மனிதர்களையும் தேவன் மாறச்செய்வார். பரிசுத்தஆவியின் வல்லமையின் மூலமாக அநேகர் தெய்வீகக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுவார்கள். சத்தியத்திற்காக மாற்றமடைந்தவர்கள், ஒளியை மற்றுள்ளவர்களுக்குக் கொடுப்பதற்காக, தேவனுடைய கரத்தில் ஏதுகரங்களாக இருப்பார்கள். அலட்சியப்படுத்தப்பட்டுள்ள இந்த வகுப்பிலுள்ள மற்ற ஆத்துமாக்களுக்காக, அவர்கள் விசேஷமான பாரத்தை உடையவர்களாக இருப்பார்கள். தேவனுடைய பணிக்கென்று காலமும், பணமும் அர்ப்பணம் செய்யப்படும். புதிய திறமையும், வல்லமையும் சபையில் கூட்டப்படும். (34)

கொர்நேலியு தான் பெற்றுக்கொண்டிருந்த உபதேசங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்திருந்ததினால், அவனுக்கு அதிகமான சத்தியம் கிடைக்கவேண்டுமென்று, இந்த சம்பவத்திற்கு தேவன் கட்டளையிட்டார். கொர்நேலியுவைப் பெரும் ஒளிக்குள் நடத்தக்கூடிய ஒருவனுடன் தொடர்புபடுத்தும்படி பரலோகத்திலிருந்து ஒரு தூதன், ரோமநாட்டு அதிகாரியினிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் அனுப்பப்பட்டான். (35)

நாம் யூகிப்பதைவிட தேவனுடைய இராஜ்யத்திற்கு மிக அருகில் இந்த உலகத்தில் அநேகர் உள்ளனர். பாவத்தால் இருளடைந்துள்ள இந்த உலகில், தம்முடைய தூதர்களை அனுப்பி, வழிநடத்தும்படி அனுப்பக்கூடிய விலைமதிப்புமிக்க அநேக ஆபரணங்களை உடையவராகக் கர்த்தர் இருக்கிறார். கிறிஸ்துவிற்காகத் தங்களுடைய நிலையில் நிற்கக்கூடியவர்கள் எங்கும் உள்ளனர். உலகப்பிரகாரமான எந்த அனுகூலத்தையும்விட, தேவனுடைய ஞானத்தையே பரிசாகக் கருதி, விசுவாசத்துடன் ஒளியைத் தாங்கிச் செல்லுபவர்களாக அநேகர் இருப்பார்கள். கிறிஸ்துவின் கிருபையினால் நெருக்கி ஏவப்படும் அவர்கள், மற்றவர்களை அவரிடம் வந்துசேரும்படி நெருக்கி ஏவுவார்கள். (36)

யூதேயாவிலிருந்த சகோதரர்கள் பேதுரு ஒரு புறஜாதியானுடைய வீட்டிற்குச் சென்றிருந்தானென்றும், அங்கு கூடியிருந்தவர்களுக்குப் பிரசங்கம்செய்தானென்றும் கேள்விப்பட்டபோது, ஆச்சரியமும் எதிர்ப்பும் உடையவர்களானார்கள். அப்படிப்பட்ட ஒரு நடத்தை இறுமாப்புடையதாக அவர்களுக்குக் காணப்பட்டது. அது அவனுடைய போதனைக்கு

எதிர்ச்செயலாகிவிடுமென்று அவர்கள் பயந்தனர். அடுத்த முறை அவர்கள் பேதுருவைச் சந்தித்தபோது, விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே ஏன் போஜனம்பண்ணினீர் என்று அவனோடே வாக்குவாதம்பண்ணினார்கள். (37)

பேதுரு அந்தக் காரியம் முழுவதையும் அவர்கள்முன் வைத்தான். அவன் தான் கண்ட தரிசனத்தைப்பற்றிய அனுபவத்தை விவரித்து, அந்தத் தரிசனமானது விருத்தசேதனம் அல்லது விருத்தசேதனம் இல்லாமை என்னும் சடங்காச்சாரத்தை வேறுபடுத்திக் கடைப்பிடிக்கக்கூடாதென்றும், புறஜாதியினரை அசுத்தமானவர்களென்று பார்க்கக்கூடாது என்றும், தேவன் எச்சரித்ததாகப் பரிந்துபேசினான். புறஜாதியாரிடம் புறப்பட்டுச்செல்லும்படி அவனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையையும், தூதர்கள் தன்னிடம் வந்ததையும், அவன் செசரியாவிற்குப் பயணம்செய்ததையும், கொர்நேலியுவைச் சந்தித்ததையும் அவர்களிடம் கூறினான். அந்த நூற்றுக்கு அதிபதியுடன் அவன் நடத்தின நேர்காணலின் பொருளையும், அதில் கொர்நேலியு தான் கண்ட தரிசனத்தின்படி பேதுருவுக்காக ஆட்களை அனுப்பினதையும் அவன் மீண்டும் கூறினான். (38)

“நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்களோ பரிசுத்த ஆவியனாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அனுக்கிரகம்பண்ணினதுபோல, அவர்களுக்கும் அந்த வரத்தையே அனுக்கிரகம்பண்ணியிருக்கும்போது, தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்” என்று பேதுரு கூறினான். (39)

இந்த விபரத்தைக் கேட்டபோது, சகோதரர்கள் மௌனப்படுத்தப் பட்டனர். பேதுருவின் நடத்தை தேவனுடைய திட்டத்தின் நேரடியான நிறைவேறுதல் என்றும், அவர்களுடைய தவறான எண்ணமும், தனித்தவர்கள் என்ற தன்மையும் சுவிசேஷத்தின் ஆவிக்கு நேரெதிரானது என்றும் அறிந்து, மனநிறைவையடைந்து, “அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.” (40)

இவ்வாறாக, எதிர்வாதம் எதுவுமின்றி, தவறான எண்ணமும் காலங்களாக ஏற்படுத்தப்பட்டிருந்த தனித்தவர்கள் என்ற சம்பிரதாயமும்

நீக்கப்பட்டுக் கைவிடப்பட்டபோது, புறஜாதியினருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கின்ற பாதை திறக்கப்பட்டது. (41) ★

# 15

# சிறைச்சாலை என்ன செய்யும்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 143–154)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 12:1–23**

"அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கினான்" அப்பொழுது யூதேயா அரசு, ஏரோது அகிரிப்பாவின் கரங்களில், கிளாடியஸ் என்னும் ரோம நாட்டுப் பேரரசர்களின்கீழ் இருந்தது. ஏரோது கலிலேயாவின் காற்பங்கு தேசாதிபதியாகவும் இருந்தான். அவன் பெயரளவில் யூதமதத்தை தழுவினவனாக, யூத நியாயப்பிரமாணச் சடங்காச்சாரங்களைச் செயல்படுத்துவதில் வைராக்கியமுள்ளவனாக இருந்தான். யூதர்களின் ஆதரவைப்பெற விரும்பினவனாக இருந்த அவன், அதன்மூலமாகத் தனது பதவியையும் மேன்மைகளையும் பாதுகாத்துக்கொள்ளலாமென்ற நம்பிக்கையுடன் கிறிஸ்துவின் சபையை உபத்திரவப்படுத்துவதற்கும், விசுவாசிகளின் வீடுகளையும் பொருள்களையும் நாசப்படுத்துவதற்கும், சபையின் தலையாய அங்கத்தினர்களைச் சிறைப்படுத்துவதற்கும், யூதர்களுடைய விருப்பத்தின்படி புறப்பட்டுச்சென்றான். மற்றொரு ஏரோது, தீர்க்கதரிசியான யோவான் ஸ்நானகனின் தலையைத் துண்டித்ததைப்போல, யோவானின் சகோதரனான யாக்கோபைச் சிறையிலிட்டபின் வாளால் வெட்டிக் கொலைசெய்யும்படி ஒரு கொலைகாரனை அனுப்பியிருந்தான். இந்த முயற்சிகளில் யூதர்கள் மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருப்பதைக்கண்டு, அவன் பேதுருவையும் சிறையிலிட்டான். (1)

இந்தக் கொடூரமான செயல்கள் பஸ்கா பண்டிகையின் நேரத்தில் செய்யப்பட்டிருந்தன. யூதர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடியிருந்து, நியாயப்பிரமாணத்தின்மீது மிகுந்த வைராக்கிய முள்ளவர்களைப்போல நடித்துக்கொண்டிருந்த அதே நேரத்தில், கிறிஸ்துவின் விசுவாசிகளை உபத்திரவப்படுத்துவதன்மூலமாகவும், கொலைசெய்வதன்மூலமாகவும், அந்த நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு கற்பனையையும் மீறிக்கொண்டிருந்தனர். (2)

யாக்கோபின் மரணம் கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கிடையில் பெரும் வருத்தத்தையும் பீதியையும் குழப்பத்தையும் கொண்டு வந்திருந்தது. பேதுருவும் சிறைப்படுத்தப்பட்டபோது, சபை முழுவதும் உபவாசத்திலும் ஜெபத்திலும் ஈடுபட்டது. (3)

யாக்கோபைக் கொலைசெய்த ஏரோதின் செயல், யூதர்களால் கைகொட்டி வரவேற்கப்பட்டது. ஒரு பொது இடத்தில் இந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தால், அது விசுவாசிகளையும் அவர்களுடன் சேர்ந்து, அவர்களிடம் அனுதாபம் காட்டியிருந்தவர்களையும் முழுவதுமாகப் பயப்படுத்தியிருந்திருக்கும் என்றும், அப்படிச் செய்யாமல் தனிமையான முறையில் இதை நிறைவேற்றியதைப்பற்றிச் சிலர் குற்றம்சாட்டியிருந்தனர். எனவே, பேதுருவின் மரணம் பொதுமக்கள் காணக்கூடிய விதத்தில் நிறைவேற்றப்பட்டால், அது யூதர்களுக்கு இன்னும் மனநிறைவானதாக இருக்கும் என்று பேதுருவைப் பாதுகாப்பில் வைத்திருந்தான். ஆனால் அப்பொழுது எருசலேமில் கூடியிருந்த அனைவருக்கும் முன்பாக, தேர்ச்சிபெற்ற அப்போஸ்தலனைக் கொண்டுவருவது பாதுகாப்பானதாக இருக்காது என்னும் கருத்தும் கூறப்பட்டிருந்தது. அவனுக்கு மரணதண்டனை கொடுப்பதற்கென்று அவனை நடத்திக்கொண்டு செல்லும் காட்சி, திரளானவர்களின் இரக்கத்தைத் தூண்டிவிடும் என்றும் அஞ்சப்பட்டது. (4)

இயேசுவின் வாழ்க்கையையும் சுபாவத்தையும் ஆராயும்படி, மக்களை அடிக்கடி எழுப்பிவிட்டிருந்த பேதுருவின் வல்லமைமிக்க வேண்டுகோள்களில் ஒன்றை அவன் செய்துவிடக்கூடாது என்று ஆசாரியர்களும் மூப்பர்களும் பயந்திருந்தனர். அந்த வேண்டுகோள்கள் அவர்களது வாதங்களனைத்தினாலும் எதிர்க்க முடியாததாக இருந்திருந்தது. (5)

கிறிஸ்துவின் காரியத்திற்காக பேதுரு செய்திருந்த பரிந்துபேசுதலின் வைராக்கியமானது, அநேகரை சுவிசேஷத்திற்காக நிற்கும்படிச் செய்திருந்தது. எனவே தனது விசுவாசத்தை விவாதித்துப் பேசும்படியான ஒரு வாய்ப்பு தொழுவதற்காக நகரத்திற்கு வந்திருக்கும் திரளானவர்களுக்குமுன் அவனுக்குக் கொடுக்கப்பட்டால், மக்கள் அவனை விடுதலைசெய்யும்படி அரசனிடம் கோரிக்கைசெய்வார்கள் என்று அதிபதிகள் பயந்தார்கள். (6)

பலவிதமான போலியான காரணங்களின் பேரில் பஸ்கா பண்டிகை முடியும்வரை, பேதுருவின் மரணதண்டனை தாமதப்படுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, சபை அங்கத்தினர்கள் இருதயங்களை ஆழமாகச் சோதிக்கவும், அக்கறைமிக்க ஜெபத்தில் ஈடுபடவும், நேரமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் பேதுருவிற்காக இடைவிடமால் ஜெபம்செய்திருந்தனர். ஏனெனில் (கிறிஸ்துவின்) காரியத்திலிருந்து அவனை நீக்கிவைக்க

முடியாமலிருந்தது. தேவனுடைய சிறப்பான உதவி இல்லாவிட்டால், கிறிஸ்துவின் சபை அழிக்கப்பட்டுவிடும் என்னும் ஒரு கட்டத்தை அவர்கள் அடைந்திருப்பதை உணர்ந்தனர். (7)

அப்படியிருக்கும்போது, தேவனைத் தொழுதுகொள்ளும்படி பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆலயத்திற்கு ஆராதனை செய்பவர்கள் ஒவ்வொரு தேசத்திலிருந்தும் தேடிவந்திருந்தனர். பொன்னினாலும் விலைமதிப்புமிக்க கற்களினாலும் ஜுவலித்துக்கொண்டிருந்த ஆலயத்தின் காட்சியானது, அழகும் மேன்மையும் மிகுந்ததாக இருந்தது. ஆனால் கவர்ச்சியான அந்த இடத்தில், யேகோவா காணப்படாமலிருந்தார். ஒரு ஜாதியாக இருந்த இஸ்ரவேல், தேவனிடத்திலிருந்து விவாகரத்து செய்திருந்தது. கிறிஸ்து பூமிக்குரிய அவரது ஊழியத்தின் முடிவைச் சந்தித்தபோது: "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38) என்று கூறினார். இதுவரை அவர் அந்த ஆலயத்தைத் தமது பிதாவின்வீடு என்று அழைத்திருந்தார். ஆனால் தேவகுமாரனாக அவர் அதின் மதில்களைக் கடந்துசென்றபோது, தேவப்பிரசன்னம், அவரது மகிமைக்கென்று கட்டப்பட்டிருந்த கட்டிடத்திலிருந்து என்றென்றைக்குமாக விலக்கிக்கொள்ளப்பட்டிருந்தது. (8)

கடைசியில் பேதுருவின் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கென்று குறிப்பிடப்பட்டிருந்த நாள் வந்தது. ஆனால் விசுவாசிகளின் ஜெபம் மேலும் மேலும் பரலோகத்தை நோக்கி உயர்ந்துகொண்டிருந்தது. உதவிக்காக அவர்களுடைய சக்திகளனைத்தும் அனுதாபங்களும் ஊக்கமான வேண்டுகோள்களினால் ஏறெடுக்கப்பட்டிருந்தபோது, தூதர்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்த அப்போஸ்தலனைக் கவனித்துக் கொண்டிருந்தனர். (9)

முன்பு சிறையிலிருந்து அப்போஸ்தலர்கள் தப்பிச்சென்றிருந்ததை ஞாபகத்தில் வைத்திருந்து, இந்தச் சந்தர்ப்பத்தில் ஏரோது இரண்டு மடங்கு முன்னெச்சரிக்கை செய்திருந்தான். தப்பிப்போகக் கூடிய சகலவிதமான சாத்தியங்களையும் தவிர்ப்பதற்காக, பேதுரு பதினாறு சேனை வீரர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தான். அவர்கள் இரவும் பகலும் மாறிமாறி அவனைக் காவல்செய்திருந்தனர். அவனுடைய அறையில், இரண்டு இராணுவ வீரர்களுக்கு நடுவில் அவன் வைக்கப்பட்டிருந்தான். அவனது இரண்டு கைகளும் இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்டு, ஒவ்வொரு சங்கிலியும் ஒவ்வொரு இராணுவவீரனின் மணிக்கட்டுடன் பிணைக்கப்பட்டிருந்தது. அவர்களையறியாமல் அவனால் நகரவுங்கூட முடியாமலிருந்தது. சிறைக் கதவுகள் பாதுகாப்பாகப் பூட்டப்பட்டு, அதற்குமுன் பலமிக்க

காவலாளி இருக்கவே, மனித முயற்சியின்மூலமாக மீட்கப்பட அல்லது தப்பிச்செல்லுவதற்கான எல்லா வாய்ப்புகளும் அற்றுப்போயிருந்தன. ஆனால் மனிதனின் முடியாதநிலை தேவனுடைய வாய்ப்பாக இருக்கிறது அல்லவா? (10)

பாறையைக் குடைந்தெடுக்கப்பட்ட ஒரு சிறையில் பேதுரு வைக்கப்பட்டிருந்தான். அவைகளின் கதவுகள் பலமாகத் தாழிடப்பட்டு கம்பிகளிடப்பட்டிருந்தன. சிறைக் கைதியின் பாதுகாப்பிற்கு, அந்த இராணுவ வீரர்கள் பதில் கூறவேண்டியவர்களாக இருந்தனர். ஆனால் அந்தச் சுவர்கள், கம்பிகள், ரோம நாட்டு அரசின் காவலர்கள் ஆகியவைகள், தப்பிச்செல்லுவதற்கான மனித உதவிகளை நீக்கியிருந்தன. மேலும் அவை பேதுருவின் விடுதலையில் தேவனுடைய வெற்றியை அதிகமாக முழுமையாக்கியிருந்தன. சர்வ வல்லவருக்கு எதிராக ஏரோது தனது கைகளை உயர்த்திக்கொண்டிருந்தான். அவன் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்படவேண்டியவனாக இருந்தான். தேவன் தமது பலத்தை முன்வைப்பதினால், யூதர்களால் அழிக்கும்படியாகத் திட்டமிட்டிருந்தவனின் விலைமதிப்புமிக்க உயிரானது காப்பாற்றப்படப்போவதாக இருந்தது. (11)

தீர்மானிக்கப்பட்டிருந்த மரணதண்டனைக்கு முந்தின—கடைசி நாளின் இரவாக—அது இருந்தது. பேதுருவை மீட்பதற்காக ஒரு பலமிக்க தூதன் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்தான். தேவனுடைய பரிசுத்தவான்களை உள்ளே அடைந்துவைத்திருக்கும் அந்தப் பலமிக்க வாசல்கள் மனிதக் கைகளின்றித் திறந்தன! உன்னதமானவரின் தூதன் அவைகளுக்கூடாகக் கடந்து சென்றான்! அந்த வாசல்கள் அவனுக்குப் பின்னால், ஓசையின்றி மூடின! அவன் அந்த அறைக்குள் நுழைந்தான். அங்கு பேதுரு பூரணமான நம்பிக்கையுடன், அமைதியான நித்திரையில் உறங்கிக்கொண்டிருக்கிறான். (12)

அந்த தூதனைச் சூழ்ந்திருக்கும் ஒளி, அந்த அறையை நிரப்பியது. ஆனால் அது அப்போஸ்தலனை எழுப்பவில்லை. அந்தத் தூதனின் கரம் அவனைத் தொடுவதை உணரும்வரை, “சீக்கிரமாக எழுந்திரு” என்னும் ஒரு குரலைக் கேட்கும்வரை, அவனுடைய அறை பரலோகத்தின் ஒளியினால் ஒளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கும், பெரும் மகிமைமிக்க ஒரு தூதன் தனக்கு முன்னால் நின்றுகொண்டிருப்பதைப் பார்ப்பதற்கும் அவன் போதுமான அளவிற்கு விழிக்கவில்லை. தன்னிடம் கூறப்பட்ட வார்த்தைகளுக்கு இயந்திரத்தனமாகக் கீழ்ப்படிந்து எழுந்திருப்பதற்காக தன் கைகளை உயர்த்தினபோது, தனது மணிக்கட்டுக்களிலிருந்து அந்தச் சங்கிலிகள் விழுந்தன என்பதை மங்கலாக உணருகிறான். (13)

"உன் அரையைக் கட்டிக்கொண்டு, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்" என்னும் அந்தப் பரலோகத் தூதனின் குரல் அவனுக்கு மறுபடியும் கட்டளையிடுகிறது. திரும்பவும் பேதுரு தன்னைச் சந்தித்திருப்பவனின்மீது தனது கண்களை ஆச்சரியமான விதத்தில் பதித்தவனாக, இயந்திரத்தனமாகக் கீழ்ப்படிந்து, தான் ஒரு கனவு கண்டுகொண்டிருப்பதாக அல்லது ஒரு தரிசனம் கண்டுகொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டான். "உன்னுடைய சால்வையைப் போர்த்துக்கொண்டு, என்னைப் பின்பற்றி வா" என்று அந்த தூதன் மறுபடியும் கட்டளையிடுகிறான். பொதுவாக அதிகமாகப் பேசக்கூடிய பேதுரு, இப்பொழுது ஆச்சரியத்தினால், ஊமையனாகப் பின்தொடர, அவன் (அந்தத் தூதன்) கதவை நோக்கிச் செல்லுகிறான். அவர்கள் காவலாளியைக் கடந்து, கனமாகத் தாழிடப்பட்டுள்ள கதவினருகில் செல்லுகின்றனர். அந்தக் கதவிற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் காவலாளிகள் அசையாமல் அவர்கள் நிலையில் இருக்கும்போது, அசைந்து தானாகவே திறந்து, உடனே தானாகவே மூடிக்கொள்ளுகிறது. (14)

உள்ளும் புறமுமாகக் காவல்செய்யப்பட்டிருக்கும் இரண்டாவது வாசலை அவர்கள் அடைகின்றனர். முதலாவது கதவைப்போலவே, கீல்களின் சத்தமும் தாழ்களின் சத்தமும் இல்லாமல் இரண்டாவது கதவும் திறக்கிறது. அவர்கள் அதனைக் கடந்துசென்று, அதேவிதமாக மூன்றாவது வாசலையும் கடந்து தெருவில் நிற்பதை காண்கின்றனர். எந்த வார்த்தையும் பேசப்படவில்லை. காலடிகளின் ஓசை எதுவும் இருக்கவில்லை. திளங்கும் ஒளி தன்னைச்சுற்றி வட்டமிட, அந்த தேவதூதன் தாழ்வாகப் பறந்துசெல்லுகிறான். பேதுரு குழப்பமடைந்தவனாக தான் இன்னும் ஒரு கனவில் இருப்பதாக எண்ணிக்கொண்டு, தன்னை விடுதலைசெய்ய வந்தவனைத் தொடருகிறான். அதன்பின் அவர்கள் ஒரு தெருவைக் கடந்துசென்றதும், அந்த தூதனின் வேலை நிறைவேறிவிடவே, அவன் திடீரென்று மறைந்துவிடுகிறான்! (15)

பரலோக ஒளி மங்கி மறைந்துவிடவே, பேதுரு தான் ஆழந்த இருளில் இருப்பதை உணர்ந்தான். ஆனால் அவனுடைய கண்கள் அந்த இருளுக்குப் பழக்கமாகிவிட்டபோது, அந்த இருள் மெல்லக்குறைவதுபோல் காணப்படவே, அவன் அந்த மௌனமான தெருவில் குளிர்காற்று அவனது நெற்றியில்வீச, தான் தனிமையாக இருப்பதைக் கண்டான். இப்பொழுது அவன் அந்த நகரத்தின் தனக்குத் தெரிந்த வீதியில், உண்மையாகவே சுதந்திரமானவனாக இருப்பதை உணர்ந்தான். அவன் அடிக்கடி போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்த இடம் அது என்பதை அடையாளம் கண்டு, தான் இந்த வழியாகத்தான் (மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்காக) கடைசித் தடவையாகக் கடந்துசெல்லவேண்டியிருந்தது என்பதை உணர்ந்தான். (16)

சில வினாடிகளுக்குமுன் நடந்த சம்பவங்களை திரும்பவும் நினைத்துப்பார்க்க அவன் முயன்றான். அவன் தனது காலணிகளையும் மேலாடையையும் கழற்றிவைத்துவிட்டு, இரண்டு காவலாளிகளுக்கு நடுவில் உறங்கிக்கொண்டிருந்ததை ஞாபகப்படுத்திக்கொண்டான். தன்னைச் சோதித்துப் பார்த்தபோது, முழுமையாக உடை அணிந்திருப்பதையும், அரையைக் கட்டினவனாக இருப்பதையும் கண்டான். கொடுமைமிக்க இரும்புச் சங்கிலிகளினால் வீங்கியிருந்த அவனது மணிக்கட்டுகள், இப்பொழுது அந்தக் கைவிலங்குகளிலிருந்து விடுதலை அடைந்திருந்தன. அவனது சுதந்திரம், பொய்த்தோற்றமாகவோ அல்லது கனவாகவோ தரிசனமாகவோ இல்லாமல், உண்மையான ஆசீர்வாதமாக இருந்ததை உணர்ந்தான். மறுநாள் காலையில், மரணத்திற்கென்று அவன் நடத்திச்செல்லப்படவேண்டியவனாக இருந்தான். ஆனால் அவனை இதே சிறையிலிருந்தும் மரணத்திலிருந்தும் ஒரு தூதன் விடுதலைசெய்திருக்கிறான். “பேதுருவிற்குத் தெளிவுவந்தபோது, ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்”. (17)

அந்த அப்போஸ்தலன், உடனே அவனது சகோதரர்கள் எங்கு கூடியிருந்து அவனுக்காக அக்கறையுடன் அந்த நேரத்தில் ஜெபம் செய்துகொண்டிருந்தார்களோ, அந்த வீட்டைச் சென்றடைந்தான். “பேதுரு வாசற்கதவைத் தட்டினபோது, ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள். அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து, மகிழ்ச்சியினால் கதவைத் திறவாமல் உள்ளேயோடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள். அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ: அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள் அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்.” (18)

“பேதுரு மேலும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது, அவனைக்கண்டு பிரமித்தார்கள். அவர்களைப் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கினவிதத்தை அவர்களுக்கு விவரித்து, இந்தச் செய்தியை யாக்கோபிற்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லிப்புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப்போனான்”. தேவன் அவர்களுடைய ஜெபங்களைக்கேட்டு, அதற்கு மறுமொழி கொடுத்து, பேதுருவை ஏரோதின் கைகளிலிருந்து விடுவித்ததினால், விசுவாசிகளின் இருதயங்கள் மகிழ்ச்சியினாலும் துதியினாலும் நிரம்பின. (19)

அந்த அப்போஸ்தலனின் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதைக் காண்பதற்காக திரளான மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். பெரும் பாதுகாப்புடனும்

விளம்பரத்துடனும், பேதுரு தப்பிச் சென்றுவிடுவதைத் தவிர்ப்பதை உறுதிப் படுத்தவும், (சுவிசேஷத்தின்) அனுதாபிகள் அனைவரையும் அச்சுறுத்தவும், அந்த அரசனின் வல்லமையைக் காட்டுவதற்காகவும், பெரும் ஆயுதங்கள், காவலாளிகள் ஆகியோரின் விளம்பரத்துடனும் பேதுருவைச் சிறைச்சாலை யிலிருந்து கொண்டுவருவதற்காக, ஏரோது தன்னுடைய அதிகாரிகளைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைத்தான். (20)

கதவிற்கு முன்னாலிருந்த காவலாளிகள் பேதுரு தப்பிச்சென்று விட்டத்தைக் கண்டபோது, திகில் அவர்களைப் பற்றிக்கொண்டது. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவர்களின் உயிருக்கு ஈடாக அவர்களுடைய உயிர்கள் கேட்கப்படும் என்று அழுத்தமாகக் கூறப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவர்கள் மிகவும் விழிப்புள்ளவர்களாக இருந்திருந்தனர். பேதுருவை அழைத்துச்செல்ல அந்த அதிகாரிகள் சிறைச்சாலைக்கு வந்தபோது, காவலாளிகள் இன்னும் சிறைக்கதவினருகில் இருந்திருந்தனர். சிறைக்கதவின் தாழ்ப்பாள்களும் கம்பிகளும் இன்னும் தாழிடப்பட்டிருந்தன. இரண்டு காவலாளிகளின் மணிக்கட்டுகளிலும் சங்கலிகள் பூட்டப்பட்டிருந்தன; ஆனால் அந்தக் கைதியோ சிறையைவிட்டுச் சென்றிருந்தான். (21)

பேதுரு தப்பிச்சென்ற விபரத்தை ஏரோது கேட்டபோது, எரிச்சலடைந்து சீற்றமடைந்தான். சிறைக் காவலர்களின்மீது விசுவாசமில்லாதவர்களென்று குற்றம்சாட்டி, அவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கும்படியாக அவன் கட்டளையிட்டான். மனித வல்லமை எதுவும் பேதுருவைக் காப்பாற்றவில்லை என்பதை ஏரோது அறிந்திருந்தான். ஆனால் அவனது திட்டங்களை நடத்தவிடாமல் செய்திருந்த தெய்வீக வல்லமையை ஒப்புக்கொள்ளாமலிருப்பதில், தீர்மானம் உள்ளவனாக இருந்தான். அவன் தன்னைத்தான் தேவனுக்குக் கீழ்ப்படியாதவனாக ஏற்படுத்தியிருந்தான். (22)

பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதன்பின், ஏரோது அதிகம் தாமதியாமல் செசரியாவிற்குச் சென்றான். அப்பொழுது அங்குள்ள மக்களின் பெரும்போற்றுதல்களையும்கைதட்டல்களையும்தூண்டிவிடும்நோக்கத்துடன், ஒரு பெரும் பண்டிகையை நடத்தினான். சுகபோகங்களை அனுபவிக்க விரும்பியிருந்த அநேகர், பல இடங்களிலிருந்தும் கூடியிருந்தனர். இங்கு விருந்துகொண்டாடுதலும் மது அருந்துவதும் மிகுதியாக இருந்தது. ஏரோது ஜனங்களுக்குமுன் தோன்றி, அவர்களிடம் மிகுந்த பேச்சுத் திறமையுடன் பேசினான். அவன் பொன் இழைகளினாலும் வெள்ளி இழைகளினாலும் நெய்யப்பட்டிருந்த உடையை அணிந்திருந்தான். அவைகளின் மடிப்புகள் சூரியனின் திளங்கும் ஒளிக்கதிர்களைப் பிடித்துவைத்துக் காண்பவர்களின் கண்களைக் கூசச்செய்திருந்தன. அவனுடைய மகத்துவமிக்க தோற்றமும்,

அவனால் நன்கு தெரிந்துகொள்ளப்பட்டிருந்த வார்த்தைகளினாலான சொல்வன்மையும், பலத்த வல்லமையினால் அந்தக் கூட்டத்தினரை அடித்துச்சென்றிருந்தது. மிதமிஞ்சிய விருந்துணவினாலும் மதுவினாலும் அவர்களுடைய புலன்கள் ஏற்கனவே சீர்கெட்டிருந்தன. ஏரோதின் அலங்காரத்தினால் கண் கூச்சமடைந்தவர்களாகி, அவனது நடத்தை, பேச்சு ஆகியவைகளால் வசீகரிக்கப்பட்டிருந்த அவர்கள், உற்சாகத்தினால் காட்டுத்தனமாகியிருந்த அவர்கள், ஒருவராலும் அவனைப்போன்ற தோற்றத்தைத் தரவோ அல்லது சொல்வன்மை பெற்றிருக்கவோ முடியாது என்று அழிவுக்குரிய அவனை அறிவித்து, போற்றுதல்களை அவன்மீது பொழிந்தனர். அவனை இதுவரை அதிபதியாகக் கருதி, அவனுக்கு மரியாதை செலுத்தியிருந்தவர்கள், இனிமேல் அவனை ஒரு தெய்வமாகத் தொழப்போவதாக அச்சமயம் அறிவித்தனர். (23)

வெறுக்கத்தக்க பாவியான ஒருவனை மகிமைப்படுத்தியிருந்தவர்களில் சிலரது குரல்கள், சில வருடங்களுக்குமுன் இயேசுவை, "இவனை அகற்றும்," "இவனைச் சிலுவையில் அறையும்" என்று கட்டுக்கடங்காத வெறியில் கூக்குரலிட்டிருந்தனர். எந்த ஒருவருடைய உடை அடிக்கடி செய்த பயணத்தால் கறைபடிந்து, அவரது தெய்வீகத் தன்மையை மூடியிருந்ததோ, அந்தக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள யூதர்கள் மறுத்திருந்தனர். சாதாரணமான மனிதனால் செய்யமுடியாத காரியங்களால் கிறிஸ்துவின் வல்லமை அவர்கள்முன் வெளிப்படுத்தப்பட்டிருந்தும், தாழ்மைமிக்க வெளிப்படையான தோற்றத்திலிருந்த கிறிஸ்துவை, ஜீவனுக்கும் மகிமைக்கும் ஆண்டவராகிய அவரை, அவர்களுடைய கண்கள் அறிந்துகொள்ள முடியாததாக இருந்தது. ஆனால் பிரகாசிக்கக்கூடியவிதமான வெள்ளியினாலும் பொன்னினாலுமான ஆடையினால் மூடப்பட்டிருந்த, கறைபடிந்த கொடுமைமிக்க இருதயத்தை உடையவனாக இருந்த அந்த அகந்தைமிக்க அரசனை, தெய்வம் என்று தொழுவதற்கு அவர்கள் ஆயத்தமாகியிருந்தனர்! (24)

ஏரோது, தனக்குக் கொடுக்கப்பட்ட துதிகளுக்கும் வணக்கத்துக்கும் தகுதியானவனாக இல்லையென்பதை அறிந்திருந்தான். அப்படியிருந்தும் அவன் அந்த மக்களின் விக்கிரக ஆராதனை தனக்கு உகந்தது என்று ஏற்றுக்கொண்டான். "இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம்" என்னும் குரல்களை அவன் கேட்டபோது, அவனுடைய இருதயம் வெற்றியினாலும் அகந்தையினாலும் நிறைந்து தடித்தது. (25)

ஆனால் திடீரென்ற ஒரு மாற்றம் அவனில் உண்டானது. அவனது முகம் இறந்தவனின் முகத்தைப்போல் வெளுத்து, வேதனையினால் உருக்குலைந்தது. அவனது சருமத் துவாரங்களிலிருந்து வியர்வையின்

பெரும் துளிகள் வரத்தொடங்கின. பயத்தினாலும் திகிலினாலும் பிரமிப்படைந்தவனாக விநாடிநேரம் அவன் அசையாமல் நின்றான். அதன் பின் திகிலடைந்திருந்த அவனது நண்பர்களுக்கு நேராக அவனுடைய வெளிறிய நீலம் பூத்த முகத்தைத் திருப்பி, நம்பிக்கையிழந்து வலிமையற்ற குரலில்: "நீங்கள் யாரைத் தெய்வம் என்று உயர்த்தியிருக்கிறீர்களோ, அவன் மரணத்தால் தாக்கப்பட்டிருக்கிறான்" என்றான். (26)

களியாட்டும் விளம்பரமுமிக்க காட்சியிலிருந்து, மிகுந்த வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்த அவன் நீக்கப்பட்டான். அந்தப் பெரும் கூட்டத்தினரின் போற்றுதலையும் தொழுகையையும் சில விநாடிகளுக்குமுன் அவன் பெற்றவனாக இருந்தான். தன்னைவிட மிக அதிகமான வல்லமையை உடைய ஒரு அதிபதியின்கீழ் அவன் இருக்கிறான் என்பதையும் இப்பொழுது உணர்ந்தான். பாவத்திற்கான வருத்தம் அவனைப் பற்றிக்கொண்டது. ஓய்வு ஒழிச்சலின்றிக் கிறிஸ்துவின் அடியார்களை உபத்திரவப்படுத்தியிருந்ததை அவன் நினைத்துப் பார்த்தான். குற்றமற்றவனாக இருந்த யாக்கோபைக் கொலைசெய்யும்படி அவன் கொடுத்த கொடுமையான கட்டளையை எண்ணிப்பார்த்தான். அப்போஸ்தலனான பேதுருவைக் கொலைசெய்யும்படி அவன் திட்டந்தீட்டியிருந்ததையும் எண்ணிப்பார்த்தான். தனது பெருமைக்கு உண்டான அவமதிப்பினாலும் கோபாவேசத்தினாலும், அவன் சிறைக் காவலர்களை நியாயமான காரணமின்றி மரணதண்டனைக்குட்படுத்தியதையும் எண்ணிப்பார்த்தான். ஓய்வு ஒழிச்சலற்ற உபத்திரவக்காரனாக இருந்த அவனிடம், இப்பொழுது தேவன் இடைப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை அவன் உணர்ந்தான். உடல் வேதனை, மனவேதனை ஆகியவைகளிலிருந்து அவனுக்கு நிவாரணம் உண்டாகவும் இல்லை; அவன் அவைகளில் எதையும் எதிர்பார்க்கவும் இல்லை. (27)

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத்திராகமம் 20:3) என்று கூறும் தேவனுடைய கற்பனையுடன் அறிமுகமானவனாக ஏரோது இருந்தான். ஜனங்களின் தொழுகையை அவன் ஏற்றுக்கொண்டதினால், தன் அக்கிரமத்தின் பாத்திரத்தை நிரப்பி, தன்மீது யேகோவாவின் நீதியான கோபத்தை வரவழைத்துக்கொண்டான். (28)

பேதுருவை மீட்கும்படி பரலோகப் பிராகாரத்திலிருந்து வந்திருந்த அதே தூதன்தான் ஏரோதின்மீது கோபத்தையும் நியாயத்தீர்ப்பையும் நடத்துபவனாக இருந்தான். நித்திரையிலிருந்த பேதுருவை எழுப்பும்படி அந்த தூதன் அவனைத் தட்டினான். ஆனால் அந்தத் துன்மார்க்கமான அரசனின் அகந்தை தாழவிழும்படியும், சர்வவல்லவருடைய தண்டனையை அவன்மீது கொண்டுவரவும் அவன் வேறுவிதமான விதத்தில் ஏரோதை

அடித்தான். தேவகோபத்தினாலுண்டான நியாயத்தீர்ப்பினால், ஏரோது பெரும் மனவேதனையுடனும் உடல் வேதனையுடனும் மரித்தான். (29)

தெய்வீக நீதியின் இந்த நடைமுறை விளக்கம் ஜனங்களின்மீது வல்லமைமிக்க ஒரு செல்வாக்கைக் கொண்டுவந்திருந்தது. சிறையிலிருந்தும் மரணத்திலிருந்தும் கிறிஸ்துவின் அப்போஸ்தலன் ஆச்சரியமான விதத்தில் விடுதலைசெய்யப்பட்ட அதே நேரத்தில் அவனை உபத்திரவம்செய்தவனாக இருந்தவன், தேவ சாபத்தினால் அடிக்கப்பட்டிருந்தான் என்னும் செய்தி எல்லா இடங்களுக்கும் செல்லவே, அது அநேகரைக் கிறிஸ்துவின்மீது நம்பிக்கைவைக்க நடத்தும் உபாத்தியாக மாறினது. (30)

சத்தியத்தைத் தேடிக்கொண்டிருந்த ஒருவனிடத்திற்கு பரலோகத்தி லிருந்துள்ள ஒரு தூதனால் பிலிப்பு நடத்தப்பட்ட அனுபவமும், தேவனிடமிருந்து தூதுடன் ஒரு தூதன் கொர்நேலியுவை சந்தித்த அனுபவமும், மரணதண்டனை விதிக்கப்பட்டவனாகச் சிறையிலிருந்த பேதுரு தூதனால் பாதுகாப்பாக நடத்தப்பட்ட விதமும், பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையிலுள்ள உறவின் நெருக்கத்தைக் காட்டுகிறது. (31)

இந்த தூதனின் சந்திப்புகளின் ஆவணம் தேவனுடைய ஊழியக்காரனுக்கு பலத்தையும் தைரியத்தையும் கொண்டுவரவேண்டும். துயரப்படுகிறவர்களை ஆறுதல்படுத்தவும், பாவத்திற்காக வருந்துபவரைப் பாதுகாக்கவும், மனிதர்களின் இருதயங்களைக் கிறிஸ்துவிற்கென்று ஆதாயப்படுத்தவும் பரலோகத்தின் தூதர்கள் அப்போஸ்தலர்களின் நாட்களில் இருந்ததைப்போன்று இன்றும் நாட்டின் நீளம் அகலம் எங்கும் கடந்து சென்றுகொண்டிருக்கின்றனர். நம்மால் அவர்களை நேரடியாகக் காணமுடியாது. அப்படியிருந்தபோதிலும், அவர்கள் நமக்கு வழிகாட்டிக்கொண்டும் நடத்திக்கொண்டும் பாதுகாத்துக்கொண்டும் நம்முடன் உள்ளனர். (32)

அந்த தெய்வீக ஏணியினால், பரலோகம் பூமிக்கருகில் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் அடிப்பாகம் பூமியின்மீது உறுதியாக ஊன்றப்பட்டுள்ளது. அதன் மிக உயரத்தில் உள்ள வட்டம் முடிவில்லாதவரின் சிங்காசனத்தை அடைந்துள்ளது. தேவை உள்ளவர்களும் துன்பப்படுகிறவர்களுமாக இருப்பவர்களின் ஜெபங்களைப் பிதாவினிடத்திற்கு உயரே எடுத்துக்கொண்டும் ஆசீர்வாதம் நம்பிக்கை, தைரியம், உதவி ஆகியவைகளை மனிதப்பிள்ளைகளிடத்திற்குக் கொண்டுவந்தும், தூதர்கள் ஒளிவீசும் இந்த ஏணியின் வழியாக, தொடர்ச்சியாக உயரே ஏறிக்கொண்டும், கீழே இறங்கிக்கொண்டும் உள்ளனர். காணப்படாத—நித்தியமான இடத்திற்கு நம்மை உயர்த்தி, இந்த ஒளியின் தூதர்கள் ஆத்துமாவைச்

சுற்றி ஒரு பரலோகச் சூழ்நிலையை உண்டுபண்ணுகின்றனர். நமது இயற்கையான கண்களினால், இவர்களது உருவத்தைக் காணமுடியாது. ஆவிக்குரிய பார்வையினால் மட்டுமே, பரலோகக் காரியங்களை நம்மால் அறிந்துகொள்ளமுடியும். பரலோகக் குரல்களின் இசையை ஆவிக்குரிய செவியினால் மட்டுமே கேட்கமுடியும்! (33)

“கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைக் சூழப்பாளயமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார்”-சங்கீதம் 34:7. “இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும் மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும்” தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் காக்கும்படி, தேவன் தமது தூதர்களை ஏற்படுத்துகிறார். மனிதன் தனது நண்பர்களுடன் பேசுவதுபோல தூதர்கள் மறுபடியும் மறுபடியும் மனிதர்களுடன்பேசி, அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நடத்தியிருக்கின்றனர். விசுவாசமுள்ளவர்களின் தொய்ந்துபோன ஆவிகளைப் புதுப்பித்துக்கொண்டும், அவர்களுடைய மனங்களை பூமிக்குரிய காரியங்களைவிட்டு மேலாகச் சுமந்துகொண்டும், ஜெயங்கொள்ளுபவர்கள் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தைச் சூழ்ந்து நிற்கும்போது, பெற்றுக்கொள்ள இருக்கின்ற வெண்ணங்கி, கிரீடங்கள், குருத்தோலைகள் ஆகியவைகளை விசுவாசத்தினால் காணும்படி நடத்தியிருக்கின்றனர். (34)

சோதிக்கப்பட்டுக்கொண்டும் துன்பப்பட்டுக்கொண்டும் பரீட்சிக்கப்பட்டுக் கொண்டும் இருப்பவர்களுக்கு அருகில் வருவது, தூதர்களின் பணியாக இருந்தது. கிறிஸ்து எவர்களுக்காக மரித்திருக்கிறாரோ அவர்களுக்காக அவர்கள் களைப்பில்லாமல் உழைக்கின்றனர். பாவிகள் தங்களை இரட்சகரிடத்திற்கு நடத்தும்படி கொடுக்கும்போது, அந்தச் செய்திகளை தூதர்கள் பரலோகத்தை நோக்கிக் கொண்டுசெல்லும்போது, பரலோக சேனைகளுக்கிடையில் பெரும் களிகூருதல் உண்டாகிறது. “மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.” (லூக்கா 15:7) இருளை நீக்கி அயலிடமெங்கிலும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவைப்பரப்ப, நமது பகுதியாக நாம் செய்த ஒவ்வொரு வெற்றிகரமான முயற்சியையும் பற்றிய ஒரு அறிக்கை, பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது, அச்செயல் பிதாவிற்குமுன் திரும்ப எடுத்துக் கூறப்படும்போது, பரலோக சேனைகள் அனைத்திற்கூடாகவும் மகிழ்ச்சி கிளர்ந்தெழுகிறது. (35)

வெளிப்படையாகத் தோன்றுகின்ற, அதைரியத்தை உண்டுபண்ணக் கூடிய சூழ்நிலைகளில் தேவனுடைய ஊழியக்காரர்கள் நடத்துகின்ற

யுத்தத்தைப் பரலோகத்தின் துரைத்தனங்களும் வல்லமைகளும் கவனித்துக்கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் தங்களுடைய மீட்பரின் கொடியைச் சூழ்ந்து நிற்கும்போது, புதிய வெற்றிகள் கிடைத்துள்ளன. புதிய கனங்கள் வெற்றியாக அடையப்பட்டுள்ளன. அவர்கள் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட முன்நோக்கிச் செல்லுகின்றனர். தாழ்மையும் நம்பிக்கையுமுள்ள தேவனுடைய ஜனங்களுக்குச் சேவைசெய்வதில் பரலோகத் தூதர்கள் அனைவரும் ஈடுபட்டுள்ளனர். (36)

இங்கு கீழே உள்ள தேவனுடைய சேனையாகிய ஊழியக்காரர்கள், தங்களுடைய துதியின் பாடல்களைப் பாடும்போது, தேவனுக்கும் அவரது குமாரனுக்கும் துதியைச் செலுத்துகின்ற பாடலைப் பாடுவதற்கு, உன்னதத்திலுள்ள பாடகர்களின் குழு, அவர்களுடன் சேர்ந்துகொள்ளுகிறது. (37)

நாம் செயலாற்றுவதைவிட, தேவதூதர்கள் மேலானவிதத்தில் செயலாற்றுவதை நாம் அறிந்துகொள்ளுவது அவசியமாக உள்ளது. பரலோகவாசிகளின் ஒத்துழைப்பு தேவனுடைய உண்மையான ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு என்பதை ஞாபகத்தில் வைப்பது நல்லது. தேவன் மீது நம்பிக்கைவைத்து, அவரது வாக்குத்தத்தத்தின்மீது உரிமை பாராட்டும், தாழ்மையும் எளிமையுமான ஒவ்வொருவரையும் காணக்கூடாத ஒளியும் வல்லமையும் உடைய சேனைகள் கவனிக்கின்றன. "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக, ஊழியம் செய்யும்படிக்கு, அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளான" (எபிரெயர் 1:14) கேருபீன்களும் சேராபீன்களும் மிகுந்த பலமிக்க தேவதூதர்களுமாக தேவனுடைய வலது பக்கத்தில் நிற்கின்றனர். (38) ★

# 16

# அந்தியோகியாவில் நற்செய்தியின் தூது!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 155–165)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 11:19,26; 13:1–31**

உபத்திரவத்தின் காரணமாக சீடர்கள் எருசலேமிலிருந்து துரத்தப் பட்டபின், பாலஸ்தீனத்தின் எல்லைக்கும் அப்பால் இருந்த பிரதேசங்களில், சுவிசேஷத்தின் தூது வேகமாகப் பரவியது. முக்கியமான மையங்களில் விசுவாசிகளின் சிறு கூட்டங்கள் அமைக்கப்பட்டன. சீடர்களில் சிலர் பெனிக்கேயா, சீப்புரு, அந்தியோகியா ஆகிய தூரமான இடங்களுக்குங்கூட தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்துச் சென்றிருந்தனர். இந்த நேரத்தில், ஏறத்தாழ உலகமனைத்திலும் காணப்பட்ட எபிரெயர்களுக்கும், கிரேக்க யூதர்களுக்கும் மட்டுமே சுருங்கினதாக இவர்களுடைய ஊழியங்கள் இருந்தது. (1)

சுவிசேஷம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த இடங்களுக்கு நடுவில், அந்த நேரத்தில் சீரியா நாட்டின் முக்கியமான பட்டணங்களில் ஒன்றாக அந்தியோகியா இருந்தது. பிரசித்தமான அந்த நகரத்திலிருந்த வியாபாரமையம், பல்வேறுபட்ட ஜாதியினராக இருந்த மக்களையும் அந்த இடத்திற்குக் கொண்டு வந்திருந்தது. அதுவுமன்றி உடலுக்கு நலம் தரும் அதின் பருவநிலை, அழகிய சுற்றுப்புறங்கள், செல்வம், நாகரீகம் ஆகியவை காரணமாக சுகவாசிகள், பொழுதுபோக்கை விரும்புபவர்கள் ஆகியவர்களால் விரும்பப்படும் ஒரு இடமாக அது காணப்பட்டிருந்தது. அப்போஸ்தலர்களின் நாட்களில் ஆடம்பரம், தீய பழக்கங்கள் ஆகியவைகளால் நிறைந்ததாக அந்த நகரம் இருந்திருந்தது. (2)

சீப்புருவிலிருந்தும் சிரேனேயிலிருந்தும் கர்த்தராகிய இயேசுவைப் பிரசங்கித்துக்கொண்டு வந்திருந்த குறிப்பிடப்பட்ட சீடர்களால் அந்தியோகியா

வில் சுவிசேஷம் பொது இடங்களில் போதிக்கப்பட்டிருந்தது. “கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது” அவர்களுடைய அக்கறைமிக்க உழைப்புகள் கனிகொடுப்பவைகளாக இருந்தன. “அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்”. (3)

“எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள். அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, மகிழ்ச்சியடைந்து, கர்த்தரிடத்தில் மன நிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னான்”. (4)

அந்தியோகியாவில் பர்னபாவின் ஊழியம் சிறப்பான விதத்தில் ஆசீர்வதிக்கப்படவே, அங்கிருந்த விசுவாசிகளுடன் அநேகர் சேர்க்கப்பட்டனர். ஊழியம் முன்னேறினபோது, தெய்வீக ஏற்பாட்டை முன்கொண்டு செல்லுவதற்குப் பொருத்தமான உதவி தேவை என்பது பர்னபாவினால் உணரப்பட்டதினால், அவன் பவுலைத் தேடிக்கொண்டு தர்சுவிற்குச் சென்றான். பவுல் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுச் சென்றபின், அவன் ஒரு தடவை “தான் அழிக்கத் தேடின விசுவாசத்தை” “சீரியா, சிலிசியா நாடுகளின் புறங்களில்” (கலாத்தியர் 1:21,23) அறிவித்து ஊழியம் செய்து கொண்டிருந்தான். பவுலைக் காண்பதிலும் அவனுடைய ஊழியத்தில் ஒரு தோழனாக இருக்கும்படி திரும்புவதற்கும் பவுலை இணங்கச் செய்வதில் பர்னபா வெற்றியடைந்தான். (5)

ஜன நெருக்கமான அந்தியோகியா பட்டணத்தில் ஊழியத்தின் ஒரு சிறப்பான களம் இருப்பதைப் பவுல் கண்டான். நாகரீகமிக்க அந்த நகரத்துக் குடிமக்கள், அதனை சந்தித்திருந்தவர்கள் ஆகியோரின்மீது பவுலின் கல்வி, ஞானம், வைராக்கியம் ஆகியவை ஒரு வல்லமைமிக்க செல்வாக்கை உண்டுபண்ணியது. பர்னபாவிற்கு எந்தவிதமான உதவி தேவையானதாக இருந்ததோ, அது பவுலில் இருப்பது மெய்ப்பிக்கப்பட்டது. உலக மீட்பராக இருந்த நசரேயனாகிய இயேசுவைப்பற்றிய அறிவை அநேகருக்குக் கொண்டுவருவதில், இந்த இரண்டு சீடர்களும் விசுவாச ஊழியத்தில் ஒன்றாக இணைந்து ஊழியம் செய்தனர். (6)

அந்தியோகியாவில்தான் முதன்முதலில் சீடர்கள் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டனர். அவர்களுடைய பிரசங்கம், போதனை, உரையாடல்கள் ஆகியவைகளின் கருப்பொருளாக இப்பெயர் இருந்ததினால், அவர்களுக்கு அந்தப் பெயர் கொடுக்கப்பட்டது. அவரது பூமியின் ஊழியத்தின் நாட்களில் அவரது நேரடியான பிரசன்னத்தினால் ஆசீர்வதித்திருந்த சம்பவங்களை அவர்கள் திரும்ப எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவருடைய

போதனைகள் குணமளிக்கும் அற்புதங்கள் ஆகியவைகளைப்பற்றி அவர்கள் களைப்பற்றவர்களாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர் கெத்செமெனே தோட்டத்தில் அனுபவித்த வேதனை, அவர் காட்டிக்கொடுக்கப்பட்டது, அவரைப்பற்றிய விசாரணை, தண்டனை, அவரது சகிப்புத் தன்மை, தாழ்மை அவரது எதிரிகளால் அவர்மீது கேவலமானவிதத்தில் சுமத்தப்பட்ட சித்திரவதைகளை அவர் சகித்திருந்தது, அவரை உபத்திரவப்படுத்தியிருந் தவர்களுக்காக தேவனைப்போன்ற இரக்கத்துடன் அவர் ஜெபித்திருந்தது, ஆகியவைகளைப்பற்றி அவர்கள் நடுங்கும் உதடுகளுடனும் கண்ணீருடனும் பேசியிருந்தனர். அவரது உயிர்த்தெழுதல், அவர் பரமேறிச்சென்றது, விழுந்துபோன மனிதனுக்காக அவர் பரலோகத்தில் செய்யும் மத்தியஸ்த ஊழியம், ஆகியவை அவர்கள் மகிழ்ச்சியுடன் பேசியிருந்த விஷ யங்களாக இருந்தன. அவர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கித்திருந்ததினாலும், தங்களுடைய ஜெபங்களைக் கிறிஸ்துவின்மூலமாக ஏறெடுத்திருந்ததினாலும் அஞ்ஞானிகள் அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்திருந்தது நன்றாகப் பொருந்தக்கூடியதாக இருந்தது. (7)

தேவன்தான் அவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைச் சூட்டியிருந்தார். கிறிஸ்துவிடம் தங்களைத் தாங்களாகவே இணைத்துக்கொள்ளுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ராஜரீகப் பெயராக இது உள்ளது. இந்தப் பெயரைப்பற்றித்தான் பின்னர் “ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர்கள் அல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள். உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?” (யாக்கோபு 2:6,7) என்று யாக்கோபு எழுதினான். பேதுரு: “ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினால் பாடுபட்டால், வெட்கப்படாமலிருந்து தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.” “நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்” (1 பேதுரு 4:16,14) என்றான். (8)

“ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்க விருப்பமுள்ளவராய் இருக்கிறார்” (பிலிப்பியர் 2:13) என்றபடி, தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் செயலாற்ற சித்தமுடையவராக இருக்கிறார் என்பதை அந்தியோகியாவின் விசுவாசிகள் உணர்ந்தனர். நித்திய மதிப்புடையவர்களின்மீது கரிசனையற்றவர்களாக இருப்பவர்களாகக் காணப்பட்டு, மனம்போனபோக்கில் வாழ்ந்துகொண்டிருந்தவர்களுக்கு மத்தியில், தங்களுடைய இருதயத்தில் பாரமுள்ளவர்களாக இருந்தவர்களின்

கவனத்தைச் சிறைப்பிடிக்க வகைதேடி, அவர்கள் எவரை நேசித்து எவருக்குச் சேவைசெய்திருந்தார்களோ அவரைப்பற்றி ஆக்கப்பூர்வமாக சாட்சி கொடுக்க அவர்கள் வகைதேடியிருந்தனர். தேவனுடைய வார்த்தையை பலனுள்ளதாகச் செய்கின்ற அவர்களுடைய தாழ்மையான ஊழியத்தில் அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையைச் சார்ந்திருக்கக் கற்றிருந்தனர். அப்படியே மாறுபட்ட பல்வேறுவிதமான வாழ்க்கையின் பாதைகளில், கிறிஸ்துவின்மீதுள்ள அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றி அவர்கள் நாள்தோறும் சாட்சிகொடுத்திருந்தனர். (9)

இன்று பெரும் நகரங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் அந்தியோகியாவிலிருந்த கிறிஸ்துவின் அடியார்களின் உதாரணம் ஒரு ஏவுதலாக இருக்கவேண்டும். பொதுவான படைமுயற்சிக் கூட்டங்களை நடத்துவதற்காக மக்கள் கூட்டம் நிறைந்த முக்கியமான நகரங்களில் அர்ப்பணிப்பும் திறமையுமிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியக் காரர்கள் தங்கியிருக்கவேண்டும் என்பது தேவனது ஏற்பாடாக இருக்கும் போது, இந்த நகரங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் சபை அங்கத்தினர்கள், தங்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் தாலந்துகளை ஆத்துமாக் களுக்காகப் பயன்படுத்தவேண்டும் என்பதும் அவருடைய நோக்கமாக இருக்கிறது. தேவனுடைய அழைப்பிற்குத் தங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுப்பவர்களுக்கு பெரும் ஆசீர்வாதங்கள் சேமித்துவைக்கப் பட்டுள்ளன. அதினால், இயேசுவிற்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முயற்சிசெய்பவர்களால், வேறு எந்தவிதத்திலும் சமீபிக்க முடியாதவர்களாக இருக்கக்கூடியவர்கள் (ஊழியக்காரர்களின்) நுண்ணறிவுமிக்க நேரடியான முயற்சிக்கு பதிலளிக்கத் தயாராக இருப்பார்கள். (10)

இன்று பூமியில் தேவனுடைய காரியத்திற்கு அவசியமாக இருப்பது, வேதாகம சத்தியங்களையுடைய ஜீவனுள்ள பிரதிநிதிகள் தான். பெரிய நகரங்களுக்கு எச்சரிப்பின் தூதைக் கொடுப்பதற்கு அபிஷேகம்பண்ணப்பட்ட போதகர்கள் மட்டும் போதுமானவர்களல்ல. தேவன் போதகர்களை மட்டும் அழைக்காமல் மருத்துவர்கள், செவிலியர்கள், புத்தக ஊழியர்கள், வேதாகம ஊழியர்கள் மற்றும் தேவனுடைய வார்த்தையையும் அவரது கிருபையின் வல்லமையையும்பற்றிய அறிவுடையவர்களையும், எச்சரிக்கப்படாத நகரங்களின் தேவைகளைப்பற்றி ஆலோசிக்கக்கூடிய பல்வேறு தாலந்து களை உடைய சுயாதீன அங்கத்தினர்களையும் அழைக்கிறார். காலம் வேகமாகக் கடந்துகொண்டிருக்கிறது. அதிகமான காரியங்கள் செய்யப்பட வேண்டியதாக உள்ளது. நிகழ்கால வாய்ப்புக்களை ஞானமாக முன்னேற்ற மடையச்செய்வதற்கு ஒவ்வொரு ஏதுகரமும் செயல்படவேண்டும். (11)

பர்னபாவுடன் சேர்ந்து அந்தியோகியாவில் பவுல் செய்த ஊழியம், புறஜாதியினரின் உலகத்திற்குச் செய்யப்படவேண்டிய சிறப்பான ஊழியத்திற்குத் தன்னைத் தேவன் அழைத்திருக்கிறார் என்னும் அவனது மன உணர்த்துதலில் அவனைப் பலப்படுத்தியது. பவுலின் மாற்றத்தின்போது, அவன் புறஜாதிகளுக்கு ஒரு ஊழியக்காரனாக இருக்கவேண்டும் என்று கர்த்தர் அறிவித்திருந்தார். “அவர்கள் என்னைப்பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு, அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்” என்றார். அனனியாவிற்குத் தரிசனமான தூதன்: “அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்” என்றான். பவுல் பிற்காலத்தில் தன்னுடைய அனுபவத்தைப்பற்றித் தானே: “நீ போ; நான் உன்னைத் தூரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்னார்” என்றான். (12)

இவ்வாறாக, உலகளாவிய புறஜாதியினரின் விசாலமான ஊழியக்களத்தில் பிரவேசிக்கின்ற ஊழியத்தை, தேவன் பவுலுக்குக் கொடுத்திருந்தார். விசாலமானதும் கடினமானதுமான இந்த வேலைக்குள் பிரவேசிப்பதற்கு அவனை ஆயத்தப்படுத்துவதற்காக, தேவன் அவனை அவருடனுள்ள நெருக்கமான உறவிற்குக்கொண்டுவந்து, தரிசனத்தில் பரலோகத்தின் அழகையும் மகிமையையும் காட்டினார். “ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை, அதென்னவெனில், புறஜாதிகள் வாக்குத்தத்தத்திற்கு உடன்பங்காளிகளுமா யிருக்கிறார்கள் என்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால், எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே, இந்த சுவிசேஷ த்திற்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான், கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.” (13)

பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலிருந்த விசுவாசிகளுடன் தங்கியிருந்த அந்த வருடத்தில் அவர்களது ஊழியங்களைத் தேவன் பெருக்கமாக ஆசீர்வதித்திருந்தார். ஆனால் அவர்களிருவரில் ஒருவரும் சுவிசேஷ ஊழியத்திற்காக சம்பிரதாயப்படி இதுவரை அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய கிறிஸ்தவ அனுபவத்தில், ஒரு கடினமான மிஷனரி ஊழியம் என்னும் வேலையின் பொறுப்பை எடுக்கும் ஒரு நிலைமையை அடைந்திருந்தனர். இதை நடத்துவதில் சபை என்னும் முகவையின்மூலமாகக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் எல்லாம் அவர்களுக்கு அவசியமாக இருந்தன. (14)

“அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும் சவுலும் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.” அஞ்ஞான உலகத்திற்குள் மிஷனரிகளாக அனுப்பப்படுவதற்குமுன், உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் கைகளை வைப்பதினாலும், இந்த அப்போஸ்தலர்கள் தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்யப்பட்டனர். இவ்வாறாக, சத்தியத்தைப் போதிப்பதற்கு மட்டுமன்றி, ஞானஸ்நானம் கொடுக்கவும் சபைகளை ஏற்படுத்தவும் சபையின் பூரணமான அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (15)

இந்த நேரத்தில் கிறிஸ்தவ சபை, ஒரு புதிய சகாப்தத்திற்குள் பிரவேசித்துக்கொண்டிருந்தது. புறஜாதிகளுக்கு மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணி, இப்பொழுது முழு பலத்துடன் செய்யப்படவேண்டியதாக இருந்தது. இந்த வேலையை முன்நின்று நடத்தும்படி நியமிக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர்கள் சந்தேகம், தவறான எண்ணம், பொறாமை ஆகியவைகளுக்கு உள்ளாகவேண்டியவர்களாக இருந்தார்கள். யூதர்களையும் புறஜாதியினரையும் நீண்டகாலமாகப் பிரித்துவைத்திருந்த பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்க்கிறதைப்பற்றிய அவர்களுடைய போதனை இயல்பாகவே அவர்களை மதப்புரட்டர்கள் என்னும் குற்றத்திற்கு ஆளாக்கக்கூடியதாக இருந்தது. வைராக்கியமிக்க அநேக யூத நம்பிக்கை உள்ளவர்களால், சுவிசேஷத்தின் ஊழியக்காரர்கள் என்னும் அவர்களுடைய அதிகாரம், கேள்விக்குட்படுத்தப்படும். தேவன் அவருடைய ஊழியக்காரர்கள் சந்திக்கக் கூடியதாக இருந்த கஷ்டங்களை முன்கண்டு, அவர்களுடைய பணி சவாலுக்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும் என்பதற்காக, அவர்களை வெளிப்படையாக ஊழியத்திற்கென்று பிரித்துவிடும்படி, ஒரு வெளிப்படுத்துதலினால் உபதேசித்தார். சுவிசேஷத்தின் மகிழ்ச்சிமிக்க செய்திகளைப்

புறஜாதியினருக்குக் கொடுப்பதற்கான தெய்வீக நியமத்தினுடைய வெளிப்படையான அங்கீகாரமாக அவர்களது அபிஷேகம் இருந்தது. (16)

பவுல், பர்னபா ஆகிய இருவரும் ஏற்கனவே தேவனிடமிருந்து நியமனம் பெற்றவர்களாக இருந்தனர். எனவே கைகளை வைக்குதல் என்னும் சடங்கு, புதிய கிருபையையோ அல்லது புண்ணியமிக்க தகுதியையோ அதனுடன் சேர்க்கவில்லை. அது நியமிக்கப்பட்ட ஒரு பதவியின் (அந்தஸ்தின்) ஒப்புக்கொள்வதின் அங்கீகாரமாக இருந்தது. அந்தப் பதவியில் உள்ள ஒருவரின் அதிகாரத்தின் அடையாளமாக இருந்தது. அதனால் தேவனுடைய பணியின்மீது சபையின் முத்திரை பதிக்கப்பட்டது. (17)

யூதருக்கு இது ஒரு முக்கியமான அடையாளமாக இருந்தது. ஒரு யூதத் தகப்பன் தனது பிள்ளைகளை ஆசீர்வதித்தபோது, அவன் தனது கரங்களை அவர்களது தலைகளின்மீது பக்தியுடன் வைத்திருந்தான். பலிசெலுத்தப்படுவதற்கு ஒரு பலி மிருகம் ஒப்படைக்கப்பட்டபோது, ஆசாரிய அதிகாரம் பெற்றிருந்த ஒருவன் அந்தப் பலி மிருகத்தின் தலையின்மீது தனது கையை வைத்திருந்தான். அந்தியோகியா சபை விசுவாசிகளின் ஊழியக்காரர்கள், பவுலின்மீதும் பர்னபாவின்மீதும் தங்களது கைகளை வைத்ததினால், தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட பணிக்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்றார்களோ, அதிலுள்ள அவர்களது பக்திமிக்க ஈடுபாட்டிற்காக, தேவன் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதாக அது இருந்தது. (18)

பிற்காலத்தில் கைகளை வைக்குதல் என்னும் அபிஷேகச் சடங்கு, மிக அதிகமான விதத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட அபிஷேகம், அதைப் பெற்றவர்களை உடனே எந்த ஒரு சுவிசேஷ ஊழியத்திற்கும் அல்லது சகலவிதமான ஊழியங்களுக்கும் தகுதிப்படுத்தும் ஒரு வல்லமையை உடனே அவர்கள்மீது கொண்டுவந்தது என்பதுபோன்ற, அவசியமில்லாத முக்கியத்துவம் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த இரண்டு அப்போஸ்தலர்களையும் தனியாகப் பிரித்துவைத்ததில், கைகளை வைத்தல் என்னும் சாதாரணமான அந்தச் செயலினால், ஏதாவது புண்ணியமோ அல்லது வரமோ அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் அபிஷேகம்பண்ணப்பட்டனர் என்றும், அவர்களது எதிர்கால ஊழியத்திற்கான பொறுப்பு அதில் இருக்கிறது என்பதும் பற்றிய சாதாரணமான ஆவணம் மட்டுமே உள்ளது. (19)

ஒரு குறிப்பிட்ட விதத்திலுள்ள ஊழியத்தைச் செய்யும்படி பவுலும் பர்னபாவும் பரிசுத்த ஆவியினால் பிரித்துவைக்கப்பட்டது, தேவன்

அவரது சபையில், அவரால் நியமிக்கப்பட்டுள்ள முகவர்களின்மூலமாகச் செயலாற்றுகிறார் என்பதைக் காட்டுகிறது. பல ஆண்டுகளுக்குமுன்பாக பவுலைப்பற்றிய தெய்வீக நோக்கம் இரட்சகராலேயே பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அதற்குப்பின் உடனே தமஸ்குவில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சபை அங்கத்தினர்களுடன் தொடர்புகொள்ளும்படி அவனைக் கொண்டு வந்தார். அதற்கும்மேலாக, மாற்றமடைந்த பரிசேயர்களின் சொந்த அனுபவத்தில் அந்த இடத்திலிருந்த சபை, அதிக நாட்களாக இருளில் விட்டுவைக்கப்பட்டிருக்கவில்லை. இப்பொழுது அந்த நேரத்தில் கொடுக்கப்பட்டிருந்த தெய்வீகக் கட்டளை மிக முழுமையாக செயலாற்றப்பட வேண்டியதாக இருந்தது. புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும்படியான பாத்திரமாக இருக்கும்படி பவுல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் என்று மறுபடியும் சாட்சிகொடுத்து, பவுலையும் அவனது உடன் ஊழியக்காரனையும் மறுபடியும் அந்த வேலைக்காக அபிஷேகம்பண்ணும் பணியை அவர் சபைக்குக் கொடுத்தார். அந்தியோகிய சபைத் தலைவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது, “பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.” (20)

பூமியின்மீதுள்ள தேவனுடைய சபையை அவர் ஒரு ஒளியின் வாய்க்காலாக ஏற்படுத்தி, அதன்மூலமாக அவரது நோக்கங்களையும் சித்தத்தையும்பற்றித் தகவல் கொடுக்கிறார். சபையின் அனுபவத்திற்கு எதிராக உள்ள ஒரு அனுபவத்தை அவர் அவருடைய ஊழியக்காரர்களில் ஒருவருக்கும் கொடுப்பதில்லை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை இருளில் விடப்பட்டிருக்கும்போது, சபை முழுவதற்குமான அவரது சித்தத்தைப்பற்றிய அறிவை அவர் தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுப்பதில்லை. அவர்கள் தங்கள்மீது நம்பிக்கை வைக்காமலிருந்து, அவரது பணியை முன்கொண்டு செல்லும்படி அவரால் நடத்தப்படும் மற்றவர்களின்மீது நம்பிக்கைவைக்கும்படி, அவர் தமது தெய்வீக ஏற்பாட்டினால், தமது ஊழியக்காரர்களை அவரது சபையுடன் நெருக்கமான உறவுகொள்ளச் செய்கிறார். (21)

தேவனுடைய ஜனங்களை நடத்துவதற்கு தலைமைப் பதவிகளில் இருக்கும்படி தேவனால் நியமிக்கப்பட்ட சதோதரர்கள் இருக்கின்றனர். இவர்களது ஆலோசனைகளையும் நிதானிப்பையும் மதிக்காமல், அவைகளைவிடத் தங்களுடைய ஆலோசனையும் நிதானிப்பும் மேலானது என்று அவைகளின்மீது அதிகமான நம்பிக்கை வைத்திருப்பவர்கள், தங்களது தனித்தன்மையின்மீது நம்பிக்கை வைக்கின்ற ஆவியினால் நடத்தப்படக்கூடிய

சாத்தியதை இருக்கிறது என்பதை அவர்கள் உணரமுடியாமல் இருப்பதுபோல் காணப்படுகின்றனர். சிறப்பான அதிகாரத்தையும் வல்லமையையும் தேவன் தமது சபைக்குக் கொடுத்திருக்கிறார். அதனைக் கருதாமல், அவமதிக்கின்ற ஒருவரும் அங்கீகரிக்கப்படமாட்டார்கள். ஏனெனில், இப்படிச் செய்பவர்கள் தேவனுடைய குரலை அவமதிக்கின்றனர். (22)

தங்களுடைய சுயநிதானிப்பு மேலானது என்று கருத விரும்புபவர்கள் மரணத்துக்கேதுவான ஆபத்தில் உள்ளனர். பூமியில் அவருடைய பணியைக் கட்டவும் அதைப் பரப்பவும் ஒளியின் வாய்க்கால்களாக இருக்கவும் தேவன் ஏற்படுத்தியிருப்பவர்களைப் பிரிப்பது சாத்தானின் திட்டமிடப்பட்ட முயற்சியாக உள்ளது. சத்தியத்தை முன்கொண்டுசெல்லுவது தொடர்பாக, தலைமைதாங்கி நடத்தும்படி பொறுப்பேற்க தேவன் நியமித்திருக்கிறவர்களை, அலட்சியம் செய்வது, அவமதிப்பது, உதவிக்காகவும் தைரியமூட்டுவதற்காகவும் தமது ஜனங்களின் பலமாக இருப்பதற்காகவும் அவர் அபிஷேகம் செய்திருக்கும் உபாத்திகளை நிராகரிப்பதாக உள்ளது. கர்த்தருடைய காரியத்தில் இதனை ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்துச் செல்லும் எந்த ஊழியக்காரனும் தேவனிடத்திலிருந்து நேரடியாக ஒளி வருவதைத் தவிர, வேறு எந்த வாய்க்கால் வழியாகவும் ஒளி வரக்கூடாது என்று நினைப்பது, தன்னை விரோதியால் வஞ்சிக்கப்படக்கூடிய நிலையிலும் கவிழ்க்கப்படுவதற்கான நிலையிலும் வைப்பதற்குச் சமமாகும். கிறிஸ்தவன் கிறிஸ்தவனுடன் ஐக்கியப்படுவதனாலும், சபை சபையுடன் ஐக்கியப்படுவதானாலும் விசுவாசிகள் அனைவராலும் பராமரிக்கப்படவேண்டிய நெருக்கமான உறவு ஒரு உபாத்தியாக இருக்கவேண்டும் என்பதைக் கர்த்தர் தமது ஞானத்தினால் ஏற்படுத்தினார். இவ்வாறாக, மனித ஏதுகரங்கள் தெய்வீகத்துடன் கூட்டுறவை அடைந்துகொள்ளத் தகுதிப்படுத்தப்படும். ஒவ்வொரு ஏதுகரமும் பரிசுத்த ஆவியின்கீழ் வேலையைச் செய்து, தேவகிருபையைப்பற்றிய மகிழ்ச்சிமிக்க செய்திகளை உலகத்திற்குக் கொடுப்பதற்கு, விசுவாசிகளனைவரும் ஒற்றுமையுடன் கிரமமான விதத்தில் இயக்கப்படும் முயற்சியை மேற்கொள்ள ஒன்று சேருவார்கள். (23)

பவுல் தனது வாழ்க்கைப் பணியின் ஒரு புதியதும் முக்கியமானதுமான ஆரம்பமாக, சம்பிரதாயமான இந்த அபிஷேகம் இருக்கிறது என்று கருதினான். கிறிஸ்தவ சபையில் உள்ள தனது அப்போஸ்தலப் பதவி இந்நாளில்தான் ஆரம்பமாயிற்று என்று பின்னான காலத்தில் பவுல் கூறினான். (24)

சுவிசேஷத்தின் ஒளி மிகப் பிரகாசமாக அந்தியோகியாவில் வீசிக்கொண்டிருந்த அந்த நேரத்தில், எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்களால் ஒரு முக்கியமான பணி தொடரப்பட்டிருந்தது.

ஒவ்வொரு வருடத்திலும் பண்டிகை நாட்களின்போது, எருசலேமிலுள்ள ஆலயத்தில் ஆராதனைசெய்வதற்காக யூதர்கள் சகல நாடுகளிலிருந்தும் வந்திருந்தனர். இந்தப் புனிதப் பயணிகளில் சிலர் ஊக்கமான பக்தி உடையவர்களாக இருந்திருந்தனர். இவர்கள் ஆர்வமிக்க தீர்க்கதரிசன மாணவர்களாக இருந்தனர். அவர்கள் இஸ்ரவேலின் நம்பிக்கையாக இருந்த வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த மேசியாவின் வருகையை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இந்த அந்நியர்களால் எருசலேம் நிறைந்திருந்தபோதிலும், கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதினால் அப்போஸ்தலர்கள் தங்களுடைய உயிர்களை தொடர்ச்சியான—ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக்குகின்றனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தும் கலங்காத தைரியத்துடன் கிறிஸ்துவைப் பிரசங்கித்தனர். அவர்களுடைய ஊழியத்தின்மீது கர்த்தருடைய ஆவியானவர் அவருடைய முத்திரையைப் பதித்திருந்தார். அநேகர் மாற்றப்பட்டனர். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச்சென்று, சமுதாயத்தின் சகல ஜாதிகளுக்கும் சகல வகுப்பினருக்கும் சத்தியத்தின் விதைகளை விதைத்தார்கள். (25)

தங்களுடைய நாட்டுமக்களுக்கிடையில் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கும்படி நாங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்னும் நம்பிக்கை உடையவர்களாக இருந்த அப்போஸ்தலருக்கு மத்தியில் பேதுருவும் யாக்கோபும் யோவானும் முன்னணியில் இருந்தனர். அவர்கள் கண்டிருந்ததும் கேட்டிருந்ததுமான காரியங்களைப்பற்றி சாட்சி பகர்ந்து, விசுவாசத்துடனும் ஞானமாகவும், அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தைக்கூறி, “நீங்கள் சிலுவையில் அறைந்த அந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள்” என்று முறையீடு செய்தனர் (26) ★

# 17

# சுவிசேஷத்தின் கட்டியக்காரர்கள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 166–176)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 13:4–52**

அந்தியோகியாவிலுள்ள சகோதரர்களால் அபிஷேகம் பண்ணப்பட்ட பின் பவுலும் பர்னபாவும் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டு செலுக்கியாவிற்கும் அதன்பின் சீப்புரு தீவிற்கும் பயணப்பட்டுச்சென்றனர். அவர்களில் சீப்புரு தீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்திற்கு வந்த கிரேக்கருடனே பேசி, கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள். இவ்வாறாக, அந்த அப்போஸ்தலர்கள் அவர்களுடைய முதல் மிஷனரிப்பயணத்தைத் தொடங்கினார்கள். ஸ்தேவானின் மரணத்தைத் தொடர்ந்துண்டான உபத்திரவத்தின் காரணமாக எருசலேமிலிருந்து விசுவாசிகள் ஓடிச்சென்றடைந்த இடங்களில் ஒன்றாக சீப்புரு இருந்தது. சீப்புருவிலிருந்துதான் சில மனிதர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கித்துக்கொண்டு, அந்தியோகியாவிற்குப் பயணம் செய்திருந்தனர். பர்னபாவுங்கூட சீப்புருவைச் சேர்ந்தவனாக இருந்தான். இப்பொழுது அவன் பவுலுடனும், தனது உறவினர்களில் ஒருவனான யோவான் என்னும் மாற்குடனும் சேர்ந்து இந்தத் தீவுக்களத்தைச் சந்தித்தான். (1)

மாற்குவின் அன்னை கிறிஸ்துவை ஏற்று மதம்மாறினவளாக இருந்தாள். எருசலேமிலிருந்த அவளது வீடு சீடர்களுக்கு ஒரு அடைக்கலமாக இருந்தது. அங்கு வரவேற்பும் இளைப்பாறுவதற்கான நேரமும் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதில் அவர்கள் எப்பொழுதும் நிச்சயமுடையவர்களாக இருந்தனர். அந்த அன்னையின் வீட்டை அப்போஸ்தலர்கள் சந்தித்திருந்த பல சந்திப்புக்களில் ஒன்றின்போது, பவுலும் பர்னபாவும் செய்கின்ற மிஷனரிப் பயணத்தில் அவர்களுடன் தன்னையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற வேண்டுகோளை மாற்கு அவர்கள்முன் வைத்தான். தேவனுடைய ஆதரவு அவனுக்கு இருப்பதை அவன் தன் இருதயத்தில் உணர்ந்து, சுவிசேஷ

ஊழியத்தில் தன்னை முற்றிலுமாக ஈடுபடுத்துவதற்கு ஏக்கமுடையவனாக இருந்தான். (2)

அப்போஸ்தலர்கள் சாலமி என்னுமிடத்திற்கு வந்துசேர்ந்து அங்கிருந்த யூதர்களின் ஜெப ஆலயத்தில் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அவர்கள் அந்தத் தீவின் வழியாக பத்மு தீவைச் சென்று சேர்ந்தபோது, “பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டார்கள். அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியு பவுல் என்னும் அதிபதியுடனேகூட இருந்தான். அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்கஆசையாயிருந்தான். மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்துநின்றான்.” (3)

பூமியின்மீது ஒரு போராட்டம் இல்லாமல் தேவனுடைய இராஜ்யம் கட்டப்படுவதற்குச் சாத்தான் அனுமதிப்பதில்லை. சுவிசேஷத்தைப் பரப்பும்படி நியமிக்கப்பட்டுள்ள ஏதுகரங்களுடன் தீமையின் சேனைகள் இடைவிடாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. மிகுந்த புகழும் நேர்மையுமிக்க மனிதர்களுக்குமுன் சத்தியம் அறிவிக்கப்படும்போது. இந்த அந்தகார சக்திகள் விசேஷமாகத் தீவிரமடைகின்றன. துணை அதிகாரியாயிருந்த செர்கியு பவுல், சுவிசேஷத்தைக் கேட்டுக்கொண்டிருந்தபோதும் காரியம் இப்படிப்பட்டதாகவே இருந்தது. அந்தத் துணை அதிகாரி, அப்போஸ்தலர்கள் அறிவிப்பதற்காக வந்திருந்த தூதைக் கேட்பதற்காக அவர்களை அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பியிருந்தபோது, தீமையின் சக்திகள் மாய வித்தைக்காரனின் மூலமாகச் செயலாற்றி, அவனை அவனது விசுவாசத்தைவிட்டுத் திருப்பி, தேவனுடைய நோக்கத்தை முறியடிப்பதற்காகத் தங்களுடைய அழிவுக்குரிய கருத்துக்களுடன் வகைதேடியிருந்தன. (4)

செல்வாக்குடைய மனிதர்கள் மாற்றமடைந்தால், தேவனுடைய காரியத்திற்காகப் பயன்தரும் வேலையைச் செய்துவிடுவார்கள் என்பதற்காக விழுந்துபோன இந்தச் சத்துரு, மனிதர்களைத் தன் அணியில் பிடித்து வைத்துக்கொள்ள இவ்வாறாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறான். ஆனால் சத்துருவின் கரத்தில் தோற்றுப்போவேன் என்று விசுவாசமிக்க சுவிசேஷ ஊழியக்காரன் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் சாத்தானின் ஒவ்வொரு செல்வாக்கையும் தாங்கி நிற்பதற்கு, உன்னதத்திலுள்ள வல்லமையினால் அவன் ஆயத்தப்படுத்தப்பட்டவனாக இருப்பது அவனுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையுள்ள வாய்ப்பாக உள்ளது. (5)

சாத்தானால் அபாயமானவிதத்தில் சூழப்பட்டிருந்தபோதிலும் எந்த ஒருவன்மூலமாக சத்துரு செயலாற்றிக்கொண்டிருந்தானோ அவனைக் கடிந்துகொள்ளுவதற்காகப் பவுல் இருந்தான். “அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து: எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின்மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான். அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான்.” (6)

அந்த மாயவித்தைக்காரன் சுவிசேஷ சத்தியத்தின் சான்றுகளுக்குத் தனது கண்களை மூடிக்கொண்டான். கர்த்தர் தமது நீதியான கோபத்தினால் அந்த நாளின் ஒளியை அவனால் பார்க்கமுடியாதபடி அவனிலிருந்துமூடி, அவனது இயற்கையான கண்களை மூடச்செய்தார். அவன் எந்த ஒரு தேவனுக்கு எதிராகச் செயல்பட்டானோ அவரிடத்திற்கு மனந்திரும்பும்படியான எச்சரிப்பைப் பெறவும், மன்னிப்பைத் தேடவும், இந்தக் குருட்டுத்தன்மை நிரந்தரமானதாக இல்லாமல் தற்காலிகமானதாக இருந்தது. அவன் இந்தக் குழப்பத்திற்கு எதிராக, எவ்விதமாகக் கொண்டுவரப்பட்டானோ அது, கிறிஸ்துவின் கொள்கைக்கெதிரான அவனது தந்திரமிக்க உபாயங்களில் எந்தவிதமான பலனையும் கொண்டுவரவில்லை. அவன் இருளில் தடவித்திரியும்படியான நிலைமை உண்டானதும், அப்போஸ்தலர்கள் செய்திருந்த அற்புதங்கள், எலிமா வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்ததுபோன்ற கைவேலைத்திறன் அல்ல என்பதை எல்லாருக்கும் மெய்ப்பித்தது. அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட சத்தியங்களைப்பற்றி அந்தத் தலைவன் மனதிருப்தியடைந்து சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டான். (7)

எலிமா கல்வி அறிவு உள்ள ஒரு மனிதனாக இருக்கவில்லை. இருந்தபோதிலும், அவன் சாத்தானின் வேலையைச் செய்யும்படி தனிப்பட்ட விதத்தில் பொருத்தப்பட்டிருந்தான். தேவனுடைய சத்தியத்தைப் பிரசங்கிப்பவர்கள், எதிரியான அவனை பல்வேறுபட்ட அநேக வடிவங்களில் சந்திப்பார்கள். சில சமயங்களில் அவன் ஒரு கற்றறிந்த மனிதனின் உருவில் காணப்படலாம். ஆனால் அநேக சமயங்களில் ஆத்துமாக்களை வஞ்சிக்கும் வெற்றிகரமான கருவிகளாக இருக்கும்படி சாத்தானால் பயிற்றுவிக்கப்பட்ட அறியாமைமிக்க மனிதர்களாக அவர்கள்

இருக்கிறார்கள். தேவன்மீதுள்ள பயத்துடனும் அவருடைய பலத்தின்மீதுள்ள வல்லமையினாலும், தனது நிலையில் விசுவாசமுள்ளவனாக உறுதியாக நிற்கவேண்டியது, தேவனுடைய ஊழியக்காரனின் கடமையாக இருக்கிறது. இப்படியாக சாத்தானுக்கு இணங்கக்கூடியவர்களைக் குழப்பத்தில் வைத்து, கர்த்தருடைய நாமத்தினால் வெற்றியடையலாம். (8)

பவுலும் அவனது கூட்டத்தினரும் பெர்கே, பம்பிலியா ஆகிய இடங்களுக்கு பயணத்தைத் தொடர்ந்தனர். அவர்களுடைய பாதை கடினமானதாக இருந்தது. அவர்கள் கஷ்டங்களையும் தனிமைகளையும் எதிரிட்டு, எல்லாப்பக்கங்களிலும் அபாயங்களால் சூழப்பட்டிருந்தனர். அவர்கள் கடந்து சென்றிருந்த நகரங்கள், பெருநகரங்கள், தனிமைமிக்கப் பெருவழிப்பாதைகள் ஆகியவைகளில் அவர்களால் காணமுடிந்ததும் காணமுடியாததுமாக அபாயங்கள் சூழ்ந்திருந்தன. ஆனால் தங்களைப் பாதுகாக்கக்கூடிய தேவனுடைய வல்லமையை அறிந்தவர்களாக அவர்கள் இருந்தனர். அழிந்துகொண்டிருந்த ஆத்துமாக்களின்மீது அவர்களுடைய இருதயங்கள் ஊக்கமான அன்பினால் நிறைந்தவையாக இருந்தன. காணாமல்போன ஆடுகளைத் தேடுகின்ற மேய்ப்பர்களைப்போலிருந்த அவர்கள் அவர்களுடைய சுக சௌகரியங்களைப்பற்றின எண்ணத்திற்கு இடங்கொடாமல் இருந்தனர். களைப்புற்றவர்களாகவும் குளிரினால் பாதிக்கப் பட்டவர்களாகவும் இருந்தபோது, சுயத்தை மறந்தவர்களாக தடுமாறாமல் இருந்தனர். மந்தையைவிட்டு வெகுதூரத்தில் அலைந்திருந்தவர்களின் இரட்சிப்பு என்னும் ஒரே பார்வையை மட்டுமே கொண்டிருந்தனர். (9)

இங்குதான் பயத்தினாலும் அதைரியத்தினாலும் மேற்கொள்ளபட்ட மாற்கு, தேவனுடைய வேலைக்கென்று தன்னை முழு இருதயத்துடனும் கொடுக்கவேண்டிய நோக்கத்திலிருந்து கொஞ்சநேரம் தடுமாறினான். கடினமான வாழ்க்கையில் பழக்கப்பட்டிராத அவன், பாதையிலிருந்த அபாயங்களினாலும் தனிமையினாலும் சோர்ந்துபோனான். சாதகமான சூழ்நிலைகளில் அவன் தானாக உழைத்திருந்தான். ஆனால் இப்பொழுது முன்னோடியான ஊழியக்காரனை அடிக்கடி சந்தித்திருந்த எதிர்ப்புகளுக்கும் அபாயங்களுக்கும் நடுவில், சிலுவையின் ஒரு நல்ல வீரனைப்போல துன்பங்களைச் சகித்துக்கொள்ளுவதில் அவன் தோற்றுப்போனான். ஒரு துணிவுமிக்க இருதயத்துடன் அபாயங்களையும் உபத்திரவங்களையும் எதிர்ப்புகளையும் சந்திக்க அவன் இன்னும் கற்றுக்கொள்ளவேண்டியவனாக இருந்தான். அப்போஸ்தலன் முன்னோக்கிச் சென்றபோது, இன்னும் அதிகமான துன்பங்களைச் சந்திக்க நேர்ந்தபோது, மாற்கு மிகவும் பயந்து, எல்லா தைரியத்தையும் இழந்து, அதற்குமேல் செல்ல மறுத்து, எருசலேமிற்குத் திரும்பினான். (10)

இவ்விதமாக மாற்கு விலகிச்சென்றது, அவனைப்பற்றிப் பவுல் அனுகூலமற்ற விதத்திலும் கடுமையான விதத்திலுங்கூட ஒரு சமயத்தில் நிதானிப்பதற்குக் காரணமாயிற்று. ஆனால் மற்றொரு பக்கத்தில் அவனது அனுபவமின்மையின் காரணமாக, மாற்குவை மன்னிப்பதற்கு மனமுள்ளவனாகப் பர்னபா இருந்தான். மாற்கு கிறிஸ்துவிற்கான ஊழியத்தைச் செய்வதற்குத் தகுதியுள்ளவனாக இருக்கிறான் என்பதை பர்னபா கண்டு, அவன் ஊழியத்தைவிட்டுச் சென்றுவிடக்கூடாது என்று கவலைப்பட்டான். பின்னால் வந்த வருடங்களில் காணப்பட்ட மாற்குவின் உதவி அதிகமான அளவிற்கு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அந்த வாலிபன் தன்னைத் தனித்து வைக்காமல் கடினமான இடங்களிலும் சுவிசேஷத்தை அறிவிக்கின்ற பணியில் தன்னை முழுவதுமாகக் கர்த்தருக்குக் கொடுத்தான். தேவனுடைய ஆசீர்வாதத்தின் கீழும், பர்னபாவிடமிருந்து பெற்றுக்கொண்ட ஞானமிக்க பயிற்சியினாலும், அவன் ஒரு மதிப்புமிக்க ஊழியக்காரனாக முன்னேறினான்! (11)

பின்னர் பவுல் மாற்குவுடன் ஒப்புரவாகி, அவனை ஒரு உடன்வேலைக்காரனாக ஏற்றுக்கொண்டான். அவனை "தேவனுடைய ராஜ்யத்தின்பொருட்டு என் உடன்வேலையாட்களாயிருந்து, எனக்கு ஆறுதல் செய்துவந்தவர்கள்" என்று கொலோசேயர்களுக்குப் பரிந்துரை செய்தான். மறுபடியும் அவனது மரணத்திற்குச் சில நாட்களுக்குமுன் "மாற்கு... ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" என்றான். (2 தீமோத்தேயு 4:11). (12)

மாற்கு புறப்பட்டுச்சென்றபின், பவுலும் பர்னபாவும் பிசீதியாவில் உள்ள அந்தியோகியாவைச் சந்தித்து, ஓய்வுநாளில் யூதர்களின் ஜெப ஆலயத்திற்குச் சென்று உட்கார்ந்தனர். "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்து முடிந்தபின்பு: சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்திசொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று சொல்லும்படி ஜெபஆலயத்தலைவர்கள் அவர்களிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அப்பொழுது பவுல் எழுந்திருந்து, கையமர்த்தி: இஸ்ரவேலரே, தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே, கேளுங்கள்" என்றான். அதற்குப்பின் ஒரு ஆச்சரியமான பிரசங்கம் பின்தொடர்ந்தது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து யூதர்கள் விடுதலைசெய்யப்பட்ட காலத்திலிருந்து, அவர்களிடம் கர்த்தர் எவ்விதமாக இடைப்பட்டிருந்தாரென்று சொல்லத் தொடங்கினான். தாவீதின் சந்ததியிலே "தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார். இவர் வெளிப்படுவதற்குமுன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்து யோவான் இஸ்ரவேலர்

யாவருக்கும் பிரசங்கித்தான். யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது: நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல, இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான்." இவ்வாறாக, மனிதர்களின் இரட்சகராக—தீர்க்கதரிசனத்தின் மேசியாவாக— இயேசு இருக்கிறார் என்று அவன் வல்லமையாகப் பிரசங்கித்தான். (13)

இந்த அறிவிப்பைக் கொடுத்தபின், "சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே, இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால், அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள்" என்று பவுல் கூறினான். யூதத் தலைவர்களால் இரட்சகர் நிராகரிக்கப்பட்டதைப்பற்றிக் கூறிட பவுல் தயங்கவில்லை. "மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணா திருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக் கொண்டார்கள். அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றினபின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள். தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். தம்முடனே கூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேகநாள் தரிசனமானார்; அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்" என்றான். (14)

"நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம். இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைக்குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம்பற்றினார்" என்று கூறினான். (15)

இப்பொழுது மேசியாவைப்பற்றி வாசிக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனங் களின் நிறைவேறுதலைப்பற்றி வெளிப்படையாகப் பேசி, அவர்களுடைய இரட்சகரான இயேசுவின் புண்ணியங்களின்மூலமாக உண்டாகக்கூடிய மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும்பற்றிப் பவுல் அவர்களிடம்

பேசினபின், “ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான் களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது” என்று கூறினான். (16)

பேசப்பட்ட வார்த்தைகளுடன் தேவ ஆவி தொடர்ந்து சென்றதினால் இருதயங்கள் தொடப்பட்டன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியா வின் வருகைக்காக ஏங்கியிருந்த அநேக ஆத்துமாக்களில், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கான அப்போஸ்தலனின் வேண்டுகோளும் இவை நசரேயனாகிய இயேசுவின் ஊழியத்தில் நிறைவேறியிருந்தன என்ற அறிவிப்பும், மன உணர்த்துதலை உண்டுபண்ணியிருந்தன. மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகள் என்று கணக்கிடப்படாமலிருந்த புறஜாதிகளுக்கும் யூதர்களுக்கும் ஒரே விதமாக இரட்சிப்பு என்ற மகிழ்ச்சி மிக்க செய்தியைப்பற்றிப் பேசியிருந்தவனின் வாக்குறுதி, நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் கொண்டுவந்தது. (17)

“அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள். ஜெபஆலயத்தில் கூடின சபை கலைந்துபோனபின்பு, யூதரிலும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள்.” (18)

பவுலின் பிரசங்கத்தினால் பிசீதியாவிலுள்ள அந்தியோகியா முழுவதிலும் எழுப்பப்பட்ட ஆர்வம், அடுத்த ஓய்வுநாளில் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு ஏறத்தாழ அந்த நகரம் முழுவதையும் ஒன்றாகக் கொண்டுவந்திருந்தது. யூதர்கள் திரளானவர்களைக் கண்டபோது, பொறாமையினால் நிறைந்து, பவுல் பேசினதற்கு முரண்பாடாகவும் தூஷணமாகவும் பேசினார்கள். (19)

“அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற

வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்.” (20)

“புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.” (21)

புறஜாதியினர் உள்ளே சேர்க்கப்படவுள்ளதை நூற்றுக்கணக்கான வருடங்களுக்குமுன் ஏவுதலின் எழுதுகோல் வரைந்திருந்தது. ஆனால் சொல்லப்பட்டிருந்தவைகள் மங்கலாகப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தன. “இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.” “நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள்” (ஓசியா 1:10; 2:23) என்று ஓசியா சொல்லியிருந்தான். (22)

சுவிசேஷம் புறஜாதியினருக்கு மத்தியில் பரவி இருப்பதை இரட்சகர் தாமே அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது முன்கூறியிருந்தார். பாவத்திற்கு வருந்தாத யூதர்களை நோக்கி, திராட்சைத் தோட்டத்தைப்பற்றிய அவரது உவமையில்: “தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்” என்று அறிவித்திருந்தார். அவரது உயிர்த்தெழுதலுக்குப்பின்: “நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, … அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்” (மத்தேயு 28:19,20) என்று அவருடைய சீடர்களுக்குக் கட்டளை கொடுத்தார். அவர்கள் ஒருவரையும் எச்சரிக்கப்படாதவர்களாக விட்டுவிடாமல், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டியவர்களாக இருந்தனர். (23)

பிசீதியாவிலுள்ள அந்தியோகியாயாவிலிருந்த புறஜாதியாரிடத்திற்குப் பவுலும் பர்னபாவும் திரும்பியிருந்ததினால், மற்ற இடங்களில் இருந்த யூதர்களுக்காக உழைக்காமலில்லை. எங்கெல்லாம் சுவிசேஷத்தைப் போதிக்க சாதகமான நிலைமை இருந்ததோ, அங்கெல்லாம் உழைத்தார்கள். பின்னர் தெசலோனிக்கேயா, கொரிந்து, எபேசு மற்றும் முக்கியமான மையங்களில் பவுலும் அவனது தோழர்களும் யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உழைத்திருந்தனர். ஆனால் அதற்குமேல்

அவர்களுடைய சக்திகளையெல்லாம் புறஜாதியாருக்கு, மெய்யான தேவனையும் அவருடைய குமாரனையும் அறியாமலிருந்தவர்களுக்கு தேவனுடைய இராஜ்யத்தைக் காட்டுவதற்காகச் செலவிட்டிருந்தனர். (24)

“அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.” “அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாய்” (எபேசியர் 2:12,13,19) இருந்தவர்களிடம் பவுலுடைய மற்றும் அவனுடைய தோழர்களுடைய இருதயங்கள் இழுத்துக்கொள்ளப்பட்டன. (25)

பவுல் விசுவாசத்தில் முன்னேறி, இஸ்ரவேலில் இருந்த ஆசாரியர்களால் அலட்சியப்படுத்தப்பட்டிருந்தவர்களுக்கு மத்தியில் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டி எழுப்புவதற்காக ஓய்வின்றி உழைத்தான். கிறிஸ்துவாகிய இயேசுவை அவன் தொடர்ச்சியாக “ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்” (1 தீமோத்தேயு 6:15) என்று உயர்த்தியிருந்தான். “அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, ... விசுவாசத்தில் உறுதிப்பட” (கொலோசேயர் 2:7) விசுவாசிகளுக்கு புத்திசொன்னான். (26)

விசுவாசிக்கிறவர்களுக்கு கிறிஸ்து நிச்சயமான அஸ்திவாரமாக இருந்தார். இந்த ஜீவனுள்ள கல்லின்மேல் யூதர்களும் புறஜாதியினரும் ஒன்றுபோல கட்டலாம். அது அனைவருக்கும் போதுமான அளவிற்கு விசாலமானதாகவும் உலகம் முழுவதன் கனத்தையும் பாரத்தையும் தாங்கப் போதுமானதாகவும் உள்ளது. இது பவுலினாலே வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உண்மை. அந்த அப்போஸ்தலன் அவனுடைய ஊழியத்தின் முடிவுநாட்களின்போது, சுவிசேஷ சத்தியத்தின்மீதுள்ள அன்பில் உறுதியானவர்களாக இருந்த ஒரு புறஜாதி குழுவிற்கு: “ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்” என்று எழுதினான். (27)

பிசீதியாவில் சுவிசேஷத்தின் தூது பரவினபோது, அந்தியோகியாவிலிருந்த விசுவாசமில்லாத யூதர்கள் அவர்களுடைய

குருட்டுத்தனமான—தவறான எண்ணத்தினால் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படிச் செய்து, தங்கள் எல்லைகளுக்கு அப்பால் அவர்களைத் துரத்திவிட்டார்கள். (28)

இவ்விதமான நடத்துதலினால் அந்த அப்போஸ்தலர்கள் அதைரியமடையவில்லை. "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:11,12) என்ற அவர்களுடைய ஆண்டவரின் வார்த்தைகளை அவர்கள் நினைத்தார்கள். (29)

சுவிசேஷத்தின் தூது முன்னேறிக்கொண்டிருந்தது. பவுல் தைரியமிக்க உணர்வுகளையுடையவனாக இருப்பதற்குக் காரணம் இருந்தது. பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்தவர்களுக்கு மத்தியில் அவர்களுடைய ஊழியங்கள் செழுமையாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தன. சில நாட்களுக்குத் தனித்து நின்று ஊழியத்தை முன்கொண்டுசெல்லும்படி விடப்பட்டிருந்த விசுவாசிகள், மகிழ்ச்சியினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டிருந்தனர்.(30) ★

# 18

# பரமனின் பணியில் பயமில்லாத பவுல்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 177–187)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 14:1–26**

பவுலும் பர்னபாவும் பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்து இக்கோனியா என்னுமிடத்திற்குச் சென்றனர். அந்தியோகியாவைப்போலவே இங்கும் அவர்கள் தங்களுடைய ஜனங்களுக்கு மத்தியில் ஜெப ஆலயத்தில் ஊழியத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் குறிப்பிடப்படும் அளவிற்கு வெற்றியை அடைந்தனர். யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள். விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு பகையுண்டாக்கினார்கள். (1)

ஆனால் அந்த அப்போஸ்தலர்கள் அவர்களுடைய ஊழியத்தைவிட்டுத் திரும்பவில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அநேகர் ஏற்றுக்கொண்டிருந்தனர். எதிர்ப்பு, பொறாமை, விரோதம் தவறான எண்ணம் ஆகியவைகளின் முகத்துக்குமுன்பாக அவர்கள் தங்களுடைய பணியைத் தொடர்ந்து, அங்கே அநேகநாள் சஞ்சரித்து கர்த்தரைமுன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம் பண்ணினார்கள். அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம்பண்ணினார். தெய்வீக அதிகாரத்தின் இந்தச் சான்றுகள், மன உணர்த்துதலுக்குத் தங்களுடைய மனங்களைத் திறந்தவர்களின்மீது ஒரு வல்லமைமிக்க செல்வாக்கை உண்டுபண்ணவே, சுவிசேஷத்திற்கு மாறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகப் பெருகினது. (2)

அப்போஸ்தலர்களால் கொண்டுசெல்லப்பட்டிருந்த தூதினுடைய பிரசித்தத்தின் அதிகரிப்பு விசுவாசமில்லாதவர்களாக இருந்த யூதர்களை பொறாமையினாலும் வெறுப்பினாலும் நிரப்பவே, பவுல், பர்னபா ஆகியோரின் ஊழியங்களை உடனே நிறுத்துவதற்கு அவர்கள் தீர்மானஞ்செய்தார்கள். தவறானதும் மிகைப்படுத்தப்பட்டதுமான அறிக்கைகளினால் அந்த நகரம் முழுவதும், கலகத்தால் நிறைந்துவிடக்கூடிய ஒரு அபாயம் உண்டாகி யிருக்கிறதென்று அதிகாரிகளைப் பயப்படும்படி நடத்தினார்கள். பெரிய எண்ணிக்கையிலுள்ளவர்கள் தங்களை அப்போஸ்தலர்களுடன் இணைத்துக் கொண்டுள்ளனர் என்றும், அது இரகசியமான திட்டங்களுடன் உள்ளது என்றும் அவர்கள் அறிவித்தனர். (3)

இந்தக் குற்றச்சாட்டுகளின் பலனாக, சீடர்கள் திரும்பத்திரும்ப அதிகாரிகளின்முன் கொண்டுவரப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுடைய பாதுகாப்பு தெளிவானதும் கர்த்தருடையதாகவும் இருந்தது. அவர்கள் அமைதியாகவும் விபரமாகவும், தாங்கள் போதித்துக் கொண்டிருந்த வைகளைக் குறித்துக் கொடுத்த அறிக்கை ஒரு பலத்த செல்வாக்கை அவர்களுக்குச் சாதகமாகக் கொண்டுவந்தது. நீதிபதிகள் தாங்கள் கேள்விப்பட்ட—அவர்களுக்கெதிரான தவறான அறிக்கைகளினால் தவறான எண்ணத்தையடைந்தபோதிலும், அவர்களை ஆக்கினைக்குட்படுத்தத் துணியவில்லை. பவுல், பர்னபா ஆகியவர்களின் போதனைகள் மனிதர்களைக் கண்ணியமிக்கவர்களாகவும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற நகரவாசிகளாகவும் மாற்றியிருக்கின்றன என்றும், அப்போஸ்தலர்களால் போதிக்கப்படுபவைகளை ஏற்றுக்கொண்டால் அந்த நகரத்தின் சன்மார்க்கநெறியும் ஒழுங்கும் முன்னேற்றமடையுமென்றும் அவர்களால் கூறாமலிருக்கமுடியவில்லை. (4)

சீடர்கள் சந்தித்த எதிர்ப்பின்மூலமாக, சத்தியத்தின் தூது பெரும் விளம்பரத்தை ஆதாயமாக அடைந்தது. புதிய ஆசிரியர்களின் பணியைத் தோற்கடிக்க யூதர்கள் செய்த அவர்களுடைய முயற்சிகள் புதிய விசுவாசத்திற்குப் பெரும் எண்ணிக்கையில் மக்களைச் சேர்ப்பதற்கான பலனாக அமைந்தது என்பதை யூதர்கள் கண்டனர். பட்டணத்து ஜனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்துகொண்டார்கள். (5)

காரியங்கள் அவர்களுக்கு எதிராகத் திரும்பினதால், யூதர்கள் சீற்றமடைந்து, வன்முறையினால் முடிவைப் பெற தீர்மானமுடையவர் களானார்கள். அறியாமைமிக்கவர்களும் கூச்சலிடுபவர்களுமான கூட்டத்தினரின் மோசமான வெறியைத் தூண்டிவிட்டதினால், அமளியை

உண்டுபண்ணுவதில் அவர்கள் வெற்றியடைந்து, அவைகளைச் சீடர்களின் போதனைகளின்மீது சாற்றினார்கள். இவ்விதமாக தவறான குற்றச்சாட்டினால் தங்களுடைய நோக்கத்தைச் செயல்படுத்த நீதிபதிகளின் உதவியை அடையலாம் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அப்போஸ்தலர்கள் தங்களை மெய்ப்பிக்கின்ற வாய்ப்பினை பெறக்கூடாது என்பதிலும், கலகக்கூட்டம் இடைபுகுந்து பவுலையும் பர்னபாவையும் கல்லெறியவேண்டும் என்றும், இவ்வாறாக, அவர்களுடைய ஊழியங்களுக்கு ஒரு முடிவைக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர்கள் தீர்மானம் செய்திருந்தனர். (6)

அவிசுவாசிகளாக இருந்தாலும், அப்போஸ்தலர்களின் நண்பர்களாக இருந்தவர்கள் யூதர்களின் தீங்குசெய்யும் திட்டங்களைப்பற்றி அவர்களை எச்சரித்து, கலகம்செய்யும் கோபமிக்கக் கூட்டத்தினருக்குமுன் அவசியமில்லாமல் தங்களைக் காட்டாமல் தங்களுடைய உயிர்களுக்காக அவர்கள் தப்பிச்செல்லவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அப்படியே பவுலும் பர்னபாவும் தற்சமயத்திற்கு பணியை முன்கொண்டுசெல்லும்படி விசுவாசிகளைவிட்டுவிட்டு, இரகசியமாக இக்கோனியா என்னும் இடத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றனர். ஆனால் எந்த ஒரு காரணத்தைக்கொண்டும் அவர்கள் முடிவாக அந்த இடத்தைவிட்டுச் செல்லாமல் அங்கிருந்த உணர்ச்சிகளின் கொந்தளிப்பு தணிந்தபின் அங்கு திரும்பிவந்து, ஆரம்பித்த பணியை முடிக்கவேண்டும் என்ற நோக்கம் உடையவர்களாகச் சென்றனர். (7)

பரலோகத்தின் ஒளியைத் திட்டமிட்டு நிராகரிக்கின்ற மக்களிடத்திலிருந்து கசப்பான எதிர்ப்பை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் சந்திக்கும்படி தேவனுடைய ஊழியக்காரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். தேவனுடைய ஊழியக்காரர்கள் மக்களைச் சந்திக்கின்ற மார்க்கமாகிய கதவை மூடுகின்ற காரியத்தில் அடிக்கடி சுவிசேஷத்தின் சத்துருக்கள் தவறாக எடுத்துக்காட்டுவதினாலும் தவறினாலும் வெற்றியடைந்துவிட்டதுபோல் காணப்படுகின்றனர். ஆனால் இந்தக் கதவுகள் நிரந்தரமாக அடைக்கப்பட்டவைகளாக இருக்கமுடியாது. சிறிது காலத்திற்குப்பின் தேவனுடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய வேலையை மீண்டும் தொடங்குவதற்கென்று திரும்பும்போது பலத்தவிதமாகச் செயலாற்றி தேவனுடைய நாம மகிமைக்கென்று நினைவுச்சின்னங்களை அமைக்கும்படி அவர்கள் சார்பாகக் கர்த்தர் பலத்தவிதமாகச் செயலாற்றியிருக்கிறார். (8)

உபத்திரவத்தினால் இக்கோனியாவிலிருந்து விரட்டப்பட்ட அப்போஸ்தலர்கள் லிக்கவோனியாவிலுள்ள லீஸ்திராவிற்கும் தெர்பைக்கும் சென்றனர். இந்த நகரம் பெருமளவிற்கு அஞ்ஞான மூடபக்திமிக்க மக்களால் நிறைந்திருந்தது. ஆனால் அவர்களுக்கிடையில் சுவிசேஷத்தின் தூதைக்

கேட்கவும் ஏற்றுக்கொள்ளவும் விருப்பமுடையவர்களான சிலர் இருந்தனர். இந்த இடங்களிலும் அதைச் சுற்றிலுமிருந்த இடங்களிலும் யூதர்களின் தவறான எண்ணங்களையும் உபத்திரவங்களையும் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் அப்போஸ்தலர்கள் உழியம் செய்ய முடிவுசெய்திருந்தனர். (9)

லீஸ்திராவில் சில யூதர்கள் பட்டணத்திற்குள் வாழ்ந்திருந்தபோதிலும், அங்கு யூதர்களின் ஜெப ஆலயம் இருக்கவில்லை. லீஸ்திராவில் வாழ்ந்திருந்தவர்களில் அநேகர் யூப்பித்தருக்குப் பிரதிஷ்டை செய்திருந்த ஒரு ஆலயத்தில் ஆராதனைசெய்திருந்தனர். பவுலும் பர்னபாவும் அந்த நகரத்தில் தோன்றி, அவர்களைச் சூழ்ந்திருந்த லீஸ்திரியர்களுக்கு சுவிசேஷத்தின் எளிய சத்தியங்களை விளக்கினார்கள். அநேகர் இந்தக் கோட்பாடுகளை யூப்பித்தருக்குச் செய்கின்ற தங்களுடைய சொந்த ஆராதனையின் மூடபக்திமிக்க நம்பிக்கையுடன் இணைக்க வகைதேடினார்கள். (10)

இந்த விக்கிரக ஆராதனைக்காரர்களுக்கு அப்போஸ்தலர்கள் சிருஷ்டிகரான தேவனைப்பற்றியும் மனிதஇனத்தின் இரட்சகரான அவருடைய குமாரனைப்பற்றியுமுள்ள அறிவைப் புகட்ட முயன்றார்கள். மனித அறிவுக்கு விளங்காத ஒரு திறமையைக் காட்டியிருந்த சூரியன், சந்திரன், விண்மீன்கள். திரும்பத்திரும்ப வரும் பருவகாலங்களில் உள்ள அழகிய ஒழுங்குகள், பனிமூடிய பெரும் மலைச்சிகரங்கள், உயர்ந்த மரங்கள் இயற்கையின் பல்வேறுபட்ட ஆச்சரியங்கள் ஆகிய தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளுக்கு முதலில் அவர்களுடைய கவனத்தைத் திருப்பினார்கள். சர்வ வல்லமை உள்ளவரின் இந்தச் செயல்களின்மூலமாக பிரபஞ்சத்தின் பெரும் அதிபதியாக இருப்பவரை அறிந்துகொள்ளும்படி அப்போஸ்தலர்கள் அந்த அஞ்ஞானிகளின் மனங்களை நடத்தினார்கள். (11)

சிருஷ்டிகரைப்பற்றிய அடிப்படையான சத்தியங்களை தெளி வாக்கினபின்பு, மனித இனத்தாரை நேசித்ததினால் பரலோகத்திலிருந்து நமது உலகத்திற்கு வந்த தேவகுமாரனைப்பற்றி அப்போஸ்தலர்கள் லீஸ்திரர்களுக்குக் கூறினார்கள். அவர்கள் அவருடைய வாழ்க்கை, ஊழியம் ஆகியவைகளைப்பற்றியும், யாரை இரட்சிக்கும்படியாக வந்தாரோ அவர்களால் அவர் நிராகரிக்கப்பட்டது, அவரது விசாரணை, சிலுவையில் அறையப்படுதல், அவரது உயிர்த்தெழுதல், அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச்சென்றது, அங்கு மனிதனுக்காக அவர் பரிந்து பேசுவது ஆகியவைகளைப்பற்றியும் பேசினார்கள். இவ்வாறாக, தேவனுடைய ஆவியினாலும் வல்லமையினாலும் பவுலும் பர்னபாவும் லீஸ்திராவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். (12)

ஒரு சமயத்தில் நோயாளிகளையும் துன்பப்படுபவர்களையும் சுகப்படுத்துபவராகக் கிறிஸ்து செய்திருந்த செயல்களைப்பற்றிப் பவுல் கூறிக்கொண்டிருந்தபோது, அவனுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர் களுக்கிடையிலிந்த ஒரு சப்பாணியின் கண்கள் தன்மீது பதிந்திருந்ததையும், அவன் அவ்வார்த்தைகளை நம்பி ஏற்றுக்கொண்டதையும் அவன் கண்டான். இரட்சிப்பிற்கேற்ற விசுவாசம் அவனிடத்தில் இருந்ததை உணர்ந்தபோது, பவுலின் இருதயம் துன்பப்படும் அந்த மனிதனிடத்திற்கு அனுதாபத்துடன் சென்றது. விக்கிரக ஆராதனை செய்திருந்தவர்களின் கூட்டத்திற்குமுன் பவுல் அந்தச் சப்பாணியை நிமிர்ந்து தன் பாதங்களின்மேல் நிற்கும்படி கட்டளையிட்டான். இதுவரை அவன் உட்காரும் நிலையில்மட்டுமே இருந்தான். இப்பொழுது பவுலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவனது வாழ்க்கையில் முதல்தடவையாக எழுந்து காலூன்றி நின்றான். விசுவாசத்தின் இந்த முயற்சியுடன் சேர்ந்து பலம் வந்தது; சப்பாணியாக இருந்த அவன், "குதித்தெழுந்து நடந்தான்". (13)

"பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூப மெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி...," இந்த அறிக்கை, தெய்வங்கள் எப்போதாவது பூமிக்கு விஜயம் செய்வார்கள் என்னும் அவர்களுடைய பாரம்பரியத்திற்கு இசைவானதாக இருந்தது. பர்னபாவின் வணக்கத்திற்குரிய கெம்பீரமான தோற்றத்திற்காகவும், மேன்மையும் மென்மையும் அனுதாபமும் அவனுடைய முகத்தில் காணப்பட்டதாலும் அவனை தெய்வங்களின் தகப்பனாக யூபிட்டர் என்று அழைத்தனர். பவுல் முதன்மையான பேச்சாளனாகவும், அக்கறையும் தீவிரமுமுள்ளவனாகவும், எச்சரிப்பையும் உபதேசத்தையும் திறமையாகக் கொடுத்ததாலும் அவனை மெர்க்கூரி என்றும் நம்பினார்கள். (14)

லீஸ்திரா மக்கள் தங்களுடைய நன்றியைக் காட்டுவதில் ஆவலுள்ளவர்களாக இருந்து, அப்போஸ்தலர்களைக் கனப்படுத்தும்படி யூப்பித்தரின் பூசாரியை மேற்கொள்ளவே, அவன் எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து, ஜனங்களோடுகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான். தனியாகச்சென்று இளைப்பாற வகைதேடியிருந்த பவுலும் பர்னபாவும் இந்த ஆயத்தங்களைப்பற்றி அறியாதவர்களாக இருந்தனர். அப்டியிருந்தபோதிலும் விரைவில் வாத்தியக்கருவிகளின் ஓசையும் பெரும் கூட்டத்தினரின் உற்சாகமிக்க ஆரவாரமும் அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தபோது, அவை அவர்களது கவனத்தை ஈர்த்தன. (15)

அவர்கள் வந்ததன் காரணத்தையும் அதனுடன் சேர்ந்திருந்த எழுச்சியையும் அப்போஸ்தலர்கள் அறிந்தபோது: “தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளேஓடி, உரத்தசத்தமாய்: மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம். சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை” என்றார்கள். (16)

தாங்கள் தெய்வீகமானவர்கள் அல்ல என்னும் அவர்களது மறுப்புடன் மட்டுமன்றி, வணக்கத்திற்குத் தகுதியானவர் மெய்யான தெய்வம் ஒருவர் மட்டுமே என்று கூறி, பவுல் மக்களுடைய மனங்களை தேவனை நோக்கித் திருப்ப முயன்றுங்கூட, அவர்களுக்கு பலிசெலுத்தும் அவர்களுடைய நோக்கத்திலிருந்து அவர்களைத் திருப்புவது ஏறத்தாழ முடியாததாக இருந்தது. உண்மையாகவே இந்த மனிதர்கள் தேவர்களாக இருக்கிறார்கள் என்னும் அவர்களுடைய நம்பிக்கை அவ்வளவு உறுதியானதாக இருந்தது. அவர்கள் தங்களுடைய தவறுகளை வெறுக்கமுடியாத அளவிற்கு அவர் களுடைய உற்சாகம் கரைபுரண்டோடியிருந்தது. அவர்களைக் கட்டுப் படுத்துவது மிகவும் கடினமானதாக இருந்தது என்று ஆவணம் கூறுகின்றது. (17)

அப்போஸ்தலர்களால் நிகழ்த்தப்பட்ட அற்புதமான வல்லமையை தங்களுடைய சொந்தக் கண்களினாலேயே கண்டிருந்ததாக லீஸ்திரியர்கள் நியாயவாதம் செய்திருந்தனர். இதற்குமுன் ஒருபோதும் நடக்கமுடியாதவனாக இருந்த சப்பாணி, பூரணமான உடல்நலத்திலும் பலத்திலும் மகிழ்ந்து களிகூரும்படிச் செய்யப்பட்டதை அவர்கள் கண்டிருந்தனர். பரலோகத்தின் தேவனுக்கும் அவரது குமாரனாகிய மாபெரும் சுகமளிப்பவருக்கும் பிரதிநிதிகளாக இருந்து தாங்கள் செய்துவருகிற ஊழியத்தைப்பற்றிப் பவுல் கவனமாக விளக்கம் கொடுத்து அவர்களை இணங்கச் செய்ததற்குப்பின்புதான் அந்த ஜனங்கள் தங்களுடைய நோக்கத்தைக் கைவிட்டார்கள். (18)

அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்த குறிப்பிட்ட யூதர்கள் பவுலும் பர்னபாவும் லிக்கோவோனியர்களுக்கிடையில் செய்த

பணியின் வெற்றியைக் கேள்விப்பட்டபோது, அவர்களைப் பின்தொடர்ந்து கொலைசெய்யும் தீர்மானமுடையவர்களாகிவிடவே, பவுல், பர்னபாவுடைய லீஸ்திரா ஊழியம் திடீரென்று தடைபட்டது. இந்த யூதர்கள் லீஸ்திராவிற்கு வந்துசேர்ந்தபோது, தங்களுடைய சொந்த மனங்களைச் செயலாற்றும்படி ஏவின அதே கசப்பின் ஆவியினால் அங்கிருந்த ஜனங்களைத் தூண்டிவிடுவதில் வெற்றி அடைந்தனர். பவுலையும் பர்னபாவையும் தெய்வீகமானவர்கள் என்று கருதியிருந்தவர்களை, தவறான விதத்தில் எடுத்துக்காட்டப்படுகின்ற வார்த்தைகளினாலும் புகழுக்கு இழுக்கு உண்டுபண்ணக்கூடிய அறிக்கையினாலும், உண்மையில் அப்போஸ்தலர்கள் கொலைகாரர்களைவிட மோசமானவர்கள் என்றும், மரணத்திற்கு அருகதையானவர்கள் என்றும் கருதுவதற்கு இணங்கச்செய்தனர். (19)

அப்போஸ்தலர்களுக்கு பலிசெலுத்துகின்ற சலுகை மறுக்கப்பட்டதனாலுண்டான மனமடிவு, லீஸ்திரியர்கள் எந்தவிதமான உற்சாகத்தினால் அவர்களைத் தேவர்களென்று புகழ்ந்திருந்தார்களோ அந்த அளவிற்கு அவர்களைப் பவுலுக்கும் பர்னபாவிற்கும் எதிராகத் திரும்பச்செய்தது. யூதர்களால் ஏவிவிடப்பட்ட அவர்கள், பலாத்காரத்தின்மூலமாக அப்போஸ்தலர்களைத் தாக்கத் திட்டமிட்டனர். பவுலை பேச அனுமதித்தால் அவன் ஜனங்களைத் தன் மந்திரசக்தியால் மயக்கிவிடுவான் என்று யூதர்கள் சொல்லி, அவனை பேச அனுமதிக்கக்கூடாது என்று அவர்களுக்கு கட்டளையிட்டனர். (20)

விரைவில் சுவிசேஷத்தினுடைய எதிரிகளின் கொலைகாரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. தீமையின் செல்வாக்கிற்கு இணங்கி, லீஸ்திரியர்கள் பேய்த்தனமான கோபத்தால் பிடிக்கப்பட்டவர்களாகி, பவுலைச் சூழ்ந்துகொண்டு இரக்கமில்லாமல் அவனைக் கல்லெறிந்தார்கள். அப்போஸ்தலன் தனது முடிவு வந்துவிட்டதென்று நினைத்தான். ஸ்தேவானின் இரத்தசாட்சியான மரணமும், அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் தானே ஆற்றியிருந்த கொடூரமான பங்கும் அவனது மனதிற்கு மிகத் தெளிவாக வந்தன. முழுவதும் காயமடைந்து வலியினால் மயங்கித் தரையில் விழுந்தான். கோபாவேசமான அந்தக் கலகக்கும்பல் அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள். (21)

சோதனையான அந்த இருண்ட நேரத்தில் பவுல் பர்னபா ஆகியோரின் ஊழியத்தின்மூலமாக இயேசுவிற்கென்று மாற்றமடைந்திருந்த லீஸ்திரிய விசுவாசிகளின் கூட்டம், விசுவாசமும் உண்மையுமுள்ளதாக நின்றிருந்தது. தங்களுடைய எதிரிகளால் உண்டான காரணமில்லாத

எதிர்ப்பும், உபத்திரவமும், பக்திமிக்க இந்தச் சகோதரர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தமட்டுமே உதவியது. இப்பொழுது ஆபத்து, பரிகாசம் ஆகியவகைளுக்குமுன் இறந்துவிட்டான் என்று கருதப்பட்டவனின் உடலைச்சுற்றி அவர்கள் துயரத்துடன் நின்று, தங்களுடைய உண்மையை வெளிப்படுத்தினார்கள். (22)

அவர்களது புலம்பலுக்கிடையில் அந்த அப்போஸ்தலன் திடீரென்று தனது தலையை உயர்த்தி, தனது உதடுகளிலே கர்த்தரைத் துதிக்கும் துதியுடன் காலூன்றி நின்றபோது, அவர்களுடைய ஆச்சரியம் என்னவாக இருந்தது! தேவனுடைய ஊழியக்காரன் சற்றும் எதிர்பாராத விதத்தில் சுகமடைந்தது, விசுவாசிகளால் தெய்வீக வல்லமையின் ஒரு அற்புதம் என்று கருதப்பட்டு, அவர்களது விசுவாச மாற்றத்தின்மீது பரலோகம் தனது முத்திரையைப் பதித்ததுபோலத் தோன்றியது. சொல்லிமுடியாத மகிழ்ச்சியினால் அவர்கள் மகிழ்ந்து களிகூர்ந்து, புதுப்பிக்கப்பட்ட விசுவாசத்துடன் தேவனைத் துதித்தார்கள். (23)

லீஸ்திராவில் மாற்றமடைந்தவர்களுக்கிடையில் பவுலின் பாடு களுக்குக் கண்கூடான சாட்சிகளாக இருந்தவர்களில், பின்னர் கிறிஸ்துவின் முன்னணி உழியக்காரனாக மாறிய ஒருவன்—கடினமான ஊழியக் களங்களில் அப்போஸ்தலனின் பரிட்சைகளிலும் மகிழ்ச்சியிலும் பங்குபெற வேண்டியவனான ஒருவன் இருந்தான். அவன்—தீமோத்தேயு என்னும் பெயரை உடைய ஒரு இளைஞன். பவுல் அந்தப் பட்டணத்திற்கு வெளியே இழுத்துச்செல்லப்பட்டபோது, வெளிப்பார்வைக்கு மரித்தவனைப்போலத் தோற்றமளித்த அவனருகே நின்றிருந்தவர்களில் ஒருவனாக, தனது காயங்களுடன் உடலெங்கும் இரத்தத்தோடு, ஆனால், கிறிஸ்துவிற்காகப் பாடுகளைச் சகிக்க தன்னை அனுமதித்ததற்காக உதடுகளில் துதியோடு அவன் எழுந்துநின்றதைக் கண்டவர்களில் ஒருவனாக இந்த இளைஞன் இருந்தான். (24)

பவுல் கல்லால் எறியப்பட்டதற்கு அடுத்த நாளில் அப்போஸ்தலர்கள் தெர்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு அவர்களுடைய ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவைத் தங்களது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி நடத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் அந்தப் பட்டணத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகருக்குப் போதனை செய்திருந்தபோது, அவர்கள் சமீப காலத்தில் எங்கு ஊழியம் செய்திருந்தார்களோ அந்த இடத்தைவிட்டு சிறிது காலத்திற்குச்செல்லும்படி வற்புறுத்தப்பட்டபோது, மாற்றமடைந்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தாமல் பவுலும் பர்னபாவும் வேறிடத்திற்குச்

செல்லுவதில் திருப்தி உடையவர்களாக இருக்கவில்லை. அப்படியே ஆபத்தினால் அசையாதவர்களாக, லீஸ்திராவிற்கும் இக்கோனியாவிற்கும் அந்தியோகியாவிற்கும் திரும்பி வந்து, சீடருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள். சுவிசேஷத்தின் நற்செய்தியை அநேகர் ஏற்று, அதினால் தங்களை நிந்தைக்கும் எதிர்ப்புக்கும் ஆளாக்கிக்கொண்டார்கள். செய்யப்பட்டிருந்த ஊழியம் நிலைத்து நிற்கும்படி இவர்களை விசுவாசத்தில் நிலைவரப்படுத்த அப்போஸ்தலர்கள் வகைதேடியிருந்தனர். (25)

புதிதாக விசுவாசிகளானவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியில், சுவிசேஷஒழுங்கு என்னும் பாதுகாப்பை அவர்களுக்குக் கொடுக்க அப்போஸ்தலர்கள் மிகவும் கரிசனை உள்ளவர்களாயிருந்தது முக்கியமான ஒன்றாக இருந்தது. விசுவாசிகள் இருந்த லிக்கவோனியா, பிசீதியா ஆகிய இடங்களில் சபைகள் ஏற்படுத்தப்பட்டன. விசுவாசிகளின் ஆவிக்குரிய நன்மைகள் சம்பந்தப்பட்ட காரியங்களை நடத்தும்படி ஒவ்வொரு சபையிலும் மேலாளர்கள் நியமிக்கப்பட்டு, ஒழுங்கும் முறையும் ஏற்படுத்தப்பட்டன. (26)

அனைத்து விசுவாசிகளையும் கிறிஸ்துவிற்குள் ஒரே சரீரமாக ஒன்றுபடுத்துகின்ற சுவிசேஷத்துடன் இது இசைவானதாக இருந்தது. பவுல் தனது ஊழியம் நெடுகிலும், இந்தத் திட்டத்தைப் பின்பற்றுவதில் கரிசனையுள்ளவனாக இருந்தான். எந்த இடத்திலும், அவனுடைய ஊழியத்தினால் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி நடத்தப் பட்டிருந்தவர்கள், சரியான நேரத்தில் ஒரு சபையாக ஏற்படுத்தப்பட்டனர். விசுவாசிகள் சிலராக மட்டுமே இருந்தபோதுங்கூட இந்த ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. எங்கே இருவர் அல்லது மூவர் என் நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ அவர்களுக்கு மத்தியில் நான் இருக்கிறேன் என்னும் வாக்குத்தத்தத்தை ஞாபகத்தில் வைத்தவர்களாக ஒருவருக்கொருவர் உதவும்படியாக கிறிஸ்தவர்கள் போதிக்கப்பட்டிருந்தனர். (27)

இவ்விதமாக ஏற்படுத்தப்பட்டிருந்த சபைகளைப் பவுல் மறந்து விடவில்லை. இந்த சபைகளைப்பற்றிய கவலை எப்பொழுதும் அவனது மனதில் அதிகரிக்கும் பாரமாக இருந்தது. ஒரு கூட்டம் எவ்வளவுதான் சிறியதாக இருந்தபோதிலும், அவனது பார்வையில் ஒரு பொருளாக இருப்பதிலிருந்து ஒருபோதும் அது தவறவில்லை. சிறிய சபைகளின் அங்கத்தினர்கள் சத்தியத்தில் முழுமையாக உறுதிப்படவும், அவர்களைச் சுற்றிலும் இருப்பவர்களுக்காக ஊக்கமான சுயநலமற்ற முயற்சிகளைச் செய்ய கற்பிக்கப்படவும், அவர்களுக்கு விசேஷமான கவனம் கொடுக்கப்பட வேண்டுமென்று உணர்ந்து, அவைகளை மென்மையாக நடத்தினான். (28)

பவுலும் பர்னபாவும் அவர்களுடைய மிஷனரி முயற்சிகள் அனைத்திலும் ஆத்துமாக்களுக்காக விருப்பத்துடன் தியாகம்செய்வதிலும் விசுவாசத்துடனும் அக்கறையுடனும் உழைப்பதிலும் கிறிஸ்துவின் உதாரணத்தைப்பின்பற்ற வகைதேடியிருந்தனர். அவர்கள் தங்களுடைய சுயவிருப்பங்களுடனும் சுய சௌகரியங்களுடனும் ஆலோசனை செய்யாமல், கண்விழிப்புள்ளவர்களாக—அக்கறை மிகுந்தவர்களாக—களைப்பில்லாத உழைப்புள்ளவர்களாக—ஜெபத்துடன்கூடிய எதிர்பார்ப்பு உள்ளவர்களாக—சத்தியத்தின் விதையை விதைத்திருந்தனர். விதையை விதைப்பதுடன் சேர்ந்து சுவிசேஷத்திற்காக நிற்பதைத் தெரிந்துகொண்ட அனைவருக்கும் சொல்லிமுடியாத விலைமதிப்புமிக்க நடைமுறை உபதேசங்களைக் கொடுப்பதில் மிகுந்த கவனமுள்ளவர்களாக இருந்தனர். இந்த அக்கறைமிக்க ஆவியும் தெய்வபயமும் புதிய சீடர்களின் மனங்களில் சுவிசேஷத்தூதின் முக்கியத்துவம்பற்றிய உணர்த்துதலை நிரந்தரமாக உண்டுபண்ணியது. (29)

தீமோத்தேயுவைப்போன்று உண்மையும் தகுதியுமுடையவர்கள் மாற்றமடைந்தபோது, திராட்சைத் தோட்டத்தில் பணியாற்றவேண்டியதன் அவசியத்தை அவர்களுக்குக் காட்ட பவுலும் பர்னபாவும் அக்கறையுடன் வகைதேடினார்கள். அந்த அப்போஸ்தலர்கள் வேறிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றபோது, இந்த மனிதர்களின் விசுவாசம் விழுந்துவிடாமல் அதிகரித்தது. கர்த்தருடைய பாதையில் நடக்கும்படிக்கும், சுயநலமற்ற விதத்திலும் அக்கறையான முயற்சியுடனும் தங்களுடைய உடன் மனிதர்களின் இரட்சிப்பிற்காக எவ்விதமாக உழைக்கவேண்டும் என்றும் அவர்கள் விசுவாசத்துடன் போதிக்கப்பட்டிருந்தனர். அஞ்ஞானிகளின் நாட்டில் பவுலும் பர்னபாவும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது உண்டான குறிப்பிடத்தக்க வெற்றிக்கு, புதிதாக மாறினவர்களுக்கு மிக கவனமாக அவர்கள் கொடுத்த பயிற்சி முக்கியமான காரணமாக இருந்தது. (30)

முதலாவது மிஷனரிப் பயணம் அதன் முடிவை நோக்கி விரைவாக வந்துகொண்டிருந்தது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட சபைகளைக் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிட்டு, அந்த அப்போஸ்தலர்கள் பம்பிலியாவிற்குச் சென்று,பெர்கே ஊரில் வசனத்தைப் பிரசங்கித்து, இத்தாலியாப் பட்டணத்திற்குப் போனார்கள். அங்கே கப்பல் ஏறிப் புறப்பட்டு, அந்தியோகியாவிற்கு வந்தார்கள். (31) ★

# 19

# யூதர்களும் புறஜாதியினரும்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 188–200)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 15:1–35**

பவுலும் பர்னபாவும் மிஷனரி ஊழியத்திற்காக அனுப்பப்பட்டிருந்த சீரியாவிலுள்ள அந்தியோகியாவிற்குத் திரும்பி வந்தபோது, "தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத்திறந்ததையும்" (அப்போஸ்தலர் 14:27) அறிவிக்கும்படி விசுவாசிகளை விரைவாகக் கூட்டினார்கள். அந்தியோகியாவிலிருந்த சபை பெரிதானதாகவும் வளரும் ஒன்றாகவும் இருந்து, அது மிஷனரி ஊழியத்தின் ஒரு மையமாகவும் கிறிஸ்தவ விசுவாசிகளின் குழுக்களில் முக்கியமான ஒன்றாகவும் இருந்தது. அதன் அங்கத்தினர்கள் யூதர்கள் புறஜாதியினர் ஆகிய இருவருக்குமிடையிலிருந்த அநேக பிரிவுகளால் ஆனவர்களாக இருந்தனர். (1)

அப்போஸ்தலர்கள் ஊழியக்காரருடனும் சுயாதீன அங்கத்தினர் களுடனும் சேர்ந்து, அநேக ஆத்துமாக்களைக் கிறிஸ்துவிற்கென்று ஆயத்தப்படுத்த முயன்றபோது, யூதேயாவிலிருந்து வந்த குறிப்பிடப்பட்ட சில யூத விசுவாசிகள், பரிசேய வகுப்பைச் சேர்ந்தவர்கள், விசுவாசிகளாக இருந்த புறஜாதியினரிடத்தில் பீதியை உண்டுபண்ணுவதிலும், சபையில் மிக விசாலமான அளவில் எதிர்வாதம் உண்டாக்கக்கூடிய கேள்வியை அறிமுகம் செய்வதிலும் வெற்றி அடைந்தனர். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு விருத்தசேதனம் அடைந்து சடங்காச்சாரப்பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று, மிகுந்த நிச்சயத்துடனும் உறுதியுடனும், யூத மார்க்கத்தை அமைக்கும் இந்த ஆசிரியர்கள் அறிவித்தனர். (2)

இந்த நிலைப்பாட்டை புறஜாதியினருக்கு அறிமுகம் செய்வதை "இது தவறான கோட்பாடு" என்று பவுலும் பர்னபாவும் எதிர்த்தனர். ஆனால் மற்றொரு பக்கத்தில் அந்தியோகியாவிலிருந்த யூதர்களில் அநேகர், சமீப

காலத்தில் யூதேயாவிலிருந்து வந்த சகோதரர்களின் நிலையை ஆதரித்தனர். (3)

தெய்வீக ஏற்பாடு பாதையைத் திறந்திருந்த அதே வேகத்தில் தொடர்ந்து செல்ல, யூதமார்க்கத்திலிருந்து மாறினவர்கள் விருப்பமுடையவர்களாக இருக்கவில்லை. புறஜாதியினருக்கு மத்தியில் அப்போஸ்தலர்கள் செய்திருந்த ஊழியத்தில், யூதமார்க்கத்திலிருந்து மாறினவர்களின் எண்ணிக்கையை விட புறஜாதியாரிடத்திலிருந்து மாற்றமடைந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானதாக இருந்தது என்பது காணக்கூடியதாக இருந்தது. புறஜாதியார் கிறிஸ்தவ சபையில் சேருவதற்கு யூதர்களுடைய கட்டுப்பாடுகளும் தடைகளும் பின்பற்றப்படவேண்டியது நிபந்தனையாக்கப்படாவிட்டால் மற்றெல்லாரையும்விட தனித்தன்மை உடையதாக இதுவரை காக்கப் பட்டிருந்த யூதர்களின் தனித்தன்மை முடிவில் சுவிசேஷத்தின் தூதை ஏற்றுக் கொண்டவர்களிடத்திலிருந்து இல்லாமல் மறைந்துபோகுமென்று யூதக் கிறிஸ்தவர்களில் பலர் பயந்தனர். (4)

தெய்வீகமாக ஏற்படுத்தப்பட்டிருந்த ஆராதனை முறைமைகளைப் பற்றி யூதர்கள் எப்பொழுதும் தங்களுக்குள் பெருமைபாராட்டுபவர்களாக இருந்தனர். எபிரெயவிதமான தொழுகையை தேவன் ஒரு தடவை தெளிவாக விவரித்திருக்கும்போது, அதின் குறிப்புகள் எதிலாவது மாறுதல்செய்ய அவர் அதிகாரமளித்திருப்பார் என்பது நடக்க முடியாதது என்று கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்திற்கு மாறியிருந்த யூதக் கிறிஸ்தவர்களில் அநேகர் நினைத்திருந்தனர். (5)

கிறிஸ்தவ மதத்திற்குள், யூதமதத்தின் சட்டங்களும் சடங்காச் சாரங்களும் ஏற்படுத்தப்படவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். பலிமுறைச் சடங்குகளனைத்தும் தேவகுமாரனுடைய மரணத்தை முன்குறித்திருந்தன என்பதையும், அதில் நிஜம் நிழலைச் சந்தித்தது என்பதையும், இதற்குப்பின் மோசேயின் பிரமாணங்களிலுள்ள சட்டங்களும் சடங்காச்சாரங்களும் கட்டுப்படுத்தக்கூடியவையாக இல்லை என்பதையும் அறிந்துகொள்வதற்கு அவர்கள் மந்தமானவர்களாக இருந்தனர். (6)

பவுல் தனது மாற்றத்திற்குமுன், தன்னை “நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்” என்று கருதியிருந்தான். ஆனால் அவனிலுண்டான மனமாற்றத்திற்குப்பின் யூதர்களுக்கும் புற ஜாதியினராகிய மனித இனம் முழுவதற்குமான மீட்பராக இருக்கும் இரட்சகரின் ஊழியத்தைப்பற்றியும், ஜீவனுள்ள விசுவாசத்துக்கும் செத்துப்போன சம்பிரதாயத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றியும் ஒரு தெளிவான எண்ணத்தை பெற்றிருந்தான். சுவிசேஷத்தின் ஒளியில்,

இஸ்ரவேலர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த பண்டையகால சட்டங்களும் சடங்காச்சாரங்களும், நிழலாட்டமாக முன்பு காட்டப்பட்டிருந்தவைகள் கடந்துசெல்லவேண்டியவைகள் என்பதும், சுவிசேஷ காலத்தின்கீழ் வாழ்ந்திருப்பவர்கள் அவைகளைக் கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியத் திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதுமான புதியதும் ஆழமுமான முக்கியத்துவத்தை பெற்றன. அப்படியிருந்தாலும் தேவனுடைய மாற்ற முடியாத பத்துக்கற்பனைகளை இன்னும் பவுல் எழுத்தின்படியும் ஆவிக்குரிய விதத்திலும் கடைப்பிடித்திருந்தான். (7)

விருத்தசேதனம்பற்றிய ஆலோசனையும் கேள்வியும் அந்தியோகியா விலிருந்த சபையில் அதிகமான விவாதத்தையும் எதிர்ப்பையும் உண்டு பண்ணியது. தொடர்ச்சியான இந்த விவாதம், பிரிவினையில் சென்றுமுடியும் என்று பயந்த அங்கத்தினர்கள், முடிவாக அந்தக் காரியத்தை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுக்கும் சீடர்களுக்கும்முன்பாக வைக்கத் தீர்மானித்து, பவுலோடும் பர்னபாவோடும் சில பொறுப்புள்ள மனிதர்களையும் அனுப்ப முடிவுசெய்தார்கள். அங்கு சமீபித்துக்கொண்டிருந்த பண்டிகைகளில் பங்கு பெறுவதற்காக எருசலேமிற்கு வந்திருந்தவர்களையும் பல சபைகளின் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்திக்கவேண்டியதிருந்தார்கள். இடைக் காலத்தில்—பொதுச்சபையின் இறுதி முடிவு கொடுக்கப்படும்வரை, சகல விதமான முரண்பாடுகளும் நிறுத்திவைக்கப்படவேண்டியதாக இருந்தது. அதன்பின் பொதுச்சபையின் முடிவை நாட்டிலுள்ள அனைத்து சபையினரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளவேண்டியதாக இருந்தது. (8)

அப்போஸ்தலர்கள் எருசலேமிற்குச் செல்லும் வழியில் அவர்கள் கடந்துசென்ற நகரங்களில் இருந்த விசுவாசிகளைச் சந்தித்து, தேவனுடைய செயலில் உள்ள அவர்களுடைய அனுபவங்களையும் புறஜாதியினரின் மாற்றம்பற்றியும் விவரித்து, அவர்களைத் தைரியப்படுத்திச் சென்றார்கள். (9)

எருசலேமில் ஒரு பொதுச்சபைக் கூட்டத்திற்காகக் கூடியிருந்த பல்வேறுபட்ட சபைச் சகோதரர்களையும் அந்தியோகியாவிலிருந்து சென்ற பிரதிநிதிகள் சந்தித்தார்கள். அங்கு வந்திருந்தவர்களிடம் அவர்கள் (அந்தியோகியா சபைப் பிரதிநிதிகள்) புறஜாதிகளுக்கு மத்தியில் அவர்களுடைய ஊழியத்திற்கு உண்டாயிருந்த வெற்றியை விவரித்தார்கள். அதற்குப்பின் மாற்றமடைந்த குறிப்பிட்ட பரிசேயர்கள் அந்தியோகியாவிற்குச் சென்று, புறஜாதிகளிலிருந்து விசுவாசத்திற்கு மாறினவர்கள் விருத்த சேதனம்பண்ணப்படவேண்டுமென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் அறிவித்ததினால் உண்டான குழப்பதைத் தெளிவாக விவரித்துக் கூறினார்கள். (10)

அந்தக் கூட்டத்தில் வரவேற்புடன் இந்தக் கேள்வி விவாதிக்கப்பட்டது. கவனமாக ஆராயப்படவேண்டியிருந்த மற்ற அநேக காரியங்களும் விருத்தசேதனத்துடன் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டிருந்தது. அதில் ஒன்று விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை உபயோகப்படுத்துவதைப் பற்றிய மனப்பாங்கைக் குறித்ததாயிருந்தது. புறஜாதியிலிருந்து மாறினவர்களில் அநேகர், விக்கிரகங்களுக்கு பலிகளையும் காணிக்கைகளையும் அடிக்கடி செலுத்துகிற அறியாமையும் மூடநம்பிக்கையுமிக்க ஜனங்களுக்கிடையில் வாழ்ந்துகொண்டிருந்தனர். இந்த அஞ்ஞானத் தொழுகையை நடத்தின பூசாரிகள், அவர்களிடம் கொண்டுவரப்பட்டிருந்த அதிகமான காணிக்கை களினால் வியாபாரம் செய்திருந்தனர். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவை களை விலைக்கு வாங்குவதினால், புறஜாதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை இழிவான நிலைக்குக் கொண்டுவந்துவிடுவார்கள் என்றும், இவ்விதமாக, கொஞ்ச அளவிற்காவது விக்கிரகாராதனைச் சம்பிரதாயங்களை ஒப்புக் கொண்டுவிடுவார்களெனவும், யூதர்கள் பயந்தனர். (11)

மறுபடியும் உணவிற்காக மிருகங்கள் கொல்லப்படும்போது, அந்த மிருகங்களின் உடல்களிலிருந்து இரத்தம் சிந்தப்படுவதற்குச் சிறப்பான கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும், அப்படியில்லாவிட்டால் அந்த மாமிசம் முழுமையானதாகக் கருதப்படமாட்டாது என்றும் யூதர்கள் தெய்வீகத்தினால் உபதேசிக்கப்பட்டிருந்தபோது, புறஜாதியினர் நெருக்குண்டு செத்த மிருகங்களின் மாமிசத்தைப் புசிப்பதில் பழகியிருந்தனர். யூத ஜனங்களின் உடல்நலம் பாதுகாக்கப்படவேண்டும் என்னும் நோக்கத்துடன் தேவன் இந்தத் தடையுத்தரவுகளை அவர்களுக்குக் கொடுத்திருந்தார். இரத்தத்தை ஒரு உணவுப்பொருளாக உபயோகிப்பது பாவம் என்று யூதர்கள் கருதியிருந்தனர். உயிர் இரத்தத்திலிருக்கிறது என்றும், இரத்தம் சிந்துதல் பாவத்தின் பலனாக இருக்கிறதென்றும் அவர்கள் நம்பியிருந்தனர். (12)

இதற்கு நேர் மாறாக, புறஜாதியினர் பலி மிருத்திலிருந்து ஒழுகியிருந்த இரத்தத்தைப் பாத்திரங்களில் பிடித்து, உணவு தயாரிப்பதில் அதனை உபயோகிக்கும் பழக்கத்தை உடையவர்களாக இருந்தனர். தேவனுடைய சிறப்பான உபபேதசத்தின்கீழ் யூதர்கள் பின்பற்றியிருந்த சம்பிரதாயங்களில் மாற்றத்தை உண்டுபண்ணியாக வேண்டும் என்பது அவர்களால் நம்பமுடியாமலிருந்தது. ஆகவே காரியங்கள் அப்போதிருந்தபடி, ஒரே மேஜையில் யூதர்களும் புறஜாதியினரும் உணவருந்த முயன்றால் யூதர்கள் திகிலடைந்து புறஜாதியினரால் கோபமடைவார்கள். (13)

புறஜாதியினர்—மிகக் குறிப்பாக கிரேக்கர்கள்—மிக அதிகமான அளவில் தீயபழக்கங்களை உடையவர்களாக இருந்திருந்தனர். ஆகவே

இருதயத்தில் மாற்றமடையாத ஏதோ ஒரு சிலர், தங்களுடைய தீய பழக்கங்களை விடாமல் விசுவாசத்தை வெளிக்காட்டுபவர்களாக இருக்கக்கூடிய அபாயம் இருந்திருந்தது. புறஜாதியினரால் குற்றமாகக் கூடக் கருதப்படாமலிருந்த சன்மார்க்க நெறிக்கெதிரான செயலை, யூதக்கிறிஸ்தவர்கள் சகித்துக்கொள்ள முடியாதிருந்தனர். ஆகவே புறஜாதியினரிலிருந்த மாற்றமடைந்தவர்களின் நேர்மை, பக்தி ஆகியவை களைச் சோதிக்கும்படி விருத்தசேதனம் பெறுதலையும் சடங்காச்சாரப் பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதையும் அவர்கள்மீது ஒரு கட்டளை யாக்குவது மிகவும் மேலானவிதத்தில் சரியாக இருக்கும் என்னும் கருத்தை யூதர்கள் பற்றிக்கொண்டிருந்தார்கள். இந்த நடவடிக்கை, இருதயத்தில் மாற்றமில்லாமல் விசுவாசத்தைத் தழுவிக்கொண்டு, பின்பு சன்மார்க்க நெறியை மீறுவதாலும் அத்துமீறல்களாலும் சபைக்கு இழிவை உண்டுபண்ணுபவர்களை சபையில் சேர்ப்பதைத் தடுக்க உதவும் என்று அவர்கள் நம்பினார்கள். (14)

தீர்க்கப்படவேண்டியதாக இருந்த முக்கியமான கேள்வியுடன் சம்பந்தப்பட்டிருந்த பல காரியங்களும், அந்த ஆலோசனைச் சங்கத்தினால் கடக்கமுடியாத துன்பங்கள்போல தோற்றமளித்தன. ஆனால் கிறிஸ்தவ சபையின் வாழ்வாக இல்லாவிட்டாலும், செழிப்பாகத் தோன்றிய அந்த தீர்மானத்தின்மேல் பரிசுத்த ஆவியானவர் உண்மையில் ஏற்கனவே தீர்வை உண்டுபண்ணியிருந்தார். (15)

“மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார்” என்றான். விருத்தசேதனம் பெற்றிருந்த யூதர்களின்மீதும் விருத்தசேதனம் பெறாத புறஜாதி கிறிஸ்தவர்கள்மீதும் சமமான வல்லமையுடன் ஒரேவிதமாக இறங்கினதன் வழியாக விவாதத்தில் இருக்கும் இந்தக் காரியத்தை பரிசுத்த ஆவியானவர் முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார் என்று பேதுரு காரணம் கூறினான். தனக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தில், பலஜாதியான நான்கு கால் மிருகங்களால் நிறைந்த ஒரு துப்பட்டி இறங்கினதையும், அவைகளை அடித்துப் புசி என்ற கட்டளை கொடுக்கப்பட்டதையும் பேதுரு திரும்பக் கூறினான். தீட்டானவைகளையும் அசுத்தமானவைகளையும் தான் இதுவரைப் புசித்ததில்லையென்று கூறி, அவன் அதை மறுத்தபோது: “தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே” (அப்போஸ்தலர் 10:15) என்னும் மறுமொழி வந்ததையும் அவன் எடுத்துக் கூறினான். (16)

நூற்றுக்கு அதிபதியிடம் சென்று அவனுக்குக் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தைப்பற்றிக் கற்பிக்கும்படி அழைப்பு வந்தவுடனே அவனுக்குக் கொடுக்கப்பட்ட உபதேச வார்த்தைகளின் வெளிப்படையான விளக்கத்தைப் பேதுரு விவரித்தான். இந்தத் தூது தேவன் பட்சபாதமுடையவராயிராமல், அவருக்குப் பயப்படுகின்ற அனைவரையும் ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதைக் காட்டியது, கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்தவர்களுக்கு சத்தியத்தின் வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தபோது, அவனது அருளுரைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களை—புறஜாதியினரையும் யூதரையும் பரிசுத்த ஆவியானவர் ஆட்கொண்டதைக் கண்டு அவனுக்கு உண்டான ஆச்சரியத்தைப்பற்றி அவன் கூறினான். விருத்தசேதனம் அடைந்திருந்தவர்களின்மீது பிரகாசித்திருந்த அதே ஒளியும் மகிமையும், விருத்தசேதனம்பெறாத புறஜாதியாரின்மேலும் பிரகாசித்தது. ஒருவரைவிட அடுத்தவர் கீழானவர் என்று பேதுரு கருதக்கூடாது என்னும் தேவனின் எச்சரிப்பாக அது இருந்தது. ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தம் சகலவிதமான அசுத்தங்களிலிருந்தும் சுத்திகரிக்கக்கூடியதாக இருக்கிறது. (17)

கொர்நேலியுவும் அவனது நண்பர்களும் விசுவாசத்திற்கு மாறினதைப் பற்றியும் அவர்களுடனுள்ள அவனது உறவைப்பற்றியும் பேதுரு முன்பு ஒரு முறை தனது சகோதர்களுடன் நியாயவாதம் செய்திருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் பரிசுத்த ஆவியானவர் புறஜாதியினரின்மீது எவ்விதமாக இறங்கினார் என்பதை அவன்: “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்” (அப். 11:17) என்று சொன்னான். இப்பொழுது அதற்குச் சமமான ஊக்கத்துடனும் வலிமையுடனும் “இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்தஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்: விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார். இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?” என்றான். இது கட்டுப்படுத்தும் பத்துக்கற்பனைகளின் உரிமையைப் பலர் மறுப்பதுபோல், பத்துக்கற்பனைகளினால் உண்டான நுகம் அல்ல. இங்கு பேதுரு, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதினால் பிரயோஜனமற்றவைகளாக்கப்பட்டிருந்த சடங்காச்சாரப் பிரமாணங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தான். (18)

பேதுருவின் பேச்சு, அந்தக் கூட்டத்தை, பவுலும் பர்னபாவும் புறஜாதியாருக்காகச் செய்திருந்த ஊழியத்தின் அனுபவத்தைப்பற்றி விவரித்ததைப் பொறுமையுடன் கேட்கின்ற ஒரு கட்டத்திற்குக் கொண்டுவந்தது. "அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச்சொல்லக் கேட்டார்கள்." (19)

யூதர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த அதே சலுகைகளைப் புறஜாதிகளுக்கும் அருளுவது தேவனுடைய நோக்கமாயிருந்தது என்று தீர்மானித்து, யாக்கோபும் தமது முடிவுடன் சாட்சிகொடுத்தான். (20)

புறஜாதியாராக இருந்து, விசுவாசத்திற்கு மாறினவர்களின்மீது சடங்குகளைப் புகுத்தாமலிருப்பது நல்லது என்று பரிசுத்த ஆவியானவர் கண்டார். இந்தக் காரியத்தைப்பற்றிய அப்போஸ்தலர்களின் மனங்களும் ஆவியானவரின் மனதைப்போலவே இருந்தது. அந்த ஆலோசனை சபைக்குத் தலைமைதாங்கியிருந்த யாக்கோபு: ஆதலால் "புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென்று" கூறினான். (21)

இது அந்த விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. இந்த சம்பவத்தால், ரோமன் கத்தோலிக்க சபையால் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கும் பேதுரு சபைக்குத் தலைவனாக இருந்தான் என்னும் ஒரு கோட்பாட்டுடன் நமக்கு மறுப்பு உள்ளது. போப்புமார்களாக இருந்தவர்கள் தங்களைப் பேதுருவின் வாரிசுதாரர்கள் என்று பாராட்டியிருந்த உரிமைக்கு வேதவாக்கிய அஸ்திவாரம் இல்லை. பேதுரு உன்னதமானவரின் பதிலாளி என்னும் ஸ்தானத்திற்கு தனது சகோதரர்களுக்கு நடுவில் உயர்த்தப்பட்டவனாக இருந்தான் என்னும் உரிமைபாராட்டுதலுக்கு பேதுருவின் வாழ்க்கை எந்த ஒரு அனுமதியையும் கொடுத்திருக்கவில்லை. பேதுருவுக்குப்பின் வருபவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் அவனது உதாரணத்தைப் பின்பற்றியிருந்தார்களானால் அவர்கள் தங்களுடைய சகோதரர்களுக்குச் சமமாக இருப்பதில் எப்பொழுதும் திருப்தி உள்ளவர்களாக இருந்திருப்பார்கள். (22)

இந்தச் சமயத்தில் ஆலோசனைச் சங்கத்தில் உண்டான முடிவை அறிவிப்பதற்கு யாக்கோபு தேர்ந்தெடுக்கப்பட்டவனைப்போலக் காணப்பட்டான். சடங்காச்சாரப் பிரமாணம்—குறிப்பாக விருத்தசேதனம் என்னும் சடங்காச்சாரம், புறஜாதியினரின்மீது வற்புறுத்தப்படவோ அல்லது பரிந்துரைசெய்யப்படவோ கூடாது என்பது அவனது தீர்ப்பாக இருந்தது. தேவனிடத்திற்குத் திரும்பினதில் புறஜாதியினர் தங்களுடைய வாழ்க்கையில்

பெரும் மாறுதலைச் செய்திருந்தனர் என்றும், எனவே அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றத் தவறிவிடாதபடி, குழப்பத்தையும் சந்தேகத்தையும் உண்டுபண்ணக்கூடிய அற்பமான கேள்விகளினால் அவர்களைக் கலங்கப்பண்ணாமலிருப்பதற்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்னும் உண்மையைத் தனது சகோதரர்களின் மனங்களில் உணர்த்துவதற்கு யாக்கோபு வகைதேடியிருந்தான். (23)

அப்படியிருந்தபோதிலும், புறஜாதியினரில் மாற்றமடைந்தவர்கள் கிறிஸ்தவமார்க்கத்திற்குப் பொருத்தமில்லாதவைகளாக இருக்கும் கொள்கை களைவிட்டு விலகவேண்டியவர்களாயிருந்தனர். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளிலிருந்தும், வேசி மார்க்கத்திலிருந்தும், நெருக்குண்டு செத்தவைகளிலிருந்தும், விலகியிருக்கவேண்டுமென்று கடிதத்தின்மூலமாகப் புறஜாதியினருக்கு உபதேசிக்க அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் ஒப்புக்கொண்டார்கள். கற்பனைகளைக் கைக்கொண்டு, பரிசுத்தமான வாழ்க்கை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தப்படவேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர். விருத்தசேதனம் கட்டுப்படுத்துவதாக இருந்தது என்று அறிவித்த மனிதர்கள் அப்படிச் செய்யும்படி அப்போஸ்தலர்களால் அதிகாரப்படுத்தப்படவில்லை என்பதும் அவர்களுக்கு நிச்சயப்படுத்தப்படவேண்டியதாக இருந்தது. (24)

பவுலும் பர்னபாவும் கர்த்தருக்காகத் தங்களது உயிர்களை ஆபத்திற்குள்ளாக்கிக்கொண்டவர்கள் என்று அவர்களைக்குறித்து பரிந்துரை செய்யப்பட்டது. "அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக" என்னும் ஆலோசனைச் சங்கத்தின் முடிவைப் புறஜாதியினருக்கு வாய்மொழியாக அறிவிக்கும்படி அப்போஸ்தலர்களுடன் யூதாவும் சீலாவும் அனுப்பப்பட்டனர். சகலவிதமான முரண்பாடுகளுக்கும் முடிவைக் கொண்டுவருகிற கடிதத்துடன் தேவனுடைய நான்கு ஊழியக்காரர்களும் அந்தியோகியாவிற்கு அனுப்பப்பட்டனர். ஏனெனில் பூமியிலிருந்த மிகமேலான அதிகாரியின் குரலாக அது இருந்தது. (25)

இந்தக் காரியத்தை முடிவுசெய்த ஆலோசனைச் சங்கத்துக்குப் பல்வேறு இடங்களிலிருந்து பிரதிநிதிகளாக வந்திருந்தவர்களில் யூதர்களையும் புறஜாதியினரையும் உள்ளடக்கிய கிறிஸ்தவ சபைகளை எழுப்பினதில் முன்னணியிலிருந்த அப்போஸ்தலர்களும் ஆசிரியர்களும் அடங்கியிருந்தனர். எருசலேமிலிருந்து மூப்பர்களும், அந்தியோகியாவிலிருந்து பிரதிநிதிகளும் இருந்தனர். மிகவும் செல்வாக்குடைய சபைகள் பிரதிநிதிகளாக இருந்தன.

அறிவூட்டப்பட்ட நியாயத்தின் போதனையின்படியும், தேவசித்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட சபையின் மேன்மையுடனும் இந்த ஆலோசனைச் சங்கம் இயங்கியிருந்தது. புறஜாதியினருக்குப் பரிசுத்த ஆவி அருளப்பட்டதினால் பிரச்சனையாக இருந்த கேள்விக்கு, அவர்களுடைய நிதானமான செயல்களின் பயனாக தேவன் தாமே மறுமொழி கொடுத்திருந்தார் என்பதை அவர்களனைவரும் கண்டனர். ஆவியின் வழிகாட்டுதலைப் பின்பற்றவேண்டியது அவர்களது பங்காக இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்தனர். அந்தக் கேள்வியின்மீது வாக்களிக்கும்படி கிறிஸ்தவ அமைப்பு முழுவதும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. செல்வாக்கும் நிதானமுமுடைய மனிதர்களாக இருந்த அப்போஸ்தலர்களும் இந்தக் கட்டளையை உருவாக்கிக் கொடுத்தனர். அதன்பின் கிறிஸ்தவ சபைகளனைத்தும் பொதுவாக அதனை ஏற்றுக்கொண்டன. அப்படியிருந்தாலும், இந்த முடிவுடன் எல்லோரும் சந்தோஷமுடையவர்களாக இருக்கவில்லை. ஆசையும் சுயத்தின்மீது நம்பிக்கையுமுடைய சகோதரர்களின் ஒரு பிரிவினர், அதனை ஒப்புக்கொள்ளாதவர்களாக இருந்தனர். (26)

இந்த மனிதர்கள் தங்களுடைய செந்தப் பொறுப்பில் பணியில் ஈடுபட உத்தேசித்திருந்தனர். அதிகமாக முறுமுறுத்தல், குற்றங்கண்டுபிடித்தல், புதிய திட்டங்களை முன்வைத்தல், சுவிசேஷத்தின் தூதைப் போதிக்கும்படி தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தவர்களின் பணியைக் கீழே விழத்தள்ள வகைதேடுதல் ஆகியவைகளில் அவர்கள் ஈடுபட்டனர். ஆரம்பத்திலிருந்த சபை இப்படிப்பட்ட தடைகளைச் சந்திக்கவேண்டியதாக இருந்திருக்கிறது. இந்த நிலைமை காலத்தின் இறுதிவரை எப்பொழுதும் இருக்கும். எருசலேம் யூதர்களின் உயர்ந்தெழும் நகரமாக இருந்தது. அங்குதான் பெரும் தனித்தன்மைகளும் பெரும் மதவிரோதமும் காணப்பட்டிருந்தன. தேவாலயத்தினருகில் வாழ்ந்திருந்த யூதக் கிறிஸ்தவர்கள், இயற்கையாகவே யூதர்கள் ஒரு தனிப்பட்ட விசேஷமான ஜனமாக இருக்கின்றனர் என்னும் சிறப்பான சலுகைகளைக் கவனிக்கும்படி தங்கள் மனங்களைப் பின்திருப்பியிருந்தனர். யூதமார்க்கத்தின் சடங்காச்சாரங்களிலிருந்தும் பாரம்பரியங்களிலிருந்தும் விலகிச்சென்றுகொண்டிருப்பதையும், புதிய விசுவாசத்தின் ஒளியில் இதுவரை நிலைநிறுத்தப்பட்டிருந்த யூத சம்பிர தாயங்கள் பார்வையை விட்டு நீங்கிவிடும் என்பதையும் பெருமளவிலான இந்த மாறுதலுக்குக் காரணமாகப் பவுல் இருந்தான் என்பதையும் அவர்கள் கண்டபோது, கோபமடைந்தவர்களானார்கள். ஆலோசனைச்சங்கத்தின் முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள சீடர்களனைவருங்கூட ஆயத்தமாக இருக்கவில்லை. சிலர் சடங்காச்சாரப்பிரணமாணங்களின்மீது வைராக்கிய முள்ளவர்களாக இருந்தனர். (27)

பேதுரு அந்தியோகியாவைச் சந்தித்தபோது, புறஜாதியாரிலிருந்து விசுவாசத்திற்கு மாறினவர்களுடன் அவன் ஞானமாக நடந்துகொண்டவிதத்தினால் அநேகருடைய நம்பிக்கையை ஆதாயப்படுத்திக் கொண்டான். சிறிதுகாலம்வரை பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்டிருந்த ஒளியின்படி நடந்துகொண்டிருந்தான். உணவருந்தும்படி புறஜாதியினருடன் உட்காருவது தவறு என்னும் அவனுடைய இயல்பான தவறான எண்ணத்தை அவன் இதுவரை மேற்கொண்டிருந்தான். ஆனால் சடங்காச்சாரப் பிரமாணங்களின்மீது வைராக்கியம் உடையவர்களாக இருந்த சில யூதர்கள் எருசலேமிலிருந்து வந்தபோது, அஞ்ஞான மார்க்கத்திலிருந்து விசுவாசத்திற்கு மாறினவர்களுக்கெதிராகத் தனது மனப்பாங்கை நியாயமில்லாமல் மாற்றிக்கொண்டான். மற்ற யூதரும் அவனுடனே மாயம் பண்ணினார்கள். அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். தலைவர்கள் என்ற நிலையில் மதிக்கப்பட்டும் நேசிக்கப்பட்டுமிருந்தவர்களிடம் உண்டான பலவீனத்தின் வெளிப்படுத்தல் புறஜாதியாராக இருந்த விசுவாசிகளின் மனங்களில் மிகுந்த வேதனையை உண்டுபண்ணியது. சபை பிரிவினையால் அச்சுறுத்தப்பட்டது. எனவே பேதுருவின் இரட்டை வேடத்தினால்—அழிவை உண்டுபண்ணும் செல்வாக்கினால், சபைக்கு உண்டான தவறை பவுல் கண்டு, பேதுரு தனது உண்மையான நுண்ணுணர்வுகளை மறைத்துவைத்திருந்ததற்காக அவனை வெளிப்படையாகக் கடிந்துகொண்டான். சபைக்கு முன்னல் பவுல் பேதுருவை நோக்கி: "யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?" என்று விசாரித்தான். (28)

பேதுரு அவன் விழுந்திருந்த தவறைக் கண்டான். உடனே செய்யப்பட்டுவிட்ட அவனது தவறை அவனது வல்லமைக்குள் இருந்தவரை சீர்படுத்துவதற்குப் புறப்பட்டான். ஆதியிலிருந்து அந்தம்வரை உள்ளவைகளை அறிந்திருக்கிற தேவன், தன்னில்தானே பெருமையடித்துக்கொள்ளும்படி அவனிடத்தில் ஒன்றும் இருக்கவில்லை என்பதை பரீட்சிக்கப்பட்டிருந்த அந்த அப்போஸ்தலன் காணும்படிச் செய்வதற்காக பேதுரு தனது பலவீனத்தை வெளிக்காட்ட அனுமதித்தார். மிகச் சிறந்த மனிதர்களுங்கூட, தங்களுக்குள் தாங்களே விட்டுவிடப்பட்டால் நிதானிப்பதில் தவறுசெய்வார்கள். வரவிருக்கும் காலத்தில் தேவனுக்கு மட்டுமே உரித்தான மேன்மையான தனிச்சிறப்புரிமையை, பேதுருவிற்கும் அவனுக்குப் பின்னால் வருபவர்களுக்கும் உரித்தாக்கும் பொய்த் தோற்றத்தினால் சிலர் வஞ்சிக்கப்பட்டுப்போவார்கள் என்பதை தேவனும் கண்டார். அப்போஸ்தலனாகிய பேதுருவின் பவவீனமும் அவனுடைய தவறும் தன்மையும் அவன் மற்ற அப்போஸ்தலர்களைவிட

எந்தவிதத்திலும் மேலானவனல்ல என்பதற்கு ஒரு சான்றாக இந்த ஆவணம் இருக்கவேண்டியதாக இருந்தது. (29)

தேவனுடைய காரியத்தில் நம்பிக்கைக்குரிய பதவிகளிலிருக்கும் மனிதர்களுக்கு அவர்கள் நேர்மையிலிருந்து தவறிவிடாமல் கொள்கையை உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும் என்பதற்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும்படி, சரியான கொள்கையிலிருந்து விலகிச்சென்றதன் இந்த வரலாறு இருக்கிறது. மனித ஏதுகரத்தின்மீது வைக்கப்பட்டிருக்கும் பொறுப்புகள் எந்த அளவிற்குப் பெரிதானதாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு அதிகாரம் செலுத்தவும் கட்டுப்படுத்தவுங்கூடிய வாய்ப்புக்கள் அவனுக்கு அதிகமாயிருக்கிறது. இப்படிப்பட்ட மனிதன் கர்த்தருடைய பாதையைப் பின்பற்றக் கவனம் இல்லாதவனாக இருந்து, பொதுச்சபையில் உள்ள விசுவாசிகளால் எடுக்கப்பட்ட முடிவுகளுடன் இசைந்து செயல்படாவிட்டால் அவன் நிச்சயமாகவே அதிகமான கேடு செய்பவனாக இருப்பான். (30)

பேதுருவின் இந்தத் தோல்விகள்—அவனது விழுகைக்கும் திரும்ப எடுத்துக்கட்டப்பட்டதற்குப்பின்னும், கிறிஸ்துவுடன் அவனுக்கிருந்த நெருக்கமான அறிமுகத்திற்குப்பின்னும், அவன் பெற்றுக்கொண்டிருந்த உபதேசங்களுக்குப்பின்னும், செய்திருந்த போதனைகளினாலும் பிரசங்கங் களினாலும் அவன் அடைந்திருந்த ஈவு அறிவு ஆகியவைகளால் உண்டாயிருந்த செல்வாக்கிற்குப்பின்னும் அவன் மாயஞ்செய்தது—மனிதர் களுக்குப் பயந்து—அல்லது மதிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக சுவிசேஷ த்தின் கொள்கைகளிலிருந்து விலகிச்சென்றது விசித்திரமாக இல்லையா? ஒவ்வொரு மனிதனும் தனது உதவியற்ற நிலையையும் தனது சொந்தக் கப்பலைத் துறைமுகத்திற்கு நேராக பாதுகாப்பாக ஓட்டிச்செல்லத் தன்னிடம் தகுதியில்லாதிருப்பதையும் உணர்வானாக. (31)

பவுல் தனது ஊழியத்தில் அடிக்கடி தனியாக நிற்கும்படி வற்புறுத்தப்பட்டிருந்தான். அவன் தேவனைப்பற்றிச் சிறப்பான விதத்தில் கற்பிக்கப்பட்டவனாக இருந்து, கொள்கைகள் சம்பந்தப்பட்டவைகளில் அடங்கியிருந்த விட்டுக்கொடுத்தலுடன் இணங்கத் துணியாதவனாக இருந்தான். மனிதர்களின் பாரம்பரியங்களும் வழக்குச்சொற்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் இடத்தை அடைந்துகொள்ளக்கூடாது. மனிதர்களின் பதவிகள் சபையில் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவர்களது தவறான எண்ணங்களினாலும் முன்னுரிமைகளினாலும் சுவிசேஷத்தின் தூது முன்செல்வதில் இடையூறு உண்டுபண்ணப்படலாகாது. (32)

பவுல் தன்னையும் தனது வல்லமைகள் அனைத்தையும் தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை செய்திருந்தான். அவன்

சுவிசேஷத்தின் சத்தியங்களைப் பரலோகத்திலிருந்து நேரடியாகப் பெற்றிருந்து, அவனது ஊழியம் முழுவதிலும் பரலோக ஏதுகரங்களுடன் உயிரோட்டமான உறவை உடையவனாக இருந்தான். புறஜாதிக் கிறிஸ்தவர்களின்மீது தேவையற்ற கட்டுப்பாடுகளைச் சுமத்தாதிருப்பதுபற்றி அவன் தேவனால் போதிக்கப்பட்டிருந்தான். இவ்வாறாக யூதமார்க்கத்தைப் பரப்பும் விசுவாசிகள், கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பெறவேண்டும் என்ற கேள்வியை அந்தியோகியா சபையில் அறிமுகம் செய்தபோது, இந்தப் போதனையைப்பற்றி தேவ ஆவியினுடைய மனதை அறிந்திருந்த பவுல், உறுதியுடனும் விட்டுக்கொடுக்காமலும் இருந்தான். அது சபைகளுக்கு, யூதச்சடங்குளில் இருந்து—சடங்காச்சாரங்களிலிருந்து விடுதலையைக் கொண்டுவந்தது. (33)

பவுல் தேவனால் போதிக்கப்பட்டிருந்தபோதும் தனிப்பட்ட பொறுப்புக்களைப்பற்றி மாறுபட்ட யோசனைகளை உடையவனாக இருக்கவில்லை. நேரடியான வழிகாட்டுதலுக்காக அவன் தேவனை நோக்கியிருந்த அதேநேரத்தில், விசுவாசிகளின் ஐக்கியத்தினால் ஒரே சரீரமாக இருந்த சபைக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை அவன் அங்கீகரிக்க ஆயத்தமாயிருந்தான். ஆலோசனையின் அவசியத்தை அவன் உணர்ந்தான். முக்கியமான காரியங்கள் எழுந்தபோது, இவைகளை சபைக்குமுன் வைக்கவும், முடிவுகளைச் சரியான விதத்தில் செய்ய தேவனுடைய ஞானத்தைத் தேடவும், சகோதரர்களுடன் ஒற்றுமைப்படவும் அவன் மகிழ்ச்சியுள்ளவனாக இருந்தான். “தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே. தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபகைளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது” (1 கொரிந்தியர் 14:32,33) என்று அறிவித்தான். சபையாக ஐக்கியப்பட்டிருக்கும் அனைவரும் “ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து” (1 பேதுரு 5:5) இருக்கவேண்டும் என்று அவன் பேதுருவுடன் சேர்ந்து போதித்தான். (34) ★

# 20

# பவுலாரின் ஊழிய வாஞ்சை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 201–210)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 15:36–41; 16:1–6**

அந்தியோகியாவில் சிறிது காலம் ஊழியத்தில் செலவிட்டபின், பவுல் தனது சக ஊழியக்காரர்களுக்கு வேறொரு மிஷனரிப் பயணத்தை முன்வைத்தான். "சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப்பார்ப்போம் வாரும் என்றான்." (1)

தங்களுடைய ஊழியத்தின்கீழ் சுவிசேஷத்தின் தூதை ஏற்றுக்கொண்டிருந்தவர்களிடம் பவுலும் பர்னபாவும் மென்மையான இருதயமுடையவர்களாக இருந்து, அவர்களை மறுபடியும் ஒருதடவை பார்ப்பதற்கு ஏக்கமுடையவர்களாக இருந்தார்கள். இந்த அக்கறையைப் பவுல் ஒருபோதும் இழக்கவில்லை. தனது முந்தைய ஊழியக்களத்தின் காட்சியிலிருந்து மிகத் தூரமான ஊழியக்களத்தில் இருந்தபோதிலும் மாற்றமடைந்தவர்கள் "பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்த" (2 கொரிந்தியர் 7:1) அவர்களை வற்புறுத்துகின்ற பாரத்தை தன் இருதயத்தில் உடையவனாகப் பவுல் தொடர்ந்திருந்தான். அவர்கள் தங்களையே சார்ந்து நிற்கும்படியாகவும், வளரும் கிறிஸ்தவர்களாகவும், விசுவாசத்தில் உறுதியாகவும், வைராக்கியத்தில் தீவிரமாகவும், தேவனுக்கு அர்ப்பணிப்பதில் முழு இருதயத்தோடும் இருந்து, அவருடைய இராஜ்யத்தை முன்கொண்டு செல்லுவதற்காகச் செயலாற்ற அவர்களுக்கு உதவி செய்ய அவன் தொடர்ச்சியாக முயன்றிருந்தான். (2)

பவுலுடன் சேர்ந்து செல்ல பர்னபா தயாராக இருந்தான். ஆனால் மறுபடியும் தன்னை ஊழியத்தில் ஈடுபடுத்த விரும்பியிருந்த மாற்குவை அவர்களுடன் அழைத்துச் செல்ல பர்னபா விரும்பினான். பவுலோ,

அவர்களுடைய முதலாவது மிஷனரிப் பயணத்தின்போது, அவசியமான ஒரு நேரத்தில் அவர்களை விட்டுச்சென்றவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான். வீட்டிலிருந்த பாதுகாப்பு வசதிகளுக்காக, ஊழியத்தைவிட்டுப் பிரிந்துசென்றிருந்த மாற்குவின் பலவீனத்தை மன்னிப்பதற்கு விருப்பமற்றவனாகப் பவுல் இருந்தான். பொறுமை, சுயமறுப்பு, தைரியம், பிரதிஷ்டை, விசுவாசம், தியானம் செய்வதற்கான உள்ளூரம் இல்லாத ஒருவன், இவைகள் அவசியப்படுகின்ற வேலைக்குப் பொருத்தமானவனல்ல என்று அவன் வற்புறுத்தினான். பவுலும் பர்னபாவும் பிரிந்துசெல்லும்படியானதாக அந்த வாக்குவாதம் இருந்தது. பர்னபா தனது மன உணர்த்துதலைப் பின்பற்றி, மாற்குவைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். “பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்.” (3)

பவுலும் சீலாவும் சீரியா, சிலிசியா ஆகியவைகளின்வழியாகப் பயணம் செய்து, அங்கிருந்த சபகைளைப் பலப்படுத்திக்கொண்டு, இறுதியில் லிக்கவோனியா மாநிலத்திலுள்ள தெர்பை, லீஸ்திரா ஆகிய இடங்களைச் சென்றடைந்தனர். லீஸ்திரியாவில்தான் பவுல் கல்லெறியப்பட்டான். இருந்த போதிலும், அவனது முன்னைய அபாயமிக்க இடத்தில் அவனை மறுபடியும் நாம் காண்கிறோம். அவனுடைய ஊழியத்தின்மூலமாக, சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள் சோதனைகளின் பாடுகளை எவ்விதமாகத் தாங்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதை அறிய, அவன் கவலையோடு இருந்தான். அவன் ஏமாற்றமடையவில்லை. வன்முறைமிக்க எதிர்ப்புகளுக்கு முன்பாகவும் லீஸ்திரிய விசுவாசிகள் உறுதியாக இருப்பதை அவன் கண்டான். (4)

பவுலுடைய லீஸ்திராவின் முதல் சந்திப்பின் முடிவின்போது, அவனுக்குண்டான பாடுகளுக்குத் தீமோத்தேயு சாட்சியாக இருந்தான். காலம் கடந்துசென்றபோது, ஊழிய வேலைக்கென்று தன்னை முற்றிலுமாகக் கொடுக்கவேண்டும் என்ற மனநிறைவு அடையும்வரை, அந்த உணர்த்துதல் ஆழமாகிக்கொண்டே இருந்தது. இந்த நிலைமையில் இங்கு பவுல் தீமோத்தேயுவை மறுபடியும் சந்தித்தான். அவனுடைய இருதயம் பவுலின் இருதயத்துடன் பின்னப்பட்டிருந்தது. பாதை திறப்பதற்குத் தக்கபடி உதவிசெய்வதினால், அப்போஸ்தலனின் ஊழியங்களில் பங்குபெறுவதற்கு அவன் ஏக்கம் உடையவனாக இருந்தான். (5)

ஊழியத்தில் பவுலின் சீஷனாக இருந்த சீலா சோதிக்கப்பட்ட ஒரு ஊழியக்காரனாக இருந்து, தீர்க்கதரிசன ஆவி என்னும் வரத்தைப்

பெற்றவனாக இருந்தான். ஆனால் தீவிரமான ஊழியத்திற்கென்று அதிகமானவர்களுக்குப் பயிற்சி அளிக்கும்படி செய்யப்படவேண்டிய பணி பெருமளவிற்குப் பெரிதாக இருந்தது. ஒரு ஊழியக்காரனின் பணியில் உள்ள பரிசுத்தமான தன்மையோடு, பாடுகளையும் உபத்திரவங்களையும் கண்டு திடுக்கிடாமலும், போதிக்கப்படுவதற்கு விருப்பமுடையவனாகவும் தீமோத்தேயு இருப்பதைப் பவுல் கண்டான். அப்படியிருந்தபோதிலும், அவனுடைய சுபாவத்தைப்பற்றியும், கடந்தகால வாழ்க்கையைப்பற்றியும் முதலில் முற்றிலுமாகத் திருப்தியடையாமல், பரீட்சிக்கப்படாத ஒரு இளைஞனாக இருந்த தீமோத்தேயுவுக்கு, சுவிசேஷ ஊழியத்திற்குப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பை எடுக்க அந்த அப்போஸ்தலன் முயலாதவனாக இருந்தான். (6)

தீமோத்தேயுவின் தந்தை ஒரு கிரேக்கனாகவும், தாய் ஒரு யூத ஸ்திரீயாகவும் இருந்தனர். அவன் தனது பிள்ளைப் பருவத்திலிருந்தே வேதவாக்கியங்களை அறிந்தவனாக இருந்தான். அவனுடைய குடும்ப வாழ்க்கையில் அவன் கண்ட பக்தி பலமுள்ளதாகவும் அறிவுள்ளதாகவும் இருந்தது. பரிசுத்த பிரமாணங்களின்மீது அவனது அன்னைக்கும் பாட்டிக்கும் உண்டாயிருந்த பக்தி, தேவனுடைய சித்தத்தின்படி செய்வதில் கிடைக்கும் தேவனுடைய ஆசீர்வாதத்தை தொடர்ச்சியாக நினைவூட்டியது. இந்த இரண்டு பயபக்தியான பெண்களும் தேவனுடைய வார்த்தையினால் தீமோத்தேயுவை வழிநடத்தியிருந்தனர். அவர்களிடமிருந்து அவன் பெற்றிருந்த ஆவிக்குரிய வல்லமை, சூழ்ந்திருந்த பொல்லாத செல்வாக்குகளினால் கறைபடாதவனாக இருக்கும்படி அவனைப் பாதுகாத்திருந்தது. இவ்வாறாகப் பாரங்களைச் சுமக்கும்படி அவனை ஆயத்தப்படுத்துவதில் அவனது வீட்டு ஆசிரியர்கள் தேவனுடன் ஒத்துழைத்திருந்தனர். (7)

தீமோத்தேயு விசுவாசமுள்ளவனாகவும் உறுதியானவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருப்பதைப் பவுல் கண்டான். பவுல் அவனைத் தனது ஊழியத்திலும் பயணத்திலும் ஒரு தோழனாகத் தெரிந்து கொண்டான். தீமோத்தேயுவின் பிள்ளைப்பருவத்தில் அவனுக்குப் போதனை செய்திருந்தவர்கள் தங்களுடைய கவனிப்பில் இருந்த மகன் மாபெரும் அப்போஸ்தலனுடைய கூட்டுறவினால் பிணைக்கப்பட்டிருப்பதைக் காண்கின்ற பெரும்பேற்றைப் பெற்றனர். ஒரு ஆசிரியராக இருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டபோது, தீமோத்தேயு ஒரு சாதாரணமான வாலிபனாக இருந்தான். ஆனால் அவனது ஆரம்பகாலக் கல்வியினால் அவனது கொள்கைகள் அமைந்திருந்தபடியால், பவுலின் உதவியாளன் என்னும் இடத்தில் வைக்கப்பட அவன் தகுதியுடையவனானான். அவன் இளைஞனாக

இருந்திருந்தபோதிலும் கிறிஸ்தவ எளிமையுடன் தனது பொறுப்புக்களைத் தாங்கியிருந்தான். (8)

ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பவுல் தீமோத்தேயுவை விருத்தசேதனம் பெறும்படி ஞானமாக உபதேசித்தான். தேவன் அதனை சொன்னார் என்பதற்காக அல்லாமல், தீமோத்தேயுவின் ஊழியத்தில் யூதர்களின் மனங்களில் தடையாக இருக்கக்கூடிய ஒன்றை பவுல் அவர்களது மனங்களிலிருந்து நீக்குவதற்காக அப்படிச் செய்தான். தனது வேலையினிமித்தம் நகரத்திலிருந்து நகரங்களுக்கும் பல இடங்களுக்கும் பயணம் செய்யவேண்டியவனாக இருந்து, அடிக்கடி யூதர்களுடைய ஜெப ஆலயங்களில் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கும் வாய்ப்புக்களை உடையவனாக இருந்ததுடன், சபை கூடுகின்ற மற்ற இடங்களிலும் பேசவேண்டியவனாக இருந்தான். தன்னுடனுள்ள ஊழியக்காரர்களில் ஒருவன் விருத்தசேதனம் பெறாதவனாக இருக்கிறான் என்பது அறியப்படநேர்ந்தால், யூதர்களின் தவறான எண்ணத்தினாலும் மதவிரோதத்தினாலும் அவனது ஊழியத்தில் பெருமளவில் இடையூறு உண்டாகும். அந்த அப்போஸ்தலன் எல்லா இடங்களிலும் தீர்மானமான எதிர்ப்பையும் கடுமையான உபத்திரவங்களையும் சந்தித்தான். சுவிசேஷத்தைப்பற்றின அறிவைத் தனது யூத சகோதரர்களுக்கும் அதைப்போலவே புறஜாதியினருக்கும் கொண்டுவர அவன் விரும்பினான். ஆகவே எதிர்ப்பிற்கான போலியான காரணங்கள் ஒவ்வொன்றையும் முடிந்தவரைக்கும், விசுவாசத்திற்கு இசைவான விதத்தில் நீக்குவதற்கு அவன் வகைதேடியிருந்தான். யூதர்களின் தவறான எண்ணத்திற்கு இந்த அளவிற்கு இணங்கின அதே நேரத்தில், விருத்தசேதனமும் விருத்தசேதமின்மையும் ஒன்றுமில்லை; கிறிஸ்துவின் சுவிசேஷமே எல்லாமுமாயிருக்கிறது என்பதை நம்பி போதனைசெய்தான். (9)

“விசுவாசத்தில் உத்தம குமாரனாக” (1 தீமோத்தேயு 1:2) பவுல் தீமோத்தேயுவை நேசித்தான். இளையவனான—சீடனாக இருந்தவனை அந்தப் பெரிய அப்போஸ்தலன் அடிக்கடி வெளியில் அழைத்துச்சென்று வேதவாக்கிய வரலாற்றைப்பற்றி அவனிடம் கேள்வி கேட்டிருந்தான். அவர்கள் இடம்விட்டு இடம் பயணம் செய்திருந்தபோது, வெற்றிகரமாகப் பணிசெய்வது எப்படியென்று கவனமாக அவனுக்குப் போதனை செய்திருந்தான். பவுல், சீலா ஆகிய இருவரும் தீமோத்தேயுவுடன் இருந்த அவர்களது கூட்டு அனைத்திலும் சுவிசேஷ ஊழியக்காரனின் ஊழியத்தில் இருந்த பரிசுத்தமான தன்மை, அதன் கருத்தூன்றிய தன்மை ஆகியவைபற்றி அவனது மனதில் ஏற்கனவே பதிந்திருந்த உணர்த்துதல்களை ஆழப்படுத்துவதற்கு வகைதேடியிருந்தனர். (10)

தீமோத்தேயு தனது வேலையில் தொடர்ச்சியாகப் பவுலின் போதனைகளையும் உபதேசங்களையும் தேடியிருந்தான். அவன் உணர்ச்சியின்படி செல்லாமல், ஒவ்வொரு அடியிலும் ஆலோசனை செய்து, அமைதியான சிந்தனையுடன் இதுதான் கர்த்தருடைய பாதையா? என்று விசாரித்திருந்தான். தேவப்பிரசன்னம் வாசம்செய்யக்கூடிய ஒரு ஆலயமாக இருக்கும்படி, பரிசுத்த ஆவியானவரால் அவனை வனையமுடியும் என்பதை அவர் கண்டார். (11)

அன்றாட வாழ்க்கையில் வேதாகமப்பாடங்களை உருப்படுத்தும் போது, சுபாவத்தில் ஆழமானதும் தொடர்ந்திருக்கக்கூடியதுமான செல்வாக்கை உடையவைகளாக அவை உள்ளன. இந்தப் பாடங்களைத் தீமோத்தேயு கற்றுப் பழக்கப்படுத்தினான். அவனிடத்தில் சிறப்புமிக்க சாதுரிய ஞானம் இருக்கவில்லை. ஆனால் தேவனால் கொடுக்கப்பட்டிருந்த திறமைகளை ஆண்டவரின் சேவைக்கென்று பயன்படுத்தினதால், அவனுடைய பணி விலைமதிப்புமிக்கதாக இருந்தது. அவனுடைய நடைமுறை பக்தி அவனை மற்றுள்ளவர்களிலிருந்து சிறப்பாக வேறுபடுத்திக் காட்டி அவனுக்குச் செல்வாக்கைக் கொடுத்தது. (12)

ஆத்துமாக்களுக்காக உழைப்பவர்கள், தேவனைப்பற்றி மிகவும் ஆழமான—நிறைவான—தெளிவான—அறிவை சாதாரணமான முயற்சியால் சம்பாதிப்பதை அதிகமாக ஆதாயப்படுத்தவேண்டும். எஜமானனின் வேலையில் அவர்கள் தங்களுடைய சக்திகளனைத்தையும் செலவிட்டுள்ளனர். தங்களுடைய வாரிசாக ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டுமானால், அவர்கள் தேவனை உறுதியாகப் பற்றிக்கொண்டு, நாள்தோறும் சகல ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாக இருப்பவரிடத்திலிருந்து கிருபையையும் வல்லமையையும் பெறுபவர்களாக இருக்கவேண்டும். “ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்”—தீத்து 2:11–14. (13)

புதிய பிரதேசத்திற்குள் பிரவேசிக்குமுன், பவுலும் அவனது தோழர்களும் பிசீதியாவையும் அதைச் சுற்றிலும் ஏற்படுத்தப்பட்டிருந்த

சபைகளையும் சந்தித்தார்கள். “அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின.” (14)

அப்போஸ்தலனாகிய பவுல், தனது ஊழியங்களினால் விசுவாசத் திற்கு மாறினவர்களின்மீது தனக்குள்ள பொறுப்பை உணர்ந்தான். எல்லாவற்றிற்கும்மேலாக, அவர்கள் விசுவாசமுள்ளவர்களாக இருந்து “நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு” (பிலிப்பியர் 2:14) ஏற்றபடி அவர்கள் இருக்கவேண்டுமென்று ஏங்கியிருந்தான். தனது ஊழியத்தின் பலனுக்காக அவன் நடுங்கினான். தனது கடமையை நிறைவேற்றத் தவறினாலும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் பணியில் சபை தன்னுடன் ஒத்துழைக்கத் தவறினாலும், தன்னுடைய இரட்சிப்பும் ஆபத்திற்குள்ளாகும் என்று உணர்ந்தான். ஜீவ வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு செல்லும்படி விசுவாசிகளுக்குக் கற்பிப்பதற்கு போதனைமட்டும் போதாது என்பதை அவன் அறிந்திருந்தான். கிறிஸ்துவின் பணியை முன்கொண்டு செல்லுவதற்கு, பிரமாணத்தின்மேல் பிரமாணமாகவும், கற்பனையின்மேல் கற்பனையாகவும் இங்கே கொஞ்சமாகவும் அங்கே கொஞ்சமாகவும் போதிக்கப்படவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். (15)

தேவனால் கொடுக்கப்பட்ட வல்லமைகளை ஒருவன் பயன்படுத்த மறுக்கும்போது, இந்த வல்லமைகள் அழுகி, அழிந்துவிடும் என்பது உலகளாவிய கொள்கையாக இருக்கிறது. வாழ்ந்துகாட்டாத சத்தியம், போதிக்கப்படாத சத்தியம், ஜீவனைக்கொடுக்கும் தனது வல்லமையையும் குணமாக்கும் புண்ணியத்தையும் இழந்துவிடுகிறது. எனவே கிறிஸ்துவில் பூரணமடையும்படி ஒவ்வொரு மனிதனுக்கும் பிரசங்கிப்பதில் எங்கே தவறிவிடுவேனா என்பது அப்போஸ்தலனின் பயமாக இருந்தது. தெய்வீக வார்ப்படத்திற்குப் (Divine mould) பதிலாக மனித வார்ப்படத்தை சபைகளில் அவனது பங்காகக் கொடுப்பதன் பலனாக, அவனது பகுதியில் உண்டாகக்கூடிய ஏதாவது தவறைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியபோது, பரலோக இராஜ்யத்தைப்பற்றிய பவுலின் நம்பிக்கை மங்கத் தொடங்கியது. அவன் எவர்களுக்காக ஊழியஞ்செய்திருந்தானோ அவர்கள், அவனுடைய பணி விசுவாசம் இல்லாததாக இருந்ததானால் தேவ கிருபையிலிருந்து தவறிவிட்டால், அவனது அறிவு, அவனது சொல்வன்மை, அவனது அற்புதங்கள், மூன்றாம் வானம்வரை அவன் எடுத்துச்செல்லப்பட்டபோது

கண்டிருந்த நித்திய காட்சிகள், யாவும் கிடைக்கக்கூடாததாகிவிடும். ஆகவே வாயின் வார்த்தையினாலும் கடிதத்தினாலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தவர்களிடம், "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு" (பிலிப்பியர் 2:14,15) உங்களைத் தகுதிப்படுத்தக்கூடிய ஒரு பாதையைத் தொடருங்கள் என்று அவன் கெஞ்சி மன்றாடினான். (16)

உண்மையான ஒவ்வொரு ஊழியக்காரனும், தனது கவனத்தில் இருக்கும்படி ஒப்படைக்கப்பட்டுள்ள, ஒவ்வொரு விசுவாசியின் ஆவிக்குரிய முன்னேற்றம்பற்றிய பாரமான பொறுப்பை உணருகிறான். அவர்களும் தேவனுடன் உடன்வேலைக்காரர்களாகவேண்டும் என்ற ஏக்கமிக்க விருப்பத்தை உடையவனாக இருக்கிறான். சபையின் ஆரோக்கியமான நிலைமை பெருமளவிற்கு தேவன் அவனுக்குக் கொடுத்திருக்கும் வேலையை விசுவாசத்துடன் செய்வதில் இருக்கிறது என்பதை அவன் உணருகிறான். சபையில் புதிதாகச் சேர்க்கப்படும் ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிப்பின் திட்டத்தை எடுத்துச்செல்லும் ஒரு ஏதுகரமாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, அக்கறையுடனும் களைப்பற்றவனாகவும் அவன் விசுவாசிகளை உற்சாகப்படுத்த வகைதேடுகிறான். (17)

பிசீதியாவிலும் அதைச் சுற்றியிருந்த பிரதேசங்களிலும் இருந்த சபைகளைச் சந்தித்தபின், பவுலும் சீலாவும் தீமோத்தேயுவுடன்கூட பிரிகியா, கலாத்திய பிரதேசங்களிலுள்ள இடங்களுக்குச் சென்றனர். இங்கு அவர்கள் இரட்சிப்பின் மகிழ்ச்சிகரமான செய்தியை பலத்த வல்லமையுடன் அறிவித்தனர். கலாத்தியர்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்களாக இருந்தனர். ஆனால் அப்போஸ்தலன் அவர்களுக்குப் பிரசங்கித்தபோது, பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து விடுதலையை வாக்குத்தத்தம் செய்த அந்தத் தூதில் களிகூர்ந்தார்கள். கிறிஸ்துவின் பாவநிவாரண பலியின்மீதுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் நீதியைப்பற்றிய கோட்பாட்டை, பவுலும் அவனது உடன் ஊழியர்களும் அறிவித்தனர். விழுந்துபோன பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகின்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, கீழ்ப்படியாமைக்கான தண்டனையைச் செலுத்துவதால் புருஷர்களையும் ஸ்திரீகளையும் மீட்பதற்காக வந்த ஒருவராகக் கிறிஸ்துவை அவர்கள் முன் வைத்தனர். மெய்த் தேவனை இதற்குமுன் ஒருபோதும் அறியாதவர்களாக இருந்த அநேகர், சிலுவையின் ஒளியில் பிதாவுடைய அன்பின் பெரிய தன்மையை அறிந்துகொள்ள ஆரம்பித்தனர். (18)

இவ்வாறாக, கலாத்தியர்களுக்கு, “பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்,” “இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த”வரைப்பற்றின அடிப்படை சத்தியங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. “விசுவாசக்கேள்வியினாலே” அவர்கள் தேவனுடைய ஆவியைப்பெற்று, “கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரரா”னார்கள் (கலாத்தியர் 1:3,4; 3:2,26). (19)

பவுல் கலாத்தியருக்கு மத்தியில் இருந்தபோது, அவன் நடத்தின வாழ்க்கை, “சகோதரரே, என்னைப்போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்” (கலாத். 4:12) என்று அவன் பிற்காலத்தில் கூறக்கூடியவிதமாக இருந்தது. அவனுடைய உதடுகள் பரலோக பலிபீடத்திலுள்ள எரியும் நெருப்புத்துண்டினால் தொடப்பட்டிருந்தது, சரீரப்பிரகாரமான குறைபாடுகளுக்கும்மேலாக எழும்பி, பாவியின் ஒரே நம்பிக்கையாகக் கிறிஸ்துவை முன்வைக்க, அவன் தகுதிப்படுத்தப் பட்டிருந்தான். அவனது பேச்சைக் கேட்டவர்கள் அவன் கிறிஸ்துவுடன் இருந்திருந்தான் என்பதை அறிந்திருந்தனர். ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய காரியங்களுடன் ஒப்பிடவும், சாத்தானின் கோட்டைகளைத் தகர்த்து வீழ்த்தவும், அவன் உன்னதத்திலிருந்துள்ள வல்லமையால் அணிவிக்கப்பட்டுத் தகுதியுடையவனாக இருந்தான். தேவனுடைய அன்பு, அவருடைய ஒரே பேறான குமாரனின் தியாகபலியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப்பற்றிய அவனது பிரசங்கத்தினால் இருதயங்கள் உடையவே, அநேகர் “இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்று விசாரிக்கும்படி நடத்தப்பட்டனர். (20)

அப்போஸ்தலன் புறஜாதியாருக்கு நடுவில் செய்திருந்த ஊழியம் முழுவதிலும், இந்தவிதமாக சுவிசேஷத்தை முன்வைக்கின்ற ஊழியம் அடையாளப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது. அவன் எப்பொழுதும் கல்வாரிச் சிலுவையை அவர்கள்முன் வைத்தான். “நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்” (2 கொரிந்தியர் 4:5,6) என்று அவனுடைய அனுபவத்தைப்பற்றிப் பின்வந்த வருடங்களில் அவன் அறிவித்தான். (21)

கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்ப நாட்களில் தங்களை அர்ப்பணம் செய்திருந்த தூதுவர்கள் அழிந்துகொண்டிருக்கும் உலகத்திற்கு இரட்சிப்பின் நற்செய்தியைச் சுமந்துசென்றிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவையும் சிலுவையில் அறையப்பட்ட அவரையும் முன்வைத்தபோது, அதை சீர்குலைத்துவிடாதபடிக்கு தங்களை உயர்த்துகின்ற எண்ணத்திற்கு இடங்கொடாமல் இருந்தனர். அவர்கள் அதிகாரத்தையோ அல்லது மேலான அந்தஸ்தையோ விரும்பவில்லை. சுயத்தை இரட்சகருக்குள் மறைத்து, இடரட்சிப்பின் பெரும் திட்டத்தையும், அந்தத் திட்டத்தை ஆக்கியோனும் முடிப்பவருமான கிறிஸ்துவின் வாழ்க்கையையும் உயர்த்தினார்கள். கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார் என்பது அவர்களது போதனையின் பாரமாக இருந்தது. (22)

இன்று தேவனுடைய வார்த்தையைப் போதித்துக்கொண்டிருப்பவர்கள், கிறிஸ்துவை உயர்த்துவார்களானால், மேலும் மேலும் உயர்த்துவார்களானால், அவர்களுடைய ஊழியம் மிகவும் அதிகமான அளவிற்கு வெற்றி உள்ளதாக இருக்கும். பாவிகள் ஒரு முறையாவது சிலுவையை அக்கறையுடன் பார்க்கும்படி நடத்தப்பட்டால், சிலுவையிலறையப்பட்ட இரட்சகரின் முழுக்காட்சியை அவர்களால் காணக்கூடுமானால், அவர்கள் தேவனுடைய மன உருக்கத்தின் ஆழத்தையும், பாவத்தின் தன்மையையும் உணர்ந்துகொள்ளுவார்கள். மனிதனின்மேலுள்ள தேவனின் பெரிய அன்பை, கிறிஸ்துவின் மரணம் மெய்ப்பிக்கின்றது. அது நமது இரட்சிப்பிற்கான அடமானமாக இருக்கிறது. கிறிஸ்தவனிடத்திலிருந்து சிலுவையை நீக்குவது, வானத்திலிருந்து சூரியனை நீக்குவதுபோல் இருக்கிறது. சிலுவை நம்மைத் தேவனுடன் ஒப்புரவாக்கி, தேவனுக்கருகில் நம்மைக் கொண்டுவருகிறது. ஒரு தகப்பனுடைய ஓய்வு ஒழிச்சலற்ற அன்பின் மன உருக்கத்துடன், மனித இனத்தை நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக தமது குமாரன் சகித்த பாடுகளை யேகோவா பார்த்து, அந்த நேச குமாரனுக்குள் அவர் நம்மை ஏற்றுக்கொள்ளுகிறார். (23)

சிலுவையில்லாதபோது, மனிதன் பிதாவுடன் ஐக்கியம் இல்லாதவனாக இருப்பான். நமது ஒவ்வொரு நம்பிக்கையும் அதைச் சார்ந்ததாக உள்ளது. அதிலிருந்து இரட்சகருடைய அன்பின் ஒளி வீசுகிறது. தன்னை இரட்சிப்பதற்காக மரித்த ஒருவரை, சிலுவையின் பாதத்தினருகில் நின்று பாவி பார்க்கும்போது, அவன் நிறைவான சந்தோஷத்தினால் களிகூறலாம். ஏனெனில் அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன. விசுவாசத்தோடு சிலுவையின்கீழ் முழுங்காலில் நிற்கும்போது, மனிதன் எட்டக்கூடிய உயரத்தை அவன் எட்டுகிறான். (24)

பரலோகத் தந்தை முடிவில்லாத அன்புடன் நம்மை நேசிக்கிறார் என்பதை, நாம் சிலுவையின்மூலமாக அறிந்துகொள்ளுகிறோம். “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக” (கலாத்தியர் 6:14) என்று பவுல் கூறியதைக்குறித்து ஆச்சரியப்படமுடியுமா? சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டுவது நமது சிலாக்கியமாகவும் இருக்கிறது. நமக்காகத் தம்மைக் கொடுத்தவருக்கு நாம் நம்மை முழுவதுமாகக் கொடுப்பது, நமது பாக்கியமாக உள்ளது. அப்பொழுது கல்வாரியிலிருந்து வீசும் ஒளியின் பிரவாகத்தினால் முகங்கள் பிரகாசமடைந்தவர்களாக நாமும் முன்சென்று, இருளில் இருப்பவர்களுக்கு இந்த வெளிச்சத்தை வெளிப்படுத்தலாம். (25) ★

# 21

# எல்லைகளுக்கு அப்பால்...!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 211–220)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 16:7–40**

ஆசியா மைனருக்கு அப்பால் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கான நேரம்வந்திருந்தது. பவுலும் அவனது உடன்பணியாளர்களும்ஐரோப்பாவிற்குக் கடந்துசெல்லும்பாதை ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. மத்திய தரைக்கடலின் எல்லையிலிருந்து துரோவா என்னுமிடத்தில் இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று. "அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது" –அப்போஸ்தலர் 16:9.

அந்த அழைப்பு தாமதத்தை ஒப்புக்கொள்ளாததாக இருந்தது. "அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி, துரோவாவில் கப்பல் ஏறி, சாமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயாப்போலி பட்டணத்துக்கும் நேராய் ஓடி, அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம்" (அப்போஸ்தலர் 16:10–12) என்று பவுலுடனும் சீலாவுடனும் ஐரோப்பாவின் ஊடாகப் பயணம் செய்திருந்த லூக்கா அறிவித்தான். (1)

"ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய

லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்" (அப்போஸ்தலர் 16:13,14) என்று லூக்கா தொடருகிறான். லீதியாள் சத்தியத்தை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டாள். தனது வீட்டை அப்போஸ்தலர்கள் தங்களுடைய வீடாக ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை அவள் கெஞ்சிக்கேட்டுக்கொண்டாள். (2)

சிலுவையின் தூதுவர்களை போதனை செய்யும் தங்களுடைய பணியில் ஈடுபட்டுத் திரிந்திருந்தபோது, அசுத்த ஆவியையுடைய ஒரு பெண் அவர்களைப் பின்தொடர்ந்துவந்து, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்துகொண்டு வந்தாள்" அப்போஸ்தலர் 16:17. (3)

அந்தப் பெண் சாத்தானின் ஒரு சிறப்பான சேவகியாக இருந்து, குறிசொல்லுவதன்மூலமாக அவளுடைய எஜமானர்களுக்கு மிகுந்த வருமானத்தைக் கொண்டுவந்திருந்தாள். அவளுடைய செல்வாக்கு விக்கிரக ஆராதனையைப் பலப்படுத்துவதற்கு உதவியிருந்தது. சாத்தான் அவனுடைய இராஜ்யம் ஆக்கிரமிப்புக்குள்ளாகிக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்து, தேவனுடைய பணிக்கு எதிராக இந்த முறையை பயன்படுத்தி, சுவிசேஷ சத்தியத்தை அறிவித்திருந்தவர்களின் போதனையுடன் அவனுடைய தந்திரத்தை கலக்கலாமென்று நம்பிக்கொண்டிருந்தான். இந்த ஸ்திரீயால் கூறப்பட்டிருந்த பரிந்துரையான வார்த்தைகள், அப்போஸ்தலர்களின் போதனைகளிலிருந்து மனிதர்களின் மனங்களைத் திரும்பி, சுவிசேஷத்திற்கு இகழ்ச்சியைக் கொண்டுவந்து, சத்தியத்தின் காரியத்திற்கு ஒரு காயமாக (இடையூறாக) இருந்தது. இதனால் தேவ ஆவியுடனும் வல்லமையுடனும் பேசின மனிதர்கள், சாத்தானின் ஊழியக்காரியாக இருந்த அந்தப் பெண் கொண்டிருந்த அதே ஆவியில்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று நினைக்கும்படி அநேகர் நடத்தப்பட்டனர். (4)

சிறிது காலத்திற்கு அப்போஸ்தலர்கள் இந்த எதிர்ப்பை சகித்துக் கொண்டிருந்தனர். அதற்குப்பின், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்கீழ் அந்த ஸ்திரீயை விட்டுச்செல்லும்படி பவுல் அந்த ஆவிக்குக் கட்டளை கொடுத்தான். உடனடியாக அவள் மௌனமடைந்ததானது, அப்போஸ்தலர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்பதற்கும், அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்பதை அவளில் இருந்த அந்தப் பிசாசு ஒத்துக்கொண்டு அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தது என்பதற்கும் சாட்சி பகர்ந்தது. (5)

அசுத்த ஆவியிடமிருந்து விடுதலைபெற்று, சரியான மனநிலையை அடைந்த அந்தப் பெண், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதைத் தெரிந்துகொண்டாள். அப்பொழுது அவளுடைய எஜமானர்கள் தங்களுடைய தொழிலைக்குறித்து எச்சரிக்கையடைந்தனர். அவளுடைய ஜோசியத்திலிருந்தும் குறிசொல்லுவதிலிருந்தும் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுவதும் முடிவுக்கு வந்துவிட்டதை அவர்கள் கண்டு, அப்போஸ்தலர்களை அவர்களது வேலையைச் செய்யும்படி அனுமதித்தால், தங்களுடைய வருமானத்தின் ஆதாரம் விரைவில் முற்றிலுமாக இல்லாமலாகிவிடும் என்றும் கண்டனர். (6)

சாத்தானாலான பொய்த் தோற்றங்களினால், பணத்தை ஆதாயப் படுத்திக்கொள்வதில் அந்த நகரத்திலிருந்த அநேகர் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். இவர்கள் தங்களுடைய வேலையை வலிமையுடன் நிறுத்திவிடக்கூடிய ஒரு வல்லமையின் செல்வாக்கைக்கண்டு, பயந்து, தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு எதிராக பலத்த குரலை எழுப்பினார்கள். அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: "யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும்தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்"–அப்போஸ்தலர் 16:20,21. (7)

கட்டுக்கடங்காத வெறியினாலும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பினாலும் கலக்கப்பட்ட திரளானவர்கள் சீடர்களுக்கு எதிராக எழுந்தார்கள். கலகம் செய்யும் கூட்டத்தினரின் ஒரு ஆவி அங்கு நிலவ அதிகாரிகளால் அனுமதிக்கப்படவே, அவர்கள் அப்போஸ்தலர்களுடைய மேலாடைகளைக் கிழித்து, அவர்களை சவுக்கால் அடிக்கக் கட்டளையிட்டனர். "அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான்" அப்போஸ்தலர் 16:23,24. (8)

அப்போஸ்தலர்கள் வேதனைதரும் நிலைமையில் விட்டுவிடப் பட்டிருந்ததினால், மிதமிஞ்சிய சித்திரவதையை அனுபவித்தனர். ஆனால் அவர்கள் முறுமுறுக்கவில்லை. அதற்குப்பதிலாக, கடுமையான இருளிலும் பாழான உட்காவலறையிலும், ஜெபத்தின் வார்த்தைகளினால் அவர்கள் ஒருவரையொருவர் தைரியப்படுத்தி, கர்த்தருடைய நாமத்திற்காக அவமானத்தைச் சகிக்கத் தகுதியடைந்தவர்களாகக் காணப்பட்டதற்காக, தேவனைப் போற்றிப் பாடினார்கள். தங்களுடைய மீட்பரின் காரியத்தின்மீது

அவர்கள் ஆழமானதும் அக்கறைமிக்கதுமான அன்பை உடையதாக அவர்களுடைய இருதயங்கள் மகிழ்ச்சியடைந்திருந்தன. கிறிஸ்துவின் சீடர்களின்மீது உபத்திரவத்தைக் கொண்டுவருவதற்கு தான் கருவியாக இருந்ததுபற்றி பவுல் சிந்தித்துப் பார்ப்பதற்காக, அவன் ஒரு சமயத்தில் நிந்தித்திருந்த சத்தியங்களின் மகிமையின் வல்லமையைக் காண்பதற்காக, அவனது கண்கள் திறக்கப்பட்டிருப்பதை அவனுடைய இருதயம் உணருவதற்காக மகிழ்ச்சியடைந்தான். (9)

சிறையின் உள்ளறையிலிருந்து புறப்பட்ட ஜெபத்தையும் பாடலையும் மற்ற சிறைக்கைதிகள் ஆச்சரியத்துடன் கேட்டனர். முக்கல் முனகல்களையும் சபித்தல்களையும் சாபமிடுதல்களையும் அவைகளால் இரவின் மௌனத்தைக் கலைப்பதையும் கேட்பதில் அவர்கள் (சிறைக் கைதிகள்) பழக்கப்பட்டவர்களாக இருந்திருந்தனர். ஆனால் துயரமிக்க நிலவறையிலிருந்து ஜெபத்தின் வார்த்தைகளும் துதியின் பாடல்களும் உயரே எழுந்து செல்லுவதை அவர்கள் இதற்குமுன் ஒருபோதும் கேட்டிருக்கவில்லை. சிறைக்காவலாளிகளும் ஆச்சரியமடைந்து, குளிர், பசி, சித்திரவதை ஆகியவைகளுக்கிடையிலுங்கூட, இவ்விதமாக மகிழ்ச்சி கொண்டிருக்கும் இவர்கள் யாராக இருக்கக்கூடும் என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டனர். (10)

அந்த நேரத்தில், தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிவந்த நீதிபதிகள், அந்தப் பெரும் அமளியை அமைதிப்படுத்திவிட்டதற்காக தங்களைத் தாங்களே போற்றிக்கொண்டனர். ஆனால் சவுக்கினால் அடிக்கப்படவும் சிறைவாசம் செய்யும்படியாகவும் அவர்களால் தண்டனை விதிக்கப்பட்டிருந்த அந்த மனிதர்களின் சுபாவம், செயல் ஆகியவைகளைப்பற்றிய விபரத்தை அவர்கள் தங்களுடைய பாதையில் செவியுற்றனர். சாத்தானின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலையான அந்தப் பெண்ணை அவர்கள் கண்டபோது, அவளுடைய முகத்திலும் சுபாவத்திலும் உண்டான மாற்றத்தினால் வியப்படைந்தனர். கடந்த காலத்தில் அவள் இந்த நகரத்திற்கு அதிகமான துன்பத்தை உண்டுபண்ணியிருந்தாள். இப்பொழுது அவள் அமைதியும் சமாதானமும் உள்ளவளாக இருந்தாள். ரோம நாட்டுச் சட்டத்தின்படி கடுமையான தண்டனையை குற்றமில்லாத அந்த மனிதர்களுக்குக் கொடுத்துவிட்டோம் என்று அவர்கள் உணர்ந்தபோது, அவர்கள் தங்கள்மீதே கோபமடைந்தவர்களாகி, காலையில் அப்போஸ்தலர்களைத் தனியாக அழைத்துவரும்படி கட்டளையிட்டு, கலகக்காரர்களின் வன்முறையினால் உண்டாகக்கூடிய அபாயத்திற்கு அப்பால்—நகரத்திற்கு வெளியே—பாதுகாப்பாக நடத்திச்சென்று அவர்களை விடுதலைசெய்யவேண்டுமென்று முடிவுசெய்தனர். (11)

இந்தச் சூழ்நிலையில், மனிதர்கள் கொடூரமானவர்களாகவும் பழிவாங்குபவர்களாகவும் தங்கள்மீதுள்ள பக்திவிநயமான பொறுப்புக்களை அலட்சியம் செய்பவர்களாகவும் இருந்தபோது, தம்முடைய ஊழியக்காரர் களின்மீது கிருபை உள்ளவராக இருப்பதற்குத் தேவன் மறந்துவிடவில்லை. கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களின்மீது பரலோகம் முழுவதும் அக்கறையாக இருந்து, அந்தச் சிறைச்சாலையைச் சந்திக்கும்படி தூதர்களை அனுப்பியது. அவர்களுடைய காலடிகளினால் பூமி நடுங்கினது. கடுமையான விதத்தில் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கதவுகள் திறந்தன. கைதிகளின் கைகளிலிருந்தும் கால்களிலிருந்தும் சங்கிலிகள் கழன்று விழுந்தன. பிரகாசமிக்க ஒளியினால் அந்தச் சிறை நிரம்பி வழிந்தது. (12)

சிறையில் வைக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர்களின் ஜெபங்களையும் பாடல்களையும் அந்தச் சிறைக்காவலாளி ஆச்சரியத்துடன் கேட்டிருந்தான். அவர்கள் உள்ளே நடத்தப்பட்டபோது வீங்கி, இரத்தம் வடிந்துகொண்டிருந்த காயங்களையும் அவன் கண்டிருந்ததுடன் அவன்தானே சிறையில் அவர்களுடைய கால்களுக்குச் சங்கிலிகளைப் பூட்டியிருந்தான். அவர்களிட மிருந்து கசப்பான முனகல்களும் இழிச்சொற்களும் உண்டாவதைக் கேட்க எதிர்பார்த்திருந்தான். ஆனால் அதற்குப்பதிலாக மகிழ்ச்சியான பாடல்களையும் துதியையும் அவன் கேட்டான். அந்தச் சிறைக்கதவுகளை அசைக்கின்ற பூமி அதிர்ச்சியினால் அவன் எழுப்பப்பட்டான். (13)

அபாய எச்சரிக்கையுடன் அவன் புறப்பட்டு, எல்லாச் சிறைக்கதவுகளும் திறந்து கிடப்பதை பேரச்சத்துடன் கண்டபோது, சிறைக் கைதிகள் தப்பிச்சென்றுவிட்டனர் என்ற பயம் அவன்மீது மின்னலைப்போல் உண்டாயிற்று. அந்த இரவுக்குமுன், எவ்விதமாக விளக்கமாகக் கூறப்பட்ட கட்டளையுடன் பவுலும் சீலாவும் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர் என்பதை அவன் நினைத்தான். வெளிப்படையான இந்த விசுவாசமின்மைக்கு மரணம்தான் தண்டனையாக இருக்கும் என்று அவன் நிச்சயமுடையவனானான். இரக்க மற்ற ஒரு மரண தண்டனைக்குக் கீழாவதைவிட, தனது கையாலேயே தான் சாவது நன்றாயிருக்குமென்று அவன் தன் ஆவியின் கசப்பில் உணர்ந்தான். வாளை உருவித் தற்கொலை செய்துகொள்ளவிருந்த நேரத்தில், “உனக்குக் கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே, நாங்கள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறோம்” (அப்போஸ்தலர் 16:28) என்னும் பவுலின் குரலைக் கேட்டான். ஒரு உடன் சிறைக்கைதியின் மூலமாகச் செயல்பட்ட தேவ வல்லமையினால் கட்டுப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய இடத்தில் இருந்தனர். அந்தச் சிறைக்காவலன்

அப்போஸ்தலர்களை நடத்தியிருந்த விதம், அவர்களில் கடுங்கோபத்தை உண்டுபண்ணியிருக்கவில்லை. பவுலும் சீலாவும் பழிவாங்கும் ஆவியை உடையவர்களாக இராமல், கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக இருந்தார்கள். இரட்சகரின் அன்பினால் நிறைந்திருந்த அவர்களுடைய இருதயங்களில் அவர்களை உபத்திரவப்படுத்தினவர்களுக்கெதிரான வன்மத்திற்கு இடம் இருக்கவில்லை! (14)

அந்தச் சிறைக்காவலன் தனது வாளைக் கீழே போட்டுவிட்டு தீபங்களைக் கொண்டுவரும்படிக் கூறிக்கொண்டு, உட்சிறைக்கு விரைந்தான். அவனால் கொடூரமாக நடத்தப்பட்டதற்குப் பதிலாக அன்புடன் நடப்பதைத் திரும்பக் கொடுத்த இந்த மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதைப் பார்க்கவேண்டுமென்று அவன் விரும்பினான். அப்போஸ்தலர்கள் இருந்த இடத்தை அவன் அடைந்து அவர்களுக்குமுன் விழுந்து, அவர்களிடம் மன்னிப்புக்கேட்டான். அதன்பின், “அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்”–அப்போஸ்தலர் 16:30. (15)

பூமி அதிர்ச்சியினால் வெளிக்காட்டப்பட்ட தேவனுடைய கோபத்தை அந்தச் சிறைக்காவலன் கண்டபோது நடுங்கினான். கைதிகள் தப்பிச்சென்றுவிட்டார்கள் என்று அவன் எண்ணினபோது, தனது சொந்தப் பட்டயத்தினாலேயே மரிப்பதற்கு ஆயத்தமாயிருந்தான். ஆனால் அவனது உள்ளத்தில் உண்டான புதிதான மாறுபட்ட பயத்தையும் குழப்பதையும், பாடுகளுக்கும் கொடுமையாக நடத்தப்பட்டவைகளுக்கும்கீழ் அப்போஸ்தலர்கள் காட்டியிருந்த அமைதியையும் உற்சாகத்தையும் தானும் அடைந்துகொள்ளவேண்டுமென்னும் வாஞ்சையுடன் ஒப்பிட்டபோது, இவைகளனைத்தும் அற்பமான பலனை உடையவைபோல் அவனுக்குக் காணப்பட்டன. அவர்களுடைய முகங்களில் அவன் பரலோகத்தின் ஒளியைக் கண்டான். அவர்களுடைய உயிர்களைக் காப்பதற்காக, தேவன் அற்புதமான விதத்தில் இடைப்பட்டார் என்பதை அவன் அறிந்தான். ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்த அந்தப் பெண் கூறியிருந்த “இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்” (அப்போஸ்தலர் 16–17) என்ற வார்த்தைகள், குறிப்பிடப்பட்ட வலிமையுடன் அவனது மனதிற்குள் வந்தன. (16)

வாழ்க்கையின் பாதையை அவனுக்குக் காட்டும்படி அவன் மிக ஆழமான தாழ்மையுடன் அப்போஸ்தலர்களைக் கேட்டான். “அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன்

வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" (அப்போஸ்தலர் 16:31,32). அந்தச் சிறைக்காவலன் அதற்குப்பின் அவர்களுடைய காயங்களைக்கழுவி, அவர்களுக்குச் சேவைசெய்தான். அதன்பின் அவனது வீட்டாரோடு சேர்ந்து, ஞானஸ்நானம் பெற்றான். சிறையிலிருந்தவர்களுக்கு மத்தியில் பரிசுத்தப்படுத்தும் ஒரு செல்வாக்கு பரவியது. அப்போஸ்தலர்களால் பேசப்பட்ட சத்தியத்தைக் கவனிப்பதற்கு அனைவரது மனங்களும் திறக்கப்பட்டன. இந்த மனிதர்கள் எந்த தேவனுக்குச் சேவைசெய்திருந்தார்களோ, அந்த தேவன் அவர்களைச் சிறையின் தளையிலிருந்து அற்புதமானவிதத்தில் விடுவித்தார் என்னும் மனநிறைவை அவர்கள் அடைந்தார்கள். (17)

அந்த நில நடுக்கத்தினால், பிலிப்பி நகர மக்கள் பெரிய அளவில் திகிலடைந்தனர். இரவில் நடந்தது என்ன என்று காலையில் சிறை அதிகாரிகள் நீதிபதிகளிடம் கூறினபோது, அவர்கள் எச்சரிக்கை அடைந்து, அப்போஸ்தலர்களை விட்டுவிடும்படி காவலர்களின் தலைவர்களை அனுப்பினார்கள். "அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பி விடட்டும் என்றான்"–அப்போஸ்தலர் 16:37. (18)

அப்போஸ்தலர்கள் ரோம நாட்டுப் பிரஜைகளாக இருந்தனர். ஒரு ரோம நாட்டுப் பிரஜையை சவுக்கால் அடிப்பது அல்லது நியாயமான விசாரணையின்மீது அவனுக்கிருந்த சுதந்திரத்தை நீக்குவது சட்டவிரோதமானதாக இருந்தது. பவுலும் சீலாவும் அநேகர் காணச் சிறைவைக்கப்பட்டனர். இப்பொழுது நீதிபதிகளின் சரியான விளக்கம் எதுவும் இல்லாமல், தனிப்பட்ட விதத்தில் விடுதலையாகிச் செல்லுவதற்கு மறுத்தனர். (19)

இந்த வார்த்தை அதிகாரிகளிடத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் பேரரசனிடம் குற்றஞ்சாட்டுவார்கள் என்ற பயத்தால் எச்சரிப்படைந்தனர். உடனே அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று, பவுலுக்கும் சீலாவுக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்காகவும் கொடூரத்திற்காகவும் மன்னிப்புக்கேட்டு, அவர்களை அந்த நகரத்தைவிட்டுச் செல்லும்படி மன்றாடி, அவர்களே, சிறைச்சாலைக்கு வெளியே நடத்திக்கொண்டுவந்துவிட்டனர். மக்களிடம் அப்போஸ்தலர்களுக்கிருந்த செல்வாக்கிற்காக நீதிபதிகள் பயந்ததுடன், குற்றமில்லாத அந்த மனிதர்களுக்காகக் குறுக்கிட்ட வல்லமைக்காகவும் பயந்தார்கள். (20)

கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட உபதேசத்தின்படி நடந்து, அப்போஸ்தலர்கள் தங்களுடைய பிரசன்னம் எங்கெல்லாம் விரும்பப்படாததாக இருந்ததோ, அங்கு செல்லுவதற்கு அவர்கள் அவசரப்படாதவர்களாக இருந்தார்கள். “அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப்போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள்”–அப்போஸ்தலர் 16:40. (21)

அப்போஸ்தலர்கள் பிலிப்பியில் செய்த அவர்களுடைய ஊழியம் வீணாகிப்போய்விட்டது என்று கருதவில்லை. அவர்கள் அதிகமான எதிர்ப்பையும் உபத்திரவத்தையும் சந்தித்திருந்தனர். ஆனால் அவர்கள் சார்பில் உண்டான தெய்வீக ஏற்பாட்டின் குறுக்கிடுதல், சிறைக்காவலன் அவனது குடும்பம் ஆகியோரின் மாற்றம் ஆகியவை அவர்கள் தாங்கியிருந்த நிந்தையையும் பாடுகளையும்விட, அதிக—மிக அதிக நிவாரணம் தருவதாக இருந்தது. அநீதியாக அவர்கள் சிறையிலடைக்கப்பட்ட செய்தியும், ஆச்சரியமான அவர்களுடைய விடுதலையும், அந்தப் பிரதேசம் முழுவதற்கும் தெரியவந்தது. அதினால், பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்களைச் சென்றடைய முடியாமலிருந்திருக்கக்கூடிய அவர்களது பணி அந்தப் பிரதேசத்திலிருந்த அனைவரது கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. (22)

பிலிப்பியில் பவுல் செய்திருந்த ஊழியம், அங்கு ஒரு சபை ஏற்படுத்தப்படுவதற்கு காரணமானது. அதன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை சீராக அதிகரித்துக்கொண்டே இருந்தது. அவனது வைராக்கியமும், பக்தியும், எல்லாவற்றிற்கும்மேலாக கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவிப்பதற்கான அவனுடைய விருப்பமும், விசுவாசத்திற்கு மாறினவர்களின்மீது ஒரு ஆழமான நீடித்து நிற்கின்ற செல்வாக்கை உண்டுபண்ணியது. அப்போஸ்தலர்கள் மிக அதிகமாகத் தியாகம் செய்து, தங்களுடைய மீட்பருக்காக தங்களை முழு இருதயத்துடனும் கொடுத்த பக்தியினால், தாங்கள் பெற்றுக்கொண்ட விலைமதிப்புமிக்க சத்தியங்களுக்காகப் போற்றினார்கள். (23)

உபத்திரவத்திலிருந்து இந்தச் சபை தப்பிக்கவில்லை என்பது பின்னர் பவுல் அவர்களுக்கு எழுதின நிருபத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப் படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு” என்று எழுதினான். என்றபோதும், விசுவாசத்தில் அவர்கள் அவ்வளவு நிலையாக நின்றதால், “சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற

ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி" (பிலிப்பியர் 1:29,30, 3–6) என்று எழுதினான். (24)

சத்தியத்தின் தூதுவர்களாக ஊழியஞ்செய்யும்படி எந்த முக்கியமான மையங்களுக்கெல்லாம் அழைக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் நன்மை யின் சேனைக்கும் தீமையின் சேனைக்கும் இடையில் நடைபெறும் போர் பயங்கரமானதாக இருக்கிறது. "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு"– எபேசியர் 6:12. காலத்தின் முடிவுவரைக்கும் தேவனுடைய சபைக்கும் பொல்லாத தூதர்களின் கட்டுப்பாட்டின் கீழிருப்பவர்களுக்கும் இடையில் ஒரு போர் இருந்துகொண்டே இருக்கும். உண்மையாகவே விசுவாசத்திலிருந்து அவர்களைத் திருப்புவதற்கு சத்துரு தந்திரத்தினாலும் உபத்திரவத்தினாலும் முயன்றிருந்தான். பூமிக்குரிய சகல காரியங்களும் முடிவை நோக்கி வந்துகொண்டிருக்கின்ற இந்த நிகழ்காலத்தில் உலகத்தைத் தன் கண்ணியில் அகப்படுத்தச் சாத்தான் நம்பிக்கையிழந்த நிலையில் முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறான். மனங்களை அநேக விஷயங்களில் ஈடுபடுத்தி இரட்சிப்பிற்கு மிகவும் அவசியமான—முக்கியமான சத்தியங்களிலிருந்து கவனத்தைத் திருப்பும்படி அவன் அநேக உபாயங்களைச் செய்கிறான். தேவப்பிரமாணங்களை எதிர்ப்பவர்களை காட்சிகளாக ஏற்படுத்துவதற்காக, அவனது ஏதுகரங்கள் ஒவ்வொரு நகரத்திலும் அமைப்புக்களை ஏற்படுத்தும் பணியில் தீவிரமாக உள்ளன. குழப்பம், கலகம் ஆகியவைகளின் மூலக்கூறுகளை அறிமுகம்செய்யும் வேலையில் தலைமை வஞ்சகன் செயலாற்றிக்கொண்டிருக்கும்போது, மனிதர்கள் அறிவுக்குப் பொருந்தாததாக உள்ள வைராக்கியத்தினால் எரிக்கப்பட்டுக்கொண்டுள்ளனர். (25)

இதற்குமுன் அடைந்திராத உயரத்தை துன்மார்கம் அடைந்துகொண்டிருக்கும்போது, சுவிசேஷத்தின் அநேக ஊழியக்காரர்கள் சமாதானம், சௌக்கியம் என்று குரலெழுப்பிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் பரலோகத்தின் ஆயுதத்தை அணிந்தவர்களாக தேவனுடைய விசுவாசமிக்க தூதுவர்கள் இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தின் தூதினை ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் சென்றடையக்கூடிய அளவிற்குக் கொண்டுசெல்லும்வரை தங்களுடைய யுத்தத்தை ஒருபோதும் நிறுத்தாமல் பயமற்றவர்களாக—வெற்றி உள்ளவர்களாக முன்னேறிச்செல்லவேண்டியவர்களாக உள்ளனர். (26) ★

# 22

# தெசலோனிக்கேயர்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 221–230)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 17:1–10**

பவுலும் சீலாவும் பிலிப்பியைவிட்டுத் தெசலோனிக்கேயாவிற்குச் சென்றனர். இங்கு யூதருடைய ஜெப ஆலயத்திலிருந்த பெரும் கூட்டத்தினருக்குச் செய்திகொடுக்கும் சலுகையை அவர்கள் பெற்றனர். அவர்கள் சமீபத்தில் பெற்றுக்கொண்ட அவமானமிக்க நடவடிக்கைக்கு அவர்களுடைய தோற்றம் சான்று கொடுத்தது. என்ன நடந்தது என்னும் விளக்கத்தைக் கொடுப்பதற்கான அவசியத்தையும் உண்டுபண்ணியது. இந்த விளக்கத்தை அவர்கள் தங்களை உயர்த்தாமல் கொடுத்து, தங்களுக்கு விடுதலையைக் கொண்டுவந்த ஒருவரைப் மேன்மைப்படுத்தினார்கள். (1)

தெசலோனிக்கேயர்களுக்குப் பிரசங்கம் செய்ததில் பவுல் மேசியாவைப்பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களைச் சுட்டிக் காட்டினான். கிறிஸ்து, "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை" (லூக்கா 24:27) சீடர்களுக்கு விவரித்துக் காண்பித்து, தம்முடைய ஊழியத்தின்போது அவர்களுடைய மனங்களைத் திறந்திருந்தார். கிறிஸ்துவைப் பிரசங்கித்ததில் தன்னுடைய சான்றாக பேதுரு அவைகளை முன்வைத் திருந்தான். அதே நடவடிக்கையைத்தான் ஸ்தேவானும் பின்பற்றியிருந்தான். பவுலும், கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், மரணம் உயிர்த்தெழுதலைக்குறித்து வேதாகமம் முன்னதாகக் கூறியிருந்தவைகளைக் கவனிக்கும்படி தனது ஊழியத்தின்போது வேண்டுகோள் விடுத்திருந்தான். ஏவுதலினால் மோசேயும் தீர்க்கதரிசிகளும் கொடுத்திருந்த சாட்சியினால், அவன் நசரேயனாகிய இயேசுவை மேசியாவுடன் அடையாளப்படுத்தி மெய்ப்பித்து, ஆதாமின் நாட்களிலிருந்து முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகளின் வழியாகப் பேசிக்கொண்டிருந்தது கிறிஸ்துதானென்று சுட்டிக்காட்டினான். (2)

வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த ஒருவர் தோன்றுவதைப்பற்றி வெளிப்படையானதும் குறிப்பானதுமான தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப் பட்டிருந்தன. மீட்பரின் வருகையைப்பற்றி ஆதாமுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்” (ஆதியாகமம் 3:15) என்று சாத்தானின்மீது கூறப்பட்ட தண்டனை நமது முதல் பெற்றோருக்குக் கிறிஸ்துவின்மூலமாக செயலாற்றப்படவேண்டியதாக இருந்த வாக்குத்தத்தமாக இருந்தது. “உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” “சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே”–ஆதியாகமம் 22:18; கலாத்தியர் 3:16. ஆபிரகாமின் சந்ததியில் உலக இரட்சகர் வரவேண்டும் என்ற வாக்குத்தத்தம் ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்டது. (3)

இஸ்ரவேலரின் தலைவனாகவும் போதகராகவும் இருந்த மோசே வரவிருக்கும் மேசியாவைப்பற்றி வெளிப்படையாகத் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான். “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக” என்று சபை கூடியிருந்த இஸ்ரவேலரின் கூட்டத்திற்கு அறிவித்தான். “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக” (உபாகமம் 18:15,18) என்று மோசே. ஒரேப் பர்வதத்தின் மீதிருந்தபோது, தேவன் தாமே இதனை அவனுக்கு வெளிப்படுத்தினார் என்று இஸ்ரவேலரிடம் வாக்குறுதி கொடுத்தான். (4)

மேசியா இராஜவம்சத்தில் தோன்றவேண்டியவராக இருந்தார். ஏனெனில், யாக்கோபினால் உரைக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனத்தில்: “சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்” (ஆதியாகமம் 49:10) என்று கூறியிருந்தார். (5)

“ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.” “உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை

உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். இதோ, அவரை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாகவும், ஜனங்களுக்குத் தலைவராகவும், அதிபதியாகவும் ஏற்படுத்தினேன். இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்; உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தமும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடிவரும்; அவர் உன்னை மேன்மைப்படுத்தியிருக்கிறார்"(ஏசாயா 11:1; 55:3–5) என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தான். (6)

தாவீதின் குடும்பத்தில் ஒரு பிரபுவைப்போல மீட்பர் வருவதைப்பற்றி எரேமியாவும் சாட்சிகொடுத்திருந்தான். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே." "இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை. தகனபலியிட்டு, போஜனபலிசெலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற்போவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்"–எரேமியா 23:5–6; 33:17–18. (7)

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2) என்று மேசியாவின் பிறப்பிடமுங்கூட முன்கூறப்பட்டிருந்தது. (8)

பூமியின்மீது இரட்சகர் செய்யவேண்டியதாக இருந்தபணி முற்றிலுமாக விவரிக்கப்பட்டிருந்தது. "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும்," "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்

களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச்சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக் கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்"—ஏசாயா 11:2,3; 61:1–3. (9)

"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். அவர் கூக்குரலிடவுமாட்டார்; தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார். அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார். அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை; அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும்"—ஏசாயா 42:1–4. (10)

கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும்வேண்டியிருந்தது என்ற மனநிறைவை உண்டுபண்ணும் வல்லமையுடன் பவுல் வழக்காடினான். "இஸ்ரவேலுடைய நியாயாதி பதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்"—மீகா 5:1. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒருவர் ஏசாயாவின்மூலமாகத் தம்மைப்பற்றி: "அடிக்கிறவர் களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ் நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசாயா 50:6) என்று தீர்க்கதரிசனம் உரைக்கவில்லையா? சங்கீதக்காரனின்மூலமாக கிறிஸ்து, மனிதர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவிருந்த நடத்துதலைப்பற்றி: "நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்." (சங்கீதம் 22:6–8). "என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" "நிந்தை என்

இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்" (சங்கீதம் 69:8,9,20) என்று தாவீது முன்னுரைத்திருந்தான். (11)

கிறிஸ்துவின் பாடு மரணத்தில் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் எவ்விதமாக தவறில்லாதவிதத்தில் வெளிப்படையானதாக இருந்தது! "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்"—ஏசாயா 53:1–8. (12)

அவருடைய மரணத்தின்விதமும்கூட நிழலாட்டமாக அறிவிக்கப் பட்டிருந்தது. வெண்கல சர்ப்பம் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல வரவிருக்கும் இரட்சகரும் "தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்"—யோவான் 3:16. (13)

“அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி: உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்”—சகரியா 13:6. (14)

“துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.. கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப்பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்“ –ஏசாயா 53:9,10. (15)

ஆனால் துன்மார்க்கமான மனிதர்களின் கரங்களினால் மரணத்தை அனுபவிக்கவேண்டியவராக இருந்த அவர், மரணத்தின்மீதும் கல்லறையின்மீதும் வெற்றிகொண்டவராக மறுபடியும் எழவேண்டியவராக இருந்தார். சர்வ வல்லமையுள்ளவரின் ஏவுதலின்கீழ் இஸ்ரவேலின் இனிய பாடகன் உயிர்த்தெழுதலின் காலையின் மகிமைகளைப்பற்றி: “ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்” (சங்கீதம் 16:9,10) என்று பாடியிருந்தான். (16)

அடிக்கப்படுகிறவனிடத்திற்குக் கொண்டுசெல்லப்படுகிற ஆட்டைப் போலிருந்த ஒருவருடன் சம்பந்தப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களுடன் பலிமுறை ஆராதனைகளைத் தேவன் எவ்விதமாக நெருக்கிப் பிணைத்திருந்தார் என்பதைப் பவுல் காட்டினான். மேசியா “அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும்,” அவருடைய ஜீவனை “குற்றநிவாரணபலியாக” செலுத்தவேண்டியவராகவும் இருந்தார். இரட்சகரின் பாவநிவாரண பலியின் காட்சிகளை நூற்றாண்டுகளுக்கூடாக ஏசாயா தீர்க்கதரிசி கண்டு, தேவஆட்டுக்குட்டியானவர் “தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்” (ஏசாயா 53:7,10,12) என்று கூறினான். (17)

தீர்க்கதரிசனத்திலுள்ள இரட்சகர் யூதஜாதியினரை, அவர்களை ஒடுக்குபவர்களிடமிருந்து விடுதலைசெய்யும் உலகப்பிரகாரமான ஒரு அரசராக வராமல், மனிதர்களில் ஒரு மனிதராக, வறுமையும் தாழ்மையுமிக்க ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, கடைசியில் நித்திக்கப்பட்டு— நிராகரிக்கப்பட்டு, கொலைசெய்யப்படுவதற்காக வரவேண்டியவராக

இருந்தார். பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் முன்கூறப்பட்டிருந்த இரட்சகர், விழுந்துபோன இனத்திற்காக தம்மைத்தாமே பலிசெலுத்துபவராக இருந்து, இவ்வாறாக மீறப்பட்டிருந்த கற்பனையின் ஒவ்வொரு அவசியத்தையும் நிறைவேற்றவேண்டியவராக இருந்தார். நிழலாட்டமாக இருந்த பலிமுறைகள் அவருக்குள் நிஜத்தைச் சந்திக்கவேண்டியவைகளாக இருந்தன. அவருடைய சிலுவை மரணம் யூத அமைப்பு முழுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதாக இருந்தது. (18)

பவுல் தெசலோனிக்கேய யூதர்களிடம் பண்டைய சடங்காச்சாரப் பிரமாணத்தின்மீது அவன் கொண்டிருந்த வைராக்கியத்தைப்பற்றியும் தமஸ்குவின் வாசலில் அவனுக்குண்டான அற்புதமான அனுபவத்தைப்பற்றியும் கூறினான். அவனது மாற்றத்திற்குமுன் வம்சாவளியாக வந்திருந்த— பக்தியாக இருந்த, தவறான நம்பிக்கையின்மீது நம்பிக்கை உள்ளவனாக அவன் இருந்திருந்தான். அவனுடைய விசுவாசம் கிறிஸ்துவில் நங்கூரமிடப்பட்டதாக இருக்கவில்லை. அதற்குப்பதிலாக, அமைப்புக்களிலும் சடங்காச்சாரங்களிலும் நம்பியிருந்தது. நியாயப்பிரமாணத்தின்மீதிருந்த அவனுடைய வைராக்கியம், கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்திலிருந்து அவனைப் பிரித்து பயனற்றதாக்கியிருந்தது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் அவன் குற்றஞ்சாட்டப்படாதவனாக இருந்தான் என்று அவன் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தபோது, பிரமாணத்தை மதிப்புமிக்கதாக்கியிருந்த ஒருவரை அவன் மறுத்திருந்தான். (19)

ஆனால் அவனுடைய மாற்றத்தின் நேரத்தில் எல்லாமே மாறிவிட்டிருந்தன. தமது பரிசுத்தவான்களின் உருவிலிருந்த நசரேயனாகிய இயேசுவை உபத்திரவப்படுத்துபவனாக இருந்த அவனுக்கு, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவாக இருந்த அவர் தரிசனமானார். உபத்திரவப்படுத்துபவன் அவரைத் தேவ குமாரனாகவும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாகப் பூமிக்கு வந்திருந்த ஒருவராகவும், அவரைப்பற்றி பரிசுத்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களின் ஒவ்வொரு விபரக்குறிப்பையும் சந்தித்தவராகவும் இருந்ததைக் கண்டான். (20)

ஒரு பரிசுத்தமான தைரியத்துடன் பவுல், தெசலோனிக்கேய ஜெப ஆலயத்தில் சுவிசேஷத்தை அறிவித்தபோது, ஆசரிப்புக்கூடாரச் சடங்குகள், சடங்காச்சாரங்கள் ஆகியவைபற்றிய உண்மையான அர்த்தத்தைப்பற்றிய ஒளிவெள்ளம் பரவியது. அவனது பிரசங்கத்தைக் கேட்டிருந்தவர்களின் மனங்களை, கிறிஸ்துவின் ஊழியத்திற்கப்பால் உள்ள பரலோக பரிசுத்தஸ்தலத்தில் செய்யப்படும் அவரது ஊழியத்திற்கும், அவரது மத்தியஸ்த ஊழியம் முடிவடைந்து வல்லமையுடனும் மகிமையுடனும்

அவர் திரும்பிவந்து பூமியில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கின்ற காலத்திற்கும் எடுத்துச்சென்றான். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான நம்பிக்கை உள்ள ஒருவனாகப் பவுல் இருந்தான். இந்தச் சம்பவத்தைப்பற்றிய சத்தியங்களை அவன் தெளிவாகவும் வலிமையுடனும் முன்வைத்தான். அதைக் கேட்ட அநேகரின் மனங்களில் ஒருபோதும் மறைந்துபோகாத விதத்திலான ஒரு உணர்த்துதல் உண்டுபண்ணப்பட்டிருந்தது. (21)

"உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின்" (வெளிப்படுததல் 13:8) வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பதவியின் பணி, கிறிஸ்துவின் எதிர்கால மகிமை ஆகியவைகளைப்பற்றி வேத வாக்கியங்களை வைத்து தெசலோனிக்கேயர்களுக்குத் தொடர்ச்சியாக மூன்று ஓய்வுநாட்களில் நியாயவாதத்துடன் பிசரங்கம் செய்தான். அவன் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களைத் திறந்து அவைகளின் செல்வமிக்க கருவூலத்திற்குச் செல்லும்பாதையைத் திறக்கின்ற திறவுகோலாக உள்ள கிறிஸ்துவின் ஊழியத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளும்படி கிறிஸ்துவை உயர்த்தினான். (22)

இவ்விதமாகப் பலத்த வல்லமையுடன் சுவிசேஷ சத்தியங்கள் தெசலோனிக்கேயாவில் அறிவிக்கப்பட்டபோது, பெரும் கூட்டத்தினரின் கவனம் ஈர்க்கப்பட்டது. "அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்"–அப்போஸ்தலர் 17:4. (23)

அப்போஸ்தலர்கள் முன்னர் பிரவேசித்த இடங்களில் எதிர்ப்பைச் சந்தித்ததுபோல இங்கும் எதிர்ப்பைச் சந்தித்தனர். விசுவாசியாத சில யூதர்கள் பொறாமையடைந்தனர். இந்த யூதர்கள் அப்பொழுது ரோம அரசுக்கு ஆதரவாக இருக்கவில்லை. ஏனெனில் சில நாட்களுக்குமுன் அவர்கள் ரோம அரசுக்கு எதிராகக் கலகம் செய்திருந்தனர். அவர்கள் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டிருந்தனர். அவர்களது சுயாதீனம் குறிப்பிட்ட அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது அவர்கள், ரோம அரசின் ஆதரவைப் பெறுவதற்காகவும், அதே நேரத்தில் அப்போஸ்தலர்கள்மீதும் புதியதாக விசுவாசத்திற்கு மாறினவர்கள்மீதும் நிந்தையை உண்டுபண்ணவும் ஒரு வாய்ப்பு உண்டாகியிருப்பதைக் கண்டார்கள். (24)

எனவே அவர்கள் வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு கூட்டங்கூடி அமளி உண்டாக்குவதில் வெற்றியடைந்தனர். அப்போஸ்தலர்களைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அவர்கள் பவுலையோ அல்லது சீலாவையோ காணவில்லை. "அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில்

இழுத்துக்கொண்டு வந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று" கூக்குரலிட்டார்கள். (அப்போஸ்தலர் 17:6,7). (25)

பவுலும் சீலாவும் காணப்படாததினால், சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக குற்றஞ்சாட்டப்பட்ட விசுவாசிகளைச் சிறையிலிட்டனர். மேலும் வன்முறைகள் உண்டாகலாமென்று பயந்து, சகோதர் இராத்திரி காலத்திலே, பவுலையும் சீலாவையும் பெரேயா பட்டணத்திற்கு அனுப்பிவிட்டார்கள். (26)

இன்று பிரசித்தமில்லாத சத்தியங்களைப் போதிப்பவர்கள், பவுலும் அவனது உடன் ஊழியக்காரரும், ஊழியஞ்செய்திருந்த கூட்டத்தினரிடமிருந்து பெற்றிருந்த வரவேற்பைவிட, எவ்விதத்திலும் அனுகூலமான வரவேற்பைப் பெறாதபோது, கிறிஸ்தவர்களிடமிருந்தும் பெறாதபோது, சோர்வடையவேண்டிய அவசியம் இல்லை. விழித்திருப்பதையும் ஜெபத்தையும் ஆயுதமாக அணிந்த சிலுவையின் தூதுவர்கள், விசுவாசத்துடனும் தைரியத்துடனும் எப்பொழுதும் இயேசுவின் பெயரால் பணிசெய்துகொண்டு முன்செல்லவேண்டும். பரலோக பரிசுத்த ஆலயத்தில் மனிதனின் மத்தியஸ்தராக இருக்கும் கிறிஸ்துவை—பழைய ஏற்பாட்டு அமைப்புக்களில் உள்ள பலிமுறைகள் அனைத்தும் மையமாகக்கொண்டிருக்கும் ஒருவரை—எந்த ஒரு பாவ நிவாரண பலியின் மூலமாக, தேவனுடைய கற்பனைகளை மீறினவர்கள் சமாதானத்தையும் மன்னிப்பையும் காணமுடியுமோ அவரை, உயர்த்தவேண்டும். (27) ★

23

# அத்தேனே (ஏதன்ஸ்) பட்டணத்தில் பவுல் அடிகளார்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 231–242)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 16:7–40.**

பெரோயாவில் பவுல் போதித்த சத்தியங்களை ஆராய விருப்பங்கொண்டிருந்தவர்களைக் கண்டான். “அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். அதனால் அவர்களில் அநேகம்பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்”–அப்போஸ்தலர் 17:11,12. (1)

பெரோயாவின் மக்களின் மனங்கள் தவறான எண்ணத்தினால் குறுகியிருக்கவில்லை. அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட கோட்பாடுகளில் இருந்த உண்மையை ஆராய்வதற்கு அவர்கள் விருப்பமுடையவர்களாக இருந்தனர். வாசிக்கவேண்டும் என்னும் ஆர்வத்தினால் வேதாகமத்தை வாசிக்காமல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியாவைப்பற்றி என்ன எழுதியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுவதற்காக அவர்கள் வேதாகமத்தை வாசித்திருந்தனர். ஆவியானவரின் ஏவுதலினாலான ஆவணங்களை அவர்கள் நாள்தோறும் ஆராய்ந்திருந்து, வேதவாக்கியங்களுடன் வேதவாக்கியங்களை ஒப்பிட்டபோது, பரலோகத்தின் தேவதூதர்கள் அவர்களுக்கருகில் இருந்து, அவர்களது மனங்களை அறிவூட்டிக்கொண்டும் அவர்களது இருதயங்களை உணர்த்திக்கொண்டும் இருந்தார். (2)

எங்கெல்லாம் சுவிசேஷத்தின் சத்தியம் அறிவிக்கப்படுகிறதோ

அங்கெல்லாம் சரியானவைகளைச் செய்ய நேர்மையாக வாஞ்சிப்பவர்கள் வேதவாக்கியங்களைக் கருத்தாய் ஆராயும்படி நடத்தப்பட்டுள்ளனர். இந்த உலக வரலாற்றின் கடைசிக் காட்சிகளில் அறிவிக்கப்பட்டுள்ள சோதிக்கும் சத்தியங்களைப் பின்பற்றுபவர்கள், பெரோயா மக்களின் உதாரணத்தைப் பின்பற்றி, நாள்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்வார்களானால், தங்களிடம் கொண்டுவரப்பட்ட தூதுகளை தேவ வசனங்களுடன் ஆராய்வார்களானால், இன்று ஒப்பிடும்போது, ஒரு சிலர் மட்டுமே இருக்கக்கூடிய இடத்தில், தேவப்பிரமாணத்தின்மீது ராஜபக்தி உள்ளவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் காணப்படுவார்கள். ஆனால் பிரசித்தமில்லாத வேதாகம சத்தியங்கள் முன்வைக்கப்படும்போது, இந்த விசாரிப்பை நடத்துவதற்கு அநேகர் மறுக்கின்றனர். வேதவாக்கியங்களின் வெளிப்படையான சத்தியங்களுடன் அவர்களால் முரண்படமுடியாவிட்டாலும், கொடுக்கப்பட்டுள்ள சான்றுகளை ஆராய்வதற்கு மிகப் பெரிய அளவில் விருப்பமில்லாதவர்களாக இருப்பதை வெளிக்காட்டுகின்றனர். இந்தக் கோட்பாடுகள் உண்மையாகவே சத்தியமாக இருந்தாலும்கூட, புதிய ஒளியை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா—இல்லையா என்பது அற்பமான விஷயமாக உள்ளது என்று அவர்கள் உத்தேசித்துக்கொண்டு, தங்கள் ஆத்துமாக்களைத் தூரமாக விலக்கிச்செல்லுகின்ற சத்துருவின் மகிழ்ச்சிதரும் கட்டுக்கதைகளைப் பற்றிக்கொள்ளுகின்றனர். இவ்வாறாக, அவர்களுடைய மனங்கள் தவறினால் குருடாக்கப்பட்டு, அவர்கள் பரலோகத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். (3)

தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒளிக்குத் தகுந்தவண்ணம் அனைவரும் நியாயம்தீர்க்கப்படுவார்கள். கர்த்தர் இரட்சிப்பின் தூதுடன் தமது தூதுவர்களை அனுப்புகிறார். அதைக் கேட்பவர்கள், தமது ஊழியக்காரர்களின் வார்த்தைகளை அவர்கள் எவ்விதமாக நடத்துகின்றனர் என்பதற்குப் பொறுப்பாளியாக்குவார். சத்தியத்தை உண்மையுடன் தேடுபவர்கள், தங்கள்முன் வைக்கப்படுகின்ற கோட்பாடுகளை தேவனுடைய வார்த்தையின் ஒளியில் கவனமாக விசாரணைசெய்வார்கள். (4)

தெசலோனிக்கேயாவிலிருந்த விசுவாசமில்லாத யூதர்கள் அப்போஸ்தலர்களின்மீது பொறாமையும் வெறுப்பும் உள்ளவர்களாகி, தங்களுடைய சொந்த நகரத்திலிருந்து அவர்களைத் துரத்திவிட்டதில் திருப்தி இல்லாதவர்களாக, அவர்களைப் பின்தொடர்ந்து பெரோயாவிற்கும் சென்று, அவர்களுக்கெதிராக மிகவும் கீழ்த்தரமான வெறிகளை எழுப்பிவிட்டார்கள். பவுல் அங்கே இருந்தால், அவன்மீது வன்முறை செயலாற்றப்படுமென்று சகோதரர்கள் பயந்து, புதிதாக விசுவாசத்தை ஏற்றுக்கொண்டிருந்த சில

எபிரெய விசுவாசிகளுடன் சேர்த்து, பவுலையும் அத்தேனே பட்டணத்திற்கு அனுப்பிவிட்டனர். (5)

இவ்வாறாக, சத்தியத்தைக் கற்பித்தவர்களை உபத்திரவமானது நகரங்களிலிருந்து நகரத்திற்குப் பின்தொடர்ந்தது. சுவிசேஷம் முன்னேறிச் செல்லுவதை கிறிஸ்துவின் எதிரிகளால் தடைசெய்ய முடியவில்லை. ஆனால் அப்போஸ்தலர்களின் ஊழியத்தை மிதமிஞ்சியவிதத்தில் கடினமாக்குவதில் அவர்கள் வெற்றி அடைந்தனர். இருந்தபோதிலும் எதிர்ப்பு எதிர்வாதம் ஆகியவைகளுக்கு முன்னால் பவுல், எருசலேமில் தரிசனத்தில் கண்டிருந்தபடி "நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" (அப்போஸ்தலர் 22:21) என்று கூறப்பட்டிருந்ததுபோல, தேவனுடைய நோக்கத்தைச் சீராக முன்கொண்டு செல்லுவதற்குத் தீர்மானம் உடையவனாக முன்சென்றான். (6)

பெரோயாவைவிட்டு அவசரமாகப் பிரிந்துசெல்லும்படி பவுலுக்குண்டான பிரிவு, தெசலோனிக்கேயாவிலுள்ள சகோதரர்களைச் சந்திக்கவேண்டும் என்று அவர் எதிர்பார்த்திருந்த வாய்ப்பை இழக்கச்செய்திருந்தது. (7)

அத்தேனே பட்டணத்திற்கு வந்துசேர்ந்ததும் அந்த அப்போஸ்தலன் சீலாவும் தீமோத்தேயுவும் தன்னிடம் உடனே வரவேண்டும் என்ற ஒரு தூதுடன் பெரோயாவிலிருந்து வந்திருந்த சகோதரர்களைத் திருப்பி அனுப்பிவைத்தான். பவுல் புறப்பட்டுச் செல்லுவதற்குமுன், தீமோத்தேயு பெரோயாவிற்கு வந்திருந்து, சீலாவுடன் சேர்ந்து, அங்கு நல்லவிதமாக ஆரம்பிக்கப்பட்டிருந்த பணியை முன்கொண்டு செல்லுவதற்காகவும், விசுவாசத்தின் கொள்கைகளில் புதிதாக விசுவாசத்திற்கு மாறினவர்களுக்கு உபதேசம்செய்வதற்காகவும் அங்கு தங்கியிருந்தான். (8)

அஞ்ஞான மார்க்க ஆட்சியின் தலைநகரமாக அத்தேனே இருந்தது. இங்கு பவுல் லிஸ்தீராவில் இருந்தவர்களைப்போல எளிதில் நம்புகிற பொதுமக்களைச் சந்திக்காமல், தங்களுடைய நுண்ணறிவுக்கும் பண்பாட்டிற்கும் புகழ்வாய்ந்தவர்களாக இருந்த மக்களைச் சந்தித்தான். கண் பார்க்கும் இடங்களிலெல்லாம் அவர்களுடைய தெய்வங்களின் சிலைகள், அவர்கள் தெய்வமாக்கியிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வீரர்களின் சிலைகள் கவிதைகள் ஆகியவை காணப்பட்டன. மிகப் பெரிதான கட்டிடக் கலைகள் நிறைந்த கட்டிடங்களும், சிறப்பாக வண்ணம் தீட்டப்பட்ட கட்டிடங்களும் காணப்பட்டதுடன், புறஜாதியினரிடமிருந்து பிரசித்தமான தொழுகையைப் பெற்றிருந்த தெய்வங்களும் சிலைகளும் இருந்தன. இவைகளின் அழகினாலும் கலைத்திறனினாலும் மக்களின் புலன்கள் பரவசப்படுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு பக்கத்திலும் விலைமதிப்பிடமுடியாத

செலவில் அமைக்கப்பட்டிருந்த கோவில்களும் பிரகாரங்களும் மிகப் பெரிதானவைகளாக இருந்தன. போற்றப்பட்ட மனிதர்களின் வீரதீரச் செயல்களால் பெற்ற வெற்றிகள் சிலைகளிலும் புண்ணிய ஸ்தலங்களிலும் கற்பலகைகளிலும் பொறிக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தும் சேர்ந்து, அத்தேனே நகரை ஒரு விசாலமான கண்காட்சியாக்கியிருந்தன. (9)

தன்னைச் சுற்றியிருந்த அந்த நகரத்தின் எழிலையும் கம்பீரத்தையும், அந்த நகரம் முழுவதும் விக்கிரகாராதனைக்கு விடப்பட்டிருப்பதையும் பவுல் கண்டபோது, ஒவ்வொரு பக்கத்திலும் கனவீனப்பட்டிருந்த தேவனுக்காக, அவனுடைய ஆவி வைராக்கியத்தினால் உந்தப்பட்டது. நுண்ணறிவான பண்பாடு இருந்தும் மெய்த்தேவனைப் பற்றின அறியாமையிலிருந்த அத்தேனே நகர மக்களின்மீது அவனுடைய இருதயம் இரக்கப்பட்டது. (10)

கல்வியின் மையமாக இருந்த அந்த இடத்தில் கண்ட காரியங்களினால் அந்த அப்போஸ்தலன் வஞ்சிக்கப்படவில்லை. அவனது ஆவிக்குரிய தன்மை பரலோகக் கவர்ச்சிகளுக்கு உயிருள்ளதாக இருந்ததினால், ஒருபோதும் அழியாத மகிழ்ச்சியையும் மகிமையையும் உடைய பரலோகச் செல்வங்களின் பார்வையில் அவனைச் சூழ்ந்திருந்த ஆடம்பரமும் உயர்வும் மதிப்பில்லாதவைகளாக இருந்தன. அவன் அத்தேனேயின் பெரிய தன்மையைக் கண்டபோது, கலையையும் விஞ்ஞானத்தையும் நேசிப்பவர்களை மயக்கக்கூடிய அதன் வல்லமையை அவன் கண்டபோது, தனக்கு முன்னாலிருந்த ஊழியத்தின் முக்கியத்துவதைக்குறித்து ஆழமாக உணர்த்தப்பட்டான். (11)

தேவனை வணங்காத இந்த இடத்தில், ஒரு தனிமைப்படுத்தப்பட்ட உணர்வினால் பவுல் ஒடுக்கப்பட்டான். தனது உடன்ஊழியக்காரரிடமிருந்து கிடைக்கக்கூடிய அனுதாபத்திற்காகவும் உதவிக்காகவும் அவன் ஏங்கினான். மனித நட்பைப் பொறுத்தவரை, அவன் மிகவும் தனிமையாக இருப்பதை உணர்ந்தான். நான் அத்தேனேயில் தனிமையாக விடப்பட்டேன் என்னும் வார்த்தைகளினால்அவன்தனது உணர்ச்சிகளைத்தெசலோனிக்கேயர்களுக்கு எழுதின நிருபத்தில் வெளிக்காட்டுகிறான். மக்களுடைய இருதயங்களை சமீபிக்கச்செய்யும் அவனுடைய முயற்சி ஏறத்தாழ நம்பிக்கை அற்றதுபோல் காணும்படி, வெளிப்படையான தடைகள் கடக்க முடியாதவைகளாக அவன்முன் காணப்பட்டன. (12)

சீலாவிற்காகவும் தீமோத்தேயுவிற்காகவும் காத்துக்கொண்டிருந்த போது, பவுல் செயலாற்றாதவனாக இருக்கவில்லை. அவன் “ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணைபண்ணினான்”–

அப்போஸ்தலர் 17:17. ஆனால் அத்தேனேயிலிருந்த அவனுடைய மேலான வேலை, தேவனைப்பற்றின அறிவுப்பூர்வமான கருத்து இல்லாதவர்களுக்கு இரட்சிப்பின் செய்தியையும், விழுந்துபோன இனத்திற்கான அவருடைய நோக்கத்தையும் கொண்டுசெல்லுவதாக இருந்தது. மிக அதிகமான மயக்குகின்ற தந்திரமிக்க வடிவில் அந்த அப்போஸ்தலன் அஞ்ஞான மார்க்கத்தை விரைவில் சந்திக்கவேண்டியவனாக இருந்தான். (13)

புதிதானதும் மாறுபட்டதுமான கோட்பாடுகளை மக்கள்முன் வைத்துக்கொண்டிருக்கிற ஒரு தனி ஆசிரியன், அந்த நகரத்தில் தோன்றியிருப்பதை அத்தேனேயின் பெரிய மனிதர்கள் அதிக நாட்கள் அறியாதவர்களாக இருக்கவில்லை. இந்த மனிதர்களில் சிலர் பவுலைத் தேடிச்சென்று அவனுடன் உரையாடலில் ஈடுபட்டனர். விரைவில் அவனது பேச்சைக் கேட்கின்ற கூட்டத்தினர் அதிகரித்தனர். அப்போஸ்தலன் தங்களைவிட சமூகரீதியிலும் நுண்ணறிவிலும் கீழானவன் என்று அவனைக் கேலிசெய்து, தங்களுக்குள் ஏளனமாக, "சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்"–அப்போஸ்தலர் 17:18. (14)

சந்தை வெளிகளில் பவுலைச் சந்தித்தவர்களில் எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் இருந்தனர். ஆனால் அவர்களும் அவனுடன் தொடர்புகொண்ட அனைவரும் அவர்களுடைய சொந்த அறிவைவிடப் பெரிய அளவிலான அறிவை அவன் சேகரித்துவைத்திருப்பதை விரைவில் கண்டார்கள். அவனுடைய நுண்ணறிவின் வல்லமை, தர்க்க இயலை அடிப்படையாகக் கொண்டிருந்த அவனுடைய அக்கறைமிக்க நியாயவாதம், அவனுடைய சொல்வன்மையின் திறன் ஆகியவை கேட்டிருந்தவர்களனைவரின் கவனத்தையும் திருப்பினதால், அது கற்றவர்களின் மதிப்பைச் சம்பாதித்தது. புதிதாக வேலைபழகும் ஒருவனாக இராமல், போதித்த கோட்பாடுகளுக்கு ஆதரவாகச் சகல வகுப்பினரையும் மனநிறைவை உண்டுபண்ணக்கூடிய வாதத்துடன் சந்திக்க அவன் தகுதி உடையவனாக இருந்தான் என்பதை அவர்கள் இனம் கண்டுகொண்டார்கள். இவ்வாறாக, அந்த அப்போஸ்தலன் தன்னை ஒடுக்குபவர்களின் களத்தில், தர்க்க இயலைத் தர்க்க இயலுடனும், தத்துவத்தைத் தத்துவத்துடனும், சொல்வன்மையைச் சொல்வன்மையுடனும் சந்தித்து, அச்சமற்றவனாக நின்றிருந்தான். (15)

அந்நிய தெய்வங்களை முன்வைத்ததால் மரணதண்டனைக்

குள்ளான சாக்ரடீஸின் முடிவுக்கு அவனுடைய கவனத்தை அழைத்து, அதேபோல பவுலும் தனது உயிரை ஆபத்துக்குள்ளாக்கவேண்டாம் என்று பவுலின் அஞ்ஞான எதிரிகள் அவனுக்கு ஆலோசனை தந்தார்கள். ஆனால் அப்போஸ்தலனின் பிரசங்கம் பசுமரத்தாணிபோல் பதிந்து, அவனுடைய பாதிக்கப்படாத ஞானம் மக்களின் மரியாதையையும் போற்றுதலையும் பெற்றது. அவன் தத்துவமேதைகளின் விஞ்ஞானத்தினாலோ அல்லது வஞ்சகப் புகழ்ச்சியினாலோ மௌனப்படுத்தப்படவில்லை. தன்னுடைய வேலையை நிறைவேற்றவும், எல்லா ஆபத்துகளுக்கு மத்தியிலும் தன்னுடைய கதையைக் கூறவும் அவன் தீர்மானமுடையவனாக இருந்ததினால், தங்களைத் திருப்திப்படுத்திக்கொண்டு, அவன் சொல்வதை நியாயமாகக் கேட்பது என்று அவர்கள் முடிவுசெய்தனர். (16)

அதன்படியே அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துச் சென்றனர். அத்தேனே நகரத்தைப்பற்றிய பழையகால நினைவுகளும் உறவுகளும், சிலரது மனங்களில் அச்சத்தை உண்டுபண்ணுகின்ற மூடபக்தியான பயத்தை உண்டுபண்ணுவதாக இருந்தது. மிக முக்கியமான அனைத்துச் சன்மார்க்க நெறிகளையும் சமூகக் கேள்விகளையும் நீதிபதிகளும் செயலாற்றியிருந்தவர்களும் கூடி ஆலோசிக்கின்ற இடமாக அது இருந்தது. இந்த இடத்தில்தான் மதசம்பந்தப்பட்ட காரியங்கள் அடிக்கடி கவனமாக ஆலோசிக்கப்பட்டிருந்தன. (17)

கூட்டமும் சத்தமும் சந்தடியுமிக்க பெருவழிகளைவிட்டுத் தூரமாக விலகியிருந்த இந்த இடத்தில், அப்போஸ்தலன் பேசுவதைத் தடங்கல் எதுவுமின்றிக் கேட்க முடிந்திருந்தது. கவிஞர்கள், கலைஞர்கள், தத்துவ சாஸ்திரிகள் ஆகிய அத்தேனேயின் மேதாவிகளும் ஆழ்ந்த அறிவுடையவர்களும் அவனைச் சூழ்ந்திருந்து, “நீ சொல்லுகிற உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள்”–அப்போஸ்தலர் 17:19,20. (18)

பக்திவிநயமான பொறுப்புமிக்க இந்த நேரத்தில், பவுல் அமைதியும் சுயக்கட்டுப்பாடும் உடையவனாக இருந்தான். ஒரு முக்கியமான தூதினால், அவனுடைய இருதயம் பாரமடைந்திருந்தது. அவன் வீணாக உளறுபவன் அல்ல என்று அவனது உதடுகளிலிருந்து விழுந்த வார்த்தைகள் அதைக் கேட்டிருந்தவர்களுக்கு மனநிறைவை உண்டு பண்ணியிருந்தன. “அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத

தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" (அப்போஸ்தலர் 17:22,23) என்றான். அவர்களிடம் இருந்த நுண்ணறிவுகள் பொது அறிவுகள் ஆகியவைகளுடன்கூட அவர்கள் பிரபஞ்சத்தைப் படைத்த தேவனை அறியாதவர்களாக இருந்தனர். அப்படியிருந்தபோதிலும், பெரும் ஒளிக்காக ஏங்குகின்ற சிலர் இருந்தனர். அவர்கள் எல்லையற்றவரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். (19)

விக்கிரகங்களால் நிறைந்திருந்த அந்தக் கோவிலுக்கு நேராகத் தனது கரத்தை நீட்டினவனாகப் பவுல் தனது ஆத்தும பாரத்தை ஊற்றி, அத்தேனே நகரத்தின் மதத்தியிலிருந்த தவறுகளை வெளிக்காட்டினான். அவனது நியாயவாதத்தைக் கேட்ட ஞானவான்களில் மிக மேலானவர்கள், ஆச்சரியமடைந்தனர். அவர்களுடைய கலைகள், அவர்களுடைய இலக்கியங்கள், அவர்களுடைய மதம் ஆகியவைகளுடன் அவன் பழக்கப்பட்டவனாக இருந்தான் என்பதை அவன்தானே காட்டினான். அவன் அவர்களுடைய சிலைகளைச் சுட்டிக்காட்டி, மனிதன் உருவாக்கிப் படைத்த வடிவங்களுடன் தேவனை ஒப்பிடமுடியாது என்று கூறினான். மிகமிக மங்கலான உணர்விலும்கூட கைகளால் செய்யப்பட்ட இந்தச் சிலைகள், யேகோவாவின் மகிமையைப் பிரதிபலிப்பதில்லை. இந்தச் சிலைகளுக்கு உயிர் இல்லை. அவைகள் மனித வல்லமையால் கட்டுப்படுத்தப்பட்டு, மனிதர்களின் கைகள் அவைகளை நகர்த்தும்போது மட்டுமே நகரக்கூடியவையாக உள்ளன. ஆகவே, அதனை வணங்கும் ஒவ்வொருவரும், எல்லாவிதத்திலும், அவர்கள் வணங்குபவைகளைவிட மேலானவர்களாக உள்ளனர் என்றான். (20)

பவுல் தனது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த விக்கிரக ஆராதனைக்காரர்களின் மனங்களை அவர்களுடைய மதத்தின் தவறான எல்லைக்கு அப்பால், அவர்கள் அறியப்படாத தேவன் என்று பெயரிட்டிருந்த மெய்யான தெய்வத்தின் பார்வைக்கு இழுத்துச் சென்றான். அவன் இப்பொழுது அவர்களுக்கு அறிவித்த ஒருவர், அவரது வல்லமைக்கும் மகிமைக்கும் மனிதக் கரங்களிலிருந்து எதையும் தேவைப்படாதவராக, மனிதனிலிருந்து வேறுபட்டவராக இருந்தார். (21)

மெய்யான தேவனைப்பற்றிய பவுலின் போற்றுதல்களை, அக்கறைமிக்க தர்க்கவியல் ரீதியில், அவருடைய படைக்கும் வல்லமையையும் எல்லாவற்றையும் ஆளக்கூடிய அவரது தெய்வீக ஏற்பாட்டையும் அவன் அவர்கள்முன் வைத்தபோது, வியப்புணர்வுடன் எடுத்துச்செல்லப்பட்டனர். அக்கறையான பெரும் உணர்ச்சிமிக்க பேச்சுத்திறனுடன், "உலகத்தையும்

அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை" (அப்போஸ்தலர் 17:24,25) என்று அறிவித்தான். தேவனை அடக்கிக்கொள்ள வானங்கள் போதாதவைகளாக இருக்கும்போது, மனிதக் கரங்களால் கட்டப்பட்ட கோவில்கள் எவ்வளவு சிறியவையாக உள்ளன என்றான்! (22)

ஜாதி முறைமைகள் வழக்கத்திலிருந்த அந்தக் காலத்தில், மனிதர்களின் உரிமைகள் அடிக்கடி அங்கீகரிக்கப்படாமலிருந்த அந்தக் காலத்தில், "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப்போஸ்தலர் 17:26,27) என்று அந்த அப்போஸ்தலன் அறிவித்தான். (23)

தன்னிலிருந்த மனித இனத்தின் மேன்மைமிக்க விபரக்குறிப்புகளை, அவர்களுடைய கவிஞர் ஒருவரிடமிருந்து கடன் வாங்கிய வார்த்தைகளினால், முடிவில்லாத தேவனை—பிதா என்று அவன் படம்பிடித்துக்காட்டினான். "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" (அப்போஸ்தலர் 17:28) என்று அவன் அறிவித்தான். "நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (அப்போஸ்தலர் 17:29) என்றான். (24)

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப்போஸ்தலர் 17:30) என்றான். கிறிஸ்துவின் வருகைக்கு முன்னிருந்த இருண்ட காலங்களில், அஞ்ஞான மார்க்கத்தினரின் விக்கிரக ஆராதனையை தெய்வீக அதிபதி லேசானதாகக் கருதியிருந்தார். ஆனால் இப்பொழுது அவருடைய குமாரனின் மூலமாக சத்தியத்தின் ஒளியை அனுப்பியிருக்கிறார். அவர் எல்லோரிடத்திலிருந்தும் இரட்சிப்பிற்கான மனந்திரும்புதலை—தரித்திரரும்

தாழ்மையானவர்களிடமிருந்தும் மட்டுமன்றி அகந்தைமிக்க தத்துவ சாஸ்திரிகள், பூமியின் பிரபுக்கள் ஆகியோரிடமிருந்தும் எதிர்பார்த்தார். “மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்” என்றான். “மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர்: நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம் என்றார்கள்”–அப்போஸ்தலர் 17:31,32. (25)

இவ்வாறாக, அஞ்ஞான மார்க்கத்தின் கல்வி மையமாக இருந்த அத்தேனேயில் அப்போஸ்தலனின் ஊழியம் முடிவடைந்தது. ஏனெனில், அத்தேனியர்கள் பிடிவாதமாக அவர்களுடைய விக்கிரக ஆராதனையைப் பற்றிக்கொண்டிருந்து, உண்மையான மதத்தின் ஒளியிலிருந்து திரும்பினார்கள். ஒரு ஜனம், தாங்கள் அடைந்திருப்பதைப்பற்றின பூரணமான திருப்தியைக் கொண்டிருக்கும்போது, அவர்களிடமிருந்து அதிகமாக எதையும் எதிர்பார்க்கமுடியாது. அத்தேனியர்கள் தாங்களடைந்திருக்கும் கல்வியைப்பற்றியும் தெளிவைப்பற்றியும் பெருமைபாராட்டிக்கொண்டிருந்த போதிலும், தொடர்ச்சியாகக் கறைபடிந்தவர்களாகிக்கொண்டும், விக்கிரக ஆராதனையிலுள்ள வீணான இரகசியங்களில் மனநிறைவு உடையவர்களாகவும் இருந்தனர். (26)

பவுலின் வார்த்தைகளைக் கேட்டிருந்தவர்களுக்கிடையிலிருந்த சிலரது மனங்களில், அவர்கள்முன் வைக்கப்பட்ட சத்தியங்கள் மன உணர்த்துதலைக் கொண்டுவந்திருந்தன. ஆனால் அவர்கள் தேவனை ஏற்றுக்கொள்ளத் தங்களைத் தாழ்த்த விரும்பாதவர்களாக இருந்தனர். சொல்வன்மைமிக்க வார்த்தைகளும், வாதங்களின் வலிமையும் பாவியை மனம்மாறச்செய்யாது. தேவனுடைய வல்லமை மட்டுமே சத்தியத்தை இருதயத்தில் பதியச்செய்யும். இந்த வல்லமையைவிட்டுப் பிடிவாதமாக திரும்பிச்செல்லும் ஒருவரை சமீபிக்க முடியாது. கிரேக்கர்கள் ஞானத்தை தேடினார்கள். இருந்தும்கூட, சிலுவையைப்பற்றிய தூது அவர்களுக்குப் பைத்தியக்காரத்தனமாக இருந்தது. ஏனெனில், உன்னதத்திலிருந்து வரும் ஞானத்தைவிட, அவர்கள் தங்களுடைய ஞானத்தை அதிகமாக மதித்தார்கள். (27)

ஒப்பிட்டுப்பார்க்கும் விதத்தில் சுவிசேஷத்தின்மீது அத்தேனியர்களுக் கிடையில் ஏன் குறைந்த அளவில் மட்டுமே வெற்றி கிடைத்தது என்பதில் அவர்களது மனித நுண்ணறிவு, ஞானம் ஆகியவைகளிலிருந்த அவர்களது அகந்தை காரணமாயிருந்தது. உலகப்பிரகாரமான ஞானவான்கள், தரித்திரரும்

இழக்கப்பட்டுப்போன பாவிகளுமாகக் கிறிஸ்துவினிடத்திற்கு வரும்போது, இரட்சிக்கப்படுவதற்காக ஞானவான்களாவார்கள்; ஆனால் தங்களை விசேஷ மானவர்களாக எண்ணிக்கொண்டு, தங்களுடைய ஞானத்தை உயர்வாகப் புகழுபவர்கள், அவர் ஒருவரால் மட்டுமே கொடுக்கப்படக்கூடிய ஒளியையும் அறிவையும் பெற்றுக்கொள்ளத் தவறிவிடுவார்கள். (28)

இவ்வாறாக, பவுல் அவனது நாளில் இருந்த அஞ்ஞான மார்க்கத்தைச் சந்தித்தான். அத்தேனேயில் அவன் செய்த ஊழியம் முற்றிலுமாக வீணாகிவிடவில்லை. நகர மக்களில் முன்னணியில் இருந்தவர்களில் ஒருவனான தியொனீசியுவும், வேறு சிலரும் சுவிசேஷத்தின் தூதை ஏற்றுக்கொண்டு, விசுவாசிகளுடன் தங்களை முற்றிலுமாக ஐக்கியப்படுத்திக்கொண்டனர். அத்தேனியர்கள் தங்களுடைய அறிவு, தேர்ச்சி, கலை ஆகிய அனைத்தும் உள்ளவர்களாக இருந்துங்கூட, தீயபழக்கங்களில் அமிழ்ந்திருந்தனர். தேவன் விக்கிரக ஆராதனையையும் அகந்தையையும் தன்னிறைவையும் உடையவர்களாக இருந்த மக்களைத் தமது ஊழியக்காரன்மூலமாக எவ்விதமாகக் கடிந்துகொண்டிருந்தார் என்பதற்கு, அத்தேனே மக்களின் வாழ்க்கையைப்பற்றிய ஒரு பார்வையை ஆவியின் ஏவுதலால் நமக்குத் தந்துள்ளார். பவுலின் அசையாத நம்பிக்கை, தனிமையிலும் ஆபத்திலும் அவன் காட்டியிருந்த தைரியம், அஞ்ஞான மார்க்கத்தின் இருதயம்போன்ற இடத்தில், கிறிஸ்தவம் அடைந்துகொள்ளவேண்டிய வெற்றி ஆகியவைகளுக்காக அவன் பேசிய வார்த்தைகள், அவனது மனப்பாங்கு, சுற்றுப்புறத்தைப்பற்றிய விவரிப்பு ஆகியவைகள் ஆவியின் ஏவுதலினால் வரையப்பட்டு, அது வரவிருக்கும் தலைமுறையினருக்கும் கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது. (29)

பவுலின் வார்த்தைகளில் சபைக்கு அவசியமான அறிவின் கருவூலம் அடங்கியிருந்தது. அவன் பேச்சை அகந்தையுடன் கேட்டிருந்தவர்களுக்கு எளிதில் எரிச்சலூட்டக்கூடிய நிலைமையிலும் இருந்தான். அவனுடைய பேச்சு அவர்களுடைய தெய்வங்களையும் அந்த நகரத்தின் பெரிய மனிதர்களையும் நேரடியாகத் தாக்கக்கூடியதாக இருந்திருந்தால், சாக்ரட்டீசின் முடிவைச் சந்திக்கக்கூடிய அபாயத்தில் இருந்திருப்பான். ஆனால் தெய்வ அன்பினால் பிறந்த ஒரு உபாயத்துடன், அவன் அவர்களுடைய மனங்களை, அஞ்ஞான தெய்வங்களிலிருந்து, அவர்களுக்கு அறியாதவராக இருந்த மெய்யான தேவனிடத்திற்குக் கவனமாக இழுத்திருந்தான். இன்று உலகப் பிரகாரமான மனிதர்கள் தேவப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதா, அல்லது தீமையின் பிரபுவுடன் உறவுகொள்ளுவதைத் தெரிந்துகொள்ளுவதா என்பதை தீர்மானிக்க வேத வாக்கியங்களில் உள்ள சத்தியங்கள் அவர்கள்முன்

கொண்டுவரப்படவேண்டும். இரட்சிப்பிற்குத் தகுதியானவர்களாக இருக்கும்படி, அவர்களை ஞானவான்களாக்கும் சத்தியமாகிய, நித்திய சத்தியத்தை தேவன் அவர்கள் முன்வைக்கிறார். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை அவர் வற்புறுத்துவதில்லை. அவர்கள் அதிலிருந்து திரும்புவார்களானால், அவர்களுடைய சொந்தச் செயல்களின் கனிகளினால் நிறையப்படும்படி, அவர்களை அவர்களிடமே விட்டுவிடுகிறார். (30)

“சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது.” “ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்”–1கொரிந்தியர் 1:18,19,27,28. அறிஞர்கள், அரசியல்வாதிகள் மேம்பட்டவர்களான உலக மனிதர்களில் அநேகர், இந்தக் கடைசி நாட்களில், உலகம் தன் ஞானத்தினால் தேவனை அறியாமலிருப்பதனால், ஒளியைவிட்டுத் திரும்புகின்றனர். அப்படியிருந்தபோதிலும், இந்த மனிதர்களுக்கு சத்தியத்தைக் கொடுப்பதற்காக தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒவ்வொரு வாய்ப்பையும் முன்னேற்றமடையச் செய்யவேண்டியவர்களாக உள்ளனர். தேவனுடைய காரியங்களைப்பற்றி தங்களுடைய அறியாமையைச் சிலர் ஒப்புகை செய்து, எஜாமானனாக இருக்கும் இயேசுவின் பாதத்தில் தாழ்மையாகக் கற்றுக்கொள்ளுகிறவர்கள் என்னும் இடத்தை எடுத்துக்கொள்ளுபவர்களாக இருப்பார்கள். (31)

உயர் வகுப்பினரைச் சமீபிக்கின்ற ஒவ்வொரு முயற்சியிலும் தேவனுடைய ஊழியக்காரனுக்கு பலத்த விசுவாசம் அவசியமாயிருக்கிறது. தோற்றங்கள் தடையாகத் தோன்றலாம். ஆனால் மிகவும் இருளான நேரத்தில், உயரத்தில் ஒளி இருக்கிறது. தேவனை நேசித்து, அவருக்குச் சேவைசெய்யும் ஒவ்வொருவருடைய பலமும் நாளுக்குநாள் புதிதாக்கப்படும். அவருடைய நோக்கங்களைச் செயல்படுத்துவதில் அவர்கள் தவறாமலிருக்கும்படி, முடிவில்லாதவரைப் புரிந்துகொள்ளுதல் அவர்களுடைய சேவையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த உலகத்தை மூடிக்கொண்டிருக்கும் இருளுக்கிடையில்தான், தேவனுடைய சத்தியமாகிய

ஒளி பிரகாசிக்கவேண்டியதாக உள்ளது என்பதை நினைத்துக்கொண்டு, இந்த ஊழியக்காரர்கள் தங்களுடைய நம்பிக்கையின் ஆரம்பத்தை முடிவுவரை உறுதியாகப் பற்றிக்கொள்வார்களாக. தேவனுடைய சேவையைச் செய்வதில் உற்சாகம் அவசியமாக உள்ளது. தனது விசுவாசத்தின்மீது கொண்டுவரப்படும் பரீட்சை ஒவ்வொன்றிலும் அர்ப்பணம்செய்யப்பட்ட ஊழியக்காரனின் விசுவாசம் நிற்கவேண்டியதாக உள்ளது. தேவனுடைய ஊழியக்காரர்களுக்குத் தேவையான பலமனைத்தையும் கொடுப்பதற்கும், பல்வேறுபட்ட அவர்களுடைய அவசியங்களைக் கோரும் ஞானத்தைக் கொடுப்பதற்கும், அவர் தகுதியுடையவராகவும் விருப்பமுடையவராகவும் இருக்கிறார். தங்களுடைய நம்பிக்கையை அவரில் வைத்திருப்பவர்கள் எதிர் பார்ப்பதைவிட, மிக மேலானவைகளை அவர் நிறைவேற்றுவார். (32) ★

# 24

# கொரிந்து சபை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 243–254)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 18:1–18**

கிறிஸ்தவ யுகத்தின் முதலாவது நூற்றாண்டின் காலத்தில், கிரேக்க நாட்டின் ஒரு முன்னேற்றமான நகரமாக மட்டும் கொரிந்து இல்லாமல், உலகத்தின் முன்னேற்றமிக்க நாடாகவும் இருந்தது. வியாபாரம் செய்வதற்காகவும் இன்பங்களை அனுபவிப்பதற்காகவும் ஆவல்மிக்க விருப்பத்துடன் கிரேக்கர்களும் யூதர்களும் ரோமர்களும் ஒவ்வொரு தேசத்திலுமிருந்த பயணிகளுடன் சேர்ந்து, அதன் தெருக்களில் நெருக்கமாகக் கூட்டம் கூடியிருந்தனர். ரோமப் பேரரசின் சகல பகுதிகளிலிருந்தும் எளிதில் சென்றடையக்கூடிய விதத்திலான ஒரு பெரும் வியாபார மையமாக அது இருந்தது. தேவனுக்கும் அவருடைய சத்தியத்திற்கும் நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தவேண்டிய ஒரு முக்கியமான இடமாக அது இருந்தது. (1)

கொரிந்து பட்டணத்தில் யூதர்களுக்கு மத்தியில் குடியிருந்தவர்களில் ஆக்கில்லா பிரிஸ்கில்லாள் என்ற இருவர் இருந்தனர். பிற்காலத்தில் இவர்கள் கிறிஸ்துவின் அக்கறைமிக்க சிறப்பான ஊழியக்காரர்களானார்கள். இந்த நபர்களின் சுபாவத்துடன் அறிமுகமான பவுல் இவர்களுடன் தங்கினான். (2)

பயணிகள் கடந்துசெல்லக்கூடிய இந்தப் பெருவழிச்சாலையான இடத்தில், அவனது ஊழியத்தின் ஆரம்பத்தில், ஒவ்வொரு பக்கத்திலும் ஊழியம் முன்செல்லுவதில் தடை இருப்பதைப் பவுல் கண்டான். இந்த நகரம்முழுவதும் ஏறத்தாழ விக்கிரக ஆராதனைக்கு விடப்பட்டிருந்தது. வீனஸ் அவர்களது ஆதரவான பெண் தெய்வமாக இருந்தது. வீனசுக்கு ஆராதனை செய்வதுடன் சன்மார்க்க நெறிகளைப் புரளச்செய்யும் அநேக சடங்குகளும் சடங்காச்சாரங்களும் இருந்தன. அஞ்ஞானிகளுக்கு மத்தியிலுங்கூட தங்களுடைய பெரும் சன்மார்க்கக்கேடான நடத்தை

தெளிவாகக் காணக்கூடிய விதத்தில் கொரிந்தியர்கள் வாழ்ந்தனர். அவர்கள் அந்த நேரத்திலிருந்த இன்பங்களுக்கும் குதூகலங்களுக்கும் அப்பாற்பட்டவைகளைப்பற்றிக் கவலைகொள்ளாதவர்களாக இருந்தனர். (3)

கொரிந்துவில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கின்றவிதம் அத்தேனே நகரில் அவன் செய்திருந்த ஊழியத்திலிருந்து மாறுபட்டதாக இருந்தது. பின்னால் சொல்லப்பட்ட இடத்தில் (கொரிந்துவில்) தனது பிரசங்கங்களைக் கேட்டிருந்தவர்களின் சுபாவத்திற்குத்தக்கவண்ணம் செய்தபோது, தர்க்கவியலை தர்க்கவியலோடும், விஞ்ஞானத்தை விஞ்ஞானத்தோடும், தத்துவத்தை தத்துவத்தோடும் சந்தித்திருந்தான். இவ்வாறாகச் செலவிடப்பட்டிருந்த நேரத்தை சிந்தித்து, அத்தேனேயில் செய்த போதனை மிகக் குறைவான பலனையே தந்திருந்தது என்று உணர்ந்தபோது, கொரிந்துவில் கரிசனையற்று மந்தமாயிருந்தவர்களின் கவனத்தைக் கவருவதற்காக வேறொரு விதமான திட்டத்தைச் செயலாற்றவேண்டுமென்று அவன் முடிவுசெய்தான். அங்கு பெரும் வாதங்களையும் விவாதங்களையும் தவிர்க்கத் தீர்மானம்செய்து, “இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்” (1 கொரிந்தியர் 2:2). அவனுடைய பிரசங்கம் “மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது” (1 கொரிந்தியர் 2:5). (4)

கொரிந்துவிலிருந்த கிரேக்கர்களுக்கு, கிறிஸ்து என்று அறிமுகப்படுத்தவிருந்த இயேசு, தாழ்மையான யூதப் பிறப்பை உடையவராகவும், துன்மார்க்கத்திற்குப் பழமொழியாக இருந்த ஒரு பேரூரில் வளர்ந்தவராகவும் இருந்தார். அவர் தமது சொந்த ஜாதியினரால் நிராகரிக்கப்பட்டு, இறுதியில் ஒரு குற்றவாளியாக சிலுவையில் அறையப்பட்டார். மனித இனம் உயர்த்தப்படவேண்டிய அவசியம் இருக்கிறது என்று கிரேக்கர்கள் நம்பினார்கள். ஆனால் உண்மையான உயர்வையும் கனத்தையும் அடைந்துகொள்ளுவதற்கு தத்துவங்களையும் விஞ்ஞானத்தையும் ஆராய்வதும் கற்பதும் கருவியாக இருக்கும் என்று கருதினார்கள். அறியப்படாதவரான இந்த யூதனில் உள்ள விசுவாசம் (கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசம்), மனிதனின் ஒவ்வொரு வல்லமையையும் உயர்த்தி கனப்படுத்தும் என்று நம்புவதற்கேதுவாக பவுலால் அவர்களை நடத்தமுடியுமா? (5)

நிகழ்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் திரளானவர்களுக்குக் கல்வாரி சிலுவை பரிசுத்தமான நினைவுகளால் சூழப்பட்டுள்ளது. பரிசுத்தமான தோழமைகள் (association) சிலுவைக்காட்சியுடன் தொடர்புடையதாக உள்ளது;

ஆனால் பவுலின் நாளில், வெறுப்பும் பேரச்சமுமாகிய உணர்வுகளுடன் சிலுவை கருதப்பட்டிருந்தது. சிலுவையின்மேல் மரணத்தைச் சந்தித்த ஒருவரை, மனித இனத்தின் இரட்சகர் என்று உயர்த்திக் காட்டுவது என்பது இயல்பாகவே பரிகாசச் சிரிப்பையும் எதிர்ப்பையும் கொண்டுவருவதாகவே இருந்தது. (6)

கொரிந்துவிலிருந்த யூதர்கள் கிரேக்கர்கள் ஆகிய இரு இனத்தவராலும் பவுலின் தூது, எவ்விதமாகக் கருதப்படும் என்பதைப் பவுல் நன்கு அறிந்திருந்தான். "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1 கொரிந்தியர் 1:23) என்று அவன் ஒத்துக்கொண்டான். கேட்டுக்கொண்டிருந்த யூதர்களுக்கிடையில் அவன் அறிவிக்கவிருக்கும் தூதினால் கோபமடையக்கூடிய அநேகர் இருந்தனர். கிரேக்கர்களின் அனுமானத்தில் அவனுடைய வார்த்தைகள் அபத்தமான மடத்தனமாக இருக்கும். மனித இனத்தை உயர்த்துவதுடனும் மனித இனத்தின் இரட்சிப்புடனும் சிலுவை சம்பந்தப்பட்டிருக்கிறது என்று காண்பிக்கும் அவனது முயற்சியில், அவன் ஒரு பலவீனமான மனதை உடையவனாகக் எண்ணப்படுவான். (7)

ஆனால் பவுலுக்கு மிகமேலான விருப்பமுடைய ஒரு பொருளாகச் சிலுவை இருந்தது! சிலுவையிலறையப்பட்ட நசரேயனின் அடியார்களை உபத்திரவம் செய்கின்ற அவனது தொழிலிருந்து தடுக்கப்பட்டதிலிருந்து சிலுவையில் மகிமைபாராட்டுவதை அவன் ஒருபோதும் நிறுத்தவில்லை. அந்த நேரத்தில், கிறிஸ்துவின் மரணத்தினால் வெளிக்காட்டப்பட்டதுபோல, முடிவில்லாத தேவ அன்பின் ஒரு வெளிக்காட்டல் அவனுக்கு உண்டானது. அவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் பரலோகத்திற்கு இசைவாகக் கொண்டுவந்த அற்புதமான ஒரு மாறுதல் அவனில் நடந்தது. அந்த மணி நேரத்திலிருந்து, அவன் கிறிஸ்துவின் ஒரு புதிய மனிதனாக இருந்திருக்கிறான். தன்னுடைய சொந்த அனுபவத்தின்மூலமாக, ஒரு பாவி ஒருமுறை தமது குமாரனை தியாகஞ்செய்ததில் பிதாவின் அன்பை கண்டு, அவருடைய தெய்வீக செல்வாக்கிற்கு ஒப்புக்கொடுக்கும்போது, இருதயத்தில் ஒரு மாற்றம் உண்டாகிறது என்றும், அப்போதிருந்து கிறிஸ்து எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கிறார் என்றும் அறிந்தான். (8)

பவுல் மாறினபோது, தனது உடன் மனிதர்களும் நசரேயனான இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகவும் மாற்றுருப்பெறச் செய்யவும் (சுபாவ மாற்றம் உண்டுபண்ணவும்) இரட்சிக்கவும் கூடியவராகவும் காணவேண்டுமென்று ஏங்கினான். அதற்குப்பின் சிலுவையிலறையப்பட்ட

ஒருவரின் அன்பையும் வல்லமையையும் படம் பிடித்துக்காட்டுகின்ற முயற்சியில் அவனுடைய வாழ்க்கை முழுவதும் ஈடுபடுத்தப்பட்டது. அனுதாபமிக்க அவனுடைய பெரிய இருதயம் எல்லா வகுப்பினரையும் உள்ளே எடுத்துக்கொண்டது. கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன் (ரோமர் 1:14) என்று அவன் அறிவித்தான். மகிமையின் கர்த்தருக்காக அவன் கொண்டிருந்த அன்பு, இயேசுவின் வடிவிலிருந்த பரிசுத்தவான்களை ஓய்வு ஒழிச்சலின்றி உபத்திரவப்படுத்தியிருந்த அவனை இப்போது (இயேசுவிற்காக) செயலாற்றும்படியான கொள்கையாகவும் அவனை இயக்கும் வல்லமையாகவும் இருந்தது. எப்போதாகிலும் கடமையின் பாதையில் அவனுடைய ஆர்வம் தளர்ந்தபோது, சிலுவையையும் அங்கே வெளிப்பட்ட ஆச்சரியமான அன்பையும் ஒருமுறை பார்ப்பது, அவன் தன்னுடைய மனதின் அரையைக் கட்டிக்கொள்ளவும், சுயத்தைத் தியாகம்செய்யும் பாதையில் முன்னேறவும் அவனுக்கு உதவப் போதுமானதாகவும் இருந்தது. (9)

கொரிந்து ஜெப ஆலயத்தில் அப்போஸ்தலன் பிரசங்கிப்பதையும் மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியவைகளிலிருந்து நியாயவாதம் செய்வதையும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த மேசியாவின் வருகை வரைக்கும் அவனுடைய பேச்சைக் கேட்பவர்களைக் கொண்டுவருவதையும் பாருங்கள். தமது சொந்த ஜீவனைப் பலியாகச் செலுத்தினதின்மூலமாக, அவர் பாவநிவாரணத்தை நிரந்தரமாகச்செய்ய வேண்டியதிருந்ததையும், மனித இனத்தின் பிரதான ஆசாரியராக மீட்பர் செய்கின்ற பணியையும் அவன் தெளிவுபடுத்துவதைக் கவனியுங்கள். எந்த ஒரு மேசியாவின் வருகைக்காக அவர்கள் ஏங்கிக்கொண்டிருந்தார்களோ அவர் ஏற்கனவே வந்துவிட்டாரென்றும் பலிமுறைகளனைத்தும் அவரது மரணத்திற்கு நிழலாக இருந்ததென்றும், பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் அவர் செய்யும் ஊழியம் பெரும் பொருளாக இருந்து, தன் நிழலைப் பின்னாக விழச்செய்திருந்தன என்றும், அது யூத ஆசாரிய முறைமையை தெளிவுபடுத்தியிருந்தது என்றும் பவுலின் பேச்சைக் கேட்டிருந்தவர்கள் புரிந்துகொள்ளும்படி உணர்த்தப்பட்டிருந்தனர். (10)

இயேசுதான் கிறிஸ்து என்று பவுல் சாட்சிகொடுத்தான். தீர்க்க தரிசனங்களின்படியும், யூதர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த விதமாகவும், மேசியா ஆபிரகாமின் சந்ததியிலும் தாவீதின் கோத்திரத்திலும் வரவேண்டியவராக இருந்தார் என்பதை அவன் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களிலிருந்தும் எடுத்துக் காண்பித்தான். அதன் பின்னர், முற்பிதாவான ஆபிரகாமின் சந்ததியில் ராஜகுல சங்கீதக்காரனின்

வம்சாவளியில் இறங்கினதையும் எடுத்துக்காட்டினான். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியாவின் சுபாவத்தையும் பணியையும்பற்றி அவன் வாசித்துக்காட்டி, அதன்பின் இந்த முன்னறிவிப்புகளெல்லாம் நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை, ஊழியம், மரணம் ஆகியவைகளில் நிறைவேறியிருந்ததையும் அவன் காண்பித்தான். (11)

தங்களுடைய ஜாதிக்கு மகிமையையும் வாழ்வையும் கொண்டுவரக் கூடிய மேசியாவின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு, முதலாவதாக இரட்சிப்பை அருளும்படி கிறிஸ்து வந்திருந்தார் என்பதைப் பவுல் காட்டினான். ஆனால் அவர்களுக்கு ஜீவனைக் கொடுத்திருக்கக்கூடியவரை, அந்த ஜாதியினர் நிராகரித்து, மரணத்தை முடிவாகக் கொண்டுவரக்கூடிய வேறொரு தலைவனைத் தேர்ந்திருந்தனர். வரவிருக்கும் பாழ்க்கடிப்பிலிருந்து மனந்திரும்புதல் ஒன்று மட்டுமே யூத ஜாதியை இரட்சிக்கும் என்ற உண்மையை அவனது பேச்சைக் கேட்டிருந்தவர்களின் மனதிற்குக் கொண்டுவர அவன் முயன்றான். யூத ஜாதியினர் வேதவாக்கியங்களை நன்கு அறிந்திருப்பதாக எண்ணி, அதில் அதிகமாகப் பெருமைப்படுபவர்களாகவும் மகிமைப்படுபவர்களாகவும் இருந்தனர். ஆனால் வேதவாக்கியங்களைப்பற்றிய அவர்களுடைய அறியாமையை பவுல் அவர்களுக்கு வெளிக்காட்டினான். அவர்களுடைய உலகப்பிரகாரமான நடத்தை, பதவிகளின்மேலிருந்த அவர்களின் ஆசை, பதவி விளம்பரங்கள், பொருந்தாத அவர்களுடைய சுயநலம் ஆகியவைகளை அவன் கடிந்துகொண்டிருந்தான். (12)

ஆவியின் வல்லமையினால் உண்டான அவனுடைய மத மாற்றத்தின் ஆச்சரியமான கதையையும், நசரேயனாகிய இயேசுவில் பூரணமாக நிறைவேறியிருந்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் மீதுள்ள அவனது நம்பிக்கையையும் விவரித்தான். அவனது வார்த்தைகள் பக்திவிநயமான அக்கறையுடன் பேசப்பட்டிருந்தது. சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரை அவன் தனது முழு இருதயத்துடனும் நேசித்திருந்தான் என்பதை அவனது பிரசங்கத்தைக் கேட்டிருந்தவர்களால் அறியாமல் இருக்கமுடியவில்லை. அவனது மனம் கிறிஸ்துவில் மையம் கொண்டிருந்தது என்பதையும் அவர்கள் கண்டார்கள். கிறிஸ்தவ மதத்திற்கெதிரான மிகவும் கசப்பான வெறுப்பினால் நிறைந்திருந்தவர்களால் மட்டுமே, அசையாதவர்களாக நிற்கக்கூடிய விதத்தில், அவனது வார்த்தைகள் உணர்த்துதல்களை உடையவைகளாக இருந்தன. (13)

மேலும் கொரிந்துவிலிருந்த யூதர்கள் அப்போஸ்தலனால் மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்ட சான்றுக்குத் தங்களுடைய கண்களைமூடி, அவனது வேண்டுகோள்களைக் கவனிக்க மறுத்துவிட்டனர். கிறிஸ்துவை

நிராகரிக்கும்படி அவர்களை நடத்தியிருந்த அதே ஆவி, அவரது ஊழியக்காரனுக்கு எதிரான கோபத்தாலும் கடுங்கோபத்தாலும் அவர்களை நிரப்பினது. புறஜாதியாருக்கு சுவிசேஷத் தூதைக் கொடுக்க அவன் தொடரும்படி தேவன் சிறப்பான விதத்தில் அவனைப் பாதுகாக்காமலிருந்திருந்தால், அவர்கள் அவனுடைய உயிருக்கு ஒரு முடிவைக் கொண்டுவந்திருப்பார்கள். (14)

"அவர்கள் எதிர்த்துநின்று தூஷித்தபோது, அவன் தன் வஸ்திரங்களை உதறி: உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே சொல்லி, அவ்விடத்தைவிட்டு, தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு ஜெபஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது"–அப்போஸ்தலர் 18:6,7. (15)

பவுலுக்கு உதவிசெய்வதற்காகச் சீலாவும் தீமோத்தேயுவும் மக்கெதோனியாவிலிருந்து வந்திருந்து, அவர்கள் ஒன்றுசேர்ந்து புறஜாதியினருக்காக ஊழியம்செய்தனர். விழுந்துபோன மனித இனத்திற்கு இரட்சகராகக் கிறிஸ்து இருக்கிறாரென்று பவுலும் அவனது தோழர்களும் அஞ்ஞானிகளுக்கும் அதைப்போலவே யூதர்களுக்கும் பிரசங்கித்தனர். சிக்கலானதும் மிகத் தூரமாகக் கொண்டுவருகின்றதுமான நியாயவாதங்களைத் தவிர்த்துக்கொண்டு, சிலுவையின் தூதுவர்கள், உலக சிருஷ்டிகர் பிரபஞ்சத்தை ஆளுகின்ற உன்னதமான அதிபதியாக இருக்கிறாரென்று அவரது சிறப்புக்களைப்பற்றி பேசினார்கள். தேவனையும் அவரது குமாரனையும்பற்றிய அன்பினால், அவர்களது இருதயங்கள் எரிந்து பிரகாசித்திருந்தன. மனிதனின் சார்பாகச் செயல்படுத்தப்பட்ட முடிவில்லாத தியாகபலியை நோக்கும்படி, அவர்கள் அஞ்ஞானிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். அஞ்ஞான மார்க்கத்தின் இருளில் நீண்ட காலமாகத் தடவித் திரிபவர்களால், கல்வாரிச் சிலுவையிலிருந்து வரும் ஒளியைப் பார்க்கக்கூடுமானால், அவர்கள் மீட்பரிடத்திற்கு இழுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார் (யோவா. 12:32) அல்லவா? (16)

கொரிந்துவிலிருந்த சுவிசேஷ ஊழியக்காரர்கள் எந்த ஆத்துமாக்களுக்காக ஊழியம் செய்துகொண்டிருந்தார்களோ அவர்களை அச்சுறுத்துகின்ற பயங்கரமான ஆபத்துக்களை உணர்ந்தனர். தங்கள் மீதுள்ள பொறுப்பை உணர்ந்தவர்களாக அவர்கள், சத்தியத்தை இயேசுவில் உள்ளபடி முன் வைத்தனர். அவர்களுடைய தூது தெளிவானதாக—

வெளிப்படையானதாக—முடிவுள்ளதாக—மரணத்திற்கு ஏதுவான மரண வாசனையாகவும், ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருந்தது. (2 கொரிந்தியர் 2:16). அவர்களுடைய வார்த்தைகளில் மட்டுமாக இராமல், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின்மூலமாகவும் சுவிசேஷம் வெளிக்காட்டப்பட்டிருந்தது. தேவதூதர்கள் அவர்களுடன் ஒத்துழைத்திருந்தனர். அநேகர் மனம்மாறுவதில், தேவனுடைய கிருபையும் வல்லமையும் வெளிக்காட்டப்பட்டிருந்தது. "ஜெபஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள்"–அப்போஸ்தலர் 18:8. (17)

அப்போஸ்தலர்களின்மீது யூதர்கள் எப்போதும் கொண்டிருந்த வெறுப்பு இப்பொழுது உக்கிரமடைந்தது. கிறிஸ்புவின் மாற்றமும் ஞானஸ்நானமும் முரட்டாட்டமான எதிர்ப்பாளர்களில் மனநிறைவை உண்டுபண்ணுவதற்குப் பதிலாக, நம்பிக்கையற்ற பலனை உண்டுபண்ணியிருந்தது. பவுலின் பிரசங்கத்தைப் பொய்ப்பிக்க அவர்களால் வாதங்களைக் கொண்டுவரமுடியவில்லை. அப்படிப்பட்ட சான்று இல்லாததினால், அவர்கள் வஞ்சத்தையும் கேடு உண்டாக்குகின்ற தாக்குதலையும் நடத்த இறங்கினார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்கும் இயேசுவின் பெயருக்கும் எதிராக தேவதூஷணம் கூறினார்கள். குருட்டுத்தனமான அவர்களுடைய கோபத்தில், அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகளெல்லாம் மிகவும் கசப்புள்ளவைகளாக இருந்தன; உபாயங்கள் மிகவும் கீழ்த்தரமானவைகளாக இருந்தன. கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார் என்பதை அவர்களால் மறுக்கமுடியவில்லை. ஆனால் சாத்தானின் வல்லமையின்மூலமாக அவர் அவைகளைச் செய்தார் என்று அறிவித்தார்கள். அதைப்போலவே பவுலால் செய்யப்பட்ட ஆச்சரியமான செயல்களும் அதே ஏதுகரத்தின் மூலமாகத்தான் நிறைவேற்றப்பட்டன என்றும் அவர்கள் சாதித்தார்கள். (18)

கொரிந்துவில் பவுல் ஓரளவிற்கு வெற்றியடைந்திருந்தபோதிலும், அவன் அந்த நகரத்தில் கண்டதும் கேட்டதுமாக இருந்த துன்மார்க்கம் ஏறத்தாழ அவனது இருதயத்தைத் தொய்யச் செய்திருந்தது. புறஜாதியாரிடத்தில் அவன் சாட்சியாகக் கண்ட ஒழுக்கக்கேடும், யூதர்களிடமிருந்து அவன் பெற்ற அவமதிப்பும் கேவலமும் அவனுடைய ஆவிக்கு வேதனையைத்தரக் காரணமாயின. அவன் அங்கு கண்ட ஆத்துமாக்களினால் ஒரு சபையைக் கட்ட முயலுவதில் உள்ள ஞானத்தை அவன் சந்தேகித்தான். (19)

நல்ல பலன் கிடைக்கக்கூடிய வேறொரு இடத்திற்குச் செல்லலாம் என்று அவன் திட்டம் தீட்டிக்கொண்டிருந்த சமயத்தில், அவனது கடமையைப்

புரிந்துகொள்ள அக்கறையுடன் வகைதேடி இருந்தபோது, கர்த்தர் அவனுக்கு ஒரு தரிசனத்தில் தோன்றி: “நீ பயப்படாமல் பேசு; மவுனமாயிராதே. நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு” (அப்போஸ்தலர் 18:9,10) என்றார். இது கொரிந்துவில் தங்கியிருக்கவேண்டுமென்ற கட்டளையாக இருப்பதாகவும், விதைக்கப்பட்டுள்ள விதைக்கு கர்த்தர் விளைவைத் தருவார் என்பதற்கான உத்தரவாதமாகவும் இருக்கிறது என்று பவுல் புரிந்துகொண்டான். பலப்படுத்தப்பட்டு தைரியமூட்டப்பட்டவனாக அவன் வைராக்கியத்துடன் விடாமுயற்சியுடனும் அங்கு உழைப்பதில் தொடர்ந்தான். (20)

பொது இடங்களில் பேசுவதுடன் மட்டும் சுருங்கியதாக அப்போஸ்தலனின் முயற்சிகள் இருக்கவில்லை. அந்த மார்க்கத்தினால் சமீபிக்க முடியாத அவன், அதிக நேரத்தை செலவிட்டிருந்தான். இவ்வாறாக, வீட்டு வட்டாரங்களுடனுள்ள தொடர்பை அடைந்துகொள்ளுவதில் அவன் பழக்கப்பட்டவனாக இருந்தான். நோயுற்றிருந்தவர்களையும் துயருற்றிருந்தவர்களையும் அவன் சந்தித்து, துன்பப்பட்டிருந்தவர்களுக்கு ஆறுதல் கூறி, ஒடுக்கப்பட்டிருந்தவர்களை உயர்த்தினான். அவன் கூறினதும் செயலாற்றினதுமான அனைத்திலும், இயேசுவின் பெயரைப் பெரிதுபடுத்திக் காட்டியிருந்தான். இவ்வாறாக, அவன் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் (1 கொரிந்தியர் 2:3) ஊழியம் செய்திருந்தான். “அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப் பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை

அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, அவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்"–1 கொரிந்தியர் 2:6–13. (21)

பவுல் தனது தேவைக்குப் போதுமான தன்மை தனக்குள் உள்ளதாக இராமல், பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் உள்ளது என்றும், அவரது கிருபைமிக்க செல்வாக்கு அவனது உள்ளத்தை நிரப்பியுள்ளது என்றும், அது எண்ணங்களைக் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படுத்துகிறது என்பதையும் உணர்ந்தான். அவன் தன்னைப்பற்றி: "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்" (2 கொரிந்தியர் 4:10) என்று கூறினான். அப்போஸ்தலனின் போதனையில் கிறிஸ்து மையப் பொருளாக இருக்கிறார். "ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலாத்தியர் 2:20) என்று அவன் அறிவித்தான். சுயம் மறைக்கப்பட்டது; கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டு உயர்த்தப்பட்டார்! (22)

பவுல் பேச்சுத்திறன்மிக்க ஒருவனாக இருந்தான். அவனது மன மாற்றத்திற்குமுன், அவனது பேச்சைக் கேட்டிருந்தவர்களை அடிக்கடி தனது பேச்சுத்திறனாகிய சொல்லம்புகளால் உணர்த்த வகைதேடியிருந்தான். ஆனால் இப்பொழுது அவையனைத்தையும் ஒருபுறமாக வைத்துவிட்டான். புலன்களை மகிழ்வித்துக் கற்பனைகளால் போஷிக்கச் செய்து, ஆனால் அன்றாட அனுபவங்களைத் தொடாத கவிதை வர்ணிப்புக்களிலும் விநோதமான எடுத்துக்காட்டல்களிலும் சஞ்சரிப்பதற்குப்பதிலாக, இருதயத்தின் போஷாக்கிற்கு முக்கியமான சத்தியங்களை உள்ளத்திற்குள் கொண்டுவர—எளிமையான மொழியைக் கொண்டுவர—எளிமையான மொழியைப் பயன்படுத்த பவுல் வகைதேடியிருந்தான். சத்தியத்தை விநோதமான வார்த்தைகளால் எடுத்துக்காட்டும்போது, ஒரு பரவச உணர்ச்சியை அது உண்டுபண்ணக் காரணமாகிவிடும். ஆனால் இவ்விதமாக முன்வைக்கப்படும் சத்தியங்களனைத்தும் அடிக்கடி, விசுவாச வாழ்க்கையை நடத்துவதற்கு அவசியமான பலத்தைத் தரும் உணவை வழங்குவதில்லை. போராடும் ஆத்துமாக்களின் உடனடியான அவசியங்கள் நிகழ்காலப் பரீட்சைகள் ஆகிய இவைகளை கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படையான கொள்கைகளாகிய நடைமுறையிலுள்ள போதனைகளால் சந்திக்கவேண்டும். (23)

கொரிந்துவில் பவுலின் ஊழியங்கள் கனியற்றவையாக இருக்கவில்லை. அநேகர் ஜீவனுள்ள தேவனை வணங்குவதற்காக, விக்கிரக ஆராதனையை விட்டுத் திரும்பினார்கள். கிறிஸ்துவின் கொடியின் கீழ் அங்கு ஒரு பெரிய சபை உண்டானது. புறஜாதிகளில் ஊறுவிளைவிக்கும் இன்பங்களில் ஈடுபட்டிருந்தவர்களில் சிலர் மீட்கப்பட்டு, பாவத்திலிருந்து சுத்திகரிக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமைக்கு, தேவனின் ஞாபகச் சின்னங்களானார்கள். (24)

கிறிஸ்துவை முன்வைப்பதில் பவுல் அடைந்த அதிக வெற்றி, நம்பிக்கையில்லாத யூதர்களிடத்தில் அதிகத் தீமையான எதிர்ப்பை எழுப்பியது. “கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியானபோது, யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோய்: இவன் வேதப்பிரமாணத்துக்கு விகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள்”–அப்போஸ்தலர் 18:12,13. முந்தின சந்தர்ப்பங்களில் இருந்ததைப்போல அதிகாரிகள் அவர்களுடைய பக்கத்திலிருப்பார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்து, கோபமிக்க உரத்த குரல்களுடன் அப்போஸ்தலர்களுக்கெதிராக பேசினார்கள். (25)

யூத மதம் ரோம நாட்டு வல்லமையின் பாதுகாப்பின்கீழ் இருந்தது. தங்களுடைய மதத்தின் சட்டங்களைப் பவுல் மீறினானென்று அவன்மீது குற்றம்சாட்டினால், ஒருவேளை விசாரணைக்காகவும் தண்டனைக்காகவும் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்படலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். இவ்வாறாக அவனது மரணத்தை வனைந்துகொள்ளலாம் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் கல்லியோன் ஒரு நேர்மையான மனிதனாக இருந்து, பொறாமைமிக்க யூதர்களுக்கு வேஷக்காரனாக இருக்க மறுத்துவிட்டான். அவர்களுடைய மதவிரோதம், சுயநீதி ஆகியவைகளால் வெறுப்படைந்திருந்த அவன், அவர்களுடைய குற்றச்சாட்டைக் கவனிக்க மறுத்துவிட்டான். பவுல் தனது தற்காப்பிற்காக பேசத் தொடங்கினபோது, கல்லியோன் அது அவசியமில்லை என்று கூறிவிட்டான். பவுலின்மீது குற்றம்சாட்டி இருந்த கோபமிக்கவர்களை அவன் பார்த்து: “யூதர்களே, இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாயிருக்குமேயானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது நியாயமாயிருக்கும். இது சொற்களுக்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமானபடியினாலே, இப்படிப்பட்டவைகளைக்குறித்து விசாரணைசெய்ய எனக்கு மனதில்லை, நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை நியாயாசனத்தினின்று துரத்திவிட்டான்”–அப்போஸ்தலர் 18:14–16. (26)

கல்லியோனின் முடிவுக்காக யூதர்களும் கிரேக்கர்களுமான இருசாராரும் ஆவலுடன் காத்திருந்தனர். பொதுக் காரியம் சம்பந்தப்படாத இந்த வழக்கில், சம்பந்தம் எதுவும் இல்லையென்று அதனை உடனே தள்ளும்படிசெய்துவிட்டது, தடுமாறச்செய்த கோபத்துடன் யூதர்கள் ஒதுங்கிச்செல்லவேண்டியதன் அடையாளமாக இருந்தது. அந்த அதிபதியின் முடிவான நடத்தை, யூதர்களை உயர்த்திக்கொண்டிருந்து அமளிசெய்திருந்தவர்களின் கண்களைத் திறந்தது. ஐரோப்பாவில் பவுல் செய்திருந்த ஊழியத்தில் முதல் தடவையாக கலகக்காரர்களின் கூட்டம் அவனுக்கு ஆதரவாக அவன் பக்கத்திற்குத் திரும்பியது. அதிபதியின் கண்களுக்கு முன்னாலும் அவனது இடைப்படுதல் இல்லாமலும் அவர்கள், அப்போஸ்தலனைக் குறைகூறியிருந்த மக்களின் முன்னணியில் இருந்தவர்களை வன்முறையுடன் சூழ்ந்துகொண்டனர். “அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெபஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள். இவைகளில் ஒன்றையுங்குறித்துக் கல்லியோன் கவலைப்படவில்லை!!”–அப்போஸ்தலர் 18:17. இவ்வாறாக, குறிப்பிடப்படக்கூடிய ஒரு வெற்றியைக் கிறிஸ்தவம் அடைந்தது. (27)

பவுல் அநேகநாள் அங்கு தரித்திருந்தான் (அப்போஸ்தலர் 18:18). இந்த நேரத்தில் அப்போஸ்தலன் கொரிந்துவைவிட்டுச் செல்லும்படி வற்புறுத்தப்பட்டிருந்தால், இயேசுவின்மேலுள்ள விசுவாசத்திற்கு மாறினவர்கள் ஒரு ஆபத்தான நிலைமையில் வைக்கப்பட்டிருந்திருப்பார்கள். யூதர்கள் தங்களுக்குக் கிடைத்த அனுகூலத்தைச் சாதகமாக எடுத்துக்கொண்டு, அந்தப் பிரதேசத்தில் கிறிஸ்தவ மார்க்கத்தையே இல்லாமல் செய்துவிடக்கூடிய அனுகூலத்தையும் அடைந்திருப்பார்கள். (28) ★

# 25

# தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 255–268)**
**திருவசன ஆதாரம் : 1, 2 தெசலோனிக்கேயர்**

பவுல் கொரிந்துவில் சுற்றித்திரிந்த நேரத்தில், சீலாவும், தீமோத்தேயுவும் மக்கெதோனியாவிலிருந்து வந்துசேர்ந்தது அப்போஸ்தலரைப் பெருமளவிற்கு உற்சாகப்படுத்தியிருந்தது. தெசலோனிக்கேயாவை சுவிசேஷத்தின் தூதுவர்கள் முதல் தடவையாக சந்தித்தபோது, சத்தியத்தை ஏற்றுக்கொண்டிருந்தவர்களிடமிருந்து கிடைத்த விசுவாசம், உதாரத்துவம் ஆகியவைபற்றிய நற்செய்தியை அவனிடம் கொண்டுவந்தனர். அவர்களுடைய பரீட்சைகள் இன்னல்மிக்க சூழ்நிலைகள் ஆகியவைகளுக்கிடையில் தேவனுக்கு உண்மையாக இருந்த இவர்களிடத்திற்கு பவுலின் மென்மையான இருதயம் அனுதாபத்துடன் சென்றது. அவர்களை நேரடியாகச் சந்திப்பதற்கு அவன் ஏங்கினான். ஆனால் அப்பொழுது அது முடியாததாக இருந்ததினால், அவர்களுக்குக் கடிதங்கள் எழுதினான். (1)

தெசலோனிக்கேயா சபைக்கு அவன் எழுதின இந்த நிருபத்தில், அவர்களுடைய விசுவாசம் அதிகரித்துள்ளது என்னும் மகிழ்ச்சிமிக்க செய்திக்காக அப்போஸ்தலன் அவனுடைய நன்றியைத் தெரிவிக்கிறான். “சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக்குறித்து ஆறுதல் அடைந்தோம். நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால், நாங்கள் பிழைத்திருப்போம். மேலும், நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் உங்களைக்குறித்து அடைந்திருக்கிற மிகுந்த சந்தோஷத்திற்காக, நாங்கள் தேவனுக்கு எவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்துவோம்? உங்கள் முகத்தைக் கண்டு,

உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோமே"–1 தெசலோனிக்கேயர் 3:7–10. (2)

"உங்கள் விசுவாசத்தின் கிரியைகளையும் உங்கள் அன்பின் பிரயாசத்தையும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து, எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்" –1 தெசலோனிக்கேயர் 1:2–4. (3)

தெசலோனிக்கேயாவிலிருந்த விசுவாசிகளில் அநேகர் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்திற்குத் திரும்பியிருந்தனர். "அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு," "எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்" (1 தெச. 1:6,7) என்று கர்த்தரைப் பின்பற்றுவதில் அவர்களிடத்திலிருந்த விசுவாசத்தைப்பற்றி அப்போஸ்தலன் அறிவித்தான். புகழ்ந்துரைத்த இந்த வார்த்தைகள் மதிப்பற்றவைகளாக இருக்கவில்லை. "எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியா விலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல் நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று" (1தெச 1:8) என்றும் குறிப்பிட்டான். (4)

தெசலோனிக்கேய விசுவாசிகள் உண்மையான மிஷனரிகளாக இருந்தனர். வரவிருக்கும் கோபாக்கினைப் பயத்திலிருந்து தங்களை விடுதலை செய்திருந்த, அவர்களுடைய இரட்சகரின்மீதுள்ள வைராக்கியத்தால், அவர்களுடைய இருதயம் எரிந்தது. அவர்களுடைய வாழ்க்கைகளில் கிறிஸ்துவின் ஆச்சரியமான கிருபையின்மூலமாக ஒரு மாறுதல் உண்டாகியிருந்தது. அவர்கள் மூலமாகப் பேசப்பட்டிருந்த கர்த்தரின் வார்த்தைகள் வல்லமையுடன் சேர்ந்துவந்திருந்தது. முன்வைக்கப்பட்ட சத்தியங்களினால், இருதயங்களின்மேல் வெற்றி உண்டானதுடன் விசுவாசிகளின் எண்ணிக்கையுடன் ஆத்துமாக்கள் சேர்க்கப்பட்டனர். (5)

இந்த முதல் நிருபத்தில், தெசலோனிக்கேயர்களுக்கிடையில் அவன் செய்திருந்த ஊழியத்தின் விதத்தைக் குறிப்பிட்டான். வஞ்சகத்தினாலோ

அல்லது வஞ்சனையினாலோ அவன் மாற்றமடைபவர்களை வெற்றியாக அடைய அவன் வகைதேடவில்லை என்பதை அவன் அறிவித்தான். “சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்”–1 தெசலோனிக்கேயர் 2:4–8. (6)

“விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி. மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்”–1 தெசலோனிக்கேயர் 2:10–12. (7)

“ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.” “எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்”–1 தெசலோனிக்கேயர் 2:13,19,20. (8)

தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் பவுல், மரித்தோரின் உண்மையான நிலைமையைப்பற்றிப் போதிக்க

முயன்றிருந்தான். மரித்தவர்கள் நித்திரையடைந்திருப்பதுபோல், நினைவாற்றல் இல்லாதவர்களாக உள்ளனர் என்பதை: "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெசலோனிக்கேயர் 4:13–17) என்று அவன் அறிவித்தான். (9)

உயிருடனுள்ள விசுவாசிகளைத் தம்முடன் அழைத்துச்செல்ல கிறிஸ்து வருகிறார் என்னும் எண்ணத்தை தெசலோனிக்கேயர்கள் ஆவலுடன் பற்றிக்கொண்டிருந்தனர். கர்த்தரின் வருகையின்போது கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஆசீர்வாதத்தை, அவர்களுடைய நண்பர்கள் மரித்து இழந்துவிடக்கூடாது என்பதற்காக, தங்களுடைய நண்பர்களின் ஜீவனை மிகவும் கவனமாகக் காத்திருந்தனர். ஆனால் அவர்கள் நேசித்திருந்தவர்கள், ஒருவர்பின் ஒருவராக அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டனர். எதிர்காலத்தில் அவர்களைச் சந்திப்போம் என்று நம்புவதற்குத் துணிவில்லாதவர்களாக தெசலோனிக்கேயர்கள் தங்களுடைய மரித்தவர்களின் முகங்களை கடைசித்தடவையாகப் பார்த்தனர். (10)

பவுலின் நிருபம் திறக்கப்பட்டு, மரித்தவர்களின் உண்மையான நிலை வாசிக்கப்பட்டபோது, பெரும் மகிழ்ச்சியும் ஆறுதலும் சபைக்குக் கொண்டுவரப்பட்டது. கிறிஸ்து வரும்போது, உயிருடன் இருப்பவர்கள் இயேசுவில் நித்திரையடைந்திருப்பவர்களுக்கு முன்னதாகக் கர்த்தரைச் சந்திக்கப்போவதில்லையென்று பவுல் அறிவித்தான். உயிருடன் இருப்பவர்களை அழியாமை தழுவுவதற்குமுன் பிரதான தூதனுடைய சத்தமும் தேவ எக்காளமும் நித்திரை செய்துகொண்டிருப்பவர்களைச் சென்றடைந்து, கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்தாகவேண்டும். "பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக,

மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்!! ஆகையால் இந்த வார்த்தையினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 4:16,17) என்று எழுதினான். (11)

தெசலோனிக்கேயாவிலிருந்த இளம் சபைக்கு இந்த வாக்குறுதி கொண்டுவந்திருந்த நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் நம்மால் அபூர்வமாகத்தான் வரவேற்கமுடியும். அவர்களுடைய சுவிசேஷத்தின் தகப்பனால் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை அவர்கள் நம்பிப்பேணியபோது, அவர்களுடைய இருதயங்கள் அன்பினால் அவனை நோக்கிச்சென்றான். இந்தக் காரியங்களை அவன் அவர்களுக்கு முன்பே கூறியிருந்தான். ஆனால் அந்த நேரத்தில் அவர்களுடைய மனங்கள், புதிதாகவும் மாறுபட்டதாகவும் தோன்றியிருந்த கோட்பாடுகளைப் பற்றிக்கொள்ள முயன்றுகொண்டிருந்ததினால், சில கருத்துக்களின் வலிமை அவர்களுடைய மனங்களில் தெளிவாக உணர்த்தப்படாமலிருந்தது ஆச்சரியமானதல்ல. ஆனால் அவர்கள் சத்தியத்தின்மீது பசியுள்ளவர்களாக இருந்தார்கள். பவுலின் கடிதம், எந்த ஒருவரது மரணத்தின்மூலமாக ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்திற்குள் கொண்டுவந்ததோ, அவர்மீது அவர்களுக்குப் புதிய நம்பிக்கையையும் பலத்தையும் உறுதியான விசுவாசத்தையும் ஆழ்ந்த பற்றையும் கொடுத்தது. (12)

இப்பொழுது அவர்கள், விசுவாசிகளாக இருந்த நண்பர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் நித்தியகாலமாக வாழ்வதற்காக, கல்லறையிலிருந்து எழுப்பப்படுவார்கள் என்னும் அறிவில் களிகூர்ந்தார்கள். மரித்தவர்கள் இளைப்பாறியிருந்த இடத்தைப் போர்த்தியிருந்த இருள் நீக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவ விசுவாசத்தை ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பு முடிசூட்டிக்கொண்டது. அவர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளில் ஒரு புதிய மகிமையைக் கண்டனர். (13)

"அப்படியே இயேசுவிற்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்" என்று பவுல் எழுதினான் (1 தெசலோனிக்கேயர் 4:14). இந்த வாசகத்தை அநேகர், நித்திரைசெய்து கொண்டிருப்பவர்களைப் பரலோகத்திலிருந்து கிறிஸ்து தம்முடன் கூடக் கொண்டுவருவாரென்று பொருள்கொள்ளுகின்றனர். ஆனால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நித்திரைசெய்துகொண்டிருக்கும் பரிசுத்தவான்களை தேவன் அவர்களுடைய கல்லறைகளிலிருந்து அழைத்துத் தம்முடன் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுவார். விலைமதிப்புமிக்க ஆறுதல்; மகிமைமிக்க நம்பிக்கை! அது தெசலோனிக்கேய சபைக்கு

மட்டுமானதாக இராமல், கிறிஸ்தவர்கள் எங்கெல்லாம் இருப்பார்களோ அவர்களுக்கெல்லாம் பொருந்தும்படியாக உள்ளது. (14)

பவுல் தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்திருந்தபோது, காலங்களின் அடையாளங்கள் என்னும் பொருளை முழுமையாக விவரித்திருந்தான். வான மேகங்களின்மேல் மனுஷகுமாரன் வெளிப்படுவதற்கு முன், என்ன சம்பவங்கள் நடைபெறவேண்டும் என்று விவரித்தான். இந்த விஷயத்தைப்பற்றி நீண்டவிதமாக எழுதவேண்டியது அவசியம் என்று அவன் நினைக்கவில்லை. அப்படியிருந்தாலும், அவன் தனது பழைய போதனைகளைக் குறிப்பிட்டான். "இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை"–1 தெசலோனிக்கேயர் 5:1–3. (15)

கிறிஸ்து அவருடைய வருகையைப்பற்றி மனிதர்களுக்கு எச்சரிக்கையைக் கொடுக்கச் செய்திருக்கிறார் என்னும் சான்றுகளுக்கு இன்று தங்களுடைய கண்களை மூடிக்கொள்ளும் அநேகர் உலகத்தில் இருக்கின்றனர். முடிவின் அடையாளங்கள் விரைவாக நிறைவேறிக்கொண்டிருக்கும்போது, வான மேகங்களின்மீது மனுஷகுமாரன் வெளிப்படவிருக்கும் நேரத்தை நோக்கி உலகம் விரைந்துகொண்டிருக்கும்போது, அச்சங்கள் அனைத்தையும் அமைதிப்படுத்த அவர்கள் வகைதேடுகின்றனர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முந்தியுள்ள அடையாளங்களுக்கு அக்கறையற்றவர்களாக இருப்பது, பாவம் என்று பவுல் போதிக்கிறான். இந்தக் காரியத்தில் குற்றமுள்ளவர்களாக இருப்பவர்களை அவன் இருளின் பிள்ளைகள் என்று அழைக்கிறான். விழித்துக் காத்திருப்பவர்களை: "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களா யிருக்கக்கடவோம்" (1 தெசலோனிக்கேயர் 5:4–6) என்று அவன் தைரியப்படுத்துகிறான். (16)

இந்தக் காலத்திலுள்ள நமது சபைக்கு இந்தக் காரியத்திலுள்ள அப்போஸ்தலனின் போதனைகள் மிகவும் விசேஷமாக முக்கியமானவைகளாக

உள்ளன. அது நிறைவை அடைவதற்கு அருகிலிருப்பவர்களுக்கு பவுலின் வார்த்தைகள் வலிமையுடன் கூறுவதாக வரவேண்டும். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம். “தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே”–1 தெசலோனிக்கேயர் 5:8–10. (17)

விழித்திருக்கும் கிறிஸ்தவன் ஒரு செயலாற்றும் கிறிஸ்தவனாக இருந்து, சுவிசேஷம் முன்னேறிச்செல்லுவதற்காக தனது வல்லமைக்குள் உள்ள அனைத்தையும் பேரார்வத்துடன் செய்ய வகைதேடுபவனாக இருக்கிறான். மீட்பரின்மீதுள்ள அவனுடைய அன்பு அதிகரிப்பதுபோல், உடன் மனிதர்களின்மீதுள்ள அவனது அன்பும் அதிகரிக்கிறது. அவனுடைய எஜமானருக்கு உண்டானதுபோல, அவனுக்கும் கடுமையான சோதனைகள் உண்டு. ஆனால் துன்பங்கள் அவனுடைய சுபாவத்தை வெறுப்படையச் செய்யவோ அல்லது மனச் சமாதானத்தை அழிக்கவோ அவன் அனுமதிப்பதில்லை. சோதனையை நல்லவிதமாகச் சகித்துக்கொண்டால், அது அவனைத் தேர்ச்சிபெறவும் தூய்மைப்படுத்தவும் செய்து, கிறிஸ்துவுடனுள்ள உறவில் நெருக்கமாகக் கொண்டுவரும் என்பதை அவன் அறிந்திருக்கிறான். கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறுபவர்கள், அவரால் உண்டாகும் ஆறுதலிலும் பங்குபெற்று, இறுதியில் அவரது மகிமையிலும் பங்குபெறுபவர்களாக இருப்பார்கள். (18)

பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு எழுதின அவனது நிருபத்தில்: “அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்” (1 தெசலோனிக்கேயர் 5:12,13) என்று மேலும் குறிப்பிட்டான். (19)

தெசலோனிக்கேய விசுவாசிகள் தங்களுக்கிடையில் மதவெறிமிக்க எண்ணங்களும் கோட்பாடுகளும் உள்ளவர்கள் வருவதைக்கண்டு, பெரிதும் தொல்லையடைந்தனர். சபை சரியான விதத்தில் ஏற்படுத்தப்பட்டு ஊழியர்களாகவும் சீடர்களாகவும் இருக்கும்படி அதிகாரிகள்

நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் சபையில் அதிகாரமுள்ள பதவிகளில் வைக்கப்பட்டிருந்தவர்களுக்குக் கீழ்ப்படிய மறுத்து, கட்டுக்கடங்காத மூர்க்கமான சிலர் இருந்தனர். தனி நபரின் நிதானிப்பின்மீது அவர்கள் உரிமைபாராட்டியிருந்தது மட்டுமன்றி, தங்களுடைய கருத்துக்களைச் சபையின்மீது மக்கள்முன் வற்புறுத்தவும் செய்திருந்தனர். அதன் காரணமாகப் பவுல் தெசலோனிக்கேயர்களை சபையில் அதிகாரம் வகிக்கின்ற பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் மதிப்புக்காட்டும்படியும், மரியாதை காட்டும்படியும், அவர்களது கவனத்தை அழைத்தான். (20)

தெசலோனிக்கேயாவிலுள்ள விசுவாசிகள் தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டும் என்ற கவலையில், அன்றாட வாழ்க்கையின் நடைமுறையில், தெய்வபக்தியை வெளிப்படுத்தும்படி அவர்களிடம் மன்றாடினான். அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருங்கள். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் (1 தெச. 4:1–3,7) என்று அவன் எழுதினான். (21)

தனது ஊழியங்களினால் மாற்றடைந்தவர்களின் ஆவிக்குரிய நலனுக்கு, பெருமளவிற்கு தானே பொறுப்புள்ளவன் என்பதை அப்போஸ்தலன் உணர்ந்தான். ஒன்றான மெய்த் தேவனையும், அவரால் அனுப்பப்பட்ட இயேசுகிறிஸ்துவையும்பற்றிய அறிவில் அவர்கள் வளரவேண்டும் என்பது அவர்கள்மீதான அவனது வாஞ்சையாக இருந்தது. அவனுடைய ஊழியத்தில், அவ்வப்போது இயேசுவை நேசித்திருந்த புருஷர்களும் ஸ்திரீகளுமான சிறு கூட்டத்தினரைச் சந்தித்து, அவர்களுடன் ஜெபத்தில் இணைந்திருந்து, அவருடனுள்ள ஜீவனுள்ள தொடர்பை உடையவர்களாக இருப்பது எப்படியென்று போதிக்கும்படி, தேவனிடம் கேட்டிருந்தான். சுவிசேஷ சத்தியத்தின் ஒளியைப் பிறருக்குக் கொடுப்பதற்கான மிக மேலான மார்க்கங்களைப்பற்றி அடிக்கடி அவன் அவர்களுடன் ஆலோசனை செய்திருந்தான். இவ்விதமாக, அவன் எவர்களுக்காக ஊழியம் செய்திருந்தானோ, அவர்களைத் தீமையினின்று காக்கும்படியும், அவர்கள் அக்கறைமிக்க தீவிரமான மிஷனரிகளாக இருப்பதற்கு அவர்களுக்கு உதவும்படியும், அவன் தேவனை நோக்கி மன்றாடினான். (22)

உண்மையான மாற்றத்தின் சான்றுகளில் ஒன்று—தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் அன்புசெலுத்துவதாகும். இயேசுவைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ளுபவர்கள், அதேவிதமான விலைமதிப்புமிக்க விசுவாசத்தை உடைய மற்றவர்களின்மீது ஆழமான உண்மையான அன்பை உடையவர்களாக இருக்கிறார்கள். தெசலோனிக்கேயர்களின் காரியமும் இப்படிப்பட்டதாகவே இருந்தது. (23)

"நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப் படுத்துவாராக"–1 தெசலோனிக்கேயர் 3:12,13. (24)

"மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது"–1 தெசலோனிக்கேயர் 5:14–18. (25)

"ஆவியை அவித்துப்போடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:19–21) என்று அப்போஸ்தலன் தீர்க்கதரிசன ஆவியையும் வார்த்தைகளையும் அற்பமாய் எண்ணாமலிருக்கும்படி தெசலோனிக்கேயர்களை எச்சரித்தான். சத்தியத்திலிருந்து தவறைப் பிரித்தறிவதற்குக் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று கட்டளையிட்டான். "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும்விட்டு விலகுங்கள்" என்று அவன் புத்திபுகட்டினான் (1 தெச. 5:22). "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி

காக்கப்படுவதாக" என்னும் ஜெபத்துடன் அவனுடைய நிருபத்தை முடித்தான். "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெசலோனிக்கேயர் 5:23,24) என்றும் சேர்த்து எழுதினான். (26)

பவுல் தனது முதலாம் நிருபத்தில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி தெசலோனிக்கேயர்களுக்கு எழுதி அனுப்பினபோது, அவனது முந்தைய போதனையுடன் பூரணமான இசைவுள்ளதாக இருந்தது. அப்படியிருந்தும்கூட அவனது வார்த்தைகளில் சில, தெசலோனிக்கேய சகோதரர்களால் தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவன் இயேசுவின் இரண்டாம் வருகைக்குச் சாட்சியாக இருக்கும்படி, அதுவரை உயிர்வாழ்ந்திருப்பான் என்னும் நம்பிக்கையை வெளிக்காட்டுவதாக, அவனை அவர்கள் புரிந்துகொண்டிருந்தனர். இந்த நம்பிக்கை அவர்களுடைய உற்சாகத்தையும், உணர்ச்சிகளின் எழுப்புதலையும் அதிகரிப்பதற்கு உதவியது. முன்பு தங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் அலட்சியம் செய்திருந்தவர்கள், தங்களுடைய தவறான பார்வைகளை வற்புறுத்துவதில் அதிகமான பிடிவாதமுள்ளவர்களாக இருந்தனர். (27)

பவுல் அவனுடைய இரண்டாவது நிருபத்தில், அவனுடைய போதனையை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதை திருத்து வதற்கும், அவனுடைய உண்மையான நிலையை அவர்கள்முன் வைப்பதற்கும் வகைதேடினான். அவன் மறுபடியும் அவர்களுடைய நேர்மையிலிருந்த நம்பிக்கையையும், அவர்களுடைய விசுவாசம் பலமுள்ளதாக இருந்ததற்கான நன்றியறிதலையும், ஒருவர்மீது ஒருவரில் இருந்த அவர்களடைய அன்பு பெருகினதற்காகவும், அவர்களுடைய ஆண்டவரின் காரியத்தில் அவர்களிடமிருந்த பலத்த விசுவாசத்திற்காகவும், அவர்கள்மீதிருந்த நம்பிக்கையை வெளிக்காட்டினான். உபத்திரவங்களையும் இக்கட்டுக்களையும் தைரியத்துடன் தாங்கி நிற்கின்ற அவர்களுடைய பொறுமையையும், விடாமுயற்சியுள்ள விசுவாசத்தையும் மற்ற சபைகளுக்கு ஒரு உதாரணமாகவைத்து, தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய கவலைகள், குழப்பங்கள் யாவற்றிலிருந்தும் இளைப்பாறுகின்றனரென்று, கூறி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அவர்களுடைய மனங்களை எடுத்துச்சென்று முன்வைத்தான். (28)

"நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக் குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம். தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள

ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர் களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்பொருட்டாக; நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்”–2 தெசலோனிக்கேயர் 1:4,6–12. (29)

ஆனால் கிறிஸ்துவின் வருகைக்குமுன், மத சம்பந்தமான உலகில் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டிருந்த முக்கியமான மாறுதல்கள் நிகழவேண்டியவையாக இருந்தன. (30)

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும் நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையும் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்கிறது என்னவெனில், ஒரு ஆவியினாலாவது வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்” (2 தெசலோனிக்கேயர் 2:1–4) என்று அப்போஸ்தலன் அறிவித்தான். (31)

பவுலின் வார்த்தைகள் தவறாகவிளக்கப்படக் கூடாதவைகளாக இருந்தன. சிறப்பான ஒரு ளிப்படுத்துதலினால் உடனடியாகக் கிறிஸ்துவின்

வருகை இருக்கிறது என்று அவன் தெசலோனிக்கேயர்களை எச்சரித்தான் என்று தவறாகப் போதிக்கக்கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை விசுவாசத்தில் குழப்பம் உண்டாகக் காரணமாகிவிடும். ஏனெனில், ஏமாற்றம் அடிக்கடி நம்பிக்கையின்மைக்கு நடத்துகிறது. எனவே அப்போஸ்தலன் அப்படிப்பட்ட தூது அவனிடமிருந்து வந்துள்ளது என்று பெற்றுக்கொள்ளாமலிருக்கும்படி, சகோதரர்களை எச்சரித்து, தானியேல் தீர்க்கதரிசியால் விவரிக்கப்பட்டுள்ள போப்புமார்க்க வல்லமை இனிமேல்தான் எழும்பி, தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக யுத்தம்செய்யவேண்டியதாக உள்ளது என்பதையும், இந்த வல்லமை சாவுக்கேதுவான தேவதூஷணமிக்க வேலையைச் செய்து முடிக்குமுன், தங்களுடைய கர்த்தரின் வருகையை சபை எதிர்பார்ப்பது வீணானதாக இருக்கும் என்றும், அழுத்தமாகக் கூறுவதில் தொடர்ந்தான். "நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா" (2 தெசலோனிக்கேயர் 2:5) என்றும் குறிப்பிட்டான். (32)

உண்மையான சபையைச் சூழ்ந்துகொள்ளவேண்டிய சோதனைகள் பயங்கரமானவைகளாக இருந்தன. அப்போஸ்தலன் எழுதிக்கொண்டிருந்த நேரத்திலும்கூட, அக்கிரமத்தின் இரகசியம் அதன் வேலையை ஏற்கனவே ஆரம்பித்திருந்தது. எதிர்காலத்தில் நடைபெறவேண்டிய காரியங்கள், "சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" என்றபடி இருந்தன. (2 தெசலோனிக்கேயர் 2:9,10). (33)

"சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரியாமல்" மறுப்பவர்களைப்பற்றிய அப்போஸ்தலனின் அறிக்கை மிக முக்கியமான பக்தி விநயமானதாக உள்ளது. ஆகையால் சத்தியத்தின் தூதை வேண்டுமென்றே நிராகரிப்பவர்களுக்கு, "சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2 தெசலோனிக்கேயர் 2:11,12) என்று அவன் அறிவித்தான். தேவன் தமது இரக்கத்தினால் மனிதர்களுக்கு அனுப்பும் எச்சரிப்புக்களை நிராகரிப்பவர்கள் தண்டனையிலிருந்து விலக்கப்படமாட்டார்கள். இந்த எச்சரிக்கைகளிலிருந்து பிடிவாதமாகத் திரும்புபவர்களை அவர்கள் நேசிக்கும் வஞ்சகத்திற்குள் விட்டுவிட்டு, தேவன் அவருடைய ஆவியைப் பின்னிழுத்துக்கொள்ளுகிறார். (34)

இவ்வாறாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன், இருளும் உபத்திரவமுமிக்க கொடிய நூற்றுண்டுகளுக்கூடாக, தீமையின் வல்லமை,

அதன் நாசகரமான வேலையைத் தொடரவேண்டியதாக இருக்கும் என்று பவுல் விவரித்துக்காட்டினான். உடனடியான விடுதலையின்மீது நம்பிக்கை உள்ளவர்களாகத் தெசலோனிக்கேய விசுவாசிகள் இருந்தனர். இப்பொழுது தங்களுக்கு முன்னுள்ள தேவனுடைய பணியைத் தைரியத்துடனும் தேவன்மீதுள்ள பயத்துடனும் செய்யும்படி அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். தங்களுடைய கடமைகளை அலட்சியம்செய்து, வேலைசெய்வதை விட்டுவிட்டு, வீணாகக் காத்திருக்காமலிருக்கும்படி அப்போஸ்தலன் அவர்களுக்குக் கட்டளையிட்டான். உடனடியாக உண்டாகக்கூடிய விடுதலையின்மீதான அவர்களது ஒளிமிக்க எதிர்பார்ப்பிற்குப்பின் அன்றாட வாழ்க்கையின் சுழற்சியும், அவர்கள் சந்திக்கவேண்டிய எதிர்ப்பும் இரு மடங்கு தடைசெய்வதாக இருக்கும்; எனவே, விசுவாசத்தில் உறுதி உள்ளவர்களாக இருக்கும்படி அவன் அவர்களுக்குப் புத்திகூறினான். (35)

"ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக." "கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார். மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்துவருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம். கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக"–2 தெசலோனிக்கேயர் 2:15–17; 3:3–5. (36)

விசுவாசிகளின் பணி, தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் சத்தியத்தை விசுவாசத்துடன் பற்றிக்கொள்ளு வதனால், அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள ஒளியை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டியவர்களாக உள்ளனர். நல்ல காரியங்களைச் செய்வதில் களைப்பில்லாதவர்களாக இருக்கும்படி அவன் அவர்களுக்குக் கட்டளையிட்டு, கிறிஸ்துவின் காரியத்தில் களைப்பில்லாத வைராக்கியத்துடன் செயலாற்றிய நேரத்தில், பூமிக்குரிய காரியத்தில் அவனிடமிருந்த விழிப்புக்கு அவனுடைய சொந்த உதாரணத்தை அவர்களுக்குக் காட்டினான். தங்களை மந்தமாகவும் இலக்கு இல்லாத தூண்டுதல்களினாலும் விட்டிருந்தவர்களை அவன்

“இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டை சாப்பிட வேண்டுமென்று” உபதேசித்தான் (2தெசலோனிக்கேயர் 3:12). தேவனுடைய ஊழியக்காரர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் உபதேசங்களைப் பிடிவாதமாகக் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கின்ற எந்த ஒருவருடனும் உறவுகொள்ளாமல், அவர்களைவிட்டு விலகியிருக்க வேண்டுமென்று அவன் சபைக்குக் கட்டளைகொடுத்தான். “ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்தி சொல்லுங்கள்” (2 தெசலோனிக்கேயர் 3:15) என்றான். (37)

வாழ்க்கையின் கடின உழைப்புகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில், தேவ சமாதானமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் அவர்களுடைய ஆறுதலாகவும் தாங்குதலாகவும் இருக்கவேண்டும் என்ற ஜெபத்துடன் இந்த நிருபத்தையும் பவுல் முடித்தான். (38) ★

# 26

# கொரிந்துவில் அப்பொல்லோ!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 260–280)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 18:18–28**

கொரிந்துவைவிட்டுச் சென்றபின் பவுலின் அடுத்த ஊழியத்தின் பணிக்களமாக எபேசு இருந்தது. சமீபித்துக்கொண்டிருந்த ஒரு பண்டிகையில் கலந்துகொள்ளுவதற்காக அவன் எருசலேமிற்குச் சென்றுகொண்டிருந்தான். அவன் எபேசுவில் தங்க அவசியமாக இருந்த காலம் மிகவும் குறைவாக இருந்தது. அங்கு ஜெப ஆலயத்தில் யூதர்களுடன் நியாயவாதம் செய்தான். அவர்கள்மீது உணர்த்தப்பட்டவைகள் அவர்களுக்கு மிகவும் அனுகூலமானதாக இருந்ததினால் அவர்களுக்கிடையில் ஊழியத்தைத் தொடரும்படி அவர்கள் அவனிடம் கெஞ்சிக் கேட்டார்கள். எருசலேமிற்குச் செல்லவேண்டுமென்றிருந்த அவனுடைய திட்டம் அவனை அங்கேயே தங்கியிருப்பதிலிருந்து தடுத்திருந்தது. ஆனால் கர்த்தருக்குச் சித்தமானால் திரும்பிவருவதாக அவன் வாக்குத்தத்தம் செய்தான். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவனுடன் சேர்ந்து எபேசுவிற்குச் சென்றிருந்தனர். அவன் ஆரம்பத்த பணியைச் செய்யும்படி அவர்களை அங்கு விட்டுச்சென்றான். (1)

இந்த நேரத்தில்தான், “அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான்” (அப்போஸ்தலர் 18:24). அவன் யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்டிருந்தான். அந்தத் தீர்க்கதரிசியின் ஊழியம் வீணாகிப்போகாதபடி அவன் ஒரு ஜீவனுள்ள சாட்சியாக இருந்தான். “அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான்”

(அப்போஸ்தலர் 18:25) என்று வேதாகமம் கூறுகிறது. அவன் பிரசங்கித்ததைக் கேட்டிருந்தவர்களுக்கிடையிலிருந்த ஆக்கில்லாளும் பிரிஸ்கில்லாளும் அவன் சுவிசேஷத்தின் முழு ஒளியையும் இன்னும் பெறவில்லையென்பதை உணர்ந்து "அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மகத்துவத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (அப்போஸ்தலர் 18:26). அவர்களது போதனையின்மூலமாக, அவன் சுவிசேஷத்தைப்பற்றி ஒரு தெளிவான புரிந்துகொள்ளுதலைப் பெற்று, கிறிஸ்தவ விசுவாசத்தைக்குறித்துப் பரிந்துபேசுபவர்களில் மிகவும் திறமை வாய்ந்தவர்களுள் ஒருவனானான். (2)

அப்பொல்லோ அகாயாவிற்குச் செல்லுவதற்கு விருப்பமாயிருந்தான். எபேசுவிலிருந்த சகோதரர்கள் கிறிஸ்துவின் சபையுடன் பூரணமான இசைவுள்ள ஆசிரியனாக அவன் இருப்பதாகவும் அவனை ஏற்றுக்கொள்ளும்படியும் கடிதம் எழுதினார்கள். அவன் கொரிந்துவிற்குச் சென்று பொது ஊழியத்தில் வீடுவீடாகச்சென்று ஊழியஞ்செய்து, "யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினான்" (அப்போஸ்தலர் 18:28). சத்தியத்தின் விதையைப் பவுல் விதைத்திருந்தான். இப்பொழுது அப்பொல்லோ அதற்கு நீர்ப்பாய்ச்சினான். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் அப்பொல்லோ அடைந்த வெற்றி, அவனுடைய ஊழியத்தைப் பவுலின் ஊழியத்தைவிட மேலானதாக உயர்த்தும்படி சில விசுவாசிகளை நடத்தினது. மனிதனுடன் மனிதனை ஒப்பிடும் இச்செயல், சபைக்குள் ஒரு பிரிவினையின் ஆவியைக் கொண்டுவந்து, சுவிசேஷம் முன்னேறுவதற்கு பெரும் இடையூறை உண்டுபண்ணியது. (3)

பவுல் கொரிந்துவில் செலவழித்திருந்த ஒன்றரை ஆண்டுகளில், சுவிசேஷத்தை குறிப்பாக அதன் எளிமையில் முன்வைத்திருந்தான். "சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது" (1 கொரிந்தியர் 2:1,3,4) என்றான். (4)

பவுல் சபையின் நிலைமைக்கு அவசியமானவிதத்தில் அவனுடைய போதனையை அமைத்திருந்தான். "சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக் குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப்

பேசவேண்டியதாயிற்று" (1 கொரிந்தியர் 3:1). அவர்களுக்குப் போதிக்க முயன்றிருந்த பாடங்களைக் கற்றுக்கொள்ளுவதில் அநேக கொரிந்து விசுவாசிகள் மிகவும் மந்தமானவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் தக்கதாக அவர்களுடைய ஆவிக்குரிய அறிவு முன்னேற்றமடைந்திருக்கவில்லை. அவர்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் மிகவும் மேலோங்கி புரிந்துகொள்ளும் தகுதியை உடையவர்களாக இருந்து, வார்த்தையிலுள்ள ஆழமான சத்தியங்களை நடைமுறைப்படுத்துபவர்களாக இருந்திருக்கவேண்டிய நேரத்தில்: "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" (யோவான் 16:12) என்று சீடர்களிடம் கிறிஸ்து கூறியிருந்தைப்போன்ற நிலைமையில் அவர்களும் நின்றிருந்தனர். பொறாமை, பொல்லாதவிதமாக யூகித்தல், குற்றாச்சாட்டுகள் ஆகியவை அநேக கொரிந்து விசுவாசிகளின் இருதயங்களை, "எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிற" (1 கொரிந்தியர் 2:10) பரிசுத்த ஆவியின் செயல்களுக்கு எதிராக அடைத்திருந்தது. (5)

கிறிஸ்தவ விசுவாசத்தின் முதலெழுத்திலிருந்த அடிப்படையான வைகளைக் கொரிந்துவில் விசுவாசத்திற்கு மாறினவர்களுக்குக் கற்பிப்பது பவுலின் வேலையாக இருந்தது. இருதயங்களில் செயலாற்றும் தெய்வீக வல்லமையைக்குறித்து அறியாதவர்களுக்கு உபபேதசிப்பதைப்போன்று அவர்களுக்கு உபதேசிக்க அவன் கடமைப்பட்டிருந்தான். அந்த நேரத்தில் இரட்சிப்பின் இரகசியங்களை அவர்கள் அறியாதவர்களாக இருந்தனர். "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14). மற்றவர்கள் நீர்ப்பாய்ச்ச வேண்டியதாக இருந்த விதைகளை விதைப்பதற்கு பவுல் முயன்றிருந்தான். அவனைப் பின்பற்றுபவர்கள் ஆவிக்குரிய ஒளியையும் அறிவையும் சபை தாங்கிக்கொள்ளும்படி சரியான நேரத்தில் கொடுத்து, அவன் விட்டிருந்த இடத்திலிருந்து வேலையைத் தொடர்ந்து முன்கொண்டுசெல்லவேண்டும். (6)

அப்போஸ்தலன் கொரிந்துவில் அவனது பணியைத் தொடங்கினபோது, அவன் போதிக்க விரும்பியிருந்த பெரும் சத்தியங்களை மிகுந்த கவனத்துடன் அவர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டும் என்பதை உணர்ந்திருந்தான். மனிதக்கொள்கை விளக்கங்களிலும் தவறான தொழுகைமுறைகளை

விளக்குபவர்களிலும் எத்தகைய அகந்தைமிக்க விசுவாசிகள் அவனது பிரசங்கத்தைக் கேட்பவர்களில் இருப்பார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். இவர்கள் வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ஆவிக்குரியதும் அழியாமை உடையதுமான ஜீவனைப்பற்றி உண்மையுடன் முரண்படுகின்ற இயற்கையின் கொள்கை விளக்கங்களைக் கண்டுவிடலாமென்ற நம்பிக்கையுடனும் குருட்டுக்கண்களுடனும் தடவித் திரிந்திருந்தார்கள். வெளிப்படுத்தப்படுகின்ற வார்த்தைகளுடன் முரண்பட்ட விமரிசகர்கள் முயலுவார்கள் என்பதையும், மத நம்பிக்கையில்லாதவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏளனம்செய்து கேலிசெய்வார்கள் என்பதையுங்கூட அவன் அறிந்திருந்தான். (7)

ஆத்துமாக்களைச் சிலுவையினிடத்திற்கு நடத்துவதற்கு அவன் முயன்றிருந்தபோது, கீழ்த்தரமான சிற்றின்பப் பிரியர்களாக இருந்தவர்களை பவுல் நேரடியாகக் கடிந்துகொள்ளவும் அல்லது ஒரு பரிசுத்தமான தேவனுடைய பார்வையில் அவர்களுடைய பாவங்கள் எவ்விதம் மிகவும் வெறுக்கத்தக்க செயல்கள் என்பதைக் காட்டவும் முயன்றிருந்தான். மானிட வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை அவர்கள் முன்வைத்து, தெய்வீக ஆசிரியரின் போதனைகளைப் பெற்றுக்கொண்டால், அது அவர்களை உலகப்பிரகாரமாக வாழ்க்கை, பாவம் ஆகியவைகளிலிருந்து தூய்மைக்கும் நீதிக்கும் உயர்த்தும் என்பதை அவர்களது மனங்களில் உணர்த்த அவன் முயன்றான். சிறப்பாக நடைமுறை தெய்வபக்தியைப்பற்றியும், தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு இடத்தைப் பெறுவதற்குத் தகுதியை அடைபவர்கள் அடையவேண்டிய பரிசுத்தம்பற்றியும் பிரசங்கித்தான். சுவிசேஷத்தின் ஒளி அவர்களுடைய மனங்களின் இருளைத் துளைத்துக்கொண்டு செல்லுவதையும், சன்மார்க்க நெறிகளுக்கு எதிரான அவர்களுடைய நடத்தைகள் தேவனுடைய பார்வையில் எதிரானதாக இருக்கிறதையும் அவர்கள் பார்க்கவேண்டும் என்பதற்காக ஏங்கினான். ஆகவே கிறிஸ்துவை—சிலுவையில் அறையப்பட்ட அவரை, அவர்களுக்கிடையில் போதிப்பது அவனது பாரமாக இருந்தது. தேவனுக்கு நேராக மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதின் வழியாக உண்டாகக்கூடிய இரட்சிப்பின் ஆச்சரியமான சத்தியம்தான், அவர்களுடைய மிக அதிகமான அக்கறையுடைய ஆராய்ச்சியும் மிகப்பெரும் மகிழ்ச்சியுமாக இருக்கவேண்டும் என்பதை அவர்களுக்குக் காட்ட அவன் வகைதேடியிருந்தான். (8)

இரட்சிப்பின் ஒளி தத்துவ சாஸ்திரியின் பெருமைமிக்க கோட்பாட்டு விளக்கங்களை வெட்கத்திற்குட்படுத்துவதால் அவன் அதைவிடுத்து வேறுபக்கமாகத்திரும்புகிறான். அது அவனை அவனுடைய உலகப்பிரகாரமான

விக்கிரகங்களிலிருந்து பிரிப்பதால் உலகப்பிரகாரமானவன் அதைப் பெற்றுக்கொள்ள மறுக்கிறான். மனிதர்கள் கிறிஸ்துவை நேசிப்பதற்குமுன் அல்லது விசுவாசக் கண்களால் சிலுவையைப் பார்ப்பதற்குமுன் கிறிஸ்துவின் சுபாவம் புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பதை பவுல் கண்டான். நித்தியகாலம் முழுவதிலும் மீட்கப்பட்டவர்களின் விஞ்ஞானமாகவும் பாடலாகவும் இருக்கக்கூடிய அந்த படிப்பு, இங்கு ஆரம்பமாகவேண்டும். மனித ஆத்துமாவின் உண்மையான விலைமதிப்பைப்பற்றி சிலுவையின் ஒளியில் மட்டுமே அனுமானிக்க முடியும். (9)

சுத்திகரிக்கும் செல்வாக்கை உடைய தேவகிருபை மனிதனின் இயற்கையான சுபாவத்தை மாற்றுகிறது. மாம்சப் பிரகாரமான மனதை உடையவர்களுக்குப் பரலோகம் விரும்பக்கூடியதாக இருக்காது. அந்தத் தூய்மையும் பரிசுத்தமுமான இடத்தின்மீது அவர்களுடைய இயற்கையான பரிசுத்தமடையாத இருதயங்களுக்குக் கவர்ச்சி இருக்காது. அவர்களால் அந்த இடத்திற்குள் பிரவேசிப்பது சாத்தியமானால், அங்கு மனதிற்கு ஒத்ததான எதையும் அவர்கள் உணரமாட்டார்கள். விழுந்துபோன மனிதன் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்குப் பொருத்தமாவதற்குமுன்னும் தூய்மையும் பரிசுத்தமுமிக்க தூதர்களின் சமுதாயத்தை அனுபவிப்பதற்குத் தகுதியடைவதற்கு முன்னும், இயற்கையான இருதயத்தைக் கட்டுப்படுத்துகின்ற மனப்பாங்குகள் கிறிஸ்துவின் கிருபையினால் கீழ்ப்படுத்தப்படவேண்டும். மனிதன் பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவில் புதிய ஜீவனுக்கென்று உயிர்த்தெழும்போது, தெய்வீக அன்பு இருதயத்தை நிரப்புகிறது. அவனுடைய புரிந்துகொள்ளுதல் பரிசுத்தமடைகிறது. வற்றாத ஊற்றிலிருந்து அவன் மகிழ்ச்சியையும் அறிவையும் பருகுகிறான். அவனது பாதையில் ஒரு நித்தியநாளின் ஒளி வீசுகிறது. ஏனெனில் ஒளி எப்போதும் தொடர்ச்சியாக அவனுடனுள்ளது. (10)

பவுலும் அவனுடன் சேர்ந்த ஊழியக்காரரும் சத்தியத்தைப் போதிக்கும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்பதையும், அவர்கள் அனைவரும் அதேபணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதையும், தங்களுடைய பணியில் வெற்றியடைய அவர்களனைவரும் ஒரேவிதமாக தேவனைச் சார்ந்திருக்கின்றனர் என்பதையும் கொரிந்து சபையிலுள்ள சகோதரர்களின் மனங்களில் உணர்த்துவதற்குப் பவுல் வகைதேடியிருந்தான். சபையிலுள்ள பல்வேறுபட்ட ஊழியக்காரர்களிடம் இருந்த வித்தியாசமான சிறப்புகளைப்பற்றி சபையில் எழுந்த விவாதம் தேவன் ஏற்படுத்தின ஒழுங்கின்படியானதாக இராமல், இயல்பான இருதயங்களில் பேணப்பட்டிருந்த சிறப்புக்களின் பலனாக இருந்தது. “ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன்

நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா? பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்" ( 1 கொரிந்தியர் 3:4–7). (11)

கொரிந்துவில் பவுல்தான் முதலில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபையை ஏற்படுத்தினான். இது கர்த்தரால் அவனுக்கு நியமிக்கப்பட்டிருந்த பணியாக இருந்தது. பின்னர் தேவனுடைய சித்தத்தின்படி மற்ற ஊழியக்காரர்கள் அவரவர்களுடைய நிலையிலும் இடத்திலும் நிற்கும்படி உள்ளே கொண்டுவரப்பட்டனர். விதைக்கப்பட்ட விதைக்கு நீர் பாய்ச்சவேண்டும். இதை அப்பொல்லோ செய்யவேண்டியவனாக இருந்தான். மேற்கொண்டுள்ள உபதேசங்களைக் கொடுக்கும் பணியில் விதைக்கப்பட்ட விதை வளரும்படி அப்பொல்லோ பவுலைப் பின்தொடர்ந்தான். மக்களின் இருதயங்களைக் கவர்ந்துகொள்ளும் அவனுடைய பாதையில் அவன் வெற்றியடைந்தான். ஆனால் அந்த அதிகரிப்பைக் கொடுத்தவர் தேவனே. சுபாவத்தில் மாற்றத்தை உண்டுபண்ணுகின்ற பணியைச் செய்வது மனித வல்லமையாயிராமல், தெய்வீக வல்லமையாக இருக்கிறது. விதைப்பவர்களானாலும்சரி விதையை அவர்கள் வளரச்செய்வதில்லை. அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்ட ஏதுகரங்களாக அவருடைய பணியில் அவருடன் ஒத்துழைக்கின்றனர். வெற்றியுடன் வரும் கனமும் மகிமையும் எஜமானுடையதாக இருக்கிறது. (12)

தேவனுடைய ஊழியக்காரர்களனைவரும் ஒரேவிதமான வரங்களை உடையவர்களல்ல. ஆனால் அவர்களனைவரும் அவரது வேலையாட்களாக உள்ளனர். ஒவ்வொருவரும் முதலில் பெரிய ஆசிரியரிடம் கற்றுக்கொண்டு, பின்பு தான் கற்றவைகளை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். தேவன் தமது ஒவ்வொரு தூதுவனுக்கும் ஒரு தனிப்பட்ட வேலையைக் கொடுத்திருக்கிறார். வரங்களில் வித்தியாசமுண்டு, ஆனால் எல்லா ஊழியக்காரர்களும் இசைவாக ஒன்று கலந்து, பரிசுத்த ஆவியின் செல்வாக்கினால் கட்டப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, தேவனுடைய வல்லமையினால் அநேகர் மன உணர்த்துதலையும் மாற்றத்தையும் அடைவார்கள். மனிதக் கருவிகள் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்க, இயேசு பதினாயிரங்களில் சிறந்தவராக மொத்தத்தில் அழகிய ஒருவராகத் தோன்றுகிறார். (13)

“மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப்பெறுவான். நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்” (1 கொரிந்தியர் 3:8,9). இந்த வேதவாக்கியத்தில் அப்போஸ்தலன் சபையை ஒரு விவசாயம் செய்யப்பட்ட நிலத்துடன் ஒப்பிட்டு, தோட்டக்காரர்களை கர்த்தரால் நடப்பட்ட திராட்சைச்செடிகளைக் கவனிப்பவர்களாகவும், ஒரு கட்டிடத்துடன் ஒப்பிட்டு, அவர்கள்கர்த்தருடைய பரிசுத்த ஆலயமாக உயரக்கூடிய ஒரு மாளிகையாகவும் குறிப்பிடுகிறான். தலைமை ஊழியக்காரராக தேவன் இருந்து, ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுடைய வேலையை நியமித்திருக்கிறார். அவர் தங்களுக்காகவும் தங்கள்மூலமாகவும் வேலைசெய்யும்படி, அனைவரும் அவரது மேற்பார்வையின்கீழ் உழைக்கவேண்டும். அவர் அவர்களுக்கு உபாயத்தையும் திறமையையும் கொடுத்து, அவருடைய உபதேசங்களைக் கேட்பார்களானால் வெற்றிகரமான முயற்சிகளுக்குக் கிரீடமும் சூட்டுகிறார். (14)

தேவனுடைய ஊழியக்காரர்கள், அன்பும் உதாரணமும் கலந்த ஒழுக்கத்தில் ஒன்றுசேர்ந்து வேலைசெய்யவேண்டியவர்களாக உள்ளனர். “கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்” (ரோமர் 12:10). அன்பற்ற விமரிசனங்கள் இருக்கக்கூடாது. மற்றவர்களுடைய வேலையைச் சிதைக்கக்கூடாது. தனிக்கட்சிகளும் இருக்கக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் கர்த்தரால் ஒப்படைக்கப்பட்ட ஒரு திட்டவட்டமான வேலையை உடையவனாக இருக்கிறான். ஒவ்வொரு மனிதனும் தனக்கே சொந்தமான ஒரு தனித்தன்மையை உடையவனாக இருக்கிறான். அவன் அதனை மற்ற மனிதர்களுக்குள் மூழ்கடிக்கக்கூடாது. அப்படியிருந்தாலும் ஒவ்வொருவரும் மற்ற சகோதரர்களுடன் இசைந்து பணிசெய்யவேண்டும். தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்களுடைய சேவையில் ஒன்றுபட்டிருக்கவேண்டும். ஒருவனும் தன்னை ஒரு அளவுகோலாக உயர்த்தாமலும், தனது உடன் ஊழியக்காரிடம் மரியாதைக் குறைவாகப் பேசாமலும், அவர்களைக் கீழானவர்களாக நடத்தாமலும் இருக்கவேண்டும். தேவனுக்குக் கீழாக மரியாதை பெறுபவராக நேசிக்கப்படுபவராக மற்ற வேலைக்காரர்களால் தைரியப்படுத்தப்பட்டவர்களாக ஒவ்வொருவரும் தனக்கு நியமிக்கப்பட்ட வேலையைச் செய்யவேண்டியவராக இருக்கிறார். அனைவரும் ஒன்றுசேர்ந்து வேலையை முழுமையடைய முன்கொண்டு செல்லவேண்டும். (15)

பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தில் இந்த கொள்கைகளை அதிகமாக விவரித்திருக்கிறான்.

கிறிஸ்துவின் ஊழியக்காரன் தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக் காரன் என்றும், அவர்களுடைய வேலையைப்பற்றி: "மேலும் உக்கிராணக் காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்" (1 கொரிந்தியர் 4:1–5) என்றும் அறிவிக்கிறான். (16)

வித்தியாசமான தேவனுடைய வேலைக்காரர்களுக்கிடையில் நிதானம்செய்வது எந்த ஒரு மனிதனிடமும் கொடுக்கப்படவில்லை. மனிதனுடைய வேலைக்கு தேவன் மட்டுமே நியாயாதிபதியாக இருக்கிறார். அவர் ஒவ்வொருவருக்கும் அவரது நீதியான பரிசை வழங்குவார். (17)

அப்போஸ்தலன் தொடர்ந்து தனது ஊழியத்துக்கும் அப்பொல்லோவின் ஊழியத்துக்கும் இடையில் செய்யப்பட்டிருந்த ஒப்பிடுதலை நேரடியாகச் சுட்டிக்காட்டி, "சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தம் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன். அன்றியும் உன்னை விசேஷித்தவ னாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1 கொரிந்தியர் 4:6,7) என்று விளக்கினான். (18)

பவுல் தானும் தனது கூட்டாளிகளும் கிறிஸ்துவிற்கான சேவையில் பொறுமையுடன் சகித்திருந்த அபாயங்களையும் கஷ்டங்களையும் வெளிப்படையாகச் சபைக்குமுன் வைத்தான். "இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர் களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவுமானோம். உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்" (1 கொரிந்தியர் 4:11–15) என்றான். (19)

சுவிசேஷத்தைக் கேட்பவர்களுக்கிடையில் அனுகூலமிக்க ஊழியக்காரனின்மீது பலத்த ஒரு பற்றுதலையும், மற்ற ஊழியக்காரர்களின்மீது விருப்பமின்மையும் உண்டாகும்போது, சுவிசேஷ ஊழியக்காரர்களைத் தமது

தூதுவர்களாக அனுப்பும் ஒருவர் கனவீனப்படுத்தப்படுகிறார். தேவன் தமது ஜனங்களுக்கு எப்பொழுதும் அவர்கள் தெரிந்துகொள்ளுகிற விதத்தில் உதவியை அனுப்புகிறார். ஏனெனில், மனிதர்கள் குறுகிய பார்வையை உடையவர்களாக இருந்து, அவர்களது மேலான நன்மைக்கு எது நல்லது என்பதை அறியமுடியாதவர்களாக உள்ளனர். கிறிஸ்தவத்திற்கு அவசியமான அனைத்திலும், ஒரு சபையைப் பூரணப்படுத்துவதற்கான தகுதிகளனைத்தையும் ஒரு ஊழியக்காரன் பெற்றிருப்பான் என்பது மிகவும் அபூர்வமானது. எனவே தேவன் அடிக்கடி மற்றவர்களைவிடக் குறைவான தகுதியை உள்ளவர்களிடத்திற்கு வேறு தகுதியை உடைய மற்ற ஊழியக்காரனை அனுப்பிவைக்கிறார். (20)

கிறிஸ்துவின் இந்த ஊழியக்காரர்களை சபை தங்களது ஆண்டவரை ஏற்றுக்கொள்ளுவதைப்போல நன்றியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஊழியக்காரனும் தேவனுடைய வார்த்தையிலிருந்து கொடுக்கக் கூடிய உபபேதசத்திலிருந்து முடிந்த அளவு கிடைக்கக்கூடிய நன்மை களனைத்தையும் பெற்றுக்கொள்ள அவர்கள் வகைதேடவேண்டும். தேவனுடைய ஊழியக்காரர்கள் கொண்டுவருகின்ற சத்தியங்கள் எளிமையுள்ள தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு வரவேற்கப்படவேண்டும். ஆனால் எந்த ஒரு ஊழியக்காரனையும் விக்கிரகமாக்கக்கூடாது! (21)

தேவனுடைய ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் கிருபையினால் ஒளிக்கும் ஆசீர்வாதத்திற்கும் தூதுவர்களாக்கப்பட்டுள்ளனர். அக்கறையும் விடாமுயற்சியுமிக்க ஜெபத்தினால் அவர்கள் பரிசுத்த ஆவியின் வரங்களை அடைந்து, ஆத்துமாக்களை இரட்சிக்கும் பாரத்தால் நிறைந்து முன்செல்லும்போது, சிலுவையின் வெற்றிகளை விரிவடையச்செய்யும் வைராக்கியத்துடன் அவர்களுடைய இருதயங்கள் நிரம்பியிருக்கும். அவர்கள் தங்களுடைய ஊழியத்தின் கனியைக் காண்பார்கள். மனித ஞானத்தை விளம்பரப்படுத்தவும் அல்லது சுயத்தை உயர்த்தவும் தீர்மானத்துடன் மறுக்கும்போது, சாத்தானின் தாக்குதலை எதிர்த்து நிற்கின்ற ஒரு வேலையை அவர்கள் நிறைவேற்றுவார்கள். அநேக ஆத்துமாக்கள் இருளிலிருந்து ஒளிக்குத் திருப்பப்படுவார்கள். அநேக சபைகள் அமைக்கப்படும். மனிதர்கள் மனித ஏதுகரங்களிடத்திற்கு அல்ல, கிறிஸ்துவினிடம் திருப்பப்படும். சுயம் பின்னாக வைக்கப்பட்டு, இயேசுமாத்திரமே, சிலுவைநாயகர் மட்டுமே காணப்படுவார். (22)

இன்று கிறிஸ்துவிற்காக உழைப்பவர்கள் அப்போஸ்தலர்களின் காலத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்கள் வெளிக்காட்டின அதே மேன்மையான திறமைகளை வெளிக்காட்டலாம். பவுலுக்கும்

அப்பொல்லோவுக்கும், சீலாவுக்கும் தீமோத்தேயுவுக்கும், பேதுருவுக்கும் யாக்கோபு யோவானுக்கும் வல்லமை கொடுக்க தேவன் அன்று ஆயத்தமாக இருந்ததைப்போலவே, இன்றும் தமது ஊழியக்காரர்களுக்கு வல்லமையைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார். (23)

அப்போஸ்தலரின் காலத்தில், கிறிஸ்துவை விசுவாசிப்பதாக சொன்னபோதும், அவரது தூதுவர்களுக்கு மரியாதை கொடுக்க மறுத்த—தவறாக வழிநடத்தப்பட்ட ஆத்துமாக்கள் இருந்தனர். தாங்கள் எந்த மனிதனையும் பின்பற்றவில்லை என்றும், சுவிசேஷத்தின் எந்த ஊழியக்காரனின் உதவியுமின்றி கிறிஸ்துவால் நேரடியாக போதிக்கப்படுகிறதாகவும் அறிவித்தார்கள். அவர்கள் ஆவியில் சுதந்தரமானவர்களாக இருந்து, சபையின் குரலுக்கு ஒப்புக்கொடுக்காதவர்களாக இருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் வஞ்சிக்கப்படும் பெரும் அபாயத்தில் இருந்தார்கள். (24)

அநேகருடைய ஒன்றிணைந்த ஞானத்தின் வழியாக ஆவியானவரின் சிந்தை எட்டப்படுவதற்கேதுவாக, தேவன் தமது சபையில் நியமிக்கப்பட்ட உதவிக்காரர்களாக வெவ்வேறு திறமைகொண்டவர்களை வைத்திருக்கிறார். தேவனுடைய வேலையில் அதிக அனுபவங்களையுடைய மற்றவர்களுடன் இணைந்துசெல்ல மறுத்து தங்களுடைய உறுதியான குணத்தின்படி செல்லுபவர்கள், சுயநம்பிக்கையினாலே குருடராகி, உண்மைக்கும் பொய்க்குமிடையே பகுத்தறியமுடியாதவர்களாகி விடுவார்கள். தங்கள் சகோதரருடைய நியாயங்கள் எதுவாயினும், அதைவிடுத்துத் தங்களுடைய நியாயங்களையும் திட்டங்களையுமே பின்பற்றுவதினால், அப்படிப்பட்டவர்கள் சபையில் தலைவர்களாக தெரிந்தெடுக்கப்படுவது பாதுகாப்பானதல்ல. தங்களுடைய ஒவ்வொரு நடைக்கும் ஆலோசனை பெறவேண்டியிருந்தும், கிறிஸ்துவின் மனத்தாழ்மையை கற்றுக்கொள்ளாமல் தங்களுடைய சுயபலத்தில் மற்ற ஆத்துமாக்களுக்கு பாதுகாவலர்களாக இருக்கும் இவர்கள்மூலமாகச் செயலாற்றுவது சத்துருவுக்கு எளிது. (25)

உணர்த்துதல்கள் மட்டுமே கடமைக்கு பாதுகாப்பான வழிகாட்டுதலாக இருக்காது. மனிதர்கள் உண்மையில் உணர்ச்சித் துடிப்புகளை மட்டுமே பின்பற்றிக்கொண்டிருக்கும்போது, தேவன் வழிகாட்டிக்கொண்டிருக்கிறார் என்று சத்துரு அவர்களை நம்பச்செய்கிறான். ஆனால் நாம் கவனமாகக் கவனித்து, நமது சகோதரர்களுடன் ஆலோசனை செய்வோமானால் நமக்கு தேவனுடைய சித்தத்தைப்பற்றி ஒரு புரிந்துகொள்ளுதல் கொடுக்கப்படும். “சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்”—சங்கீதம் 25:9. (26)

ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையில் பேதுருவைத் தங்களுடைய தலைவராகப் பற்றிக்கொண்டிருந்த சிலர் இருந்தனர். அவர்கள் பவுலையோ அல்லது அப்பொல்லோவையோ அங்கீகரிக்க மறுத்திருந்தனர். பவுல் விசுவாசிகளை உபத்திரவப்படுத்துபவனாக இருந்த சமயத்தில் ஆண்டவர் பூமியிலிருந்தபோது பேதுருதான் அவருடன் மிகவும் நெருக்கமானவனாக இருந்தான் என்று அவர்கள் உறுதிசெய்திருந்தனர். அவர்களுடைய பார்வைகளும் உணர்ச்சிகளும் தவறான எண்ணத்தினால் கட்டப்பட்டிருந்தது. கிறிஸ்து இருதயத்தில் தங்கியிருக்கிறார் என்று வெளிக்காட்டுகின்ற தாராள குணத்தையும், பெருந்தன்மையையும், மென்மையையும் காண்பிக்காதிருந்தனர். (27)

இந்த பிரிவினையின் ஆவி கிறிஸ்தவ சபைக்குப் பெரும் தீமையை உண்டுபண்ணக்கூடிய ஆபத்தாக இருந்தது. அக்கறைமிக்க எச்சரிப்பையும் பக்திவிநயமான மறுப்பையும் கொடுக்கும்படி பவுல் கர்த்தரால் உபதேசிக்கப்பட்டான். “உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?” “இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்” (1 கொரிந்தியர் 1:12,13; 3:21–23) என்றான். (28)

பவுலும் அப்பொல்லோவும் பூரணமான இசைவை உடையவர்களாக இருந்தனர். கொரிந்து சபையில் உண்டான பிரிவினையால் அப்பொல்லோ மிகுந்த மனமடிவை அடைந்தான். அவனிடம் காட்டப்பட்டிருந்த முன்மரியாதையை அவன் அனுகூலமாக எடுத்துக்கொள்ளாமலும் அல்லது அவன் அதை உற்சாகப்படுத்தாமலும், கலகமிக்க அந்த இடத்தைவிட்டு விரைவாக விலகிச்சென்றான். பின்னர் கொரிந்துவை சந்திக்கும்படி பவுல் அவனை வற்புறுத்தினபோது அவன் மறுத்து, அந்த சபை ஒரு நல்ல ஆவிக்குரிய நிலைமையை அடையும்வரை அங்கு ஊழியம் செய்யாமலிருந்தான். (29) ★

# 27

# எபேசு பட்டணத்தில் இயேசுவைப்பற்றிய செய்தி!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 281–290)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 19:1–20**

அப்பொல்லோ கொரிந்துவில் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, பவுல் எருசலேமிற்குத் திரும்பி வருவதாகக் கூறியிருந்த அவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினான். அவன் எருசலேமில் ஒரு சுருக்கமான சந்திப்பை நடத்திவிட்டு, அவனுடைய ஆரம்பகால ஊழியத்தின் இடமான அந்தியோகியாவில் சிறிதுகாலம் செலவழித்தான். அதன்பின் ஆசியா மைனர் வழியாகப் பயணம் செய்தான். கலாத்திய நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, அவன் ஏற்படுத்தியிருந்த சபைகளைச் சந்தித்து விசுவாசிகளின் விசுவாசத்தைப் பலப்படுத்தியிருந்தான்—அப். 18:23. (1)

அப்போஸ்தலர்களின் காலத்தில் ஆசியா மைனரின் மேற்குப் பகுதி ஆசியாவிலுள்ள ரோம மாநிலம் என்று அறியப்பட்டிருந்தது. அதன் தலைநகரமாக இருந்த எபேசு, ஒரு பெரும் வியாபார மையமாக இருந்தது. அதன் துறைமுகம் கப்பல்களால் நிறைந்திருந்தது. அதன் தெருக்களை ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வந்திருந்த மக்களின் கூட்டம் நெருக்கமாக்கியிருந்தது. மிஷனரி ஊழிய முயற்சிக்குக் கொரிந்துவைப்போல ஒரு பலன்தரும் பணிக்களமாக இருந்தது. (2)

நாகரீகமடைந்திருந்த தேசங்களெங்கிலும் யூதர்கள் அதிகமான அளவில் பரவியிருந்து, மேசியாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வருடந்தோறும் நடைபெறும் பண்டிகைகளில் கலந்து கொள்ள எருசலேமிற்கு வந்திருந்தவர்களில் அநேகர், யோவான்

ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்பதற்காக யோர்தான் நதிக்கரைக்குச் சென்றிருந்தனர். அங்கு இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியாவென்று அறிவிக்கப்பட்டிருந்தாரென்பதைக் கேட்டு அவர்கள் அந்த நற்செய்தியை உலகத்தின் சகல பகுதிகளுக்கும் கொண்டுசென்றிருந்தனர். இவ்வாறாக தெய்வீக ஏற்பாடு அப்போஸ்தலர்களின் பணிக்கான பாதையை ஆயத்தம் செய்திருந்தது. (3)

பவுல் எபேசுவிற்கு வந்தபோது, கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றி கொஞ்சம் அறிந்திருந்த, யோவான் ஸ்நானகனின் சீடனாக இருந்த அப்பொல்லோவைப் போன்ற பன்னிருவரைக் கண்டான். அவர்கள் அப்பொல்லோவைப்போல திறமையுள்ளவர்களாக இருக்கவில்லை. ஆனால் அவனிடமிருந்த அதே உண்மையுடனும் விசுவாசத்துடனும் அவர்கள் பெற்றிருந்த அறிவை அயல்நாடுகளெங்கிலும் பரப்ப வகைதேடியிருந்தனர். (4)

இந்த சகோதரர்கள் பரிசுத்தஆவியின் ஊழியத்தைப்பற்றி ஒன்றுமே அறியாதவர்களாக இருந்தனர். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்களா என்று பவுல் கேட்டபோது: “பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்”–அப்போஸ்தலர் 19:2,3. (5)

அப்பொழுது கிறிஸ்தவ நம்பிக்கையின் அஸ்திவாரமாக இருக்கும் பெரும் சத்தியங்களை அப்போஸ்தலன் அவர்கள்முன் வைத்தான். கிறிஸ்துவின் உலக வாழ்க்கை, அவருடைய கொடூரமான மரணம், அவமானம் ஆகியவைகளை அவன் அவர்களுக்குக் கூறினான். கல்லறையின் தடைகளை ஜீவாதிபதி எவ்விதமாகத் திறந்து மரணத்தின்மீது வெற்றிகண்டு உயிர்த்தெழுந்திருக்கிறார் என்பதை அவன் அவர்களுக்குக் கூறினான். “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்” (மத்தேயு 28:19,20) என்று இரட்சகர் தமது சீடர்களுக்குக் கொடுத்த கட்டளையை அவன் திரும்பக் கூறினான். தேற்றரவாளனை அனுப்புவேன் என்று கிறிஸ்து பண்ணின வாக்குத்தத்தத்தையும், அவரது வல்லமையின் மூலமாக—பரிசுத்த ஆவியின்

வல்லமையின்மூலமாக பலத்த அடையாளங்களும் அற்புதங்களும் செயல்படுத்தப்படும் என்பதையும், பெந்தெகொஸ்தே நாளில் இந்த வாக்குத்தத்தம் எவ்வளவு மகிமையாக நிறைவேறினதென்பதையும் அவன் கூறினான். (6)

பவுலின் வார்த்தைகளை இந்தச் சகோதரர்கள் ஆழ்ந்த ஆர்வத்துடனும் நன்றியுடனும் ஆச்சரியமிக்க மகிழ்ச்சியுடனும் கவனித்தனர். கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை அவர்கள் விசுவாசத்தினால் பற்றிக்கொண்டு, அவரை அவர்களது மீட்பராகப் பெற்றுக்கொண்டனர். அதற்குப்பின், அவர்கள் இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுல் அவர்களுடைய தலைகளின்மீது தனது கைகளை வைத்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப்பெற்று, மற்ற ஜாதியினர் பேசுகின்ற பாஷைகளைப்பேசவும் தீர்க்கதரிசனம் உரைக்கவும் தகுதிப்படுத்தப்பட்டனர். இவ்வாறாக, அவர்கள் எபேசுவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுவிசேஷத்தை அறிவிக்க ஆசியா மைனருக்குச் செல்லும் மிஷனரிகளாக ஊழியம்செய்யும் தகுதியை அடைந்தனர். (7)

இந்த மனிதர்கள் தாழ்மையும் கற்றுக்கொள்ளக்கூடியதுமான ஒரு ஆவியைப் பேணியிருந்ததினால், ஊழியக்களத்திற்குச் செல்லத் தகுதி அடையக்கூடிய அனுபவத்தை ஆதாயமாக அடைந்தனர். அவர்களுடைய உதாரணம் கிறிஸ்தவர்களுக்கு விலைமதிப்புமிக்க ஒரு பாடத்தை முன்வைக்கிறது. அநேகர் தெய்வீக வாழ்க்கையில் முன்னேற்ற மில்லாதவர்களாக உள்ளனர். ஏனெனில் கற்றுக்கொள்ளுபவர்கள் என்னும் நிலைமையைப் பற்றிக்கொள்ள முடியாத அளவிற்கு அநேகர் தன்நிறைவை உடையவர்களாக உள்ளனர். அவர்கள் தேவனுடைய வார்த்தையைப்பற்றின மேலோட்டமான அறிவில் திருப்தியுள்ளவர்களாக உள்ளனர். தங்களுடைய விசுவாசத்தையோ அல்லது நடத்தையையோ மாற்ற விருப்பமில்லாமலிருக்கின்றனர். எனவே பெரிய வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிசெய்யவில்லை. (8)

கிறிஸ்துவின் அடியார்கள் சத்தியத்தைத் தேடுவதில் அக்கறை உள்ளவர்களாக இருந்தால், அவர்கள் இதுவரை அறியாமலிருக்கும் சத்தியத்தின் வளமான களங்களுக்கு நடத்தப்படுவார்கள். தன்னை முற்றிலுமாகத் தேவனுக்குக் கொடுப்பவன், தெய்வீக கரத்தினால் வழிநடத்தப்படுவான். அவன் எளிமையானவனாகவும் வெளித்தோற்றத்திற்கு வரங்களற்றவனாகவும் இருக்கலாம். அப்படியிருந்தபோதிலும் நேசிக்கின்ற—நம்புகின்ற ஒரு இருதயத்துடன் தேவனுடைய சித்தத்தின் ஒவ்வொரு அறிவிப்பிற்கும் அவன் கீழ்ப்படிகிறான். அவனுடைய வல்லமைகள்

தூய்மைப்படுத்தப்பட்டு, மேன்மைப்படுத்தப்பட்டு பெலப்படுத்தப்படும். அவனது திறமைகள் அதிகரித்ததாகவும் இருக்கும். தெய்வீக ஞானத்தை அவன் கருவூலமாக சேகரிக்கும்போது, பரிசுத்தமான ஒரு பணி அவனிடம் ஒப்படைக்கப்படும். அவனுடைய வாழ்க்கை தேவனுக்குக் கனத்தையும் உலகத்திற்கு ஆசீர்வாதத்தையும் கொண்டுவருவதாக அமையும்படி அவன் தகுதிப்படுத்தப்படுவான். “உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்” (சங்கீதம் 119:130). (9)

எபேசுவிலிருந்த விசுவாசிகளைப்போலவே இன்று இருதயத்தில் கிரியையை நடப்பிக்கும் பரிசுத்த ஆவியின் செயலைப்பற்றிய அறியாமை மிக்க அநேகர் உள்ளனர். அப்படியிருந்தபோதிலும் தேவனுடைய வார்த்தையில் அதைவிட வேறு எந்த சத்தியமும் அதிகத் தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கருப்பொருளைப்பற்றித் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் அதிகமாகப் பேசியுள்ளனர். ஆவிக்குரிய வாழ்க்கையைத் தாங்குவதாக அவரது ஆவியின் ஏதுகரம் இருக்கிறது என்பதை ஒப்பிட கிறிஸ்து தாமே தாவர உலகத்தைச் சித்தரித்துக்காட்டியுள்ளார். திராட்சைச்செடியிலிருந்து மேலே உயர்ந்து பரவியிருக்கும் கிளை கனிகளைக் கொடுக்கும்படி செடி அதன் வளர்ச்சியைத் தாங்கி நிற்கிறது. அதைப்போலவே, இரட்சகரிடமிருந்து ஜீவனைக் கொடுக்கப் புறப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமை ஆத்துமாவை நிரப்பி, அதன் இலட்சியங்களையும் பற்றுதல்களையும் புதுப்பித்து, சிந்தனையையுங்கூட தேவனுடைய சித்தத்திற்குக் கீழாகக் கொண்டுவந்து, அதைப் பெற்றுக்கொள்பவரைத் தகுதிப்படுத்தி, பரிசுத்தமான செயல்கள் என்னும் விலைமதிப்புமிக்க கனிகளைக் கொடுக்கச்செய்கிறது. (10)

இந்த ஆவிக்குரிய வாழ்க்கையின் “ஆக்கியோன்” காணப்படாதவராக இருக்கிறார். அந்த ஜீவன் எப்படிக் கொடுக்கப்பட்டுத் தாங்கப்படுகிறது என்பதை விளக்குவது மனிதத் தத்துவத்தின் வல்லமைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. அப்படியிருந்தபோதிலும் ஆவியின் செயல்பாடுகள் எழுதப்பட்டுள்ள வார்த்தையுடன் இசைவுள்ளதாக இருக்கிறது. இயற்கையின் உலகம் எப்படிப்பட்டதாக இருக்கிறதோ, அதைப்போலவே ஆவிக்குரிய வாழ்விலும் இருக்கிறது. இயற்கையான வாழ்க்கை விநாடிகள்தோறும் தெய்வீக வல்லமையினால் பாதுகாக்கப்படுகிறது. இருந்தபோதிலும் அது ஒரு நேரடியான அற்புதத்தினால் தாங்கப்படாமல், நமக்கு எட்டக்கூடிய தூரத்தில் வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைப் பயன்படுத்துவதினால் தாங்கப்படுகிறது. அப்படியே ஆவிக்குரிய வாழ்வானதும் தெய்வீக ஏற்பாட்டினால் வழங்கப்பட்டிருக்கும் உபாத்திகளினால் தாங்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் வளர வேண்டுமானால், கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரணபுருஷராகும்வரைக்கும் வளரவேண்டும் (எபேசியர் 4:11). அவன் ஜீவ அப்பத்தைப் புசித்து, இரட்சிப்பின் நீரைப் பருகியாகவேண்டும். அவன் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய வார்த்தையிலுள்ள உபதேசங்களுக்குச் செவிகொடுத்து, விழித்திருந்து ஜெபித்துச் செயலாற்றவேண்டும். (11)

மாற்றமடைந்த யூதர்களின் அனுபவத்திலிருந்து நமக்கு மற்றுமொரு பாடம் இருக்கிறது. அவர்கள் யோவான் ஸ்நானகனின் கையால் ஞானஸ்நானம் பெற்றபோது, பாவத்தை சுமப்பவராக இருக்கும் இயேசுவின் ஊழியத்தைப்பற்றி முழுமையாக அறியாதவர்களாக இருந்தனர். அவர்கள் ஆபத்தான தவறுகளைப்பற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் தெளிவான ஒளியுடன் கிறிஸ்துவை தங்களுடைய மீட்பர் என்று ஏற்றுக்கொண்ட இந்த முன்னேற்றமான அடிச்சுவடுடன் அவர்களுடைய கட்டுப்பாடுகளில் ஒரு மாறுதல் உண்டானது. அவர்கள் அகத்தூய்மையான விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டனர். அதனுடன் சம்பந்தப்பட்டவிதத்தில் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மாறுதல் உண்டானது. இந்த மாறுதலின் அடையாளமாகவும், கிறிஸ்துவிலுள்ள அவர்களது விசுவாசத்தை ஒப்புக்கொள்ளுவதற்காகவும் இயேசுவின் பெயரால் மறுபடியும் ஞானமுழுக்கு பெற்றிருந்தனர். (12)

பவுல் தன்னுடைய வழக்கத்தின்படியே, எபேசுவிலிருந்த யூதர் களுடைய ஜெப ஆலயத்தில் பிரசங்கம்செய்து, அவனுடைய ஊழியத்தை ஆரம்பித்திருந்தான். அவன் மூன்று மாதங்கள் அங்கு ஊழியம் செய்வதில் தொடர்ந்திருந்தான். தேவனுடைய இராஜ்யத்திற்கு அடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசெல்லிக்கொண்டு வந்தான் (அப். 19:8). முதலில் அவன் அனுகூலமான ஒரு வரவேற்பைச் சந்தித்தான். ஆனால் மற்ற களங்களைப்போலவே விரைவில் வன்முறையுடன் எதிர்க்கப்பட்டான். சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகி, கூட்டத்திற்குமுன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தனர். (அப். 19:9). சுவிசேஷத்தை நிராகரிப்பதில் அவர்கள் பிடிவாதமாயிருந்ததினால் ஜெப ஆலயத்தில் பிரசங்கம் செய்வதை நிறுத்திக்கொண்டான். (13)

சொந்த நாட்டு மக்களுக்காக பவுல் செய்திருந்த வேலையில் தேவ ஆவியானவரும் பவுலின் மூலமாக ஊழியம் செய்திருந்தார். சத்தியத்தை அறியவேண்டுமென்ற நேர்மையான விருப்பத்தை உடையவர்களாக இருந்தவர்களுக்கு மனநிறைவை உண்டுபண்ணுவதற்குப் போதுமான சான்றுகள் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அநேகர் தங்களுடைய

தவறான எண்ணமும் நம்பிக்கையின்மையும் தங்களைக் கட்டுப்படுத்த அனுமதித்து, மிகவும் உறுதியான சான்றுகளுக்கும் இணங்க மறுத்துவிட்டனர். சத்தியத்தை எதிர்ப்பவர்களுடனுள்ள தொடர்ச்சியான தோழமையினால் விசுவாசிகளின் விசுவாசம் ஆபத்துக்குள்ளாகிவிடும் என்ற பயத்தினால் பவுல் அவர்களைப் பிரித்து, ஒரு குறிப்பிட்ட அமைப்பாக ஒன்றுசேர்த்து திறன்னு என்ற ஒருவனுடைய பள்ளியில்வைத்து, அவர்களுக்கு யாவருமறியப் போதனை செய்வதில் தொடர்ந்தான். “இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது” (1 கொரிந்தியர் 16:9) என்று பவுல் கண்டான். ஆசியாவிலிருந்த நகரங்களில் எபேசு சிறப்பான பெரிய நகரமாக மட்டுமல்லாமல், மிகவும் கறைபடிந்த இடமாகவும் இருந்தது. பெருகிக்கொண்டிருந்த அந்த மக்கள் தொகையை மூட நம்பிக்கைகளும் புலன்களின் இன்பங்களும் அடித்துச்சென்றிருந்தன. அதன் கோவிலின் நிழலுக்கடியில் எல்லாவகையான குற்றவாளிகளும் புகலிடம் கண்டிருந்ததுடன் மிகவும் கீழ்த்தரமான பழக்கங்களும் நடத்தப்பட்டிருந்தன. (14)

தியானாள் என்னும் பெண் தெய்வத்தை வணங்குகின்ற பிரசித்தமான மையமாக எபேசு இருந்தது. எபேசுவின் தியானாள் என்னும் அந்தச் சிறப்பான பெரிய ஆலயத்தின் புகழ், ஆசியா முழுவதிலும் உலகமெங்கிலும் பரவியிருந்தது. அதன் அளவுகடந்த சிறப்பு, அதனை அந்த நகரத்தின் பெருமையாக மட்டுமாக்கியிராமல், அந்த நாட்டிற்கான பெருமையைத் தந்திருந்தது. அந்தக் கோவிலுக்குள் இருந்த சிலை, வானத்திலிருந்த விழுந்தது என்று பாரம்பரியத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதின்மேல் மிகவும் வல்லமையுள்ளது என்று நம்பப்பட்டிருந்த உருவக அடையாளங்கள் வரையப்பட்டிருந்தன. இந்த அடையாளங்களின் பொருளையும் பயன்களையும் விளக்குகின்ற புத்தகங்களும் எழுதப்பட்டிருந்தன. (15)

அதிக விலையுள்ள இந்தப் புத்தகங்களை ஆழமாக ஆராய்வதில் ஈடுபட்டிருந்தவர்களுக்கிடையில் அநேக மந்திரவாதிகள் இருந்தனர். இவர்கள் அந்தக் கோயிலுக்குள்ளிருந்த சிலையை வணங்கியிருந்த மூடபக்திமிக்கவர்களின் மனங்களின்மீது அதிகமான வல்லமைமிக்க செல்வாக்கை உடையவர்களாக இருந்தனர். (16)

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவில் செய்திருந்த அவனுடைய ஊழியத்தில் தெய்வீக ஆதரவின் சிறப்பான அடையாளத்தைப் பெற்றவனாக இருந்தான். அவனது முயற்சிகளுடன் தேவனுடைய வல்லமை தொடர்ந்திருந்தது. அநேகர் உடல் சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து சுகம் பெற்றனர். “பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும்

கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன" (அப்போஸ்தலர் 19:11–12). இயற்கைக்கு மேற்பட்ட இந்த வல்லமையின் வெளிக்காட்டல்கள் எபேசுவில் இதுவரை காணப்பட்டிருந்த சகல வல்லமைகளைக்காட்டிலும் மிகவும் அதிகமானவிதத்தில் மேலானதாக இருந்தது. அவைகள் செப்பிடுவித்தைக்காரர்களாலும் சூனியக்காரர்களின் மந்திர உச்சாடனத் திறமையினாலும் போலிசெய்யமுடியாதவிதத்தில் இருந்தன. இந்த அற்புதங்கள் நசரேயனாகிய இயேசுவின் பெயரால் செய்யப்பட்டதினால் தியானாள் என்னும் தெய்வத்தை ஆராதித்திருந்த மந்திரவாதிகளைவிட பரலோகத்தின் தேவன் அதிகமான வல்லமையுடையவர் என்று காணும்படியான ஒரு வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தது. இவ்வாறாக, விக்கிரக ஆராதனைக்காரர்களுக்கு இடையிலேயே—அளவிடமுடியாத வல்லமையையும் ஆதரவையும் பெற்றிருந்த மந்திரவாதிகளுக்கு இடையிலேயே கர்த்தர் அவருடைய ஊழியக்காரனை உயர்த்தினார். (17)

எந்த ஒருவருக்குக் கீழ்ப்பட்டவைகளாகப் பொல்லாத ஆவிகள் அனைத்தும் உள்ளனவோ, அவைகளின்மேல் அதிகாரத்தைத் தமது ஊழியக்காரனுக்கு எந்த ஒருவர் கொடுத்திருக்கிறாரோ—அவர் அவருடைய பரிசுத்த நாமத்தை அவமதித்து வீணில் வழங்குபவர்களின்மீது வெட்கத்தையும் தோல்வியையும் கொண்டுவருபவராக இருக்கிறார். மந்திரவாதம் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் மரண தண்டனையுடன் தடைசெய்யப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் அவ்வப்போது மருளவிழுந்த யூதர்களால் அது இரகசியமாக செயல்படுத்தப்பட்டிருந்தது. பவுல் எபேசுவைச் சந்தித்த நேரத்தில் "தேசாந்தரிகளாய்த்திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரினாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டைவிட்டு ஓடிப்போனார்கள்" (அப்போஸ்தலர் 19:13–16). (18)

இரட்சகரின் ஊழியத்திலிருந்த தெய்வத்தன்மையில் விசுவாசமில்லாமல் அதனை உச்சரித்தவர்களுக்கு உண்டான ஆபத்தினால் கிறிஸ்துவின் நாமத்திலிருந்த பரிசுத்த தன்மைக்கு ஒரு சாட்சியைக் கொடுத்தது.

“அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது” (அப்போஸ்தலர் 19:17). (19)

மறைத்துவைக்கப்பட்டிருந்த உண்மைகள் இப்பொழுது வெளிச்சத்திற்குள் கொண்டுவரப்பட்டிருந்தன. கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து விசுவாசிகளில் சிலர் தங்களுடைய மூட நம்பிக்கைகளை இன்னும் விட்டுவிடாதவர்களாக இருந்தனர். ஓரளவிற்கு அவர்கள் இன்னும் மந்திர வாதத்தில் தொடர்ந்திருந்தனர். இப்பொழுது தங்களுடைய தவறைப் பற்றி உணர்ந்த விசுவாசிகளில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள் (அப்போஸ்தலர் 19:18). (20)

தங்களுடைய மந்திரவாதப் புத்தகங்களை எரித்ததினால் எபேசுவில் மாற்றமடைந்திருந்தவர்கள் ஒரு சமயத்தில் எந்தப் பொருட்களில் மகிழ்ச்சி உள்ளவர்களாக இருந்தார்களோ அவைகளை இப்பொழுது வெறுத்தனர் என்பதைக் காட்டினார்கள். (22)

இந்த மந்திரவாதப் புத்தகங்கள் பொல்லாத ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கான சட்டதிட்டங்களையும் முறைகளையும் உடையவைகளாக இருந்தன. அவைகள் சாத்தானை ஆராதிக்கின்ற சட்டதிட்டங்களாக, அவனுடைய உதவியை நாடுகின்ற மார்க்கங்களையும் அவனிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் உள்ளடக்கியவைகளாக இருந்தன. இந்தப் புத்தகங்களை வைத்துக்கொண்டிருப்பதனால் சீடர்கள் தங்களை சோதனைக்கு ஆளாக்கிக்கொண்டிருந்திருப்பார்கள். அவைகளை விற்பதன்மூலமாக அவர்கள் மற்றவர்களின் பாதைகளில் சோதனையை வைப்பவர்களாக இருப்பார்கள். எப்படிப்பட்ட தியாகம் செய்யவேண்டியதானாலும், அந்தகாரத்தின் ஆளுகையை மறுத்து, அந்த வல்லமையை அழிக்க அவர்கள் தயங்காதவர்களானார்கள். இவ்வாறாக, மனிதர்களின் தவறான எண்ணங்களின்மேலும், பணத்தின்மீதுள்ள அவர்களுடைய ஆசையின்மேலும் சத்தியம் வெற்றியடைந்தது. (23)

மூடநம்பிக்கையின் கோட்டையாக இருந்த இடத்தில் கிறிஸ்துவின் வல்லமையின் இந்த வெளிக்காட்டுதல், கிறிஸ்தவத்திற்கு ஒரு பலத்த வெற்றியைக் கொடுத்தது. நிகழ்ந்திருந்த செல்வாக்கு பவுல் உணர்ந்திருந்ததைவிட மிக அதிகமாகப் பரவியதாக இருந்திருந்தது. எபேசுவிலிருந்த இந்தச் செய்தி சுற்றுக்கு விடப்படவே கிறிஸ்துவின் காரியத்திற்கு ஒரு பலத்த உத்வேகம் கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலன் தனது பணியை முடித்து அநேக நாட்களுக்குப்பின் இந்தக் காட்சிகள் மனிதர்களின் நினைவில் தங்கியிருந்தது. அவைகள் சுவிசேஷத்திற்கு மாறுவதை வெற்றியாக்குகின்ற கருவிகளாக அமைந்தன. (24)

அஞ்ஞான மார்க்கத்தின் மூடநம்பிக்கைகள் இருபதாம் நூற்றாண்டின் நாகரீகதிற்கு முன்னால் மறைந்துவிட்டன என்று பிரியத்துடன் நினைத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் பண்டைய கால மந்திரவாதிகளின் நாட்களில் மந்திரவாதம் நடைபெற்றிருந்ததைப் போலவே இந்தக் காலத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று தேவனுடைய வார்த்தையும் உண்மையைப்பற்றின பலத்தசாட்சியங்களும் அறிவிக்கின்றன. பண்டைய கால மந்திரவாத முறை உண்மையில் நவீன கால ஆவிமார்க்கம் என்று எது அறியப்பட்டிருக்கிறதோ அதுவாகவே இருக்கிறது. இறந்துபோன தங்களுடைய நண்பர்களின் வேஷத்தில் தன்னை மறைத்துக்காட்டி, ஆயிரக்கணக்கான உள்ளங்களை அடைகின்ற பாதையை சாத்தான் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறான். “மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்” என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. அவர்களுடைய யோசனைகள், அவர்களுடைய அன்பு, அவர்களுடைய வெறுப்பு ஆகியவை அழிந்துபோயின. மரித்தவர்கள் உயிருள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளுவதில்லை. ஆனால் அவனுடைய ஆரம்பகாலத் தந்திரங்களின்படி மனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சாத்தான் இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். (25)

நோயுள்ள அநேகரும், இறப்பினால் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களும், அறியவேண்டும் என்ற ஆவலுள்ளவர்களும் ஆவிமார்க்கத்தின்மூலமாகப் பொல்லாத ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். இதைச்செய்ய முற்படும் அனைவரும் அபாயகரமான இடத்தில் உள்ளனர். தேவன் அவர்களை எப்படிக் கருதுகிறாரென்று சத்திய வார்த்தை அறிவிக்கின்றது. பண்டைய காலத்தில் குறிசொல்லும் அஞ்ஞானியிடம் விசாரிக்கும்படி ஒரு அரசன் ஆட்களை அனுப்பிபோது, அந்த அரசனின்மீது தேவன் கடுமையான நியாயத்தீர்ப்பைக் கூறினார். “கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான்; அப்படியே எலியா போய்ச் சொன்னான்” (2 இராஜாக்கள் 1:3,4) என்ற சாபம் கூறப்பட்டது. (26)

அஞ்ஞானமார்க்க காலத்திலிருந்த மந்திரவாதிகள், இன்றைய ஆவிமார்க்கத்திற்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் இணையாக உள்ளனர். எந்தோரிலும் எபேசுவிலும் பேசியிருந்த மறைபொருளான குரல்கள்

இன்னும் மனித இனத்தைத் தவறாக நடத்துகின்ற தங்களுடைய பொய்யின் வார்த்தைகளை உடையவைகளாக உள்ளன. நமது கண்களுக்கு முன்னுள்ள திரை உயர்த்தப்படுமானால், வஞ்சிப்பதற்காகவும் அழிப்பதற்காகவும் பொல்லாத தூதர்கள் தங்களுடைய கலைகளையெல்லாம் பயன்படுத்துவைத நம்மால் காணமுடியும். தேவனை மறக்கும்படியான செல்வாக்கு எங்கெல்லாம் செயல்படுகிறதோ அங்கெல்லாம் வஞ்சிக்கும் மந்திரத்தால் கட்டுப்படுத்தும் வல்லமையை சாத்தான் செயல்படுத்திக்கொண்டிருக்கிறான். மனிதர்கள் அவனுடைய செல்வாக்கிற்கு இணங்கும்போது, மனம் குழப்பமடைவர் என்பதை அவைகள் அறிந்துள்ளன. எபேசு சபைக்கு அப்போஸ்தலன் கொடுத்த எச்சரிப்பிற்கு இன்றுள்ள தேவனுடைய ஜனங்கள் செவிகொடுக்கவேண்டும். “கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் இவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்”—எபேசியர் 5:11. (27) ★

# 28

# வீழ்ச்சியடைந்த விக்கிரக ஆராதனை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 291–297)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 19:21–41; 20:1**

எபேசு—மூன்று வருடங்கள் பவுலின் ஊழியத்திற்கு மையமாக இருந்தது. பலுகிப் பெருகும் ஒரு சபை இங்கு எழுப்பப்பட்டது. இதிலிருந்து ஆசியாவின் பெரும் பகுதியிலிருந்த யூதருக்கும் புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் பரவியது. (1)

இப்பொழுது அப்போஸ்தலன் வேறொரு மிஷனரிப் பயணத்தை மேற்கொள்ளுவதைப்பற்றித் தியானம் செய்துகொண்டிருந்தான். "பவுல் மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம்பண்ணிக்கொண்டு" (அப்போஸ்தலர் 19:21). இந்தத் திட்டத்திற்கு இசைவாக, தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டு பேராகிய தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் மக்கெதோனியாவிற்கு அனுப்பிவிட்டு, எபேசுவிலிருந்த காரியம் இன்னும் அவனுடைய பிரசன்னத்தை வேண்டியிருந்தபடியால் பெந்தெகொஸ்தேவரை அங்கு தங்கியிருக்க முடிவுசெய்தான். அப்படியிருந்தபோதிலும், அவன் புறப்பட்டுச்செல்லுவதை துரிதப்படுத்தின ஒரு சம்பவம் விரைவில் நடந்தது. (2)

எபேசுவில் தியானாள் என்னும் பெண் தெய்வத்தைக் கனப்படுத்த வருடத்திற்கு ஒருமுறை சிறப்பான சடங்காச்சாரங்கள் நடைபெற்றிருந்தன. இவைகள் அந்த மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்த மக்களைப் பெரும் எண்ணிக்கையில் கவர்ந்திருந்தது. இந்தக் காலகட்டம் முழுவதிலும் மிக அதிகமான ஆடம்பரத்துடனும் சிறப்புடனும் விருந்தோம்பல்கள் நடைபெற்றிருந்தன. (3)

இந்தப் பண்டிகைக்காலம் புதிதாக விசுவாசத்திற்குள் வந்திருந்தவர்களைச் சோதிக்கின்ற ஒரு காலமாக இருந்தது. அங்கு நடைபெற்றிருந்த விருந்துகொண்டாட்டங்களின் பாடல்களில் திறன்னுவின் பாடசாலையில் கூடியிருந்த விசுவாசிகள் ஒரு அபஸ்வரமாக இருந்தனர். பரிகாசச்சிரிப்பு, நிந்தனைகள் அவமானங்கள் ஆகியவைகள் அவர்கள்மீது தாராளமாகக் குவிக்கப்பட்டிருந்தன. பவுலின் ஊழியங்கள் அஞ்ஞானத் தொழுகையின்மீது சொல்லக்கூடிய விதத்தில் ஒரு அடியைக் கொடுத்திருந்தது. அதன் பலனாக அந்த தேசியப் பண்டிகையில் கலந்து கொள்ளுபவர்களின் எண்ணிக்கையில் உணரக்கூடிய அளவிற்கு வீழ்ச்சியும், ஆராதனை செய்திருந்தவர்களின் உற்சாகத்தில் குறைவும் உண்டானது. அவனுடைய போதனைகளின் செல்வாக்கு உண்மையாக மனம் மாறியிருந்தவர்களையும் கடந்து சென்றிருந்தது. புதிய கோட்பாடுகளை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிராத அநேகர் தங்களுடைய அஞ்ஞான தெய்வங்களின்மீதிருந்த நம்பிக்கையனைத்தையும் இழக்கின்றவிதத்தில் அறிவூட்டப்பட்டவர்களானார்கள்! (4)

அங்கு அதிருப்திக்கான வேறொரு காரணமும் இருந்தது. தியானாளின் கோயில் அவளுடைய உருவம் ஆகியவைகளின் மாதிரியில் தயாரிக்கப்பட்டிருந்த—சிறிய புனித ஸ்தலங்களின் வடிவிலான சிற்பங்களின் உற்பத்தி, விற்பனைகளிலிருந்து அதிமான லாபத்தைத் தரக்கூடிய ஒரு வியாபாரமாக எபேசுவில் வளர்ந்திருந்தது. இந்தத் தொழிலில் ஆர்வமிக்கவர்களாக இருந்தவர்கள் அனைவரும், தங்களுடைய லாபங்கள் குறைந்துவருவதைக்கண்டு, பவுலின் ஊழியத்தினாலுண்டான வரவேற்கமுடியாத மாறுதலின்மீது குற்றஞ்சாட்டுவதற்கு ஒன்றுபட்டனர். (5)

வெள்ளியினாலான புனிதஸ்தலங்களைத் தயாரித்திருந்த தெமேத்திரியு என்பவன், “இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து: மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள். இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலேமாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள். இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான்” (அப்போஸ்தலர் 19:25–27). இந்த வார்த்தைகள் மக்களின் வெறியைத் தூண்டிவிடுவதாக இருந்தது.

"அவர்கள் இதைக் கேட்டு, கோபத்தால் நிறைந்து: எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று சத்தமிட்டார்கள்" (அப்போஸ்தலர் 19:28). (6)

இந்தப் பேச்சைப்பற்றின அறிக்கை விரைவாக சுற்றுக்கு விடப்பட்டது. "பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது" (அப்போஸ்தலர் 19:29). பவுலைத் தேடினார்கள். ஆனால் அவன் காணப்படவில்லை. இந்த ஆபத்தைப்பற்றி தகவலைப்பெற்ற அவனுடைய சகோதரர்கள் அவனை அந்த இடத்திலிருந்து அவசரமாக அனுப்பினார்கள். அப்போஸ்தலனைப் பார்க்கும்படி தூதர்கள் அனுப்பப்பட்டனர். ஒரு இரத்தசாட்சியாக மரிக்கவேண்டிய அவனுடைய நேரம் இன்னும் வரவில்லை. (7)

அவர்களுடைய கோபத்திற்குக் காரணமான பொருளைக் கண்டுபிடிக்கத் தவறிய அந்தக் கலகக்காரர்களின் கூட்டத்தார், "பவுலுக்கு வழித்துணையாய் வந்த மக்கெதோனியராகிய காயுவையும் அரிஸ்தர்க்குவையும்" இழுத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அரங்கசாலைக்குப் பாய்ந்தோடினார்கள்" அப்போஸ்தலர் 19:29. (8)

பவுல் ஒளிந்திருந்த இடம் அதிக தூரத்தில் இருக்கவில்லை. அவன் தனது அன்பான சகோதரர்களுக்குண்டான ஆபத்தை விரைவில் அறிந்தான். தனது சொந்தப் பாதுகாப்பை மறந்தவனாக அந்தக் கலகக்காரரிடத்தில் பேசுவதற்காக அவர்களிருந்த அரங்கசாலைக்கு உடனே செல்ல விரும்பினான். ஆனால் "சீடர்கள் அவனைப் போகவிடவில்லை" (அப்போஸ்தலர் 19:30). காயுவும் அரிஸ்தர்க்குவும் அந்த மக்கள் தேடியிருந்த வேட்டைப் பொருட்களாக இருக்கவில்லை. அவர்களுக்கு அபாயகரமான கெடுதல்கள் ஒன்றும் உண்டாகவில்லை. ஆனால் அப்போஸ்தலனின் வெளிரின கவலை நிரம்பிய முகம் காணப்பட்டிருந்தால், அது உடனே கலகக்காரின் வெறியை எழுப்பியிருந்திருக்கும். அவனைக் காப்பாற்றக்கூடிய குறைந்த அளவு மனித சாத்தியம்கூட இருந்திருக்காது. (9)

பவுல் இன்னும் அந்தத் திரளானவர்களிடத்தில் சத்தியத்தைத் தற்காத்துப்பேச ஆவலுள்ளவனாக இருந்தான். ஆனால் கடைசியில் அந்த அரங்கசாலையிலிருந்து வந்த எச்சரிப்பின் தூதினால் தடுத்து நிறுத்தப்பட்டான். "ஆசியாநாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவனிடத்திற்கு ஆள் அனுப்பி, அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று எச்சரித்தார்கள்"–அப்போஸ்தலர் 19:31. (10)

அந்த அரங்கசாலையில் உண்டான அமளி தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருந்தது. "சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத்

தெரியாதிருந்தது" –அப்போஸ்தலர் 19:32. பவுலும் அவனது தோழர்களும் எபிரெயர்களாய் இருக்கின்றனர் என்னும் உண்மை, அவனிலும் அவனுடைய பணியிலும் தாங்கள் அனுதாபமுள்ளவர்களாக இல்லை என்பதை வெளிப்படையாகக் காண்பிக்க யூதர்களை நடத்தியது. எனவே அவர்களுடைய காரியத்தை மக்கள்முன்வைக்க அவர்களுக்குள் ஒருவனை அவர்கள் முன்கொண்டுவந்தனர். அலெக்சாந்தர் என்னும் ஒருவனை அவர்கள் பேசுவதற்காகத் தெரிந்துகொண்டனர். அவன் அதே தொழில் செய்கிறவனும், ஒரு கன்னானாகவும் இருந்தான். இவன் பவுலுக்கு மிகுந்த தீமையை உண்டுபண்ணினதாக பவுல் பின்னர் குறிப்பிட்டான் (2 தீமோத்தேயு 4:14). அலெக்சாந்தர் திறமையுள்ள ஒருவனாக இருந்தான். மக்களுடைய கோபங்களையெல்லாம் பவுலுக்கும் அவனுடைய தோழர்களுக்கும் எதிராக முழுமையாகத் தூண்டிவிடுவதற்குத் தனத திறமைகளனைத்தையும் செலவிட்டான். ஆனால் "அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோது, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள்"–அப். நட. 19:34. (11)

தெமேத்திரியு தனது பேச்சில், "நம்முடைய தொழில் அற்றுப்போகும் படியான அபாயம் நேரிட்டிருக்கிறது" என்றான். எபேசுவில் உண்டான அமளியின் உண்மையான காரணத்தையும் அப்போஸ்தலர்களை அவர்களது பணியில் அதிகமாகத் தொடர்ந்திருந்த உபத்திரவத்தின் காரணத்தையும் இந்த வார்த்தைகள் வெளிக்காட்டியிருந்தன. தெமேத்திரியுவும் அவனது உடன் தொழிலாளர்களும், அந்தப் போதனையினாலும் சுவிசேஷம் பரவுவதனாலும், விக்கிரகங்ளை உண்டுபண்ணுகின்ற அவர்களுடைய தொழில் ஆபத்துக்குட்பட்டிருப்பதைக் கண்டனர். அஞ்ஞான ஆசாரியர்கள் கவிஞர்கள் ஆகியோரின் வருமானம் ஆபத்திற்குள்ளாகியிருந்தது. இந்தக் காரணத்திற்காகப் பவுலுக்கெதிரான அவர்களுடைய மிகவும் கசப்பான எதிர்ப்பை அவர்கள் எழுப்பினார்கள். (12)

சம்பிரதி மற்றும் அந்தப் பட்டணத்தில் மதிப்புமிக்க பதவிகளில் இருந்தவர்களின் முடிவு, பவுலைச் சட்டவிரோதமான எந்தக் காரியத்தையும் செய்யாத—குற்றமில்லாதவனாக மக்கள்முன் நிறுத்தினது. இது மூட நம்பிக்கை தவறு ஆகியவைகளுக்கெதிராகக் கிறிஸ்தவ மார்க்கம் அடைந்த மற்றொரு வெற்றியாக இருந்தது. தேவன் அவருடைய அப்போஸ்தலனை மெய்ப்பிக்கவும், கலகம் செய்யும் சந்தடிமிக்க கூட்டத்தினரைத் தடுத்து நிறுத்தவும் ஒரு நியாயாதிபதியை எழுப்பியிருந்தார். தன்னுடைய ஜீவன் பாதுகாக்கப்பட்டதற்காகவும், சந்தடிசெய்யும் எபேசு மக்களால் கிறிஸ்தவ மார்க்கம் இகழ்ச்சி அடையும்படி கொண்டுவரப்படாமல் இருந்ததற்காகவும் பவுலின் இருதயம் தேவனுக்கு நன்றி கூறியது. (13)

“கலகம் அமர்ந்தபின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக்கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டான்”– அப்போஸ்தலர் 20:1. பவுலின் இந்தப் பயணத்தின்போது, விசுவாசமிக்க எபேசிய சகோதரர்களான தீகிக்கும் துரோப்பீமும் அவனுடன் சென்றிருந்தனர். (14)

எபேசுவில் பவுலின் ஊழியங்கள் முடிவடைந்தன. அந்த இடத்தில் அவன் செய்திருந்த ஊழியங்கள் இடைவிடாத அநேக பரீட்சைகள் உள்ளதாகவும் ஆழமான மனவேதனைமிக்கவையாகவும் இருந்தன. அவன் பொது இடங்களிலும் வீடுவீடாகவும் சென்று, மிகுந்த கண்ணீருடன் உபதேசித்தும் எச்சரிப்புக்கொடுத்தும் மக்களுக்குப் போதித்தான். அவனுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டிவிடும் வாய்ப்புகளை இழக்க விரும்பாத யூதர்களால் அவன் தொடர்ச்சியாக எதிர்க்கப்பட்டிருந்தான். (15)

எதிர்ப்புக்கு எதிராக இவ்விதமாகப் போரிட்டுக்கொண்டிருந்தபோதும், களைப்படையாத வைராக்கியத்துடன் சுவிசேஷப் பணியை முன்கொண்டு சென்று, விசுவாசத்தில் இன்னும் இளமையாக இருந்த சபையின் காரியங்களைப் பாதுகாத்து, சகல சபைகளைக்குறித்த பாரத்தையும் தன்மீது சுமந்துகொண்டிருந்தான் பவுல். (16)

அவனால் நடத்தப்பட்டிருந்த சில சபைகளில் உண்டான மருளவிழுகையைக்குறித்த செய்திகள் அவனுக்குள் ஆழ்ந்த துயரத்தை உண்டுபண்ணினது. அவர்கள் சார்பாக அவன் செய்த முயற்சிகள் வீணாகிவிடக்கூடும் என்று அவன் பயந்தான். அவனுடைய பணிக்கு எதிராகச் செய்யப்பட்ட வேலைக்குப் பயன்படுத்தப்பட்ட உபாயங்களை அவன் அறிந்தபோது, உறக்கமற்ற ஜெபத்திலும் அக்கறைமிக்க சிந்தனையிலும் அநேக இரவுகள் செலவிடப்பட்டன. வாய்ப்பு கிடைத்ததினாலும், அவர்களுடைய நிலைப்பாட்டின் அவசியத்தினாலும், கடிந்துகொண்டு ஆலோசனை, எச்சரிப்பு, மற்றும் தைரியங்கொடுக்கிற கடிதங்களை அவன் சபைகளுக்கு எழுதினான். இந்தக் கடிதங்களில் அப்போஸ்தலன் தனது சொந்தப் பரீட்சைகளைப்பற்றிக் கூறாமலிருந்தபோதிலும், அவனது ஊழியங்களும், கிறிஸ்துவின் காரியத்திலுண்டான பாடுகள்பற்றிய பார்வைகளும் எப்போதாவது காணப்படுகின்றன. அடிகளும், சிறைவாசமும், குளிரும், பசியும், தாகமும், வனாந்தரத்திலும், தனது சொந்த ஜனங்களினாலும் அஞ்ஞானிகளாலும், கள்ளச்சகோதரர்களாலும் உண்டான பாடுகளனைத்தையும் சுவிசேஷத்திற்காக அவன் தாங்கிக்கொண்டான். அவன் இகழப்பட்டான்; நிந்திக்கப்பட்டான். பிரயாசத்திலும் வருத்தத்திலும் பசியிலும் தாகத்திலும் மரண அவதியிலும் கலகத்திலும் ஒவ்வொரு

பக்கத்திலும் துன்பப்பட்டு, எப்பொழுதும் இயேசுவிற்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவனாக இருந்தான். (17)

எதிர்ப்பு என்னும் தொடர்ச்சியான புயலுக்கிடையில், எதிரிகளின் அமளிகளுக்கிடையில், நண்பர்களின் பிரிவுகளுக்கிடையில் அஞ்சாத அப்போஸ்தலன், ஏறத்தாழ அவனுடைய இருதயத்தை இழந்திருந்தான். ஆனால் கல்வாரியைத் திரும்பிப் பார்த்து, புதிய வைராக்கியத்துடன் சிலுவையிலறையப்பட்டவரைப்பற்றின அறிவைப் பரப்ப முன்சென்றான். அவனுக்கு முன்பாகக் கிறிஸ்து நடந்துசென்றிருந்த இரத்தக்கறை படிந்த பாதையில் அவன் நடந்துகொண்டிருந்தான். தனது மீட்பரின் பாதத்தில் தனது போர்க்கவசத்தை வைக்கும்வரை அந்தப் போரிலிருந்து விடுபட அவன் வகைதேடாதிருந்தான். (18) ★

# 29

# சபைகளுக்கேற்ற சத்திய ஆலோசனைகள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 298–308)**
**திருவசன ஆதாரம் : 1 கொரிந்தியர் 1–16**

பவுல் அப்போஸ்தலன் எபேசு சபையில் தங்கியிருந்த காலத்தின் பிற்பகுதியில் கொரிந்து சபைக்கு தனது முதலாம் நிருபத்தை எழுதினான். ஏனெனில் கொரிந்து சபை விசுவாசிகளைவிட மற்றெவரிடத்திலும் அவன் ஆழ்ந்த ஆர்வத்தை உடையவனாகவும் களைப்பில்லாத முயற்சிகளைச் செய்பவனாகவும் இருக்கவில்லை. ஒன்றரை வருடங்கள் அவன் அவர்களுக்கிடையில் ஊழியஞ்செய்திருந்தான். அவர்களுடைய இரட்சிப்பிற்கான ஒரே உபாத்தியாக இருக்கும்—சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, மாற்றஞ்செய்யும் அவரது கிருபையின் வல்லமையின்மீதுள்ள உள்ளடக்கமான பொருட் செறிவைச் சார்த்திருக்கும்படி வற்புறுத்தியிருந்தான். தங்களைக் கிறிஸ்தவ விசுவாசத்திலுள்ளவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தவர்களைச் சபையின் உறவுக்குள் கொண்டுவருவதற்குமுன், அவர்களுக்குக் கிறிஸ்தவ விசுவாசியின் சலுகைகளையும் கடமைகளையும்பற்றிச் சிறப்பாகப் போதிப்பதற்கும் அவன்மிகுந்த கவனமுள்ளவனாக இருந்தான். அவர்களுடைய ஞானஸ்நான பிரதிக்கினையின்மீது அவர்கள் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதற்கும் உதவ அவன் அக்கறையுடன் முயன்றிருந்தான். (1)

வஞ்சிக்கவும் கண்ணியிலகப்படுத்தவும் தொடர்ச்சியாக வகைதேடிக் கொண்டிருக்கும் தீமையின் ஏதுகரங்களுடன் ஒவ்வொரு ஆத்துமாவும் நடத்தவேண்டியதாகவுள்ள போரைப்பற்றி பவுல் தெளிவான உணர்வை உடையவனாக இருந்தான். விசுவாசத்தில் இளமையானவர்களாக

இருந்தவர்களைப் பலப்படுத்தவும் ஸ்திரப்படுத்தவும் அவன் களைப்பில்லாமல் பணியாற்றியிருந்தான். அவர்கள் தங்களை முற்றிலுமாகத் தேவனிடம் கொடுக்கும்படி அவன் மன்றாடியிருந்தான். ஏனெனில் இவ்விதமான சரணாகதியை அடைய ஆத்துமா தவறிவிடும்போது—பாவத்தை விட்டுவிடாத போது, உணவின்மீதுள்ள ஆசைகளும் வெறிகளும் மேலாதிக்கஞ்செய்ய மேலும் முயலுகின்றன; சோதனைகள் மனச்சாட்சியைக் குழப்பிவிடுகின்றன என்பதை சாத்தான் அறிந்திருந்தான். (2)

சரணடைதல் பூரணமானதாக இருக்கவேண்டும். கர்த்தருக்குப் பூரணமாக இணங்குகின்ற—பலவீனமான சந்தேகப்படுகின்ற போராடுகின்ற ஆத்துமா வெற்றியை அடைய, அதைத் தகுதிப்படுத்துகின்ற ஏதுகரங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும்படி வைக்கப்படுகிறது. பரலோகம் அவனுக்கருகில் இருக்கிறது. அவன் தனது ஒவ்வொரு சோதனையின் நேரத்திலும் அவசியத்தின்போதும், தேவதூதர்களின் ஆதரவையும் உதவியையும் உடையவனாக இருக்கிறான். (3)

விக்கிரக ஆராதனை மற்றும் மிகவும் கவர்ந்து இழுக்கின்ற வடிவையுடைய புலன்களின் இன்பங்கள் ஆகியவைகளால் கொரிந்து சபை அங்கத்தினர்கள் சூழப்பட்டிருந்தனர். அப்போஸ்தலன் அவர்களுடனிருந்தபோது, இந்த வல்லமைகள் அவர்கள்மீது செல்வாக்கில்லாதவையாக இருந்தன. பவுலின் உறுதியான விசுவாசமும், ஊக்கமான ஜெபங்களும் அக்கறைமிக்க வார்த்தைகளையுடைய உபதேசங்களும், பாவஇன்பங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதைவிட கிறிஸ்துவிற்காக சுயத்தை மறுப்பதற்கு அவர்களுக்கு உதவிசெய்திருந்தன. (4)

அப்படியிருந்திருந்தபோதிலும், பவுல் புறப்பட்டுச்சென்றபின் அனுகூல மற்ற நிலைமைகள் எழுந்தன. சத்ததுருவினால் விதைக்கப்பட்டிருந்த களைகள் கோதுமைக்கிடையில் தோன்றி, தீமையின் கனிகளைக்கொடுக்க, பரீட்சையின் நேரமாக இருந்தது அது. அவர்களுடைய பேரார்வத்தை எழச்செய்து, தேவனுடன் இசைவான ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கான அவர்களுடைய முயற்சிகளில் அவர்களுக்கு உதவ, அதற்குமேல் அப்போஸ்தலன் அவர்களுடன் இருக்கவில்லை. அநேகர் கொஞ்சங்கொஞ்சமாகக் கவனமற்ற வர்களாகி, இயற்கையின் சுவைகளும் ஆசைகளும் அவர்களைக் கட்டுப்படுத்த அனுமதித்தார்கள். தூய்மையென்னும் மேலான நோக்கத்திற்கும் நேர்மைக்கும் அடிக்கடி அவர்களை வற்புறுத்தியிருந்தவன், அவர்களுடன் இருக்கவில்லை. தங்களுடைய மாற்றத்தின் நேரத்தில் தீய பழக்கங்களை விட்டிருந்து, பின்பு கீழ்த்தரமாக்கும் அஞ்ஞானமார்க்கத்தின் பாவங்களுக்கு திரும்பினவர்கள், ஒரு சிலராக மட்டும் இருக்கவில்லை. (5)

தீய ஒழுக்கத்தில் தொடரும் அங்கத்தினருடன் கூட்டுச்சேரக் கூடாது என்று பவுல் சபையைச் சுருக்கமாக எச்சரித்து எழுதியிருந்தான். ஆனால் விசுவாசிகளில் அநேகர் பவுலின் அர்த்தத்தைத் திரித்து, அவனது வார்த்தைகளில் இருபொருள்கொண்டு, அவனுடைய போதனைகளைக் கருதாமல் போனதற்காகத் தங்களுக்குள் சாக்குப்போக்குக் கூறிக்கொண்டனர். (6)

கொரிந்து சபையினர் அவர்களுக்கிடையிலிருந்த சாவுக்கேதுவான பாவங்களைப்பற்றி ஒன்றும் கூறாமல், பல காரியங்களைப்பற்றி ஆலோசனை கேட்டு, அவனுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தனர். சபையின் உண்மையான நிலைமை மறைத்துவைக்கப்பட்டிருந்ததென்றும், இந்தக் கடிதம் அதை எழுதினவர்களின் சொந்த நோக்கங்களுக்குப் பயன்படும்விதத்தில் பொருள்கொள்ளக்கூடிய ஒரு அறிக்கையை அவனிடமிருந்து பெறுகின்ற முயற்சியாக இருந்தது என்றும் அவன் ஆவியானவரால் வலிமையுடன் உணர்த்தப்பட்டான். (7)

இந்த நேரத்தில் கொரிந்துவில் புகழ்வாய்ந்ததாக இருந்த குலோவேயாளின் குடும்பத்தினர்கள் எபேசுவிற்கு வந்தனர். பவுல் சபையின் நிலைமையைக்குறித்து அவர்களிடம் விசாரித்தபோது, சபை பிரிவினைகளால் பிரிந்துள்ளது என்று அவர்கள் கூறினார்கள். அப்பொல்லோவின் சந்திப்பின்மீது உண்டாகியிருந்த பிரிவினை மிகவும் அதிகரித்திருந்தது. தவறான ஆசிரியர்கள் பவுலின் போதனைகளை அவமதிக்கும்படி அங்கத்தினர்களை நடத்தியிருந்தனர். சுவிசேஷத்தின் கோட்பாடுகளும் தற்காலிகச் சட்டங்களும் திரிபுசெய்யப்பட்டிருந்தன. ஒரு சமயத்தில் கிறிஸ்தவ வாழ்க்கையில் பேரார்வம் உடையவர்களாக இருந்தவர்களுக்கிடையில் அகந்தை, விக்கிரக ஆராதனை, பாலியல் நுகர்ச்சி ஆகியவை அதிகரித்துக்கொண்டே இருந்தன. (8)

இந்தச்சித்திரமும் அவனுக்குமுன் காட்டப்பட்டபோது, அவன் மிக அதிகமாக பயந்தவைகள் அதிகமான அளவில் நடந்துவிட்டன என்பதைப் பவுல் கண்டான். ஆனால் அதன் காரணமாக அவனது ஊழியம் தோல்வியானதாக இருந்தது என்னும் எண்ணத்திற்கு அவன் இடங்கொடுக்கவில்லை. இருதயத்தின் வேதனையுடனும் அதிகமான கண்ணீருடனும் அவன் தேவனிடத்திலிருந்து ஆலோசனையைத் தேடினான். பின்பற்றப்படவேண்டிய காரியம் ஞானமானதாக இருந்திருந்தால் அவன் உடனே சந்தோஷத்துடன் கொரிந்துவைச் சந்தித்திருப்பான். இப்போதிருந்த அவர்களுடைய நிலைமையில் அவனுடைய ஊழியத்தினால் விசுவாசிகள் பயனடையமாட்டார்கள் என்பதை அவன் அறிந்து, பின்னர் அவன் தானே

சந்திப்பதற்கான ஒரு பாதையை ஆயத்தஞ்செய்வதற்காகத் தீத்துவை அனுப்பிவைத்தான். அதன் மாறுபட்ட திரிபுகளை வெளிப்படுத்தியிருந்தவர்களின் நடத்தையைப்பற்றி அவனுடைய சொந்த உணர்ச்சிகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, அவனது நிருபங்களனைத்திலும் மிகுந்த பலமுள்ள மிகவும் வல்லமையுள்ள ஒரு நிருபத்தை கொரிந்து சபைக்கு எழுதினான். (9)

சபையால் கொண்டுவரப்பட்ட பலவிதமான கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், செவிசாய்த்தால் அவர்களை மேலான ஆவிக்குரிய அந்தஸ்திற்கு உயர்த்தக்கூடிய பொதுவான கொள்கைகளை முன்வைக்கவும், மிகக் குறிப்பான தெளிவுடன் அவன் தொடங்கினான். அவர்கள் ஆபத்தில் இருந்தனர். நெருக்கடியான இந்த நேரத்தில் அவர்களுடைய இருதயங்களைச் சென்றடையத் தவறுவதைப்பற்றின எண்ணத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்குள்ள அபாயங்களைப்பற்றி விசுவாசத்துடன் அவன் அவர்களை எச்சரித்து, அவர்களுடைய பாவங்களுக்காக அவர்களைக் கடிந்துகொண்டான். அவன் மறுபடியும் கிறிஸ்துவை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, அவர்களுடைய ஆரம்பகால பக்தியை அவர்களிடம் மீண்டும் புதிதாக பற்றியெரியச்செய்திட வகைதேடினான். (10)

அப்போஸ்தலனின் சபைக்கான மென்மைமிக்க வாழ்த்துதலில் கொரிந்து விசுவாசிகளிடம் அவனுக்கிருந்த பெரிய அன்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. விக்கிரக ஆராதனையிலிருந்து அவர்கள் உண்மையான தேவனை ஆராதிப்பதற்கும் அவருக்குச் சேவை செய்வதற்கும் திரும்பினபோது உண்டான அவர்களுடைய அனுபவத்தை அவன் குறிப்பிட்டான். அவர்களுக்கு ஈவாகக் கிடைத்திருந்த பரிசுத்த ஆவியைப்பற்றி அவர்களுக்கு நினைவூட்டி, கிறிஸ்துவின் தூய்மையையும் பரிசுத்த தன்மையையும் அடையும்வரை கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறிச்செல்லுவது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகை என்பதையும் காட்டினான். “அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர் களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்” (1 கொரிந்தியர் 1:7,8) என்று அவன் எழுதினான். (11)

கொரிந்து சபையில் எழும்பியிருந்த பிரிவினையைப்பற்றிப் பவுல் வெளிப்படையாகப் பேசி, கலகம்செய்வதை நிறுத்தும்படி அவன் அங்கத்தினர்களுக்கு உபதேசம் செய்தான். “சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்"–1 கொரிந்தியர் 1:10. (12)

சபையில் உள்ள பிரிவினைகளைப்பற்றி அது எவ்விதமாக எவரால் அவனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகின்ற சுயாதீனத்தை அப்போஸ்தலன் உணர்ந்திருந்தான். "ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது" (1 கொரிந்தியர் 1:11) என்றும் குறிப்பிட்டிருந்தான். (13)

பவுல் ஆவியின் ஏவுதலை உடைய ஒரு அப்போஸ்தலனாக இருந்தான். மற்றவர்களுக்கு அவன் போதித்திருந்த சத்தியங்களை அவன் வெளிப்படுத்தலினால் பெற்றிருந்தான். அப்படியிருந்தபோதிலும், கர்த்தர் எல்லா நேரத்திலும் அவருடைய மக்களின் நிலைமையை நேரடியாக வெளிப்படுத்தவில்லை. இந்த எடுத்துக்காட்டுதலில் கொரிந்து சபையின் முன்னேற்றத்தில் விருப்பமுள்ளவர்களாக இருந்தவர்களும், தீமை சபைக்குள் நுழைவதைக் கண்டிருந்தவர்களும், அந்தக் காரியத்தை அப்போஸ்தலன்முன் வைத்தனர். தெய்வீக வெளிப்படுத்துதல்களினால் அவன் முன்பு பெற்றிருந்தவைகளிலிருந்து இந்த மாறுதலின் காரணங்களை நிதானிக்க ஆயத்தமாயிருந்தான். அந்தச் சிறப்பான நேரத்திற்காகக் கர்த்தர் ஒரு புதிய வெளிப்படுத்தலை அவனுக்குக் கொடுக்கவில்லையென்ற உண்மையுடன் மட்டுமன்றி உண்மையாகவே ஒளியைத் தேடிக்கண்டிருந்தவர்கள் அவனுடைய தூதைக் கிறிஸ்துவின் சிந்தை என்பதைப்போல ஏற்றுக்கொண்டனர். சபைகளில் உண்டாகக்கூடிய கஷ்டங்களையும் அபாயங்களையும் கர்த்தர் அவனுக்குக் காட்டியிருந்தார். இந்தத் தீமைகள் முன்னேறினபோது அப்போஸ்தலன் அவைகளின் முக்கியத்தை இனம் கண்டிருந்தான். சபையைப் பாதுகாப்பதற்காக அவன் ஏற்படுத்தப்பட்டிருந்தான். தேவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டிய ஒருவனாக அவன் ஆத்துமாக்களைக் காவல் செய்யவேண்டியவனாக இருந்தான். அவர்களுக்கிடையிலிருந்த அராஜகம் பிரிவினைகள் ஆகியவைகளைப்பற்றிய அறிக்கைகளை கவனிக்கவேண்டியது அவனுக்குப் பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருக்கவில்லயா? மிக நிச்சயமாகவே, அவர்களுக்கு அவன் அனுப்பின கண்டனங்கள் அவன் எழுதியிருந்த மற்ற எந்த நிருபத்தையும்போல தேவனுடைய ஆவியின் ஏவுதலின்கீழ் எழுதப்பட்டதாக இருந்தது. (14)

அவனுடைய உழைப்பின் கனியை அழிக்க வகைதேடியிருந்த தவறான ஆசிரியர்களைப்பற்றி அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை. சபையில் நிலவியிருந்த இருள், பிரிவினை ஆகியவைகளால் சிலர் சத்தியத்திலிருந்து

முற்றிலுமாக விலகிவிடுவார்கள் என்று பயந்து, அவன் அப்படிப்பட்ட குறிப்பிடுதல்களினால் அவர்கள் எரிச்சலடைவதைச் சகித்திருந்தான். ஒரு ஞானமிக்க சிற்பாசாரி போட்ட அஸ்திவாரத்தின்மீது மற்றவர்கள் கட்டியிருந்ததைப்போல அவர்களுக்கிடையில் அவன் செய்திருந்த அவனது சொந்த வேலையில் அவனுடைய கவனத்தை அழைத்தான். ஆனால் அதன் காரணமாக அவன் தன்னை உயர்த்தாமல், “நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம் என்று அறிவித்தான்” (1 கொரிந்தியர் 3:9). அவன் தனது ஞானத்தின்மீது உரிமைபாராட்டாமல், தேவனுக்குப் பிரியமானவிதத்தில் சத்தியத்தை முன்வைக்க தெய்வீக வல்லமை ஒன்று மட்டுமே அவனைத் தகுதிப்படுத்தியது என்பதை ஒப்புக்கொண்டான். ஆசிரியர்களுக்கெல்லாம் பெரியவராக உள்ள கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு, எல்லா வகுப்பினரின் அவசியங்களையும் சந்தித்திருந்ததும், எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும், எல்லா நிலைமைகளின்கீழும் பொருத்தப்படக்கூடியதாக இருந்ததுமான தெய்வீக ஞானத்தைப் போதிக்க பவுல் தகுதிப்படுத்தப்பட்டிருந்தான். (15)

கொரிந்து விசுவாசிகளுக்கடையில் உண்டான தீமைகளில் மிகவும் கொடுமையானது: அவர்கள் அஞ்ஞான மார்க்கத்தின் மிகவும் கீழ்த்தரமான சம்பிரதாயங்களுக்குத் திரும்பியதாகும். முன்னர் மனம் மாறியிருந்த ஒருவனுடைய சிற்றின்பப்பற்றுமிக்க நடத்தை, புறஜாதி உலகத்தால் பற்றிக்கொள்ளப்பட்டிருந்த சன்மார்க்க நெறியின் தரத்தைவிடக் கீழான மீறுதலாக இருக்குமளவிற்கான பின்னிட்டு விழுகையாக இருந்தது. அந்தத் துன்மார்க்கமான மனிதனை அவர்களுக்கிடையிலிருந்து நீக்கும்படி அப்போஸ்தலன் சபையிடம் பரிந்து பேசினான். “கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?” (1 கொரிந்தியர் 5:6) என்று அவர்களை எச்சரித்தான். (16)

சபையில் எழும்பியிருந்த மற்றொரு சாவுக்கேதுவான தீமை: சகோதரர்கள் ஒருவருக்கெதிராக ஒருவர் வழக்காடுவதாக இருந்தது. விசுவாசிகளுக்கிடையில உண்டாகக்கூடிய கஷ்டங்களுக்குத் தீர்வுகாண ஏராளமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட காரியங்களை எப்படித் தீர்க்கவேண்டும் என்பதைப்பற்றிக் கிறிஸ்து தாமே வெளிப்படையான உபதேசத்தைக் கொடுத்திருக்கிறார். “உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே

சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"–மத்தேயு 18:15–18. (17)

இந்த வெளிப்படையான ஆலோசனைக்குப் பார்வையை இழந்தவர்களாக இருந்த கொரிந்து விசுவாசிகளுக்கு நிச்சயமில்லாத நிபந்தனைகளையும் எச்சரிக்கைகளையும் கடிந்துகொள்ளுதலையும் பவுல் எழுதவில்லை. "உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளாக்கூடாதிருக்கிறது எப்படி? இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான். நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை? நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?" (1 கொரிந்தியர் 6:1–9) என்று அவர்களை எச்சரித்துக் கடிந்துகொண்டான். (18)

நம்பிக்கையின்மை, விலகிச்செல்லுதல், வன்மம் ஆகியவைகளை தேவனுடைய மக்களுக்கிடையில் அறிமுகம்செய்ய சாத்தான் தொடர்ச்சியாக

வகைதேடிக்கொண்டிருக்கிறான். உண்மையான காரணம் இல்லாமல் இருக்கும்போதுங்கூட நமது உரிமைகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன என்று நாம் உணரும்படி அடிக்கடி தூண்டப்படுவோம். கிறிஸ்துவின்மீதும் அவரது காரியத்தின்மீதும் உள்ள அன்பைவிட சுயத்தின்மீது பலமான அன்பை உடையவர்கள், தங்களுடைய சொந்த விருப்பத்தை முதலாவதாக வைத்து, அவைகளைக் காக்கவும் நிலைநிறுத்தவும் அவசியமான எதையும் செய்கிற சந்தர்ப்பத்திற்கு முற்படுவார்கள். மன உணர்த்துதலுள்ள கிறிஸ்தவர்களாகத் தோற்றமளிப்பவர்களுங்கூட அகந்தையினால் இடையூறு செய்யப்பட்டு, தன்னைப்பற்றிய உயர்வான எண்ணத்தில் இருந்துகொண்டு, எவர்கள் தவறில் இருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்களோ, அவர்களிடத்திற்கு தனிப்பட்ட விதத்தில் கிறிஸ்துவின் ஆவியுடன் சென்று அவர்களுடன் பேசி, ஒருவருக்காக மற்றவர்கள் ஜெபிக்கலாம் என்று எண்ணுகின்றனர். தங்களுடைய சகோதரர்களால் காயப்படுத்தப்பட்டுவிட்டோம் என்று தங்களுக்குள் நினைப்பவர்களில் சிலர், இரட்சகரின் சட்டத்தைப் பின்பற்றுவதற்குப்பதிலாக, சட்டத்தினிடத்திற்கு (நீதிமன்றங்களுக்குச்) செல்லுகிறார்கள். (19)

சபை அங்கத்தினர்களுக்கிடையில உண்டாகக்கூடிய வேற்றுமைகளைப் பரிகரிப்பதற்காக சமூக நீதிமன்றங்களில் முறையீடு செய்யக்கூடாது. அப்படிப்பட்ட வேற்றுமைகளை அவர்கள் தங்களுக்குள்ளேயே கிறிஸ்தவ உபதேசங்களுக்கு இசைவானவிதத்தில் பரிகரிக்கவேண்டும். அநீதி இழைக்கப்பட்டிருந்தாலுங்கூட, தாழ்மையும் எளிமையுமான இயேசுவைப் பின்பற்றுபவன், சபையிலுள்ள தனது சகோதரர்களின் பாவங்களை உலகத்திற்குமுன் திறந்துகாட்டுவதைவிட, தானே ஏமாற்றத்தைச் சகித்துக்கொள்ளவேண்டும். (20)

சகோதரர்களுக்கிடையிலுண்டாகக்கூடிய சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகள் சத்தியத்திற்கு ஒரு நிந்தனையைக் கொண்டுவருவதற்கான காரணமாக அமைகின்றது. ஒருவருக்கொருவர் எதிராக நீதிமன்றத்திற்குச் செல்லும் கிறிஸ்தவர்கள், சபையின் எதிரிகளால் பரிகாசமாகச் சிரிக்கப்படுவதற்கு இடங்கொடுத்து, அந்தகார வல்லமைகள் வெற்றியடையக் காரணமாகின்றனர். அவர்கள் கிறிஸ்துவைப் புதிதாகக் காயப்படுத்தி, அவர்களை வெளியரங்கமாக வெட்கத்திற்குள்ளாக்குகின்றனர். சபையின் அதிகாரத்தை அறியாதவர்கள்போலிருந்து அவர்கள் சபைக்கு அதிகாரத்தைக் கொடுத்த தேவனுக்கு வெட்கத்தை உண்டுபண்ணுகின்றனர். (21)

கொரிந்தியர்களுக்கு எழுதின இந்த நிருபத்தில், அவர்களைத் தீமையினின்று காக்கக்கூடிய கிறிஸ்துவின் வல்லமையை அவர்களுக்குக் காட்ட பவுல் முயன்றான். முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அவர்கள்

இணங்குவார்களானால் வல்லமைமிக்க ஒருவரின் பலத்தில் அவர்கள் பலமுள்ளவர்களாக இருப்பார்கள். பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து அவர்களை விடுவிக்க உதவும் ஒரு உபாத்தியாகவும் கர்த்தருக்குப் பயப்படுவதினால் உண்டாகும் பரிசுத்தத்தின் பூரணத்தை அடைய அவர்களுக்கு உதவவும், அவர்கள் மனம்மாறின நேரத்தில் அவர்களுடைய உயிர்களை எவருக்கென்று பிரதிஷ்டை செய்திருந்தார்களோ, அவரது உரிமைகளை அவர்கள்மீது வற்புறுத்தினான். “ உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்”–1 கொரிந்தியர் 6:19,20. (22)

தூய்மையும் பரிசுத்தமுமிக்க ஒரு வாழ்க்கையிலிருந்து அஞ்ஞானமார்க்கத்தின் அழிவுக்குரிய பழக்கங்களுக்குத் திரும்பும்போது உண்டாகக்கூடிய பலனை அவன் வெளிப்படையாக விவரித்தான். “நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?” (1 கொரிந்தியர் 3:16) என்று கேட்டான். (23)

மேலான நுண்ணறிவின் ஈவுகளை உடையவனாகப் பவுல் இருந்தபோது, அவனுடைய வாழ்க்கை அபூர்வமான ஞானத்தை வெளிப்படுத்தினது. இது அவனுக்கு அகப்பார்வையின் விரைவையும் இருதயத்தின் அனுதாபத்தையும் கொடுத்து, அவனை மற்றவர்களுடன் நெருக்கமான உறவை உடையவனாகக் கொண்டுவந்து, அவர்களுடைய இயற்கையான தன்மையை எழுப்பவும், ஒரு மேலான வாழ்க்கைக்கென்று முயலும்படி அவர்களைத் தூண்டவும் தகுதிப்படுத்தினது. அவனுடைய இருதயம் கொரிந்திய விசுவாசிகளின்மீதுள்ள அக்கறைமிக்க அன்பினால் நிறைந்திருந்தது. சோதனைக்கெதிராக அவர்களைப் பலப்படுத்தக்கூடிய உள்ளான பக்தியின் வெளிப்படுத்தலை அவர்கள் பார்க்கவேண்டுமென்றும் அவன் ஏங்கினான். கிறிஸ்தவப் பாதையில் எடுத்துவைக்கின்ற ஒவ்வொரு அடியிலும் அவர்கள் எதிர்க்கப்படுவார்கள் என்பதையும், அவர்கள் நாள்தோறும் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். திருட்டுத்தனமாக சமீபிக்கும் சத்துருவுக்கு எதிராகவும், பழைய சுபாவங்களையும் இயற்கையான விருப்பங்களையும் பின்னாகத் தள்ளவும், எப்பொழுதும் விழித்திருந்து ஜெபிக்கவும், அவர்கள் தங்களைக் காக்கவேண்டியவர்களாக இருக்கவேண்டும். அதிகமான ஜெபத்தினாலும்

தொடர்ச்சியாக விழித்திருப்பதினாலும் மட்டுமே மேலான கிறஸ்தவத் தன்மையை அடையமுடியும் என்பதைப் பவுல் அறிந்திருந்தான். இதை அவர்களுடைய மனங்களில் பதியவைக்க அவன் முயன்றிருந்தான். ஆனால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவில், ஆத்துமாவை மாற்றம்செய்ய அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்பட்டிருந்ததையும் தெய்வீகமாக சுவீகாரம் செய்யப்பட்டிருந்ததினால் தீமையின் சோதனைகள் அனைத்தையும் தடுக்க அவைகள் தகுதிப்படுத்தும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். சத்துருவின் தாக்குதலை ஒரு பக்கமாகத் திருப்ப, தேவன்மீதுள்ள விசுவாசம் போர்க்கவசமாகவும், அவரது வார்த்தை போரின் ஆயுதமாகவும் இருந்து, அவர்களைத் தகுதிப்படுத்த உள்ளான வல்லமையும் அவர்களுக்கு விநியோகிக்கப்படும். (24)

தேவனுடைய காரியங்களில் கொரிந்து விசுவாசிகளுக்கு ஒரு ஆழமான அனுபவம் அவசியமாக இருந்தது. அவனுடைய மகிமையைக் காண்பதென்றால் அதன்பொருள் என்ன என்பதையும், சுபாவத்திலிருந்து சுபாவத்திற்கு மாறுவது என்றால் என்ன என்பதையும், அவர்கள் முழுமையாக அறியாதவர்களாக இருந்தனர். அதிகாலையில் உதித்திருந்த மகிமையின் முதற்கதிர்களை மட்டுமே அவர்கள் கண்டிருந்தனர். எவருடைய புறப்படுதல் காலையைப்போல் ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்ததுவோ, அதை அறிவதற்குப் பின்தொடர்ந்து, அவர்கள் தேவனின் பூரணமனைத்திலும் நிரப்பப்படவேண்டும் என்பதும், ஒரு பூரணமான சுவிசேஷ விசுவாசத்தின் மத்தியான வேளைக்குள் வரும்வரை அவரைப்பற்றி அறிவதில் அவர்கள் தொடர்ந்துகொண்டிருக்கவேண்டும் என்பதும் பவுலின் விருப்பமாக இருந்தது. (25) ★

# 30

# ஒரு உயர்ந்த நிலையை அடைய அழைக்கப்படுதல்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 309–322)**
**திருவசன ஆதாரம் : 1 கொரிந்தியர் 1–16**

உறுதியான சுயகட்டுப்பாடு, கண்டிப்பான இச்சையடக்கம் கிறிஸ்துவின் பணியில் உள்ள சோர்வுராத பேரார்வம் ஆகியவைகளின் முக்கியத்தை கொரிந்து சபை விசுவாசிகளின் உள்ளங்களில் மிகத் தெளிவாக உணர்த்திக்காட்டவேண்டுமென்ற நம்பிக்கையுடன், பவுல், அவர்களுக்கு எழுதின நிருபத்தில் கிறிஸ்தவப் போராட்டத்திற்கும், கொரிந்துவுக்கு அருகில் இடவெளிகளுடன் அவ்வப்போது கொண்டாட்டமாக நடைபெற்றிருந்த குறிப்பான ஓட்டப்பந்தயத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமையை ஒப்பிட்டு எழுதினான். கிரேக்கர்களுக்கும் ரோமர்களுக்கும் இடையில் எழுதப்பட்டிருந்த விளையாட்டுக்கள் அனைத்திலும் ஓட்டப்பந்தயம் மிகவும் பழமையானதாகவும் மிக மேலாகவும் மதிக்கப்பட்டிருந்தது. அரசர்கள், மேன்மக்கள், நாட்டுப்பெரியோர்கள் ஆகிய அனைவரும் அவைகளைக் கண்டிருந்தனர். வெற்றிப்பரிசை அடைவதற்குத் தேவையான முயற்சி அல்லது ஒழுக்கம் ஆகியவைகளிலிருந்து ஒருவரும் பின்வாங்கவில்லை. (1)

இந்தப் போட்டிகள் மேல்முறையீடு செய்யமுடியாத கட்டுப்பாடு களினால்—விதிகளினால் நிர்வாகிக்கப்பட்டிருந்தன. பரிசு பெறுவதற்கான போட்டிகளில் தங்களது பெயர்களைப் பதிவுசெய்ய விரும்பியிருந்தவர்கள் முதலில் ஒரு கடுமையான ஆயத்தப் பயிற்சிக்குக் கீழ்ப்படவேண்டியவர்களாக இருந்தனர். தீமை பயக்கும் உணவுப்பழக்கம் அல்லது மன உடல் வலிமைகளைக் குறைக்கும் நடத்தை ஆகியவை மிகக் கடுமையாகத் தடைசெய்யப்பட்டிருந்தன. பலம், வேகம் ஆகிய இரண்டையும் கொண்டுள்ள

இந்தச் சோதனை ஓட்டங்களில் ஒருவனுக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டாகவேண்டுமானால் தசைகள் பலமுள்ளவைகளாகவும், எளிதில் வளையக்கூடியதாகவும், நரம்புகள் நல்ல கட்டுப்பாட்டிலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு அசைவும் நிச்சயமுள்ளதாகவும், ஒவ்வொரு அடியும் விரைவானதாகவும் தடுமாற்றம் இல்லாததாகவும் இருக்கவேண்டும். உடல் வலிமை அதன்மேலான நிலைமையை அடையவேண்டும். (2)

காத்துக்கொண்டிருந்த திரளானவர்களுக்குமுன் பந்தயத்தில் போட்டியிடுபவர்கள் தோன்றினபோது, அவர்களுடைய பெயர்கள் முன்னறிவிக்கப்பட்டதுடன் அந்தப் பந்தயத்தின் சட்டங்கள் தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்தன. அப்பொழுது பார்த்துக்கொண்டிருந்தவர்களின் குறிப்பான கவனத்தால் உற்சாகமூட்டப்பட்டதினால், வெற்றியடைய வேண்டு மென்ற தீர்மானத்துடன் அவர்களனைவரும் ஒன்றுசேர்ந்து புறப்பட்டனர் (ஓடத்தொடங்கினர்). பந்தயத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை கவனிப்பதற்காகவும் உண்மையான வெற்றி வீரனுக்குப் பரிசளிக்கவும் நீதிபதிகள் இலக்கிற்கு அருகில் அமர்ந்திருந்தனர். ஒரு மனிதன் சட்டத்திற்குப் புறம்பாக அனுகூலத்தை எடுத்துக்கொண்டு இலக்கை முதலாவதாகச் சென்றடைந்தால் அவனுக்குப் பரிசளிக்கப்பட்டிருக்கவில்லை. (3)

இந்தப் போட்டிகளில் பெரும் துணிச்சலான பொறுப்புகள் இருந்தன. சிலர் உடலின் பயங்கரமான, அளவுக்கு மீறிய சரீர முயற்சியில் இருந்து ஒருபோதும் மீளவில்லை. ஓட்டத்திற்கு இடையில் மனிதர்கள் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் சிந்தி, சில சமயங்களில் ஒரு போட்டியாளன் பரிசைப் பற்றிக்கொள்ளப்போகின்ற நேரத்தில் இறந்துவிழுவதும் அசாதாரண மானதாக இருக்கவில்லை. வெற்றிபெறுபவனுக்கு அளிக்கப்பட்ட வெகுமதி யின் கனத்திற்காக, ஓடுவதில் ஏற்படும் வாழ்நாள் முழுவதும் இருக்கக்கூடிய காயமோ மரணமோகூட ஆபத்தான நிலையாகப் பார்க்கப்படவில்லை. (4)

வெற்றிவீரன் இலக்கை அடைந்தவுடன் பார்த்திருந்த பெரும் திரள்கூட்டத்தினரின் கைதட்டுதல் வானைப்பிளந்து, சுற்றிலுமிருந்த குன்று களிலும் மலைகளிலும் எதிரொலித்தது. பார்வையாளர்கள் அனைவரும் பார்த்திருந்தபோது, நீதிபதி வெற்றியின் அடையாளச் சின்னமுள்ள ஒரு கிரீடத்தையும் ஒரு பேரீச்ச மரக்கிளையையும் தமது வலதுகரத்தில் எடுத்துச் செல்லும்படி கொடுக்கப்பட்டிருந்தான். அந்தப் பிரதேசம் முழுவதிலும் அவனது புகழ் போற்றப்பட்டிருந்தது. அந்தக் கனத்தின் பங்கை அவனது பெற்றோர்கள் பெற்றுக்கொண்டனர். அவன் வாழ்ந்திருந்த நகரமும் கூட அவ்வளவு பெரிய ஒரு பந்தய வீரனை உருவாக்கினதற்காக மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டது. (5)

ஒரு கிறிஸ்தவப் போராட்டத்துடன் இந்தப் பந்தயங்களைப் பொருளாகக் குறிப்பிட்டு, இந்தப் பந்தயத்தில் வெற்றி அடைவதற்கு அவசியமான ஆயத்தங்களை—அடிப்படை ஒழுக்கம், கட்டுப்பாடுமிக்க உணவு, இச்சையடக்கத்தின் அவசியம் ஆகியவைகளைப்பற்றி பவுல் அழுத்திக் கூறினான். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள் (1 கொரிந்தியர் 9:25) என்று அறிவித்தான். ஓடுபவர்கள் உடலின் வலிமையை பலவீனப்படுத்தக்கூடிய ஒவ்வொரு பழக்கத்தையும் ஒருபக்கமாக வைத்துவிட்டு, பந்தயத்தின் நாள் வரும்போது, தங்களுடைய பலம் முழுவதையும் பயன்படுத்துவதற்காகக் கடுமையானதும் தொடர்ச்சியானதுமான ஒழுக்கத்தினால் பலத்தையும் தாங்கும் சக்தியையும் அடையும்படி தங்களுடைய தசைகளுக்குப் பயிற்சியளித்திருந்தனர். அப்படியானால் தனது நித்தியகால ஆசைகளெல்லாம் கழுமரத்திலிருக்கக்கூடிய ஒரு கிறிஸ்தவன், உணவின்மீதுள்ள ஆசைகளையும் வெறிகளையும் அறிவுக்கும் தேவனுடைய சித்தத்திற்கும் கீழ்ப்படுத்தவேண்டியது எந்த அளவிற்கு அதிக முக்கிமானதாக இருக்கிறது! பொழுதுபோக்குகள், வேடிக்கைகள், ஆடம்பரங்கள் அல்லது சௌகரியம் ஆகியவைகளுக்கு அவன் தனது கவனத்தைத் திருப்ப ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அவனுடைய பழக்கங்கள் அனைத்தும்—ஆசைகள் அனைத்தும் கடுமையான ஒழுக்கத்திற்குக் கீழாகக் கொண்டுவரப்படவேண்டும். தேவனுடைய வார்த்தையின் போதனைகளின் அறிவூட்டுதலினால் உண்டான அறிவும், பரிசுத்த ஆவியினாலான வழிநடத்துதலும், கட்டுப்பாட்டின் ஆட்சியைப் பற்றிக்கொள்ளவேண்டும். (6)

இது செய்யப்பட்டபின், வெற்றியைச் சம்பாதிப்பதற்காகக் கிறிஸ்தவன் தனது பலம் முழுவதையும் செலவிடவேண்டும். விளையாட்டுக்களில் உள்ள பந்தயங்களில் போட்டியாளர்களின் கடைசிச் சில எட்டுகள் வேதனைதரும் முயற்சியுடனும் குறையாத வேகத்துடனும் நிகழ்த்தப்பட்டிருந்தன. அதைப்போலவே கிறிஸ்தவன் அவனுடைய இலக்கை நெருங்கிவரும்போது, அவனது நடத்தையின் ஆரம்பத்தில் இருந்ததைவிட இன்னும் அதிகமான போரார்வத்துடனும் தீர்மானத்துடனும் முன்நோக்கி ஓடுவான். (7)

ஓட்டப் பந்தயத்தில் வெற்றிவீரனால் பெற்றுக்கொள்ளப்பட்ட மங்கிப்போகக்கூடிய பரிசை வாடிப்போகக்கூடிய வெற்றிமாலையை, கிறிஸ்தவப் பந்தய ஓட்டத்தில் வெற்றியுடன் ஓடுகின்றவன் அடைந்து கொள்ளக்கூடிய அழியாமையுடைய மகிமையின் கிரீடத்துடன் ஒப்பிட்டுப் பவுல் முன்வைக்கிறான். "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள

கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.” (1 கொரிந்தியர் 9:25). அழிந்துபோகக்கூடிய ஒரு பரிசை வென்றிட கிரேக்க ஓட்டப்பந்தய வீரர்கள் எந்த உழைப்பையும் ஒழுங்கையும் விட்டுவைக்காமலிருந்தனர். நித்திய ஜீவன் என்னும் முடிவில்லாத விலைமதிப்புடைய பரிசைப்பெற நாம் முயன்று கொண்டிருக்கிறோம். நமது முயற்சிகள் எவ்வளவு அதிகமான கவனத்தை உடையவைகளாக இருக்கவேண்டும்? நமது தியாகமும் சுயமறுப்பும் எவ்வளவு அதிகமாக விருப்பமுடையதாக இருக்கவேண்டும்? (8)

நித்திய ஜீவனுக்கான ஓட்டப்பந்தயத்தை அடையாளப்படுத்திக் காட்டுகின்ற ஏக சிந்தையுள்ள நோக்கம், எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. “ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்”—எபிரெயர் 12:1. பொறாமை, வன்மம், தீய சிந்தனை, கெட்ட வார்த்தைகளைப் பேசுதல், பிறர்பொருளின்மீதுள்ள இச்சை ஆகிய இந்தப் பாரங்களைக் கிறிஸ்தவன் அழியாமைக்குரிய ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெற விரும்பினால், ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்துவிடவேண்டும். பாவத்திற்குள் வழிநடத்தி, கிறிஸ்துவின்மீது கவனக்குறைவைக் கொண்டுவரும் ஒவ்வொரு சுபாவத்தையும் அல்லது பழக்கத்தையும் அது எப்படிப்பட்ட தியாகத்தை அவசியப்படுத்துவதாக இருந்தாலும் தூரமாக வைக்கவேண்டும். நீதியின் நித்திய கொள்கைகளை மீறுகின்ற ஒருவன்மீதும் பரலோகத்தின் ஆசீர்வாதம் தங்காது. சுபாவத்தைக் கீழ்த்தரமாக்குவதற்கும், மற்றவர்களைத் தவறாக நடத்துவதற்கும், பேணப்படும் ஒரு பாவமே போதும். (9)

“உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலு மிருக்கும். உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்” (மாற்கு 9:43–45). சரீரத்தை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக காலாவது கையாவது வெட்டப்படவேண்டுமானால், அல்லது கண் பிடுங்கப்படவேண்டுமானால், ஆத்துமாவிற்கு மரணத்தைக்

கொண்டுவரும் பாவத்தைத் தூரமாக விட்டுவிடுவதற்குக் கிறிஸ்தவன் எவ்வளவு அதிகமான அக்கறை உள்ளவனாக இருக்கவேண்டும்? (10)

பண்டைய விளையாட்டுக்களில் இருந்த போட்டியாளர்கள் சுயமறுப்புக்கும் வளையாத ஒழுக்கத்திற்கும் தங்களைக் கீழ்ப்படுத்தின பிறகும்கூட, வெற்றியைப்பற்றி நிச்சயமில்லாதவர்களாக இருந்தனர். “பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்” (1 கொரிந்தியர் 9:24). எவ்வளவுதான் ஆவலுடனும் அக்கறையுடனும் ஓட்டக்காரர்கள் முயன்றாலும் ஒருவனுக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படக்கூடும். இச்சிக்கப்படுகின்ற மாலையை ஒரு கையால் மட்டுமே பற்றிக்கொள்ளமுடியும். பரிசை அடைந்துகொள்ள சிலர் தங்களால் முடிந்த மிக அதிகமான முயற்சியை மேற்கொள்ளலாம். ஆனால் அதை அடைந்துகொள்ள அவர்கள் தங்களுடைய கையை நீட்டினபோது, அவர்களுக்குமுன் வேறொருவன், வினாடி நேரத்திற்குமுன் மிகவும் விரும்பப்படக்கூடிய கருவூலத்தைப் பெற்றுக்கொள்ளலாம். (11)

கிறிஸ்தவ யுத்தம் அப்படிப்பட்டதாக இல்லை! பந்தயத்தின் முடிவில் நிபந்தனைகளுக்கு இசைவாக இருக்கும் ஒருவர்கூட ஏமாற்றமடைய மாட்டார்கள். அக்கறை உள்ளவனாகவும் விடாமுயற்சி உள்ளவனாகவும் இருக்கக்கூடிய ஒருவன்கூட வெற்றியை அடையத் தவறமாட்டான். இந்தப் பந்தயம் வேகமானவர்களுக்கோ அல்லது யுத்தத்தில் பலசாலிக்கு மட்டுமானதோ அல்ல. பலசாலியைப்போலவே மிகவும் பலவீனமான பரிசுத்தவானும் அழியாமையின் கிரீடத்தை அணிந்துகொள்ளலாம். தெய்வீகக் கிருபையின் மூலமாகத் தங்களுடைய வாழ்க்கையை தேவனுடைய சித்தத்திற்குக் கீழாகக்கொண்டுவரும் அனைவரும் வெற்றியடையலாம். தேவனுடைய வார்த்தையில் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துதல் அடிக்கடி முக்கியமில்லாததாக பார்க்கப்படுகிறது. ஆனால் கழுவிலிருக்கும் காரியத்தின் பார்வையில் உதவுவதிலோ அல்லது இடையூறு செய்வதிலோ எதுவும் சிறியதாக இருப்பதில்லை. ஒவ்வொரு செயலும் அதன் பாரத்தை, வாழ்க்கையின் வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிக்கும் தராசில் வைக்கிறது. ஜெயம் பெறுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பரிசு, அவர்கள் எந்த அளவிற்கு அவர்களுடைய சக்தியுடனும் அக்கறையுடனும் முயற்சி செய்திருக்கிறார்களோ அதற்குத்தக்கதாக இருக்கும். (12)

பரிசை அடைந்துகொள்வதற்காக ஒவ்வொரு நரம்பையும் மட்டுமீறி பயிற்றுவிக்கும் பந்தயத்தில் ஓடும் ஒரு மனிதனான அப்போஸ்தலன் தன்னை

ஒப்பிட்டான். “ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்” (1 கொரிந்தியர் 9:26,27) என்றான். (13)

மற்றவர்களுக்குப் பிரசங்கித்த பவுல் தான் ஆகாதவனாகப் போய்விடக்கூடாது என்ற பயத்தை உடையவனாக இருந்தான். தான் விசுவாசித்ததும் பிரசங்கித்ததுமான கொள்கைகளை தனது வாழ்க்கையில் நடப்பிக்காவிட்டால், மற்றவர்களுக்காகச் செய்த ஊழியத்தினால் தனக்கு ஒரு நன்மையும் உண்டாகாது என்பதை அவன் உணர்ந்தான். அவனது உரையாடல், அவனது செல்வாக்கு, சுய இச்சைகளின்படி நடக்க அவன் மறுத்திருந்தது ஆகியவை அவனுடைய மதம் வெறும் பேச்சளவில் ஆனதாக இல்லாமல், நாள்தோறும் தேவனுடன் ஜீவனுள்ள உறவை உடையதாக இருந்தது என்று காட்டவேண்டும். அவன் தனக்கு முன்னாக ஒரே இலக்கை உடையவனாக இருந்து, அதை அடைய அக்கறையுடன் முயன்றான். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் உண்டாயிருக்கிற நீதியை (பிலிப்பியர் 3:9) அடைய முயன்றான். (14)

பவுல் தான் உயிரோடிருக்கும்வரை தீமையுடனுள்ள தன்னுடைய யுத்தம் முடிவடையாது என்பதை அறிந்திருந்தான். ஆவிக்குரிய பேரார்வத்தை பூமிக்குரிய வாஞ்சைகள் மேற்கொண்டுவிடாதபடி தம்மீது மிகக் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்திருந்தான். பவுல் தனது இயல்பான விருப்பங்களுக்கு எதிரான அவனது முயற்சியை தனது சகல வல்லமைகளுடனும் தொடர்ந்திருந்தான். அடைந்துகொள்ளவேண்டிய மேலான நோக்கத்தை அவன் எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்திருந்து, இந்த இலக்கை அடைய தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகின்ற விருப்பத்துடன் முயன்றான். அவனது வார்த்தைகள் அவனது விருப்புகள் ஆகிய அனைத்தும் தேவ ஆவியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. (15)

நித்திய ஜீவனுக்கான பந்தய ஓட்டத்தில் வெற்றி அடையவேண்டும் என்ற ஏக சிந்தையுடைய ஒரே நோக்கம் கொரிந்து விசுவாசிகளில் வெளிப்படுவதைக் காண்பதற்குப் பவுல் ஏக்கமுடையவனாக இருந்தான். கிறிஸ்துவின் மேலான தன்மையை அவர்கள் அடைந்துகொள்வதற்காக, விடுதலைபெறமுடியாது வாழ்க்கை முழுவதும் தொடருகின்ற ஒருபோராட்டம் அவர்களுக்கு முன்னால் இருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். பக்தியையும் சன்மார்க்க மேன்மையையும் அடைந்துகொள்ள நாள்தோறும் சட்டப்பூர்வமாக அவர்கள் முயலவேண்டும் என்று அவன் அவர்களிடம்

கெஞ்சினான். எல்லா பாரத்தையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, கிறிஸ்துவில் பூரணமடைதல் என்னும் இலக்கை நோக்கி அவர்கள் முன்செல்லவேண்டுமென்று அவன் கெஞ்சினான். (16)

பண்டைய இஸ்ரவேலர்களின் கீழ்ப்படிதலினால் அவர்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள் அவர்களுடைய மீறுதல்களினால் அவர்களைப் பின்தொடர்ந்த நியாயத்தீர்ப்புகள் ஆகிய இஸ்ரவேலர்களின் அனுபவங்களைப் பவுல் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினான். பகலில் மேக ஸ்தம்பத்தினாலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் உண்டான பாதுகாப்புடன் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து அற்புதமான விதத்தில் நடத்திச்செல்லப்பட்டதை அவன் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான். இவ்வாறாக, செங்கடலின் வழியாகப் பாதுகாப்புடன் அவர்கள் நடத்தப்பட்டிருந்தனர் என்பதையும், அதேவிதமாகக் கடக்கமுயன்ற எகிப்தியர்கள் தண்ணீருக்குள் மூழ்கிப்போனதையும் அவன் கூறினான். இந்தச் செயல்களினால் தேவன் இஸ்ரவேலை அவருடைய சபை என்று காண்பித்திருந்தார். அவர்கள் “எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே” (1 கொரிந்தியர் 10:3.4). எபிரெயர்கள் அவர்களுக்காக பயணங்கள் முழுவதிலும் கிறிஸ்துவை ஒரு தலைவராக உடையவர்களாக இருந்தனர். அடிக்கப்பட்ட அந்தக் கன்மலை இரட்சிப்பின் நீரோடையாக அனைவருக்காகவும் ஓடவேண்டும் என்பதற்காக, மனிதரின் பாவங்களுக்காகக் காயப்படவேண்டியவராக இருந்த கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டியிருந்தது. (17)

தேவன் எபிரெயர்களுக்கு ஆதரவு காட்டியிருந்தபோதிலுங்கூட, எகிப்தில் விடப்பட்டிருந்த ஆடம்பரங்களின்மீதிருந்த அவர்களுடைய இச்சையினாலும், அவர்களுடைய பாவம் கலகம் ஆகியவைகளினாலும் நியாயத்தீர்ப்புகள் அவர்கள்மேல் வந்தன. இஸ்ரவேலரின் அனுபவத்திலிருந்த பாடங்களுக்கு அவர்கள் செவிசாய்க்கவேண்டுமென்று அப்போஸ்தலன் கொரிந்தியர்களுக்குக் கட்டளையிட்டான். இப்பொழுது “அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது” (1 கொரிந்தியர் 10:6) என்றான். சௌகரியத்தின்மீதும் இன்பங்களின்மீதும் இருந்த ஆசை தேவனுடைய பழிவாங்குதலை அழைத்திருந்த பாதையை எவ்விதமாக ஆயத்தஞ்செய்திருந்தது என்பதை அவன் அவர்களுக்குக் காட்டினான். இஸ்ரவேல் ஜனங்கள் புசிப்பதற்கும் குடிப்பதற்கும் உட்கார்ந்து விளையாடுவதற்கு எழுந்தபோது, பிரமாணம் கொடுக்கப்பட்டதை

கவனித்திருந்துபோது, உணர்ந்த தேவனைப்பற்றின பயத்தை தூரமாக வீசியெறிந்துவிட்டு, தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி அதை வணங்கினபோது, பின்வாங்கும் தேவனுடைய கோபம் உண்டானது. பாகால் பேயோரின் தொழுகையுடன் சம்பந்தப்பட்ட ஒரு ஆடம்பரமான விருந்தை உண்டுகளித்தபின், அநேக இஸ்ரவேலர்கள் காமவெறியில் விழுந்தார்கள். அதனால் தேவனுடைய கோபம் எழுப்பப்பட்டு, அவருடைய கட்டளையால் ஒரே நாளில் முப்பத்திரண்டாயிரம்போர் கொள்ளைநோயால் மடிந்தார்கள். (18)

“தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்” என்று அப்போஸ்தலன் கொரிந்தியர்களைச் சத்தியத்திற்குக் கட்டுப்படுத்தினான். விழித்திருந்து ஜெபம்செய்வதை அவர்கள் அலட்சியம் செய்பவர்களாகி பெருமைபாராட்டுபவர்களும் சுயத்தை நம்புபவர்களுமானால் அவர்கள்மீது தேவனுடைய கோபத்தை அழைக்கின்ற சாவுக்கேதுவான பாவங்களுக்குள் விழுவார்கள். அப்படியிருந்தாலும் நம்பிக்கையின்மையிலும் அதைரியத்திலும் அவர்கள் விழுவதற்குப் பவுல் இணங்கவில்லை. “தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்” (1 கொரிந்தியர் 10:13) என்ற வாக்குறுதியை அவர்களுக்குக் கொடுத்தான். (19)

தங்களுடைய வார்த்தைகளும் செயல்களும் மற்றவர்களின்மீது எப்படிப்பட்ட செல்வாக்கை உண்டுபண்ணும் என்றும், எந்தவிதத்திலும் தீங்குசெய்யாதவைகளும் குற்றமற்றவைகளுமாக இருந்தபோதிலும், அவைகள் விக்கிரக ஆராதனையை அனுமதிக்கவோ அல்லது விசுவாசத்தில் பலவீனமானவர்களின் மனச்சாட்சிகளை பாதிக்கவோ செய்கிறதா என்றும் தங்களைத்தாங்களே கேட்கும்படியும் பவுல் தனது சகோதரர்களை வற்புறுத்தினான். “ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்”–1 கொரிந்தியர் 10:31,33. (20)

கொரிந்து சபைக்கு அப்போஸ்தலன் கொடுத்த எச்சரிப்பு எல்லா நேரத்திற்கும் மிகக் குறிப்பாக நமது காலத்திற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. விக்கிரக ஆராதனை என்பதற்குச் சிலைகளை வணங்குதல் என்ற பொருளை மட்டும் அவன் எடுத்துக்கொள்ளாமல், சுயத்திற்குச் சேவைசெய்தல், சௌகரியங்களை நேசித்தல், உணவு வெறிகள்

ஆகியவைகளை நடப்பித்தல் ஆகியவைகளையும் குறிப்பிடுகிறான். கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தை சாதாரணமாக அறிக்கைசெய்தல், சத்தியத்தைப்பற்றின அறிவைப்பற்றி பெருமைபாராட்டுதல் ஆகியவை ஒருவனைக் கிறிஸ்தவனாக்குவதில்லை. கண்கள், செவிகள், ருசிகள் அல்லது சுயநடத்தைகளை அனுமதித்தல் ஆகியவைகளில்மட்டும் மனநிறைவை அடைய வகைதேடும் ஒரு மதம், கிறிஸ்துவின் மதமல்ல. (21)

கிறிஸ்தவ சபை அங்கத்தினர்கள் அனைவரிடத்திலும் இருக்கவேண்டியதும் நெருக்கமானதும் இசைவானதுமான உறவை மனித சரீரத்துடன் ஒப்பிட்டு, அப்போஸ்தலன் பொருத்தமாகச் சித்தரித்துக் காட்டினான். “நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே. கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்; நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு, அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்”–1 கொரிந்தியர் 12:13–27. (22)

அதற்குப்பின் அந்த நாளிலிருந்து இன்றுவரை ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏவுதலையும் தைரியத்தையும் கொடுப்பதற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய வார்த்தைகளை—கிறிஸ்துவின் அடியார்களால் பேணப்படவேண்டிய அன்பின் முக்கியத்துவத்தைப் பவுல் முன்வைத்தான். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசனவரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனா யிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை"–1 கொரிந்தியர் 13:1–3. (23)

ஒருவன் எவ்வளவு மேலானவன் என்று தன்னைக் காட்டிக்கொண்டிருந்தாலும், தேவன்மீதுள்ள அன்பினாலும் உடன் மனிதர்களின் மேலுள்ள அன்பினாலும் அவனுடைய இருதயம் நிரப்பப்படாமலிருந்தால் அவன் கிறிஸ்துவின் ஒரு உண்மையான சீடனாக இருக்கமாட்டான். அவன் பெரும் விசுவாசத்தை உடையவனாக இருந்தாலும், அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமை உடையவனாக இருந்தாலும், அன்பு இல்லா திருந்தால், அவனுடைய விசுவாசம் மதிப்பில்லாததாக இருக்கும். அவன் பெரும் தாராளத்தை வெளிக்காட்டலாம்; ஆனால் உண்மையான அன்பு இல்லாமல் வேறு ஏதாவது நோக்கத்துடன் ஏழைகளைப் போஷிக்கத் தனது பொருளையெல்லாம் செலவிட்டாலும், அச்செயல் தேவனுடைய ஆதரவுக்கு அவனைப் புகழாது; அவனுடைய பேரார்வத்தினால் அவன் இரத்தசாட்சியாகவுங்கூட மரிக்கலாம்; அப்படியிருந்தபோதிலும் அன்பினால் செயலாற்றப்படாவிட்டால் அவன் மாயத்தோற்றமுடைய உற்சாகமானவனாக அல்லது ஆசைமிக்க மாயக்காரனாக தேவனால் கருதப்படுவான். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது" (1 கொரிந்தியர் 13:4). மிக ஆழமான தாழ்மையிலிருந்து மிகவும் தூய்மையான மகிழ்ச்சி உயர்ந்தெழுகிறது. பொறுமை, அன்பு, தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகிய அஸ்திவாரத்தின்மேல் மிகுந்த பலமுள்ள, மிக மேன்மையான பண்புகள் கட்டப்படுகின்றன. (24)

"அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது" (1 கொரிந்தியர் 13:5). பிறரின்

நோக்கங்கள் செயல்கள் ஆகியவைகளின்மீது கிறிஸ்துவைப்போன்ற அன்பு, மிக அனுகூலமான கட்டுமானத்தை வைக்கிறது. அது தேவையில்லாமல் அவர்களுடைய குற்றங்களை வெளிக்காட்டுவதில்லை. அது அனுகூலமற்ற அறிக்கைகளை ஆவலுடன் கவனிக்காமலிருந்து, அதைவிட மற்றவர்களின் நல்ல தன்மைகளை மனதிற்குக்கொண்டுவருகிறது. இந்த "அன்பு ஒருக்காலும் ஒழியாது" (1 கொரிந்தியர் 13:8). அதனால் அதன் மதிப்பை ஒருபோதும் இழக்கமுடியாது. அது பரலோகத்தின் ஒரு சிறப்புச்சொல்லாக உள்ளது. அதை உடையவனால் அது ஒரு விலைமதிப்புமிக்க பொக்கிஷமாக தேவனுடைய நகரத்தின் பிராகாரத்திற்கு ஊடாகச் சுமந்துசெல்லப்படும். (25)

"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1 கொரிந்தியர் 13:13) கொரிந்திய விசுவாசிகளுக்கிடையில் சன்மார்க்க நெறியின் தரம் கீழானதற்கு தங்களுடைய அடிப்படை லட்சணங்களை விட்டுவிட்டிருந்த சிலர் காரணமாக இருந்தனர். உயிர்த்தெழுதலைப்பற்றின கோட்பாடுகளை மறுக்கின்ற தூரத்திற்குச் சிலர் சென்றிருந்தனர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றி தவறில்லாத வெளிப்படையான சாட்சியினால் பவுல் இந்த மதப்புரட்டைச் சந்தித்தான். "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" (1 கொரிந்தியர் 15:3–8) என்றான். (26)

உயிர்த்தெழுதலின் மாபெரும் சத்தியத்தை மனநிறைவை உண்டுபண்ணும் வல்லமையுடன் அப்போஸ்தலன் முன்வைத்தான். "மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழா விட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து

எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர் களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்" (1 கொரிந்தியர் 15:13–19) என்று வாதம் செய்தான். (27)

இதற்குமேல் என்றென்றைக்குமாகக் கர்த்தருடன் ஜீவிப்பதற்காக நித்திரை செய்துகொண்டிருக்கும் பரிசுத்தவான்களனைவரும் எழுப்பப்பட வுள்ள உயிர்த்தெழுதலின் காலையில் வெற்றியை நோக்கிக் கொரிந்து சகோதரர்களின் மனங்களை அப்போஸ்தலன் எடுத்துச்சென்றான். "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்"– 1 கொரிந்தியர் 15:51–55,57. (28)

விசுவாசமுள்ளவர்களுக்காகக் காத்திருக்கின்ற வெற்றி மகிமை மிக்கதாக உள்ளது. கொரிந்து விசுவாசிகளுக்குமுன்னால் இருந்த சாத்தியதைகளை உணர்ந்த அப்போஸ்தலன், சுயநலத்திலிருந்தும் புலனடக்கமின்மையிலிருந்தும் அவர்களை உயர்த்தி, வாழ்க்கையை அழியாமை என்னும் நம்பிக்கையினால் மகிமைப்படுத்துகின்ற காரியங்களை அவர்கள்முன் வைத்தான். கிறிஸ்துவிற்குள் அவர்களுக்குண்டான பரம அழைப்பிற்கு அவர்கள் உண்மை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று அவன் அக்கறையுடன் உபதேசித்தான். "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக"–1 கொரிந்தியர் 15:58. (29)

இவ்வாறாக கொரிந்து சபையில் நிலவியிருந்த தவறான அபாயகரமான யோசனைகளையும், நடத்தைகளையும் மிகவும் முடிவானதும் உணர்த்தக்கூடியதுமான விதத்தில் திருத்த, அப்போஸ்தலன் முயன்றான். அவன் வெளிப்படையாகப் பேசினபோதிலும் அன்புடன் பேசினான். அவர்களுடைய வாழ்க்கைகளைத் தீட்டுப்படுத்திக்கொண்டு, மறைந்திருந்த பாவங்களை வெளிப்படுத்துவதற்கு அவனுடைய எச்சரிப்புகள் கடிந்துகொள்ளுதல்கள் ஆகியவைகளினால் தேவ சிங்காசனத்திலிருந்த ஒளி அவர்கள்மேல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அது எந்தவிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்...? (30)

அந்த நிருபம் அனுப்பப்பட்டபின் அவன் எழுதியிருந்தது எவர்களுக்கு நன்மை பயக்கவேண்டுமென்று அவன் வாஞ்சித்திருந்தானோ அவர்களைக் காயப்படுத்திவிடக்கூடாதே என்று பயந்தான். மேற்கொண்டு விலகிச்செல்லுவதைப்பற்றி அவன் உணர்வுப்பூர்வமாக பயந்து, அவனுடைய வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அவன் ஏங்கியிருந்தான். அப்போஸ்தலனைப்போல நேசிக்கப்படுகின்ற சபைகளின் அல்லது அமைப்புக்களின்மீதுள்ள பொறுப்பை உணர்ந்திருப்பவர்கள் அவனுடைய மனத்தொய்வையும் சுயத்தின்மீது குற்றங்காணுகின்ற ஆவியையும் வரவேற்பார்கள். அவருடைய பணியிலுள்ள பாரங்களைத் தாங்குகின்ற இந்தக் காலத்திலுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் உழைப்பைப்பற்றி அதேவிதமான அனுபவம், போராட்டம், அப்போஸ்தலனின்மீது விழுந்திருந்த கவலைமிக்க கரிசனை ஆகியவைகளைப்பற்றி ஏராளவிற்கு அறிவார்கள். சபையிலுள்ள பிரிவினைகளால் பாரமடைந்து, அனுதாபத்தையும் ஆதரவையும் எதிர்பார்த்திருந்த சிலரிடமிருந்துண்டான நன்றிகெட்ட தன்மையையும் துரோகத்தையும் சந்தித்து, அக்கிரமத்தைத் தேக்கியிருந்த சபைகளுக்கு உண்டாகக்கூடிய அபாயத்தை உணர்ந்து பாவத்தைக் கடிந்துகொள்ளுவதற்கான சாட்சியை நெருக்கமாகத் தேட வற்புறுத்தப்பட்ட அவன், ஒரு வேளை அவர்களிடம் மிகக் கடுமையாக இடைப்பட்டிருக்கலாம்; அதே நேரத்தில் பயத்தால் பாரமடைந்தவனாகவும் இருந்தான். அவனுடைய தூதை ஏற்றுக்கொண்டார்கள் என்னும் நற்செய்தியைப் பெற்றுக்கொள்வதற்காக அவன் நடுக்கத்துடனும் கவலையுடனும் காத்திருந்தான். (31) ★

# 31

# செவிசாய்க்கப்பட்ட தூது!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 323–334)**
**திருவசன ஆதாரம் : 2 கொரிந்தியர் 1–13**

எருசலேமிலிருந்து பவுல் மற்றொரு மிஷனரிப் பயணத்திற்குப் புறப்பட்டான். இந்தப் பயணத்தின்போது அவன் முந்தி ஊழியஞ்செய்திருந்த ஐரோப்பாவிலிருந்த இடங்களை மறுபடியும் சந்திக்கலாம் என்று நம்பினான். துரோவாவிலே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காகச் சில நாட்கள் தங்கினான். அவனுடைய தூதைக் கேட்பதற்குத் தயாராக இருந்த சிலரைக் கண்டான். இந்த இடத்தில் அவன் செய்திருந்த ஊழியத்தைப்பற்றி பின்னால் அவன்: "மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி துரோவாபட்டணத்தில் வந்தபோது, கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில்" (2 கொரிந்தியர் 2:12) என்று அறிவித்தான். துரோவாவிலே அவனுடைய ஊழியம் வெற்றியானதாக இருந்திருந்தபோதிலும், அதிகக் காலம் அவனால் அங்கு தங்கியிருக்க முடியவில்லை. அனைத்து சபைகளையும்பற்றின கவலை, குறிப்பாகக் கொரிந்து சபையைப்பற்றிய கவலை, அவனுடைய இருதயத்தில் பாரமாகத் தங்கியிருந்தது. துரோவாவிலே தீத்துவைச் சந்திக்கலாமென்றும் கொரிந்து சகோதரருக்கு அவன் அனுப்பியிருந்த ஆலோசனைகளும் கடிந்துகொள்ளுதலுமாகிய வார்த்தைகள் கொரிந்து சகோதரர்களால் எவ்விதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதையும் அவன்மூலமாக அறிந்துகொள்ளலாமென்றும் அவன் நம்பியிருந்தான். ஆனால் இந்தக் காரியத்தில் அவன் ஏமாற்றமடைந்தான். நான் "என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே என் ஆவிக்கு அமைதியில்லாதிருந்தது" (2 கொரிந்தியர் 2:13) என்று இந்த அனுபவத்தைப்பற்றி எழுதினான். எனவே அவன் அச்சமயம் துரோவாவைவிட்டு மக்கெதோனியாவிற்குக் கடந்துசென்று பிலிப்பியில் தீமோத்தேயுவைச் சந்தித்தான். (1)

கொரிந்து சபையைப்பற்றி கவலைமிக்க இந்த நேரத்தின்போது பவுல் மிகவும் மேலான நன்மையை நம்பினான். இருந்தபோதிலும் அவனுடைய ஆலோசனைகளும் எச்சரிப்புக்களும் தவறாகப் புரிந்துகொள்ளப்படாமலிருக்கவேண்டுமே என்ற ஆழ்ந்த துயர உணர்ச்சிகள் அவனுடைய ஆத்துமாவின்மேல் மோதிச் சென்றிருந்தன. “எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன” (2 கொரிந்தியர் 7:5) என்று அவன் பின்னர் எழுதினான். (2)

கொரிந்து சபை விசுவாசிகளிடத்தில் ஒரு ஆச்சரியமான மாறுதல் நிகழ்ந்திருந்தது என்னும் மகிழ்ச்சிமிக்க செய்திகளை விசுவாசமிக்க செய்தியாளன் கொண்டுவந்தான். பவுலின் நிருபத்தில் அடங்கியிருந்த போதனைகளை அநேகர் ஏற்றுக்கொண்டு, தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்தியிருந்தனர். அதற்குப்பின்னர் அவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்தவத்திற்கு நிந்தனையைக் கொண்டுவருவதாக இராமல், நடைமுறை தெய்வபக்தியைப்பற்றின ஒரு வல்லமைமிக்க செல்வாக்கை உண்டுபண்ணியிருந்தது. (3)

மகிழ்ச்சியால் நிறைந்த அப்போஸ்தலன், அவர்களில் உண்டான நல்ல செயலின் காரணமாக அவனது இருதயத்தில் உண்டான மகிழ்ச்சியை வெளிக்காட்டி, கொரிந்து சபை விசுவாசிகளுக்கு வேறொரு கடிதத்தை எழுதினான். “ஆதலால் நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது மனஸ்தாபப்படுகிறதில்லை” (2 கொரிந்தியர் 7:8). அவனுடைய வார்த்தைகள் அவமதிக்கப்படும் என்ற பயத்தினால் அவன் சித்திரவதை செய்யப்பட்டபோது, மிகவும் முடிவான விதத்திலும் கடுமையாகவும் எழுதிவிட்டதாக எண்ணி, சில சமயங்களில் மிகவும் வருந்தினான். “இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது” (2 கொரிந்தியர் 7:9,10) என்றான். தெய்வீகக் கிருபையின் செல்வாக்கினால் இருதயத்தில் உண்டாகும் மனம் வருந்துதல் பாவ அறிக்கைசெய்வதற்கும், பாவத்தை விட்டுவிலகுவதற்கும் நடத்தும்.

அப்போஸ்தலனால் அறிவிக்கப்பட்டிருந்த அப்படிப்பட்ட கனிகள் கொரிந்து விசுவாசிகளின் வாழ்க்கையில் காணப்பட்டிருந்தது. “பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்” (2 கொரிந்தியர் 7:11) என்றான். (4)

சபைகளைப்பற்றின ஆத்துமபாரத்தை உடையவனாகப் பவுல் சில காலம் இருந்தான். அது சில சமயங்களில் மட்டுமே தாங்கக்கூடியதாக அபூர்வமானதாக இருந்தது, விசுவாசிகளுக்கு மத்தியில் இருந்த அவனுடைய செல்வாக்கை அழிக்கவும், சுவிசேஷ சத்தியத்திற்குப் பதிலாக தங்களுடைய சொந்தக் கோட்பாடுகளை வற்புறுத்தவும் தவறான ஆசிரியர்கள் வகைதேடியிருந்தனர். “பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று” (2 கொரிந்தியர் 1:8) என்னும் வார்த்தைகளில் பவுலைச் சூழ்ந்திருந்த குழப்பங்களும் அதைரியங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (5)

ஆனால் கவலைக்குக் காரணமாக இருந்த ஒரு காரியம் நீக்கப்பட்டிருந்தது. பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதின நிருபத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்னும் நற்செய்திகளைக் களிகூர்தலுடன் “அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது” (2 கொரிந்தியர் 12:7) என்று வெளிக்காட்டினான். (6)

அவர்கள் மறுபடியும் மாற்றமடைந்தது கிருபையில் அவர்களுடைய வளர்ச்சி, ஆகிய இருதயத்தின் மாற்றத்திற்கும், வாழ்க்கைக்கும் உள்ள புகழ் அனைத்தும் தேவனுக்கே உரியது என்று அவரைப்பற்றின அவனுடைய மகிழ்ச்சியை வெளிக்காட்டினான். “அன்றியும், நீங்கள் துக்கப்படும்படிக்கு எழுதாமல், உங்கள்மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே, மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அதிகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்.” “இரட்சிக்கப்படுகிறவர் களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக்

கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்” (2 கொரிந்தியர் 2:4,15) என்று வியந்துகூறினான். ஒரு போரில் வெற்றியடைந்தவர்கள் திரும்பிவரும்போது, தங்களுடன் ஒரு கூட்டம் போர்க்கைதிகளைக் கொண்டுவருவது, அந்த நாளின் வழக்கமாக இருந்தது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை வரவேற்பதற்காகத் தூபகலசங்களைக் கொண்டுசெல்லுபவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மரண தண்டனைக்கென்று நியமிக்கப்பட்டிருந்த போர்க்கைதிகளுக்கு அந்த சுகந்தவாசனை மரண வாசனையாக இருந்து, அவர்களுடைய மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்ற நேரம் சமீபித்துவிட்டது என்பதைக் காட்டியிருந்தது. அதே நேரத்தில், தங்களைச் சிறைப்பிடித்தவர்களிடத்திலிருந்து ஆதரவைப் பெற்றுக்கொண்டிருந்து அவர்களுடைய உயிர்கள் காக்கப்படும் என்றிருந்த போர்க்கைதிகளுக்கு அவர்களுடைய விடுதலை சமீபமாயிருக்கிறது என்பதைக் காட்டுகின்ற ஜீவ வாசனையாக அது இருந்தது. (7)

பவுல் இப்பொழுது விசுவாசமும் நம்பிக்கையும் நிரம்பினவனாக இருந்தான். கொரிந்துவில் தேவன் செயலாற்றுகின்ற பணியின்மீது சாத்தான் வெற்றியடைந்துவிடக்கூடாது என்பதைப் பவுல் உணர்ந்து, அவன் தனது இருதயத்தில் இருந்த நன்றியை தேவனைப் போற்றும் வார்த்தைகளினால் ஊற்றினான். இரட்சகரைப்பற்றின அறிவைப் பரப்புகின்ற பேரார்வத்துடனும் கிறிஸ்துவின் சத்துருக்களின்மீதும் சத்தியத்தின்மீதும் உண்டான வெற்றியைக் கொண்டாடுவதற்குப் பவுலும் அவனது உடன் ஊழியர்களும் புறப்பட்டனர். அந்தத் தூபவர்க்கத்தைப்போல சுவிசேஷத்தின் சுகந்த வாசனை உலகமெங்கும் பரவவேண்டியதாக இருந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்களுக்கு அந்தத் தூது ஜீவனுக்கேதுவான வாசனையாகவும், நம்பிக்கையின்மையில் பிடிவாதமாகத் தொடர்பவர்களுக்கு மரண வாசனையாகவும் இருந்தாகவேண்டும். (8)

திகைப்பினால் மேற்கொள்ளுகின்ற பணியின் பெரிய தன்மையை உணர்ந்த பவுல், “இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?” (2 கொரிந்தியர் 2:16) என்று வியந்து கூறினான். (9)

பவுல் எழுதின அவனது முதலாவது கடிதத்தில், அவன் தன்னைப்பற்றிக் கூறியிருந்ததைக்குறித்து அவனைக் குற்றப்படுத்தியிருந்தவர்கள் இருந்தனர். சபை அங்கத்தினர்கள் பவுலைப்பற்றி இவ்விதமாக நிதானித்திருந்தார்களா என்பதை: “எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடங்கு கிறோமா? அல்லது சிலருக்கு வேண்டியதாயிருக்கிறதுபோல, உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும், உங்களிடத்தில் உபசார நிருபங்களைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு வேண்டியதோ?” (2 கொரிந்தியர் 3:1)

என்ற வார்ததைகளில் கேட்கிறான். ஒரு புதிய இடத்திற்குக் கடந்து சென்றிருந்த விசுவாசிகள் தங்களப்பற்றி சான்றுக் கடிதங்களை அவர்கள் முன்பிருந்த சபைகளிலிருந்து பெற்றுச்சென்றிருந்தனர். ஆனால் தலைமை தாங்கி நடத்தியிருந்த உழியக்காரர்களுக்கு இந்தச் சபைகளை ஏற்படுத்தியிருந்தவர்களுக்கு அப்படிப்பட்ட புகழுரைக் கடிதங்கள் அவசியம் இல்லாதிருந்தது. விக்கிரக ஆராதனையிலிருந்து சுவிசேஷத்தின் விசுவாசத்திற்கு நடத்தப்பட்டிருந்த கொரிந்து விசுவாசிகளே பவுலுக்கு அவசியமான சிபாரிசுக் கடிதங்களாக இருந்தனர். சத்தியத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டதும் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த சீர்திருத்தமும் அவனுடைய ஊழியத்திலிருந்த விசுவாசத்திற்கும் ஆலோசனைகள், கடிந்துகொள்ளுதல்கள், உபபேதசங்கள் ஆகியவை கிறிஸ்துவின் ஊழியக்காரனாக அவன் கொண்டிருந்த அதிகாரத்திற்கும் சிறப்பான வார்த்தைகள் அடங்கிய சாட்சியாக இருந்தன. (10)

பவுல் கொரிந்து சகோதரர்களை அவனுடைய சான்றிதழ்களாகக் கருதியிருந்தான். “எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது” (2 கொரிந்தியர் 3:2,3) என்று அவன் கூறினான். (11)

தேவன் ஒருவனைத் தமது ஊழியக்காரனாக இருக்கும்படி அழைத்திருக்கிறார் என்பதற்கு பாவிகளின் மாற்றமும் அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படுதலும் வல்லமையான சான்றுகளாக உள்ளன. மாற்றமடைந்தவர்களின் இருதயத்தின்மீது அவனது அப்போஸ்தலத் தன்மையின் சான்று எழுதப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கையினால் அது சாட்சி பகரப்பட்டிருக்கிறது. மகிமையின் நம்பிக்கையாக (அவர்களுக்குள்) கிறிஸ்து உருவாகியிருக்கிறார். ஊழியத்தின் இந்த முத்திரைகளினால் ஒரு ஊழியக்காரன் மிகப் பெருமளவிற்குப் பலப்படுத்தப்படுகிறான். (12)

பவுலின் ஊழியங்களுக்குக் கொரிந்து சபையினர் சாட்சி கொடுத்திருந்ததுபோல இன்று கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அதே விதமான சாட்சியை உடையவர்களாக இருக்கவேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் அநேக பிரசங்கிமார்கள் இருந்தபோதிலும், திறமையும் பரிசுத்தமுமுள்ள —கிறிஸ்துவின் இருதயத்தில் வாழ்ந்திருந்த அன்பை உடையவர்களான மனிதர்கள் அரிதானவர்களாக இருக்கின்றனர்.

கிறிஸ்துவின் மதத்தை அறிக்கைசெய்கின்றவர்களிடம் அநேக பெயர்க் கிறிஸ்தவர்களிடம் அகந்தை, சுயத்தின்மீது நம்பிக்கை, உலக சிநேகம், குற்றங்கண்டுபிடித்தல், கசப்புகள், பொறாமை ஆகியவை உள்ளன. நமது இரட்சகரின் வாழ்க்கையுடன் அவர்களுடைய வாழ்க்கையை கூர்மையாக ஒப்பிடும்போது அவர்கள் எந்த ஊழியத்தின்கீழ் மாற்றமடைந்திருந்தனரோ அந்த ஊழியச்சுபாவத்திற்கெதிராக வருத்தம்தரும் துயரமான சாட்சியை அடிக்கடி உடையவர்களாக உள்ளனர். (13)

ஒரு மனிதன் திறமைமிக்க சுவிசேஷ ஊழியக்காரனாக இருக்கிறான் என்று தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதைவிட மேலான கனம் ஒருவனுக்கு இல்லை. ஆனால் அவருடைய பணியில் வல்லமையினாலும் வெற்றியினாலும் எவர்களைத் தேவன் ஆசீர்வதித்திருக்கிறாரோ, அவர்கள் பெருமையடித்துக்கொள்ளுவதில்லை. அவர்கள் தங்களுக்குள்ளாக வல்லமையுள்ளவர்களாக இல்லை என்பதை உணர்ந்து, முற்றிலுமாக தேவனைச் சார்ந்திருப்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். அவர்கள் பவுலுடன்சேர்ந்து: "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2 கொரிந்தியர் 3:5,6) என்று கூறுகின்றனர். (14)

உண்மையான ஒரு ஊழியக்காரான் தனது ஆண்டவருக்காக வேலைசெய்கிறான். கிறிஸ்து சபையையும் உலகத்தையும் தாங்கியிருந்தது போன்ற ஒரு உறவை உணர்ந்தவனாகத் தன்னுடைய ஊழியத்தின் முக்கியத்தை உணருகிறான். ஜெயங்கொள்ளுகிறவர்கள் அடையக்கூடிய பரிசை அவர்கள் அடையவேண்டும் என்பதற்காகப் பாவிகளை மேன்மையான தன்மைக்கும் மேலான ஜீவியத்திற்கும் நடத்துவதற்காக அவன் ஓயாமல் பாடுபடுகிறான். பலிபீடத்தின்மீதுள்ள எரியும் நெருப்பினால் அவனுடைய உதடுகள் சுடப்படவே, அவன் பாவியின் ஒரே நம்பிக்கையாக இருக்கும் இயேசுவை உயர்த்துகிறான். ஊக்கமான பலன் தரும் ஜெபத்தினால் அவன் தேவனிடத்தில் நெருங்கியிருக்கிறான் என்பதை அவனது பேச்சைக் கேட்பவர்கள் அறிந்துள்ளனர். பரிசுத்த ஆவியானவர் அவன்மீது தங்கியிருக்கிறார். ஜீவாதாரமான பரலோக அக்கினியை அவனுடைய ஆத்துமா உணர்ந்திருக்கிறது. ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளுடன் சம்பந்தப்படுத்த அவன் திறமை உள்ளவனாக இருக்கிறான். சாத்தானின் பலத்த கோட்டைகளைத் தகர்க்கின்ற வல்லமை அவனுக்கு அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய அன்பை அவன் மற்றவர்களின்முன் வைக்கும்போது, இருதயங்கள் உடைக்கப்படுகின்றன.

அதனால் அநேகர்: "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று விசாரிக்கும்படி நடத்தப்படுகின்றனர். (15)

"இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம்பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம். எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்"–2 கொரிந்தியர் 4:1–6. (16)

இவ்வாறாக, கிறிஸ்துவின் ஒரு ஊழியக்காரனாக இருந்த அவனுக்குக் காட்டப்பட்டிருந்து அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பரிசுத்தமான நம்பிக்கையாக அப்போஸ்தலன் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெரிதுபடுத்திக்காட்டினான். கஷ்டங்கள், துன்பங்கள், அபாயங்கள் ஆகியவைகளில் தேவனுடைய ஏராளமான இரக்கத்தினால் அவனும் அவனது சகோதரர்களும் தாங்கப்பட்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தையும் போதனைகளையும் அவர்களது பிரசங்கங்களைக் கேட்பவர்களின் வாஞ்சைகளுக்குப் பொருந்தக்கூடிய விதத்தில் வடிவமைக்காமலும், தங்களுடைய போதனைகள் கவர்ச்சிகரமானவைகளாக இருக்கவேண்டும் என்பதற்காக, இரட்சிப்பிற்கு அதிமுக்கியமான சத்தியங்களை அடக்கிவைக்காமலும் இருந்தனர். ஆத்துமாக்களுக்கு மன உணர்த்துதல்களும் மாற்றமும் உண்டாகவேண்டும் என்பதற்காக அவர்கள் ஜெபம்செய்து, சத்தியத்தை எளிமையுடனும் தெளிவுடனும் முன்வைத்திருந்தனர். முன்வைக்கப்பட்ட சத்தியங்கள் ஒவ்வொரு மனிதனுடைய மனச்சாட்சியிலும் தானே செயலாற்றும்படிப் புகுழ அவர்கள் தங்களுடைய நடத்தையைத் தங்களுடைய போதனைகளுக்கு இசைவாக இருக்கும்படிச்செய்ய முயன்றிருந்தனர். (17)

“இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்” (2 கொரிந்தியர் 4:7) என்று அப்போஸ்தலன் தொடர்ந்தான். தேவனால் அவருடைய சத்தியங்களைப் பாவமற்ற தூதர்களின்மூலமாக அறிவித்திருக்கமுடியும், ஆனால் அது அவருடைய திட்டமல்ல. அவரது திட்டங்களைச் செயலாற்றுவதில் அவருடைய கருவிகளாக இருக்கும்படி தேவன் மனிதர்களைத் தெரிந்தெடுக்கிறார். விலைமதிக்கப்படமுடியாத அந்தக் கருவூலம் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. உலகத்திற்கு அவருடைய ஆசீர்வாதங்கள் மனிதர்களின்மூலமாக எடுத்துச்செல்லப்படவேண்டியதாக உள்ளது. பாவத்தின் இருளுக்குள் அவருடைய மகிமை அவர்கள் மூலமாகப் பிரகாசிக்கவேண்டியதாக உள்ளது. பாவமுள்ளவர்களையும் தேவையுள்ளவர்களையும் அவர்கள் அன்புள்ள ஊழியத்தினால் சந்தித்து, அவர்களைச் சிலுவையினிடத்திற்கு நடத்தவேண்டியவர்களாக உள்ளனர். அவர்களுடைய பணிகள் அனைத்திலும் அவர்கள் மகிமை, கனம், துதி ஆகியவைகளை எல்லாருக்கும் வல்லாவற்றிற்கும் மேலானவராக இருக்கும் தேவனுக்கு மாலையாக அணிவிக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். (18)

கிறிஸ்துவிற்கு சேவை செய்வதைத் தெரிந்துகொண்டதில் சுயநலமிக்க நோக்கங்களினால் அவன் ஊக்குவிக்கப்படவில்லை என்பதைப் பவுல் தனது சொந்த அனுபவத்திலிருந்து குறிப்பிட்டிருந்தான். ஏனெனில் அவனது பாதை பரீட்சைகளினாலும் சோதனைகளினாலும் சூழப்பட்டிருந்தது. “நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்” (2 கொரிந்தியர் 4:8–10) என்றான். (19)

கிறிஸ்துவின் உடன்வேலையாட்களான அவனும் அவனது உடன் ஊழியக்காரர்களும் தொடர்ச்சியாக ஆபத்தில் இருந்தனர் என்பதைப் பவுல் அவனது சகோதரர்களிடம் நினைவூட்டினான். அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் அவர்களுடைய பலத்தை எடுத்துவிடுவதாக இருந்தது. “எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும்

பெலன்செய்கிறது" (2 கொரிந்தியர் 4:11–12) என்று அவன் எழுதினான். தனித்து விடப்படுதல், கடினவேலை ஆகிய சரீரப்பிரகாரமான பாடுகளினால் கிறிஸ்துவின் இந்த ஊழியக்காரர்கள் அவருடைய மரணத்துடன் இசைந்தவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களின் மரணத்தை எது கொண்டுவந்திருந்ததோ அந்தச் சத்தியத்தின்மீதுள்ள நம்பிக்கையினால் நித்திய ஜீவனில் பங்குபெறுபவர்களாக இருந்த கொரிந்தியர்களுக்கு அது ஆவிக்குரிய ஜீவனையும் ஆரோக்கியத்தையும் கொண்டுவந்திருந்தது. இதன் காரணமாக, இயேசுவின் அடியார்கள் அவர்களுடைய அலட்சியத்தினாலும் அன்பற்ற தன்மையினாலும் ஊழியஞ்செய்பவர்களின் பாரங்களையும் பரீட்சைகளையும் அதிகப்படுத்தாமலிருப்பதற்குக் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டியவர்களாக இருந்தனர். (20)

"விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்"–2 கொரிந்தியர் 4:13. தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சத்தியத்திலுள்ள உண்மையில் முழுவதுமாக மனநிறைவை உடையவனாக இருந்த பவுலை, தேவனுடைய வார்த்தையை வஞ்சகமாகக் கையாளவும் அல்லது அவனுடைய ஆத்துமாவின் உணர்த்துதலை மறைக்கவும் எந்த காரியத்தினாலும் தூண்டமுடியவில்லை. இந்த உலகத்தின் அபிப்பிராயங்களுக்கு இசைவுள்ளவனாக இருந்து, ஐசுவரியம், கனம், இன்பங்கள் ஆகியவைகளை அவன் விலைக்கு வாங்கமாட்டான். அவன் கொரிந்தியர்களுக்குப் பிரசங்கித்திருந்த விசுவாசத்திற்காக, இரத்தசாட்சியாகக்கூடிய தொடர்ச்சியான அபாயத்தில் இருந்திருந்தபோதிலும் அதனால் கோழையாக்கப்படாமலிருந்தான். ஏனெனில் மரித்து மறுபடியும் உயிர்த்தெழுந்திருந்த அவர், அவனையும் கல்லறையிலிருந்து எழுப்பி, பிதாவின் சமுகத்தில் நிறுத்துவார் என்பதை அவன் அறிந்திருந்தான். (21)

"தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு இவையெல்லாம் உங்கள்நிமித்தம் உண்டாயிருக்கிறது" என்று பவுல் அறிவித்தான். (2 கொரிந்தியர் 4:15). தனது சுயசெல்வாக்கைப் பெரிதுபடுத்திக் கொள்ளுவதற்காக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. இரட்சிப்பின் நம்பிக்கை இந்தப் பணிக்குத் தங்களுடைய வாழ்க்கையைப் பிரதிஷ்டைசெய்ய ஆத்துமாக்களை நடத்தியிருந்தது.தங்களை அச்சுறுத்தியிருந்த அபாயங்கள் அல்லது உண்மையான பாடுகளின் காரணமாகத் தங்களுடையமுயற்சிகளை நிறுத்திவிடுவதிலிருந்து அவர்களைத் தவிர்த்திருந்தது—இந்த நம்பிக்கைதான். (22)

"ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" (2 கொரிந்தியர் 4:16) என்று பவுல் அறிவித்தான். அவன் சத்துருவின் வல்லமையை உணர்ந்தான். அவனுடைய சரீர பலம் குறைந்துகொண்டிருந்தபோதிலும் விசுவாசத்துடனும் தளராமலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்தான். இந்தச் சிலுவை வீரன் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்தவனாக இந்தப் போராட்டத்தில் முன்நோக்கிச்சென்றான். அவனுடைய மகிழ்ச்சிமிக்க குரல் போரை வென்றவனாக அவனை அறிவித்தது. விசுவாசிகளுக்குக் கிடைக்கக்கூடிய பரிசின்மீது தன்னுடைய பார்வையைப் பதித்து, அவன் வெற்றிக் குரலுடன்: "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரிந்தியர் 4:17,18) என்று கூறினான். (23)

தனது கொரிந்து சகோதரர்கள் அவர்களுடைய மீட்பரின் ஈடுஇணையற்ற அன்பை மறுபடியும் ஆலோசிக்கவேண்டும் என்ற அப்போஸ்தலனின் மேல்முறையீடு மிகுந்த அக்கறைமிக்கதும் இருதயத்தைத் தொடுவதுமாக இருந்தது. "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரிந்தியர் 8:9) என்று எழுதினான். அவர் எந்த உயரத்திலிருந்து கீழே இறங்கினார் என்பதை அவர் தம்மைத் தாழ்த்தின அவமானத்தின் ஆழத்தையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். சுயமறுப்பு என்னும் பாதையில் ஒரு முறை பிரவேசித்தபின், தமது ஜீவனைக் கொடுக்கும்வரை அவர் ஒருபக்கமும் திரும்பவில்லை. சிங்காசனத்திற்கும் சிலுவைக்கும் இடையில் அவருக்கு ஒருபோதும் இளைப்பாறுதல் இருக்கவில்லை. (24)

இரட்சகர் அவர்களுடைய சார்பாக ஆச்சரியமான விதத்தில் தம்மைத் தாழ்த்தினதை அவர்கள் முழுவதுமாக அறிந்துகொள்ளும்வரை பவுல் ஒவ்வொரு விஷயத்தின்மீதும் தரித்திருந்தான். கிறிஸ்து தேவனுக்குச் சமமாக இருந்ததையும், தூதர்களின் தொழுகையை ஏற்றுக்கொண்டிருந்ததையும் அவன் அவமானத்தின் அதிகமான ஆழத்தை அடையும்வரையுள்ள அவரது நடத்தையையும் இருந்தவண்ணமாகப் பவுல் அவர்கள் முன்வைத்தான்.

பரலோகத்தின் மகத்துவமானவரால் செய்யப்பட்ட ஆச்சரியமான தியாகபலியை அறியும்படி அவர்களைக் கொண்டுவரமுடிந்தால், அவர்களுடைய வாழ்க்கையில் உள்ள சுயநலமனைத்தும் நீங்கிப்போய்விடும் என்னும் மனநிறைவை உடையவனாக இருந்தான். தேவகுமாரன் விழுந்துபோன மனிதனை அவனது கீழான நிலைமையிலிருந்து, நம்பிக்கை, மகிழ்ச்சி, பரலோகம் ஆகியவைகளுக்கு உயர்த்துவதற்காகத் தமது மகிமையை எவ்விதமாக ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, மனித இயல்பின் தன்மைக்கு அவர் தாமாகவே தம்மை எவ்விதமாகக் கீழ்ப்படுத்தினார் என்பதையும், அதன்பின் தம்மை ஒரு வேலைக்காரனுக்குச் சமமாக மரணபரியந்தம் தாழ்த்தினார் என்பதையும், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:8) என்பதையும் பவுல் காண்பித்தான். (25)

சிலுவையின் ஒளியில் நாம் தெய்வீக சுபாவத்தை ஆராயும்போது, இரக்கம், மென்மை, மன்னிப்பு ஆகியவை சமத்துவத்துடனும் நீதியுடனும் கலந்திருப்பதை காண்கிறோம். மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்குவதற்காக, தமது கைகளிலும் கால்களிலும் விலாவிலும் பாடுகளைத் தாங்கினதன் தழும்புகளை உடையவராக சிங்காசனத்திற்கு நடுவில் நிற்கும் ஒருவரை நாம் காண்கிறோம். ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் நித்தியமாக வாழக்கூடிய பிதாவை—அவருடைய புண்ணியங்களின்மூலமாக நம்மை அவரிடம் சேர்த்துக்கொள்ளும் ஒரு பிதாவை நாம் காண்கிறோம். துன்பத்தையும் அவநம்பிக்கையையும் மட்டுமே உடையதாக இருந்து, அச்சுறுத்தியிருந்த பழிவாங்கும் மேகத்தில் பாவியே உயிர்வாழ்! குற்றவாளிகளாக இருந்து, விசுவாசிக்கும் ஆத்துமாக்களே உயிர்வாழுங்கள்! நான் அந்தப் பரிகாரத்தைச் செலுத்தியிருக்கிறேன் என்னும் தேவனுடைய எழுத்தைக் கல்வாரியிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியானது வெளிக்காட்டுகிறது. (26)

கிறிஸ்துவைத் தியானிப்பதில் நாம் அளவிடமுடியாத ஒரு அன்பின் கரையில் நிற்கிறோம். இந்த அன்பைப்பற்றிக் கூற நாம் முயலுகிறோம். ஆனால் நமது மொழிகள் தோற்றுவிடுகின்றன. நாம் பூமியின்மீதுள்ள அவரது வாழ்க்கையைப்பற்றியும், நமக்கான அவரது தியாகபலியைப்பற்றியும், பரலோகத்தில் நமக்காகப் பரிந்துபேசுபவராக அவர் செய்யும் ஊழியம்பற்றியும் அவரை நேசிப்பவர்களுக்காக அவர் ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் வாசஸ்தலங்களைப்பற்றியும் நாம் ஆலோசிக்கும்போது, ஓ! கிறிஸ்துவின் அன்பின் ஆழம், அகலம் அகியவைகளைப்பற்றி வியந்து கூவமட்டுமே நம்மால் முடியும். "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி

செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது” “நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை” (1 யோவான் 4:10; 3:1). (27)

இந்த அன்பு பரிசுத்தமான அக்கினியாக ஒவ்வொரு உண்மையான சீடனின் இருதயமாகிய பலிபீடத்தின்மீதும் எரிகிறது. தேவனுடைய அன்பு கிறிஸ்துவின் மூலமாகத்தான் இந்தப் பூமியின்மீது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. குற்றமில்லாத தங்களுடைய வாழ்க்கையினால் தேவனுடைய பிள்ளைகள் இந்த உலகத்தில் இந்த அன்பைப் பிரதிபலிக்கவேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறாக, தேவ ஆட்டுக்குட்டியைப் பார்க்கும்படி பாவிகள் சிலுவையினிடத்திற்கு நடத்தப்படுவார்கள். (27) ★

# 32

# ஒரு தாராளமான சபை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 335–345)**
**திருவசன ஆதாரம் : மாற்கு 12:43–44**

பூமியின்மீதுள்ள தேவனுடைய பணியை ஆதரிப்பதிலிருந்த பொதுவான கொள்கைகளைப்பற்றின போதனைகளைப் பவுல் கொரிந்து சபையின் விசுவாசிகளுக்குத் தனது முதலாம் நிருபத்தில் கொடுத்தான். அவர்களின் சார்பாக அவனது அப்போஸ்தலப் பணிகளைப்பற்றி அவன் எழுதினபோது: "எவன் தன் சொந்தப்பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? இவைகளை மனுஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா? போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ? நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது" (1 கொரிந்தியர் 9:7–10) என்று அவன் விவரித்தான். (1)

"நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம். ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்

களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப் படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1 கொரிந்தியர் 9:11–14) என்று மேலும் விவரித்தான். (2)

இங்கு தேவாலயத்தில் ஊழியஞ்செய்திருந்த ஆசாரியர்களைப் பராமரிக்கின்ற காரியத்திலிருந்த கர்த்தருடைய திட்டத்தை அப்போஸ்தலன் குறிப்பிட்டான். இந்தப் பரிசுத்தமான பதவிக்கென்று பிரித்துவைக்கப்பட்டிருந்தவர்கள் தங்களுடைய சகோதரர்களால் தாங்கப் பட்டிருந்தனர். அந்த சகோதரர்கள் (ஆசாரியர்கள்) தங்களுடைய சகோதரர்களின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஊழியம் செய்திருந்தனர். "லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்துவந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளை பெற்றிருக்கிறார்கள்"—எபிரெயர் 7:5. தேவாலயம், ஆசரியத்துவம் ஆகியவை சம்பந்தப்பட்ட பரிசுத்தமான பதவிகளை வகிக்கும்படி லேவி கோத்திரத்தார் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். ஆசாரியனைப்பற்றி: "அவனும் அவன் குமாரரும் எந்நாளும் கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஆராதனை செய்யும்படி நிற்கும்பொருட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரத்தார் எல்லாருக்குள்ளும் அவனையே தெரிந்துகொண்டார்" (உபாகமம் 18:5) என்று கூறப்பட்டிருந்தது. சகல வருமானங்களிலும் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தர் தம்முடையது என்று உரிமை பாராட்டியிருந்து, அதைக் கொடுக்காமல் வைத்துக்கொள்ளுகிறதைக் கொள்ளையடித்தல் என்று கருதியிருந்தார். (3)

"அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேத்தி னாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளை யிட்டிருக்கிறார்" (1 கொரிந்தியர் 9:14) என்று பவுல் கூறியபோது, ஊழியத்தைத் தாங்குகின்ற இந்தத் திட்டத்தைப்பற்றித்தான் கூறியிருந்தான். பின்னர் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது: "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" (1 தீமோத்தேயு 5:18) என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டான். (4)

தசமபாகம் கொடுப்பது என்பது அவருடைய ஊழியத்தைத் தாங்குவதற்கென்று தேவன் ஏற்படுத்தின திட்டங்களில் ஒன்றாக இருந்தது. பலதரப்பட்ட பரிசுகளும் காணிக்கைளும் தெய்வீகத்தினால் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. தேவனுடைய காரியத்தைத் தாங்குதல், தேவையிலுள்ளவர்களுக்குக் கொடுத்தல் ஆகிய இரண்டிலும் யூத முறைமையின்கீழ் மக்கள் தாராள மனப்பான்மையென்னும் ஆவியைப்

பேணவேண்டுமென்று போதிக்கப்பட்டிருந்தனர். சிறப்பான சந்தர்ப்பங்களுக்கென்று தோத்திரக் காணிக்கைகள் இருந்தன. அறுவடையின்போதும் கனிகளைப் பறிக்கின்ற காலத்திலும் வயலின் முதற்பலன்கள்—தானியம், திராட்சைரசம், எண்ணெய் ஆகியவைகள்—கர்த்தருக்குக் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. அறுவடையின்போது, கீழே தவறி விழுந்திருந்த கதிர்களும் வயல்களின் ஓரங்களில் இருந்த கதிர்களும் ஏழைகளுக்கென்று தனித்துவைக்கப்பட்டிருந்தன. ஆடுகள் மயிர் கத்தரிக்கப்பட்டபோதும், கோதுமை களத்தில் அடிக்கப்பட்டபோதும் இவைகளின் முதற்பலன்கள் தேவனுக்கென்று பிரித்துவைக்கப்பட்டிருந்தன. மிருகங்களின் தலையீற்றுகளிலும் இப்படியே இருந்தன. முதலில் பிறந்த மகனுக்கென்று மீட்பின் கிரயம் செலுத்தப்பட்டிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தில் முதற்பலன்கள் கர்த்தருடைய சமூகத்தில் படைக்கப்பட்டு, அதன்பின் ஆசாரியர்களுடைய உபயோகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. (5)

சகல காரியங்களிலும் அவர் முதல்வராக வைக்கப்படவேண்டும் என்பதை இந்த அனுசரணையான முறையினால் இஸ்ரவேலுக்குப் போதிக்கக் கர்த்தர் வகைதேடியிருந்தார். இவ்வாறாக, அவர்களுடைய வயல்கள், ஆட்டுமந்தைகள் விலங்கினங்கள் ஆகியவைகளுக்கும் தேவன் உரிமையாளராக இருந்தார் என்பது அவர்களுக்கு நினைவூட்டப்பட்டிருந்தது. தானியங்களை அறுவடைக்கென்று முதிரச்செய்யும்படி சூரிய ஒளியையும் மழையையும் அனுப்பியிருந்தவர்—அவர்தான் என்பது அவர்களுக்கு நினைப்பூட்டப்பட்டிருந்தது. அவர்களது உடைமைகளாக இருந்த அனைத்தும் அவருடையதாக இருந்தது. அவர்கள் அவரது பொருட்களின் உக்கிராணக்காரர்களாக இருந்தனர். (6)

யூத ஜாதியினரைவிட மிதமிஞ்சிய சலுகைகளைப் பெற்றிருக்கும் கிறிஸ்தவர்கள் யூதர்கள் கொடுத்ததைவிடக் குறைவான அளவில் இலவசமாகக் கொடுத்தால் போதுமானது என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கவில்லை. “எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்”—லூக்கா 12:48. எபிரெயர்களிடம் அவசியப்படுத்தப்பட்டிருந்த தாராளத்தன்மை பெருமளவிற்கு அந்த ஜாதியினரின் நன்மைக்கானதாகவே இருந்தது, இன்று கர்த்தருடைய ஊழியம் உலகமெங்கும் விரிவடைகின்றது. சுவிசேஷத்தின் கருவூலங்களைக் கிறிஸ்து அவரது அடியார்களின் கரங்களில் வைத்திருந்து, இரட்சிப்பின் நற்செய்தியை உலகத்திற்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பை அவர்கள்மீது வைத்திருக்கிறார். பண்டைய இஸ்ரவேலர்களிடமிருந்த கடமைப்

பொறுப்புகளைவிட நமது கடமைப் பொறுப்புகள் மிகவும் அதிகமாக— பெரியவைகளாக உள்ளன. (7)

தேவனுடைய பணி விரிவடையும்போது, உதவிக்கான வேண்டுகோள்கள் மேலும் மேலும் அடிக்கடி அதிகரிக்கும். இந்த அழைப்புக்களுக்குப் பதில்கொடுக்கும்படி: "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கியா 3:10) என்னும் கட்டளைக்குக் கிறிஸ்தவர்கள் செவிசாய்க்கவேண்டும். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் தங்களுடைய தசமபாகங்களையும் காணிக்கைகளையும் விசுவாசத்துடன் தேவனிடத்திற்குக் கொண்டுவருவார்களானால் அவரது கருவூலம் நிறைந்திருக்கும். சுவிசேஷத்தைத் தாங்குவதற்கான நிதியை சேகரிப்பதற்காக விழாக்கள், அதிர்ஷ்டப்பரிசுகள், மகிழ்ச்சி விருந்துகள் ஆகியவைகளை நடத்துகின்ற சந்தர்ப்பம் ஏற்படாது. (8)

சுயத்தை திருப்திப்படுத்தவும் உணவின்மீதுள்ள விருப்பத்தை நடைமுறைப்படுத்தவும் உடலை அலங்கரிப்பதற்கும் அல்லது அவர்களுடைய வீடுகளை அழகுபடுத்தவும் தங்களுடைய வருமானங்ளைப் பயன்படுத்தும்படி மனிதர்கள் சோதிக்கப்படுகின்றனர். இந்த நோக்கங்களுக்காக அநேக சபை அங்கத்தினர்கள் தாராளமாகச் செலவுசெய்யவும் அளவிற்கு மிஞ்சி வீணாகச் செலவுசெய்யவும் தயங்குவதில்லை. ஆனால் கர்த்தரின் பொக்கிஷத்திற்குக் கொடுக்கும்படி கேட்கப்படும்போது, பூமியில் அவருடைய பணியை முன்கொண்டு செல்லுவதற்காகக் கேட்கப்படும்போது, அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்; மறுக்கின்றனர். அப்படிக் கொடுக்காவிட்டால் அவர்களால் நன்றாக இருக்கமுடியாதென்று உணர்ந்து, தேவையில்லாத—மிகக் குறைவான ஒரு தொகையைக் கொடுக்கின்றனர். கிறிஸ்துவின் சேவையில் உண்மையான அன்பை வெளிக்காட்டாமலும் ஆத்துமாக்களின் இரட்சிப்பில் அக்கறை இல்லாதவர்களுமாக அவர்கள் உள்ளனர். அப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை குள்ளமானதாகவும் நோயுற்ற பிறவியானதாகவும் இருக்கிறது என்பது எப்படிப்பட்ட ஆச்சரியமாக உள்ளது. (9)

கிறிஸ்துவின் அன்பினால் எவனுடைய இருதயம் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றதோ, அவன் அதனைத் தனது ஒரு கடமையாக மட்டும் எண்ணாமல், மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணிகள் எல்லாவற்றி லும் மிகவும் மேலானதாகவும் பரிசுத்தமானதாகவும் எண்ணி, அதனை

முன்கொண்டு செல்லுவதை ஒரு மகிழ்ச்சியான காரியமான—நல்ல தன்மைகளின் செல்வங்களான இரக்கம் சத்தியம் ஆகியவைகளை முன்கொண்டு செல்லுவதைப் போன்ற ஒரு மகிழ்ச்சியான காரியமாகக் கருதுவான். (10)

பிறர் பொருட்கள்மீதுள்ள இச்சையின் ஆவி, நியாயமான விதத்தில் தேவனுக்குச் சொந்தமாக இருப்பவைகளை, சுயத்தைத் திருப்திப்படுத்துவதற்காகச் செலவு செய்யும்படி மனிதர்களை நடத்துகிறது. "நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார். இப்போதும் தேவனுடைய சமுகத்தை நோக்கிக் கெஞ்சுங்கள்; அப்பொழுது நம்மேல் இரங்குவார்; இது உங்களாலே வந்த காரியம், அவர் உங்களை அங்கீகரிப்பாரோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்" (மல்கியா 1:8,9) என்று தேவன் மனிதர்களை அன்று கடிந்துகொண்டிருந்தைப்போல இப்பொழுதும் அந்த ஆவி தேவனுக்கு வெறுப்பானதாக உள்ளது. தாராள மனப்பான்மை பரலோகத்தின் ஆவியாக இருக்கிறது. சிலுவையின்மீது கிறிஸ்து செய்த தியாகபலியின் மிக உயரமான வெளிக்கட்டுதலை அந்த ஆவி காண்கிறது. தேவன் தமது ஒரே பேறான குமாரனை நமக்காகத் தந்தார். கிறிஸ்து தம்முடையதாக இருந்த எல்லாவற்றையும் விட்டுவிட்டு மனிதன் இரட்சிக்கப்படுவதற்காகத் தம்மையே ஈந்தார். கிறிஸ்துவின் அடியார்கள் ஒவ்வொருவரையும் நோக்கி கல்வாரிச் சிலுவை அவர்களது அனுதாபத்திற்காக முறையீடு செய்வதாக அமையவேண்டும். கொடு! கொடு! என்பதுதான் இங்கு சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள கொள்கையாக உள்ளது. "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்"–1 யோவான் 2:6. (11)

அப்படியில்லாமல் சுயநலத்தின் ஆவி—சாத்தானின் ஆவியாக இருக்கிறது. அடைந்துகொள்! மேலும் அடைந்துகொள்! என்னும் கொள்கை உலகப்பிரகாரமான மக்களின் வாழ்க்கைகளில் சித்தரிக்கப்படுகிறது. இவ்வாறாக மகிழ்ச்சியையும் சௌகரியத்தையும் அடைந்துகொள்ளலாமென்று அவர்கள் நம்புகின்றனர். ஆனால் அவர்கள் விதைப்பவைகளின் கனி, துன்பமும் மரணமுமாக உள்ளது! (12)

தேவன் தமது பிள்ளைகளை ஆசீர்வதிப்பதை நிறுத்தாதவரை அவருடைய பிள்ளைகள் அவர் உரிமைபாராட்டும் பங்கை அவருக்குத்

திரும்பச் செலுத்துகின்ற ஒப்பந்தத்தில் இல்லாதவர்களாகிவிடுவார்களா? கர்த்தருக்குச் சொந்தமான அவருடைய பங்கை அவருடைய பிள்ளைகள் அவருக்குச் செலுத்துவதுமட்டுமன்றி தோத்திரக் காணிக்கையையும் அவர்கள் தாராளமாக அவருடைய கருவூலத்திற்குக் கொண்டுவரவேண்டும். அவர்களது ஏராளங்களிலிருந்துள்ள முதற்வபலன்களை மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களுடைய உடைமைகளை அவர்களுடைய மிகச் சிறந்த பரிசுத்தமான சேவையை மகிழ்ச்சிமிக்க இருதயங்களுடனும் அவர்கள் சிருஷ்டிகருக்குப் பிரதிஷ்டை செய்யவேண்டும். இவ்வாறாக, அவர்கள் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். ஒருபோதும் வற்றாத நீரை உடைய வற்றாத நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போல தேவன் தாமே அவர்களுடைய ஆத்துமாக்களை ஆக்குவார். இறுதிப் பெரும் அறுவடை சேர்க்கப்படும்போது, ஆண்டவரிடம் கொண்டுவரப்படுவதற்குத் தகுதிப்படுத்தப்பட்ட கதிர்கட்டுகளானது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த தாலந்துகளின் சுயநலமற்ற பயன்படுத்தலுக்கான பிரதிப்பலனாக இருக்கும். (13)

தீவிரமானப் பணியில் ஈடுபட்டிருக்கும் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டுள்ள தூதுவர்கள் தங்களுடைய சகோதரர்களின் அனுதாபமும் இதயப்பூர்வமான ஆதரவு என்னும் உதவியும் இல்லாதவர்களாக, தங்களுடைய சுயபலத்துடன் தனித்து நின்று போரில் ஈடுபடும்படி ஒருபோதும் வற்புறுத்தப்படக்கூடாது. தங்களை ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுப்பதற்காக, தங்களுடைய மதச் சார்பற்ற வேலையை ஒரு பக்கமாக வைப்பவர்களுடன் தாராளமானவிதத்தில் இடைப்படவேண்டியது சபை அங்கத்தினர்களின் பங்காக இருக்கிறது. தேவனுடைய ஊழியக்காரர்கள் தைரியப்படுத்தப்படும்போது, அவருடைய காரியம் பெரிய அளவில் முன்னேறுகிறது. ஆனால் மனிதர்கள் தங்களுக்கு உரித்தான ஆதரவை சுயநலத்தினால் நிறுத்திவைத்துக்கொள்ளும்போது, அவர்களுடைய கரங்கள் பலவீனமடைகின்றன. அடிக்கடி அவர்களால் உண்டாகும் பயன் முடமடைந்துவிடுகிறது. (14)

தங்களைத் தேவனுடைய அடியார்கள் என்று உரிமைபாராட்டிக் கொண்டிருந்து அதே நேரத்தில் தீவிரமான ஊழியத்தில் அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஊழியக்காரர்களை வாழ்க்கையின் தேவைகளுக்காகத் துன்பப்படும்படி அனுமதிப்பவர்களின்மீது தேவனுடைய கோபம் பற்றியெரிகிறது. இந்த சுயநலமிக்கவர்கள், தங்களுடைய கர்த்தரின் பணத்தைத் தவறானவிதத்தில் பயன்படுத்தியதற்காக மட்டும் கணக்குக் கொடுக்கும்படி அழைக்கப்படாமல், அவருடைய விசுவாசமிக்க ஊழியக்

காரர்கள் இவர்களது நடத்தையினால் கொண்டுவரப்பட்ட மனத்தொய்வு இருதயவேதனை ஆகியவைகளுக்காகவும் கணக்குக் கொடுக்கும்படியாக அழைக்கப்படுவார்கள். ஊழியத்திற்கு வரும்படி அழைக்கப்பட்டவர்கள் கடமையைச் செய்யும்படியான அழைப்பின்போது, தேவனுடைய சேவையில் ஈடுபடுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டவர்கள் சுயத்தைத் தியாகம்செய்கின்ற தங்களுடைய முயற்சிக்குத் தங்களைத் தாங்குவதற்காகவும் தங்களுடைய குடும்பங்களைத் தாங்குவதற்குமான கூலியைப் பெறவேண்டும். (15)

சமயச் சார்பற்ற வேலைகளையுடைய பல துறைகளில் மனம் சரீரம் விசுவாசம் ஆகியவைகளையுடைய வேலைக்காரர்களால் நல்ல ஊதியத்தைச் சம்பாதிக்கமுடியும். சத்தியத்தைப் பரப்புகின்றதும் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவினிடத்திற்கு நடத்துகின்றதுமான பணி, சாதாரணமான எந்தத் தொழிலையும்விட முக்கியமான பணியாக இருப்பதில்லையா? இந்த வேலையில் விசுவாசத்துடன் தங்களை ஈடுபடுத்துபவர்கள் போதுமான அளவிற்குச் சம்பளம் பெறுவதற்கு நியாயமாகத் தகுதியானவர்களாக இருப்பதில்லையா? சன்மார்க்க நெறிக்கும் உடல் நலத்திற்குமிடையிலுள்ள உறவையடுத்த உழைப்பிற்கான விலைமதிப்பைப்பற்றிய நமது அனுமானத்தினால் பூமிக்குரியவைகளுடன் பரலோகத்திற்குரியவைகளை ஒப்பிடுகின்ற நமது வரவேற்பை நாம் காட்டுகிறோம். (16)

ஊழியத்தைத் தாங்குவதற்காகவும், மிஷனரி வேலைகளிலுள்ள உதவிகளுக்கான அழைப்புக்களை சந்திப்பதற்காகவும் தேவனுக்கு மகிழ்ச்சியுடனும் தாராளமாகவும் கொடுக்கவேண்டியது அவசியமாக உள்ளது. தேவனுடைய காரியத்திற்கான அவசியங்களுக்காகவும் அவர்களைத் தாராளமானவர்களாக இருக்கும்படி கற்பிப்பதற்கும், அவைகளைச் சபைகளின்முன் வைக்கவேண்டிய பக்திவிநயமான பொறுப்பு ஊழியர்களின்மீது தங்கியுள்ளது. இது அலட்சியப்படுத்தப்பட்டு, பிறரின் தேவைகளுக்காகக் கொடுப்பதற்குச் சபைகள் தவறிவிடும்போது, கர்த்தருடைய பணி பாதிக்கப்படுவது மட்டுமன்றி விசுவாசிகளுக்கு வந்துசேர வேண்டிய ஆசீர்வாதங்களும் நிறுத்திவைக்கப்படுகின்றது. (17)

மிகவும் தரித்திரராக இருப்பவரும்கூட தங்களுடைய காணிக்கைகளை தேவனிடத்திற்குக் கொண்டுவரவேண்டும். தங்களுடைய சுய தேவைகளைவிட, மிக அதிகமானதாக இருக்கும் பிறரின் தேவைகளுக்காக உதவிசெய்வதற்காக, சுயத்தை மறுப்பதினால் அவர்கள் கிறிஸ்துவின் கிருபையில் பங்குபெறுபவர்களாக இருக்கவேண்டியவர்களாக உள்ளனர். ஏழையின் அன்பளிப்பு, சுயமறுப்பின்கனி, தேவனுக்குமுன் சுகந்தவாசனையாக

உயரே வருகிறது. சுயத்தைத் தியாகஞ்செய்யும் ஒவ்வொரு செயலும், கொடுப்பவரின் இருதயத்தை அறச்செயலின் ஆவியினால் பலப்படுத்தி, ஐசுவரியமுள்ளவராக இருந்தும், அவரது தரித்திரத்தின் மூலமாக நாம் ஐசுவரியவான்களாகும்படி நமக்காக தரித்திரரானவரை நம்முடன் இணைக்கிறது. (18)

தன்னிடம் உண்டாயிருந்த அனைத்துமான இரண்டு காசுகளைக் காணிக்கையாகப் பொக்கிஷத்தில் செலுத்தின விதவையின் செயல் வறுமையுடன் போராடிக்கொண்டிருந்தபோதிலும் தேவனுடைய காரியத்திற்குத் தங்களது அன்பளிப்புகளினால் உதவ இன்னும் விருப்பமுள்ளவர்களாக இருப்பவர்களை உற்சாகப்படுத்துவதற்காக ஆவணத்தில் வைக்கப்பட்டுள்ளது. தனது சம்பாத்தியம் முழுவதையும் கொடுத்துவிட்ட இந்த ஸ்திரீயைப்பற்றின கவனத்திற்குக் கிறிஸ்து அவருடைய சீடர்களை அழைத்திருந்தார். சுயமறுப்பை அழைக்காதவர்களாக இருந்தவர்களின் பெரும் தொகையான தருமங்களைவிட, அவளுடைய அன்பளிப்பை அவர் அதிக உயர்வாக மதித்தார். அவர்கள் தங்களுடைய ஏராளத்திலிருந்து ஒரு சிறு பகுதியைக் கொடுத்திருந்தனர். அந்த விதவை நாளைக்குள்ள தேவைகளை தேவன் கொடுப்பார் என்று நம்பிக்கொண்டு, காணிக்கை செலுத்துவதற்காகத் தனது வாழ்க்கையின் தேவைகளைக்கூட இழந்திருந்தாள். “அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்;அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்” (மாற்கு 12:43,44) என்று அவளைப்பற்றி இரட்சகர் கூறினார். இவ்வாறாகக் கொடுக்கப்படும் தொகையினால் அந்த அன்பளிப்பு கணக்கிடப்படாமல் கொடுக்கப்பட்டிருந்ததின் பகுதியினாலும் கொடுப்பவரைக் கொடுக்கும்படி தூண்டுகிற நோக்கத்தினாலும் அனுமானிக்கப்பட்டிருந்தது. (19)

தேவனுடைய காரியத்திற்காகப் பெரிய காரியங்களைச்செய்யும்படி ஒரு வாஞ்சையைப் புதிதாக மாறினவர்களின் இருதயங்களில் தூண்டவேண்டும் என்பதற்கான முயற்சியில் சபைகளுக்கிடையில் பவுல்செய்திருந்த ஊழியத்தில் களைப்பற்றவனாக இருந்தான். அவர்கள் தாராளத்தன்மையைச் செயல்படுத்தவேண்டும் என்று அவன் அடிக்கடி அவர்களுக்கு உபதேசித் திருந்தான். எபேசிய சபை மூப்பர்களிடத்தில் அவன் தன்னுடைய ஊழியத்தைப்பற்றிக் கூறினபோது: “சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல,

கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரிந்தியர் 9:6,7) என்றான். (20)

ஏறத்தாழ மக்கெதோனிய விசுவாசிகளனைவரும் உலகப் பொருள்களில் ஏழைகளாக இருந்திருந்தனர். ஆனால் தேவன்மீதுள்ள அன்பினாலும் அவருடைய சத்தியத்தினாலும் அவர்களுடைய இருதயங்கள் நிரம்பி வழிந்திருந்தது. சுவிசேஷத்தைத் தாங்குவதற்காக அவர்கள் சந்தோஷத்துடன் கொடுத்தனர். யூத விசுவாசிகளின் நிவாரணத்திற்காக, புறஜாதியாரின் சபைகளில் பொதுவான காணிக்கைகள் சேகரிக்கப்பட்டிருந்தபோது, மற்ற சபைகளுக்கு உதாரணமாக இருக்கும்படி மக்கெதோனிய சபையில் மாறியிருந்தவர்களின் தாராளத்தன்மை உயரத்தில் வைக்கப்பட்டிருந்தது. "அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்" (2 கொரிந்தியர் 8:1–4) என்று கொரிந்தியர்களுக்கு எழுதினபோது, அப்போஸ்தலன் அவர்களுடைய கவனத்தை அழைத்தான். (21)

மக்கெதோனிய விசுவாசிகளின் பகுதியாக அவர்களிடமிருந்த தியாகம் செய்வதற்கான விருப்பம் முழு இருதயத்துடனான அர்ப்பணத்தில் வந்திருந்தது. தேவஆவியினால் ஏவப்பட்டிருந்த அவர்கள், முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்திருந்தார்கள் (2 கொரி. 8:5). பின்பு சுவிசேஷத்தைத் தாங்குவதற்காகத் தங்களுடைய பொருட்களைத் தாராளமாகக் கொடுப்பதற்கு விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள். கொடுக்கும்படி அவர்களை வற்புறுத்தவேண்டிய அவசியம் இருந்திருக்கவில்லை. அதைவிட மற்றவர்களின் தேவைகளுக்கு வழங்குவதற்காக தங்களுக்கு அவசியமாக இருந்த பொருட்களையுங்கூட மறுப்பதில் கிடைத்த சலுகைக்காக அவர்கள் களிகூர்ந்திருந்தனர். அப்போஸ்தலன் அவர்களைத் தடைசெய்யலாம் என்று எண்ணியிருந்தபோது, அவர்களுடைய காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் அவனை ஓயாது கெஞ்சிக்கேட்டனர். அவர்களுடைய எளிமை,

நேர்மை, சகோதரர்களின்மீதிருந்த அவர்களுடைய அன்பு ஆகியவைகளில் அவர்கள் சந்தோஷத்துடன் சுயத்தை மறுத்து, இவ்வாறாக அனுதாபம் என்னும் கனியில் பெருகினார்கள். (22)

கொரிந்துவிலிருந்த விசுவாசிகளைப் பலப்படுத்தும்படி பவுல் தீத்துவை அனுப்பினபோது, கொடுக்கும் கிருபையினால் சபையைக் கட்டி எழுப்பும்படி அவனுக்குப் பவுல் போதனை செய்தான். விசுவாசிகளுக்கு அவன் எழுதின சொந்தக் கடிதத்தில் அவனுடைய சொந்த வேண்டுகோளையும் சேர்த்துக்கொண்டான். “அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்.” “ஆகையால் அதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள்; கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக. ஒருவனுக்கு மனவிருப்ப மிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின் படியே அங்கிகரிக்கப்படும்.” “மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார். தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும்; மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்”–2 கொரிந்தியர் 8:7,11,12; 9:8–11. (23)

சுயநலமற்ற தாராள மனப்பான்மை ஆரம்பகால சபையை மகிழ்ச்சியில் நிரப்பியது. ஏனெனில் இருளில் இருப்பவர்களுக்குச் சுவிசேஷத்தின் தூதை அனுப்புவதற்கு, அவர்களுடைய முயற்சிகள் உதவிக்கொண்டிருந்தன என்பதை அந்த விசுவாசிகள் அறிந்திருந்தனர். அவர்கள் தேவகிருபையை வீணாகப் பெற்றிருக்கவில்லை என்பதற்கு அவர்களுடைய அனுதாபச் செயல்கள் சாட்சி பகர்ந்திருந்தன. பரிசுத்தமாக்கப்பட்ட ஆவியினாலன்றி வேறு எதனால் அப்படிப்பட்ட தாராளத்தன்மையை உண்டுபண்ணியிருந்திருக்கமுடியும்? விசுவாசிகள் விசுவாசமில்லாதவர்கள் ஆகியவர்களின் கண்களில் அது கிருபையின் ஒரு அற்புதமாக இருந்தது! (24)

ஆவிக்குரிய செழுமை என்பது, கிறிஸ்தவ தாராளத்தன்மையுடன் நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் அடியார்கள் தங்களுடைய வாழ்க்கைகளில் தங்களுடைய மீட்பரின் அறச்செயலை வெளிக்காட்டக் கிடைத்துள்ள சலுகைக்காக மகிழ்ந்து களிகூரவேண்டும். அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்கும்போது, அவர்களுக்கு முன்பே அவர்களுடைய பொக்கிஷங்கள் பரலோகப் பிராகாரங்களுக்குச் செல்லுகின்றன என்னும் நிச்சயத்தை அவர்கள் பெற்றுள்ளனர். மனிதர்களால் அவர்களுடைய சொத்துக்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளமுடியுமா? சிலுவையில் அறையப்பட்டதன் தழும்புகளை உடையவரின் கரங்களில் அவர்கள் அதனை வைப்பார்களாக. அவர்களால் அவர்களுடைய பொருட்களை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கமுடியுமா? தேவை உள்ளவர்களையும் துன்பப்பட்டுக்கொண்டிருப்பவர்களையும் ஆசீர்வதிக்க அவர்கள் அதனைப் பயன்படுத்துவார்களாக. தங்களுடைய உடைமைகளை அவர்கள் அதிகரிக்கவேண்டுமா? "உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்" (நீதி. 3:9–10) என்னும் தெய்வீகக் கட்டளைக்கு அவர்கள் செவிசாய்ப்பார்களாக. அவர்கள் தங்களுடைய உடைமைகளை அவர்களுடைய சுயநலமிக்க நோக்கங்களுக்காகச் செலவிடட்டும்; அப்பொழுது அது அவர்களது நித்திய இழப்புக்கானதாக இருக்கும். ஆனால் அவர்கள் தங்களுடைய பொக்கிஷங்களை தேவனுக்குக் கொடுக்கட்டும்; அந்த வினாடியிலிருந்து அது அவருடைய பெயர் பொறிக்கப்பட்டதாக இருக்கிறது. அவரது மாறாத தன்மையினால் அது முத்திரையிடப்பட்டுள்ளது. (25)

"மாடுகளையும் கழுதைகளையும் நடத்திக்கொண்டுபோய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்" (ஏசாயா 32:20) என்று தேவன் அறிவிக்கிறார். தேவனுடைய காரியம் அல்லது மானுடத்தின் தேவைகள் எங்கெல்லாம் நமது உதவிகளைக் கோருகிறதோ அங்கெல்லாம் தேவனுடைய ஈவுகளைத் தொடர்ச்சியாகக் கொடுப்பது வறுமைக்கு நடத்துகிறதில்லை. "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு" (நீதிமொழிகள் 11:24). விதைவிதைப்பவன் அதை விதைத்துவிட்டுச் செல்லுவதினால் அதனைப் பெருகச்செய்கிறான். தேவனுடைய ஈவுகளைப் பகிர்ந்தளிப்பவர்களின் காரியமும் அப்பபடிப்பட்டதாகவே இருக்கிறது. கொடுப்பதினால் அவர்கள் தங்களுடைய ஆசீர்வாதங்களை அதிகப் படுத்துகின்றனர். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த

அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்கா 6:38) என்று கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார். (26) ★

## 33

# இன்னல்களுக்கிடையில் இயேசுவின் ஊழியம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 346–358)**

**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 20:33–35**

தேவனுடைய பணியைச் சிறப்பானவிதத்தில் தாங்குவதற்கான வேதவாக்கியத்தின் போதனைகளை பவுல் அவனால் மாற்றமடைந்தவர்களுக்குமுன் வைப்பதற்குக் கவனமுள்ளவனாக இருந்தபோது, ஒரு சுவிசேஷ ஊழியக்காரனாக இருக்கும் அவன், தனது வாழ்க்கைக்காக வேலைசெய்ய வேண்டிய அவசியமில்லாத நிலையில் இருந்திருந்தபோதிலும் அவனுடைய ஊழியத்தில் பல சமயங்களில் நாகரீகத்தின் பெரும் மையங்களாக இருந்த இடங்களில் அவன் தனது காரியங்களை நடத்துவதற்காக ஒரு கைத்தொழிலைச் செய்திருந்தான். (1)

சரீர உழைப்புமிக்க வேலைகள் மாறுபட்டது அல்லது கேவலமானது என்ற எண்ணம் யூதர்களுக்கிடையில் இருக்கவில்லை. எபிரெயர்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தொழில்செய்யும் பழக்கங்களில் பயிற்றுவிக்கவேண்டும் என்று மோசேயின்மூலமாகப் போதிக்கப்பட்டிருந்தனர். வாலிபன் சரீரப்பிரகாரமான உழைப்பை அறியாதவனாக வளரும்படி அனுமதிப்பது ஒரு பாவமாகக் கருதப்பட்டிருந்தது. பரிசுத்தமான பதவியை வகிக்கும்படி ஒரு பிள்ளை பயிற்றுவிக்கப்படவேண்டியது அவசியமானதாக இருந்தபோதிலும் நடைமுறை வாழ்க்கையைப்பற்றிய ஒரு அறிவு முக்கியமானதாகக் கருதப்பட்டிருந்தது. ஒவ்வொரு வாலிபனும் அவர்களுடைய பெற்றோர்கள் செல்வந்தர்களாகவோ அல்லது ஏழைகளாகவோ இருந்தபோதிலும் ஏதாவதொரு தொழில் கற்பிக்கப்பட்டிருந்தான். தங்களுடைய பிள்ளைகளுக்கு அப்படிப்பட்ட பயிற்சியை அளிக்கத் தவறியிருந்த பெற்றோர்கள், கர்த்தருடைய போதனையைவிட்டு விலகிச்சென்றிருப்பவர்களாகப் பார்க்கப்பட்டிருந்தனர். இந்தச் சம்பிரதாயத்தின்படி பவுல் கூடாரம் அமைப்பதை ஆரம்பகாலத்திலிருந்தே கற்றிருந்தான். (2)

பவுல், கிறிஸ்துவின் ஒரு சீடனாவதற்குமுன், ஒரு மேலான அந்தஸ்தை உடையவனாக இருந்து, தனது வாழ்க்கைக்காகச் சரீரப்பிரகாரமான வேலையைச் சார்ந்தவனாக இல்லாதிருந்தான். ஆனால் பின்னர் அவன் தனது பொருட்கள் அனைத்தையும் கிறிஸ்துவின் காரியத்தை முன்கொண்டுசெல்லப் பயன்படுத்தியபின், சில சமயங்களில் வாழ்க்கையை நடத்துவதற்காகத் தனது தொழிலைச் செய்திருந்தான். மிகக் குறிப்பாக, அவனது குறிக்கோள்கள் எங்கெல்லாம் தவறானவிதத்தில் புரிந்துகொள்ளப்படக்கூடிய சாத்தியதை இருந்ததோ, அங்கெல்லாம் அதைச் செய்திருந்தான். (3)

தெசலோனிக்கேயாவில் அவன் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, தனது அன்றாட ஜீவனத்துக்காகத் தனது கைகளினாலேயே வேலைசெய்வதை நாம் முதலில் வாசிக்கிறோம். அங்கிருந்த விசுவாசிகளுக்கு எழுதினபோது: “நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை.” “சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்” (1 தெசலோனிக்கேயர் 2:6,9) என்று அவன் அவர்களை ஞாபகப்படுத்தினான். மறுபடியும் அவன் தனது இரண்டாவது நிருபத்தில்: “ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச்செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்” (2 தெசலோனிக்கேயர் 3:8,9) என்று அறிவித்தான். (4)

தெசலோனிகேயாவில் தங்கள் கைகளினால் வேலைசெய்ய மறுத்தவர்களைச் சந்தித்தான். இவர்களுக்காகத்தான் பின்னாளில்: “உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற் காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்” என்று எழுதினான். “ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது

உங்களுக்குக் கட்டளையிட்டோமே” (2 தெசலோனிக்கேயர் 3:11,12,10). தெசலோனிக்கேயாவில் வேலை செய்தபோது, அப்படிப்பட்டவர்கள்முன்பாக ஒரு சரியான உதாரணத்தை வைக்க அவன் விரும்பினான். (5)

சபையில் மதவெறியின் ஆவியை அறிமுகம் செய்வதனால் தேவனுடைய ஊழியக்காரர்களின் முயற்சிகளை ஊனப்படுத்துவதற்கு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சாத்தான் வகைதேடியிருந்தான். பவுலின் நாளிலும் இப்படி இருந்தது. பின்வந்த நூற்றாண்டுகளிலும் சீர்திருத்தகாலத்தின் நாட்களிலும் இப்படி இருந்தது. மதவெறி அளவுக்கு மிஞ்சி, ஆர்வம், நிலையற்ற தன்மை, பரிசுத்தமாக்கப்படாத மனங்கள் ஆகிய இழிசெயல்களுக்குள் (விசுவாசிகளை) நடத்துவதற்கு சத்துரு வகைதேடியிருந்தவைகளைத் தங்களுடைய செல்வாக்கினாலும் விசுவாசத்தினாலும் உலகத்தை ஆசீர்வதித்திருந்த விக்ளி∴ப், லூத்தர் இன்னும் அநேகர் சந்தித்திருந்தனர். உண்மையான பரிசுத்தத்தை அடைதல், உள்ளத்தைச் சகலவிதமான உலகப்பிரகாரமான எண்ணங்களிலிருந்தும் உயர்த்திச்சென்று வேலை செய்வதிலிருந்து விலகியிருக்கும்படி மனிதர்களை நடத்துகிறது என்று தவறான விதத்தில் வழிகாட்டப்பட்டிருந்த ஆத்துமாக்களுக்கு போதனை செய்திருக்கின்றனர். குறிப்பிட்ட சில வேத வாக்கியங்களைப்பற்றி அளவுகடந்த பார்வையை உடையவர்களாக இருந்த மற்றவர்கள், வேலை செய்வது பாவம்—கிறிஸ்தவர்கள் தங்களுடைய குடும்பங்களின் உலகப்பிரகாரமான நன்மைகளைப்பற்றிச் சிந்திக்காமல், தங்களுடைய வாழ்க்கையை முற்றிலுமாக ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுத்தவேண்டும் என்று போதித்திருக்கின்றனர். பவுலின் போதனையும் உதாரணமும் இப்படிப்பட்ட அத்துமீறிய பார்வைகளுக்கெதிரான ஒரு கடிந்துகொள்ளுதலாக உள்ளது. (6)

பவுல் தெசலோனிக்கேயாவில் இருந்தபோது, தனது கைகளின் வேலையை மட்டும் முற்றிலுமாகச் சார்ந்திருக்கவில்லை. பின்நாட்களில் அவனுக்கு அந்த நகரத்தில் உண்டான அனுபவத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, அவன் அங்கு இருந்தபோது, பிலிப்பிய விசுவாசிகளிடமிருந்து அவன் பெற்றிருந்த அன்பளிப்புகளை ஒப்புகைசெய்து: “நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்” (பிலிப்பியர் 4:16) என்று கூறினான். அவன் இந்த உதவியைப் பெற்றுக்கொண்டது மட்டுமின்றி விழிப்புடனிருக்கும் ஒரு உதாரணத்தை கவனத்துடன் தெசலோனிக்கேயர்களுக்கு முன்வைத்து, ஒருவரும் பிறர் பொருள்மீதுள்ள இச்சையைப்பற்றி சரியான விதத்தில் குற்றம் சாட்டாதபடியும் சரீரப்பிரகாரமான வேலையைப்பற்றி மதவெறிமிக்க

பார்வையை உடையவர்களாக இருந்தவர்களுக்கு, ஒரு நடைமுறையான கடிந்துகொள்ளுதலைக் கொடுப்பவனாகவும் இருந்தான். (7)

பவுல் கொரிந்துவை முதலில் சந்தித்தபோது, அந்நியரது நோக்கங்களைப்பற்றிச் சந்தேகமுள்ள மக்களுக்கு மத்தியில் அவன் இருப்பதைக் கண்டான். கடற்கரையில் இருந்த கிரேக்கர்கள் கூரிய வியாபாரிகளாக இருந்தனர். கூர்மையான வியாபார நடத்துதல்களில் அவர்கள் தங்களைப் பயிற்றுவித்திருந்தவரை லாபம் என்பதே தெய்வபக்தி என்று நம்ப முற்பட்டிருந்தனர். சரியானவிதத்திலோ அல்லது தவறானவிதத்திலோ பணம் சம்பாதிப்பது புகழ்ச்சிக்குரியது என்று அவர்கள் நம்பியிருந்தனர். அவர்களுடைய தன்மைகளுடன் பவுல் அறிமுகமாகி, தன்னைச் செல்வந்தனாக்கிக் கொள்ளுவதற்காகத்தான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருந்தான் என்று கூறுவதற்கு வாய்ப்புக் கொடுக்காதவனாக இருந்தான். அவனது பிரசங்கத்தைக் கேட்டிருந்த கொரிந்தியர்களிடமிருந்து நியாயமான விதத்தில் ஆதரவை அவனால் உரிமை பாராட்டியிருந்திருக்கமுடியும். அவனது பயன்படும் தன்மையையும், ஒரு உழியக்காரனாக அடையக்கூடிய வெற்றியையும், அவன் ஆதாயத்திற்காகச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறான் என்னும் நியாயமில்லாத சந்தேகத்தினால் காயமடைவதைத் தவிர்க்க, இந்த உரிமையை இழக்க அவன் விருப்பமுள்ளவனாக இருந்தான். அவனது தூதின் வலிமை இழக்கப்பட்டுவிடாதபடி தவறான விதத்தில் எடுத்துக்காட்டப்படக்கூடிய சந்தர்ப்பங்களையெல்லாம் நீக்குவதற்கு அவன் வகைதேடினான். (8)

அவன் கொரிந்துவிற்கு வந்துசேர்ந்த உடனே “ஆக்கில்லா என்னும் பெயருமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துகொண்டு வந்தான்” (அப்போஸ்தலர் 18:2,3). யூதர்கள் அனைவரும் ரோமாபுரியைவிட்டுத் துரத்தப்படவேண்டும் என்ற கிலவுதியு ராயனின் கட்டளையினால், வெளியேற்றப்பட்ட ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கொரிந்துவிற்கு வந்து, அங்கு கூடாரமடித்துக்கொடுக்கும் அவர்களுடைய தொழிலை ஏற்படுத்தினார்கள். பவுல் அவர்களைப்பற்றி விசாரித்தான். அவர்கள் தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் என்பதையும், அவர்களைச் சூழ்ந்திருந்த கறைபடுகின்ற செல்வாக்குகளைத் தவிர்க்க வகைதேடிக்கொண்டிருந்தனர் என்பதையும் அறிந்து அவர்களிடத்தில் தங்கி வேலைசெய்துகொண்டுவந்தான். ஓய்வுநாள் தோறும் அவன்

ஜெப ஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்" (அப்போஸ்தலர் 18:3,4). (9)

பின்னர் சீலாவும் தீமோத்தேயுவும் கொரிந்துவில் பவுலுடன் சேர்ந்துகொண்டனர். ஊழியத்தை நடத்தும்படி மக்கொதோனிய சபைகளிலிருந்து அனுப்பப்பட்டிருந்த நிதியை இந்தச் சகோதரர்கள் தங்களுடன் கொண்டுவந்திருந்தனர். (10)

கொரிந்துவில் ஒரு பலத்த சபையை பவுல் எழுப்பினபின் கொரிந்து சபையினருக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் அவர்களுக்கிடையில் அவன் வாழ்க்கை நடத்தியிருந்த விதத்தை அவர்களுக்குத் திருப்பிக் காட்டினான். "நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்தி, தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ்செய்தேனோ? உங்களுக்கு ஊழியம்செய்யும்படிக்கு, மற்றச் சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன். நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்; எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதை யாயிருப்பேன். அகாயாநாட்டின் திசைகளிலே இந்தப் புகழ்ச்சி என்னைவிட்டு நீங்குவதில்லையென்று என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டு சொல்லுகிறேன்" (2 கொரிந்தியர் 11:7–10) என்றான். (11)

பவுல் ஏன் இந்தப்பாதையை பின்பற்றினான் என்பதைப்பற்றியும் கூறினான். நிந்தனை செய்யப்படுவதற்கான காரணத்தை அவன் கொடுக்கக்கூடாது என்பதாக அது இருந்தது. கூடாரம் செய்யும் வேலையைச் செய்திருந்த அதே நேரத்தில், அவன் சுவிசேஷத்தை அறிவிப்பதிலும் விசுவாசத்துடன் உழைத்திருந்தான். அவனுடைய உழைப்பைப்பற்றி: "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமாக பொறுமைகளோடும் உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2 கொரிந்தியர் 12:12) என்று அவன் தானே தனது ஊழியத்தைக்குறித்து அறிவிக்கிறான். மேலும் "எதிலே மற்றச் சபைகளுக்குக் குறைவாயிருந்தீர்கள்? நான் உங்களை வருத்தப்படுத்தாதிருந்ததே உங்களுக்குக் குறைவு; இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கள். இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை; நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்; பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டும். ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய்

உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்" (2 கொரிந்தியர் 12:13–15) என்றான். (12)

எபேசுவில் அவன் ஊழியஞ்செய்திருந்த நீண்ட காலத்தில்—மூன்றரை வருடங்களாக அவன் ஒரு தீவிரமான படைமுயற்சிக்கூட்டத்தை அந்தப் பிரதேசத்தில் நடத்தியிருந்த நேரத்தில் பவுல் மறுபடியும் தனது தொழிலைச் செய்திருந்தான். அவனது இரண்டாவது மிஷனரிப்பயணத்தின் முடிவில் அவன் ஆசியாவிற்குத் திரும்பி வந்தபோது, அவனுடன் தொடர்ந்திருந்த ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்பவர்களின் உடன் ஊழியத்தினால் எபேசுவில் இருந்ததைப்போலவே கொரிந்துவிலும் அவன் மகிழ்ச்சிப்படுத்தப்பட்டிருந்தான். (13)

ஒரு சுவிசேஷ ஊழியக்காரன் தனது கைகளினால் உழைப்பது பொருத்தமானதல்ல என்று பவுல் தனது கைகளால் வேலைசெய்வதைச் சிலர் தடுத்திருந்தனர். மிக உன்னதமான அந்தஸ்தில் இருந்த ஒரு ஊழியக்காரனான பவுல் இவ்விதமாக தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதுடன் உடல் உழைப்பை ஏன் இணைக்கவேண்டும்? அந்த ஊழியக்காரன் அவனுடைய கூலிக்குத் தகுதியானவனாக இருக்கவில்லையா? தோற்றத்தின்படி நல்ல காரியங்களைச் செய்வதைவிட்டுவிட்டு, கூடாரம்செய்கின்ற வேலையில் அவன் ஏன் தன்னுடைய நேரத்தைச் செலவிடவேண்டும்? (14)

ஆனால் இவ்வாறாகச் செலவிடப்பட்ட நேரத்தைப் பவுல் நஷ்டமென்று கருதவில்லை. இரட்சகருக்குச் சாட்சிகபகருகின்ற வாய்ப்புகளை இழக்காமல், உதவி தேவையானவர்களுக்கு உதவி செய்துகொண்டு, அவன் ஆக்கில்லாவுடன் சேர்ந்து வேலைசெய்திருந்தபோது, மாபெரும் ஆசிரியருடன் தொடர்புடையவனாகத் தன்னை வைத்திருந்தான். ஆவிக்குரிய அறிவுக்காக அவனது மனம் எப்பொழுதும் சென்றுகொண்டிருந்தது. அவன் தன் உடன் வேலைக்காரர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களில் உபதேசங்களைச் செய்துகொண்டிருந்தபோது, சுறுசுறுப்பிற்கும் திறமான வேலைக்கும் தன்னை ஒரு உதாரணமாக வைத்திருந்தான். அவன் விரைவான திறமைமிக்க வேலைக்காரனாகவும், தொழிலில் விழிப்புள்ளவனாகவும், ஆவியிலே அனலாகவும், கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவனாகவும் இருந்தான். (ரோமர் 12:11). அவன் தனது தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, வேறு விதத்தில் சமீபிக்கமுடியாத ஒரு கூட்டத்தை சமீபிக்கின்ற மார்க்கத்தை உடையவனாக இருந்தான். பொதுவான கலைகளிலுள்ள திறமை தேவனிடமிருந்துள்ள ஒரு ஈவாக இருக்கிறது என்றும், அந்த ஈவையும் அதைச் சரியான விதத்தில் பயன்படுத்துவதற்கான ஞானத்தையும் ஏற்பாடு செய்பவர் தேவன்

என்பதையும், அவன் தனது உடன் ஊழியக்காரர்களுக்குக் காட்டினான். நாள்தோறும் உள்ள வேலையிலுங்கூட, தேவன் கனப்படுத்தப்படவேண்டும் என்று அவன் போதித்தான். ஒரு கிறிஸ்தவ ஊழியக்காரனாக அவன் விடுத்த துயரமிக்க வேண்டுகோள்களின் வலிமையிலிருந்தும், உழைப்பினால் கடினமடைந்திருந்த கரங்களிலிருந்தும் எதையும் குறைவுபடச்செய்யவில்லை. (15)

பவுல் தன்னைத் தாங்குவதற்காக மட்டுமின்றி, தனது உடன் ஊழியக்காரருக்கு உதவிசெய்வதற்காகவும் சில சமயங்களில் இரவும் பகலும் வேலைசெய்திருந்தான். அவன் தனது சம்பாத்தியங்களை லுக்காவுடன் பகிர்ந்துகொண்டு, தீமோத்தேயுவுக்கு உதவிசெய்திருந்தான். பிறரின் தேவைகளுக்கு நிவாரணம் அளிக்கும்படி சில சமயங்களில் அவன் பசியையும்கூட அனுபவித்திருந்தான். அவனுடைய வாழ்க்கை, சுயநலமில்லாத ஒரு வாழ்க்கையாக இருந்தது. அவனுடைய ஊழியத்தின் முடிவில், எபேசுவிலிருந்த மெலித்தா என்னுமிடத்திலிருந்த மூப்பர்களிடத்தில் தனது பிரிவு உபசாரச் சொற்பொழிவை நிகழ்த்தினபோது, உழைத்துத் தேய்ந்துபோன கரங்களை அவன் உயர்த்தி: “ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்” (அப்போஸ்தலர் 20:33–35) என்றான். (16)

கிறிஸ்துவின் காரியத்தில் கஷ்டங்களையும் தனிமையையும் அனுபவிப்பதாக ஊழியக்காரர்கள் உணர்வார்களானால் அவர்கள் தங்களுடைய கற்பனையில் பவுல் செய்திருந்த பணிகளைச் சிந்திப்பார்களாக. தெரிந்துகொள்ளப்பட்டிருந்த இந்த தேவ மனிதன், கூடாரத்துணியை வடிவமைத்துக்கொண்டிருந்தபோது, ஒரு அப்போஸ்தலனாக இருந்த அவன் அதற்கென்று நியாயமாக அவனுடைய ஊதியத்தைப் பெற்றிருக்கக்கூடியவனாக இருந்திருந்தபோதும், அவனது உணவுக்காக அவன்தானே வேலைசெய்துகொண்டிருந்தான் என்பதை அவர்கள் தங்களின் மனங்களில் வைப்பார்களாக. (17)

வேலைசெய்வது ஒரு சாபமல்ல. அது ஆசீர்வாதமாக இருக்கிறது. மந்தமான நடத்தையின் ஒரு ஆவி, தேவபக்தியை அழித்து, தேவ ஆவியைத்

துக்கப்படுத்துகிறது. தேங்கிநிற்கும் ஒரு குளம் துர்நாற்றமுடையதாக உள்ளது; ஆனால் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு தூய்மையான ஓடை உடல்நலத்தையும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ணுகிறது. சரீரப்பிரகாரமான வேலையை அலட்சியம் செய்பவர்கள் விரைவில் பலவீனர்களாகிவிடுகின்றனர் என்பதை பவுல் அறிந்திருந்தான். வாலிபர்களாக உள்ள ஊழியர்கள் தங்களுடைய தசைகளையும் தசைநார்களையும் வேலைசெய்யும்படி கொண்டுவருவதானால் சுவிசேஷ களத்தில் அவர்களுக்காகக் காத்திருக்கின்ற உழைப்புகளையும் தனிமைகளையும் தாங்கிக்கொள்ள பலமுடையவர்களாவார்கள் என்பதைப் போதிக்க அவன் வாஞ்சையுள்ளவனாக இருந்தான். அவனுடைய உடலின் சகல பகுதிகளையும் சரியானவிதத்தில் இயங்கும்படி அவன் வைத்துக்கொள்ளாவிட்டால் அவனுடைய சொந்த வீரியமும் பலமும் வலிமை இல்லாததாக இருக்கும் என்பதை அவன் உணர்ந்திருந்தான். (18)

வாழ்க்கையின் அன்றாடப் பணிகளை விசுவாசத்துடன் செய்வதால், ஆதாயமாக அடைந்துகொள்ளக்கூடிய விலைமதிப்பற்ற அனுபவத்தை சோம்பேறி இழந்துவிடுகிறான். தேவன் தமது இரக்கத்தினால் அருளும் நன்மைகளைமட்டும்செலவிடுவதற்காக உயிர்வாழுபவர்கள் ஒருசிலராகமட்டும் இராமல், ஆயிரக்கணக்கான மனிதர்களாக உள்ளனர். தேவன் அவர்களிடம் ஒப்படைத்திருக்கின்ற செல்வங்களுக்காக நன்றியறிதலின் காணிக்கைகளைக் கர்த்தரிடத்திற்குக் கொண்டுவர அவர்கள் மறந்துவிடுகின்றனர்.அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகளை ஞானமாக வியாபாரம் செய்வதினால் அவர்களே உற்பத்தியாளர்களாகவும் அதைப்போலவே நுகர்வோர்களாகவும் உள்ளனர் என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். உதவும் கரங்களாக இருந்து, அவர்கள் பணியாற்றவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொண்டால், அவர்கள் தங்களுடைய பொறுப்பைத் தவிர்க்கமாட்டார்கள். (19)

மனிதர்கள் பிரசங்கிக்கும்படி தேவனால் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதிலுள்ள பயனை உணர்வது அவர்கள் தங்களுடைய வேலையில் பிரவேசிக்கின்ற தன்மையை அதிகமாகச் சார்ந்ததாக உள்ளது. தேவனுடைய ஊழியத்திற்கென்று தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவர்களுடைய பரம அழைப்பிற்கான சான்றினை மெய்ப்பித்து, முடிந்த அளிவிலுள்ள ஒவ்வொரு உபாத்தியினாலும் தகுதிமிக்க உழியக்காரராகும் தன்மையை முன்னேற்றமடையச்செய்ய வகைதேடுவார்கள். அவர்கள் திட்டமிடவும் ஏற்பாடுகளைச் செய்யவும் நடத்தவும் அவர்களைப் பொருத்தக்கூடிய அனுபவத்தை அடைந்துகொள்ளவும் முயலுவார்கள். அவர்களுடைய அழைப்பிலுள்ள பரிசுத்த தன்மையை வரவேற்று,

சுய ஒழுக்கத்தினால் அவர்கள் தங்களுடைய ஆண்டவருடைய நல்ல தன்மை, அன்பு, சத்தியம் ஆகியவைகளை வெளிப்படுத்தி அதிகமதிகமாக அவரைப் போலாவார்கள். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாலந்துகளை முன்னேற்றமடையச்செய்வதற்கு அக்கறையை அவர்கள் வெளிக்காட்டும்போது, சபை விவேகமான விதத்தில் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். (20)

பிரசங்கம் செய்வதற்கென்று அழைக்கப்பட்டிருப்பதாக உணருகின்ற அனைவருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ச்சியாக நிதி உதவி கிடைக்கின்ற பொறுப்பை உடனடியாக சபையின்மீது வைக்கும்படி உற்சாகப்படுத்தக்கூடாது. குறைவான அனுபவத்தினால் உண்டாகும் முகஸ்துதியினால் கெடுதலும், தங்களுடைய பகுதியாக முயற்சி எதுவும் இல்லாத நிலையில் முழு ஆதரவையும் பெறும்படி ஞானமற்ற விதத்தில் உற்சாகமூட்டுவதிலும் அபாயம் உள்ளது. சுலபமான வாழ்க்கையைக்குறித்த சுயநலமான விருப்பத்தினால் போதிக்க விரும்புகிற மனிதர்களுக்கு ஆதரவு தரும்படி, தேவனுடைய பணியை விரிவடையச் செய்வதற்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள உபாத்திகள் செலவிடப்படக்கூடாது. (21)

தெசலோனிக்கேயா, கொரிந்து, எபேசு மற்றுமுள்ள இடங்களில் இருந்த பவுலின் உதாரணத்தில் ஊழியப்பணியில் தங்களுடைய வரங்களைச் செயலாற்ற விரும்பும் வாலிபர்கள், தங்களுக்கு உதவக்கூடிய ஒரு பாடத்தைக் காண்பார்கள். ஒரு திறமைமிக்க பேச்சாளனாகவும், தேவனுடைய பணியைச் சிறப்பானவிதத்தில் செய்யும்படியாகவும், தெரிந்துகொள்ளப்பட்டவனாகப் பவுல் இருந்திருந்தபோதிலும் அவன் வேலை செய்வதற்குமேல் ஒருபோதும் உயர்ந்தவனாக இல்லாமலும், அவன் நேசித்திருந்த தேவனுடைய காரியத்திற்காகத் தியாகம்செய்வதில் களைப்புற்றவனாகவோ ஒருபோதும் இருக்கவில்லை. “இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்” (1 கொரிந்தியர் 4:11,12) என்று தனது அனுபவத்தைக் குறிப்பிடுகிறான். (22)

ஆசிரியர்களிலெல்லாம் மிகவும் பெரியவர்களாக இருந்தவர்களில் ஒருவனாக இருந்த பவுல், மிகவும் கீழான வேலைகளையும் அதைப்போலவே மிகவும் மேலான வேலைகளையும் மகிழ்ச்சியுடன் செய்திருந்தான். அவனுடைய ஆண்டவரின் சேவையில் வேலைசெய்யவேண்டும் என்பதுபோல் சூழ்நிலைகள் காணப்பட்டபோது, அவன் தன்னுடைய வேலையை மனப்பூர்வமாகச் செய்திருந்தான். அப்படியிருந்தபோதிலும், சுவிசேஷத்தின்

எதிரிகளைச் சந்திப்பதற்காகத் தன்னை ஆயத்தமுள்ளவனாக வைத்திருந்து அல்லது இயேசுவிற்கென்று ஆத்துமாக்களை வெற்றிகொள்ளுவதற்கான ஒரு சிறப்பான வாய்ப்பினை முன்னேற்றமடையச் செய்ய ஆயத்தமானவனாக இருந்தான். சோம்பேறிகளாக இருந்து வசதியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறவர்களுக்குப் பவுலின் பேரார்வமும் உடலுழைப்புமிக்க தன்மையும் ஒரு கடிந்துகொள்ளுதலாகவே உள்ளது! (23)

சரீரப்பிரகாரமான வேலை செய்கின்ற அவசியத்திலிருந்து முற்றிலுமாகத் தங்களை விடுவித்துக்கொண்டவர்களால் மட்டுமே சுவிசேஷத்தை வெற்றிகரமாக அறிவிக்கமுடியும் என்று அப்பொழுது சபையில் உயர்ந்துகொண்டிருந்த நுண்ணுணர்வின் செல்வாக்கிற்கு எதிரான ஒரு உதாரணத்தைப் பவுல் ஏற்படுத்தினான். சுவிசேஷத்தின் சத்தியத்தைப்பற்றி அறிமுகமற்றவர்களாக மனிதர்கள் இருந்த அநேக இடங்களில் தங்களை அர்ப்பணிக்கின்ற சுயாதீனமான மனிதர்கள் என்ன செய்யமுடியும் என்பதற்கான ஒரு நடைமுறை விளக்கத்தைப் பவுல் சித்தரித்திருந்தான். தங்களுடைய அன்றாட வாழ்க்கைக்காக வேலைசெய்துகொண்டிருந்த மிகவும் தாழ்மையான வேலைக்காரர்களால் தேவனுடைய காரியத்தை முன்கொண்டுசெல்லுவதற்கு என்ன செய்யமுடியும் என்னும் வாஞ்சையை அவனுடைய நடத்தை ஊக்குவித்தது. தங்களுடைய முழு நேரத்தையும் ஊழியத்தில் செலவிடும்படி ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அப்படியிருந்தபோதிலும், மிகவும் பூரணமானவிதத்தில் அப்பொல்லோவிற்கு சத்தியத்தின் பாதையைக் காட்டும்படி இந்தத் தாழ்மையான ஊழியக்காரர்கள் தேவனால் பயன்படுத்தப்பட்டிருந்தார்கள். கர்த்தர் அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற பல்வேறுபட்ட கருவிகளைப் பயன்படுத்துகிறார். சிறப்பான தாலந்துகளையுடைய சக்திகள் அனைத்தையும் சுவிசேஷத்தைப் போதிக்கவும் பிரசங்கிக்கவும் ஈடுபடுத்தும்படி தெரிந்துகொண்டிருக்கின்றபோது, அபிஷேகம்பண்ணும்படி மனிதக்கரங்கள் தலைகளின்மீது வைக்கப்படாமல் இருக்கும் மற்றுமுள்ள அநேகர் ஆத்தும இரட்சிப்பின் பணியில் ஒரு முக்கியமான பங்கை செயல்படுத்தும்படி அழைக்கப்பட்டுள்ளனர். (24)

சுயாதீன சுவிசேஷ ஊழியக்காரனுக்கு முன்னால் ஒரு பெரும் பணிக்களம் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. நேரத்தின் ஒரு பகுதியை ஏதாவது ஒருவிதமான உடலுழைப்பில் ஈடுபடுத்தும் நேரத்தில், அநேகர் சுவிசேஷ ஊழியத்தில் விலைமதிப்புமிக்க அனுபவத்தை ஆதாயமாக அடைந்துகொள்ளலாம். இந்தவகையில் அவசியமான களங்களில் முக்கியமான வேலையைச் செய்ய பலமிக்க வேலைக்காரர்களைத் தகுதிப்படுத்தலாம். (25)

வார்த்தையிலும் கோட்பாட்டிலும் களைப்பற்றவனாக வேலை செய்து தன்னைத் தியாகம் செய்கின்ற தேவனுடைய ஊழியக்காரன் தனது இருதயத்தில் பாரமிக்க சுமையைச் சுமந்துகொண்டிருக்கிறான். அவன் தன்னுடைய வேலையை மணிநேரங்களால் அளப்பதில்லை. அவனுடைய சம்பளம் அவனுடைய வேலையில் ஆதிக்கம் செலுத்துவதுமில்லை. அனுகூலமில்லாத நிலைமைகளுக்காக அவன் தனது கடமையை விட்டுத் திரும்புவதுமில்லை. அவன் தனது பணியைப் பரலோகத்திலிருந்து பெற்றிருக்கிறான். அவன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலையைச் செய்துமுடித்திருக்கும் பிரதிபலனுக்காக பரலோகத்தையே பார்க்கிறான்! (26)

தேவையில்லாத கவலையிலிருந்து அப்படிப்பட்ட வேலைக்காரர்கள் விடுதலைபெறவேண்டும் என்பதும், பவுல் தீமோத்தேயுவிற்குக் கொடுத்த கட்டளைக்குக் கீழ்ப்படியும்படியான வாய்ப்பை அவர்கள் பெறவேண்டும் என்பதும், தேவனுடைய திட்டமாக உள்ளது. “நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு” (1 தீமோத்தேயு 4:15). மனமும் உடலும் சுறுசுறுப்பாக இருக்கும்படி அவர்கள் போதுமான அளவிற்கு உழைப்பதற்குக் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டியபோதிலும், அவர்கள் தங்களுடைய நேரத்தின் பெரும் பகுதியை மதசம்பந்தமில்லாத வேலையில் செலவிடும்படி வற்புறுத்தப்படவேண்டும் என்பது தேவனுடைய திட்டமல்ல. (27)

இந்த விசுவாசமிக்க வேலைக்காரர்கள் (நேரத்தை) செலவு செய்யவும் செய்யப்படவும் விருப்பமுள்ளவர்களாக இருந்தபோதிலும் சோதனையிலிருந்து தவிர்க்கப்பட்டவர்களாக இருப்பதில்லை. அவர்களுக்குச் சரியான விதத்திலான பொருளாதார ஆதரவைக் கொடுப்பதற்கு சபை தவறினதால், கவலையினால் அவர்கள் இடையூறும் பாரமும் அடைந்திருக்கும்போது, சிலர் சோதனைக்காரனால் பயங்கரமான விதத்தில் சூழப்பட்டுள்ளனர். அவர்களுடைய உழைப்பு மிகவும் மலிவானதாக மதிக்கப்படுவதை அவர்கள் காணும்போது, மனந்தளர்கிறார்கள். அவர்கள் தங்களுக்கான நியாயமான பரிசுக்கான நியாயத்தீர்ப்பின் எண்ணத்தை எதிர்பார்க்க, இது அவர்களைக் காக்கும் மிதவையாகின்றது. ஆனால் அதே நேரத்தில் அவர்களுடைய குடும்பங்களுக்கு உணவும் உடையும் தேவையானதாக இருக்கிறது. தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீகப் பணியிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தால், அவர்கள் விருப்பத்துடன் தங்களுடைய கைகளால் வேலைசெய்வார்கள். போதுமான அளவிற்கு அவர்களுக்கு நிதியை ஏற்பாடு செய்யவேண்டியவர்கள் குறுகிய பார்வையை உடையவர்களாக இருந்திருந்தாலுங்கூட, அவர்களுடைய

நேரம் தேவனுடையது என்பதை அவர்கள் உணருகின்றனர். பற்றாக்குறை என்னும் நிலைக்கு அப்பால் தங்களை விரைவில் வைக்கக்கூடிய வேலைகளில் பிரவேசிக்கச் செய்யக்கூடிய சோதனைக்கும் மேலாக அவர்கள் உயர்ந்து, ஜீவனைவிட அவர்களுக்கு அதிகமானதாகத் தோன்றும் காரியத்தை முன்கொண்டுசெல்லுவதற்காக உள்ள வேலையில் தொடருகின்றனர். அப்படியிருந்தாலும், இதைச் செய்வதற்காக அவர்கள் பவுலின் உதாரணத்தைப் பின்பற்ற வற்புறுத்தப்பட்டு, தங்களுடைய சுவிசேஷ வேலையில் தொடர்ந்துகொண்டிருக்கின்ற அதே நேரத்தில், சற்று நேரத்திற்கு உடலுழைப்புள்ள வேலையில் ஈடுபடுகின்றனர். தங்களுடைய சொந்தக் காரியங்களில் முன்னேற்றத்திற்காக அவர்கள் இதைச் செய்யாமல் பூமியின்மேலுள்ள தேவனுடைய காரியத்தில் உள்ள ஆர்வத்தினால் இப்படிச் செய்கின்றனர். (28)

ஒரு உறுதியான பலத்த வேலையைச் செய்வதற்கான உபாத்திகள் இல்லாததினால் செய்துமுடிக்கவேண்டிய பணியைச் செய்துமுடிக்கமுடியாது என்று தேவனுடைய வேலைக்காரனுக்குக் காணக்கூடிய நேரங்கள் உள்ளன. தங்களுடைய கட்டளையிலுள்ள வசதிகளில் தாங்கள் செய்யவேண்டிய கடமையாக உள்ள வேலைகள் என்று உணரும் அனைத்தையும், செய்துமுடிக்க முடியாதென்று சிலர் பயமுள்ளவர்களாக உள்ளனர். ஆனால் அவர்கள் விசுவாசத்தினால் முன்செல்லுவார்களானால், தேவனுடைய இரட்சிப்பு வெளிப்படுத்தப்படுகின்ற அவர்களுடைய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும், உலகத்தின் சகல பகுதிகளுக்கும் செல்லும்படி கட்டளையிட்டவர், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய தூதை அறிவிக்க வகைதேடும் ஒவ்வாரு ஊழியக்காரனையும் தாங்குவார். (29)

கர்த்தருடைய பணியை முன்கொண்டு செல்லுவதில் கர்த்தர் அவருடைய ஊழியக்காரர்களுக்குமுன் எல்லாவற்றையும் வெளிப்படையாக்குவதில்லை. விசுவாசத்தினால் முன்செல்லும்படி வற்புறுத்தக்கூடிய சூழ்நிலைகளுக்குள் கொண்டுவருவதினால், அவர் சில சமயங்களில் அவரது ஜனங்களின் நம்பிக்கையைச் சோதித்துப்பார்க்கிறார். நெருக்கமும் முயற்சியுமிக்க பாதையில் அவர் அடிக்கடி அவர்களைக் கொண்டுவருவதினால் சில சமயங்களில் அவரது ஜனங்களின் நம்பிக்கையை சோதித்துப் பார்க்கிறார். நெருக்கமும் முயற்சியுமிக்க பாதையில் அவர் அடிக்கடி அவர்களைக் கொண்டுவந்து, அவர்களுடைய பாதங்கள் யோர்தானின் தண்ணீரைத் தொடுவது போல் தேன்றும்போது, முன்நோக்கிச்செல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிடுகிறார். இப்படிப்பட்ட நேரங்களில் அக்கறைமிக்க விசுவாசத்துடன்

அவரது வேலைக்காரின் ஜெபங்கள் அவரிடத்திற்கு உயரும்போது, தேவன் அவர்களுக்குமுன் பாதையைத் திறந்து அவர்களை ஒரு விசாலமான இடத்திற்குக் கொண்டுவருகிறார். (30)

தேவனுடைய ஊழியக்காரர்கள் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தின் அவசியமான பகுதிகளின்மீது தங்களுடைய பொறுப்புக்களை உணருவார்களானால், தலைமைப்பணியாளரின் ஆவியுடன் ஆத்துமாக்களின் மாற்றத்திற்காகக் களைப்பில்லாமல் வேலைசெய்வார்களானால், தேவனுடைய தூதர்கள் அவர்களுக்கு முன்பாகப் பாதையை ஆயத்தம் செய்வார்கள். அதோடு வேலையை முன்கொண்டுசெல்லுவதற்கு அவசியமான பொருட்களும் ஏற்பாடு செய்யப்படும். அறிவூட்டப்பட்டவர்கள் தங்கள் சார்பாகச் செய்யப்படுகின்ற வேலையைத் தாங்குவதற்காகத் தாராளமாகக் கொடுப்பார்கள். உதவிக்கான ஒவ்வொரு அழைப்பிற்கும் அவர்கள் தாராளமாகப் பதில் கொடுப்பார்கள். கர்த்தருடைய காரியத்தை உள்நாட்டில் மட்டுமன்றி, பிரதேசங்களுக்கு அப்பாலும் தாங்குவதற்கு தேவனுடைய ஆவி அவர்களுடைய இருதயங்களை அசைப்பார். இவ்வாறாக, மற்ற இடங்களில் உள்ள பணிகளுக்கு வல்லமை வந்து சேரும்; கர்த்தருடைய பணி அவரால் நியமிக்கப்பட்டுள்ள பாதையில் முன்செல்லும். (31) ★

# 34

# தேவனுடைய ஊழியத்தில் ஒரு நல்ல போராட்டம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 359–371)**

**திருவசன ஆதாரம் : 1 தீமோத்தேயு 6:10,11,17–19**

தேவனிடத்தில் தனது பிறப்பை உடையதாக உள்ள சுயநலமற்ற ஊழியத்திற்குக் கிறிஸ்து அவருடைய வாழ்க்கையினாலும் போதனையினாலும் ஒரு பூரணமான உதாரணத்தைக் கொடுத்திருக்கிறார். தேவன் அவருக்கென்று உயிர்வாழ்வதில்லை. இந்த உலகத்தைப் படைத்ததினாலும் எல்லாவற்றையும் தாங்குவதினாலும் தொடர்ச்சியாக மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார். "அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:45). இந்த முழுநிறைவான கொள்கையை உடைய ஊழியத்தைப் பிதா அவருடைய குமாரனிடத்தில் ஒப்படைத்தார். ஊழியஞ்செய்வது என்றால் என்ன? என்பதற்கான உதாரணத்தைக் கொடுப்பதற்காக மனித இனத்தின் தலைமை ஸ்தானத்தில் நிற்கும்படி அவர் பணிக்கப்பட்டிருந்தார். அவருடைய வாழ்க்கை முழுவதும், சேவைசெய்யும் பிரமாணத்தின்கீழிருந்து அவர் அனைவருக்கும் சேவை செய்தார். (1)

இந்தக் கொள்கைகளைத் தமது சீடர்களுக்கிடையில் ஏற்படுத்த இயேசு மறுபடியும் முயன்றிருந்தார். யாக்கோபும் யோவானும் முதல் ஸ்தானத்தில் வைக்கப்படவேண்டும் என்ற அவர்களுடைய வேண்டுகோளை வைத்தபோது, "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மத்தேயு 20:26–28). (2)

கிறிஸ்து பரமேறிச்சென்றதிலிருந்து, அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதர்களின்மூலமாக, மனிதப் பிள்ளைகளிடம் பேசியும், அவர்களுடைய தேவைகளுக்கென்று ஊழியஞ்செய்தும், பூமியின்மீதுள்ள அவருடைய பணியை முன்கொண்டு சென்றிருக்கிறார். அவரது பிரதிநிதிகளாக இருக்கும்படி தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டுள்ள மனிதக் கருவிகளின் மூலமாக, சபையின் தலைவராக இருப்பவர் அவருடைய பணியை மேற்பார்வை செய்கிறார். (3)

வார்த்தையிலும் கோட்பாட்டிலும் தமது சபையைத் தாங்குகின்ற வேலையைச் செய்வதற்கென்று அழைக்கப்பட்டிருப்பவர்களின் பதவி இடர்மிக்க விளைவுகளைக்கொண்ட பொறுப்பை உடையவைகளில் ஒன்றாக உள்ளது. தேவனுடன் ஒப்புரவானவர்களாக இருக்கும்படி கிறிஸ்துவின் சார்பில் அவர்கள் ஆண்களையும் பெண்களையும் மன்றாடிக் கேட்கவேண்டியவர்களாக உள்ளனர். உன்னதத்திலிருந்து வல்லமையையும் ஞானத்தையும் பெறும்போது மட்டுமே, அவர்களுடைய பணியை அவர்களால் நிறைவேற்றமுடியும். (4)

கிறிஸ்தவ ஊழியர்கள் தங்களுடைய கவனத்தில் காக்கப்படும்படி ஏற்படுத்தப்பட்டுள்ள ஜனங்களின் ஆவிக்குரிய காவலர்களாக உள்ளனர். அவர்களுடைய வேலை காவல்காரனுடைய வேலையுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. பண்டைய காலங்களில் காவல்காரர்கள் காவல்செய்யப்படவேண்டிய சரியான இடங்களைப் பார்க்கும்படியாகவும் சமீபித்துக்கொண்டிருக்கும் எதிரியைப்பற்றி எச்சரிப்பு கொடுக்கும்படியாகவும் அடிக்கடி நகரங்களின் சுவர்களின்மேல் தங்கியிருந்தனர். நகரத்திற்குள் இருந்தவர்களின் பாதுகாப்பு அவர்களின் விசுவாசமிக்க வேலையைச் சார்ந்ததாக இருந்தது. குறிப்பிடப்பட்ட இடைநேரங்களில் எல்லோரும் விழித்திருக்கின்றனர் என்பதை நிச்சயப்படுத்தவும், எந்தவிதமான இடையூறும் ஒருவருக்கும் உண்டாகவில்லையென்பதை நிச்சயப்படுத்தவும், அவர்கள் ஒருவரை ஒருவர் அழைக்கவேண்டியிருந்தது. மகிழ்ச்சியின் குரல் அல்லது எச்சரிப்பின் குரல் ஒருவரிடமிருந்து மற்றவருக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அந்த ஒலி நகரம் முழுவதிலும் எதிரொலிக்கும்வரை, ஒவ்வொருவரும் மீண்டும் மீண்டும் அழைத்திருந்தனர். (5)

"மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்; ஆகையால் நீ என் வாயினாலே வார்த்தையைக்

கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. நான் துன்மார்க்கனை நோக்கி: துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால், அந்தத் துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான்; ஆனாலும் அவன் இரத்தப்பழியை உன் கையிலே கேட்பேன். துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பும்படி நீ அவனை எச்சரித்தும், அவன் தன் வழியைவிட்டுத் திரும்பாமற்போனால், அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்" (எசேக்கியேல் 33:7–9) என்று ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் கர்த்தர் அறிவிக்கிறார். (6)

தேவனுடைய சபைக்குப் பாதுகாவலர்களாக இருக்கும்படியும் தேவனுடைய இரகசியங்களுக்கு உக்கிராணக்காரர்களாக இருக்கும்படியும், நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பக்திவிநயமான பொறுப்பை தீர்க்கதரிசியின் வார்த்தைகள் அறிவிக்கின்றன. சத்துரு சமீபிக்கும்போது அபாயக்குரலை எழுப்புவதற்காக அவர்கள் சீயோனின் சுவர்களின்மீது காவல்காரர்களாக நிற்கவேண்டியவர்களாக உள்ளனர். சோதனையின்கீழ் விழுந்துவிடக்கூடிய ஆபத்தில் ஆத்துமாக்கள் உள்ளனர். தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்கு விசுவாசமுள்ளவர்களாக இராவிட்டால், அவர்கள் கெட்டுப்போவர்கள். ஏதாவது காரணத்தினால் ஆபத்தை அறியமுடியாதவிதத்தில் அவர்களின் ஆவிக்குரிய புலன்கள் உணர்ச்சியற்றதாகிவிட்டாலும், அவர்கள் எச்சரிப்பைக் கொடுக்கத் தவறினதால் மக்கள் கெட்டுப்போனாலும், இழக்கப்பட்டுப்போனவர்களின் இரத்தப்பழியை தேவன் அவர்களுடைய கைகளிலிருந்து கேட்பார். (7)

ஆவியானவர் தங்கள்மூலமாக வேலைசெய்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்களுடைய ஆபத்தைக்கூறி, பாதுகாப்பான இடத்தைச் சுட்டிக்காட்டுவதற்கேதுவாக, தேவனுக்கு அருகில் வாழ்ந்து, அவருடைய ஆவியானவரின் உணர்த்துதல்களால் உந்தப்படுவது, சீயோன் கோட்டைச்சுவர்களின்மீது காவல்காரர்களாக இருக்கும் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சலுகையாக உள்ளது. மீறுதலின் நிச்சயமான பலனைப்பற்றி விசுவாசத்துடன் எச்சரிக்கவேண்டியவர்களாக அவர்கள் உள்ளனர். சபையின் காரியங்களை விசுவாசத்துடன் பாதுகாக்கவேண்டியவர்களாக அவர்கள் உள்ளனர். அவர்களுடைய விழிப்பிலிருந்து அவர்கள் எந்தநேரத்திலும் ஓய்ந்துவிடக்கூடாது. அவர்களிலுள்ள எல்லாவிதமான மனத்திறனையும் செயலாற்றவேண்டிய அவசியம் அவர்களுடைய பணியில் உள்ளது. அவர்களுடைய குரல்கள் எக்காளத்தின் சத்தத்தைப்போல உயர்த்தப்படவேண்டும். தடுமாற்றமுள்ள நிச்சயமற்ற குரலை அவர்கள்

ஒருபோதும் ஒலிக்கக்கூடாது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவறிவிட்டால், அவர்கள்மீது ஒரு ஆபத்து உள்ளது என்பதை உணர்ந்து, சம்பளத்திற்காக வேலைசெய்யாமல், செய்யாமலிருக்கமுடியாது என்பதற்காக அவர்கள் வேலை செய்யவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அர்ப்பணித்தல் என்னும் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்ட அவர்கள், தவிர்க்கமுடியாத அழிவிலிருந்து ஆண்களையும் பெண்களையும் காப்பாற்றவேண்டியவர்களாக உள்ளனர். (8)

கிறிஸ்துவுடன் உழைக்கும் ஊழியக்காரன், தன்னுடைய பணியில் உள்ள பரிசுத்தத் தன்மையைப்பற்றியும், அதை வெற்றிகரமாகச் செய்வதற்கு அவசியமான உழைப்பு தியாகம் ஆகியவைபற்றியும் ஆழமான உணர்வை உடையவனாக இருக்கிறான். அவன் தனது சொந்தக் காரியம்பற்றியும் வசதிகளைப்பற்றியும் ஆராய்வதில்லை. அவன் சுயத்தை மறந்தவனாக இருக்கிறான். தொலைந்துபோன ஆட்டைக் கண்டுபிடிப்பதில், தன்னைக் களைப்புற்றவனாகவும் குளிரால் தாக்கப்பட்டவனாகவும் பசியுள்ளவனாகவும் உணருவதில்லை. அவனுடைய பார்வையில் ஒரே ஒரு பொருளைத்தவிர— இழந்துபோனதைத் தேடுதல் என்பதைத்தவிர வேறு எதுவும் இல்லை! (9)

இம்மானுவேலின் இரத்தக்கறைபடிந்த கொடியின்கீழ் சேவைசெய்பவனிடம், வீரனுக்குரிய முயற்சியையும் பெருமைமிக்க சகிப்பையும் எதிர்பார்க்கிற செயலைச் செய்வதற்குரிய பலம் இருக்கும். போரின் முன்னணியில் சிலுவையின் வீரன் பின்வாங்காதவனாக நிற்கிறான். அவனுக்கெதிரான தாக்குதலைச் சத்துரு முடுக்கிவிடும்போது, தனது உதவிக்காகப் பலத்த கோட்டைக்குத் திரும்பி, வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களைக் கர்த்தரிடத்திற்குக் கொண்டுவரும்போது, அந்த நேரத்திலுள்ள வேலைகளுக்காக அவன் பலப்படுத்தப்படுகிறான். உன்னதத்திலிருந்து உண்டாகக்கூடிய பலத்தில் அவனது அவசியத்தை அவன் உணருகிறான். அவன் அடையும் வெற்றிகள் சுயத்தை உயர்த்த நடத்தாமல், அதிகமதிகமாக பலமிக்க ஒருவரின்மீது பாரத்துடன் சாய்ந்துகொள்ளச் செய்கிறது. அந்த வல்லமையின்மீது அவன் சார்ந்திருக்கும்போது, மற்றவர்களின் மனங்களை அதிரச்செய்கின்ற விதத்தில் இரட்சிப்பின் தூதை வலிமையுடன் முன்வைக்க அவன் தகுதிப்படுத்தப்படுகிறான். (10)

வார்த்தையைப் போதிக்கும் அவன், ஜெபத்தின்மூலமாகவும் அவருடைய வார்த்தையைக் கற்பதன்மூலமாகவும், தேவனுடன் ஒவ்வொரு மணிநேரத்திலும் தொடர்புடைய உணர்வை உடையவனாக வாழவேண்டும். ஏனெனில் அவனுடைய பலத்தின் ஆதாரம் அதில்தான் இருக்கிறது. ஊழியக்காரனின் பிரசங்கத்திலுள்ள செல்வாக்கைவிடப் பெரிதான

வல்லமையை, தேவனுடனுள்ள அவனுடைய தொடர்பு அவனுடைய முயற்சிகளுக்குக் கொடுக்கும். இந்த வல்லமையை இழந்துவிடும்படி அவன் எதையும் அனுமதிக்கக்கூடாது. கடமையைச் செய்வதற்காகவும் பரீட்சைகளில் அவனைப் பலப்படுத்தித் திடப்படுத்துவதற்காகவும், ஜீவனுள்ள நெருப்பினால் அவனுடைய உதடுகள் தொடப்படவும், மறுக்கமுடியாத அக்கறையுடன் அவன் தேவனிடத்தில் மன்றாடவேண்டும். நித்தியமான உண்மைகளின்மீது கிறிஸ்துவின் தூதர்கள் வைத்திருக்கும் பிடிப்பு அடிக்கடி லேசானதாக உள்ளது. மனிதர்கள் தேவனுடன் நடப்பார்களானால் அவர் அவர்களைப் பாறைப்பிளவில் மறைத்துவைப்பார். இவ்வாறாக, மறைக்கப்பட்டிருக்கும் அவர்கள், மோசேயைப்போல தேவனைப் பார்க்கமுடியும். அவர் அருளும் வல்லமையினாலும் ஒளியினாலும் அவர்கள் அதிகமாக அறிந்துகொள்வார்கள். குறைவான அவர்களுடைய நிதானத்தினால் முடியும் என்று நினைத்த அளவைவிட அவர்களால் அதிகமாக நிறைவேற்றமுடியும். (11)

சோர்ந்துபோனவர்களுக்கெதிராக சாத்தானுடைய தந்திரங்கள் மிகவும் வெற்றியாக உபயோகிக்கப்படுகிறது. ஊழியக்காரனை சோர்வு மேற்கொண்டுவிடும் என்று பயமுறுத்தினால், அவன் தன்னுடைய தேவைகளை தேவனுக்குமுன்பாக விரித்துவைப்பானாக. வானம் வெண்கலமாகத் தோன்றினபோதுதான் பவுல் தேவனை மிக முழுமையாக நம்பினான். உபத்திரவம் என்பதின் பொருளை அவன் அறிந்திருந்தான். ஆனால் சோதனையினாலும் போராட்டத்தினாலும் சூழப்பட்டபோது: “மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்” (1 கொரிந்தியர் 4:17,18) என்ற அவனுடைய வெற்றி முழக்கத்தைக் கவனியுங்கள். பவுலின் கண்கள் எப்போதும் காணக்கூடாத நித்தியமானவர்மேல் பதிக்கப்பட்டிருந்தது. மனித வல்லமைக்கு அப்பாற்பட்ட வல்லமைகளோடு போராடிக்கொண்டிருப்பதை உணர்ந்து, தேவனை நம்பியிருந்தான்; இதிலேதான் அவனுடைய பலம் இருந்தது. காணக்கூடாதவரை கண்டதில்தான் ஆத்துமத்தின் பலத்தையும் உற்சாகத்தையும் அடைந்தான்; அதினால்தான் அவனுடைய மனதின்மேலும் குணத்தின்மேலுமிருந்த பூமியின் வல்லமைகள் தெறியுண்டன. (12)

ஒரு போதகர் மக்களுடன் தாராளமாகக் கலந்து அறிமுகமாக வேண்டும். அவர்களோடு அப்படிப் பழகுவதினால் அவர்களுக்குத்தக்கதாக தனது போதனைகளை அமைத்துக்கொள்ள அறிவார். ஒரு போதகர் ஒரு

பிரசங்கத்தைச் செய்யும்போதுதான் அவருடைய வேலை ஆரம்பமாகிறது. அவர் செய்யவேண்டிய தனிப்பட்ட வேலை அங்கே இருக்கிறது. மக்களை அவர்களுடைய வீடுகளில் சந்தித்து, அவர்களுடன் பேசுபவராகவும் அக்கறையுடனும் தாழ்மையுடனும் அவர்களுடன் ஜெபிப்பவராகவும் அவர் இருக்கவேண்டும். தேவனுடைய கிருபையின் உக்கிராணக்காரர்கள் மக்களுடைய வீடுகளுக்குள் பிரவேசித்து மேலான பாதையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டாதவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள சத்தியங்கள் ஒருபோதும் சென்றடைய முடியாத குடும்பங்கள் உள்ளன. ஆனால் இந்த வேலையைச் செய்பவர்களின் இருதயங்கள் கிறிஸ்துவின் இருதயத்துடன் ஒன்றுபட்டுத் துடிக்கவேண்டும். (13)

"நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா" (லூக்கா 14:23) என்னும் கட்டளையில் அறியப்படவேண்டியது அதிகமாக உள்ளது. ஊழியக்காரர்கள் எவர்களுக்காக ஊழியஞ்செய்கின்றனரோ அவர்களுடன் நெருங்கிச் சேர்ந்து குடும்பங்களில் சத்தியத்தைப் போதிப்பார்களாக. இவ்விதமாக அவர்கள் தேவனுடன் ஒத்துழைக்கும்போது, அவர் அவர்களுக்கு ஆவியின் வல்லமையாகிய உடையை அணிவிப்பார். கேட்பவர்களின் இருதயங்களில் ஆழமாகப் பதியக்கூடிய வார்த்தைகளைக் கொடுத்து அவர்களுடைய வேலையில் கிறிஸ்து அவர்களை வழிநடத்துவார். "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும்" "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே" (அப். 20:20,21,26) என்று பவுலுடன் சேர்ந்து கூறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பது ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையாக உள்ளது. (14)

நோயுற்றவர்களைச் சுகப்படுத்திக்கொண்டும், துக்கங்கொண்டாடினவர் களைத் தேற்றிக்கொண்டும், துன்பப்பட்டிருந்தவர்களை ஆறுதல்படுத்திக் கொண்டும், ஆறுதலற்றவர்களுக்குச் சமாதானத்தைக் கூறிக்கொண்டும் இரட்சகர் வீடுவீடாகச் சென்றார். அவர் சிறுபிள்ளைகளைத் தமது கரத்தில் ஏந்தி ஆசீர்வதித்து, களைப்புற்றவர்களாக இருந்த தாய்மார்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலுமிக்க வார்த்தைகளைக் கூறினார். மனிதத்துன்ப துயரங்களின் ஒவ்வொரு வடிவத்தையும், தோற்காத மென்மையுடனும்

சாதுவான தன்மையுடனும் அவர் சந்தித்தார். அவர் தமக்கென்று வேலைசெய்யாமல் பிறருக்காக உழைத்திருந்தார். அவர் எல்லோரது ஊழியக்காரனாகவும் இருந்தார். எவர்களுடனெல்லாம் உறவு கொண்டாரோ, அவர்களனைவருக்கும் நம்பிக்கையையும் பலத்தையும் கொண்டுவருவது அவரது உணவாகவும் பானமாகவும் இருந்தது. ரபிமார்களினால் பாதிக்கப்பட்டிருந்த பாரம்பரியங்களிலிருந்தும் பிடிவாதமான கோட்பாடுகளிலிருந்தும் மாறுபட்டிருந்த—அவரது உதடுகளிலிருந்து விழுந்த சத்தியங்களை ஆண்களும் பெண்களும் கவனித்தபோது, அவர்களுடைய இருதயங்களில் நம்பிக்கை துளிர்த்தது. உள்ளத்தில் மன உணர்த்துதலை உண்டுபண்ணும் வல்லமையுடன் அனுப்பியிருந்த அவரது வார்த்தைகளடங்கிய போதனையில் ஒரு அக்கறை இருந்தது. (15)

எவர்களுக்காக தேவனுடைய ஊழியக்காரர்கள் வேலை செய்கிறார்களோ, அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளை சந்திக்கக் கூடியவைகளை, அவரது வார்த்தைகளின் கருவூலத்திலிருந்து கொண்டுவருவதற்கேதுவாக, கிறிஸ்துவின் பணி முறையை அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்விதத்தில் மட்டுமே தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பை அவர்களால் நிறைவேற்றமுடியும். தாம் தொடர்ச்சியாகப் பெற்றிருந்த போதனையை மக்களுக்குக் கொடுத்தபோது அவரிடமிருந்த அதே ஆவிதான், இந்த உலகத்தில் இரட்சகரின் பணியை முன்கொண்டுசெல்லுவதற்கான அறிவின் ஆதாரமாகவும் இரகசியமாகவும் இருக்கவேண்டும். (16)

தங்களுடைய பிரிவினையல்லாத (undivided) விருப்பத்தைக் கர்த்தரின் பணியில் கொடுக்காததினால், ஊழியப்பணி செய்திருக்கும் சிலர் வெற்றியடையத் தவறி உள்ளனர். ஆத்துமாக்களை இரட்சிப்பிற்கு நடத்துகின்ற பெரும் பணியைவிட்டு, மனதைப் பற்றிக்கொள்ளுகின்ற காரியங்களை உடையவர்களாக ஊழியர்கள் இருக்கக்கூடாது. கிறிஸ்து அழைத்த மீன்பிடிப்பவர்கள் உடனே அவர்களுடைய வலைகளை விட்டுவிட்டு, நேரடியாக அவரைப் பின்பற்றினார்கள். ஊழியக்காரர்கள் பெரிய அளவில் தங்களுடைய சொந்தத் தொழிலை நடத்திக்கொண்டு, அதே நேரத்தில் ஒப்புக்கொள்ளக்கூடிய விதத்தில் தேவனுக்கென்று ஊழியஞ்செய்யமுடியாது. அப்படிப்பட்ட பிரிவினை அவர்களுடைய ஆவிக்குரிய உணர்த்துதல்களை மங்கச் செய்கிறது. மனமும் இருதயமும் பூமிக்குரிய காரியங்களில் ஈடுபடுகின்றன. அதினால் கிறிஸ்துவிற்கான சேவை இரண்டாம் இடத்தில் வைக்கப்படுகிறது. தேவனுடைய அவசியங்களைச் சந்திக்கக்கூடியவிதத்தில் சூழ்நிலைகளை அவர்கள் அமைப்பதற்குப் பதிலாக தேவனுக்காக

உள்ள அவர்களுடைய பணியைத் தங்களுடைய சூழ்நிலைகளுக்கேற்ப வடிவமைக்கின்றனர். (17)

ஊழியக்காரனின் சக்திகளனைத்தும் பரம அழைப்பிற்கு அவசியமானதாக உள்ளன. அவனுடைய மிக மேலான வல்லமைகள் தேவனுக்குச் சொந்தமாயிருக்கிறது. அவனுடைய பெரும்பணியிலிருந்து அவனை வேறுபக்கமாகத் திருப்பக்கூடிய யூகத்தினடிப்படையான வியாபாரத்திலும் அல்லது மற்ற தொழிலிலும் அவன் ஈடுபடாமல் இருக்கவேண்டும். "தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்" (2 தீமோத்தேயு 2:4) என்று பவுல் அறிவித்தான். இவ்வாறாக, ஊழியக்காரன் ஆண்டவரின் சேவையில் இருக்கவேண்டிய தனித்துவைக்கப்படாத அர்ப்பணத்தின் அவசியம்பற்றி அப்போஸ்தலன் அழுத்திக் கூறினான். தேவனுக்கென்று தன்னைப் பூரணமாக அர்ப்பணம் செய்துள்ள ஊழியக்காரன் தனது பரிசுத்தமான பரம அழைப்பிற்குத் தன்னை முற்றிலுமாகக் கொடுப்பதிலிருந்து இடையூறு பண்ணக்கூடிய தொழிலில் ஈடபட மறுத்துவிடுகிறான். உலகப்பிரகாரமான மேன்மைகளுக்காகவும் செல்வங்களுக்காகவும் அவன் முயற்சிசெய்யாமல், மனிதர்களுக்கு நித்திய ஜீவனின் செல்வங்களைக் கொண்டுவருவதற்காகத் தம்மையே கொடுத்த இரட்சகரைப்பற்றி மற்றவர்களுக்குக் கூறுவது மட்டுமே அவனுடைய ஒரே நோக்கமாக இருக்கிறது. இந்த உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பது அவனுடைய மேலான வாஞ்சையாக இராமல், அக்கறையற்றவர்களையும் உண்மையான ராஜவிசுவாசம் இல்லாதவர்களையும் நித்தியத்தின் உண்மையைப்பற்றிய கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் அவனுடைய மேலான வாஞ்சையாக இருக்கிறது. உலகப்பிரகாரமான பெரும் லாபத்தை வாக்குத்தத்தம் செய்யக்கூடிய தொழிலில் ஈடுபடும்படி அவன் கேட்டுக்கொள்ளப்படலாம். ஆனால் அப்படிப்பட்ட சோதனைகளுக்குக் கீழ்க்காணும்படியான பதிலைக் கூறுகிறான். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (மாற்கு 8:36). (18)

இந்த ஈர்ப்பினை சாத்தான் கிறிஸ்துவின்முன்வைத்தான். அவர் அதை ஏற்றுக்கொண்டால், உலகம் ஒருபோதும் மீட்கப்படாது என்பதைச் சாத்தான் அறிந்திருந்தான். அதனால் வஞ்சிக்கப்பட்டிருப்பவர்கள் தங்களுடைய விசுவாசத்திற்குத் தவறானவர்களாக இருப்பார்கள் என்பதை அறிந்து, அதே விதமான மாற்றுருவில் இன்று தேவனுடைய ஊழியக்காரர்களுக்குமுன்— அதே விதமாக மாற்றுருவில் சோதனையை வைக்கிறான். (19)

தேவனுடைய ஊழியக்காரர்கள் செல்வந்தர்களாவதற்கு வகைதேடுவது தேவனுடைய சித்தமல்ல. இதைப்பற்றிப் பவுல்: "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு." "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (1 தீமோத்தேயு 6:10,11,17–19) என்று தீமோத்தேயுவிற்கு எழுதினான். (20)

சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கான உதவிக்கும் ஊக்கத்திற்கும் ஒரு ஆதாரமாக அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவங்களும், ஊழியக்காரனின் பணியில் உள்ள பரிசுத்த தன்மையைப்பற்றி அவனுடைய போதனைகளும் உள்ளன. பாவிகளின்மீதான அன்பினால் பவுலின் இருதயம் எரிந்தது. ஆத்தும ஆதாயம் செய்யும்பணியில் அவன் தனது சக்திகளனைத்தையும் ஈடுபடுத்தினான். சுயத்தை மறுத்து முயற்சி செய்கின்ற ஒரு வேலைக்காரன் ஒருபோதும் இருந்ததில்லை. அவன் பெற்றிருந்த ஆசீர்வாதங்களையெல்லாம் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்குப் பயன்படுத்துவதற்கான அநேக அனுகூலங்களின் விலையாக அவன் கொடுத்தான். இரட்சகரைப்பற்றிப் பேச, துன்பங்களில் இருந்தவர்களுக்கு உதவ கிடைத்த எந்த வாய்ப்பையும் அவன் இழக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டும், சபைகளை ஏற்படுத்திக்கொண்டும், இடம்விட்டுஇடம் சென்றிருந்தான். ஒரு தேடுதலை அவனால் எங்கெல்லாம் காணமுடிந்திருந்ததோ அங்கெல்லாம் தவறுக்கெதிராகச் செயல்படவும் ஆண்கள் பெண்கள் ஆகியோரின் பாதங்களை நீதியின் பாதைக்குத் திருப்புவதற்கும் அவன் வகைதேடியிருந்தான். (21)

பவுல் தான் ஏற்படுத்தியிருந்த சபைகளை மறந்துவிடவில்லை. ஒரு மிஷனரிப் பயணத்தைச் செய்தபின் அவர்கள் எழுப்பியிருந்த சபைகளிலிருந்து சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், தங்களுடன் ஒன்று

சேர்க்கவும், பவுலும் பர்னபாவும் திரும்பவும் அந்த இடங்களுக்குச் சென்று அந்தச் சபைகளைச் சந்தித்தனர். (22)

பவுலின் பணியின் இந்த அடையாளம் இன்றுள்ள ஊழியக்காரர்களுக்கு ஒரு முக்கியமான பாடத்தை உடையதாக இருக்கிறது. ஊழியப்பதவியை ஏற்பதற்காக வாலிபர்களுக்குக் கல்வி புகட்டுவதை அப்போஸ்தலன் தனது பணியின் ஒரு பகுதியாகச் செய்திருந்து, தனது மிஷனரிப்பயணங்களின்போது, அவர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தான். இவ்வாறாக, பின்னர் பொறுப்புள்ள பதவிகளை நிரப்புவதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தியிருந்த அனுபவங்களை அவர்கள் அடைந்தனர். அவர்களைவிட்டு அவன் பிரிந்திருந்தபோதிலும், அவர்களது பணியுடன் அவன் தொடர்பு உள்ளவனாயிருந்தான். அவர்களுடைய வெற்றியின்மீதான அவனுடைய வாஞ்சை எவ்வளவு ஆழமானதாக இருந்தது என்பதற்கு தீமோத்தேயுவிற்கும் தீத்துவிற்கும் அவன் எழுதின கடிதங்கள் சான்றுகளாக உள்ளன. (23)

அனுபவமிக்க ஊழியர்கள் சகல பாரங்களையும் தங்களின்மீது தாங்களே சுமப்பதற்குப்பதிலாக, இளைய ஊழியக்காரர்களுக்கு பயிற்சியளித்து பாரத்தை அவர்கள் தோள்கள்மீது வைப்பதினால் இன்று ஒரு மேன்மையான பணியைச் செய்கின்றனர். (24)

கிறிஸ்துவின் ஒரு ஊழியக்காரனாக இருந்த பவுல், தன்மீது இருந்த பொறுப்பை ஒருபோதும் மறந்துவிடவில்லை. அல்லது பகுதியில் விசுவாசமின்றி இருந்து, அதனால் ஆத்துமாக்களை இழக்க நேர்ந்தால் அதற்காக தேவனுக்கு கணக்குக்காட்ட வேண்டும் என்பதை ஒருபோதும் மறக்கவில்லை. "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" (கொலோசேயர் 1:25–29) என்றான். (25)

கிறிஸ்துவின் ஊழியக்காரன் ஒரு மேலான நிலையை அடையவேண்டுமென்பதை இந்த வார்த்தைகள் அவன்முன் வைக்கின்றன. அப்படியிருந்தபோதிலும் பெரும் ஆசிரியரின் கட்டுப்பாட்டின்கீழ் தங்களை வைத்து, கிறிஸ்துவின் பள்ளியில் நாள்தோறும் கற்கும் அனைவரும் இந்த நிலையை அடையமுடியும். தேவனுடைய கட்டளையின் வல்லமை எல்லையற்றதாக உள்ளது. தனது பெரும் அவசியத்தில் தன்னைக் கர்த்தருடன் அடைத்துக்கொள்ளும் ஊழியக்காரன் அவனது பேச்சைக் கேட்பவர்களுக்கு ஜீவவாசனையாக இருக்கக்கூடியவைகளை பெற்றுக்கொள்ளுவான் என்று நிச்சயமடையலாம். (26)

இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் (2 கொரிந்தியர் 6:3) என்றபடி, பவுலின் போதனைகள், சுவிசேஷ ஊழியக்காரன் அவன் போதிக்கும் சத்தியங்களுக்கு ஒரு உதாரணமானவனாக இருக்கவேண்டும் என்று காட்டுகின்றன. மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும் அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோ டிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப் பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்" (2 கொரிந்தியர் 6:4–10) என்னும் பவுலின் போதனைகளும் எழுத்துக்களும் சுவிசேஷ ஊழியக்காரனாக இருப்பவன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்று காட்டுகின்றன. தன்னுடைய சொந்த ஊழியத்தைப்பற்றி அவன் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் நமக்கு ஒரு சித்திரத்தை விட்டுச் சென்றிருக்கிறான். (27)

"அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்திசொல்லி, நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு

சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (தீத்து 2:6–8) என்று அவன் தீத்துவுக்கு எழுதினான். (28)

அறுவடையை எதிர்நோக்கி, சத்தியத்தின் விதைகளை விதைப்பதற்காக பூமியின் பாழான இடங்களுக்குச் செல்லும் அவருடைய ஊழியக்காரர்களைவிட, அவருடைய பார்வையில் அதிகமான மதிப்புடையது எதுவும் இல்லை. இழந்துபோனவர்களைத்தேடி அவருடைய ஊழியக்காரர்கள் செல்லும்போது, அவர்களுடைய அக்கறையை கிறிஸ்துவைத் தவிர வேறொருவராலும் அளவிடமுடியாது. அவர் தமது ஆவியை அவர்களுக்குக் கொடுக்கிறார். அவர்களுடைய முயற்சியினால் ஆத்துமாக்கள் பாவத்திலிருந்து நீதியின் பக்கமாக நடத்தப்பட்டுள்ளனர். (29)

தங்களுடைய பண்ணைகளையும் தங்களுடைய தொழிலையும் அவசியமானால் தங்களுடைய குடும்பங்களையும் விட்டுவிட்டு அவருக்காக மிஷனரிகளாவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருக்கும் மனிதர்களைத் தேவன் அழைக்கிறார். அந்த அழைப்பிற்குப் பதிலளிக்கப்படும். கிறிஸ்துவின் மீதுள்ள அன்பினாலும் இழந்துபோனவர்களின் தேவைகளுக்காக கலங்கினவர்கள், வீட்டின் சௌகரியங்களையும் நண்பர்களின் கூட்டத்தையும் மனைவியையும் பிள்ளைகளையுங்கூட விட்டுவிட்டு இரக்கத்தின் தூதை அறிவிப்பதற்காக அயல்நாடுகளுக்கும் விக்கிரக ஆராதனைக்காரர்களுக்கும் காட்டுமிராண்டிகளிடத்திற்கும் சென்றவர்கள் கடந்த காலத்தில் இருந்திருந்தனர். ஆனால் அந்தப் பணியை முன்கொண்டு செல்லுவதற்கு மற்றவர்கள் எழுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறாக, கிறிஸ்துவின் காரியம் படிப்படியாக முன்னேறி உள்ளது. துயரத்துடன் விதைக்கப்பட்ட விதைகள் ஏராளமான அறுவடையைக் கொண்டுவந்துள்ளது. தேவனைப்பற்றிய அறிவு விசாலமாக விரிவடைந்துள்ளது. அஞ்ஞான நாடுகளில் கிறிஸ்துவின் கொடி நாட்டப்பட்டுள்ளது. (30)

ஒரு பாவியின் மாற்றத்திற்காக ஊழியக்காரன் தன்னிடமுள்ள பொருட்களையெல்லாம் முடிந்தவரை செலவிடவேண்டும். தேவனால் படைக்கப்பட்டுள்ள—கிறிஸ்துவால் மீட்கப்பட்டுமுள்ள ஆத்துமா, அதற்குமுன் உள்ள சாத்தியதைகளினாலும், அதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய அனுகூலங்களுக்காகவும், தேவனுடைய வார்த்தையினால் போஷிக்கப்பட்டால், அது அடைந்துகொள்ளக்கூடிய தகுதிகளாலும் சுவிசேஷத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையின்மூலமாக அது அடைந்துகொள்ளக்கூடிய அழியாமையினாலும் மிகுந்த மதிப்புள்ளதாக

உள்ளது. காணாமல்போன ஒரு ஆட்டைத் தேடுவதற்காக கிறிஸ்து தொண்ணூற்று ஒன்பதையும் விட்டுச்சென்றிருந்தால், நாம் குறைவாகப் பணியாற்றுவதில் நியாயப்படுத்தப்படுவோமா? கிறிஸ்து பணியாற்றியதைப்போலப் பணியாற்றாமல், அலட்சியமாக இருந்துவிடுவது அவர் தியாகம் செய்ததுபோலத் தியாகம் செய்யாமல் இருப்பது, பரிசுத்தமான நம்பிக்கைக்கு எதிரான ஒரு துரோகமாக—தேவனுக்கு ஒரு நிந்தையாக இருப்பதில்லையா? (31)

ஆத்துமாக்களைக் காப்பாற்றவேண்டுமே என்ற வலிமைமிக்க ஏக்கத்தினால் உண்மையான ஊழியனின் இருதயம் நிறைந்திருக்கிறது. காலமும் பெலமும் செலவிடப்பட்டுள்ளன. உழைப்புமிக்க முயற்சிகள் தவிர்க்கப்படாமலுள்ளன. ஏனெனில் தன்னுடைய சொந்த ஆத்துமாவிற்கு மகிழ்ச்சி, சமாதானம், சந்தோஷம் ஆகியவைகளைக் கொண்டுவந்த சத்தியங்களை மற்றவர்களும் கேட்கவேண்டும். கிறிஸ்துவின் ஆவி அவன்மீது தங்குகிறது. கணக்குக்கொடுக்கவேண்டிய ஒருவனாக அவன் ஆத்துமாக்களைக் கவனிக்கிறான். கல்வாரிச் சிலுவையின்மீது தனது கண்களைப் பதித்தவனாக உயர்த்தப்பட்டுள்ள இரட்சகரை நோக்கி அவரது கிருபையில் சார்ந்து, முடிவுவரை அவர் அவனுடைய கேடயமாகவும் பலமாகவும் திறமையாகவும் இருப்பார் என்று நம்பிக்கொண்டு, தேவனுக்காகப் பணியாற்றுகிறான். தேவனுடைய அன்பின் வாக்குறுதிகளுடன் கலந்த அழைப்புக்களுடனும், பரிந்துபேசுதலுடனும் இயேசுவிற்கென்று ஆத்துமாக்களை வெல்ல அவன் வகைதேடுகிறான். எனவே அவன் பரலோகத்தில் அழைக்கப்பட்டவர்களுடனும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடனும் விசுவாசமுள்ளவர்களுடனும் சேர்த்துக் கணக்கிடப்படுகிறான். (32) ★

# 35

# யூதர்களுக்கு இரட்சிப்பு!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 372–382)**
**திருவசன ஆதாரம் : ரோமர்**

தவிர்க்கமுடியாத தாமதங்களுக்குப்பின் கடைசியில் பவுல் கடந்த கால ஊழியத்தில் மிகுந்த கவலையைக் கொடுத்திருந்த காட்சியின் இடமான கொரிந்துவிற்கு—சிறிது காலத்திற்கு ஆழமான அக்கறைமிக்க பொருளாக இருந்த இடத்திற்குப் போய்ச்சேர்ந்தான். ஆரம்பகால விசுவாசிகளில் இன்னும் அநேகர் முதலில் அவர்களுக்குச் சுவிசேஷத்தின் ஒளியைச் சுமந்துசென்றவன் என்ற பற்றுடன் கருதியிருந்ததை அவன் கண்டான். அவனை இந்த சீடர்கள் வாழ்த்தினபோது, அவர்களுடைய உண்மையையும் பேரார்வத்தின் சான்றுகளையும் கண்டபோது, கொரிந்துவில் அவனுடைய ஊழியம் வீணானதாக இருக்கவில்லை என்பதற்காக அவன் மகிழ்ந்து களிகூர்ந்தான். (1)

ஒரு சமயத்தில், கிறிஸ்துவில் அவர்களுக்கு உண்டாயிருந்த பரம அழைப்பைப்பற்றிய பார்வையை இழந்துவிடக்கூடிய நிலையில் இருந்த கொரிந்து விசுவாசிகள், கிறிஸ்தவ சுபாவத்தின் பலத்தில் முன்னேற்றம் அடைந்திருந்தனர். அவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும் மாற்றத்தை உண்டுபண்ணக்கூடிய தேவகிருபையின் வல்லமையை வெளிக்காட்டியிருந்தன. இப்பொழுது அஞ்ஞானமார்க்கம் மூடபக்தி ஆகியவைகளின் மையமாக இருந்த இடத்தில், அவர்கள் இப்பொழுது நல்லதற்காக பலமிக்க சேனையாக இருந்தனர். அன்புமிக்க அவனுடைய தோழர்களின் சமுதாயத்திலும் இந்த விசுவாசமிக்க மதமாற்றம் அடைந்தவர்களிலும் அப்போஸ்தலனின் பழுதடைந்து கலங்கியிருந்த ஆவி இளைப்பாறுதலைக் கண்டது. (2)

அவன் கொரிந்துவில் சஞ்சரித்தபோது, புதியதும் விசாலமுமான ஊழியத்தின் களங்களைக் கண்டான். அவன் ஆழ்ந்த சிந்தனையுடன்

ரோமாபுரிக்கு நடத்தியிருந்த பயணத்தைப்பற்றிய எண்ணங்கள், குறிப்பாக அவனது மனதை நிரப்பியிருந்தது. அறியப்பட்டிருந்த உலகத்தின் பெரும் மையமாக இருந்த இடத்தில், கிறிஸ்தவ விசுவாசம் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்ததைக் காண்பது, அவனது அருமையான நம்பிக்கைகளில் ஒன்றாகவும், மிக மேலாகப் பேணப்பட்டிருந்த திட்டங்களில் ஒன்றாகவும் இருந்தது. ரோமாபுரியில் ஏற்கனவே ஒரு சபை நிறுவப்பட்டிருந்தது. இத்தாலியிலும் மற்றுள்ள நாடுகளிலும் நிறைவேற்றப்படவேண்டியதாக இருந்த பணியில் விசுவாசிகளின் ஒத்துழைப்பை அடைவதற்கு அப்போஸ்தலன் வாஞ்சித்திருந்தான். இந்த சகோதரர்களுக்கு மத்தியில், அவனுடைய பணியை ஆயத்தம் செய்வதற்கு இன்னும் அவனுக்கு அந்நியர்களாக இருந்த அநேகருக்கு ரோமபுரியைச் சந்திப்பதற்கான அவனுடைய நோக்கத்தையும் ஸ்பானியா தேசத்தில் சிலுவையின் தரத்தை நடவேண்டுமென்ற அவனுடைய நம்பிக்கையையும் அறிவித்து, அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதினான். (3)

பவுல் சுவிசேஷ பெரும் கொள்கைகளை ரோமர்களுக்கு எழுதின அவனது நிருபத்தில் முன்வைத்தான். யூத சபைகளையும் புறஜாதியினரின் சபைகளையும் குழப்பியிருந்த கேள்விகளுக்கு அவன் தனது நிலையை அறிவித்தான். ஒரு சமயத்தில் சிறப்பாக யூதர்களுக்கு மட்டுமே உரித்தானதாக இருந்த நம்பிக்கைகளும் வாக்குத்தத்தங்களும், இப்பொழுது புறஜாதியினருக்கும்கூட அருளப்பட்டிருக்கிறது என்பதை அவன் காட்டினான். (4)

கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் நீதியைப்பற்றிய கோட்பாட்டை, பெரும் தெளிவுடனும் வல்லமையுடனும் அப்போஸ்தலன் முன்வைத்தான். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அனுப்பப்பட்ட உபதேசத்தினால், மற்ற சபைகளும் உதவி அடையலாம் என்று அவன் நம்பினான். ஆனால் இந்த அவனது வார்த்தைகளில் உண்டாயிருந்த மிகத் தூரமாகச் சென்றடையக்கூடிய செல்வாக்கைப்பற்றி அவனால் எவ்விதமாக மங்கலாகப் பார்க்க முடிந்திருந்தது. மனந்திரும்புகின்ற பாவிகளை, ஜீவனின் பாதைக்கு நடத்தும் ஒரு பலத்த கலங்கரை விளக்கமாக நின்று வழிகாட்டுவதற்காக, காலங்களுக்கூடாக விசுவாசத்தினால் உண்டாகும் நீதி என்னும் மாபெரும் சத்தியம் நின்றிருக்கிறது. லுத்தரின் மனதை மூடியிருந்த இருளை இந்த சத்தியம்தான் சிதறச்செய்து, பாவத்திலிருந்து சுத்திகரிக்கின்ற கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை அவனுக்கு வெளிப்படுத்தினது. இதே ஒளிதான் பாவத்தால் பாரமடைந்திருந்த ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை, மன்னிப்பு, சமாதானம் ஆகியவைகளின் உண்மையான

ஆதாரத்தினிடத்திற்கு வழிநடத்தியிருக்கிறது. ரோமாபுரியிலிருந்த சபைகளுக்காக எழுதப்பட்டுள்ள நிருபத்திற்காக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுக்கு நன்றிசெலுத்தவேண்டிய காரணம் உள்ளது. (5)

யூதர்களின் சார்பில் தனக்குள்ள பாரத்தைப் பவுல் இந்த நிருபத்தில் தாராளமாக உணர்த்திக்காட்டினான். சுவிசேஷத்தைப்பற்றி ஒரு தெளிவான புரிந்துகொள்ளுதலை, தனது யூத சகோதரர்கள் அடைந்துகொள்ள பவுல் தனது மாற்றத்தின்போதிருந்தே ஏக்கமுடையவனாக இருந்தான். “இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது” (ரோமர் 10:1) என்று அவன் அறிவித்தான். (6)

அப்போஸ்தலன் உணர்ந்தது சாதாரணமான வாஞ்சையாக இருக்கவில்லை. நசரேயனாகிய இயேசுவை வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த மேசியா என்று அங்கீகரிக்க மறுத்திருந்த இஸ்ரவேலருக்காக, தேவன் செயலாற்றுவதற்காக அவன் தொடர்ந்து விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருந்தான். “எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய்யல்ல; கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்தஆவிக்குள் என்மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிடச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே. அவர்கள் இஸ்ரவேலரே; புத்திரசுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே; பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்” (ரோமர் 9:1–5) என்று அவன் விசுவாசிகளுக்கு வாக்குறுதி அளித்தான். (7)

யூதர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாக இருந்தனர். அவர்கள்மூலமாக மனித இனம் முழுவதையும் ஆசீர்வதிக்கும் நோக்கத்தை அவர் கொண்டிருந்தார். அவர்களுக்கு மத்தியிலிருந்து தேவன் அநேக தீர்க்கதரிசிகளை எழுப்பியிருந்தார். வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த மேசியாவாக அவரை அங்கீகாரம் செய்வதில் முதலாவதானவர்களாக இருந்திருக்கவேண்டியவர்களாக இருந்தவர்களால், நிராகரிக்கப்பட்டுக் கொலைசெய்யப்படவேண்டிவராக இருந்த ஒரு மீட்பரின் வருகையைப்பற்றி இவர்கள் முன்கூறியிருந்தனர். ஏசாயா தீர்க்கதரிசி நூற்றாண்டுகளுக்கூடாகப் பார்த்து, தீர்க்கதரிசிகளுக்குப்பின் தீர்க்கதரிசிகளும், முடிவில் தேவகுமாரனும்

நிராகரிக்கப்படுவதையும் காட்சியாகக்கண்டு, இஸ்ரவேலின் பிள்ளைகளுக்கு மத்தியில் ஒருபோதும் எண்ணப்படாதவர்களாக இருந்தவர்களால், மீட்பர் ஏற்றுக்கொள்ளப்படுவதைப்பற்றி எழுதும்படி ஆவியினால் ஏவப்பட்டிருந்தான். இந்தத் தீர்க்கத்தரிசனத்தைக் குறிப்பிட்டு, "இஸ்ரவேலரைக்குறித்தோ: கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள்முழுதும் என் கைகளை நீட்டினேன் என்று அவன் சொல்லியிருக்கிறான்" (ரோமர் 10:21) என்று பவுல் அறிவிக்கிறான். (8)

இஸ்ரவேல் தேவனுடைய குமாரனை நிராகரித்திருந்தபோதிலும் தேவன் அவர்களை நிராகரிக்கவில்லை. பவுல் இந்த வாதத்தைத் தொடருவதைக் கவனியுங்கள்: "இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன். தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக்குறித்துச் சொல்லிய இடத்தில், வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி: கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களே என்று இஸ்ரவேலருக்கு விரோதமாய் விண்ணப்பம்பண்ணினபோது, அவனுக்கு உண்டான தேவஉத்தரவு என்ன? பாகாலுக்குமுன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே. அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது"—ரோமர் 11:1–5. (9)

இஸ்ரவேலர்கள் இடறிவிழுந்துள்ளனர். ஆனால் அது அவர்கள் மறுபடியும், எழுந்துநிற்பதை முடியாததாகச் செய்யவில்லை. "இப்படியிருக்க, விழுந்துபோகும்படிக்கா இடறினார்கள் என்று கேட்கிறேன், அப்படியல்லவே; அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக அவர்களுடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது. அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும். புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்; புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்கவேண்டுமென்று, என் ஊழியத்தை நான் மேன்மைப்படுத்துகிறேன். அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க,

அவர்களை அங்கிகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்குமல்லவோ?"—ரோமர் 11:11–15. (10)

தேவகிருபை இஸ்ரவேலருக்கு மத்தியில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதைப்போல, புறஜாதியினருக்கு மத்தியிலும் வெளிப்படுத்தப் படவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் இது வெளிப்படையாக வரைந்து காட்டப்பட்டுள்ளது. இந்தத் தீர்க்கதரிசனங்களில் சிலவற்றை அப்போஸ்தலன் அவனுடைய வாதத்தில் பயன்படுத்துகிறான். "மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும், தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன? அவர் யூதரிலிருந்துமாத்திரமல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே. அந்தப்படி: எனக்கு ஜனங்களல்லாதவர்களை என்னுடைய ஜனங்கள் என்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும் சொல்லி அழைப்பேன். நீங்கள் என்னுடைய ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள்" என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (ரோமர் 9:21–26). (11)

ஒரு ஜாதியாக இஸ்ரவேல் தோற்றுப்போனாலும்கூட, அவர்களுக்கிடையில் இரட்சிக்கப்படவேண்டியவர்களாக, ஒரு நல்ல மீதியானவர்கள் இருந்தனர். இரட்சகரின் வருகையின் நேரத்தில், யோவான் ஸ்நானகன் கொடுத்திருந்த தூதை மகிழ்ச்சியுடன் பெற்றிருந்து, அதனால் மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களைப் புதிய விதத்தில் வாசிக்கும்படி நடத்தப்பட்டிருந்த விசுவாசமிக்க ஆண்களும் பெண்களும் இருந்தனர். ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபை ஏற்படுத்தப்பட்டபோது, அது அவருடைய வருகைக்காக ஏங்கியிருந்தவரை (மேசியாவை) நசரேயனாகிய இயேசுவில் இனம் கண்டிருந்த விசுவாசம்மிக்க யூதர்களால் அமைக்கப்பட்டிருந்தது. பவுல் எழுதும்போது, இந்த மீதியானவர்களைப்பற்றித்தான்: "மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்" (ரோமர் 11:16) என்று கூறுகிறான். (12)

இஸ்ரவேலின் மீதியாக உள்ளவர்களை, சில கிளைகள் முறித்துப்போடப்பட்ட மெய்யான ஒலிவ மரத்தைப்போல பவுல் ஒப்பிடுகிறான். புறஜாதியினரை அவன் மெய்யான ஒலிவ மரத்துடன் (தாய் மரத்துடன்) சேர்த்துக்கட்டப்பட்டுள்ள காட்டு ஒலிவ மரங்களுடன் ஒப்பிடுகிறான். “சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமைபாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு, அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும், தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு” (ரோமர் 11:17–21) என்றும் பவுல் குறிப்பிடுகிறார். (13)

அவிசுவாசம், அவருக்கான பரலோகத்தின் நோக்கம் ஆகியவைகளை நிராகரித்ததன் மூலமாக, இஸ்ரவேல் ஒரு ஜாதியாக தேவனுடனுள்ள தனது தொடர்பை நிராகரித்துவிட்டது. ஆனால் தாய் மரத்திலிருந்து பிரிந்துபோன கிளைகளை உண்மையான இஸ்ரவேலுடன் மீண்டும் இணைக்க—தங்களுடைய பிதாக்களின் தேவனுக்கு உண்மை உள்ளவர்களாக மீதியாக இருந்தவர்களை திரும்ப இணைக்க—தேவன் வல்லமை உள்ளவராக இருந்தார். இந்த முறித்துப்போடப்பட்ட “சுபாவத்தின்படி காட்டொலிவ மரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்தில் ஒட்டப்பட்டிருந்தால், சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் தாய் ஒலிவ மரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா? மேலும் சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு, ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன். அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும், இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.” (14)

“இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள்

பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம்பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள். எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்"—ரோமர் 11:26–32. (15)

"ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது? அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள். கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில்கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக"—ரோமர் 11:33–36. (16)

இவ்வாறாக, யூதர்கள் புறஜாதியினர் ஆகியோரின் இருதயங்களை ஒரேவிதமாக மறுரூபமடையச் செய்பவராக தேவன் இருந்து, கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் ஒவ்வொருவருக்கும் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டுள்ள ஆசீர்வாதத்தை அனுமதிக்க, தாராளமான தகுதியை உடையவராக இருக்கிறார். "இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள்மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும்; அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" என்று தேவனுடைய ஜனங்களைப்பற்றிய ஏசாயாவின் அறிவிப்பை அவன் திரும்பக் கூறுகிறான். ஏசாயா முன்பு கூறியதைப்போல, "சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால், நாம் சோதோமைப்போலாகி, கொமோராவுக்கு ஒத்திருப்போம்." (17)

எருசலேம் அழிக்கப்பட்டு, அதன் தேவாலயம் பாழாய்க்கிடந்த நேரத்தில், அநேக ஆயிரங்களான யூதர்கள் அஞ்ஞான நாடுகளில் அடிமைகளாயிருக்கும்படி விற்கப்பட்டிருந்தனர். ஜனநடமாட்டமில்லாத ஒரு கடற்கரையில் கிடக்கும் உடைந்த கப்பலின் பாகங்களைப்போல அவர்கள் நாடுகளுக்கிடையில் சிதறடிக்கப்பட்டனர். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளாக யூதர்கள் உலகம் முழுவதிலும் நாட்டுக்கு நாடு அலைந்து திரிந்தனர். ஒரு ஜாதி என்னும் சலுகையாகத் திரும்ப அடைகின்ற பண்டைய

மதிப்பை அவர்களால் ஒரு நாட்டிலும் பெறமுடியவில்லை. வெறுக்கப்பட்டு, உபத்திரவப்படுத்தப்பட்டு, நூற்றாண்டுகளிலிருந்து நூற்றாண்டுகளாக அவர்களுடைய பிறப்புரிமை பாடுகளுடையதாக இருந்தது. (18)

நசரேயனாகிய இயேசுவை யூதர்கள், ஒரு ஜாதியாக நிராகரித்த நேரத்தில், அவர்களது வீழ்ச்சியைப்பற்றிக் கூறப்பட்டது மிகவும் பயங்கரமானதாக இருந்தும்கூட, மௌனமாகப் பாடுகளைச் சகித்திருந்த தேவனுக்குப் பயப்படுகின்ற அநேக மேன்மையான ஆண்களும் பெண்களுமான யூதர்கள் காலங்களிலிருந்து காலங்களாக வாழ்ந்திருந்தனர். துன்பத்தில் அவர்களுடைய இருதயங்களை தேவன் தேற்றி, அவர்களுடைய பயங்கரமான நிலைமையை தேவன் இரக்கத்துடன் பார்த்திருக்கிறார். அவருடைய வார்த்தையைச் சரியானவிதத்தில் புரிந்துகொள்ளும்படி தங்களுடைய முழு இருதயத்துடனும் தேடியிருந்தவர்களின் ஜெபங்களை அவர் கேட்டிருக்கிறார். தங்களுடைய முற்பிதாக்கள் நிராகரித்துச் சிலுவையில் அறைந்திருந்த இஸ்ரவேலின் உண்மையான மேசியாவைத் தாழ்மையான நசரேயனில் காண சிலர் கற்றிருந்தனர். பாரம்பரியத்தினாலும் தவறான விளக்கத்தினாலும் நீண்ட காலமாக இருளாக்கப்பட்டிருந்த, தங்களுக்குப் பழக்கமான தீர்க்கதரிசனங்களின் முக்கியத்துவத்தை அவர்களுடைய மனங்கள் பற்றிக்கொண்டிருக்கும்போது, கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராகத் தேர்ந்துகொள்ளும் ஒவ்வொரு மனிதனின்மீதும் அருளப்படுகின்ற சொல்லிமுடியாத வரங்களுக்காக அவர்களுடைய இருதயங்கள் தேவன் மீதுள்ள நன்றியால் நிரப்பப்பட்டுள்ளன. (19)

ஏசாயா இந்த வகுப்பினரையே ஒரு மீதியானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டான். பவுலின் காலத்திலிருந்து இக்காலம்வரை, தேவன் தமது பரிசுத்த ஆவியின்மூலமாக யூதர்களையும் புறஜாதியினரையும் சமமாக அழைத்துக்கொண்டிருக்கிறார். “தேவனிடத்தில் பட்சபாதமில்லை” என்று பவுல் அறிவித்தான். அப்போஸ்தலன் தன்னை “கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்” என்றான் (ரோமர் 1:14). அதைப்போலவே, யூதர்களுக்கு கடனாளியாயிருக்கிறேன் என்றான். ஆனால் யூதர்கள் மற்றவர்களுக்கு மேலாகப் பெற்றிருந்த முடிவான அனுகூலங்களைப்பற்றிய பார்வையை அவன் ஒரு போதும் இழந்திருக்கவில்லை. “தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே” (ரோமர் 3:2). “கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்பட்டேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே

நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" என்று அவன் அறிவித்தான் (ரோமர் 1:16,17). யூதனிடத்திலும் புறஜாதியானிடத்திலும் சமமாகப் பலனளிக்கும் சக்திமிக்க, கிறிஸ்துவின் இந்தச் சுவிசேஷத்தைப்பற்றி வெட்கப்படவில்லையென்று பவுல், ரோமர்களுக்கு எழுதின அவனுடைய நிருபத்தில் அறிவித்தான். (20)

இந்த சுவிசேஷம் அதன் முழுமையுடன் யூதர்களின்முன் வைக்கப்படும்போது, அநேகர் கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக் கொள்ளுவார்கள். கிறிஸ்தவ ஊழியர்களில் யூத ஜனங்களுக்காக ஊழியம் செய்யவேண்டுமென்று அழைக்கப்பட்டுள்ளதாக உணருகின்றவர்களாக, சிலர் மட்டுமே உள்ளனர். ஆனால் அடிக்கடி கவனிக்கப்படாமல் விட்டுவிடப்பட்டிருக்கும் யூதர்களுக்கும் மற்றவர்களுக்கும் கிறிஸ்துவில் உள்ள இரக்கம், நம்பிக்கை ஆகியவைகளின் தூது வரவேண்டியதாக உள்ளது. (21)

சுவிசேஷத்தை அறிவித்து முடிப்பதில், இதுவரை அலட்சியமாக விடப்பட்டிருந்த மக்களுக்காக, சிறப்பான பணிசெய்யப்படவேண்டியதில், தேவன் அவருடைய தூதுவர்கள், உலகத்தின் சகல பாகங்களிலும் அவர்கள் காணும் யூதமக்களின்மீது, குறிப்பான கவனத்தைக் காட்டவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். யேகோவாவின் நித்திய நோக்கத்தின் ஒரு விளக்கமாக பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் புதிய ஏற்பாட்டு வேதவாக்கியங்களுடன் கலந்திருக்கும்போது, அநேக யூதர்களுக்கு இது ஒரு புதிய சிருஷ்டிப்பின் உதயமாகவும், ஆத்துமாவின் உயிர்த்தெழுதலாகவும் இருக்கும். சுவிசேஷ இறையருள் ஆட்சி முறையில் அவர்கள் சுவிசேஷத்தின் கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின் பக்கங்களில் சித்தரிக்கப்பட்டிருப்பதை பார்க்கும்போது, புதிய ஏற்பாடு எவ்விதமாகப் பழைய ஏற்பாட்டை விளக்குகின்றது என்பதை உணரும்போது, உறங்கிக்கொண்டிருக்கும் அவர்களுடைய மனத் திறன்கள் எழுப்பப்படவே, அவர்கள் கிறிஸ்துவை உலக மீட்பராக இனம் கண்டுகொள்ளுவார்கள். அநேகர் விசுவாசத்தினால் கிறிஸ்துவைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ளுவார்கள். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவான் 1:12) என்னும் வார்த்தைகள் நிறைவேறும். (22)

யுதர்களில் சிலர் தர்சுப் பட்டணத்தானான சவுலைப்போல வேதவாக்கியங்களில் வல்லமை உள்ளவர்களாக இருந்து, இவர்கள்

தேவனுடைய கற்பனைகளின் (பத்துக் கற்பனைகளின்) மாறாத தன்மையை ஆச்சரியமான வல்லமையுடன் அறிவிப்பார்கள். நமது நாளில் கடந்துவரும்படி இவர்களை இஸ்ரவேலின் தேவன் கொண்டுவருவார். காப்பாற்றமுடியாதபடி அவரது கரம் குறுகியிருக்கவில்லை. நீண்டகாலமாக அலட்சியப்படுத்தப்பட்டு அவமதிக்கப்பட்டிருப்பவர்களுக்காக அவருடைய ஊழியக்காரர்கள் விசுவாசத்தினால் உழைக்கும்போது, அவரது இரட்சிப்பு வெளிப்படுத்தப்படும். ஆகையால், “ஆபிரகாமை மீட்டுக்கொண்ட கர்த்தர் யாக்கோபின் வம்சத்தைக் குறித்து: இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை; இனி அவன் முகம் செத்துப்போவதுமில்லை. அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளைகளை தன் நடுவிலே காணும்போது, என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள்; யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள். வழுவிப்போகிற மனதை உடையவர்கள் புத்திமான்களாகி, முறுமுறுக்கிறவர்கள் உபதேசம் கற்றுக்கொள்ளுவார்கள்” (ஏசாயா 29:22–24) என்று கூறினார். (23) ★

# 36

# கலாத்திய சபையில் மருள விழுகை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 383–388)**
**திருவசன ஆதாரம் : கலாத்தியர்**

பவுல் கொரிந்துவில் தங்கியிருந்தபோது, ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்த சில சபைகளைப்பற்றி கடுமையாக அச்சமடையவேண்டிய காரணம் இருந்திருந்தது. எருசலேமிலிருந்த விசுவாசிகளுக்கு நடுவிலிருந்து எழுந்த தவறான ஆசிரியர்களின் செல்வாக்கின்மூலமாக மதப்புரட்டு, புலன் இன்பம் ஆகியவை விரைவாக கலாத்தியாவிலிருந்த விசுவாசிகளுக்கிடையில் இடம் பிடிக்கத்தொடங்கியிருந்தன. இந்தத் தவறான ஆசிரியர்கள் சுவிசேஷ சத்தியங்களுடன் யூதர்களின் பாரம்பரியங்களைக் கலந்திருந்தனர். எருசலேமில் நடைபெற்ற பொதுச் சபையின் முடிவுகளைப் புறக்கணித்து, புறஜாதியிலிருந்து மாறினவர்கள், சடங்காச்சாரப் பிரமாணங்களைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியிருந்தனர். (1)

அந்த நிலைமை சிக்கலானதாக இருந்தது. அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தீமைகள் கலாத்திய சபைகளை அழிக்க வேகமாக அச்சுறுத்தின. பவுல் அவனது பகுதியாக, சுவிசேஷத்தின் கொள்கைகளை எவர்களுக்கு விசுவாசத்துடன் போதித்திருந்தானோ, அவர்கள் பகுதியிலிருந்து உண்டான வெளிப்படையான மருள விழுகையினால் அவனது இருதயம் வெட்டுண்டுதுடன் கலங்கியிருந்தது. அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த தவறான கொள்கை விளக்கங்களை வெளிக்காட்டி, விசுவாசத்திலிருந்து விலகிச்சென்றிருந்தவர்களைக் கடுமையாகக் கடிந்துகொண்டு, வஞ்சிக்கப் பட்டுப்போன விசுவாசிகளுக்கு அவன் உடனடியாக எழுதினான். கலாத்தியர்களுக்கு “பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்

உண்டாவதாக” (கலாத்தியர் 1:3) என்ற வார்த்தைகளினால் வந்தனம் செலுத்தினபின், “உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” (கலாத்தியர் 1:6,8) என்ற கூர்மையான கடிந்துகொள்ளுதலின் வார்த்தைகளினால், அவன் அவர்களிடம் நயந்துவேண்டினான். பவுலின் போதனைகள் வேத வாக்கியங்களுக்கு இசைவானதாக இருந்தது. அவனுடைய வேலைகளுக்குப் பரிசுத்த ஆவியானவர் சாட்சி பகர்ந்திருந்தார்; எனவே, அவன் ஏற்கனவே போதனைசெய்திருந்த சத்தியங்களுடன் முரண்படுகின்ற எதையும் கவனிக்காமலிருக்கும்படி, அவன் தனது சகோதரர்களை எச்சரித்தான். (2)

கிறிஸ்தவ வாழ்க்கையிலிருந்த அவர்களது முதல் அனுபவத்தை கவனமாக ஆலோசிக்கும்படி கலாத்திய விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் உத்தரவிட்டான். “புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசவாசக்கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப்பெற்றீர்கள்? ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப்பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே. அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?” (கலாத்தியர் 3:1–5) என்றான். (3)

இவ்வாறாக, பவுல் கலாத்திய விசுவாசிகளை அவர்களுடைய மனச்சாட்சியென்னும் நியாய சங்கத்திற்குமுன் அணிவகுத்து நிறுத்தினான். தேவனுடைய இரட்சிக்கும் வல்லமையைச் சார்ந்து நின்று, மருளவிழுந்து போன ஆசிரியர்களின் கோட்பாடுகளை அங்கீகரிக்க மறுத்த அப்போஸ்தலன், மதம்மாறினவர்கள் மொத்தமாக வஞ்சிக்கப்பட்டிருப்பதையும், அப்படியிருந்த போதிலும், சுவிசேஷத்திலிருந்த முன்னைய தூதுக்கு அவர்கள் திரும்பினால், இன்னும்கூட சாத்தானை முறியடிக்கமுடியும் என்பதையும் பார்க்கும்படி

நடத்தினான். சத்தியம், நீதி ஆகியவைகளின் பகுதியில் நிற்பதை உறுதியாக எடுத்துக்கொண்டான். அவன் சுமந்திருந்த தூதின்மீதிருந்த அவனுடைய மிக மேலான விசுவாசம், நம்பிக்கை ஆகியவை எந்த அநேகருடைய விசுவாசம் தோல்வியடைந்திருந்ததோ—அவர்கள்—இரட்சகருடனுள்ள உறவுக்குத் திரும்புவதற்கு உதவியது. (4)

கொரிந்து சபைக்குப் பவுல் எழுதின விதத்திலிருந்து கலாத்தியர்களைப் பின்தொடர்ந்த அவனுடைய நடத்தை எப்படி மாறுபட்டதாக இருந்தது? முன்னையவர்களை அவன் எச்சரிக்கையுடனும் மென்மையுடனும் கடிந்துகொண்டிருந்தான். பிந்தினவர்களை விட்டுவைக்காத வார்த்தைகளினால் கடிந்துகொண்டிருந்தான். கொரிந்தியர்கள் சோதனையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனர். சத்தியத்தின் ஆடையினால் தங்களை மறைத்திருந்து, தவறுகளை முன்வைத்த ஆசிரியர்களின் சூழ்ச்சித்திறம் கொண்ட ஏமாற்றுவாதத்தினால், அவர்கள் குழப்பமடைந்தவர்களாக இருந்தனர். தவறிலிருந்து சரியானதை அவர்களுக்குப் பிரித்துப் போதிப்பது எச்சரிப்பையும் பொறுமையையும் அழைத்திருந்தது. பவுலின் பகுதியில் கடுமையான—சரியான முறையில் ஆராயப்படாத—அவசரம் இருந்திருந்தால் அது, அவன் எவர்களுக்கு உதவவேண்டுமென்றிருந்தானோ, அந்த அநேகரின்மீதிருந்த செல்வாக்கை அழித்திருந்திருக்கும். (5)

கலாத்திய சபையில் திறந்த—முகமூடி நீக்கப்பட்ட—தவறுகள் சுவிசேஷத்திற்குப் பதிலாக வைக்கப்பட்டிருந்தன. யூதமார்க்கத்தின் வழக்கற்றுப்போன சடங்காச்சாரங்களுக்காக, விசுவாசத்தின் மெய்யான அஸ்திவாரமாக இருந்த கிறிஸ்து மறுக்கப்பட்டிருந்தார். கலாத்திய விசுவாசிகளை அச்சுறுத்தியிருந்த ஆபத்தான செல்வாக்குகளிலிருந்து அவர்கள் காப்பாற்றப்படவேண்டுமானால், அதிகமான தீர்மானமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மிகவும் கூர்மையான எச்சரிப்புக்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதை அப்போஸ்தலன் கண்டான். (6)

கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இருக்கும் ஒவ்வொரு ஊழியக்காரனும் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான பாடம் என்னவெனில், அவன் எவர்களுக்கு நன்மை உண்டாகவேண்டுமென்று வகைதேடி உழைக்கின்றானோ, அவர்களுடைய நிலைமைக்குப் பொருந்தக்கூடிய விதத்தில், அவனுடைய வேலையை அமைத்துக்கொள்ளவேண்டும். மென்மை, பொறுமை, தீர்மானம், உறுதி ஆகியவை ஒருப்போல அவசியமானவைகளாக உள்ளன. ஆனால் இவைகள் சரியான பாகுபாடுகளுடன் தான் செயல்படுத்தப்படவேண்டும். பலவிதமான மனங்களுடன் மாறுபட்ட சூழ்நிலைகளிலும் நிலைமைகளிலும் ஞானத்துடன் இடைப்படுவது என்பது, தேவ ஆவியினால் அறிவூட்டப்பட்டு,

பரிசுத்தமாக்கப்பட்ட ஞானத்தையும் நிதானத்தையும் அவசியப்படுகின்ற ஒரு பணியாக உள்ளது. (7)

கலாத்திய விசுவாசிகளுக்கு அவன் எழுதின நிருபத்தில், தனது சொந்த மதமாற்றம் ஆரம்பகாலக் கிறிஸ்தவ அனுபவம் ஆகியவைகளுடன் சம்பந்தப்பட்டிருந்த தலையாய சம்பவங்களைப் பவுல் திரும்பிப் பார்த்தான். தெய்வீக வல்லமையின் ஒரு சிறப்பான வெளிக்காட்டுதலினால், சுவிசேஷத்தின் பெரும் சத்தியங்களைப் பார்க்கவும் பற்றிக்கொள்ளவும் அவன் நடத்தப்பட்டிருந்தான் என்பதை இந்த உபாத்தியினால் காட்ட அவன் வகைதேடியிருந்தான். பக்திவிநயமான விதத்திலும் தீவிரமான விதத்திலும் கலாத்தியர்களை எச்சரிக்கும்படி தேவனால் கிடைக்கப்பெற்ற போதனையினால்தான், பவுல் நடத்தப்பட்டிருந்தான். அவன் தயக்கத்துடனும் சந்தேகத்துடனும் எழுதாமல் முடிவுசெய்யப்பட்ட மன உணர்த்துதலுடனும் முழுமையான அறிவுடனும் உண்டான நிச்சயத்தினால் எழுதியிருந்தான். மனிதனால் போதிக்கப்படுவதற்கும் கிறிஸ்துவிடமிருந்து நேரடியாக உபதேசத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆகிய இரண்டிற்கும் இடையிலிருந்த வித்தியாசத்தை அவன் தெளிவாக கோடிட்டுக்காட்டியிருந்தான். (8)

கலாத்தியர்கள் எந்தத் தவறான வழிகாட்டிகளினால் நடத்தப்பட்டிருந்தார்களோ அவர்களைவிட்டு விலகும்படியும், தெய்வீக அங்கீகாரத்தின் தவறாத சான்றுகளுடன் தொடர்ந்திருந்த விசுவாசத்திற்குத் திரும்பும்படியும், அப்போஸ்தலன் வற்புறுத்தினான். சுவிசேஷத்தின்மீதிருந்த அவர்களுடைய விசுவாசத்திலிருந்து விலகிச் செல்லும்படி அவர்களை நடத்தியிருந்த மனிதர்கள் மாயக்காரர்களாகவும், இருதயத்தில் பரிசுத்தம் இல்லாதவர்களாகவும், வாழ்க்கையில் கறைபடிந்தவர்களாகவும் இருந்தனர். அவர்களுடைய மதம், சமயச் சடங்குகளால் ஏற்படுத்தப்பட்டதாக இருந்தது. அதைச் செய்வதன்மூலமாக தேவனுடைய ஆதரவை ஆதாயமாக அடைந்துகொள்ளலாமென்று அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். கீழ்ப்படியும்படி அழைக்கிற ஒரு சுவிசேஷத்தின்மீது, அவர்கள் வாஞ்சையற்றவர்களாக இருந்தனர். “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்” (யோவான் 3:3). அப்படிப்பட்ட ஒரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கும் மதம் மிக அதிகமான பெரும் தியாகத்தை அவசியப்படுத்துவதாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து, அவர்கள் தங்களையும் மற்றவர்களையும் வஞ்சித்து, அவர்கள் தங்களுடைய தவறுகளையே பற்றிக்கொண்டிருந்தனர். (9)

இருதயம், வாழ்க்கை ஆகியவைகளுக்குப் பதிலாக, மதங்களின் வெளிப்புறமான வடிவங்களை அமைப்பது என்பது, இன்னும் யூத

ஆசிரியர்களின் நாட்களில் இருந்ததைப்போலவே, புதுப்பிக்கப்படாத தன்மைக்கு மகிழ்ச்சியானதாக உள்ளது. முன்பிருந்ததைப்போலவே இன்றும் தவறான ஆவிக்குரிய வழிகாட்டிகள் உள்ளனர். அநேகர் அவர்களுடைய கோட்பாடுகளை ஆவலுடன் கவனிக்கின்றனர். கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின்மூலமாகவும், தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதனாலும் உண்டாகக்கூடிய இரட்சிப்பின்மீதான நம்பிக்கையை மனங்களிலிருந்து திருப்புவது சாத்தானின் திட்டமிட்டுள்ள முயற்சியாக உள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தலைமைச்சத்துரு எவர்களை வஞ்சிக்க வகைதேடியிருக்கின்றானோ அவர்களுடைய தவறான எண்ணங்கள் அல்லது விருப்பங்கள் ஆகியவைகளுக்குத் தனது சோதனைகளைப் பொருத்திக்கொள்ளுகிறான். அப்போஸ்தலர்களின் காலத்தில் சடங்காச்சாரப் பிரமாணங்களை உயர்த்தி, கிறிஸ்துவை நிராகரிக்கும்படி அவன் யூதர்களை நடத்தினான். நிகழ்காலத்தில், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டிருக்கும் அநேகரை, கிறிஸ்துவைக் கனப்படுத்துகிறோம் என்னும் போலித் தன்மையினால், சன்மார்க்கப்பிரமாணங்களின்மீது அவமதிப்பைக் கொண்டுவரவும், அதன் கற்பனைகளை மீறுவதற்கான தண்டனையில்லாத விதத்தில் அவைகளை மீறலாமென்று போதிக்கவும், அநேகரைத் தூண்டி, செயலாற்ற வைக்கிறான். விசுவாசத்தைத் திரிபுசெய்யும் இவர்களை எதிர்த்து, உறுதியுடனும் தீர்மானத்துடனும் நிற்பதும் அவர்களுடைய தவறுகளை சத்தியத்தின் வார்த்தையினால் அச்சமின்றி வெளிக்காட்டுவதும் தேவனுடைய ஒவ்வொரு ஊழியக்காரனின் கடமையாக உள்ளது. (10)

கலாத்தியாவிலிருந்த சகோதரர்களின் நம்பிக்கையை மறுபடியும் ஆதாயப்படுத்துகின்ற பவுலின் முயற்சியில், தான் கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக இருக்கிறான் என்னும் தனது நிலையைத் திறமையுடன் மெய்ப்பித்தான். அவன் “மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும்” அப்போஸ்தலனானேன் என்று தன்னைப்பற்றி அறிவித்தான். அவன் தனது வேலையை மனிதர்களிடமிருந்து பெறாமல், பரலோகத்தின் மிக மேலான அதிகாரியிடமிருந்து பெற்றிருந்தான். எருசலேமிலிருந்த பொதுச்சபை அவனுடைய ஸ்தானத்தை ஒப்புகைசெய்தது. புறஜாதிகளுக்கிடையில் அவன் செய்திருந்த ஊழியங்களனைத்திலும் இந்த முடிவுகளுடன் அவன் இசைந்தவனாக இருந்தான். (11)

தனது அப்போஸ்தல ஸ்தானத்தை மறுத்திருந்தவர்களுக்கு மகா பிரதான அப்போஸ்தலரிலும், “நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்” (2கொரிந்தியர் 11:5) என்று பவுல் சான்று கொடுப்பதற்காகவும்,

சுயத்தை உயர்த்தாமல் தேவகிருபையைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்காகவும், பவுல் (இந்த உண்மையை) அவர்கள் முன் வைத்தான். அவனுக்குண்டாயிருந்த அழைப்பையும், அவனது ஊழியத்தையும் சிறுமைப்படுத்த வகைதேடியிருந்தவர்கள், எந்த ஒருவருடைய கிருபையும் வல்லமையும் பவுலின்மூலமாக வெளிக்காட்டப்பட்டிருந்ததுவோ அந்தக் கிறிஸ்துவிற்கு எதிராகப் போர்செய்துகொண்டிருந்தனர். அப்போஸ்தலன் தனது நிலையையும் அதிகாரத்தையும் காத்துநிற்பதற்காக, அவனது எதிரிகளால் வற்புறுத்தப்பட்டிருந்தான். (12)

ஒரு சமயத்தில், தேவனுடைய வல்லமையைத் தங்களுடைய வாழ்க்கையில் அறிந்திருந்தவர்களிடம், அவன் சுவிசேஷ சத்தியத்தின்மீது, முதலில் அவர்கள் கொண்டிருந்த அன்புக்குத் திரும்ப வேண்டும் என்று மன்றாடினான். எந்த ஒருவருடைய பாவநிவாரணக் கிருபைக்குத் தாங்கள் சரணடைகின்றனரோ, அவர்கள் அவருடைய நீதியின் உடையை அணிவிக்கப்பட்டவர்களாகக் கிறிஸ்துவிற்குள் சுதந்திரமான ஆண்களும் பெண்களுமாக ஆகும் அவர்களுடைய சலுகையை, அவர்களால் எதிர்வாதம் செய்யமுடியாதபடி, அவர்கள்முன் வைத்தான். (13)

இரட்சிக்கப்பட இருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுடைய காரியங்களில் உண்மையான—சொந்தமான அனுபவம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்னும் நிலையை அவன் எடுத்திருந்தான். அப்போஸ்தலனின் அக்கறைமிக்க கெஞ்சும் வார்த்தைகள் கனியற்றவைகளாக இருக்கவில்லை. மிகுந்த பலத்துடன் பரிசுத்த ஆவியானவர் செயலாற்றவே, மாறுபாடான பாதைகளில் அலைந்து திரிந்திருந்தவர்களின் பாதங்கள், சுவிசேஷத்தின்மீதிருந்த அவர்களுடைய முந்திய விசுவாசத்திற்குத் திரும்பின. அதற்குப்பின் கிறிஸ்து அவர்களை விடுதலைசெய்திருந்த சுயாதீனத்தில், அவர்கள் உறுதியாக நின்றிருந்தனர். அவர்களுடைய வாழ்க்கையில் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய ஆவியின் கனிகள் வெளிப்படுத்தப்பட்டன. தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. அந்தப் பிரதேசம் முழுவதிலும் விசுவாசிகளின் எண்ணிக்கையில் அநேகர் சேர்க்கப்பட்டனர். (14) ★

# 37

# எருசலேமை நோக்கிய பவுலின் கடைசிப் பயணம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 389–398)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 20:4–21:16**

பண்டிகையை ஆசரிப்பதற்காக உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எருசலேமிற்கு வரக்கூடியவர்களைச் சந்திக்கவேண்டும் என்பதற்காக பஸ்காப் பண்டிகைக்குமுன் எருசலேமிற்குச் சென்று சேரப் பவுல் பெரும் வாஞ்சையை உடையவனாக இருந்தான். நம்புவதற்கு விருப்பமற்றவர்களாக இருந்த தனது நாட்டு மனிதர்களின் தவறான எண்ணத்தை நீக்கவும், அதினால் சுவிசேஷத்தின் விலைமதிப்புமிக்க ஒளியை அவர்களும் ஏற்றுக் கொள்ளும்படி நடத்தப்படுவதற்கும் ஏதாவது ஒரு வகையில் தான் கருவியாக அமையவேண்டும் என்ற நம்பிக்கையை அவன் எப்பொழுதும் பேணியிருந்தான். எருசலேமிலிருந்த சபையைச் சந்திக்கவும் புறஜாதி யார்களின் சபைகளினால் யூதேயாவிலிருந்த சகோதரர்களுக்குக் கொடுத்து அனுப்பப்பட்டிருந்த அன்பளிப்பை அவர்களிடம் ஒப்படைக்கவும் அவன் விருப்பத்தோடிருந்தான். இந்தச் சந்திப்பினால் விசுவாசத்திற்கு மாறியிருந்த யூதமார்க்கத்தினருக்கும் புறஜாதியினருக்கும் இடையில் ஒரு உறுதியான ஒற்றுமையை உண்டுபண்ணலாமென்று அவன் நம்பியிருந்தான். (1)

கொரிந்துவிலிருந்த அவனுடைய ஊழியத்தைநிறைவேற்றி முடித்திருந்த அவன், பாலஸ்தீனக் கடற்கரையிலிருந்த ஏதாவதொரு துறைமுகத்திற்கு நேராகச் செல்லலாம் என்ற தீர்மானமுடையவனாக இருந்தான். எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த நேரத்தில் அவன் கப்பலேறச் சென்றிருந்த வேளையில் அவனது உயிரை எடுத்துவிட யூதர்கள் வகுத்திருந்த ஒரு திட்டம்பற்றி அவனுக்குக் கூறப்பட்டது. கடந்த காலத்தில் அப்போஸ்தலனின் பணிக்கு ஒரு முடிவை உண்டுபண்ணவேண்டுமென்றிருந்த

விசுவாசத்தை எதிர்ப்பவர்களாக இருந்த அவர்களுடைய திட்டங்கள் முறியடிக்கப்பட்டிருந்தன. (2)

சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்ததினால் உண்டான வெற்றி யூதர்களின் கோபத்தைப் புதுப்பித்திருந்தது. புதிய கோட்பாடு எல்லா இடங்களிலும் பரவுவதையும், அதினால் சடங்காச்சாரப் பிரமாணங்களை ஆசரிப்பதிலிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததையும் ஆபிரகாமின் பிள்ளைகளாக யூதர்கள் அனுபவித்திருந்த சலுகைகளுக்குச் சமமானவர்களாகப் புறஜாதியினரும் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதையும்பற்றிய புள்ளிவிபரம் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்துகொண்டிருந்தது. பவுல் தனது நிருபங்களில் எந்த வாதங்களை வலிமையுடன் வற்புறுத்தியிருந்தானோ, அவைகளைக் கொரிந்துவில் தனது பிரசங்கத்தின்போது முன்வைத்தான். “அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தா னென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்” (கொலோசெயர் 3:11) என்ற அவனுடைய அழுத்தமான அறிக்கை அவனது எதிரிகளால் துணிச்சலான தேவதூஷணம் என்று கருதப்பட்டதுடன் அவனது குரலை மௌனப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானம்செய்ய வைத்தது. (3)

இந்தச் சதித்திட்டம்பற்றிய எச்சரிக்கையைப் பெற்றுக்கொண்டதன் பேரில் மக்கெதோனியா வழியாகச் செல்லப் பவுல் முடிவுசெய்தான். பஸ்கா பண்டிகை ஆராதனைகளின்போது, எருசலேமைச் சென்றடைந்து விடவேண்டும் என்ற அவனுடைய திட்டம் கைவிடப்படவேண்டிதாயிற்று. ஆனால் அவன் பெந்தெகொஸ்தேயின்போது அங்கிருக்கலாம் என்று நம்பினான். (4)

பவுலுடனும் லூக்காவுடனும் “பெரோயா ஊரானாகிய சோபத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும், செக்குந்தும், தெர்பையானாகிய காயுவும், தீமோத்தேயும், ஆசியா நாட்டாராகிய தீகிக்கும் துரோப்பீமும், ஆசியாநாடுவரைக்கும் அவனுக்கு வழித்துணையாய் வந்தார்கள்”– அப்போஸ்தலர் 20:4. யூதேயாவில் நடைபெற்றிருந்த ஊழியத்திற்குப் பொறுப்பானவர்களான சகோதரர்களிடம் ஒப்படைப்பதற்கு நோக்கமுடையவ னாக இருந்த பவுலிடம் புறஜாதியாரின் சபைகளிலிருந்து வழங்கப்பட்டிருந்த பெரும் தொகையான பணம் இருந்தது. இதன் காரணமாக நன்கொடை அளித்திருந்த பல்வேறுபட்ட சபைகளிலிருந்த சகோதரர்களும் தன்னுடன் எருசலேமிற்குச் செல்லவேண்டும் என்ற ஏற்பாடுகளைப் பவுல் செய்திருந்தான். (5)

பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதற்காகப் பவுல் பிலிப்பியில் தங்கினான். லூக்கா மட்டும் அவனுடன் தங்கியிருந்தான். அந்தக் கூட்டத்திலிருந்த மற்ற அங்கத்தினர்கள் துரோவாவிலே அவனுக்காகக் காத்திருக்கும்படி அங்கு சென்றனர். அப்போஸ்தலனால் மாற்றமடைந்தவர்களில் பிலிப்பியர்கள் மிக அதிகமாக அன்பு பாராட்டுபவர்களாகவும் உண்மையான இருதயமுடையவர்களாகவும் இருந்தனர். அந்தப் பண்டிகையின் எட்டு நாட்களில் அவன் அவர்களுடன் சமாதானமும் மகிழ்ச்சியுமிக்க உறவை உடையவனாக இருந்தான். (6)

பவுலும் லூக்காவும் பிலிப்பியிலிருந்து கப்பல் பயணம் செய்து, ஐந்து நாட்களுக்குப்பின் துரோவாவிற்குச் சென்று, அவர்களுடைய தோழர்களுடனும் அந்த இடத்திலிருந்த விசுவாசிகளுடனும் ஏழு நாட்கள் தங்கியிருந்தான். (7)

அங்கு அவன் தங்கியிருந்த கடைசி நாளில் அப்பம் பிட்கக் கூடிவந்தார்கள். (அப்போஸ்தலர் 20:7). அவர்களால் நேசிக்கப்பட்டிருந்த அவர்களுடைய ஆசிரியர் பிரிந்துசெல்லப்போகிறார் என்ற காரணம் வழக்கத்தின்படியில்லாத பெரிய கூட்டத்தை அழைத்திருந்தது. அவர்கள் மூன்றாம் மாடியிலிருந்த ஒரு அறையிலே கூடியிருந்தனர். அங்கு அவர்கள்மீது கொண்டிருந்த அன்பின் பெரும் உணர்ச்சியினாலும், கவலைமிக்க அக்கறையினாலும் அப்போஸ்தலன் நடு இரவுவரை பிரசங்கம் செய்தான். (8)

அங்கு திறந்த ஜன்னல்கள் ஒன்றில் ஐத்திகு என்னும் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். ஆபத்தான இந்த இடத்தில் அவன் உறங்கிக் கீழே உள்ள தரையில் விழுந்தான். உடனே எங்கும் அபாயக்குரலும் குழப்பமும் உண்டாயிற்று. அந்த வாலிபனை இறந்தவனாகத் தூக்கி எடுத்தார்கள். அநேகர் அவனைச் சூழந்து நின்று அழுதார்கள். துக்கங்கொண்டாடினார்கள். ஆனால் பயமடைந்திருந்த கூட்டத்திற்குள் பவுல் கடந்துசென்று அவனை அணைத்துக்கொண்டு, இறந்துபோன அவனுக்கு அவனுடைய உயிரைத் தரவேண்டுமென்று அக்கறைமிக்க ஜெபத்தை தேவனிடம் ஏறெடுத்தான். அவனுடைய விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டது. “கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது” (அப்போஸ்தலர் 20:10) என்று கூறிய அப்போஸ்தலனின் குரல், துக்கங்கொண்டாடுபவர்கள் புலம்புவதிலுண்டான சத்தத்தைவிடப் பெரிதாகக் கேட்டது. விசுவாசிகள் மறுபடியும் அந்த மேல்வீட்டில் மகிழ்ச்சியுடன் கூடினார்கள். அவர்கள் திருவிருந்து ஆராதனையில் பங்குகொண்டபின், “விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து பின்பு புறப்பட்டான்” (அப்போஸ்தலர் 20:11). (9)

பவுலும் அவனது தோழர்களும் பயணத்தைத் தொடரவேண்டியதாக இருந்த கப்பல் புறப்படும் நேரமாகியிருந்தது. எனவே சகோதரர்கள் விரைவாகக் கப்பலில் ஏறினார்கள். அப்படியிருந்தபோதிலும் துரோவா ஆசோஸ் ஆகிய இடங்களுக்கிடையிலிருந்த சமீபமாக தரைவழிப் பாதையை அப்போஸ்தலன் தெரிந்துகொண்டு, ஆசோஸ் பட்டணத்தில் தனது தோழர்களைச் சந்தித்தான். இது தியானம் செய்வதற்கும், ஜெபத்திற்குமான சிறிது சமயத்தைக் கொடுத்தது. எருசலேமை அவன் சந்திக்க வருவதுடன் சம்பந்தப்பட்ட கஷ்டங்களும் அபாயங்களும், அவன்மீதும் அவனுடைய ஊழியத்தின்மீதும் சபை கொண்டிருந்த மனோபாவம், அதைப்போலவே மற்ற சபைகளின் நிலைமை, மற்ற இடங்களில் காணப்பட்டிருந்த சுவிசேஷ ஊழியத்தின்மீதிருந்த வாஞ்சையும் அக்கறையும்—கவலையுமிக்க எண்ணங் களையுடைய விஷயங்களாக இருந்தன. இந்தச் சிறப்பான சந்தர்ப்பத்தை பலத்திற்காகவும் வழிகாட்டுதலுக்காவும் தேவனைத் தேடுவதற்காகவும் அவன் உபயோகித்துக்கொண்டான். (10)

அந்தப் பயணிகள் ஆசோசிலிருந்து தெற்குத்திசையில் பயணம் செய்தபோது, நீண்டகாலமாக அப்போஸ்தலன் ஊழியஞ்செய்திருந்த எபேசுவை கடந்து சென்றான். முக்கியமான உபதேசமும் ஆலோசனையும் அவனிடம் இருந்ததினால் அங்கிருந்த சபையைச் சந்திப்பதற்குப் பவுல் பெரிய அளவில் வாஞ்சை உள்ளவனாக இருந்தான். ஆனால் காரியங்களை ஆலோசித்தபோது, விரைவாகச் சென்று "கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமிலிருக்கவேண்டுமென்று" (அப்போஸ்தலர் 20:16) அவன் தீர்மானித்திருந்தான். அவன் மிலேத்து பட்டணத்திற்கு வந்துசேர்ந்தபோது, அங்கிருந்து முப்பது கல் தூரத்தில் இருந்த எபேசுவைக் கப்பல் புறப்படுமுன் தொடர்புகொள்ளுவது சாத்தியம் என்பதை அறிந்தான். எனவே அவன் தனது பயணத்தைத் தொடர்வதற்குமுன் அவர்களைப் பார்க்கும்படி, அவர்கள் உடனே மிலேத்துவிற்கு வரவேண்டும் என்று வற்புறுத்தின ஒரு செய்தியை எபேசு சபையின் மூப்பர்களுக்கு அனுப்பிவைத்தான். (11)

அவனுடைய அழைப்பிற்கு மறுமொழியாக அவர்கள் வந்தனர். பலமிக்க—மனதைத் தொடும் விதத்திலான வார்த்தைகளினால் எச்சரிப்பையும் பிரிவுபச்சாரத்தையும் கூறினான். "அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது, அவன் அவர்களை நோக்கி: நான் ஆசியாநாட்டில் வந்த முதல்நாள் தொடங்கி எல்லாக் காலங்களிலும் உங்களுடனே இன்னவிதமாய் இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய

தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன். பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்" (அப்போஸ்தலர் 20:18–21) என்று கூறினான். (12)

பவுல் எப்பொழுதும் தெய்வீகப் பிரமாணத்தை உயர்த்தியிருந்தான். கீழ்ப்படியாமைக்கான தண்டனையிலிருந்து மனிதனை இரட்சிப்பதற்குப் பிரமாணத்தில் வல்லமை இல்லை என்பதை அவன் காண்பித்திருந்தான். தேவப்பிரமாணத்தை மீறி தவறு செய்பவர்கள் தேவனுடைய கோபத்திற் குள்ளாகி இருப்பதினால் அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக வருந்தி, தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தவேண்டும்; பாவ மன்னிப்பிற்கான அவர்களுடைய ஒரே உபாத்தியாக இருக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தின்மீது அவர்கள் விசுவாசம் வைக்கவேண்டும்; அவர்களுக்கான தியாகபலியாக தேவகுமாரன் மரித்து, அவர்களுக்காகப் பிதாவின்முன் பரிந்துபேசுபவராக நிற்பதற்காக அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றிருக்கிறார். மனம் வருந்துவதினாலும் விசுவாசத்தினாலும் அவர்கள் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டு கிறிஸ்துவின் கிருபையின்மூலமாக, இனி தேவப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதற்குத் தகுதிப்படுத்தப்படவேண்டும். (13)

"இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்தஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப். 20:22–25) என்று பவுல் தொடர்ந்தான். (14)

இந்தச் சாட்சியைக் கொடுப்பதற்குப் பவுல் திட்டமிட்டிருக்கவில்லை. ஆனால் அவன் பேசிக்கொண்டிருந்தபோது எபேசிய சகோதரர்களுடனுள்ள

கடைசிச் சந்திப்பாக அது இருக்கக்கூடும் என்னும் அவனுடைய அச்சத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, ஆவியின் ஏவுதல் அவன் மீது வந்தது. (15)

“தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்குஅறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்” (அப்போஸ்தலர் 20:26–27). அவர்களுக்கான உபதேசத்திற்காகவும் எச்சரிப்புக்காவும் அல்லது திருத்துதலுக்காவும் அவனுக்கு தேவன் கொடுத்திருந்த வார்த்தைகளை நிறுத்திவைக்கும்படி எதிர்ப்பைப்பற்றின பயம் நட்பு அல்லது கைதட்டலின்மீதுள்ள விருப்பம் ஆகியவைகளால் பவுலை நடத்தமுடியவில்லை. தேவனுடைய வர்த்தையைப் பிரசங்கிப்பதிலும் அதன் கட்டளைகளைச் செயல்படுத்துவதிலும், அஞ்சாமையை அவருடைய ஊழியக்காரர்களிடத்திலிருந்து அவன் இன்று அவசியப்படுத்துகிறார். அவர்களுக்கு வேதனையை உண்டுபண்ணக்கூடிய மற்றவைகளைப் பேசாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரன் நிறுத்திவைத்துக்கொண்டு, மிகவும் அதிகமான சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளை மட்டும் பேசுபவனாக இருக்கக்கூடாது. அவன் மிகுந்த அக்கறையுடன் சுபாவத்தில் உண்டாகக்கூடிய முன்னேற்றத்தைக் கவனிக்கவேண்டும். அவனுடைய மந்தையில் உள்ள ஏதாவது ஒன்று பாவத்தைப் பேணிக்கொண்டிருப்பதைக் கண்டால், அவன் அவர்களது விசுவாசமிக்க ஒரு மேய்ப்பனாக இருந்து, அப்படிப்பட்டவர்களுக்குப் பொருந்தக்கூடிய போதனையை வேதவாக்கியங்களிலிருந்து கொடுக்கவேண்டும். அவர்களைத் தங்களுடைய சுயத்தின்மீதுள்ள நம்பிக்கையில் எச்சரிக்கை செய்யப்படாதவர்களாக முன்செல்லும்படி அனுமதித்தால், அவன் அவர்களுடைய ஆத்துமாக்களுக்குப் பொறுப்பாளியாவான். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மேலான பதவியை நிறைவேற்றும் ஒரு போதகர், தனது ஜனங்களுக்குக் கிறிஸ்தவ விசுவாசம் பற்றியும், ஒவ்வொரு காரியத்திலும் தேவனுடைய நாளில் பூரணமானவர்களாக நிற்பதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதைக் காட்டுவதற்கு விசுவாசத்துடனும் உபதேசம் கொடுக்கவேண்டும். சத்தியத்தைப் போதிக்கின்ற அப்படிப்பட்ட ஒருவனால்மட்டுமே அவனுடைய ஊழியத்தின் முடிவின்போது, பவுலைப் போல எல்லா மனிதர்களுடைய இரத்தப்பழியிலிருந்தும் நான் சுத்தமுள்ளவனாக இருக்கிறேன் என்று கூறமுடியும். (16)

“ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை

முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்." விலைக்கு வாங்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் இரத்தத்துடன் இடைப்படுகிறோம் என்பதைச் சுவிசேஷ உழியக்காரர்கள் தொடர்சியாகத் தங்களுடைய மனதில் வைக்கக்கூடியவர்களாக இருந்தால், அவர்கள் தங்களுடைய பணியின் முக்கியத்துவத்தைப்பற்றின ஆழமான உணர்வை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்களுக்கும் தங்களுடைய மந்தைக்கும் செவிசாய்ப்பவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய உபதேசங்களை வலியுறுத்தி சித்திரப்படுத்திக்காட்டுகின்ற உதாரணமாக அவர்களுடைய சொந்த வாழ்க்கை இருக்கவேண்டும். வாழ்க்கையின் ஆசிரியர்களான அவர்கள், சத்தியத்தைப்பற்றித் தவறான விதத்தில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது. கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருக்கும் அவர்கள், அவரது நாமத்தின் கனத்தைக் காக்கவேண்டும். தங்களுடைய அர்ப்பணிப்பினாலும், தூய்மைமிக்க வாழ்க்கையினாலும், தெய்வபக்திமிக்க உரையாடலினாலும் த ங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பரம அழைப்பிற்குப் பாத்திரவான்களாக உள்ளனர் என்பதை அவர்கள் மெய்ப்பித்துக் காட்டவேண்டும். (17)

எபேசுவிலிருந்த சபையின்மீதுண்டாகக்கூடிய தாக்குதலின் அபாயங்கள் அப்போஸ்தலனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தன. "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:29–30). சபைக்கு உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் சபை அனுபவிக்கவேண்டியதாக இருந்த தாக்குதலைக் கண்ட பவுல், சபைக்காக நடுங்கினான். தங்களுடைய பரிசுத்தமான நம்பிக்கையை விழிப்புடனிருந்து காக்கவேண்டுமென்று அவன் தனது சகோதரர்களிடம் பக்திவிநயமான அக்கறையுடன் கேட்டான். உதாரணத்திற்கு அவர்களுக்கிடையில் களைப்பற்றவிதத்தில் அவன் செய்திருந்த வேலையைச் சுட்டிக்காட்டினான். "நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்போஸ்தலர் 20:31) என்றான். (18)

"இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான்

இச்சிக்கவில்லை" (அப்போஸ்தலர் 20:32,33) என்று அவன் தொடர்ந்தான். எபேசிய சகோதரர்கள் செல்வந்தர்களாக இருந்தனர். ஆனால் பவுல் அவர்களிடமிருந்து எந்தவிதமான ஆதாயத்தையும் அடைந்துகொள்ள ஒருபோதும் வகைதேடியிருக்கவில்லை. தனது சுயதேவைகளைக் கவனிக்கும்படியான அழைப்பு அவனுடைய தூதின் ஒரு பகுதியாக ஒருபோதும் இருக்கவில்லை. "நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது" (அப்போஸ்தலர் 20:34). கிறிஸ்துவின் காரியத்திற்காகச் செய்த கடினமான உழைப்பிற்கும் நெடிய பயணங்களுக்குமிடையில் அவன் தன்னுடைய சுயதேவைகளுக்குமட்டும் செலவுசெய்யக்கூடியவனாக இராமல், தனது உடன் ஊழியர்களைத் தாங்குவதற்காகவும் தகுதியான ஏழைகளுக்கு நிவாரணமளிக்கவும் எதையாவது சேமிக்கவும் தகுதியுள்ளவனாக இருந்தான். இடைவிடாத விழிப்பினாலும் மிக அதிகமான சிக்கனத்தினாலும் அவன் இதை நிறைவேற்றியிருந்தான். "இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்" (அப்போஸ்தலர் 20:35) என்று அவன் கூறினதுபோல அவனது சொந்த உதராணத்தை நன்கு சுட்டிக்காட்டக் கூடியவனாக இருந்தான். "இவைகளைச் சொன்னபின்பு, அவன் முழங்காற்படியிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம்பண்ணினான். அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்கமாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள்" (அப். 20:36–38). (19)

அந்தப் பயணிகள் மிலேத்துவிலிருந்து கப்பல் பயணம் செய்து "அவர்களை விட்டுப் பிரிந்து, துறைபெயர்ந்தபின்பு, நேராயோடி, கோஸ்தீவையும், மறுநாளில் ரோதுதீவையும் சேர்ந்து, அவ்விடம் விட்டுப் பத்தாரா பட்டணத்துக்கு வந்து, அங்கே பெனிக்கே தேசத்திற்குப்போகிற ஒரு கப்பலைக் கண்டு, அதிலே ஏறிப்போனோம். சீப்புருதீவைக் கண்டு, அதை இடதுபுறமாக விட்டு, சீரியாநாட்டிற்கு ஓடி, தீருபட்டணத்துறையில் இறங்கினோம்; அங்கே கப்பலின் சரக்குகளை இறக்கவேண்டியதாயிருந்தது. அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள்" (அப். 21:1–4). ஆனால் அந்த அப்போஸ்தலன் தன்னுடைய நோக்கத்திலிருந்து தன்னைத் திருப்பக்கூடிய துன்பங்களையும் சிறையையும்பற்றிய பயத்தை அனுமதிக்கவில்லை! (20)

தீருவில் செலவழித்த ஒரு வாரத்தின் முடிவில் சகோதரர்களனைவரும் தங்களுடைய மனைவிமர்களுடனும் பிள்ளைகளுடனும் பவுலுடனுங்கூட கப்பலுக்குச் சென்று கப்பலேறுவதற்குமுன் கடற்கரையில் முழங்கால்படியிட்டு, அவன் அவர்களுக்காகவும் அவர்கள் அவனுக்காகவும் ஜெபித்தார்கள். (21)

அந்தப் பயணிகள் தெற்குநோக்கிப் பயணம்செய்து "மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்" (அப்போஸ்தலர் 21:8). இங்கு பவுல் சமாதானமும் மகிழ்ச்சியுமிக்க சில நாட்களைக் கழித்தான். அது அவன் நீண்ட நாட்களாக அனுபவித்திராத சுதந்திரத்தின் பூரணமான சுதந்திரமாக இருந்தது. (22)

பவுல் செசரியாவில் தங்கியிருந்தபோது, யூதேயாவிலிருந்து அகபு என்னும் பெயரை உடைய ஒரு தீர்க்கதரிசி அங்கு வந்தான். "அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்" (அப்போஸ்தலர் 21:11) என்றான். (23)

"அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்" (அப்போஸ்தலர் 21:13). அவனுடைய நோக்கத்தைப் பார்த்து சகோதரர்கள் அவனை வற்புறுத்துவதை நிறுத்தி, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தார்கள். (24)

செசரியாவில் தங்கியிருந்த சுருக்கமான நேரத்தின் முடிவு வரவே, பவுல் தனது சகோதரர்களில் சிலருடனும் தோழர்களின் கூட்டத்தினரோடும் எருசலேமிற்குப் புறப்பட்டுப்போனான். வரவிருக்கும் தீமையைப்பற்றின மன நுண்ணுணர்வுகள் அவர்களுடைய இருதயங்களின் நிழலாக இருந்தன. (25)

இப்படிப்பட்ட துயரம் நிறைந்த இருதயத்துடன், அப்போஸ்தலன் இதற்குமுன் ஒருபோதும் எருசலேமிற்குச் சென்றிருந்ததில்லை. அங்கு அவனால் சில நண்பர்களையும் அநேக எதிரிகளையும் சந்திப்பான் என்பதை அவன் அறிந்திருந்தான. தேவகுமாரனை நிராகரித்துக் கொலைசெய்திருந்த நகரத்தை, தெய்வ கோபத்தின் அச்சுறுத்தல்கள் தொங்கிக்கொண்டிருந்த நகரத்தை அவன் சமீபித்துக்கொண்டிருந்தான்.

கிறிஸ்துவின் அடியார்களுக்கெதிராக இருந்த அவனுடைய சொந்தத் தவறான எண்ணம், எவ்வளவு கசப்பனதாக இருந்தது என்பதை நினைத்து, பொய்த் தோற்றத்தினால் வஞ்சிக்கப்பட்டுப்போயிருந்த அவனுடைய சொந்த நாட்டு மனிதர்களின்மீது மிக ஆழமான இரக்கத்தை உணர்ந்திருந்தான். அப்படியிருந்தும் அவர்களுக்கு உதவிசெய்ய அவன் தகுதியுள்ளவனாக இருக்கமுடியும் என்று அவனால் எவ்வளவு குறைவாக நம்பமுடியும்? அவனுடைய சொந்த இருதயத்தில் ஒரு சமயம் பற்றி எரிந்திருந்த குருட்டுத்தனமான அதே கோபமானது, இப்பொழுது சொல்லிமுடியாத வல்லமையுடன் ஒரு ஜாதியினரின் இருதயங்கள் முழுவதையும் அவனுக்கெதிராகப் பற்றி எரியச்செய்துகொண்டிருந்தது. (26)

விசுவாசத்தில் அவனுடைய சொந்தச் சகோதரர்களாக இருந்தவர்களிடமிருந்துங்கூட அனுதாபத்தையும் ஆதரவையும் அவனால் எண்ணிப்பார்க்கமுடியாமலிருந்தது. அவனைப்பற்றியும் அவனது பணியைப் பற்றியும் எருசலேமில் பாதகமான அறிக்கைகளை நேரடியாகவும் எழுத்தின்மூலமாகவும் சுற்றுக்கு விடுவதில் அவனது பாதையில் மிக நெருக்கமாகச் சென்றிருந்த மாற்றமடையாத யூதர்கள் வேகமற்றவர்களாக இருக்கவில்லை. அப்போஸ்தலர்களும் மூப்பர்களுமாக இருந்த சிலருங்கூட இந்த அறிக்கைகளை உண்மை என்று ஏற்றுக்கொண்டு, அதை எதிர்ப்பதற்கு முயலாதவர்களாக, அவனுடன் இசைவாக இருப்பதற்கான வாஞ்சையை வெளிக்காட்டதவர்களாக இருந்தனர். (27)

அப்படியிருந்தபோதிலும், அதைரியங்களுக்கிடையில் அப்போஸ்தலன் நம்பிக்கை இழந்தவனாக இருக்கவில்லை. அவனது சொந்த இருதயத்தில் பேசியிருந்த அதேகுரல், அவனுடைய நாட்டு மனிதர்களின் இருதயங்களிலும் பேசக்கூடியதாக இருந்தது. அவனுடைய உடன் சீடர்கள் எந்த ஒரு ஆண்டவரை நேசித்தும் அவருக்குச் சேவை செய்தும் இருந்தார்களோ அவர்கள் சுவிசேஷத்தின் பணியைச் செய்வதற்காக தங்களுடைய இருதயங்களையும் அவனுடைய இருதயத்துடன் ஒற்றுமைப்படுத்துவார்கள். (28) ★

# 38

# ஒரு சிறைக்கைதியாக—பவுல்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 399–418)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 21:17–23:25**

"நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். மறுநாளிலே பவுல் எங்களைக் கூட்டிக்கொண்டு, யாக்கோபினிடத்திற்குப் போனான்; மூப்பரெல்லாரும் அங்கே கூடிவந்தார்கள்"–அப்போஸ்தலர் 21:17–18. (1)

இந்தச் சந்தர்ப்பத்தில் பவுலும் அவனது கூட்டாளிகளும் எருசலேமில் ஊழியஞ்செய்துகொண்டிருந்த தலைவர்களிடம் அவர்களுடைய யூத சகோதரர்களுக்கிடையில் இருந்த ஏழைகளை ஆதரிப்பதற்காக புறஜாதி யினரின் சபைகளினால் அவனிடம் கொடுத்தனுப்பப்பட்டிருந்த அன்பளிப்பை முன்வைத்தனர். அந்த அன்பளிப்புகளைச் சேகரிப்பது அப்போஸ்தலனுடைய மற்றும் அவனது ஊழியக்காரர்களுடைய அதிகமான நேரத்தையும், கவலைமிக்க சிந்தனையையும், களைப்புமிக்க உழைப்பையும் உடையதாக இருந்தது. எருசலேமிலிருந்த மூப்பர்களின் எதிர்பார்ப்புகளைவிட மிகமிக அளவுகடந்ததாக இருந்த இந்தத் தொகை புறஜாதி விசுவாசிகளின் அநேக தியாகங்களையும் கடுமையான தனிமையையுங்கூட எடுத்துக்காட்டியிருந்தது. (2)

இந்த மனப்பூர்வமான காணிக்கைகள் உலகெங்கிலும் ஏற்படுத்தப் பட்டிருந்த தேவனுடைய பணியின்மீது புறஜாதியிலிருந்து மாறியிருந்தவர்களின் இராஜபக்தியை அடையாளப்படுத்தியிருந்தது. நன்றிமிக்க உவகையுடன் அனைவராலும் பெற்றுக்கொள்ளப்படவேண்டியதாக இருந்தது. அப்படி யிருந்துங்கூட பவுலும் அவனது கூட்டாளிகளும் எவர்களுக்குமுன்பாக நின்றிருந்தார்களோ அவர்கள் அந்த அன்பளிப்பைக் கொடுக்கும்படி தூண்டியிருந்த சகோதரசிநேகத்தின் ஆவியை வரவேற்க முடியாதவர்களாக இருந்தனர் என்பதும் பவுலுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் வெளிப்படையாகத்

தெரிந்தது. புறஜாதிகளுக்கிடையிலான சுவிசேஷ ஊழியத்தின் ஆரம்ப வருடங்களில் பழைய தவறான எண்ணங்களையும் பழக்கவழக்கங்களையும் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த எருசலேமிலிருந்த தலைவர்களில் சிலர், பவுலுடனும் அவர்களுடைய கூட்டாளிகளுடனும் இருதயப்பூர்வமாக ஒத்துழைப்பு இல்லாதவர்களாக இருந்தனர். தேவனுடைய ஊழியத்தின் சகல பகுதிகளையும் ஒரு முயற்சியினால் ஒருமுகப்படுத்துவதால் அவர்களுக்கும் அவர்கள் நேசித்திருந்த காரியத்திற்கும் வரக்கூடிய ஆசீர்வாதங்களைப்பற்றின பார்வையை அர்த்தமற்ற சில சமயச்சடங்குகளையும் அவைகளின் அமைப்புக்களையும் பாதுகாக்கவேண்டுமென்ற கவலையினால் அவர்கள் இழந்திருந்தனர். கிறிஸ்தவ சபையின் மிக மேலான தாற்பரியங்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற வாஞ்சை இருந்திருந்தபோதிலும், முன்னேற்ற மடைந்துகொண்டிருந்த தேவ ஏற்பாடுகளுடன் சேர்ந்து அடியெடுத்துவைக்க அவர்கள் தவறியிருந்தனர். தங்களுடைய மனித ஞானத்தினால் அநேகவிதமாக தேவையில்லாத கட்டுப்பாடுகளின்மூலமாக, ஊழியக்காரர்களை நீக்குவதற்கு முயன்றிருந்தனர். இவ்வாறாக, மாறுபட்டுவரும் சூழ்நிலைகளையும் தூரமான களங்களில் இருந்த ஊழியக்காரர்கள் சந்தித்திருந்த தனிப்பட்டவிதமான தேவைகளைப்பற்றியும் அறிமுகமில்லாதவர்களாக இருந்தும், இந்தக் களங்களில் உள்ள அவர்களுடைய சகோதாரர்களைக் குறிப்பிட்டவிதமான வேலைகளைப் பின்பற்ற வேண்டும் என்று இயக்குகின்ற அதிகாரம் தங்களுக்கு உண்டு என்று வற்புறுத்துகின்ற ஒரு குழுவினர் அங்கு எழும்பினார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பணி தங்களுடைய அபிப்பிராயங்களுக்கு இசைவான விதத்தில்தான் முன்கொண்டுசெல்லப்படவேண்டும் என்பது போன்று அவர்கள் உணர்ந்திருந்தனர். (3)

புறஜாதியினருக்காக ஊழியம் செய்திருந்தவர்கள் பின்பற்றியிருந்த விதம்பற்றி எழும்பியிருந்த குழப்பமிக்க கேள்விகளைப்பற்றி எருசலேமிலிருந்த சகோதரர்களுடன் பல தலையாய சபைகளின் பிரதிநிதிகளும் சேர்ந்து கவனமிக்க ஆலோசனைகளைக் கொடுத்து பல வருடங்கள் சென்றிருந்தன. விருத்தசேதனம் உட்பட சடங்குகளையும் சம்பிரதாயங்களைப்பற்றி குறிப்பிட்ட சிபாரிசுகளைச் சபைகளுக்குக் கொடுப்பதற்கு சகோதரர்கள் ஒன்றுபட்டிருந்தனர். இந்தப் பொதுச்சபையில்தான் ஒவ்வொரு விசுவாசியின் முழு நம்பிக்கைக்கும் தகுதியான ஊழியக்காரர்களாகப் பவுலும் பர்னபாவும் உள்ளனர் என்று அவர்களைப் புகழ்வதற்கு சகோதரர்கள் ஒன்றுபட்டிருந்தனர். (4)

புறஜாதியினரின் உலகத்திற்கு சுவிசேஷத்தைச்சுமந்துசெல்லவேண்டிய தலையாக பொறுப்பு எவர்கள்மீது தங்கியிருந்ததோ, அந்த அப்போஸ்தலர்கள்

பின்பற்றியிருந்த ஊழியத்தின் வகையைக் கடுமையாக விமரிசனம் செய்திருந்த சிலர், அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களுக்கிடையில் இருந்தனர். ஆனால் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தேவனுடைய நோக்கம்பற்றின அவர்களுடைய பார்வைகள் விசாலமடைந்தபோது, விசுவாசிகளின் கூட்டம் முழுவதையும் ஒன்றுசேர்க்கும் ஞானமிக்க முடிவுகளை எடுப்பதற்கு அவர்கள் இந்த சகோதரர்களுடன் ஒன்றுசேர்ந்தனர். (5)

அதற்குப்பின் புறஜாதியிலிருந்து மாறுபவர்கள் விரைவாக அதிகரித்துக்கொண்டிருந்தனர் என்பது வெளிப்படையானபோது, பவுலும் அவனது தோழர்களும் பின்பற்றினவிதங்களை எதிர்த்த முன்னணியிலிருந்த சகோதரர்கள் சிலர் எருசலேமில் இருந்தனர். அவர்கள் தங்களுடைய முந்தைய தவறான எண்ணத்தை விருப்பத்துடன் புதுப்பித்து, சுவிசேஷ த்தைப் பிரசங்கிக்கும் பணி இனிமேல் அவர்களுடைய சொந்த யோசனைகளின்படிதான் நடத்தப்படவேண்டும் என்று தீர்மானம்செய்யும் அளவிற்கு, ஆண்டுகள் கடந்துசென்றபோது, இந்தத் தவறான எண்ணங்கள் பலமடைந்தன. அவர்கள் பரிந்துரைத்திருந்த குறிப்பிட்ட கொள்கைகளுக்குப் பவுல் தனது நடைமுறையை ஒத்துப்போகச் செய்தால், அவர்கள் அவனுடைய ஊழியத்தை ஒப்புக்கொண்டு அதைத் தாங்குவார்கள். அப்படியில்லாவிட்டால், அதை விருப்பத்துடனும் பார்க்கமாட்டார்கள்; தங்களுடைய ஆதரவையும் தரமாட்டார்கள் என்பதாக இருந்தது. (5)

தேவன் தமது ஜனங்களின் ஆசிரியராக இருக்கிறார் என்னும் உண்மையைப்பற்றியும் அவருடைய காரியத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு மனிதனும் நேரடியான வழிகாட்டுதலுக்காக மனிதனைப் பார்க்காமல் தெய்வீகத் தலைவரைப் பின்பற்றுவதில் ஒரு தனிப்பட்ட அனுபவத்தை அடையவேண்டும் என்பதையும், அவருடைய ஊழியக்காரர்கள் மனித நாகரீகத்தின்படியும் மனித யோசனையின்படியும் வனையப்படாமல் தெய்வீக சாயலில் வனையப்படவேண்டும் என்பதையும்பற்றிய பார்வையை இந்த மனிதர்கள் இழந்திருந்தனர். (6)

அப்போஸ்தலனாகிய பவுல் அவனது ஊழியத்தில்: “என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது” (1 கொரிந்தியர் 2:5) என்னும் விதத்தில் போதித்திருந்தான். அவன் அறிவித்திருந்த சத்தியம் பரிசுத்த ஆவியினால் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டதாக இருந்தது. “அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷ ருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி,

ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.” “அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, அவிக்குரியவைகளை ஆவிக்குரியவை களோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்” (1 கொரிந்தியர் 2:10,11,13) என்று பவுல் அறிவித்தான். (7)

பவுல் அவனுடைய ஊழியம் முழுவதிலும் நேரடியான வழிகாட்டுதலுக்காக தேவனை நோக்கியிருந்தான். அதே நேரத்தில் எருசலேமிலிருந்த பொதுச்சபையின் முடிவுகளுக்கு இசைவாக ஊழியம் செய்வதில் மிகவும் கவனமுள்ளவனாக இருந்தான். அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்குநாள் பெருகின. (அப்போஸ்தலர் 16:5). இப்பொழுது சிலர் அவனிடம் அனுதாபம் காட்டாமலிருந்துங்கூட, அவனால் மாற்றமடைந்தவர்களுக்குள் ஒரு உண்மையான இராஜ பக்தி, தாராள மனப்பான்மை, அன்பு ஆகியவை உண்டாவதற்கு அவர்களை உற்சாகப்படுத்தினதிலும், யூத மூப்பர்களுக்குமுன் வைக்கும்படி அவனைத் தகுதியடையும்படி இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்பட்ட தாராளமான நன்கொடைகள் ஆகியவைகளினால் உண்டான தனது கடமையைச் செய்திருக்கிறான் என்னும் மனச்சாட்சியில் ஆறுதலைக் கண்டான். (8)

அந்த அன்பளிப்புகளைக் கொடுத்தபின், அவர்களை அவன் வினவி, தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாக விவரித்துச் சொன்னான். (அப்போஸ்தலர் 21:19). ஒன்றுக்கொன்று சம்பந்தமுடைய உண்மைகளைக் கேட்டபோது, அது, அநேகருடைய இருதயங்களுக்கும், சந்தேகப்பட்டிருந்தவர்களிலுங்கூட அவனது ஊழியங்களைத்தொடர்ந்து பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்னும் மனஉணர்த்துதலைக் கொண்டுவந்தது. அவர்கள் அதைக்கேட்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். (அப்போஸ்தலர் 21:20). அப்போஸ்தலன் பின்பற்றியிருந்த ஊழியங்களில் இவ்வகைகள் பரலோகத்தின் முத்திரையைப் பெற்றுள்ளன என்பதை அவர்கள் உணர்ந்தனர்.அவர்கள்முன் வைக்கப்பட்டிருந்த தாராளமான நன்கொடைகள் புறஜாதியினருக்கிடையில் ஏற்படுத்தப்பட்டிருந்த புதிய சபைகளின் விசுவாசத்தைப்பற்றின அப்போஸ்தலனின் சாட்சிக்கு கனத்தைச் சேர்த்தது. கட்டுப்பாடு செய்யும் கொடுங்கோன்மைமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருந்த எருசலேமின் ஊழியத்திற்குப் பொறுப்பானவர்களில் சிலர், பவுலின் ஊழியத்தைப் புதிய ஒளியில் கண்டு, தங்களுடைய சொந்த நடத்தை தவறு என்னும் மன உணர்த்துதலை அடைந்து, யூத சம்பிரதாயங்களுக்கும் பரம்பரியங்களுக்கும்

அடிமைகளாக தாங்கள் வைக்கப்பட்டிருந்தனர் என்பதை உணர்ந்து, யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் நடுவில் நின்றிருந்த பிரிவினையாகிய நடுச்சுவர் கிறிஸ்துவின் மரணத்தினால் நீக்கப்பட்டிருந்தது என்பதை அறியத் தாங்கள் தவறியதால் சுவிசேஷ ஊழியத்தின் பணி பெருமளவிற்கு இடையூறுசெய்யப்பட்டிருந்தது என்பதைக் கண்டனர். (9)

பவுலின்மூலமாக தேவன் செயலாற்றியிருக்கிறார் என்பதையும், சில சமயங்களில் பொறாமையும் தவறான எண்ணங்களும் எழும்பும்படி அவர்கள் அவனுடைய எதிரிகளின் அறிக்கைகளை அனுமதித்ததில் தவறு செய்துள்ளனர் என்பதையும் திறந்த மனதுடன் அறிக்கைசெய்வதற்கு தலையாக சகோதரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொன்னான வாய்ப்பாக இது இருந்தது. ஆனால், காயமடைந்திருந்தவனுக்கு நியாயம்செய்வதற்காக ஒன்றுபடுவதற்குப்பதிலாக அவனுக்கு ஆலோசனை கொடுத்தனர். அது, தவறான எண்ணத்திற்குப் பெருமளவில் பவுல்தான் பொறுப்பாளியாக்கப்படவேண்டும் என்னும் உணர்ச்சியை அவர்கள் இன்னும் பேணிக்கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் அவனுக்குக் காட்டினது. பாதிக்கப்படாமலிருந்தவர்கள் எங்கே தவறினார்கள் என்பதைக் காட்டுவதற்கு முயலாமல், அவர்களுடைய அபிப்பிராயத்தின்படி தவறாகப் புரிந்துகொண்டதற்கான காரணங்கள் அனைத்தையும நீக்கிவிடக்கூடிய ஒரு பாதையைப்பின்பற்றும்படி அவனுக்கு ஆலோசனைகூறி, ஒரு சமரசத்தை உருவாக்க வகைதேடினார்கள். (10)

"அவர்கள் அவனைநோக்கி: சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம்பேர் விசுவாசிகளாயிருக்கிறதைப் பார்க்கிறீரே, அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களா யிருக்கிறார்கள். புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம்பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லையென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது செய்யவேண்டியது என்ன? நீர் வந்திருக்கிறீரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாய் கூட்டங்கூடுவார்கள். ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்; அதென்னவென்றால், பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்துகெண்டு, அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவுசெய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக்குறித்துக்

கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்துகொள்வார்கள். விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல், விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், விலகியிருக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானம்பண்ணி, அவர்களுக்கு எழுதியனுப்பினோமே" (அப்போஸ்தலர் 21:20–25) என்றார்கள். (11)

அவர்கள் தெரிவித்ததின்படி செய்தால், அவனைப்பற்றின தவறான அறிக்கைகளுக்கு எதிரான முடிவைத்தரும் என்று சகோதரர்கள் நம்பினார்கள். புறஜாதியினரிலிருந்து மாறினவர்களைப்பற்றிய முந்தைய ஆலோசனை சபையின் முடிவும் சடங்காச்சாரப்பிரமாணங்களும் இன்னும் நல்லவைகளாக வைக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் அவனுக்கு வாக்குறுதி கொடுத்தனர். ஆனால் இப்பொழுது கொடுக்கப்பட்டிருந்த உபதேசம், அந்த முடிவுக்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. இந்த உபதேசத்தை தேவ ஆவி தூண்டியிருக்கவில்லை. அது கோழைத்தனத்தின் கனியாக இருந்தது. சடங்காச்சாரப்பிரமாணங்களுக்கு இசைவாக இல்லாமலிருப்பதினால் கிறிஸ்தவர்கள் தங்கள்மீது யூதர்களின் பெறுப்பைக் கொண்டுவந்து, தங்கைளத் தாங்களே உபத்திரவத்திற்குள்ளாக்கிக் கொள்வார்கள் என்பதை எருசலேம் சபையின் தலைவர்கள் அறிந்திருந்தனர். சுவிசேஷத்தின் முன்னேற்றத்திற்கு சனகரீம் சங்கம் அதன் பெரும் இடையூறைச் செய்துகொண்டிருந்தது. அப்போஸ்தலர்களை, குறிப்பாகப் பவுலைப் பின்தொடரவும், முடிந்தவரை எல்லா விதத்திலும் அவர்களுடைய பணியை எதிர்க்கவும் இந்தச் சங்கத்தினரால் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். பிரமாணத்தை மீறினவர்களாகக் கிறிஸ்தவ விசுவாசிகள் சனகரீம் சங்கத்திற்குமுன் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டால், அவர்கள் யூதமார்க்க விசுவாசத்திலிருந்து மருள விழுந்தவர்களாக—விரைவான—கடுமையான தண்டனையை அனுபவிக்கவேண்டியவர்களாக இருந்தனர். (12)

சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டிருந்த யூதரில் அநேகர் இன்னும் சடங்காச்சாரத்தை ஆதரித்து அதைப் பேணுபவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய நாட்டு மனிதர்களின் நம்பிக்கையை ஆதாயமாக அடைந்துகொள்ளலாம் என்ற நம்பிக்கையில் ஞானமற்ற சலுகைகள் செய்ய அதிக விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தனர். எருசலேம் சபையிலிருந்த தலையாய அங்கத்தினர்களில் அநேகர் அவனுக்கெதிரான தவறான எண்ணத்தைப் பேணுவதில் தொடரும்வரை, அவனது செல்வாக்கிற்கு அவர்கள் எதிர்ச்செயல் செய்வார்கள் என்பதைப் பவுல் உணர்ந்திருந்தான்.

நியாயமான ஏதாவது சலுகையினால் அவர்களை சத்தியத்திற்குள் ஆதாயப்படுத்த முடியுமானால் மற்ற இடங்களில் உள்ள சுவிசேஷத்தின் வெற்றிக்கு எதிராக இருக்கும் பெரும் தடையை அவனால் நீக்கமுடியும் என்பதை அவன் உணர்ந்தான். ஆனால் அவர்கள் கேட்ட அளவிற்கு இணங்குவதற்கு அவன் தேவனால் அதிகாரப்படுத்தப்படவில்லை. (13)

தனது சகோதரர்களுடன் இசைந்து இருக்கவேண்டும் என்ற பவுலின் பெரும் வாஞ்சையைப்பற்றி நாம் நினைக்கும்போது, விசுவாசத்தினால் பலவீனமாயிருந்தவர்களிடம் அன்புகாண்பித்த மென்மையான தன்மை, கிறிஸ்துவுடனிருந்த அப்போஸ்தலர்களின்மீதும் கர்த்தரின் சகோதரனான யாக்கோபின்மீதும் அவன் கொண்டிருந்த பக்தி, கொள்கையைத் தியாகம் செய்யாமல் எல்லா மனிதர்களுக்கும் எல்லாமாக இருக்க அவன் விரும்பியிருந்தது ஆகிய இவைகளனைத்தையும் பற்றி நாம் சிந்திக்கும்போது, அவன் இதுவரை பின்பற்றியிருந்த உறுதியானதும் முடிவானதுமான பாதையைவிட்டு விலகிச்செல்ல அவன் நெருக்கி ஏவப்பட்டிருந்தான் என்பது குறைவான ஆச்சரியத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது. ஆனால் ஒப்புரவாக்குதலில் அவனது முயற்சிகள் விரும்பியிருந்த நோக்கத்திற்குப்பதிலாக நெருக்கடியை மட்டுமே உண்டுபண்ணி, முன்னறிவிக்கப்பட்டிருந்த அவனது பாடுகளை விரைவுபடுத்தி, சபையின் பலமான தூண்களில் ஒன்றாக இருந்த அவனை இழக்கச்செய்து, ஒவ்வொரு கிறிஸ்தவ தேசத்திலுமிருந்த கிறிஸ்தவர்களின் இருதயங்களுக்குத் துயரத்தைக் கொண்டுவந்து, அவனை அவனது சகோதரர்களிலிருந்து பிரிக்கின்றது. (14)

“அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலே அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்பு செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும்வேண்டிய பலிசெலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்” (அப்போஸ்தலர் 21:26). அதிகமான செலவையுடைய குறிப்பிடப்பட்ட சில பலிகள் சுத்திகரிப்பிற்காக இன்னும் செய்யப்படவேண்டியதாக இருந்தது. (15)

இந்த நடவடிக்கையில் ஈடுபடும்படி பவுலுக்கு உபதேசம் செய்தவர்கள் இவ்விதமாக அவன் எவ்வளவு பெரிய ஆபத்துக்கு ஆளாவான் என்பதை முழுவதுமாக ஆலோசிக்காதவர்கவில்லை. இந்த உகந்த நேரத்தில் அநேக நாடுகளிலிருந்துள்ள தொழுகை நடத்துபவர்களால் எருசலேம் நிறைந்திருந்தது. தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஊழியத்தின் நிறைவேறுதலாக பவுல் புறஜாதியினருக்குச் சுவிசேஷத்தைக் கொண்டுசென்றிருந்தான். உலகில் பெரிய நகரங்களாக இருந்தவைகளில்

அநேகமானவைகளை அவன் சந்தித்திருந்த பண்டிகைக்காக அயல்நாட்டுப் பகுதிகளிலிருந்து எருசலேமிற்கு வந்திருந்தவர்களால் அவன் நன்கு அறியப்பட்டவனாக இருந்தான். இவர்களுக்கிடையில் பவுலுக்கெதிரான கசப்பினால் நிறைந்திருந்த இருதயமுள்ள அநேகர் இருந்தனர். இப்படிப்பட்ட பொதுவான சந்தர்ப்பத்தில் பவுல் ஆலயத்திற்குள் செல்லுவது அவனுடைய உயிருக்கு ஆபத்தானதாக இருந்தது. ஏனெனில் தொழுகைக்காக வந்திருந்தவர்களுக்குள்ளேயும் வெளியேயும் அவன் வெளியரங்கமாகப் பலநாட்களாகக் கடந்துசென்றுகொண்டிருந்தான். ஆனால் குறிப்பிட்ட அந்தக்காலம் முடிவடைவதற்குமுன் செலுத்தப்படவேண்டிய பலியைப்பற்றி அவன் ஒருஆசாரியனிடம் பேசிக்கொண்டிருந்தபோது, ஆசியாவைச் சேர்ந்த சில யூதர்களால் அவன் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டான். (16)

“இஸ்ரவேலரே, உதவிசெய்யுங்கள். நம்முடைய ஜனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்தத் தேவாலயத்திற் குள்ளே கிரேக்கரையும் கூட்டிக்கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள்”–அப்போஸ்தலர் 21:28. (17)

பரிசுத்தமான கட்டிடத்தின் உட்பிரகாரத்திற்குள் விருத்தசேதனம் பெறாத ஒருவன் பிரவேசிப்பது யூதர்களுடைய சட்டத்தின்படி மரணதண்டனைக்குரிய குற்றமாகும். எபேசியனான துரோப்பீமுடன் சேர்ந்து பவுல் அந்த நகரத்தில் காணப்பட்டிருந்தான். தக்க சான்றுகள் எதுவும் இல்லாமலேயே பவுல் துரோப்பீமுவை தேவாலயத்தின் உட்பிரகாரத்திற்குள் கொண்டுவந்தான் என்று எண்ணப்பட்டது. அவன் இதைச் செய்திருக்கவில்லை. அவன் ஒரு யூதனாக இருந்தபடியால் தேவாலயத்திற்குள் சென்ற அவனது செயல் சட்டத்தை மீறினதாக இருக்கவில்லை. அந்தக் குற்றச்சாட்டு முற்றிலுமாகத் தவறானதாக இருந்திருந்தபோதிலும், பிரபலமான தவறான எண்ணத்தை எழுப்பிவிடுவதற்கு அது உதவியாக இருந்தது. அந்தக் கூக்குரல் ஆலயப்பிராகாரமெங்கும் சென்றபோது, அங்கு கூடியிருந்த கூட்டத்தினர் உணர்ச்சியால் தூண்டப்பட்டனர். அந்தச் செய்தி எருசலேமெங்கும் விரைவாகப் பரவவே, நகரம் முழுவதும் கலக்கமுற்றது. ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்தார்கள். (அப்போஸ்தலர் 21:31). (18)

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தொழுகைக்கென்று ஆயிரக்கணக்கானவர்கள் வந்திருக்கின்ற அந்த நேரத்தில் இஸ்ரவேலிலிருந்து மருள விழுந்துபோன ஒருவன் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்த துணிகரம் கொண்டது கலகம்செய்யும் கூட்டத்தினரின் பயங்கரமான கட்டுக்கடங்காத உணர்ச்சிகளை எழுப்பிவிட்டது. “பவுலைப்பிடித்து அவனை தேவாலயத்திற்குப்

புறம்பே இழுத்துக்கொண்டு போனார்கள். உடனே கதவுகள் பூட்டப்பட்டன" –அப்போஸ்தலர் 21:30. (19)

"அவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனித்திருக்கையில், எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறதென்று போர்ச்சேவகரின் சேனாபதிக்குச் செய்திவந்தது" (அப்போஸ்தலர் 21:31). கிலவுதியு லிசியா கலகத்திற்குக் கரணமாயிருக்கக்கூடியவர்களுடன் எவ்விதமாக இடைப்படவேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்து, "உடனே அவன் போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களிடத்திற்கு ஓடினான்; சேனாபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலைஅடிக்கிறதை விட்டு நிறுத்தினார்கள்"– அப்போஸ்தலர் 21:32. அந்த சந்தடியின் காரணத்தை அறியாதவனாக இருந்த ரோம சேனாதிபதி திரளானவர்களின் சீற்றம் பவுலுக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டிருப்பதைக் கண்டு, தான் கேள்விப்பட்டிருந்த—இதுவரை பிடிக்கமுடியாதபடி தப்பிச்சென்றிருந்த எகிப்திய கலகக்காரன் இவன்தான் என்று முடிவுசெய்தான். "அவன் கிட்டவந்து அவனைப் பிடித்து, இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி: இவன் யார் என்றும் என்ன செய்தான் என்றும் விசாரித்தான். அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள்; சந்தடியினாலே நிச்சயத்தை அவன் அறியக்கூடாமல், அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.அவன் படிகள்மேல் ஏறினபோது ஜனக்கூட்டம் திரண்டு பின்சென்று"–அப்போஸ்தலர் 21:33–35. (20)

சந்தடிக்கிடையில் அந்த அப்போஸ்தலன் அமைதியும் தன்னடக்கமுமிக்கவனாக இருந்தான். அவனுடைய மனம் தேவன்மேல் தங்கியிருந்தது. பரலோகத்தின் தூதர்கள் அவனைச் சூழ்ந்திருந்ததை அவன் அறிந்திருந்தான். சத்தியத்தை தனது ஜனங்களுக்குமுன் வைப்பதற்கு முயற்சிசெய்யாமல், ஆலயத்தைவிட்டுச் செல்லக்கூடாது என்னும் விருப்பத்தை உடையவனாக அவன் இருந்தான். "அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகிற சமயத்தில், அவன் சேனாபதியை நோக்கி: நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான். அதற்கு அவன்: உனக்குக் கிரேக்குபாஷை தெரியுமா? நீ இந்த நாட்களுக்குமுன்னே கலகமுண்டாக்கி, நாலாயிரங் கொலைபாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டுபோன எகிப்தியன் அல்லவா என்றான். அதற்குப் பவுல்: நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்; ஜனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாகவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்"–அப்போஸ்தலர் 21:37–39. (21)

அவனுடைய வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டபோது, “பவுல் படிகளின்மேல் நின்று ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று; அப்பொழுது அவன் எபிரெயுபாஷையிலே பேசத்தொடங்கினான்”—அப்போஸ்தலர் 21:40. அப்போஸ்தலன் குறிப்பிட்ட உண்மைகள், எருசலேமில் இன்னும் வாழ்ந்துகொண்டிருந்தவர்களுக்கு நன்கு தெரிந்தவைகளாக இருந்ததினால், அவனது அறிக்கையை ஒருவராலும் மறுக்கமுடியாமலிருந்தது. கிறிஸ்துவின் சீடர்களை மரணம் வரைகூட உபத்திரவப்படுத்தியிருந்த அவனது முன்னைய பேரார்வத்தையும், அவனில் மாற்றம் உண்டான சூழ்நிலைகளையும், அகந்தைமிக்கதாக இருந்த அவனது சொந்த இருதயம் எவ்விதமாக நசரேயனாகிய இயேசுவை வணங்குவதற்கு நடத்தப்பட்டது என்பதையும், அவனுடைய பேச்சைக் கேட்டிருந்தவர்களுக்கு சுருக்கமாகத் தெரிவித்தான். அவனது எதிரிகளுடன் வாதம்செய்ய அவன் சென்றிருந்தால், அவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு அவர்கள் பிடிவாதமாக மறுத்திருப்பார்கள். ஆனால் அவனது அனுபவத்தின் உறவுகள் மனதிருப்தியை உண்டுபண்ணுகின்ற வல்லமையுடன் இருந்தினால், அது தற்காலிகமாக அவர்களுடைய இருதயங்களை நெகிழவும் அமைதிப்படுத்தவும் செய்திருந்தது. (22)

அதற்குப்பின் புறஜாதியினருக்கு மத்தியிலான அவனுடைய ஊழியத்தில் அவன் தனது விருப்பத்தின்படி பிரவேசிக்கவில்லை என்பதைக் காட்டுவதற்கு முயன்றான். அவன் தனது சொந்த ஜாதியினருக்காக உழைப்பதற்கு வாஞ்சையுள்ளவனாக இருந்தான். ஆனால் அதே தேவாலயத்தில் தேவன் ஒரு பரிசுத்தமான தரிசனத்தில்: “நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்னார்” (அப்போஸ்தலர் 22:21) என்பதையும் கூறினான். (23)

இதுவரை அவன் பேசினதை மக்கள் மிகவும் கவனமுடன் கேட்டிருந்தனர். ஆனால் பவுல் அவனது வரலாற்றில் கிறிஸ்துவின் தூதுவனாக நியமிக்கப்பட்ட கட்டத்தை அடைந்ததும் அவர்களின் சீற்றம் புதிதாக எழும்பினது. தங்களை மட்டுமே தேவனுடைய மக்களாக பார்ப்பதில் பழக்கப்பட்டிருந்த அவர்கள், இதுவரை தங்களுக்குமட்டுமே சொந்தமானதாகக் கருதப்பட்டிருந்த சலுகைகளில் புறஜாதியினர் பங்கு பெறுவதை விரும்பவில்லை. அவனுடைய குரலைவிட தங்களுடைய குரலை உயர்த்தி, “இப்படிப்பட்டவனைப் பூமியிலிருந்து அகற்றவேண்டும்; இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள்”—அப்போஸ்தலர் 22:22. (24)

"இவ்விதமாய் அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் மேல்வஸ்திரங்களை எறிந்துவிட்டு, ஆகாயத்திலே புழுதியைத் தூற்றிக்கொண்டிருக்கையில், சேனாபதி அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும்படிக்கு அவனைச் சவுக்கால் அடித்துவிசாரிக்கச் சொன்னான்"–அப்போஸ்தலர் 22:23–24. (25)

"அந்தப்படி அவர்கள் அவனை வாரினால் அழுந்தக் கட்டுப்போது, பவுல் சமீபாய் நின்ற நூற்றுக்கு அதிபதியை நோக்கி: ரோமனும் நியாயம் விசாரிக்கப்படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்றான். நூற்றுக்கு அதிபதி அதைக்கேட்டு, சேனாபதியினிடத்திற்குப் போய், அதை அறிவித்து: நீர் செய்யப்போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிரும்; இந்த மனுஷன் ரோமன் என்றான்"–அப்போஸ்தலர் 22:25–26. (26)

"பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, அவன் மறுநாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதானஆசாரியரையும் அலோசனைச் சங்கத்தார் அனைவரையும் கூடிவரும்படி கட்டளையிட்டு, அவனைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான்"–அப்போஸ்தலர் 22:30. (27)

அப்போஸ்தலனுடைய மாற்றத்திற்குமுன் எந்த ஒரு நியாயசங்கத்தின் அங்கத்தினராக இருந்தானோ அந்த நியாயசங்கத்தில் இப்பொழுது விசாரணை செய்யப்படவேண்டியவனாக இருந்தான். அவன் யூத அதிபதிகளுக்குமுன் நின்றபோது, அவனது நடத்தை அமைதியானதாக இருந்தது. அவனுடைய முகம் கிறிஸ்துவினால் உண்டான சமாதானத்தை வெளிக்காட்டியிருந்தது. "பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான்"–அப்போஸ்தலர் 23:1. இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, அவர்களுடைய வெறுப்பு புதிதாகப் பற்றியெரியத் தொடங்கியது. "அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அனனியா அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான்"–அப்போஸ்தலர் 23:2. மனிதத்தன்மையற்ற கட்டளையினால் பவுல் அவனைப் பார்த்து: "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான்"–அப்போஸ்தலர் 23:3. "சமீபத்திலே நின்றவர்கள்: தேவனுடைய பிரதானஆசாரியரை வைகிறாயா என்றார்கள். அதற்குப் பவுல்: சகோதரரே, இவர் பிரதான ஆசாரியரென்று

எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றான்"—அப்போஸ்தலர் 23:4,5. (28)

"பின்பு அவர்களில், சதுசேயர் ஒருபங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே, நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோருடைய உயிர்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்று ஆலோசனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொன்னான்"—அப்போஸ்தலர் 23:6. (29)

"அவன் இப்படிச் சொன்னபோது, பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று; கூட்டம் இரண்டாகப் பிரிந்தது. என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று. பரிசேய சமயத்தாரான தேவபாரகரில் சிலர் எழுந்து: இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம்; ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசினதுண்டானால், நாம் தேவனுடனே போர்செய்வது தகாது என்று வாதாடினார்கள்"—அப்போஸ்தலர் 23:7–9. (30)

அதைப் பின்தொடர்ந்த குழப்பத்தில் அப்போஸ்தலனைக் கொலைசெய்வதற்காக அவனைப் பிடிக்க முயன்றனர். பரிசேயர்கள் அவனைப் பாதுகாப்பதில் மிகவும் அக்கறை உள்ளவர்களாக இருந்தனர். "மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்"—அப்போஸ்தலர் 23:10. (31)

பின்னர் அந்த நாளின் அனுபவத்தை பிரதிபலித்துப் பார்த்தபோது அவனுடைய நடத்தை தேவனுக்குப் பிரியமில்லாததாக இருந்திருக்கக்கூடும் என்று அவன் பயந்தான். எருசலேமைச் சந்தித்ததில் அவன் ஒரு தவறைச் செய்திருந்திருப்பானோ? தனது சகோதரர்களுடன் ஒற்றுமை உள்ளவனாக இருக்கவேண்டும் என்ற அவனுடைய வாஞ்சை இந்த அழிவுக்குரிய பலனுக்கு நடத்திவிட்டதா? (32)

நம்ப மறுக்கின்ற ஒரு உலகத்திற்குமுன் தேவனுடைய ஜனங்கள் என்னும் ஸ்தானத்தில் தாங்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டிருந்த யூதர்கள், அப்போஸ்தலனுக்கு உக்கிரமான ஆவியின் வேதனையை உண்டுபண்ணியிருந்தனர். யேகோவாவை வணங்குபவர்கள் என்று உரிமைபாராட்டிக்கொண்டிருந்து, பரிசுத்தமான பதவியில் இருப்பதாகக்

கூறிக்கொண்டிருந்து, அதே நேரத்தில் காரணமற்ற குருட்டுத்தனமான கோபத்தின் கட்டுப்பாட்டுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, மதவிசுவாசத்தில் அவர்களுடன் வித்தியாசப்படத் துணிந்த தங்களுடைய சொந்தச் சகோதரர்களை அழிக்க வகைதேடி பக்திவிநயமிக்க நிதானத்துடனிருக்கவேண்டிய தங்களுடைய ஆலோசனைச்சங்கத்தை கலகமும் காட்டுமிராண்டித்தனமுமான குழப்பமிக்க சாட்சியாக மாற்றினவர்களை அஞ்ஞான அதிகாரிகள் எவ்விதமாகப் பார்ப்பார்கள்? அஞ்ஞானிகளின் கண்களில் அவனுடைய தேவனின் பெயர் அவமதிப்புக்குள்ளானது என்பதைப் பவுல் உணர்ந்தான். (33)

அவன் இப்பொழுது சிறையில் இருந்தான். அவனுடைய எதிரிகள் அவர்களது முரட்டுத்துணிச்சல்மிக்க விரோதத்தில் எந்தவிதத்திலாவது அவனைக் கொலைசெய்வதற்கு வகைதேடுவார்கள் என்பதைப் பவுல் அறிந்திருந்தான். சபைகளுக்கான அவனுடைய ஊழியம் முடிவடைந்திருந்ததா? பெரும் பசியுள்ள ஓநாய்கள் இப்பொழுது உள்ளே பிரவேசிக்கவேண்டியதாக இருந்ததா? கிறிஸ்துவின் காரியம் பவுலின் இருதயத்திற்கு மிக அருகில் இருந்தது. சனகரீம் சங்கத்தில் அவன் இப்பொது சந்தித்திருந்த மனிதர்களால் உபத்திரவத்திற்குள்ளாகிச் சிதறியிருந்த சபைகளுக்கு உண்டாகக்கூடிய ஆபத்துக்களைப்பற்றி ஆழ்ந்த கவலை உடையவனாக இருந்தான். துயரத்திலும் கவலையிலும் அவன் அழுது ஜெபித்தான். (34)

இருளான இந்த நேரத்தில் கர்த்தர் அவருடைய வேலைக்காரனைப்பற்றி நினைவில்லாதவராக இருக்கவில்லை. ஆலயப்பிராகாரத்தில் அவனைக் கொலைசெய்யக் கூடியிருந்த கூட்டத்தினரிடமிருந்து கர்த்தர் அவனைக் காத்தார். சனகரீம் சங்கத்திற்குமுன் அவர் அவனுடன் இருந்தார். வழிகாட்டுதலுக்காக அப்போஸ்தலன் செய்த அக்கறைமிக்க ஜெபத்திற்கு மறுமொழியாகத் தம்முடைய விசுவாசமிக்க சாட்சிக்கு அவர்தாமே தம்மை வெளிப்படுத்தினார். “அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார்” – அப்போஸ்தலர் 23:11. (35)

ரோமாபுரியைச் சந்திப்பதற்குப் பவுல் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அங்கு கிறிஸ்துவிற்காக ஒரு சாட்சியாக இருப்பதற்கு அவன் மிக அதிகமான வாஞ்சை உடையவனாக இருந்தான். ஆனால் யூதர்களின் விரோதத்தினால் அவனது நோக்கங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன என்பதை அவன் உணர்ந்தான். இப்போதுங்கூட ஒரு கைதியாக அங்கு செல்ல நேரிடும் என்பதை அவன் எண்ணாதவனாக இருந்தான். (36)

கர்த்தர் அவனது ஊழியக்காரனை தைரியப்படுத்தின அதே நேரத்தில், பவுலின் எதிரிகள் அவனை அழிப்பதற்காக ஆவலுடன் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தனர். “விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டார்கள். இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள்”–அப்போஸ்தலர் 23:12,13. “இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய், இந்நாளில் உபவாசிக்கிறதுபோல் உபவாசியாதிருங்கள்” (ஏசாயா 58:4) என்று கர்த்தர் ஏசாயாவின் மூலமாக கூறியிருந்ததைப்போன்ற ஒரு உபவாசம் இருந்தது. (37)

கொடுமைமிக்க இந்தத் திட்டத்திற்காக ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களைக் கடிந்துகொள்ளுவதற்குப்பதிலாக, ஆவலுடன் அதற்கு ஒத்துக்கொண்டனர். வெள்ளையடிக்கப்பட்ட சுவர் என்று பவுல் அனனியாவை ஒப்பிட்டபோது அவன் உண்மையைத்தான் கூறியிருந்தான். (38)

ஆனால் தேவன் அவரது ஊழியக்காரனின் உயிரைக் காப்பதற்காகக் குறுக்கிட்டார். “இந்தச் சர்ப்பனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, கோட்டைக்குள்ளே போய், பவுலுக்கு அறிவித்தான். அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, இந்த வாலிபனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோம்; அவரிடத்தில் இவன் அறிவிக்கவேண்டிய ஒரு காரியம் உண்டு என்றான். அந்தப்படியே அவன் இவனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய்: காவலில்வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கொரு காரியத்தைச் சொல்லவேண்டுமென்றிருக்கிற இந்த வாலிபனை, உம்மிடத்திற்குக் கொண்டுபோகும்படி என்னைக் கேட்டுக்கொண்டான் என்றான்”–அப்போஸ்தலர் 23:16–18. (39)

கிலவுதியு லிசியா அந்த வாலிபனை அன்புடன் ஏற்றுக்கொண்டு, “அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: நீ என்னிடத்தில் அறிவிக்கவேண்டிய காரியம் என்னவென்று கேட்டான். அதற்கு அவன்: யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக்கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் சம்மதிக்கவேண்டாம்; அவர்களில் நாற்பதுபேருக்கு அதிகமானவர்கள் அவனை கொலைசெய்யுமளவும்

தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக்கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான்"—அப்போஸ்தலர் 23:19–21. (40)

"அப்பொழுது சேனாபதி: நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே என்று கட்டளையிட்டு, வாலிபனை அனுப்பிவிட்டான்"—அப்போஸ்தலர் 23:22. (41)

உடனே லிசியா பவுலைத் தனது அதிகாரத்தின் எல்லையிலிருந்து தேசாதிபதியாகிய பேலிக்சினிடத்திற்கு அனுப்ப முடிவுசெய்தான். யூதர்கள் ஒரு ஜனமாக, ஒரு உணர்ச்சியின் தூண்டுதலிலும் எரிச்சலிலும் இருந்தனர். அமளிகள் அடிக்கடி நடைபெறும் சம்பவங்களாக இருந்தன. அப்போஸ்தலன் தொடர்ச்சியாக எருசலேமில் இருப்பது அந்த நகரத்திற்கும் சேனைத்தலைவனுக்குங்கூட ஆபத்தை உண்டுபண்ணக்கூடிய செயல் களுக்கு நடத்திவிடும்; எனவே "அவன் நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரைவீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்களென்றும், பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப்படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி, ஒரு நிருபத்தையும் எழுதினான்"—அப்போஸ்தலர் 23:23–25. (42)

பவுலைத் தூரமான இடத்திற்கு அனுப்பிவைப்பதில் காலம் தாழ்த்தாமலிருக்கவேண்டியதாக இருந்தது. "போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே, பவுலைக் கூட்டிக்கொண்டு, இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குப் போய், மறுநாளில் குதிரைவீரரை அவனுடனேகூடப் போகும்படி அனுப்பிவிட்டு, தாங்கள் கோட்டைக்குத் திரும்பினார்கள்"—அப்போஸ்தலர் 23:31–32. அந்த இடத்திலிருந்து நானூறு வீரர்கள் எருசலேமிற்குத் திரும்பினபோது, குதிரை வீரர்கள் அந்தக் கைதியுடன் செசரியாவை நோக்கிச் சென்றனர். (43)

அந்த சேனைக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி, தனது கைதியை பேலிக்சிடம் ஒப்படைத்து, சேனைத்தலைவனால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கடிதத்தையும் கொடுத்தான். (44)

"ஒரு நிருபத்தையும் எழுதினான்; அதின் விபரமாவது: கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியு லீசியா வாழ்த்துதல்

சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்: இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப்போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடேகூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறியவேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டுபோனேன். இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக்குறித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன். யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ்சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான்"–அப்போஸ்தலர் 23:25–30. (45)

பேலிக்ஸ் அந்தக் கடிதத்தை வாசித்தபின், அந்தக் கைதி எந்த மாநிலத்திற்குச் சொந்தமானவன் என்று விசாரித்து, "உன்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேனென்று சொல்லி, ஏரோதின் அரமனையிலே அவனைக் காவல்பண்ணும்படி கட்டளையிட்டான்"–அப்போஸ்தலர் 23:35. (46)

யேகோவாவின் மக்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளுபவர்களின் வன்மத்திலிருந்து அஞ்ஞானிகளுக்கு மத்தியல் தேவனுடைய ஒரு ஊழியக்காரன் புகலிடம்தேடுகின்ற பவுலின் காரியம் முதலாவதானது அல்ல. பவுலுக்கு எதிரான அவனது சீற்றத்தில் அவர்களுடைய வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு கரும் விளக்கப்படநூலை, வேறொரு குற்றத்தினால் யூதர்கள் சேர்த்துக்கொண்டனர். அதற்குப்பின்னும் அவர்கள் சத்தியத்திற்கு எதிராக அவர்களுடைய இருதயங்களை மேலும் அதிகமாகக் கடினப்படுத்தி அவர்களுடைய வீழ்ச்சியை மிகவும் நிச்சயமாக்கியிருந்தனர். (47)

நாசரேத்திலுள்ள ஜெப ஆலயத்தில் கிறிஸ்து பேசினபோது, அவர்தாமே அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று அறிவித்த வார்த்தைகளின் முழுப்பொருளை ஒருசிலர் மட்டுமே உணர்ந்தனர். துயரப்படுபவர்களையும் பாவமுள்ளவர்களையும் ஆறுதல்படுத்துவதும் ஆசீர்வதிப்பதும் இரட்சிப்பதுவுமே தமது ஊழியம் என்று அவர் அறிவித்து, அவரது வார்த்தைகளைக் கேட்டிருந்தவர்களின் இருதயங்களை அகந்தையும் நம்பிக்கையின்மையும் கட்டுப்படுத்தியிருந்ததை கண்டு, தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிடத்திலிருந்து கடந்த காலத்தில்

அவர்களுடைய நம்பிக்கையின்மை, கலகம் ஆகியவைகளின் காரணமாகத் திரும்பி, பரலோகத்தின் ஒளியை நிராகரிக்காமலிருந்த அந்நிய தேசத்தில் இருந்தவர்களுக்குத் தம்மை வெளிக்காட்டினார். சாரிபாத் ஊரிலிருந்த விதவையும் சீரியனாகிய நாகமானும் அவர்கள் பெற்றிருந்த எல்லா ஒளிக்கும்தக்கதாக வாழ்ந்திருந்தனர். எனவே அவரிடமிருந்து பின்னிட்டு விழுந்திருந்தவர்களும், வசதிக்காகவும் உலகப்பிரகாரமான கனத்திற்காகவும் கொள்கைகளை விட்டுவிட்டவர்களும் தேவனுடைய ஜனங்களைவிட அதிகமான நீதிமான்களாக கணக்கிடப்பட்டனர். (48)

இஸ்ரவேலின் பின்னிட்டு விழுதலுடன் தேவனுடைய விசுவாசமிக்க தூதுவனுக்குப் பாதுகாப்பில்லை என்ற பயங்கரமான உண்மையை நாசரேத்திலிருந்த யூதரிடம் கிறிஸ்து கூறினார். அவர்கள் அவரது மதிப்பை அறியவோ அல்லது அவரது ஊழியத்தை வரவேற்கவோ மாட்டார்கள். தேவனுடைய கனத்தைப்பற்றி மிகுந்த வைராக்கியமுள்ளவர்களாகக் கூறிக்கொண்டிருந்தபோது, இஸ்ரவேலின் நன்மையிலும் வைராக்கிய முள்ளவர்களாகக் கூறிக்கொண்டிருந்த அதே நேரத்தில், அவர்கள் இந்த இரண்டிற்கும் எதிரிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய சட்டதிட்டங்களினாலும் உதாரணத்தினாலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து மக்களை வெகுதூரத்திற்கு விலக்கி நடத்திச்சென்று, இக்கட்டு நாளில் அவர்களுடைய பாதுகாப்பாக இருக்கமுடியாத விதத்தில் நடத்தியிருந்தனர். (49)

நாசரேத்தின் மனிதர்களுக்கு இரட்சகர் கொடுத்த கடிந்துகொள்ளுதலின் வார்த்தைகள் பவுலின் காரியத்தில் விசுவாசமில்லாத யூதர்களுக்கு மட்டுமானதாக இராமல், விசுவாசத்தில் அவனது சொந்த சகோதரர்களாக இருந்தவர்களுக்கானதாகவும் இருந்தது. சபைத்தலைவர்கள் அப்போஸ்தலருக்கு எதிராகக்கொண்டிருந்த கசப்பான உணர்வுகளை நீக்கி, புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தைக் கொடுப்பதற்கென்று தேவனால் சிறப்பாக அழைக்கப்பட்ட ஒருவன் என்று அவனை ஏற்றுக்கொண்டிருந்தால் கர்த்தர் அவனை அவர்களுக்கென்று வைத்திருந்திருப்பார். அவ்வளவு விரைவில் பவுலின் ஊழியம் முடிவடையவேண்டும் என்று பவுலை தேவன் அபிஷேகம் செய்திருக்கவில்லை. ஆனால் எருசலேம் சபைத்தலைவர்களின் நடத்தையில் எழும்பியிருந்த தொடர்சியான சூழ்நிலைகளுக்கெதிராக தேவன் ஒரு அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை. (50)

அதேவிதமான பலன்களை உண்டுபண்ணுவதற்கு அதேவிதமான ஆவி இன்னும் நடத்திக்கொண்டிருக்கிறது. தெய்வீகக் கிருபையின் ஏற்பாட்டினை வரவேற்பதிலும் முன்னேறச் செய்வதிலும் காட்டப்பட்ட ஒரு

அலட்சியம் சபையை அநேக ஆசீர்வாதங்களை இழக்கச் செய்திருந்தது. விசுவாசமிக்க ஊழியனின் உழைப்புகள் வரவேற்கப்பட்டிருந்தால், சில விசுவாசமிக்க ஊழியர்களின ஊழியத்தைக் கர்த்தர் எவ்விதமாக அடிக்கடி நீடிக்கச்செய்திருப்பார்? ஆனால் புரிந்துகொள்ளுதலைப் திரிபுசெய்யும்படி சபை ஆத்துமாவின் எதிரியை அனுமதிக்கும்போது அதனால் கிறிஸ்துவின் ஊழியக்காரனின் வார்த்தைகளும் செயல்களும் தவறானவிதத்தில் எடுத்துக்காட்டப்படவும் விளக்கப்படவும் செய்யப்படுகிறது. அவர்கள் அவனுடைய பாதையில் நிற்பதற்குத் தங்களைத் தாங்களே அனுமதித்தால், அவனால் உண்டாகும் பயனுக்கு இடையூறு செய்தால், சில சமயங்களில் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருந்த ஆசீர்வாதங்களை அவர்களிலிருந்து நீக்குகிறார். (51)

ஒருபெரும் நற்பணியைச் செய்துமுடிப்பதற்காக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் இருதயத்தைச் சோர்வடையச்செய்யவும் அழிக்கவும் சாத்தான் அவனது அடியாட்களின்மூலமாகத் தொடர்ந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறான். கிறிஸ்தவன் காரியத்தின் முன்னேற்றத் திற்காக அவர்கள் தங்களுடைய ஜீவனையுங்கூடத் தியாகம் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கலாம். அப்படி இருந்தபோதிலும், பெரும் வஞ்சகன் அவர்களுடைய சகோதரர்கள்மீது சந்தேகமான கருத்துக்களைக் கூறுவான். அவைகளை வரவேற்று அனுசரித்தால் அது அவர்களது சுபாவத்தின் நேர்மையைத் தகர்த்து, இவ்வாறாக அவர்களது பயன்தரும் தன்மையைக் குறுகிப்போகச்செய்யும். உபத்திரவமடைந்துள்ள ஊழியக்காரர்களுக்கு இளைப்பாறுதல் கொடுக்கும்படி தேவன் கிருபையாக இடைப்படும் விதத்திலான இருதய வருத்தங்களை அவர்களுடைய சொந்தச் சகோதரர்களின் மூலமாக அடிக்கடி கொண்டுவருவதில் சாத்தான் வெற்றியடைகிறான். நாடித்துடிப்பில்லாமலாகிப்போன மார்பின்மீது கரங்கள் மடித்துவைக்கப்பட்டபின், எச்சரிக்கைசெய்தல் தைரியமூட்டுதல் ஆகியவைகளின் குரல் மௌனமடைந்தபின், பிடிவாதமான பாவிகள் தங்களுக்காக அவர் கொடுத்த ஆசீர்வாதங்களின் பரிசுகளைக் காணும்படி எழுப்பப்படுவார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் எவைகளைச் செய்யத் தவறியிருந்தனரோ, அவைகளை அவர்களின் மரணம் நிறைவேற்றும். (52) ★

# 39

# செசரியாவில் விசாரணை

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 419–427)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 24**

பவுல் செசரியாவிற்கு வந்துசேர்ந்த ஐந்து நாட்களுக்குப்பின் அவனைக் குற்றஞ்சாட்டுபவர்கள் அவர்களுடைய ஆலோசகராக ஏற்படுத்தியிருந்த தெர்த்துல்லு என்னும் பேச்சாளனுடன் எருசலேமிலிருந்து வந்தனர். அந்த விசாரணை அவசரமாக விசாரிக்கும்படி அனுமதிக்கப்பட்டிருந்தது. விசாரணைச் சங்கத்துக்கு முன்பாக பவுல் கொண்டுவரப்பட்டான். தெர்த்துல்லு அவன்மீது குற்றஞ்சாட்டத் தொடங்கினான். சத்தியம், நீதி, ஆகியவைகளடங்கிய சாதாரணமான அறிவைவிட, முகஸ்துதி, ரோமனான ஆளுநரின்மீது அதிகமான செல்வாக்கை உண்டுபண்ணும் என்று கருதி, அந்தத் தந்திரமான பேச்சாளன்: "கனம்பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறதையும், உம்முடைய பராமரிப்பினாலே இந்தத் தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும், நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம்பண்ணுகிறோம். உம்மை நான் அநேக வார்த்தைகளினாலே அலட்டாதபடிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" (அப்போஸ்தலர் 24:3,4) என்று புகழ்ந்து அவனுடைய பேச்சை ஆரம்பித்தான். (1)

பேலிக்ஸின் சுபாவம் மிகவும் கீழ்த்தரமானதாகவும், அவமதிப்பிற்குரியதாகவும் இருந்ததினால் தெர்த்துல்லு இங்கு மிகவும் கேவலமான நிலைமைக்குக் கீழே இறங்கினான். டாசிட்டஸ் என்னும் வரலாற்று ஆசிரியன் அவனுடைய நூலில்: "சகலவிதமாக இச்சைகளையும் கொடூரமானவைகளையும் நடப்பிப்பதில் ஒரு அரசனின் வல்லமையுடனும் ஒரு அடிமையின் சுபாவத்துடனும் அவன் இருந்தான்" என்கிறான்.– Tacitus, History, ch. 5, par. 9. தெர்த்துல்லு பேசுவதைக் கேட்டிருந்தவர்கள்

அவனது முகஸ்துதியான வார்த்தைகள் உண்மையற்றவைகள் என்பதை அறிந்திருந்தனர். ஆனால் பவுலை ஆக்கினைக்குட்படுத்தவேண்டும் என்ற அவர்களுடைய வாஞ்சை சத்தியத்தின்மீதுள்ள அன்பைவிட அதிகமானதாக இருந்தது. (2)

தெர்த்துல்லு தனது பேச்சில் சாட்டிய குற்றச்சாட்டுகள் உண்மையென்று மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், பவுல் அரசாங்கத்திற்கு எதிராகப் பெரும் இராஜதுரோகம் செய்தான் என்ற குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டு, தண்டனையைப் பெற்றிருந்திருப்பான். "என்னவென்றால் இந்த மனுஷன் கொள்ளைநோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாகவும், நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம். இவன் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான். நாங்கள் இவனைப் பிடித்து எங்கள் வேதப்பிரமாணத்தின்படியே நியாயந்தீர்க்க மனதாயிருந்தோம்" (அப்போஸ்தலர் 24:5,6) என்று அவன் அறிவித்தான். யூதர்கள் அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின்படி அவன்மீது நியாயத்தீர்ப்புச்செய்யவிருந்த நேரத்தில் எருசலேமில் அப்போதிருந்த சேனைத்தலைவன் லீசியா அவனைப் பலவந்தமாக யூதர்களிடமிருந்து எடுத்து இவ்வண்ணமாக அவனுடைய காரியத்தை பேலிக்ஸின்முன் கொண்டு வரும்படி அவர்களை வற்புறுத்தினான். பவுலை யூதர்களின் நீதிமன்றத்தினிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று அந்த தேசாதிபதியை இழுக்கும்படி இந்த அறிக்கைகள் கொடுக்கப்பட்டன. குற்றச்சாட்டுகள் அனைத்தும் அந்தக் கைதியின்மீதுள்ள அவர்களுடைய வெறுப்பை மறைக்க எந்தவிதமான முயற்சியும் செய்யாதவர்களாக இருந்த யூதர்களால் உணர்ச்சிப்பெருக்குடன் ஆதரிக்கப்பட்டன. (3)

பவுலின்மீது குற்றஞ்சாட்டுபவர்களின் நிலைமைகளையும் சுபாவத்தையும் வாசித்தறிய, போதுமான அளவிற்கு அவர்களுடைய காரியங்களைப்பற்றின அறிவை உடையவனாக பேலிக்ஸ் இருந்தான். அவர்கள் எந்த நோக்கத்துடன் அவனிடம் முகஸ்துதி செய்திருந்தனர் என்பதையும், பவுலுக்கு எதிரான அவர்களுடைய குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்க முடியாதவர்களாக அவர்கள் இருந்தனர் என்பதையும், அவன் அறிந்திருந்தான். அவன் குற்றவாளியின் பக்கம் திரும்பி, குற்றவாளி தனக்கென்று மறுமொழி கூறும்படி கட்டளையிட்டான். பவுல் உபச்சாரமான வார்த்தைகளைப் பேசி வீணாக்காமல், பேலிக்ஸ் அதிக காலமாக தேசாதிபதியாக இருந்தபடியால், யூதர்களின் பிரமாணங்களையும் சம்பிரதாயங்களையும் பற்றிய ஒரு நல்ல புரிந்துகொள்ளுதலை உடையவனாக இருந்தபடியால், அவனுக்கு முன்பாக மிகவும் அதிகமான உற்சாகத்துடன்

தன்னைத் தற்காத்துக்கொள்ளமுடியும் என்று எளிமையான விதத்தில் கூறினான். அவனுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டி, அவைகளில் ஒன்றுகூட உண்மையானதல்லவென்று அவன் வெளிப்படையாகக் காட்டினான். அவன் எருசலேமின் எந்தப் பகுதியிலும் அமைதியைச் சீர்குலைக்கவோ அல்லது பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கவோ காரணமாக இருக்கவில்லையென்று அறிவித்தான். "தேவாலயத்திலே நான் ஒருவரிடத்திலாவது தர்க்கம்பண்ணினதையும், நான் ஜெபஆலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமெழுப்பினதையும், இவர்கள் கண்டதில்லை. இப்பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கவுமாட்டார்கள்" (அப்போஸ்தலர் 24:12,13) என்றான். (4)

அவன் எருசலேமைச் சந்திக்க வந்த நோக்கத்தையும் தான் கைதுசெய்யப்பட்டதும் விசாரணைக்குட்படுத்தப்பட்டதுமான சூழ்நிலைகளையும்பற்றி கபடமில்லாத நேரடியான விதத்தில் அறிவித்தான். "அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன். அப்பொழுது கூட்டமில்லாமலும் அமளியில்லாமலும் தேவாலயத்திலே சுத்திகரித்துக் கொண்டவனாயிருக்கையில், ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள். அவர்களுக்கு என்பேரில் விரோதமான காரியம் ஏதாகிலும் உண்டாயிருந்தால், அவர்களே இங்கே வந்து, உமக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டவேண்டும். நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவர்கள் யாதொரு அநியாயத்தை என்னித்தில் கண்டதுண்டானால் இவர்களே அதைச்சொல்லட்டும். நான் அவர்களுக்குள்ளே நின்றபோது மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதைக்குறித்து, இன்று உங்களாலே நியாயந்தீர்க்கப்படுகிறேனென்று நான் சொன்ன ஒரு சொல்லினிமித்தமேயன்றி வேறொன்றினிமித்தமும் குற்றங் காணப்படவில்லையென்றான்" (அப்போஸ்தலர் 24:17–21) என்றான். (5)

அப்போஸ்தலன் மிகுந்த அக்கரையுடனும் காணக்கூடியவிதமான உண்மையுடனும் பேசினான். அவனுடைய வார்த்தைகள் மன உணர்த்துதலை உண்டுபண்ணும் பாரத்தை உடையவையாக இருந்தன. பவுலின் நடத்தையைப்பற்றி கிலவுதியு லீசியா பேலிக்சுக்கு எழுதியிருந்த கடிதத்தில் அதேவிதமான சான்று இருந்தது. அதற்கும்மேலாக அநேகர் நினைத்துக்கொண்டிருந்ததைவிட பேலிக்ஸ் யூத மதத்தைப்பற்றி மேலான அறிவை உடையவனாக இருந்தான். இந்த வழக்கின் உண்மைகளைப்பற்றி பவுலின்மீது வெளிப்படையான அப்போஸ்தலனின் வஞ்சம் என்னும் பெயரால்,

அப்போஸ்தலனுக்குச் சிறைத்தண்டனை கிடைக்கச்செய்யவேண்டும் என்ற முயற்சியால் யூதர்கள் நடத்தப்பட்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களது நோக்கத்தையும் மிகத் தெளிவாகப் பேலிக்ஸ் அறிந்துகொள்ள அவனைத் தகுதிப்படுத்தியது. ஒரு ரோம நாட்டுப் பிரஜையை அநீதியாக ஆக்கினைக்குட்படுத்த அந்த ஆளுநர் அவர்களை அனுமதிக்கமாட்டான். ஒரு நியாயவிசாரணை இல்லாமல், அவனை மரணத்திற்குட்படுத்தும்படி அவனை அவர்களிடம் விட்டுவிடவும் மாட்டான். அப்படியானாலும் சுயத்தின்மீதிருந்த விருப்பதைவிட மேலான நோக்கம் எதனையும் அறிந்தவனாக பேலிக்ஸ் இருக்கவில்லை. போற்றுதலின்மீதுள்ள ஆசை, பதவி உயர்வின்மீதுள்ள வாஞ்சை ஆகியவைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தான். பவுல் குற்றமற்றவன் என்று பேலிக்ஸ் அறிந்திருந்தும், அந்த மனிதனுக்கு முழுமையான நீதியைச் செய்வதில் யூதர்களை எதிர்ப்பதில் உள்ள பயம் அவனைப் பின்வாங்கச் செய்திருந்தது. "இந்த மார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபொழுது: சேனாபதியாகிய லீசியா வரும்போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன்" (அப்போஸ்தலர் 24:22) என்றான். (6)

அப்போஸ்தலன் ஒரு கைதியாக இருந்தான். ஆனால் அவனைக் காவல்செய்யும்படி நியமிக்கப்பட்டிருந்த நூற்றுக்கு அதிபதியிடம்: "பவுலைக் காவல்பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனுக்கு ஊழியஞ்செய்கிறதற்கும் அவனைக் கண்டுகொள்ளுகிறதற்கும் வருகிற அவனுடைய மனுஷர்களில் ஒருவரையும் தடைசெய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்குக் கட்டளையிட்டு, அவர்களைக் காத்திருக்கும்படி செய்தான்"—அப்போஸ்தலர் 24:23. (7)

இதற்குப்பின் அதிக காலம் செல்லாமல் பேலிக்சும் அவனுடைய மனைவியான துருசில்லாளும் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தைப்பற்றி தனிப்பட்ட விதத்தில் அவனிடமிருந்து அறிந்துகொள்ளுவதற்காக ஒரு தனிச்சந்திப்பிற்கு அவனை அழைத்தனுப்பினார்கள். இந்தப் புதிய சத்தியங்களை அறிவதற்கு—அவர்கள் இனி ஒருபோதும் கேட்கமுடியாத சத்தியத்தை—நிராகரிக்கப்பட்டால் தேவனுடைய நாளில் அவர்களுக்கெதிரான சாட்சியாக இருக்கக்கூடிய சத்தியத்தை கேட்பதற்கு அவர்கள் விருப்பமுள்ளவர்களாகவும் ஆவலுள்ளவர்களாகவும்கூட இருந்தனர். (8)

பவுல் இதனை தேவனால் கொடுக்கப்பட்டுள்ள ஒரு பொன்னான வாய்ப்பு என்று கருதி, விசுவாசத்துடன் அதை முன்னேற்றமடையச் செய்தான். அவனுக்கு மரணதண்டனை வழங்கவோ அல்லது அவனை விடுதலைசெய்யவோ வல்லமையுள்ள ஒருவனுடைய சமுகத்தில்

நின்றிருந்தான் என்பதை அறிந்திருந்தான். அப்படியிருந்தபோதிலும் அவன் பேலிக்சையும் துருசில்லாளையும் முகஸ்துதிசெய்து பேசவில்லை. அவனுடைய வார்த்தைகள் அவர்களுக்கு ஜீவனுக்கேதுவான வாசனையாகவோ அல்லது மரணத்துக்கேதுவான வாசனையாகவோ இருக்கும் என்பதை அவன் அறிந்திருந்து, சுயநலமான ஆலோசனைகள் யாவையும் மறந்து தங்களுடைய அபாயத்தைப்பற்றின ஒரு உணர்வினை அவர்களுக்குள் எழுப்புவதற்கு வகைதேடியிருந்தான். (9)

அவனுடைய வார்த்தைகளை எவர்களெல்லாம் கேட்கிறார்களோ அவர்கள்மீது சுவிசேஷத்திற்கு ஒரு உரிமை இருக்கிறது என்பதையும், ஒரு நாள் அவர்கள் வெள்ளைச் சிங்காசனத்தைச் சுற்றி நிற்கும் மாசில்லாதவர்களுக்கும் பரிசுத்தவான்களுக்கும் மத்தியிலோ அல்லது "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்" (மத்தேயு 7:23) என்று கிறிஸ்து குறிப்பிடுகிறவர்களுக்கு மத்தியிலோ நிற்கவேண்டும் என்பதை அப்போஸ்தலன் உணர்ந்தான். பரலோக நியாயசங்கத்திற்குமுன் அவனது பேச்சைக்கேட்கும் ஒவ்வொருவரையும் அவன் சந்திப்பான் என்றும், பேசினதும் செய்ததுமான அனைத்திற்குமட்டுமல்லாமல், அவனவனுடைய வார்த்தைகளிலும் செயல்களிலும் இருந்த நோக்கத்தின் ஆவிக்கும் அங்கு அவர்கள் கணக்குக் கொடுக்கவேண்டியதிருக்கும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். (10)

பேலிக்ஸின் சுபாவமும் நடத்தையும் குற்றமில்லாதவைகளாக உள்ளன என்று ஒருவரும் அவனிடம் தெரியப்படுத்துவதற்குக்கூடத் துணியாத அளவிற்கு வன்முறைமிக்கதாகவும் கொடூரமானதாகவும் இருந்தது. ஆனால் பவுல் மனிதனைப்பற்றி அஞ்சாதவனாக இருந்தான். கிறிஸ்துவின்மீது அவனுக்கிருந்த விசுவாசத்தையும் கிறிஸ்தவ சுபாவத்தில் முக்கியமானதாகஇருந்த மேலான தன்மைகளையும்பற்றி வெளிப்படையாகப் பேசும்படி நடத்தப்பட்டான். ஆனால் அவனுக்குமுன் அகந்தைமிக்கவர்களாக இருந்த அந்த இருவரும் ஒன்றும் இல்லாதவர்களாக இருந்தனர். (11)

அவன் பேலிக்ஸிற்கும் துருசில்லாளுக்கும் முன்பாக தேவனுடைய சுபாவத்தையும், அவருடைய நீதி, நியாயம், நடுநிலை தவறாதபண்பு, சமத்துவம், அவரது பிரமாணத்தின் தன்மை ஆகியவைகளையும் உயர்த்திப் பிடித்தான். அறிவுடைய நிலை, இச்சையடக்கம் ஆகியவைகளை உடைய ஒரு வாழ்க்கையை நடத்தவேண்டிய மனிதனின் கடமையையும், இச்சைகளை தேவனுடைய பிரமாணத்திற்கு இசைவாக அறிவின் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கவேண்டியதையும், மனோவலிமையை ஆரோக்கியமான நிலைமையில்

வைக்கவேண்டியதன் அவசியத்தையும் அவன் தெளிவாகக் காட்டினான். ஒரு நியாயத்தீர்ப்பின் நாள் நிச்சயமாகவே வருமென்று அவன் அறிவித்தான். அந்த நாளில் சரீரத்தில் செய்த செயல்கள் அனைத்திற்குமான பலன் கிடைக்கும். அப்பொழுது பதவிகள் பட்டங்கள் ஆகியவை மனிதனுக்கான ஆதரவை தேவனிடமிருந்து பெறுவதற்கு வல்லமை இல்லாதவைகளாக இருக்கும் என்றும் அல்லது பாவத்தின் பலன்களிலிருந்து விடுவிக்கமுடியாதவைகளாக இருக்கும் என்றும் அவன் அறிவித்தான். எதிர்கால வாழ்க்கைக்கென்று ஆயத்தம்செய்யும் காலமாக இந்த வாழ்க்கை இருக்கிறதென்று அவன் காட்டினான். நிகழ்காலத்திலுள்ள சலுகைகளையும் வாய்ப்புக்களையும் அலட்சியம் செய்தால், அவன் ஒரு நித்திய இழப்பை அனுபவிக்க நேரிடும். அவனுக்குப் புதிதாக எந்தவிதமான தவணையின் காலமும் கொடுக்கப்படமாட்டாது என்பதையும் அவன் விளக்கிக்கூறினான். (12)

தேவப்பிரமாணம் அதிகமான அளவிற்கு உரிமைபாராட்டும் அதன் தன்மையைப் பவுல் சிறப்பாக விளக்கினான். மனிதனின் சன்மார்க்க நெறியின் இரகசியங்களைப்பற்றியும், அது எவ்வளவு அதிகமாக விவரித்துச் சொல்லுகிறது என்பதையும், மனிதர்களுடைய பார்வையிலிருந்தும் அறிவிலிருந்தும் மறைக்கப்பட்டுள்ளவைகளின்மீது அது எவ்விதமாக ஒளி வெள்ளத்தை வீசுகிறது என்பதையும் அவன் காட்டினான். கரங்கள் என்ன செய்யுமோ, நாக்கு என்ன பேசுமோ, வெளிப்புறமான வாழ்க்கை எதை வெளிப்படுத்துமோ, அவை மனிதனின் சன்மார்க்க சுபாவத்தைப் பூரணமில்லலாதவிதத்தில் காட்டுகின்றன. தேவப்பிரமாணம் அவனுடைய எண்ணங்கள், குறிக்கோள்கள், நோக்கங்கள் ஆகியவைகளை ஆராய்கிறது. மனிதர்களின் பார்வையிலிருந்து மறைத்துவைக்கப்பட்டிருக்கும் பொறாமை, வெறுப்பு, இச்சைகள், பேராசைகள் ஆத்துமாவின் இருண்ட பகுதியில்வைத்து தியானம் செய்யப்பட்டு, வாய்ப்புக் கிடைக்காததினால் ஒருபோதும் செயல்படுத்தப்படாமலிருக்கின்ற தீய செயல்கள் ஆகிய இவைகளனைத்தையும் தேவப்பிரமாணம் குற்றப்படுத்துகின்றது. (13)

பாவத்திற்கான ஒரு பெரும் தியாகபலியினிடத்திற்குப் பவுல் தனது பேச்சைக் கேட்டிருந்தவர்களின் மனங்களைத் திருப்பமுயன்றான். வரவிருந்த நல்ல காரியங்களுக்கு நிழல்களாக இருந்த பலிகளை அவன் சுட்டிக்காட்டி, அதற்குப்பின் இந்தச் சடங்காச்சாரங்களின் நிஜமாக இருந்த கிறிஸ்துவை விழுந்துபோன மனிதனின் ஜீவனுக்கும் நம்பிக்கைக்கும் ஒரே ஆதாரமாக இருந்தவரைச் சுட்டிக்காட்டியிருந்த பொருளைக் காட்டினான். கிறிஸ்துவின் இரத்தத்தின்மீதிருந்த விசுவாசத்தினால் பண்டையகாலப் பரிசுத்தவான்கள் இரட்சிக்கப்பட்டிருந்தனர். பலியிடப்பட்டதினால் செத்துக்கொண்டிருந்த

வேதனைகளை அவர்கள் கண்டபோது, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கும்படி வரவிருந்த தேவஆட்டுக்குட்டியை அவர்கள் யுகங்களின் இடைவெளிகளுக்கும் அப்பால் கண்டனர். (14)

தேவன் அவரால் படைக்கப்பட்டிருக்கின்றவைகளின் அன்பின்மீதும் கீழ்ப்படிதலின்மீதும் நியாயமான விதத்தில் உரிமைபாராட்டுகிறார். பூரணமான ஒரு நீதியின் தரத்தை அவர் அவரது பிரமாணத்தில் கொடுத்திருக்கிறார். ஆனால் அநேகர் அவர்களை சிருஷ்டித்தவரை மறந்து, அவரது சித்தத்திற்கு விரோதமாக தங்களது சொந்தப் பாதையைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொள்ளுகின்றனர். அவர்கள் வானம்வரை உயரமுள்ளதும், பிரபஞ்சத்தைப்போல அகலமுள்ளதுமான அவரது அன்பிற்குப் பதிலாக விரோதத்தைத் திரும்பக்கொடுக்கின்றனர். துன்மார்கரின் தரத்திற்குச் சமமானவிதத்தில் தேவனால் அவரது பிரமாணம் அவசியப்படுபவைகளைச் சந்திக்கமுடியாது. பாவத்தின் குற்றத்திலிருந்து பாவி சுத்திகரிக்கப்படவும் அவனது சிருஷ்டிகரின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவும் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசம் மட்டுமே அவனைத் தகுதியுள்ளவனாக்குகிறது. (15)

இவ்வாறாக, கைதியாக இருந்த பவுல், யூதர்கள் புறஜாதியினர் ஆகியோரின்மீதிருந்த தெய்வீகப் பிரமாணம் பாராட்டும் உரிமையை வற்புறுத்தி, அவமதிக்கப்பட்டிருந்தவரான நசரேயனாகிய இயேசுவை தேவகுமாரனாக—உலக மீட்பராக அவர்கள்முன் வெளிப்படுத்தினான். (16)

வெட்கமில்லாத விதத்தில் நியாயப்பிரமாணத்தை மீறியிருந்த அந்த யூத இளவரசி, நியாயப்பிரமாணத்தின பரிசுத்தமான தன்மையை நன்கு அறிந்திருந்தாள், ஆனால் கல்வாரியின் மனிதருக்கு எதிராக அவள் கொண்டிருந்த உருக்கைப்போன்ற கடினமான தன்மை அவளுடைய இருதயத்தைக் கடினப்படுத்தியிருந்தது. ஆனால் பேலிக்ஸ் இந்த சத்தியத்தை இதற்குமுன் ஒருபோதும் அறியாதவனாக இருந்திருந்தான். தேவ ஆவியானவர் அவனுடைய ஆத்துமாவிற்கு மன உணர்த்துதலை அனுப்பினபோது, அவன் மிக ஆழமாகக் குழப்பமடைந்தான். மனச்சாட்சி இப்பொழுது துயிலெழுந்து தனது குரலைக் கேட்கும்படிச் செய்திருந்தது. எனவே பவுலின் வார்த்தைகள் உண்மையானவையென்று பேலிக்ஸ் உணர்ந்தான். குற்றமிக்க கடந்த காலத்தை நோக்கி அவனது நினைவுகள் சென்றன. அவனது ஆரம்பகால வாழ்க்கையின் இரகசியங்கள், அளவுக்குமீறிய ஊதாரித்தனம், இரத்தஞ்சிந்துதல் ஆகியவைகளுடன், அவனது முந்தைய காலத்தின் கடுமையான ஆவணங்கள் பயங்கரமான மிகத் தெளிவான தனித்தன்மையுடன் அவன்முன் வந்தன. தான் காமவெறியனாகவும் கொடூரமானவனாகவும்

கொள்ளையடிப்பவனாகவும் இருந்ததை அவன் கண்டான். இதற்குமுன் ஒருபோதும் இவ்விதமாகச் சத்தியம் அவனது இருதயத்திற்குள் கொண்டுவரப் படவில்லை. இதற்குமுன் ஒருபோதும் அவனுடைய ஆத்துமா திகிலினால் நிறைந்திருக்கவில்லை. அவனுடைய இரகசியமான குற்றமிக்க நடத்தைகள் யாவும் தேவனுடைய கண்களுக்குமுன் திறந்ததாக இருக்கிறது என்ற எண்ணமும் அவனுடைய செயல்களுக்குத்தக்கதாக அவன் நியாயம் தீர்க்கப்படுவான் என்பதும் அவனைப் பயத்தால் நடுங்கச்செய்தது. (17)

ஆனாலும் அவனுடைய மனஉணர்த்துதலை மனந்திரும்புதலுக்கு நடத்தும்படி அனுமதிப்பதற்குப்பதிலாக, வரவேற்க விருப்பமற்றதாகவிருந்த பிரதிபலிப்புக்களை நீக்கிவிட அவன் வகைதேடியிருந்தான். பவுலுடனான அந்த நேர்காணல் விரைவில் நிறுத்தப்பட்டது. “இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்”– அப்போஸ்தலர் 24:25. (18)

பிலிப்பியின் சிறைச்சாலைக்காரனின் நடத்தைக்கும், பேலிக்ஸின் நடத்தைக்கும் இடையில் இருந்த வித்தியாசம் எவ்வளவு விசாலமானதாக இருந்தது! பவுல் பேலிக்ஸிடம் கைதியாகக் கொண்டுவரப்பட்டிருந்ததைப்போலவே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சிறைச்சாலைக்காரனிடமும் கொண்டுவரப்பட்டிருந்தனர். அவர்கள் கொடுத்த சான்று ஒரு தெய்வீக வல்லமையால் தாங்கப்பட்டிருந்ததும், பாடுகளுக்கும் நிந்தைகளுக்கும்கீழ் அவர்கள் களிகூர்ந்திருந்ததும், பூமி அதிர்சிசியினால் அவர்களுக்குக் கீழிருந்த பூமி தள்ளாடினபோதும் அவர்கள் பயமற்றவர்களாக இருந்ததும், கிறிஸ்துவைப்போன்ற அவர்களது மன்னிக்கும் தன்மையும், அந்தச் சிறை அதிகாரியின் இருதயத்தில் உணர்த்துதலை அனுப்பிவைக்கவே, அவன் நடுக்கத்துடன் பவுலை அறிக்கை செய்து, மன்னிப்பைக் கண்டடைந்தான். பேலிக்ஸ்–ம் நடுங்கினான். ஆனால் அவன் மனந்திரும்பவில்லை. அந்தச் சிறைச்சாலைத் தலைவன் பரிசுத்தஆவியை அவனுடைய இருதயத்திற்கும் அவனுடைய வீட்டிற்கும் மகிழ்ச்சியுடன் வரவேற்றான். பேலிக்ஸ் தெய்வீகத் தூதுவனைப் புறப்பட்டுச்செல்லும்படி கட்டளையிட்டான். தேவனுடைய பிள்ளையாவதையும் பரலோகத்தின் சுதந்திரவாளியாவதையும் ஒருவன் தெரிந்துகொண்டான். மற்றவன் தனது வாய்ப்பை அக்கிரமக்காரர்களுடனிருக்கத் தெரிந்துகொண்டான். (19)

இரண்டு வருடங்களாக அவன் சிறையில் தங்கியிருந்தபோதிலும் அவனுக்கெதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருந்தது. பேலிக்ஸ் பல தடவை பவுலைச் சந்தித்து அவனது வார்த்தைகளை மிகக் கவனமாகக் கேட்டான். ஆனால் வெளியரங்கமான இந்த நட்பின்

உண்மையான உள்நோக்கம் ஆதாயத்தின்மீதான வாஞ்சையாக இருந்தது. ஒரு பெரும் தொகையைப் பணமாகக் கொடுப்பதினால் பவுல் தனது விடுதலையை அடைந்துகொள்ளலாம் என்று அவன் தெரிவித்தான். அப்போஸ்தலன் லஞ்சம் கொடுத்து தன்னை விடுதலை செய்துகொள்ளுகின்ற மனமற்ற ஒரு மேன்மையானவனாக இருந்தான். அவன் எந்த ஒரு குற்றத்திலும் குற்றவாளியாக இருக்கவில்லை. விடுதலையை அடைந்துகொள்ளுவதற்காக ஒரு குற்றத்தைச் செய்வதற்கு அவன் தனது உயர்ந்த நிலையிலிருந்து கீழிறங்கமாட்டான். மேலும் அப்படிப்பட்ட ஒரு ஈட்டுத்தொகையைக் கொடுக்கமுடியாத அளவிற்கு அவன் மிகுந்த ஏழையாக இருந்தான். அவன் அப்படிச்செய்வதற்கு விரும்பியிருந்தாலுங்கூட, அவன் தனக்காக தன்னால் மாற்றம் அடைந்திருந்தவர்களின் அனுதாபம் ஈகை ஆகியவைகளுக்காக அவர்களிடம் வேண்டுகோள் செய்திருந்திருக்கமாட்டான். அவன் தான் தேவனுடைய கரங்களில் இருப்பதாக உணர்ந்திருந்து, தெய்வீக நோக்கங்களுக்குமேலாகத் தன்னை மதித்து, அவைகளுடன் குறுக்கிடாதவனாகவே இருப்பான். (20)

யூதர்களுக்கு எதிராகப் பெரிய தவறுகளைப் பேலிக்ஸ் செய்திருந்ததினால் முடிவில் அவன் ரோமாபுரிக்கு அழைக்கப்பட்டான். அவனுக்குண்டான அழைப்பிற்கு இணங்க, செசரியாவைவிட்டுச் செல்லுவதற்குமுன் அவன் பவுலைத் தொடர்ந்து சிறையில் இருக்கும்படி வைப்பதனால் யூதருக்குத் தயவுசெய்ய மனதாய், பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான். (அப்போஸ்தலர் 24:27). அவன் கேவலமான விதத்தில் பதவிநீக்கம் செய்யப்பட்டான். அவனுக்கு அடுத்தபடியாகத் தொடரும்படி பொர்க்கியு பெஸ்து என்பவன் செசரியாவைத் தலைமை இடமாகக் கொண்டவனாக நியமிக்கப்பட்டான். (21)

நீதி, இச்சையடக்கம், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு ஆகியவைகளைப்பற்றி பவுல் பேலிக்சுடன் நியாயவாதம் செய்தபோது, அவன்மீது பிரகாசிக்கும்படி பரலோகத்திலிருந்து ஒரு ஒளிக்கதிர் அனுமதிக்கப்பட்டிருந்தது. அவனுடைய பாவங்களைப் பார்க்கவும், அவைகளை விட்டுவிலகவும், அது பரலோகத்தால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வாய்ப்பாக இருந்தது. ஆனால் அவன் தேவனுடைய தூதுவனிடத்தல் : “இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்” (அப்போஸ்தலர் 24:25) என்றான். இரக்கத்தின் இறுதி அழைப்பை அவன் அலட்சியம் செய்தான். தேவனிடமிருந்து ஒரு அழைப்பினை இனி ஒருபோதும் அடையமுடியாதவனாக அவன் இருந்தான். (22) ★

# 40

# பவுல் மேல்முறையீடு செய்கிறான்!

(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 428–432)
திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 25:1–12

"பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்து, மூன்றுநாளானபின்பு, செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போனான். அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து, பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணி, அவனை வழியிலே கொன்றுபோடும்படி சர்ப்பனையான யோசனையுள்ளவர்களாய், தங்கள்மேல் தயவுசெய்து, அவனை எருசலேமுக்கு அழைப்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்" அப்போஸ்தலர் 25:1–3. எருசலேமிற்குச் செல்லும் பாதையில் பவுலை வழிமறித்து, அவனைக் கொலைசெய்யும் நோக்கத்துடன் அவர்கள் இந்த வேண்டுகோளைச் செய்திருந்தனர். ஆனால் பெஸ்து தனது பதவியின் பொறுப்பைப்பற்றி மேலான உணர்வையுடையவனாக இருந்து, பவுலை அழைத்துவருவதற்கு வினயமாக மறுத்துவிட்டான். "குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய்நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்குமுன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல" (அப்போஸ்தலர் 25:16) என்று அறிவித்தான். "பவுலைச் செசரியாவிலே காவல்பண்ணியிருக்கிறதே; நானும் சீக்கிரமாக அங்கே போகிறேன். ஆகையால் உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து, அந்த மனுஷனிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் என்றான்" (அப்போஸ்தலர் 25:4,5). (1)

யூதர்கள் விரும்பினது இதுவாக இருக்கவில்லை. செசரியாவில் அவர்கள் முன்பு அடைந்திருந்த தோல்வியை மறக்கவில்லை. அப்போஸ்தலனின் அமைதியான நடத்தை, வலிமைமிக்க வாதம்

ஆகியவைகளுடன் ஒப்பிடும்போது, அவர்களுடைய அவதூறு செய்கின்ற ஆவியும் ஆதாரம் ஏதுவுமில்லாத குற்றச்சாட்டுகளும் மிகவும் மோசமான வெளிச்சத்தில் தோன்றும். பவுல் விசாரணைக்காக எருசலேமிற்குக் கொண்டுவரப்படவேண்டும் என்று அவர்கள் மறுபடியும் வற்புறுத்தினபோது செசரியாவில் பவுலின்மீது ஒரு நியாய விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற அவனது நோக்கத்தில் பெஸ்து உறுதி உள்ளவனாக இருந்தான். அப்போஸ்தலனின் ஆயுள் நீடிக்கப்படவேண்டும் என்பதற்காக தேவன் அவரது தெய்வீக ஏற்பாட்டினால் பெஸ்துவின் முடிவைக் கட்டுப்படுத்தினார். (2)

அவர்களுடைய நோக்கங்கள் தோற்கடிக்கப்பட்டதினால் தேசாதிபதியின் நீதிமன்றத்தில் பவுலுக்கு எதிராகச் சாட்சி கொடுப்பதற்காக யூதத்தலைவர்கள் உடனே ஆயத்தமானார்கள். பெஸ்து சில நாட்கள் எருசலேமில் சஞ்சாரம் செய்துவிட்டு, “அவன் அவர்களிடத்திலே ஏறக்குறைய பத்துநாள் சஞ்சரித்து, பின்பு செசரியாவுக்குப் போய், மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து, பவுலைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவன் வந்தபோது, எருசலேமிலிருந்துவந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்துநின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேகங் கொடிய குற்றங்களை அவன்மேல் சாட்டினார்கள்” (அப்போஸ்தலர் 25:6.7). இந்த சந்தர்ப்பத்தில் யூதர்கள் அவர்களுக்காகப் பரிந்துபேசும் ஒருவனில்லாமல் அவர்களுடைய குற்றச்சாட்டுகளை அவர்களே கூறினார்கள். விசாரணை தொடர்ந்துபோது, குற்றஞ்சாட்டப்பட்டவன் அமைதியுடனும் கபடமில்லாமலும் அவர்களுடைய வாக்குமூலங்களில் இருந்த தவறுகளைத் தெளிவாக எடுத்துக் காட்டினான். (3)

விவாதத்திலிருந்த கேள்வி முற்றிலுமாக யூத சமயக்கோட்பாடு சம்பந்தப்பட்டது என்பதையும், அதைச் சரியாகப் புரிந்துகொண்டால் பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டில் ஒன்றும் இல்லையென்பதையும், அவைகள் மெய்ப்பிக்கப்படுமானால் அது அவனுக்கு மரணதண்டனையைக் கொண்டுவரும் என்பதையும் பெஸ்து அறிந்தான். பவுல் ஆக்கினைக்குட்படுத்தப்படாவிட்டால் அல்லது அவர்களுடைய கைகளில் ஒப்புவிக்கப்படாவிட்டால் உண்டாகக்கூடிய கோபத்தின் புயலைப் பெஸ்து தெளிவாகக் கண்டான். “அப்பொழுது பெஸ்து யூதருக்குத் தயவுசெய்ய மனதாய், பவுலை நோக்கி: நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக்குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா” (அப்போஸ்தலர் 25:9). என்றான். பெஸ்து அவனைப் பாதுகாப்பின்கீழ் சனகரீம் சங்கத்தினால் விசாரிக்கப்படுவதற்காக

எருசலேமிற்குச் செல்ல விருப்பமுள்ளவனாக இருக்கிறானா என்று பவுலிடம் கேட்டான். (4)

தங்களுடைய குற்றங்களினால் தங்கள்மீதே தேவகோபத்தை வரவழைத்துக்கொண்டிருக்கும் ஜனங்களிடமிருந்து அவனால் நீதியைக் காணமுடியாது என்பதை அப்போஸ்தலன் அறிந்தான். பரலோகத்திலிருந்து உண்டான ஒளியை நிராகரித்து, சுவிசேஷத்திற்கு எதிராகத் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தியிருந்தவர்களுக்கு மத்தியிலிருப்பதைவிட எலியாவைப்போலஅஞ்ஞானிகளுக்கு மத்தியில் அவன் பாதுகாப்பாயிருப்பான் என்பதை அவன் அறிந்திருந்தான். விசாரணையில் திரும்பத்திரும்ப உண்டாயிருந்த களைப்பை உண்டுபண்ணும் தாமதத்தையும், சிறையிருப்பையும், களைப்பை உண்டுபண்ணும் கலகத்தையும், அவனுடைய தீவரமான ஆவியால் தாங்கிக்கொள்ள முடியாமலிருந்தது. எனவே அவன் ஒரு ரோம நாட்டு மகன் என்னும் தன்னுடைய சலுகையைப் பயன்படுத்தி, இராயனிடம் மேல்முறையீடு செய்யத் தீர்மானித்தான். (5)

ஆளுநரின் கேள்விக்கு மறுமொழியாகப் பவுல்: "நான் இராயருடைய நியாயசனத்துக்கு முன்பாக நிற்கிறேன். அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்படவேண்டியது. யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர். நான் அநியாயஞ்செய்து, மரணத்துக்குப் பாத்திரமானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், நான் சாகாதபடிக்கு மனுகேட்கமாட்டேன். இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத் தயவுபண்ணும்பொருட்டு ஒருவரும் என்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகாது. இராயருக்கு அபயமிடுகிறேன்" (அப்போஸ்தலர் 25:10.11) என்றான். (6)

பவுலைக் கொலைசெய்யவேண்டும் என்ற யூதர்களின் சதியைப்பற்றிப் பெஸ்து ஒன்றும் அறியாதவனாக இருந்தினால், பவுல் இராயனிடம் மேல்முறையீடு செய்ததைப்பற்றி ஆச்சரியப்பட்டான். அப்படியானாலும் அப்போஸ்தலனின் வார்த்தைகள் நீதிமன்றத்தின் விசாரணைக்கு ஒரு நிறுத்தத்தை உண்டுபண்ணியது. "அப்பொழுது பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்து: நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்"– அப்போஸ்தலர் 25:12. (7)

இவ்வாறாக மதவிரோதத்தினால் உண்டான வெறுப்பு சுயநீதி ஆகியவைகளால் தேவனுடைய ஒரு ஊழியக்காரன் பாதுகாப்பிற்காக அஞ்ஞானிகளிடத்திற்கு மறுபடியும் ஒருமுறை திருப்பப்பட்டான். உயிரைப்

பாதுகாத்துக்கொள்ளுவதற்காகத் தீர்க்கதரிசியான எலியாவை சாரிபாத்திற்கு ஓடிப்போகச் செய்திருந்த அதே ஆவியாக இது இருந்தது. அதுவே சுவிசேஷத்தின் பறைசாற்றுவோர்களாக இருந்தவர்களை யூதர்களிடமிருந்து திருப்பி தங்களுடைய தூதைப் புறஜாதியினருக்கு அறிவிக்கும்படி வற்புறுத்தியிருந்தது. இந்தக் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தேவனுடைய மக்கள் இந்த வெறுப்பை இன்னும் சந்திக்கவேண்டியவர்களாக உள்ளனர். யூத இருதயங்களில் பெரும் இடத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் அதே விதமான அகந்தை, சம்பிரதாயம், சுயநலம், அதேவிதமான ஒடுக்கும் ஆவி ஆகியவை தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொண்டிருக்கும் பெயர் கிறிஸ்தவர்கள் அநேகரிடம் உள்ளது. கிறிஸ்துவையும் அவரது அப்போஸ்தலர்களையும் ஆசாரியர்களும் அதிபதிகளும் எவ்விதமாக நடத்தினார்களோ அதேவிதமான நடத்தையை எதிர்காலத்தில் தங்களைக் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்று உரிமைபாராட்டுபவர்கள் செயல்படுத்துவார்கள். தேவனுடைய விசுவாசமிக்க ஊழியக்காரர்கள் விரைவில் கடந்துசெல்லவேண்டிய பெரும் நெருக்கடியில் அதேவிதமான இருதயக்கடினத்தையும் அதேவிதமான கொடூரமான தீர்மானங்களையும் அதேவிதமான இணக்கமில்லாத வெறுப்பையும் சந்திப்பார்கள்! (8)

அந்தத் தீமையான நாளில் தங்களுடைய மனச்சாட்சி கூறுகின்றபடி பயமில்லாமல் தேவனை நோக்கும் அனைவருக்கும் தைரியம், உறுதியான தன்மை, தேவனையும் அவரது வார்த்தையையும்பற்றிய அறிவு அவசியமாயிருக்கும். ஏனெனில் தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் உபத்திரவப்படுத்தப்படுவார்கள். அவர்களுடைய உள்நோக்கங்கள் தவறென்று கருதப்படும். அவர்களது மிகச் சிறந்த முயற்சிகள் தவறான விதத்தில் விளக்கப்படும் அவர்களுடைய பெயர்கள் பொல்லாதவைகள் போல புறம்பாக்கப்படும். தீமையை நன்மையைப்போலவும் நம்மையைத் தீமையைப்போலவும் தோன்றும்படிச் செய்ய சாத்தான் இருதயத்தை ஆதீனத்திற்குட்படுத்தவும், புரிந்துகொள்ளுதலை மங்கலாக்கவும் தனது வஞ்சக வல்லமைகள் அனைத்துடனும் செயலாற்றுவான். தேவனுடைய மக்களின் விசுவாசம் எந்த அளவிற்கு பலமுள்ளதாகவும் தூய்மையானதாகவும், அவர்களுடைய தீர்மானம் அவருக்குக் கீழ்ப்படிவதற்கு எந்த அளவிற்கு உறுதியானதாகவும் இருக்கின்றதோ, அந்த அளவிற்கு தங்களை நீதிமான்களென்று கூறிக்கொண்டிருந்து தேவப்பிரமாணத்தைக் காலின்கீழிட்டு மிதிப்பவர்களின் சீற்றத்தை தேவனுடைய மக்களுக்கு எதிராக் கலக்கிவிட சாத்தான் முயற்சி செய்வான். பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவசத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்ள

மிக உறுதியான நம்பிக்கையும் மகிழ்ச்சியுமான வீரமிக்க நோக்கமும் அவசியமானதாக இருக்கும். (9)

விரைவில் வரவிருக்கும் நெருக்கடிக்கு தேவனுடைய மக்கள் ஆயத்தமாக வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆயத்தமாக இருந்தாலும் அல்லது ஆயத்தமாக இல்லாவிட்டாலும், அவர்களனைவரிலும் எவர்கள் தங்களுடைய வாழ்க்கையை தெய்வீகத் தரத்திற்கு இசைவாகக்கொண்டு வந்திருக்கிறார்களோ, அவர்கள் மட்டும் அந்தச் சோதனையின் நேரத்தில் உறுதியாக நிற்பார்கள். மனச்சாட்சி சம்பந்தப்பட்ட காரியங்களில் சர்வாதிகாரம் செலுத்துவதற்கு மதச் சார்பற்ற மத சம்பந்தப்பட்ட ஊழியர்களுடன் ஒன்று சேரும்போது, யார் உண்மையாகவே தேவனுக்குப் பயந்து அவரை சேவிப்பவர்கள் என்பது காணப்படும். இருள் மிகவும் அதிகமாக அதிகரிக்கும் நேரத்தில் ஒளி மிகவும் அதிகமாகப் பிரகாசிக்கும். மற்ற நம்பிக்கைகள் அனைத்தும் தோற்றுப்போகும்போது, யார் யோகோவாவின்மீது தாங்கும் நம்பிக்கையை உடையவர்களாக இருப்பார்கள் என்பது காணப்படும். சத்தியத்தின் எதிரிகள் எல்லாப் பக்கத்திலும் இருக்கும்போது, தேவனுடைய ஊழியக்காரர்கள் தீமையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும்போது, அவர்களது களைப்புமிக்க அந்த இடத்தில் அவர்களது நன்மைக்காக தேவன் ஒரு கன்மலையின் நிழலைப்போலிருப்பார். (10) ★

# 41

# பவுலே..., நீ என்னைச் சம்மதிக்கச்செய்கிறாய்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 433–438)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 25:13–27; 26**

பவுல் இராயனிடம் மேல்முறையீடு செய்திருந்தான். அதினால் அவனை ரோமாபுரிக்கு அனுப்புவதைவிட பெஸ்துவால் வேறொன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் பொருத்தமான ஒரு கப்பல் கிடைக்கும் வரை சிறிது காலம் கழிந்தது. பவுலுடன் சேர்ந்து மற்ற கைதிகளும் அனுப்பப்படவேண்டியதாக இருந்ததினால் அவர்களைப்பற்றிய ஆலோசனையும் தாமதத்திற்குச் சந்தர்ப்பமாயிற்று. இது செசரியாவிலிருந்த முதன்மையான மனிதர்களுக்குமுன்னும் ஏரோது வம்சத்தின் கடைசி அரசனான இரண்டாவது அகிரிப்பாவின்முன்னும் பவுல் தனது விசுவாசத்தின் காரணத்தை வைப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தது. (1)

“சிலநாள் சென்றபின்பு, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள். அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்திருக்கையில், பெஸ்து பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்து: பேலிக்ஸ் காவிலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான். நான் எருசலேமில் இருந்தபோது, பிரதான ஆசாரியர்களும் யூதருடைய மூப்பர்களும் அவனைக்குறித்து என்னிடத்தில் பிராதுபண்ணி, அவனுக்கு விரோதமாகத்தீர்ப்புசெய்யவேண்டுமென்றுகேட்டுக்கொண்டார்கள்” (அப்போஸ்தலர் 25:13–15). கைதி இராயனுக்கு மேல்முறையீடு செய்ய நேர்ந்த சூழ்நிலைகளை விளக்கி, தனக்குமுன் சமீபத்தில் நடந்த பவுலைப்பற்றின விசாரணையைப்பற்றியும் கூறி, யூதர்கள் அவனிடம் கொண்டுவருவார்கள் என்று அவன் யூகித்திருந்த குற்றச்சாட்டு ஒன்றையும் பவுலுக்கெதிராகக் கொண்டுவராமல், “தங்களுடைய மார்க்கத்தைக்குறித்தும்,

மரித்துப்போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறாரென்று பவுல் சாதித்ததைக்குறித்தும் சில தர்க்கவிஷயங்களை அவன்பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள்" (அப்போஸ்தலர் 25:19) என்றான். (2)

"அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான். அதற்கு அவன்: நாளைக்கு நீர் கேட்கலாம் என்றான்"—அப்போஸ்தலர் 25:23. (3)

அவனது விருந்தினர்களை கௌரவப்படுத்தவும், தனது விளம்பரத்தைக் காட்டவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த பெஸ்து வகைதேடியிருந்தான். தேசாதிபதி மற்றும் விருந்தினரின் பகட்டான உடைகளும் வீரர்களின் வாள்களும் அவனுடைய சேனைத்தலைவர்களின் திளங்கும் போர்க்கவசங்களும் அந்த காட்சிக்குப் பகட்டை உண்டுபண்ணியிருந்தது. (4)

இப்பொழுதும் பவுல் விலங்கிடப்பட்டவனாக இந்தக் கூட்டத்தினருக்குமுன் நின்றிருந்தான். இங்கு முன்வைக்கப்பட்டிருந்தவர்களின் ஒப்புமை என்ன? அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் வல்லமையையும் பதவியையும் உடையவர்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் தேவன் மேலாக மதிக்கின்ற சுபாவம் இல்லாத அநாதைகளாக இருந்தனர். அவர்கள் இருதயத்திலும் வாழ்க்கையிலும் கறையுள்ளவர்களாக தேவப்பிரமாணத்தை மீறினவர்களாக இருந்தனர். அவர்களுடைய நடத்தைகள் பரலோகத்தால் வெறுக்கப்பட்டதாக இருந்தது. (5)

தனது காவல் சேனை வீரனின் சங்கிலியுடன் பிணைக்கப்பட்டவனாக இருந்த வயது சென்ற கைதியின் தோற்றத்தில், உலகம் தரக்கூடிய புகழ் எதுவுமிருக்கவில்லை. அப்படியிருந்தபோதிலும் நண்பர்கள் அல்லது செல்வம் அல்லது பதவி ஆகிய எதையும் வெளியரங்கமாக இல்லாதவனாக இருந்த இந்த மனிதனின்மீது—தேவகுமாரனின்மீதிருந்த விசுவாசத்திற்காகக் கைதியாக இருந்த இந்த மனிதனின்மீது—பரலோகம் முழுவதும் ஆர்வமுடையதாக இருந்தது. தேவதூதர்கள் அவனைக் கவனிப்பவர்களாக இருந்தனர். அந்தத் தூதர்களில் ஒருவனின் மகிமை பிரகாசித்திருந்தால் அரச தன்மையின் ஆடம்பரமும் பெருமையும் வெளிரியிருந்திருக்கும். கிறிஸ்துவின் கல்லறையிலிருந்த காவலாளிகளைப்போல அரசனும் அரசவையிலிருந்தவர்களும் அடிபட்டுத் தரைலயில் விழுந்திருப்பார்கள். (6)

"அப்பொழுது பெஸ்து: அகிரிப்பா ராஜாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே, நீங்கள் காண்கிற இந்த மனுஷனைக் குறித்து யூதஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் என்னை

வருந்திக் கேட்டுக்கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள். இவன் மரணத்துக்குப் பாத்திரமானதொன்றையும் செய்யவில்லையென்று நான் அறிந்துகொண்டதினாலும், இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலும், அவரிடத்தில் இவனை அனுப்பும்படி தீர்மானம்பண்ணினேன். இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியமொன்றும் எனக்கு விளங்கவில்லை. காவல்பண்ணப்பட்ட ஒருவன் செய்த குற்றங்களை எடுத்துக்காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறபடியினாலே, இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே, உமக்குமுன்பாகவும் கொண்டுவந்தேன்" (அப்போஸ்தலர் 25:24–27) என்று பவுலை அந்தக் கூட்டத்திற்கு அறிமுகம் செய்தான். (7)

பவுல் தனக்குத் தானே பேசுவதற்கான சுயாதீனத்தை அகிரிப்பா இராஜா அவனுக்குக் கொடுத்தான். திளங்கும் பகட்டினாலோ அல்லது அவனது பேச்சைக் கேட்பதற்காகக் கூடியிருந்தவர்களின் பதவிகளினாலோ அப்போஸ்தலன் மன உறுதியை இழக்காதவனாக இருந்தான். ஏனெனில் உலகப்பிரகாரமான பதவியும் செல்வமும் எந்த அளவிற்கு அற்பமானவை என்பதை அவன் அறிந்திருந்தான். உலகப்பிரகாரமான ஆடம்பரங்களினாலும் வல்லமையினாலும் விநாடிநேரம்கூட அவனுடைய தைரியத்தை அசைக்கவோ அல்லது அவனது சுயக்கட்டுப்பாட்டைக் கவர்ந்துகொள்ளவோ முடியவில்லை! (8)

"அகிரிப்பா ராஜாவே, யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக்குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப்போகிறபடியினாலே என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன். விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன்; ஆகையால் நான் சொல்வதைப் பொறுமையோடே கேட்கும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" (அப்போஸ்தலர் 26:2,3) என்றான். (9)

வளைந்துகொடுக்காத நம்பிக்கையின்மையிலிருந்து நசரேயனாகிய இயேசுதான் உலக மீட்பர் என்னும் விசுவாசத்திற்கு மாறின தன் கதையை பவுல் விவரித்தான். சொல்லக்கூடாத பயத்தினால் அவனை நிறைத்து, பின்பு மிகப்பெரும் ஆறுதலின் ஆதாரமாக மெய்ப்பிக்கப்பட்ட, எவரை அவமதித்து வெறுத்திருந்து—எவரது அடியார்களை அழிப்பதற்கு வகைதேடிக்கொண்டிருந்தானோ அவர் ஒரு தெய்வீக மகிமைக்கு மத்தியில் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டிருந்ததைப்பற்றின பரலோக தரிசனத்தை

அவன் விவரித்தான். அந்த நேரத்திலிருந்து பவுல் ஒரு புதிய மனிதனாக உண்மையுள்ளவனாக இயேசுவில் ஊக்கமுள்ள ஒரு விசுவாசியாக மறுரூபமடையச்செய்யும் கிருபையினால் மாற்றப்பட்டான். (10)

பூமியின்மீதிருந்த கிறிஸ்துவின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டிருந்த சம்பவங்களைப் பவுல் அகிரிப்பாவிற்குமுன்பாக மிகத் தெளிவாகவும் வல்லமையுடனும் விளக்கினான். நசரேயனாகிய இயேசுவின் உருவில் தீர்க்கதரிசனத்திலிருந்த மேசியா ஏற்கனவே தோன்றிவிட்டார் என்று அவன் சாட்சிபகர்ந்தான். மனிதர்களுக்கிடையில் ஒரு மனிதனாக மேசியா தோன்றவேண்டியவராக இருந்தார் என்பதை பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் எவ்விதமாக அறிவித்திருந்தன என்பதை அவன் விளக்கினான். மோசேயினாலும் தீர்க்கதரிசிகளினாலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தவைகள் இயேசுவின் வாழ்க்கையில் எவ்விதமாக நிறைவேறியிருந்தன என்பதையும் அவன் காட்டினான். தொலைந்துபோன உலகத்தை மீட்கின்ற காரியத்திற்காக தேவகுமாரன் சிலுவையைச் சகித்து, அவமானமிக்க நிந்தையைச் சகித்து, மரணத்தின்மீதும் கல்லறையின்மீதும் வெற்றிசிறந்தவராகப் பரலோகத்திற்கு எழுந்தருளியிருந்தார். (11)

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாகவேண்டும் என்பது நம்பமுடியாததுபோல் ஏன் காணப்பட்டது என்று பவுல் நியாயவாதம் செய்தான். ஒரு சமயத்தில் இதைப்போலவே அவனுக்குக் காணப்பட்டிருந்தது. ஆனால் அவன் தானாகவே பார்த்ததையும் கேட்டதையும் எப்படி நம்பாமலிருக்கமுடியும்? எருசலேமின் தெருக்களில் நடந்திருந்து, கல்வாரியில் மரித்து, மரணத்தின் கட்டுக்களைத் தகர்த்து, பரலோகத்திற்கு எழுந்தருளியிருக்கும் சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த அதே கிறிஸ்துவை அவன் தமஸ்குவின் வாசலில் மெய்யாகவே சந்தித்திருந்தான். கேபாவையும் யாக்கோபுவையும் யோவானையும் அல்லது சீடர்களில் மற்றவர்களையும் போலவே அவனும் அவரைப் பார்த்து, அவருடன் பேசியிருக்கிறான். உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றிய சுவிசேஷத்தை அறிவிக்கும்படி அந்தக் குரல் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தது. அப்படியிருக்க அவனால் எப்படிக் கீழ்ப்படியாமலிருக்கமுடியும், “முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்” (அப்போஸ்தலர் 26:20) என்று காட்டி, தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயாவெங்கிலும் அதற்கப்பாலிருந்த பிரதேசங்களிலுமுள்ள எல்லா வகுப்பினருக்கும் சிலுவையிலறையப்பட்ட இயேசுவிற்காக அவன் சாட்சிபகர்ந்திருந்தான். (12)

“இதினிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்துக் கொலைசெய்யப் பிரயத்தனம்பண்ணினார்கள். ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று, நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிகூறி வருகிறேன். தீர்கதரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுய ஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான்”–அப்போஸ்தலர் 26:21–23. (13)

பவுலின் ஆச்சரியமான அனுபவத்தைப்பற்றின விபரத்தை அந்தக் கூட்டத்தினர் அனைவரும் வாய்திறவாதவர்களாகக் கேட்டிருந்தனர். அப்போஸ்தலன் அவனுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்த கருப்பொருளின்மீது சஞ்சரித்திருந்தான். அவனுடைய பேச்சைக் கேட்டிருந்த ஒருவராலும் அவனது உண்மையைப்பற்றி சந்தேகிக்க முடியாமலிருந்தது, கவர்ந்திழுத்து இணங்கச்செய்யும் அவனது வாக்குவன்மையின் உச்சக்கட்டத்தில் அவன் பெஸ்துவால் உரத்த சத்தமாய்: “பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது” (அப்போஸ்தலர் 26:24) என்று தடங்கல் செய்யப்பட்டான். (14)

அதற்கு அப்போஸ்தலன்: “கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன். இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார்; ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகக் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல” (அப்போஸ்தலர் 26:25.26) என்றான். அதன்பின் அவன் அகிரிப்பாவிற்கு நேராகத் திரும்பி, “அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்” (அப்போஸ்தலர் 26) என்றான். (15)

மிக ஆழமாகப் பாதிக்கப்பட்ட அகிரிப்பா, அந்த விநாடியில் அவனது சுற்றுப்புறத்தையும் அவனது மேன்மையையும் மறந்தான். அவன் கேட்டிருந்த சத்தியத்தைப்பற்றி மட்டுமே நினைவுள்ளவனாக இருந்து, தாழ்மையான அந்தக் கைதி தேவனுடைய தூதுவனாக அவனுக்குமுன் நிற்பதைக் கண்டு தானாகவே அவனையறியாமலேயே: “நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்” (அப்போஸ்தலர் 26:28) என்றான். (16)

“அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர,

முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்”—அப்போஸ்தலர் 26:29. (17)

அப்போஸ்தலனைக் கட்டியிருந்த சங்கிலிகளிலிருந்து, பெஸ்து அகிரிப்பா, பெர்னீக்கேயாள் ஆகியவர்களால் அவனை விடுதலை செய்திருந்திருக்கமுடியும். சாவுக்கேதுவான குற்றங்களில் அனைவரும் குற்றவாளிகளாக இருந்தனர். எதிர்த்திருந்த இவர்கள் அந்த நாளில் கிறிஸ்துவின் நாமத்தின்மூலமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இரட்சிப்பின் அழைப்பைக் கேட்டிருந்தனர். கொடுக்கப்பட்ட கிருபையையும் மன்னிப்பையும் ஏற்றுக்கொள்ளும்படி குறைந்தபட்சம் ஏறத்தாழ ஒருவன் இணங்கும்படிச் செய்யப்பட்டிருந்தான். ஆனால் சிலுவையிலறையப்பட்ட ஒரு மீட்பரின் சிலுவையை ஏற்க மறுத்து, அகிரிப்பா அவனுக்குக் கொடுக்க முன்வந்த இரக்கத்தை ஒரு பக்கமாக வைத்துவிட்டான். (18)

அந்த அரசனின் அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை திருப்திசெய்யப்பட்டது. அந்த நேர்முக உரையாடல் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்னும் அடையாளமாக, அவன் தன் இருக்கையைவிட்டு எழுந்தான். அந்தச் சங்கம் கலைந்தபோது, அவர்கள் தங்களுக்குள்ளே “இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லையென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்”—அப்போஸ்தலர் 26:31. (19)

அகிரிப்பா ஒரு யூதனாக இருந்திருந்தபோதிலும், பரிசேயர்களின் மதவிரோதமிக்க பேரார்வத்திலும் குருட்டுத்தனமான தவறான எண்ணத்திலும் அவன் பங்குபெற்றிருக்கவில்லை. அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: “இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலைபண்ணலாகும்” (அப்போஸ்தலர் 26:32) என்றான். ஆனால் இந்த வழக்கு மேலான நியாய சங்கத்திடம் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. எனவே இப்பொழுது அது பெஸ்து அல்லது அகிரிப்பா ஆகியோரின் ஆளுகையின் எல்லைக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. (20) ★

# 42

# கப்பல் பயணமும் கப்பல் சேதமும்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 439–446)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 27; 28:1–10**

கடைசியாகப் பவுல் ரோமாபுரியை நோக்கிச் சென்றிருந்தான். இதைப்பற்றி லூக்கா: "நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறுசிலரையும் அகுஸ்து பட்டாளத்தைச்சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள்" (அப்போஸ்தலர் 27:1) என்று எழுதுகிறான். (1)

கிறிஸ்தவ காலத்தின் முதலாவது நூற்றாண்டில் கப்பல் பயணம் தனிப்பட்டவிதமாக துன்பங்களும் ஆபத்துகளும் உண்டாகக்கூடியதாக இருந்தது. சூரியன் சந்திரன் ஆகியவைகளின் நிலையைப் பெரும்பாலும் சார்ந்தவர்களாகக் கப்பலோட்டிகள் இருந்தனர். இவைகள் காணப்படாதபோது, புயலின் அடையாளங்கள் இருந்தபோது, ஆழ் கடலுக்குள் செல்வதில் கப்பல் உரிமையாளர்கள் பயந்தனர். வருடத்தின் குறிப்பிட்ட ஒரு காலத்தில் பாதுகாப்பாகக் கப்பலைச் செலுத்துவது முடியாததாக இருந்தது. (2)

சங்கிலியால் கட்டப்பட்டு, ஒரு கைதியாக இருந்த பவுலின் இத்தாலியை நோக்கிய பயணம் நீண்டதாகவும் துன்பமிக்கதாகவும் இருந்தது. அவனுடைய கடினமான நிலையை, லூக்காவுடனும் அரிஸ்தர்க்குவுடனும் தோழமைகொள்ளும்படி அவன் அனுமதிக்கப்பட்டிருந்தது இலகுவாக்கியது. கொலோசெயருக்கு எழுதின அவனுடைய கடிதத்தில், பின்பு அவர்களிருவரையும் உடன் கைதிகள் என்று குறிப்பிட்டான். ஆனால் பவுலின் சிறையிருப்புக்களிலும் துன்பங்களிலும் அவனுக்குச்

சேவைசெய்யவேண்டுமென்பது அரிஸ்தர்க்குவின் தெரிந்துகொள்ளுதலாக இருந்தது. (3)

அந்தக் கப்பல் பயணம் நல்லவிதமாக ஆரம்பமாயிற்று. மறுநாள் அவர்கள் சீதோன் துறைமுகத்தில் நங்கூரமிட்டனர். "யூலியு பவுலைப் பட்சமாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய்ப் பராமரிப்படையும்படிக்கு உத்தரவு கொடுத்தான்"–அப்போஸ்தலர் 27:3. மிகவும் பலவீனமாக உடல்நலக்குறைவிலிருந்த அப்போஸ்தலனால் இந்த அனுமதி பெரிதும் வரவேற்கப்பட்டது. சீதோனைவிட்டுப் புறப்பட்ட கப்பல் எதிர்த்திசைக் காற்றுகளைச் சந்தித்து, நேராகச்செல்லவேண்டிய அதன் பாதையைவிட்டு விலகிவிடவே அதன் முன்னேற்றம் மெதுவாயிற்று. "இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலை நூற்றுக்கு அதிபதி அங்கே கண்டு, எங்களை அதில் ஏற்றினான்." ஆனால் காற்றுகள் எதிரானதாக இருந்ததினால் இந்தக் கப்பலின் முன்னேற்றம் கஷ்டமானதாக இருந்தது. "காற்று எங்களைத் தடுத்தபடியினாலே, நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று, வருத்தத்தோடே கினீதுபட்டணத்திற்கு எதிரே வந்து, சல்மோனே ஊருக்கு எதிராய்க் கிரேத்தா தீவின் ஒதுக்கில் ஓடினோம். அதை வருத்தத்தோடே கடந்து, நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தோம்; லசேயபட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது" (அப்போஸ்தலர் 27:7–8) என்று லூக்கா எழுதினான். அனுகூலமான காற்று கிடைப்பதற்காக அவர்கள் சிறிதுகாலம் நல்ல துறைமுகத்தில் தங்கும்படி வற்புறுத்தப்பட்டனர். மழைக்காலம் விரைவாக சமீபித்துக்கொண்டிருந்தது. "கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்கும்" (அப்போஸ்தலர் 27:9). அந்தக் கப்பலின் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள், அந்த வருடத்தின் கடல் யாத்திரைக்கான காலம் முடியுமுன்னர் தாங்கள் சென்றுசேரவேண்டிய இடத்தைச் சென்றடையக்கூடிய நம்பிக்கையை இழந்திருந்தனர். நல்ல துறைமுகம் என்ற இடத்திலேயே தங்கிவிடலாமா அல்லது மழைக்காலத்தில் தங்குவதற்கு அதைவிட அனுகூலமாக ஒரு இடத்தைச் சென்றடைய முயற்சி செய்யலாமா என்பது ஒன்று மட்டுமே இப்பொழுது முடிவுசெய்யப்படவேண்டிய கேள்வியாக இருந்தது. (4)

இந்தக் கேள்வி அக்கறையுடன் விவாதிக்கப்பட்டு, முடிவில் கப்பல் பயணிகள் இராணுவவீரர்கள் ஆகிய இரு சாராரின் நன்மதிப்பையும் அடைந்திருந்த பவுலிடம் நூற்றுக்கு அதிபதியால் முடிவிற்கு விடப்பட்டது. அப்போஸ்தலன் தயக்கம் எதுவுமின்றி இப்பொது தங்கியிருக்குமிடத்திலேயே தங்கவேண்டும் என்று ஆலோசனை சொன்னான். "இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும்

மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான்"—அப்போஸ்தலர் 27:10. (5)

நூற்றுக்கு அதிபதி பெரும்பான்மையினரின் நிதானிப்பைப் பின்பற்ற முடிவு செய்தான். அதன்படி "தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள் கோரினது கைகூடிவந்ததென்று எண்ணி, அவ்விடம்விட்டுப் பெயர்ந்து கிரேத்தாதீவுக்கு அருகாக ஓடினார்கள். கொஞ்சநேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில்மோதிற்று. கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப்போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டுபோகப்பட்டோம்"—அப்போஸ்தலர் 27:13–15. (6)

புயலினால் விரட்டப்பட்ட அந்தக் கப்பல் கிலவுதா என்னும் சிறிய தீவை அடைந்து, அதன் அடைக்கலத்தில் இருந்தபோது, மிகவும் மோசமான நிலைமையைச் சந்திக்கக் கப்பல் பயணிகள் தயாரானார்கள். அந்தக் கப்பல் கவிழ்ந்துவிட்டால் தப்பிப்பதற்கான அவர்களுடைய ஒரு உபாத்தியாக இருந்த உயிர்காக்கும் தோணி (Life Boat) இழுக்கப்பட்டு, எந்தவிநாடியிலும் மோதிச் சுக்குநூறாகிப்போகக்கூடிய நிலையில் இருந்தது. எனவே அந்தத் தோணியை உயர்த்திக் கப்பலின் மேல்தளத்திற்குக் கொண்டுவருவதுதான் அவர்களுடைய முதல் வேலையாக இருந்தது. அந்தக் கப்பல் புயலின் சீற்றத்தைத் தாங்கிநிற்பதற்காக அந்தக் கப்பலைப் பலப்படுத்தும் முன்னெச்சரிக்கையாக முடிந்த அளவு ஆயத்தங்கள் அனைத்தும் செய்யப்பட்டன. அந்தத் தீவில் அவர்களுக்குக் கிடைத்திருந்த மிகக் குறைவான பாதுகாப்பினால் அதிக நேரம் தங்கமுடியாமல் புயலின் முழுத்தாக்குதலுக்கும் மறுபடியும் விடப்பட்டனர். (7)

இரவு முழுவதும் புயல் சீறியது. முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்துங்கூட, அந்தக் கப்பல் ஒழுகினது. மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள். (அப்போஸ்தலர் 27:18). மறுபடியும் இரவு வந்தது. ஆனாலும் அந்தக் காற்று தணியவில்லை. புயலால் தாக்கப்பட்ட அந்தக் கப்பல், அதன் ஒடிந்த கொடிக்கம்பத்துடனும் கிழிந்துபோன பாய்மரங்களுடனும் புயலின் சீற்றத்தினால் அங்குமிங்கும் சூழன்றாடியது. அந்தக் கப்பலின் தகர்ந்த உத்திரங்கள் எந்த வினாடியிலும் உடைந்துவிடப்போவதுபோல் காணப்பட்டது. ஒழுகுதல் விரைவாக அதிகரிக்கவே, பயணிகளும் கப்பல் பணியாளர்களும் நீரை வெளியேற்றத் தொடர்ந்து வேலைசெய்தனர். கப்பலில் இருந்த ஒருவருக்கும் விநாடிநேரம்கூட ஓய்வு இருக்கவில்லை. "மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்" (அப்போஸ்தலர் 27:19) என்று லூக்கா எழுதினான். (8)

சூரியனும் விண்மீன்களும் இல்லாத வானத்தின்கீழ் அவர்கள் பதினான்கு நாட்கள் மிதந்துசென்றிருந்தனர். அப்போஸ்தலன் சரீரப்பிரகாரமாக சுகவீனமானவனாக இருந்திருந்தபோதிலும் மிகவும் இருண்ட நேரத்திலும் நம்பிக்கையின் வார்த்தைகளையும் ஒவ்வொரு அவசரத்திலும் ஒரு உதவும் கரத்தையும் உடையவனாக இருந்தான். முடிவில்லாத வல்லமையின் கரத்தை அவன் விசுவாசத்தினால் பற்றிக்கொண்டான். அவனுடைய இருதயம் தேவன்மேல் தங்கியிருந்தது. அவன் தன்னைக்குறித்துப் பயப்படாதவனாக இருந்தான். கிறிஸ்துவின் சத்தியத்திற்காக அவன் ரோமாபுரியில் சாட்சி கொடுப்பதற்காக தேவன் அவனைப் பாதுகாப்பா என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் பாவமிக்கவர்களாக, கீழான நிலையில் உள்ளவர்களாக, மரிப்பதற்கு ஆயத்தமற்றவர்களாக இருந்த தன்னைச் சுற்றிலுமிருந்த ஏழை ஆத்துமாக்களுக்காக அவனுடைய இருதயம் இரக்கத்தினால் ஏங்கியிருந்தது. அவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றும்படி அவன் அக்கறையுடன் தேவனிடத்தல் பரிந்து பேசினபோது, அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது என்பது அவனுக்கு அறிவிக்கப்பட்டது. (9)

புயலுக்கிடையில் இருந்த அமைதியை அனுகூலமாக எடுத்துக்கொண்டு பவுல் கப்பலின் மேல்தளத்தில் நின்று தனது குரலை உயர்த்தி: “அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப்புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது. ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். ஆயினும் நாம் ஒரு தீவிலே விழவேண்டியதாயிருக்கும்” (அப்போஸ்தலர் 27:21–26) என்றான். (10)

இந்த வார்த்தைகளுக்குப்பின் நம்பிக்கை உயிரடைந்தது. செய்யப்படவேண்டிய காரியங்கள் இன்னும் அதிகமாக இருந்தது. அழிவைத் தவிர்ப்பதற்காக அவர்களுடைய வல்லமையிலுள்ள ஒவ்வொரு முயற்சியும் செய்யப்பட்டாகவேண்டும். (11)

உயர்ந்தெழுந்த கடுமையான அலைகளினால் அசைந்தாடியிருந்த பதினான்காவது இரவில், ஏறத்தாழ நடுஇரவில், அந்தக் கப்பல் பயணிகள் அலைகளின் சத்தத்தைக்கேட்டு, "பதினாலாம் இராத்திரியானபோது, நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில், நடுஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று. உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள்; சற்றப்புறம் போனபொழுது, மறுபடியும் விழுது விட்டுப் பதினைந்து பாகமென்று கண்டார்கள். பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து, பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்போட்டு, பொழுது எப்போது விடியுமோ என்றிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 27:27–29) என்று லூக்கா எழுதினான். (12)

காலை உதயமானபோது, புயல்மிக்க கடற்கரையின் கோடு மங்கலாகக் காணப்பட்டது. ஆனால் பழக்கப்பட்ட நில அடையாளங்கள் எதுவும் காணப்படாமலிருந்தது. என்ன நிகழும் என்பது மனத்துயரை உண்டாக்குவதாக இருந்ததினால் அஞ்ஞானிகளாக இருந்த அந்தக் கப்பலாட்கள் தைரியம் முழுவதையும் இழந்து, "கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப்போக வகைதேடி, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப்போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்குகையில், பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள்" (அப்போஸ்தலர் 27:30–31) என்றான். (13)

மிக அதிகமான நெருக்கடியான நேரம் இன்னும் அவர்களுக்கு முன் இருந்தது. "பொழுது விடிகையில் எல்லாரும் போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள். ஆகையால் போஜம்பண்ணும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்; உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது" (அப்போஸ்தலர் 27:33,34) என்றான். (14)

"இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்கு முன்பாகவும் தேவனை ஸ்தோத்திரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான். அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள். கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம். திருப்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலிலே எறிந்து, கப்பலை இலகுவாக்கினார்கள்" (அப்போஸ்தலர் 27:35–38). இப்பொழுது பகலின் வெளிச்சம் முழுவதுமாக வந்திருந்தது. ஆனால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள அவர்களால் ஒன்றையும் காணமுடியவில்லை. "பொழுது விடிந்தபின்பு, இன்னபூமியென்று

அறியாதிருந்தார்கள். அப்பொழுது சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது; கூடுமானால் அதற்குள் கப்பலையோட்ட யோசனையாயிருந்து, நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டுவிட்டு, சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்றுமுகமாய் விரித்து, கரைக்கு நேராய் ஓடி, இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்டவைத்தார்கள்; முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்துபோயிற்று"– அப்போஸ்தலர் 27:39–41. (15)

கப்பல் சேதத்தைவிட அதிகப் பயங்கரமான ஒருவிதியினால் பவுலும் மற்ற கைதிகளும் இப்பொழுது அச்சுறுத்தப்பட்டனர். கரைசேர முயற்சிக்கும்போது, அவர்களுடைய கைதிகளின் பொறுப்பாளர்களாக அவர்களால் இருக்கமுடியாது என்பதை அந்த சேனைவீரர்கள் கண்டனர். ஒவ்வொரு மனிதனும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தாகவேண்டும். அப்படி இருந்தாலுங்கூட, கைதிகளில் யாராவது காணாமல் போய்விட்டால் அவர்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்களின் உயிர்கள் பறித்துக்கொள்ளப்படும். எனவே எல்லாக் கைதிகளையும் கொன்றுவிடுவதென்று சேனை வீரர்கள் முடிவுசெய்தனர். இந்தக் கொள்கையை ரோமாபுரிச் சட்டம் அனுமதித்திருந்தது. ஆனால் அந்தக் கப்பலிலிருந்த அனைவரும் பவுலுக்கு ஆழமான விதத்தில் கடமைப்பட்டிருந்ததினால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. கப்பலில் இருந்த அனைவரும் காப்பாற்றப்படுவதற்குப் பவுல் கருவியாக இருந்தான் என்பதை நூற்றுக்கு அதிபதியான யூலியு அறிந்திருந்தான். அதற்கும்மேலாக, கர்த்தர் அவனுடன் இருக்கிறார் எனபதைப்பற்றின மனநிறைவை உடையவனாக இருந்தபடியால், பவுலுக்கு உபத்திரவம் செய்ய யூலியு பயந்திருந்தான். எனவே அவன் நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும், மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும் சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க்கரையேறவும் "நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து, அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும், மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்; இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்" (அப்போஸ்தலர் 27:43,44). பெயர்கள் எண்ணப்பட்டபோது ஒருவரும் தவறியிருக்கவில்லை. (16)

உடைந்துபோன கப்பலில் இருந்தவர்கள் மிலேத்து தீவிலிருந்த பாரம்பரிய மக்களால் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். "நாங்கள்

தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம். அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டார்கள். பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்”–அப்போஸ்தலர் 28:1–6. (17)

மிலேத்து தீவில் அந்தக் கப்பல் கூட்டத்தினர் தங்கியிருந்த மூன்று மாதங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கிடைத்த வாய்ப்புகளைப் பவுலும் அவனது உடன் ஊழியக்காரர்களும் முன்னேறச் செய்தனர். குறிப்பிடத்தக்க விதத்தில் கர்த்தர் அவர்கள்மூலமாகச் செயலாற்றினார். உடைந்துபோன அந்தக் கப்பலில் இருந்தவர்களனைவரும் பவுலின் காரணமாக மிகுந்த அன்புடன் நடத்தப்பட்டிருந்தனர். அவர்களுடைய தேவைகளனைத்தும் நிறைவேற்றப்பட்டன. அவர்கள் மிலேத்துவைவிட்டுப் புறப்பட்டுச்சென்றபோது, அவர்களுடைய பயணத்திற்கு அவசியமான அனைத்தும் தாராளமாக வழங்கப்பட்டன. அவர்கள் தங்கியிருந்தபோது நடந்த முக்கியமான சம்பவங்கள் இவ்விதமாக லூக்காவினால் விவரிக்கப்பட்டுள்ளன. (18) ★

# 43

# ரோமாபுரியில் பவுல்...!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 447–460)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 28:11–31; பிலேமோன்**

அந்தக் கப்பல் அதன் பயணத்தைத் தொடங்கியதும், நூற்றுக்கு அதிபதியும் அவனுடைய கைதிகளும் ரோமாபுரியை நோக்கிய அவர்களுடைய பயணத்தைத் தொடங்கினார்கள். மிதுனம் என்னும் அடையாளமுள்ள ஒரு அலெக்சாந்தரிய கப்பல் தன் மேற்குத்திசையை நோக்கிய பயணத்தில் மழைக்காலத்தில் மிலேத்துவில் தங்கியிருந்தது. இந்தக் கப்பலில் பயணிகள் ஏற்றப்பட்டனர். எதிரான காற்றினால் அந்தக் கப்பல் சற்று தாமதித்தபோதிலும், அதன் பயணம் பாதுகாப்பாக நிறைவேறியது. அந்தக் கப்பல் இத்தாலியா கடற்கரையில் புத்தேயோலி என்னும் அழகிய துறைமுகத்தில நங்கூரம் இட்டது. (1)

இந்த இடத்தில் சில கிறிஸ்தவர்கள் இருந்தனர். நூற்றுக்கு அதிபதி அன்புடன் அளித்த சலுகையினால் அப்போஸ்தலன் அவர்களுடனே ஏழு நாட்கள் தங்கும்படி அவர்கள் பவுலிடம் மன்றாடினார்கள். ரோமர் களுக்கு எழுதின நிருபத்தைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து இத்தாலியா கிறிஸ்தவர்கள் பவுல் அப்போஸ்தலனைச் சந்திப்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அவனை ஒருகைதியாக சந்திப்போம் என்று அவர்கள் நினைத்திருக்கவில்லை. ஆனால் அவனுடைய பாடுகள், அவன்மீதிருந்த அவர்களுடைய அன்பை அதிகரிக்கச்செய்தது. புத்தேயோலியிலிருந்து ரோமாபுரி நூற்று நாற்பது மைல் தூரத்தில் இருந்தது. அந்தத் துறைமுகம் பெருநகரத்துடன் தொடர்ச்சியான தொடர்பை உடையதாக இருந்ததினால் பவுல் வருவதைப்பற்றின செய்தி ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே அவனைச் சந்திக்கவும் வரவேற்கவும் சிலர் புறப்பட்டுச்சென்றனர். (2)

துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த எட்டாவது நாளில் நூற்றுக்கு அதிபதியும் அவர்கள் கைதிகளும் ரோமாபுரியை நோக்கிப் புறப்பட்டனர். யூலியு அவனுடைய அதிகாரத்தில் என்னவெல்லாம் இருந்ததோ, அந்த அனுகூலங்கள் ஒவ்வொன்றையும் பவுலுக்குச் செய்தான். ஆனால் கைதியாக இருந்த அவனுடைய நிலைமையை மாற்றவோ அல்லது அவனுடைய காவலாளியாக இருந்தவனுடன் அவன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்ததிலிருந்து அவனை விடுதலைசெய்யவோ அவனால் முடியவில்லை. சந்திக்கவேண்டும் என்று பவுல் நீண்டநாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த ரோமாபுரிக்கு அவன் பாரமான இருதயத்துடன் போனான். அவன் எதிர்பார்த்ததிலிருந்து அந்த சூழ்நிலை எவ்விதமாக மாறுபட்டதாக இருந்தது! சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு அவன் எவ்விதமாக சங்கிலியால் கட்டப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டிருந்தான். பெயர் களங்கப்படுத்தப்பட்டவனாக இருந்தான். ரோமாபுரியில் உள்ள அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தலாம் என்ற அவனது நம்பிக்கைகள் ஏமாற்றத்திற்கு விடப்பட்டிருப்பதுபோல் காணப்பட்டது. (3)

கடைசியாக அந்தப் பயணிகள் ரோமாபுரியிலிருந்து நாற்பது மைல் தூரத்திலிருந்த அப்பியுபுரம் துறைமுகத்தைச் சென்றடைந்தனர். கடைசியில் ஜனநெருக்கமான பெருவழிச்சாலையில் அந்த நரைத்த தலையை உடைய வயதுசென்ற மனிதன் கடினமானவர்களாகக் காணப்படும் குற்றவாளிகளுடன் சேர்ந்து சங்கிலியால் கட்டப்பட்டவனாக பரிகசிக்கும் அநேகருடைய பார்வையைப்பெற்று, அநேக கொடுமைமிக்க பரிகாசங்களுக்கு ஆளாக்கப்படுகிறான். (4)

திடீரென்று ஒரு மகிழ்ச்சியின் குரல் கேட்கிறது. கடந்துசென்று கொண்டிருந்த கூட்டத்திற்கிடையிலிருந்து ஒரு மனிதன் நீண்ட நாட்களாகக் காணப்படாமலிருந்த ஒரு தகப்பனை ஒரு மகன் வரவேற்பதுபோன்ற மகிழ்ச்சிமிக்க கண்ணீருடன் அவனது கழுத்தைக் கட்டித்தழுவுகிறான். அன்புமிக்க எதிர்பார்ப்புடன் கண்கள் கூரியதாக இருப்பதுபோல் அந்தக் காட்சி மறுபடியும் மறுபடியும் செயல்படுத்தப்படுகிறது. சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும் ஒருவனில், கொரிந்துவிலும் பிலிப்பியிலும் எபேசுவிலும் தங்களுடன் ஜீவ வர்த்தைகளைப் பேசியிருந்தவனை அநேகர் அறிந்துகொள்ளுகின்றனர். (5)

அனலுள்ள இருதயமுள்ளவர்களாக இருந்த சீடர்கள் அவர்களுடைய சுவிசேஷத்தின் தகப்பனை அக்கறையுடன் சூழ்ந்துகொண்டபோது, அந்தக் கூட்டம் முழுவதும் நின்றுவிட்டது. சேனைவீரர்கள் தாமதத்தில் பொறுமை இல்லாதவர்களாக இருந்தபோதிலும், இந்த மகிழ்ச்சிமிக்க சந்திப்பிற்குத் தடங்கலை உண்டுபண்ண அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் அவர்களும்

அவர்களுடைய கைதியை மிகவும் உயர்வாக மதிக்கக் கற்றிருந்தனர். அந்தக் களைப்படைந்த, வேதனையால் பாதிக்கப்பட்ட முகத்தில் அந்த சீடர்கள் கிறிஸ்துவின் உருவம் பிரதிபலிப்பதைக் காண்கின்றனர். அவனை மறந்துவிடவோ அல்லது நேசிக்காமலோ இருக்கவில்லை என்னும் வாக்குறுதியை அவர்கள் பவுலுக்குக் கொடுக்கின்றனர். அவர்களுடைய உயிர்களை அசைக்கச்செய்யும் மகிழ்ச்சிமிக்க நம்பிக்கைக்காக, தேவனிடமுள்ள சமாதானத்திற்காக, அவர்கள் அவனுக்குக் கடனாளிகளாக இருக்கின்றனர். அவன்மீதுள்ள அன்பினால், ஆவலில், அவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுமானால், அவர்கள் அவனை அந்த நகரம் செல்லும்வரைத் தங்களுடைய தோள்களின்மீது சுமந்துசென்றிருந்திருப்பர்கள். (6)

பவுல் தனது சகோதரர்களைக் கண்டவுடன் “தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்” (அப்போஸ்தலர் 28:15) என்னும் லூக்காவின் அந்த வார்த்தைகளின் முக்கியத்துவத்தை சிலர் மட்டுமே உணருகின்றனர். அவன் கட்டப்பட்டிருப்பதைப்பற்றி வெட்கப்படாதவர்களாக இருந்து, அழுதுகொண்டும் அனுதாபப்பட்டுக்கொண்டும் இருக்கும் கூட்டத்தினரின் மத்தியில் அந்த அப்போஸ்தலன் உரத்த சத்தத்தில் கர்த்தரை ஸ்தோத்திரித்தான். அவனுடைய ஆவியின்மீது தங்கியிருந்த துயரத்தின் மேகம் தூரமாக அடித்துச்செல்லப்பட்டது. தொடர்ச்சியான பரீட்சைகள் பாடுகள் ஏமாற்றங்கள் ஆகியவைகளில் இருந்த அவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கை அந்த நேரத்தில் மிக அதிகமான விதத்தில் விரைவானதாக இருந்தது. மிக உறுதியான காலடியுடனும் சந்தோஷமிக்க இருதயத்துடனும் அவன் தனது பாதையில் தொடர்ந்தான். அவன் கடந்த காலத்தைப்பற்றிக் குறைகூறாதவனாகவும், எதிர்காலத்தைப்பற்றின பயமில்லாதவனாகவும் இருந்தான். கட்டுகளும் துன்பங்களும் அவனுக்காகக் காத்திருந்தன என்பதை அறிந்திருந்தான். ஆனால் முடிவில்லாதவிதத்தில் பயங்கரமானதாக இருக்கும் அடிமைத்தளையிலிருந்து ஆத்துமாக்களை விடுதலைசெய்வது அவனுடைய வேலையாக இருந்தது என்பதையுங்கூட அவன் அறிந்திருந்து, கிறிஸ்துவிற்காக அவனுக்குண்டான பாடுகளில் களிகூர்ந்தான். (7)

பேரரசனின் காவலாளிகளின் சேனைத்தலைவனாக இருந்தவனிடம், நூற்றுக்கு அதிபதியான யூலியு, ரோமாபுரியில் அவனுடைய கைதிகளைக் கடைசியாக ஒப்படைத்தான். பெஸ்துவின் கடிதத்துடன் சேர்ந்து அவன் பவுலைப்பற்றிக் கூறியிருந்த நல்லவைகளும், சேனாதிபதியினால் பவுல் அனுகூலமான விதத்தில் நடத்தப்படுவதற்குக் காரணமாகி, சிறைச்சாலைக்குள் வைக்கப்படுவதற்குப்பதிலாக அவன் தனது சொந்த வாடகை வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டான். இன்னுங்கூட அவன்

ஒரு இராணுவ வீரனுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தபோதிலும், தனது நண்பர்களை வரவேற்கவும் கிறிஸ்துவின் காரியத்தை முன்கொண்டுசெல்ல உழைப்பதற்கும் சுதந்திரமுடையவனாக இருந்தான். (8)

சில வருடங்களுக்கு முன்னால் ரோமாபுரியிலிருந்து துரத்தப்பட்டிருந்த யூதர்களில் அநேகர் திரும்பி வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததினால் இப்பொழுது அங்கு பெரும் எண்ணிக்கையில் யூதர்கள் காணப் பட்டிருந்தனர். பவுலுக்கு எதிராக அவனுடைய எதிரிகள் இந்த யூதர்களைக் கசப்பூட்டுவதற்குமுன் பவுல் தன்னைப்பற்றியும் தன்னுடைய பணியைப்பற்றியும் உள்ள உண்மையை முதலாவதாக அவர்கள் முன் வைக்கத் தீர்மானித்தான். எனவே, அவன் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்த மூன்று நாட்களுக்குப்பின் தலைவர்களாக இருந்த மனிதர்களை ஒன்று சேர அழைத்து, எளிமையான நேரடியான விதத்தில், தான் ஒரு கைதியாக ரோமாபுரிக்கு வந்திருப்பதை அறிவித்தான். “மூன்றுநாளைக்குப்பின்பு, பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான்; அவர்கள் கூடிவந்திருந்தபோது, அவன் அவர்களை நோக்கி: சகோதரரே, நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடைய முன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமானதொன்றையும் நான் செய்யாமலிருந்தும், கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டேன். அவர்கள் என்னை நியாயம் விசாரித்தபோது மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் என்னிடத்தில் காணாதபடியினால், என்னை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள். யூதர்கள் அதற்கு எதிர்பேசினபோது, நான் இராயனுக்கு அபயமிடவேண்டியதாயிருந்தது; ஆயினும் என் ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்டவேண்டுமென்று நான் அப்படிச் செய்யவில்லை. இந்தக் காரியத்தினிமித்தமே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன். இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான்”– அப்போஸ்தலர் 28:17–20. (9)

அவன் யூதர்களிடம் அனுபவித்த கொடுமையைப்பற்றியோ அல்லது அவனைக் கொலைசெய்யும்படி அவர்கள் திரும்பத் திரும்ப திட்டமிட்டதைப்பற்றியோ கூறவில்லை. அவனுடைய வார்த்தைகள் எச்சரிக்கையும் அன்பும் உடையவைகளாக இருந்தன. அவன் அவர்கள் தன்மீது கவனம்செலுத்தவோ அல்லது அனுதாபம் காட்டவோ வகைதேடாமல் சத்தியத்தைப் பாதுகாக்கவும் சுவிசேஷகனுடைய மேன்மையை நிலைநிறுத்தவுமே வகைதேடினான். (10)

அதற்கு மறுமொழியாக அவனது பேச்சைக் கேட்டிருந்தவர்கள் அவனை: “எங்கும் இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக

நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இதைக்குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள்" அப்போஸ்தலர் 28:22. (11)

அதனை அவர்களாகவே விரும்பினதால் சுவிசேஷத்தின் சத்தியத்தை கேட்பதற்கு அவர்கள் முன்வைத்த நாளை அவர்களே குறிக்கவேண்டுமென்று அவன் கூறினான். குறிக்கப்பட்ட அந்த நேரத்தில் அநேகர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். "அவன் காலமே தொடங்கிச் சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசினான்" (அப்போஸ்தலர் 28:23). மிகுந்த எளிமையுடனும் உண்மையுடனும் வல்லமையுடனும் அவன் அவனது அனுபவத்தையும் பழைய ஏற்பாட்டு வசனங்களில் இருந்துள்ள வாதங்களையும் அவர்கள் முன்பாக வைத்தான். (12)

மதம் என்பது சமயச் சடங்குகளிலும் மத நம்பிக்கைகளிலும் தத்துவ விளக்கங்களிலும் அடங்கியதல்ல. அது அப்படியிருந்தால் இயல்பான மனிதன் உலகப்பொருட்களை அறிந்ததுபோல அதனையும் விசாரணையில் அறிந்துகொள்ளுவான். மதம் நடைமுறையிலானது. இரட்சிக்கும் வல்லமை முற்றிலுமாக தேவனிடத்திலிருந்துண்டாகும் ஒரு கொள்கை. ஆத்துமாவைப் புதுப்பிக்கும் தேவனுடைய வல்லமையின் ஒரு அனுபவம் என்று பவுல் போதித்தான். இஸ்ரவேலர்கள் எவர்களுடைய வார்த்தைகளைக் கேட்கவேண்டியதாக இருந்ததோ, அந்தக் கிறஸ்துவை ஒரு தீர்க்கதரிசியாக எப்படி மோசே சுட்டிக்காட்டியிருந்தான் என்பதை அவன் காட்டினான். பாவத்திற்கான பெரும் பரிகாரமாக இருக்கும் அவரைப்பற்றி, குற்றமுள்ளவனுடைய பாவங்களைச் சுமக்கும் குற்றமில்லாதவராக, தீர்க்கதரிசிகள் அனைவரும் எவ்விதமாகச் சாட்சிகொடுத்திருந்தனர் என்று காட்டினான். அவர்களுடைய சமயச் சடங்காச்சாரங்களின் வடிவின்மீது தவறு கண்டுபிடிக்காமல், சமயச் சடங்குகளை அவர்கள் மிகச் சரியாகச் செய்திருந்த அதே நேரத்தில், இந்தச் சம்பிரதாயங்களின் நிஜமாக இருந்தவரை அவர்கள் நிராகரித்துக்கொண்டிருந்தனர் என்பதை அவன் விளக்கினான். (13)

பவுல் அவனுடைய மாற்றமடையாத நிலையில் கிறிஸ்துவை அறிந்திருந்தான் என்று அறிவித்தான். ஆனால் அது ஒரு நேரடியான அறிமுகமாக இராமல், வரவிருக்கும் மேசியாவின் சுபாவம், ஊழியங்கள் ஆகியவைகளைப்பற்றி மற்றவர்கள் கொண்டிருந்த கருத்துடன்

இணைந்திருந்தது என்று அறிவித்தான். இந்தக் கருத்துக்களை அவர் நிறைவேற்றாததினால் நசரேயனாகிய இயேசுவை அவன் ஒரு வேஷதாரி என்று நிராகரித்திருந்தான்; ஆனால் இப்பொழுது கிறிஸ்துவைப்பற்றியும் அவரது ஊழியங்களைப்பற்றியும் உள்ள பவுலின் பார்வைகள் மிக அதிகமான ஆவிக்குரியதாகவும் உயர்வானதாகவும் இருந்தன. ஏனெனில், அவன் மாற்றம் அடைந்திருந்தான். அப்போஸ்தலன் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அவர்கள்முன் வைக்கவில்லை என்பதை ஆதாரப்பூர்வமாக எடுத்துரைத்தான். கிறிஸ்து மனிதனாக இருந்தபோது அவரை ஏரோது பார்த்திருக்கிறான். அனனியா பார்த்திருக்கிறான். ஆசாரியர்களும் அதிபதிகளும் அவரைப் பார்த்திருக்கின்றனர். ரோம சேனைவீரர்களும் அவரைப் பார்த்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் அவரை விசுவாசக் கண்களுடன் பார்த்திருக்கவில்லை. மகிமைப்படுத்தப்பட்ட மீட்பராக அவர்கள் அவரைப் பார்த்திருக்கவில்லை. அவர் உலகத்தில் தோன்றியிருந்தபோது, அவருடன் நேரடியாக அறிமுகமுள்ளவர்களாக இருந்ததைவிட, விசுவாசத்தினால் கிறிஸ்துவை அறிவது என்பது—அவரைப்பற்றிய ஒரு ஆவிக்குரிய அறிவை அடைவது என்பது அதிகமாக வாஞ்சிக்கப்படவேண்டியதாக இருந்தது. சாதாரணமான பூமிக்குரிய மானிட உறவைவிட இப்பொழுது பவுல் அனுபவித்துக்கொண்டிருந்த கிறிஸ்துவுடனுள்ள உறவு மிகவும் அதிகமான நெருக்கமானதாகவும் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் இருந்தது. இஸ்ரவேலின் நம்பிக்கையாக இருக்கும் நசரேயனாகிய இயேசுவைப்பற்றி அவன் அறிந்திருந்தவைகளைப் பேசி அவன் எதைக் கண்டிருந்தானோ அதைப்பற்றி சாட்சிகொடுத்தபோது, சத்தியத்தை உண்மையுடன் தேடிக்கொண்டிருந்தவர்கள் மனநிறைவு அடைந்தனர். அவனுடைய வார்த்தைகள் ஒருபோதும் அழிக்கப்பட்டுப் போகாதவிதத்தில் குறைந்தபட்சம் சிலருடைய மனங்கள் உணர்த்தப்பட்டன. ஆனால் மற்றவர்கள் வேதவாக்கியங்களின் வெளிப்படையான சாட்சி, பரிசுத்த ஆவியின் சிறப்பான ஒளிப்படுத்தலினால் அவர்கள்முன் வைக்கப்பட்டபோதுங்கூட, அதனை ஏற்றுக்கொள்ள பிடிவாதமாக மறுத்தனர். அவனுடைய வாதங்களை அவர்களால் மறுக்கமுடியவில்லை; ஆனால் அதன் முடிவுகளை அவர்கள் மறுத்துவிட்டனர். (14)

சிறைக் கைதியாக இருந்தவனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு எருசலேமிலிருந்த யூதர்கள் நேரடியாகத் தோன்றுவதற்குமுன் பவுல் ரோமாபுரிக்கு வந்துசேர்ந்தபின், அநேக மாதங்கள் கடந்துசென்றிருந்தன. அவர்களுடைய திட்டங்கள் அனைத்திலும் அவர்கள் திரும்பத்திரும்ப முறியடிக்கப்பட்டிருந்தனர். இப்பொழுது ரோமநாட்டின் மிகப் பெரிய நியாயசங்கதத்திற்குமுன் விசாரிக்கப்படவேண்டியவனாக அவன் இருந்தபோது, மற்றொரு தோல்வியை சந்திக்கின்ற வாய்ப்பை

உண்டுபண்ண அவர்கள் விரும்பவில்லை. லீசியா, பேலிக்ஸ், பெஸ்து, அகிரிப்பா ஆகிய அனைவரும் அவனுடைய குற்றமற்ற தன்மையில் இருந்த அவர்களுடைய நம்பிக்கையை அறிவித்திருந்தனர். பேரரசனை அவர்களுக்குச் சாதகமாக இரகசிய சதிமூலமாக ஆதீனத்திற்குட்படுத்த வகைதேடுவதனால்மட்டுமே அவனுடைய எதிரிகள் வெற்றியின்மீது நம்பிக்கை வைக்கமுடியும். அவர்களுடைய திட்டங்களை பூரணப்படுத்தவும் செயல்படுத்தவும் காலதாமதமானது நேரம் தரும் என்பதனால், காலதாமதம் அவர்களது நோக்கத்தை முன்கொண்டுசெல்ல உதவும் என்பதனால், அப்போஸ்தலனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்குமுன் அவர்கள் சிறிதுகாலம் காத்திருந்தனர். (15)

தேவனுடைய தெய்வீக ஏற்பாட்டினால் இந்தத் தாமதம் சுவிசேஷத்தை முன்கொண்டு செல்ல உதவியது. பவுலின் பொறுப்பாளர்களாக இருந்தவர்களின் ஆதரவின்மூலமாக அவன் தனது நண்பர்களைத் தாராளமாகச் சந்திக்கவும், அவனிடம் கேட்க வந்திருந்தவர்களுக்கு சத்தியத்தை நாள்தோறும் முன்வைக்கவும், வசதியான ஒரு வீட்டில் வாழும்படி அவன் அனுமதிக்கப்பட்டான். இவ்வாறாக, அவன் "மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்"–அப்போஸ்தலர் 28:31. (16)

இந்த நேரத்தில் அநேக இடங்களில் அவன் ஏற்படுத்தியிருந்த சபைகள் மறக்கப்படவில்லை. புதிய விசுவாசத்திற்கு மாறினவர்களை அச்சுறுத்தியிருந்த அபாயங்களை உணர்ந்தவனாக அப்போஸ்தலன் எச்சரிப்பின் கடிதங்களினாலும் நடைமுறை உபதேசங்களினாலும் முடிந்தவரை அவர்களுடைய தேவைகளைச் சந்திக்க வகைதேடினான். இந்தச் சபைகளுக்காக மட்டும் ஊழியஞ்செய்யாமல், அவன் சந்திக்காமலிருந்த களங்களில் ஊழியஞ்செய்தவற்காகவும், ரோமாபுரியிலிருந்து அர்ப்பணம் செய்திருந்த ஊழியக்காரர்களை அனுப்பியிருந்தான். ஞானமிக்க மேய்ப்பர்களைப்போன்றிருந்த இந்த ஊழியக்காரர்கள், நல்லவிதமாகப் பவுலினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த பணியை பலப்படுத்தினார்கள். அவர்களுடனுள்ள தொடர்ச்சியான தொடர்பினால் சபைகளின் நிலைமைகள் அபாயங்கள் ஆகியவை அப்போஸ்தலனுக்குத் தெரிவிக்கப்படவே, அது எல்லாக் காரியங்களுக்கும் மேலாக ஒரு மேற்பார்வை செய்யப்படுவதற்குத் தகுதிப்படுத்தப்பட்டது. (17)

இவ்வாறாக தீவிரமான ஊழியத்திலிருந்து பவுல் விடுவிக்கப் பட்டிருந்தபோதிலும், முந்தின வருடங்களில் இருந்ததைப்போல சபைகளைச்

சந்திப்பதற்கு வெளித்தோற்றத்தில் சுதந்திரமில்லாதவனாக இருந்தபோதிலும், அவன் மிகவும் விசாலமானதும் நீண்ட காலத்திற்கு நிலைக்கக்கூடியதுமான செல்வாக்கைச் செலவிட்டிருந்தான். கர்த்தருடைய கைதியாக அவன் தனது சகோதரர்களின்மீது உறுதியான பற்றை உடையவனாக இருந்தான். கிறிஸ்துவிற்காகக் கைதியாக இருந்த அவனது வார்த்தைகளடங்கிய கடிதம், அவர்களுடன் நேரடியாக இருந்தபோது இருந்ததைவிட அதிகமான கவனத்தையும் மரியாதையையும் பெற்றதாக இருந்தது. அவர்கள் சார்பாக அவன் தாங்கியிருந்த சுமைகள் எவ்வளவு பாரமானதாக இருந்தது என்பதை அவர்களுக்கிடையிலிருந்து பவுல் நீக்கப்படும்வரை விசுவாசிகள் உணராதவர்களாக இருந்தனர். இதுவரை அவர்கள் அவருடைய ஞானம் உபாயம் வெல்லமுடியாத பலம் ஆகியவைகள் இல்லாதவர்களாக இருந்ததினால், பொறுப்பை ஏற்பதற்கும் பாரங்களைச் சுமப்பதற்கும் பெரிய அளவில் சாக்குப்போக்கு சொல்லிவந்தனர். ஆனால் அவர்களுடைய அனுபவமின்மையுடன் பாடங்களைக் கற்றுக்கொள்ள மறுத்திருந்தவர்கள், இப்பொழுது அவனுடைய எச்சரிப்புகள் ஆலோசனைகள் உபதேசங்கள் ஆகியவைகளை மதித்தனர். நீண்ட நாட்களான அவனது சிறையிருப்பில் அவனிடமிருந்த தைரியத்தையும் விசுவாசத்தையும் அவர்கள் அறிந்தபோது, கிறிஸ்துவின் காரியத்தில் பெரும் நேர்மையும் மெய்ப்பற்றும் பேரார்வமும் உடையவர்களாகும்படி உற்சாகப்படுத்தப்பட்டனர். (18)

அவனுடைய முந்தையக் கூட்டாளிகளுக்கு உடன் ஊழியக்காரராக இருந்தவர்களில் பலர், ரோமாபுரியில் பவுலுக்கு உதவியாளர்களாக இருந்தவர்களுக்கிடையில் இருந்தனர். எருசலேமிலுள்ள அவனது பயணத்தின்போதும், செசரியாவில் இருண்டு வருடச் சிறையிருப்பின்போதும், அபாயமிக்க அவனது ரோமாபுரியை நோக்கிய பயணத்தின்போதும், அவனைக் கவனித்திருந்தவனாக பிரியமுள்ள வைத்தியனான லூக்கா இன்னும் அவனுடன் இருந்தான். அவனுடைய சௌகரியத்திற்காக தீமோத்தேயுவும்கூட ஊழியஞ்செய்திருந்தான். பிரியமான சகோதரனும் உண்மையுள்ள ஊழியக்காரனும் கர்த்தருக்குள் உடன் வேலையாளுமாயிருந்த தீகிக்குவுங்கூட அவனுக்கு ஊழியஞ்செய்திருந்தான். (கொலோசெயர் 4:7). தேமாவும் மாற்குவும் அவனுடன் இருந்தனர். அரிஸ்தர்க்குவும் எப்பாப்பிராவும் அவனது உடன் ஊழியர்களாக இருந்தனர். (19)

மாற்குவின் ஆரம்ப வருடங்களில் இருந்த அவனுடைய விசுவாச அறிக்கையைவிட இப்போது அவனுடைய கிறிஸ்தவ அனுபவம் ஆழமாயிருந்தது. கிறிஸ்துவின் வாழ்க்கை மரணம் ஆகியவைபற்றி அவன் அதிக ஆழமாக ஆராய்ந்ததினால், இரட்சகரின் ஊழியத்தைப்பற்றியும்

அவருடைய உழைப்புகள் போராட்டங்கள்பற்றியும் தெளிவான பார்வைகளை பெற்றிருந்தான். மானுடத்திற்கான சேவையில் கிறிஸ்துவின் கைகளிலும் பாதங்களிலும் உண்டான தழும்புகளின் அடையாளங்களும், தொலைந்து அழிந்துகொண்டிருப்பவர்களை இரட்சிப்பதற்காக நடத்தும் அவரது சுயதியாகத்தையும் வாசித்தறிந்து, மறுப்பின் பாதையில் தனது ஆண்டவரைப் பின்தொடர்ந்துசெல்ல விருப்பமுள்ளவனானான். இப்பொழுது கைதியாக இருக்கும் பவுலின் பாடுகளில் பங்குள்ளவனாகி, கிறிஸ்துவை ஜெயமாக அடைதல் முடிவில்லாத ஆதாயம் என்பதையும், உலகத்தை ஆதாயப்படுத்துவதற்காக யாரை மீட்பதற்காகக் கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டிருந்ததோ, அந்த ஆத்துமாவை இழப்பது முடிவில்லாத நஷ்டம் என்பதையும் அவன் நன்றாகப் புரிந்துகொண்டான். கடினமான பரீட்சை ஆபத்து ஆகியவைகளுக்குமுன்னால் அப்போஸ்தலனுக்கு ஞானமும் அன்புமிக்க உதவியாளனாக உறுதியுடன் மாற்கு தொடர்ந்தான். (20)

சிறிது காலத்திற்குக் கிறிஸ்துவின் காரியத்தில் உறுதியானவனாக இருந்த தேமா, பின்னர் கிறிஸ்துவின் காரியத்திலிருந்து விலகிவிட்டான். இதைக்குறித்துப் பவுல்: “தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்” (2 தீமோத்தேயு 4:10) என்று எழுதினான். உலகப்பிரகாரமான ஆதாயத்திற்காக தேமா உன்னதமும் மேன்மையுமான காரியங்கள் ஒவ்வொன்றையும் பொருள்மாற்றம் செய்தான். இந்தப் பொருள்மாற்றம் எவ்வளவு குற்றப்பார்வையை உடையதாக இருந்தது! உலகப்பிரகாரமான செல்வத்தையும் கனத்தையும் உடையவனாக இருந்த தேமா, உண்மையில் தரித்திரனாக இருந்தான். அதே நேரத்தில் கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவிப்பதைத் தெரிந்துகொண்ட மாற்கு, பரலோகத்தில் நித்திய ஐசுவரியத்தைப் பெறும்படி தேவனுடைய ஒரு வாரிசாகவும் தேவகுமாரனுடன் சுதந்திரவாளியுமாகக் கணக்கிடப்பட்டான். (21)

ரோமாபுரியில் பவுல் செய்த ஊழியத்தினால் தங்களுடைய இருதயங்களை தேவனுக்குக் கொடுத்திருந்தவர்களுக்கு மத்தியில் ஒநேசிமு என்னும் ஒரு அஞ்ஞான அடிமை இருந்தான். இவன் அவனுடைய எஜமானாக இருந்த பிலேமோனுக்கு எதிராகத் தவறு செய்திருந்தான். பிலேமோன் கொலோசே பட்டணத்தில் ஒரு கிறிஸ்தவனாக இருந்தான். ஒநேசிமு பிலமோனிடத்திலிருந்து தப்பி, ரோமாபுரிக்கு வந்துவிட்டான். பவுல் தனது இருதயத்தில் இருந்த அன்பினால் நாடோடியாகிவிட்ட துர்ப்பாக்கியமான

ஒநேசிமுவின் வறுமையையும் துன்பத்தையும் நீக்க வகைதேடி, அதற்குப்பின் இருளடைந்திருந்த அவனுடைய மனதுக்குள் சத்தியத்தின் ஒளியை வீசச்செய்ய முயன்றான். ஒநேசிமு ஜீவ வார்த்தைகளைக் கவனித்து, தனது பாவங்களை அறிக்கைசெய்து, கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்திற்கு மாறினான். பவுலின் சௌகரியங்களைக் கவனிப்பதிலும், சுவிசேஷப்பணியை முன்கொண்டு செல்லுகின்ற அவனுடைய பேரார்வத்திலும் ஒநேசிமு மென்மைமிக்க கரிசனை உள்ளவனாக இருந்து, அவனுடைய பக்தியினாலும் உண்மையினாலும் தன்னைப் பவுலுக்குப் பிரியமானவனாக்கிக்கொண்டான். மிஷனரிப்பணியில் ஒநேசிமு ஒரு பயனுள்ள உதவியாளனாக இருப்பான் என்பதை அவனது சுபாாவத்தின் தன்மையில் பவுல் கண்டு, தாமதமில்லாமல் அவன் பிலேமோனிடத்திற்குத் திரும்பிச்செல்லவும், அவனிடத்தில் மன்னிப்புக்கேட்டு, அதன்பின் அவனுடைய எதிர்காலத்தைப்பற்றித் திட்டமிடவும்வேண்டுமென்று ஆலோசனை கூறினான். பிலேமோனிடத்திலிருந்து ஒநேசிமு கொள்ளையடித்துச் சென்ற பணத்திற்குத் தான் பொறுப்பேற்பதாக அப்போஸ்தலன் வாக்குத்தத்தம் செய்தான். ஆசியாவிலிருந்த பல சபைகளுக்கான கடிதங்களுடன் பவுல் தீகிக்குவை அனுப்பினபோது, அவனுடன் ஒநேசிமுவையும் அனுப்பிவைத்தான். எந்த எஜமானனிடம் ஒநேசிமு தவறு செய்திருந்தானோ, அந்த எஜமானனிடம் ஒநேசிமுவை ஒப்படைப்பது அவனுக்கு ஒரு கடுமையான சோதனையாக இருந்தது. ஆனால் அவன் உண்மையாகவே மாற்றமடைந்திருந்ததினால் தன் கடமையிலிருந்து திரும்பவில்லை. (22)

பிலேமோனுக்கான ஒரு கடிதத்தைக் கொண்டுசெல்லுபவனாகப் பவுல் ஒநேசிமுவை ஏற்படுத்தினான். அந்தக் கடிதத்தில் அவனுடைய வழக்கப்படியுள்ள நடையுடனும் அன்புடனும் ஒநேசிமு மனந்திரும்பினதன் காரணத்தை அவனிடம் விவரித்து, அவனை எதிர்காலத்தில் அவனுடைய வேலைக்காரனாக வைத்துக்கொள்ளும்படி பரிந்துரை செய்திருந்தான். அந்தக் கடிதம் பிலேமோனை ஒரு நண்பனாகவும் உடன் வேலைக்காரனாகவும் உள்ள அன்புமிக்க வாழ்த்துதலுடன் ஆரம்பித்திருந்தது, (23)

“நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கர்த்தராகிய இயேசுவினிடத்திலும், எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும் உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு, என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செய்து, உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம்

கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன்”– பிலேமோன் 3–6. (24)

ஒநேசிமுவிடமிருந்த ஒவ்வொரு நோக்கமும், சுபாவத்தின் தன்மையும், கிறிஸ்துவின் கிருபையினாலானதாக இருந்தது என்பதை அப்போஸ்தலன் பிலேமோனுக்கு நினைவூட்டினான். மேலும் அதுமட்டுமே அவனை மாறுபட்ட தன்மையிலிருந்து—பாவமான தன்மையிலிருந்து வித்தியாசமுள்ளவனாக்கியிருந்தது. அதே கிருபையால் ஒரு கீழ்த்தரமான குற்றவாளியை தேவனுடைய ஒரு பிள்ளையாகவும் சுவிசேஷ ஊழியத்தில் ஒரு பயனுள்ள வேலைக்காரனாகவும் மாற்றமுடியும். (25)

ஒரு கிறிஸ்தவனாக பிலேமோனின் கடமையைப்பற்றி பவுலினால் வற்புறுத்திக் கூறியிருந்திருக்கமுடியும். ஆனால் அதைவிடக் கெஞ்சும் ஒரு மொழியை அவன் தெரிந்துகொண்டான். ஆகையால் “பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனாகவும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால், ... அன்பினிமித்தம் மன்றாடுகிறேன். என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன். முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்” (பிலேமோன் 15) என்று எழுதினான். (26)

பவுல் ஒநேசிமுவின் மாற்றத்தை கருத்தில்கொண்டு, மனந்திரும்பிய அடிமையை, அவன் தன்னுடைய முந்தைய எஜமானனோடு வசிக்க விரும்புவதற்கேதுவாக, அதிக அன்பு காண்பித்து தன்னுடைய சொந்தக் குமாரனாக ஏற்றுக்கொள்ளும்படி பிலேமோனை கேட்டுக்கொண்டான். “அடிமையானவனாகவல்ல, அடிமையானவனுக்கு மேலானவனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவும்.” பிலேமோன் பவுலுக்கு எவ்விதமாக ஊழியஞ்செய்திருந்திருப்பானோ அதேவிதமாகப் அவனுக்கு ஊழியஞ் செய்திருந்த ஒநேசிமுவை, தன்னுடைய கட்டுகளில் தனக்கு உதவியாளனாக—(பிலேமோன் தானாகவே அவனை—அந்த அடிமையை விடுதலை பண்ணாதபட்சத்தில் அதை விரும்பாதபோதும்,) வைத்துக்கொள்ளும் தன்னுடைய வாஞ்சையை தெரிவித்தான். (27)

எஜமானர்கள் தங்களுடைய அடிமைகளிடம் எவ்வளவு கடுமையாக நடந்திருந்தனர் என்பதை அப்போஸ்தலன் நன்கு அறிந்திருந்தான். ஒநேசிமுவின் நடத்தையினால் பிலேமோன் பெருமளவிற்குக் கோபமடைந்திருக்கிறான் என்பதையும் பவுல் அறிந்திருந்தான். ஒரு கிறிஸ்தவனாக உள்ள அவனில் உள்ள மிக ஆழமான மென்மையான உணர்வுகளை எழுப்பிவிடக்கூடிய

விதத்தில், அவனுக்கு எழுதப் பவுல் முயன்றான். ஒநேசிமுவின் மாற்றம் அவனை ஒரு விசுவாசச் சகோதரனாக்கியிருந்தது. புதிதாக மாற்றமடைந்திருக்கும் இவன்மீது உண்டாகக்கூடிய தண்டனை, பவுலின்மீது உண்டானதாகப் பவுல் கருதுவான். (28)

தண்டனை என்னும் அவமானத்திலிருந்து குற்றவாளியைக் காக்கவும் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த சலுகைகளை அவன் மறுபடியும் அனுபவிக்கவும், ஒநேசிமுவின் கடனைப் பவுல் வலியவந்து தன்மீது ஏற்றுக்கொண்டான். “ஆதலால், நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால், என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும். அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும். பவுலாகிய நான் இதை என் சொந்தக்கையாலே எழுதினேன், நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன். நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென்று நான் உமக்குச் சொல்லவேண்டியதில்லையே” (பிலேமோன் 17–19) என்று அவன் பிலேமோனுக்கு எழுதினான். (29)

மனந்திரும்புகின்ற பாவியின்மீதுள்ள கிறிஸ்துவின் அன்பை சித்தரித்துக் காட்டுவதற்கு இது எவ்வளவு பொருத்தமானதாக இருக்கிறது! தன் எஜமானனை மோசடி செய்த வேலைக்காரனிடம் திருப்பிக்கொடுப்பதற்காக ஒன்றுமே இல்லை. வருடக்கணக்கான சேவையினால் தேவனைக் கொள்ளையடித்த வேலைக்காரனிடம் அவனுடைய கடனை இல்லாமல் செய்வதற்கு எவ்விதமாக உபாத்தியும் இருப்பதில்லை. நான் அந்தக் கடனைச் செலுத்துவேன் என்று கூறிக்கொண்டு பாவிக்கும் தேவனுக்கும் இடையில் இயேசு குறுகிடுகிறார். பாவி காக்கப்படுவானாக; அவனுக்குப்பதிலாக நான் பாடுகளை அனுபவிப்பேன் என்று இயேசு கூறினார்! (30)

ஒநேசிமு பட்ட கடனை பவுல் ஏற்றுக்கொண்டபின் பிலேமோன் எந்த அளவிற்கு அப்போஸ்தலனுக்குக் கடனாளியாக இருக்கிறான் என்பதை அவனுக்கு நினைப்பூட்டினான். பிலேமோனின் மாற்றத்திற்குப் பவுல் ஒரு கருவியாக இருக்கும்படி தேவன் செய்திருந்ததினால் அவன் தான் முழுவதுமாகக் கடனாளியாயிருக்கிறான். அதற்குப்பின் மென்மைமிக்க அக்கறையுள்ள வேண்டுகோளினால் அவன் தனது தாராளத்தன்மையினால் பரிசுத்தவான்களை இளைப்பாறச் செய்திருந்ததுபோல அவனும் மகிழ்ச்சிதரக்கூடிய இந்தக் காரியத்தை அனுமதிப்பதன்மூலமாக அப்போஸ்தலனுடைய ஆவிக்கு இளைப்பாறுதல் தரவேண்டும் என்றும் கெஞ்சிக் கேட்டான். “நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீரென்று அறிந்து, இதற்கு நீர்

இணங்குவீரென்று நிச்சயித்து, உமக்கு எழுதியிருக்கிறேன்” (பிலேமோன் 21) என்று எழுதியிருந்தான். (31)

எஜமானன் வேலைக்காரர்கள் ஆகியவர்களுக்கிடையில் உள்ள உறவில் சுவிசேஷத்தின் செல்வாக்கை பிலேமோனுக்குப் பவுல் எழுதின கடிதம் காட்டுகிறது. ரோமப் பேரரசு எங்கிலும் அடிமைகளை வைத்திருத்தல் என்பது ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடாக இருந்தது. பவுல் எவர்களுக்காக ஊழியஞ்செய்திருந்தானோ அந்த எஜமானர்கள் அடிமைகள் ஆகிய இரு கூட்டத்தினரும் ஏறத்தாழ எல்லா சபைகளிலும் காணப்பட்டிருந்தனர். எந்த நகரங்களில் சுயாதீனர்களைவிட அடிமைகள் அதிகமான எண்ணிக்கையில் இருந்தார்களோ, அங்கெல்லாம் அடிமைகளைக் கீழடக்கி வைப்பதற்காகக் கடுமையான சட்டங்கள் அவசியம் என்று கருதப்பட்டிருந்தது. செல்வந்தனாக இருந்த ஒரு ரோமன், அடிக்கடி ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு ஜாதியிலும் ஒவ்வொரு வேலையிலும் உள்ள நூற்றுக்கணக்கான அடிமைகளை உடையவனாக இருந்தான். உதவியற்றவர்களான இவர்களின் சரீரங்கள் ஆத்துமாக்கள் ஆகியவைகளின்மீது முழுக்கட்டுப்பாட்டையும் உடையவனாக அவன் இருந்து, அவன் விரும்புகிற எந்தவிதமான தண்டனையையும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடியவனாக இருந்தான். அந்த உரிமையாளனுக்கு எதிராக எவனாவது ஒரு அடிமை தனது கருத்தை உயர்த்தத் துணிந்தால், எதிர்த்த அவனது குடும்பத்தினர் யாவரும் மனிதத்தன்மையற்ற விதத்தில் பலியிடப்படுவார்கள். தற்செயலாகவோ அல்லது கவனக்குறைவினாலோ செய்யப்பட்டிருந்த மிக அற்பமான தவறுக்கும் கூட, அடிக்கடி இரக்கமற்ற விதத்தில் தண்டனை கொடுக்கப்பட்டிருந்தது. (32)

மற்றவர்கள்மீது அதிகமான மன உருக்கமுடையவர்களாக இருந்த சில எஜமானர்கள் சகிப்புத்தன்மை உடையவர்களாக இருந்தபோது, செல்வந்தர்களும் மேன்மக்களுமாக இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்த அடிமைகளுக்கெதிராக இருந்து, கட்டுப்பாடற்றவிதத்தில் இச்சைகளையும் வெறிகளையும் உடையவர்களாகி, இந்த அடிமைகளைத் துர்ப்பாக்கியமானவர்களாக்கியிருந்தனர். அந்த அமைப்பின் தன்மை முழுவதும் நம்பிக்கையற்ற விதத்தில் கீழ்த்தரமானதாக இருந்தது. ஏற்படுத்தப்பட்டிருந்த சமுதாயக் கிரமங்களை ஒருதலைப்பட்சமாக சுயசித்தத்தின்படி திடீரென்று கவிழ்ப்பது அப்போஸ்தலனின் வேலையாக இருக்கவில்லை. இவ்விதமாக முயற்சிசெய்வது, சுவிசேஷத்தின் வெற்றியைத் தடுப்பதாக இருக்கும். ஆனால் அடிமைத்தனத்தின் வேரையே வெட்டுகின்ற கொள்கைகளை அவன் போதித்து, அதை நடைமுறைப்படுத்தினால் அந்த அமைப்பு முழுவதையும் தகர்க்க கூடியதாக அது அமையும். “கர்த்தருடைய

ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு” (2 கொரிந்தியர் 3:17) என்று அவன் அறிவித்தான். அடிமை மாற்றமடைந்தபோது, கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அங்கமாகிறான். அப்படியாவதினால், ஒரு சகோதரனாக நேசிக்கப்படவும் நடத்தப்படவும் தனது ஆண்டவனுடன் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கும் சுவிசேஷத்தின் சலுகைகளுக்கும் ஒரு உடன் சுதந்திரவாளியாகிறான். அப்படியில்லாமல், மற்றொரு பக்கத்தில் வேலைக்காரர்கள் அவர்களுடைய வேலைகளைச் செய்யவேண்டியவர்களாக இருந்தனர். “மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்” (எபேசியர் 6:6) என்று அறிவுரை கூறியிருந்தான். (33)

எஜமானனுக்கும் அடிமைக்கும் இடையில் அரசனுக்கும் குடிகளுக்கும் இடையில் பாவத்திலிருந்துள்ள சுத்திகரிப்பைக் கிறிஸ்துவில் கண்டுள்ள கீழ்த்தரமாகிவிட்ட பாவிக்கும் சுவிசேஷ ஊழியக்காரனுக்கும் இடையில் கிறிஸ்தவ மார்க்கம் ஒரு பலமிக்க ஒற்றுமையின் பிணைப்பை உண்டுபண்ணுகிறது. அவர்களும் அதே இரத்தத்தினால் கழுவப்பட்டு, அதே ஆவியினால் எழுப்பப்பட்டு, கிறிஸ்துவிற்குள் ஒருவராக்கப்பட்டுள்ளனர். (34) ★

# 44

# இராயனின் வேலைக்காரர்கள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 461–468)**
**திருவசன ஆதாரம் : பிலிப்பியர் 1:14; 4:22**

சுவிசேஷம் எப்பொழுதும் கீழ்வகுப்பு மக்களுக்கு மத்தியில் பெரும் வெற்றியை அடைந்திருக்கிறது. “மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை” (1 கொரிந்தியர் 1:26). ஏழையும் நண்பர்களும் இல்லாத ஒரு கைதியாக இருந்த பவுல், செல்வந்தர்களிடமிருந்தும், பட்டம் பதவிகளில் உள்ளவர்களிடமிருந்தும், அவர்களுடைய கவனத்தைக் கவர திறமை உள்ளவனாக இருப்பான் என்பது எதிர்பார்க்கமுடியாததாக இருந்தது. தீயப் பழக்கங்கள் அவைகளின் கவர்ச்சியைத் திளங்கும்வண்ணம் ரோமாபுரி மக்களின் முன்வைத்து, அவர்களை அடிமைகளாக்கியிருந்தன. ஆனால் அவர்களது ஒடுக்குதலுக்கு ஆளாகியிருந்து உழைப்பினால் உருக்குலைந்துபோனவர்களுக்கும், பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த ஏழை அடிமைகளுக்கும் மத்தியிலுங்கூட அநேகர் பவுலின் வார்த்தைகளை மகிழ்ச்சியுடன் கவனித்து, அவர்களுடைய பங்காக இருந்த கடினமான நிலைமைகளிலும் அவர்களை உற்சாகப்படுத்தியிருந்த கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தில் ஒரு நம்பிக்கையையும் சமாதானத்தையும் கண்டனர். (1)

தாழ்மையும்எளிமையுமானவர்களுக்கு மத்தியில் அப்போஸ்தலனுடைய பணி ஆரம்பித்திருந்தபோதிலும், பேரரசனின் அரண்மனையைச் சென்று சேரும் வரைக்கும் அதன் செல்வாக்கு விரிவடைந்திருந்தது. (2)

இந்த நேரத்தில் ரோமாபுரி உலகத்தின் மாபெரும் நகரமாக இருந்தது, அகந்தைமிக்க இராயர்கள் ஏறத்தாழ பூமியிலிருந்த எல்லா நாடுகளுக்கும் சட்டங்களையிட்டுக்கொண்டிருந்தனர். அரசனும் அரசவை உறுப்பினர்களும் தாழ்மையான நசரேயனைப்பற்றிய அறிவில்லாதவர்களாகவோ அல்லது

அவரை வெறுப்புடனும் அலட்சியத்துடனும் கருதுபவர்களாகவோ இருந்தனர். இருந்தபோதிலும், இரண்டு வருடங்களுக்குக் கைதியாக இருந்த மனிதனின் தாழ்மையான வீட்டிலிருந்து அரசனின் மண்டபங்களுக்குச் சுவிசேஷம் சென்றிருந்தது. தீமைசெய்யும் ஒருவன் என்று பவுல் கட்டப்பட்டிருந்தான். ஆனால் தேவனுடைய வார்த்தைகளோ கட்டப்பட்டிருக்கவில்லை! (3)

முந்தின வருடங்களில் அப்போஸ்தலன் வெற்றிகரமான வல்லமையுடன் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தைப் பொது இடங்களில் அறிவித்திருந்தான். அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் அதன் தெய்வீக சுபாவத்திற்குத் தவறாத சான்று கொடுத்திருந்தான். கிரேக்க நாட்டு ஞானிகளின்முன் அவன் மேன்மைமிக்க உறுதியுடன் உயர்ந்திருந்தபோது, பெருமைமிக்க தத்துவங்களின் வாதங்களை அவனுடைய அறிவினாலும் வாக்குவன்மையினாலும் மௌனமடையச்செய்திருந்தான். அரசர்களுக்கும் ஆளுநர்களுக்கும்முன் அவன் அசையாத தைரியத்துடன் நின்று, நீதி இச்சையடக்கம் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு ஆகியவைகளைப்பற்றி விவரித்து, அந்த அகந்தைமிக்க அதிபதிகள் தேவனுடைய நாளின் பயங்கரத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதுபோல் நடுங்கும்வரை நியாயவாதம் செய்திருந்தான். (4)

இப்பொழுது அப்போஸ்தலனுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் அனுமதிக்கப்படவில்லை. அவன் தன்னுடைய வாழுமிடத்தில் மட்டும் தங்கியிருந்து, அவனை அங்கு தேடிவந்திருந்தவர்களுக்குமட்டும் சத்தியத்தை அறிவித்திருந்தான். தீயபழக்கமிக்க அரசனின் முன்பாகச் சென்று அவனுடைய கொடூரம் ஒடுக்குதல் ஆகியவைகளை "இருக்கிறேன்" என்னும் பெரிய நாமத்தை உடையவர் பெயரால் கடிந்துகொள்ளும்படி மோசேயும் ஆரோனும் ஒரு தெய்வீகக் கட்டளையை உடையவர்களாக இருந்ததுபோல அவன் இருக்கவில்லை. இருந்தபோதிலும், இந்த பொது ஊழியத்திலிருந்த அதன் தலைமைப் பரிந்துபேசுபவன், வெளிப்படையான விதத்தில் விலக்கப்பட்டிருந்தபோதும், சுவிசேஷம் பெரும் வெற்றியடைந்தது. ஏனெனில், அரசனின் வீட்டிலிருந்தும் சபைக்கு அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டனர். (5)

ரோமாபுரியின் மன்றத்தைவிட வேறு எங்கும் கிறிஸ்தவ மதத்திற்குப் பொருத்தமில்லாத ஒரு சுற்றுச்சூழல் உண்டாயிருக்கவில்லை. சாத்தானின் முத்திரையை அணிந்துகொள்ளுவதற்காக தெய்வீக அடையாளத்தையும் மனித அடையாளத்தையுங்கூட நீரோ மன்னன் அவனுடைய ஆத்துமாவிலிருந்து துடைத்து நீக்கியிருந்ததுபோல காணப்பட்டான். அவனது பணியாட்களும் அரசவை உறுப்பினர்களும் பொதுவாக அவனுடைய சுபாவத்தைப்போலவே

பயங்கரமான—கீழ்த்தரமான—அழிவுக்குரிய சுபாவத்தை உடையவர்களாக இருந்தனர். நீரோவின் நீதிமன்றத்திலும் அரண்மனையிலும் கிறிஸ்தவம் ஒரு காலைஊன்றுவதுகூட முடியாததுபோல எல்லாத் தோற்றத்திலும் காணப்பட்டிருந்தது. (6)

இருந்தபோதிலும், இந்தக் காரியத்தில் பவுலின் உரிமை பாராட்டுதல், அவனுடைய போர்க்கருவிகள், "அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருந்தது" (2 கொரிந்தியர் 10:4). உண்மை மெய்ப்பிக்கப்பட்டது. நீரோவின் வீட்டாரிலுங்கூட சிலுவையின் வெற்றிக்கோப்பைகள் வெற்றிகொள்ளப்பட்டிருந்தன. தீயநடத்தையுள்ள தீய அரசனின் தீய பணியாட்களிலிருந்து தேவனுடைய குமாரர்களாக ஆகும்படி பணியாட்கள் மாற்றஞ்செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் இரகசியமான கிறிஸ்தவர்களாக இல்லாமல், வெளிப்படையான கிறிஸ்தவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தைப்பற்றி வெட்கப்படவில்லை. (7)

கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் நுழையும் அனுமதிகூட மறுக்கப்பட்டிருந்த இடத்தில், ஒரு பிரவேசமும் காலூன்றுதலும் எந்த உபாத்தியினால் அடைந்துகொள்ளப்பட்டது? நீரோவின் வீட்டாரிலிருந்து விசுவாசத்திற்கு மாறினவர்களை வெற்றியாக அடைந்ததற்குத் தனது சொந்தச் சிறையிருப்பே காரணம் என்று அதனைப் புகழ்ந்து பிலிப்பியருக்கு அவன் எழுதின நிருபத்தில் விவரித்தான். சுவிசேஷ முன்னேற்றத்தை அவனது துன்பங்கள் குறைவுபடுத்தியிருந்தன என்ற எண்ணம் பயங்கரமானதாகிவிடக்கூடாது என்பதற்காக "சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" (பிலிப்பியர் 1:12) என்று அவன் அவர்களிடம் வாக்குறுதி கொடுத்தான். (8)

பவுல் ரோம் நகரைச் சந்திக்கப்போகிறான் என்பதை கிறிஸ்தவ சபைகள் முதலாவது அறிந்தபோது, அந்த நகரத்தில் சுவிசேஷத்திற்குக் கிடைக்கக்கூடிய அடையாளமிக்க வெற்றியை எதிர்பார்த்தனர். பவுல் சத்தியத்தை அநேக நாடுகளுக்கு எடுத்துச்சென்றிருந்தான். அவன் பெரும் நகரங்களில் அதனை அறிவித்திருந்தான். உலகத்தின் மிக மேலான இந்த நகரத்தில் இந்த விசுவாசவீரன் கிறிஸ்துவிற்காக ஆத்துமாவை ஆதாயப்படுத்துவதில் வெற்றியடையவேண்டாமா? ஆனால் பவுல் ஒரு கைதியாக ரோமாபுரிக்குச் சென்றிருக்கிறான் என்னும் செய்தியால் அவர்களுடைய நம்பிக்கை நொறுக்கப்பட்டது. பெரும் மையத்தில் ஒரு சமயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சுவிசேஷம் விரைவாக எல்லா நாடுகளிலும் பரவி, பூமியில் எல்லாவற்றையும் மேற்கொண்டு நிற்கும் வல்லமையாக

ஆகும் என்பதை அவர்கள் நம்பிக்கையுடன் பார்க்கலாமென்று நம்பியிருந்தனர். அவர்களுடைய ஏமாற்றம் எவ்வளவு பெரியதாக இருந்தது! மனித எதிர்பார்ப்புகள் தோல்வி அடைந்திருந்தன. ஆனால் தேவனுடைய எதிர்பார்ப்பு தோல்வி அடையவில்லை! (9)

பவுலின் பிரசங்கங்களினால் நீதிமன்றங்களின் கவனம் கிறிஸ்தவ மதத்திற்குக் கவரப்படாமல், அவனது கட்டுகளால் அது கவரப்பட்டது. அவன் ஒரு அடிமையான சிறைக்கைதியைப்போல இருந்தபோதுதான் அநேக ஆத்துமாக்களை பாவம் என்னும் அடிமைத்தனத்தின் கட்டுகளைத் தகர்த்தான். இதுமட்டுமாக இருக்கவில்லை. “சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்” (பிலிப்பியர் 1:14) என்றான். (10)

அநீதியான சிறைவாசத்தில் நீண்ட நாட்களாகப் பவுல் இருந்தபோது அவனிடமிருந்த பொறுமை, உற்சாகம், அவனுடைய தைரியம், விசுவாசம் ஆகியவை தொடர்ச்சியான பிரசங்கங்களாக இருந்தன. உலகப்பிரகாரமான ஆவியைப் போன்றதாக இல்லாமலிருந்த அவனுடைய ஆவி, பூமியின் வல்லமையைவிட மிகவும் உன்னதமான ஒரு வல்லமை அவனிடத்தில் தங்கியிருந்தது என்பதற்குச் சாட்சி பகர்ந்திருந்தது. எந்த ஒரு பொது ஊழியத்திலிருந்து பவுல் பின்னிழுக்கப்பட்டிருந்தானோ, அது கிறிஸ்தவர்களைக் கிறிஸ்துவின் காரியத்திற்காகப் பொது ஊழியஞ்செய்யும்படி, பரிந்துபேசச்செய்ய உந்தும் ஒரு பெரும் சக்தியாகும்படி பவுலின் உதாரணம் இருந்தது. அப்போஸ்தலனின் கட்டுகள் இந்தவிதமான செல்வாக்கை உடையதாக இருந்தது. எனவே அவனது வல்லமையும் பயன்படும் தன்மையும் வெட்டி நீக்கப்பட்டதுபோல் காணப்பட்டிருந்தபோது, வெளித்தோற்றத்தில் அவனால் ஒன்றையும் செய்யமுடியாது என்பதுபோல் காணப்பட்டிருந்தபோது, அவன் எந்த ஒரு காரியத்திலிருந்தும் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டதுபோல் காணப்பட்டபோது, அவன் அந்தக் களங்களிலிருந்து கதிர்க்கட்டுகளைச் சேகரித்தான். (11)

பவுலின் இரண்டுவருட சிறைவாசம் முடியுமுன், “அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகியது” (பிலிப்பியர் 1:13) என்று அவனால் கூறமுடிந்தது. (12)

துணிவைப்போலவே பொறுமையும் அதன் வெற்றியை உடையதாக இருக்கிறது. தொழிலில் உள்ள தைரியத்தினால் ஆவதைவிட சோதனையின்போதுள்ள சாந்தத்தினால் கிறிஸ்துவிற்கென்று ஆத்துமாக்கள்

வெல்லப்படலாம். இழப்பின்கீழும் பாடுகளின்கீழும் தடுமாற்றமடையாத விசுவாசத்துடனும் அமைதியுடனும் மரணத்தையுங்கூட சந்திப்பவன், விசுவாசமிக்க நீண்டகால ஊழிய வாழ்க்கையைவிட, சுவிசேஷத்திற்காக அதிகமான காரியங்களை நிறைவேற்றியிருப்பான். தீவிரமான கடமையிலிருந்து தேவனுடைய ஊழியக்காரன் அடிக்கடி பின்னிழுக்கப்பட்டிருக்கும்போது, நமது குறுகிய பார்வையுடன் நாம் புலம்புகின்ற இரகசியமான தெய்வீக ஏற்பாடு அடிப்படையில்லாவிட்டால் ஒருபோதும் செய்திருந்திருக்க முடியாத பணியை நிறைவேற்றும்விதமாக தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. (13)

கிறிஸ்துவின் அடியான் அதற்குமேல் வெளியரங்கமாகவும் தீவிரமாகவும் தேவனுக்காகவும் அவனுடைய சத்தியத்திற்காகவும் செயலாற்றமுடியாதவனாக இருக்கும்போது, அவன் செய்யக்கூடிய சேவை இல்லையென்று எண்ணாமலிருப்பானாக. கிறிஸ்துவின் சாட்சிகள் ஒருபோதும் ஒரு பக்கமாக வைக்கப்படுவதில்லை. உடல்நலத்திலும் நோயிலும் ஜீவனிலும் மரணத்திலும் அவர்களனைவரையும் தேவன் இன்றும் பயன்படுத்துகிறார். சாத்தானின் வன்மத்தினால் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டிருக்கும்போது, அவர்களுடைய தீவிரமான ஊழியங்கள் இடையூறு செய்யப்பட்டிருக்கும்போது, அவர்கள் கழுமரத்திற்கு இழுத்துச்செல்லப்பட்டிருக்கும்போது, அது சத்தியம் வெல்லவேண்டுமென்பதற்காக நிகழ்ந்தது. இந்த விசுவாசமிக்கவர்கள் தங்களுடைய சாட்சியைத் தங்களுடைய இரத்தத்தினால் முத்திரையிட்டபோது, இதுவரை சந்தேகத்திலும் நிச்சயமின்மையிலும் இருந்த ஆத்துமாக்கள் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தில் மனநிறைவை உடையவர்களாகி, அவருக்கென்று தைரியத்துடன் நின்றனர். இரத்த சாட்சிகளின் சாம்பல்களிலிருந்து தேவனுடைய அறுவடைக்கென்று ஏராளமானவர்கள் குதித்தெழுந்தனர்! (14)

கிறிஸ்தவ சமயத்திற்கு மாறினவர்களின் விசுவாசம் கீழ்ப்படிதல் ஆகியவைகளைவிடக் குறைவானதாக இல்லாத பவுலிலும் உடன்வேலைக்காரர்களிலும் இருந்த பேரார்வமும் கடமைதவறாமையும் மெய்ப்பற்றும், தடைசெய்யும் சூழ்நிலைகளில் கிறிஸ்துவின் ஊழியக்காரனிடம் உள்ள மந்தமான தன்மையையும் விசுவாசமின்மையையும் கடிந்து கொள்ளுகிறது. பயங்கரமான சோதனைகளாலும், வலிமைமிக்க இடையூறுகளாலும், கசப்புமிக்க எதிர்ப்புக்களாலும் உழப்பட்டு, அவைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ள நீரோவின் வேலைக்காரர்களை கீழ்ப்படியும்படியும் மனந்திரும்பும்படியும் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்திற்கு எப்படி அழைக்கமுடியும் என்று அப்போஸ்தலனும் அவனது உடன்

வேலைக்காரர்களும் வாதம் செய்திருந்திருக்கமுடியும். சத்தியத்தைப்பற்றி அவர்கள் மனநிறைவை அடைந்திருந்தாலுங்கூட அவர்கள் எப்படிக் கீழ்ப்படிவார்கள். ஆனால் பவுல் இந்தவிதமாக நியாயவாதம் செய்யவில்லை. விசுவாசத்தினால் அவன் இந்த ஆத்துமாக்களுக்குமுன் சுவிசேஷத்தை வைத்தான். அதைக் கேட்டிருந்தவர்களுக்கு மத்தியிலிருந்தவர்களில் சிலர் என்னநடந்தாலும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவது என்று முடிவுசெய்தனர். தடைகளும் ஆபத்துக்களும் இருந்தபோதிலுங்கூட, அவர்கள் ஒளியை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய ஒளியை மற்றவர்களின்மீதும் பிரகாசிக்கச் செய்வார்கள். (15)

இராயனின் வீட்டிலிருந்தவர்கள் சத்தியத்திற்கு ஆயத்தப்படுத்தப் பட்டதுமன்றி, மாற்றம் அடைந்தபின்னும் அவர்கள் அந்த வீட்டிலேயே தங்கியிருந்தனர். அவர்களுடைய சுற்றுப்புறம் அதற்குப்பின் அவர்களுக்கு ஒரே மாதிரியான உணர்வை உடையதாக இல்லாமலிருந்ததால், அவர்கள் தங்களுடைய வேலையை விட்டுச்செல்லவேண்டியது அவர்களுடைய கடமை என்று உணரவில்லை. சத்தியம் அவர்களை அங்கு கண்டிருந்தது. மாற்றத்தை உண்டுபண்ணக்கூடிய புதிய விசுவாசத்தின் வல்லமைக்குச் சாட்சி பகர்ந்துகொண்டிருந்த அவர்களுடைய மாறுபட்ட வாழ்க்கைமுறையுடனும் சுபாவத்துடனும் அவர்கள் தங்கியிருந்தனர். (16)

கிறிஸ்துவிற்குச் சாட்சியாக இருப்பதில் தோல்வி அடைந்ததற்கு சூழ்நிலைகளைச் சாக்குப்போக்காகக் கொட்டும் யாராவது இருக்கிறாரா? இராயனின் வீட்டில் இருந்த சீடர்களின் நிலைமைகளை —பேரரசனின் உதவியை இழந்துவிடுதல், அரண்மனையிலிருந்த தீய ஒழுக்கம்— ஆகிய நிலைமைகளை ஆலோசிப்பார்களாக. மாறின இவர்கள் சந்தித்த நிலைமையைவிட, அதிக தியாகத்தையும் எதிர்ப்பையும் உள்ளடக்கிய சாதகமில்லாத சூழ்நிலையை நாம் நினைத்துப் பார்ப்பது கடினம். அப்படியிருந்தபோதிலும், துன்பங்களுக்கும் ஆபத்துகளுக்கும் மத்தியில் அவர்கள் தங்களுடைய மெய்ப்பற்றைக் காத்திருந்தனர். இயேசுவிற்குள் இருப்பதுபோன்ற சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதற்கு கடக்கமுடியாதவைபோல் காணப்படும் தடைகளின் காரணமாக, கிறிஸ்தவன் தனக்குத்தானே சாக்குப்போக்கைக் கூறிக்கொள்ளலாம். ஆனால் நுட்ப நியாயவிசாரணையில் அவனால் எந்தச் சாக்குப்போக்கையும் தரமுடியாது. தரக்கூடுமானால், இரட்சிப்பை அடைவதற்காக அவருடைய பிள்ளைகளுக்காக அவர் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகள் அவர்களால் நிறைவேற்றமுடியாதவைகள் என்றும், தேவன் நீதியில்லாதவர் என்றும் அவனால் மெய்ப்பிக்கமுடியும் அல்லவா? (17)

தேவனுக்குச் சேவைசெய்யவேண்டும் என்று தனது இருதயத்தைப் பொருத்தியிருப்பவன், அவருக்காகச் சாட்சிகூற வாய்ப்புகளைக் காண்பான். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவனுக்கு, இடையூறு செய்யும் கஷ்டங்கள் வல்லமையில்லாதவைகளாக இருக்கும். ஜெபத்தினாலும் தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பதினாலும் ஆதாயமாக அடைந்துள்ள பலத்திலுள்ள புண்ணியத்தை அவன் தேடி, தீய பழக்கங்களை விட்டுவிலகுவான். தமக்கு எதிராகப் பாவிகள் உண்டுபண்ணின எதிர்வாதங்களைத் தாங்கி நின்றவராக விசுவாசத்தைத் தொடங்குபவரும் முடிப்பவருமாக உள்ள இயேசுவைப் பார்த்து, விசுவாசி விருப்பத்துடன் அவமதிப்பையும் கேலிக்கூத்தையும் சந்திப்பான். எந்த ஒருவருடைய வார்த்தை சத்தியமானதாக இருக்கிறதோ, அவரால் ஒவ்வாரு சூழ்நிலைக்கும் போதுமான உதவியும் கிருபையும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. உதவிக்காக அவரை நோக்கித் திரும்பும் ஆத்துமாவை அவருடைய நித்திய புயங்கள் வளைந்துகொள்ளுகிறது. “நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்” ( சங்கீதம் 56:3) என்று சொல்லிக்கொண்டு, அவருடைய கவனிப்பில் நாம் இளைப்பாறலாம். அவர்மீது தங்களுடைய நம்பிக்கையை வைக்கும் அனைவரிலும் தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். (18)

இரட்சகரின் சீடர்கள் இந்த உலகத்தில் இருந்தபோதிலும், அவர்கள் இந்த உலகத்துக்குரியவர்கள் அல்ல என்பதை இரட்சகர் அவரது சொந்த உதாரணத்தினால் காட்டியிருக்கிறார். மாயையான இன்பங்களில் பங்குபெறவும், அதன் சம்பிரதாயங்களினால் அடித்துச் செல்லப்படவும் அதன் நடத்தைகளைப் பின்பற்றவும் அவர் வராமல், தமது பிதாவின் சித்தத்தை செயலாற்றவும், நித்தியத்தை இழந்தவர்களை தேடி இரட்சிக்கவும் வந்தார். இந்த ஒரு நோக்கத்தைத் தனக்குமுன் உடையவனாக எந்தச் சூழ்நிலையிலும் கறைபடாதவனாக கிறிஸ்தவனால் நிற்கமுடியும். உயர்வானதாக இருந்தாலும் அல்லது தாழ்வானதாக இருந்தாலும், எந்த ஒரு பதவியிலும் சூழ்நிலையிலும் அவன் இருந்தபோதிலும் கடமையை விசுவாசத்துடன் செய்வதினால் அவன் உண்மையான மதத்தின் வல்லமையை வெளிக்காட்டுவான். (19)

சோதனைக்குட்படாமல் இருப்பதினால் அல்லாமல் சோதனைக்கு நடுவில் கிறிஸ்தவ தன்மை முன்னேற்றமடைகிறது. எதிர்த்தாக்குதலும் எதிர்ப்பும் கிறிஸ்துவின் அடியானைப் பெரும் விழிப்பிற்கும் பலமிக்க உதவியாளரை நோக்கிய அக்கறைமிக்க ஜெபத்திற்கும் நடத்துகிறது. தேவ கிருபையால் தாங்கள் தாங்கிக்கொண்ட கடுமையான பரீட்சைகள் பொறுமை, மனவலிமை, தேவன்மீது தங்கியிருக்கும் நம்பிக்கை

ஆகியவைகளை முன்னேற்றமடையச் செய்கின்றது. கீழ்ப்படியவும், அதனால் வெற்றியடையவும், நாள்முழுவதும் கொல்லப்படவும், அப்படியிருந்தாலும் உயிர்வாழவும், சிலுவையைச் சுமக்கவும், அதனால் மகிமையின் கிரீடத்தை ஆதாயமாக அடைந்துகொள்ளவும், கிறிஸ்தவ விசுவாசத்தின் வெற்றி, அதைப் பின்பற்றுபவனை, பாடுகளை அனுபவிப்பதற்கும் பலமுள்ளவனாக இருப்பதற்கும் தகுதிப்படுத்துகிறது. (20) ★

# 45

# ரோமாபுரியிலிருந்து எழுதப்பட்டது!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 469–484)**
**திருவசன ஆதாரம் : பிலிப்பியர்; கொலோசெயர்**

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அவனுடைய ஆரம்பகால கிறிஸ்தவ அனுபவத்தில் கிறிஸ்துவின் அடியார்களைப்பற்றின தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ளுகின்ற சிறப்பான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. "கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருசத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்." "மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும், கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன்." "மேன்மைபாராட்டி, புத்தியீனனாயினேன்; நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்படவேண்டியதாயிருந்ததே." "கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும்" இன்னதென்கிறதை தெளிவாக முழுமையாக புரிந்துகொண்டிருந்தான்" (2 கொரிந்தியர் 12:2,4,1,11; எபேசியர் 3:18,19). (1)

பவுல் தரிசனத்தில் கண்டவைகளையெல்லாம் அவனால் அனைவருக்கும் கூறமுடியாதவனாக இருந்தான். ஏனெனில் அவனது பேச்சைக் கேட்டிருந்தவர்களில் சிலர், அவனுடைய வார்த்தைகளைத் தவறாகப் பொருத்தக்கூடியவர்களாக இருந்தனர். ஆனால் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகள் அவனை ஒரு தலைவனாகவும் ஞானமிக்க ஆசிரியனாகவும் பணிசெய்யும்படித் தகுதிப்படுத்தியது. பிற்காலத்தில் அவன் சபைகளுக்கு அனுப்பின தூதுகளை உருவாக்கினது. கிறிஸ்தவ சுபாவத்தின்

தன்மையைப்பற்றிச் சரியானவிதத்தில் எடுத்துக்காட்டுவதற்கு தரிசனத்தில் அவன் பெற்றுக்கொண்ட அடையாளங்களும் உணர்த்துதல்களும் எப்பொழுதும் அவனுடன் இருந்தன. அந்த நாளிலிருந்து தேவனுடைய சபைக்கு உதவவும் பலப்படுத்தவும், தனது வாயின் வார்த்தையினாலும் கடிதத்தினாலும் அவன் ஒரு தூதை உடையவனாக இருந்தான். சபையை அச்சுறுத்தக்கூடிய அபாயங்களையும் அவர்கள் சந்திக்கவேண்டியதாக இருக்கக்கூடிய தவறான கோட்பாடுகளையும்பற்றி விசுவாசிகளிடம் இன்றும் அந்தத் தூது வெளிப்படையாகப் பேசுகிறது. (2)

ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் அடங்கியிருந்த இந்தக் கடிதங்கள் அவைகள் எவர்களுக்கு எழுதப்பட்டனவோ அவர்கள் "இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்," "மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல" நடவாமலிருக்க, "புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராகாதிருக்க," "தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷ ராக," "ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள" (எபேசியர் 4:14,17,11,18; 5:17,18) அவர்களை உற்சாகப்படுத்தியது. "சபையில் அன்புகூர்ந்த" கிறிஸ்து, "தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும்" வெளிப்படப்போகிற காலத்தை எதிர்பார்த்திருக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தியது. (3)

மனித வல்லமையினால் இல்லாமல், தேவனுடைய வல்லமையினால் எழுதப்பட்ட இந்தத் தூதுகள் அனைவராலும் நன்மைக்காகத் திரும்பத்திரும்ப வாசித்தறியவேண்டிய பாடங்களை உடையதாக இருக்கின்றன. அவைகளில் நடைமுறைத் தெய்வபக்தி விவரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சபையினாலும் பின்பற்றப்படவேண்டிய கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், நித்திய ஜீவனுக்கு நடத்துகின்ற பாதையும் வெளிப்படையாக்கப்பட்டுள்ளது. (4)

கொலோசேப் பட்டணத்தில் கிறிஸ்துவிற்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு (கொலோசெயர் 1:2)

ரோமாபுரியில் அவன் சிறைக்கைதியாக இருந்தபோது எழுதின கடிதத்தில்: "ஆவிக்குள்ளான உங்கள் அன்பையும் அவனே எங்களுக்குத் தெரியப்படுத்தினான். இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய்நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" (கொலோசெயர் 1:8–11) என்று, விசுவாசத்தில் அவர்கள் உறுதியாகத் தரித்து நிற்கிறதினால் அவனுக்குண்டான சந்தோஷத்தையும், எப்பாபிராவினால் கொண்டுவரப்பட்ட நல்ல செய்திகளையும் வெளிப்படுத்தி தனது கடிதத்தை எழுதினான். (5)

இவ்வாறாக, கொலோசெய விசுவாசிகளுக்கான அவனுடைய விருப்பத்தைப் பவுல் வார்த்தைகளில் வடித்தான். கிறிஸ்துவின் அடியார்களுக்குமுன் இந்த வார்த்தைகள் எவ்வளவு மேன்மையானவைகளாக நிற்கின்றன. கிறிஸ்தவ வாழ்க்கையிலுள்ள ஆச்சரியமான சாத்தியதைகளை அவைகள் காட்டுகின்றன. தேவனுடைய பிள்ளைகள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆசீர்வாதங்களுக்கு எல்லை இல்லையென்பதை அது வெளிப்படையாக்குகிறது. மகிமையான அவருடைய வல்லமையின்படி, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு" அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்குகிறதை காட்டுகிறது. தேவனைப்பற்றின அறிவில் தொடர்ச்சியாக விருத்தியடைந்து, கிறிஸ்தவ அனுபவத்தில் அவர்கள் பலத்தின்மேல் பலமடைந்து, உயரத்தின்மேல் உயரத்தை அடைவார்கள். (கொலோசெயர் 1:10,12). (6)

தேவன் எல்லாவற்றையும் கிறிஸ்துவின்மூலமாகச் சிருஷ்டித்தார்; அவர் மூலமாகவே அவர்களுடைய மீட்பை வடிவமைத்திருக்கிறார் என்று அப்போஸ்தலன் கிறிஸ்துவைத் தனது சகோதரர்களுக்குமுன் உயர்த்தினான். அந்தரத்திலுள்ள உலகங்களைத் தாங்குகின்ற அந்தக் கரம், தேவனுடைய பிரபஞ்சத்திலுள்ளவைகளை அவைகளின் ஒழுங்குகளில் வைத்து, களைப்பில்லாமல் செயலாற்றும்படி இயக்குகின்ற அந்தக் கரம், அவர்களுக்காகச் சிலுவையில் ஆணியடிக்கப்பட்டது என்று அவன் அறிவித்தான். "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது;

பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்"– கொலோசெயர் 1:16,21. (7)

விழுந்துபோனதை உயரே தூக்கி நிறுத்துவதற்காக தேவகுமாரன் கீழே இறங்கினார். இதற்காக அவரை நேசித்திருந்த தொண்ணூற்று ஒன்பது பாவமில்லாத உன்னதத்திலிருந்த உலகங்களையும்விட்டு இந்த உலகத்திற்கு "நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்படவும், நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்படவும்" (ஏசாயா 53:5) வந்தார். அவர் எல்லாவிதத்திலும் தமது சகோதரர்களைப் போலாக்கப்பட்டிருந்தார். நாம் மாம்சத்தை உடையவர்களாக இருப்பதைப்போல அவரும் மாம்சத்தை உடையவரானார்; பசியுள்ளவராகவும் தாகமுள்ளவராகவும் களைப்புற்றவராகவும் இருப்பது என்றால் என்ன என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் உணவினால் தாங்கப்பட்டு, நித்திரையினால் இளைப்பாறுதலைப் பெற்றிருந்தார். அவர் இந்த உலகத்தாரானவராக இல்லாமல், இந்த உலகத்தில் இருந்து இந்தப் பூமியில் அந்நியனும் பரதேசியுமாயிருந்தார். இந்த நாளிலுள்ள ஆண்களும் பெண்களும் சோதிக்கப்படுவதும் பரீட்சிக்கப்படுவதும்போல அவரும் சோதிக்கப்பட்டும் பரீட்சிக்கப்பட்டும் இருந்து, ஆனால் பாவமில்லாதவராக வாழ்ந்திருந்தார். அவர் மென்மைமிக்கவராகவும் மனஉருக்கம் உள்ளவராகவும் பிறருடைய உணர்வுகளை எப்போதும் மதிப்பவராகவும் இருந்தார். அவர் தேவனுடைய சுபாவத்தை எடுத்துக்காட்டியிருந்தார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார்"–யோவான் 1:14. (8)

கொலோசெய விசுவாசிகள் அவர்களைச் சுற்றியிருந்த அஞ்ஞான மார்க்கத்தின் நடத்தைகளினாலும் செல்வாக்குகளினாலும் சுவிசேஷத்தின் எளிமையிலிருந்து விலகிச்செல்லக்கூடிய அபாயம் இருந்தது. எனவே இதற்கு எதிராகப் பவுல் அவர்களை எச்சரித்தபோது, பாதுகாப்பான வழிகாட்டுபவராகக் கிறிஸ்து ஒருவர் மட்டுமே இருப்பதைச் சுட்டிக்காட்டினான். "உங்களுக்காகவும் லாவோதிக்கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும்,

சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன். அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாகவேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்" (கொலோசெயர் 2:1.2) என்றார். (9)

"ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன். சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி உங்களுடனேகூட இருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக்கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்"—கொலோசெயர் 2:4–10. (10)

வஞ்சகர்கள் எழும்புவார்கள் என்றும், அவர்களுடைய செல்வாக்கினால், "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோகும்" (மத்தேயு 24:12) என்றும் கிறிஸ்து முன்னரே கூறியிருந்தார். சபைக்கு தனது விரோதிகளால் உண்டாகக்கூடிய உபத்திரவங்களைவிட இந்தத் தீமையினால் அதிகமான ஆபத்துவரும் என்று அவர் சீடர்களை எச்சரித்திருந்தார். இந்தத் தவறான ஆசிரியர்களைப்பற்றிப் பவுல் மறுபடியும் மறுபடியும் விசுவாசிகளை எச்சரித்திருந்தான். தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், இந்தத் தவறான ஆசிரியர்களை ஏற்றுக்கொள்ளுவதனால் அவர்கள் தவறுகளுக்குக் கதவைத் திறந்துவிடுவார்கள். அதனால் ஆவிக்குரிய உணரும் தன்மைகளை சத்துரு மங்கலாக்கி, சுவிசேஷத்தின் விசுவாசத்திற்குப் புதிதாக வந்திருப்பவர்களின் நம்பிக்கையை அசைத்து விடுவான். முன்வைக்கப்படுகின்ற கோட்பாடுகளைச் சோதிக்கும் தரமாகக் கிறிஸ்து இருக்கிறார். அவனுடைய சோதனைகளுக்கு இசைவாக இல்லாத

அனைத்தையும் அவர்கள் நிராகரிக்கவேண்டும். அவர்கள் கற்றறிந்து போதிக்கவேண்டியதாக உள்ள இரட்சிப்பின் விஞ்ஞானமாக, பாவத்திற்காகச் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து—மரித்தவர்களிலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து—உன்னதத்திற்கு எழுந்தருளிச்சென்ற கிறிஸ்து இருக்கிறார்! (11)

கிறிஸ்தவ சபையைச் சூழ்ந்துள்ள அபாயங்களைப்பற்றி தேவனுடைய வார்த்தையிலிருந்துள்ள எச்சரிக்கை நமக்குச் சொந்த மானதாக இருக்கிறது. வேதவாக்கியங்களின்மீதுள்ள விசுவாசத்தை அழிக்கும் மனிதப் பாரம்பரியங்களினாலும் தத்துவங்களினாலும் அப்போஸ்தலனின் நாட்களில் முயன்றதைப்போல, இப்பொழுது உயர்வான விமரிசனம், பரிணாமவாதம், ஆவிமார்க்கம், கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்னும் கோட்பாடு, ஆகியவைகளான மகிழ்ச்சிதரும் நுண்ணுணர்வுகளின்மூலமாக ஆத்துமாக்களை அழிவின் பாதையில் நடத்த சத்துரு வகைதேடிக்கொண்டிருக்கிறான். அநேகர் தவறான புரிந்துகொள்ளுதலையும் குழப்பத்தையும் கொண்டுவருகின்ற யூகங்களின் மீதுள்ள நம்பிக்கைக்குத் தங்களுடைய மனங்களைத் திருப்பியிருப்பதினால் அவர்களுடைய வேதாகமம் எண்ணெய் இல்லாத ஒரு விளக்காக இருக்கிறது. வேதாகமம், தெய்வீக வெளிப்படுத்தல் என்னும் அதன்மீதுள்ள விசுவாசத்தை துண்டுகளாக வெட்டுவது, யூகம்செய்வது, திரும்ப எடுத்துக்கட்டுவது ஆகியவைகளில் உள்ள மேலான விமரிசனம் என்னும் செயல்களால் ஒரு தெய்வீக வெளிப்படுத்துதல் என்பதான அதன்மீதுள்ள விசுவாசத்தை அழிக்கிறது. மனித உயிர்களிலுள்ள வேதாகமத்தின் கட்டுப்படுத்தும் உயர்த்தும் ஊக்குவிக்கும் தேவனுடைய வார்த்தையிலுள்ள வல்லமையை அது கொள்ளையடிக்கிறது. வாஞ்சையே மேலான பிரமாணம்; விருப்பப்படி நடக்கும் அனுமதியே சுயாதீனம்; மனிதன் தனக்கு மட்டுமே கணக்குக் கொடுக்கவேண்டியவனாக இருக்கிறான் என்று நம்பும்படி ஆவிமார்க்கத்தின் மூலமாக, திரளானவர்கள் போதிக்கப்பட்டிருக்கின்றனர். (12)

கிறிஸ்துவின் அடியார்கள் நயவசனிப்புக்களை சந்திப்பார்கள் என்று அப்போஸ்தலன் அதற்கு எதிராகக் கொலோசெய விசுவாசிகளை எச்சரித்தான். வேதவாக்கியங்களைப்பற்றிய ஆவிமார்க்கத்தின் விளக்கங்களை அவன் சந்திப்பான். ஆனால் அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாதவனாக அவன் இருக்கிறான். வேத வாக்கியங்களில் உள்ள நித்திய சத்தியங்களைத் தெளிவாக உறுதிப்படுத்தும் அவருடைய குரல் கேட்கப்பட்டாகவேண்டும். அவருடைய போதனைகளுக்கு இசைவாக இல்லாத அனைத்து யோசனைகளையும் நிராகரித்து, தனது கண்களைக் கிறிஸ்துவின்மேல் பதித்தவனாக, அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதையில் அவன் சீராக

முன்னோக்கிச் செல்லவேண்டியவனாக இருக்கிறான். தேவனுடைய சத்தியம் அவனுடைய ஆராய்ச்சிக்கும் தியானத்திற்குமான விஷயமாக இருக்கவேண்டியதாக உள்ளது. வேதாகமத்தை அவனிடம் நேரடியாகப் பேசும் தேவனுடைய குரலாகக் கருதவேண்டும். இவ்வாறாக, தெய்வீகத்தில் உள்ள ஞானத்தை அவன் காண்பான். (13)

அனைவரும் பெற்றிருக்கவேண்டிய இரட்சிக்கப்படவேண்டும் என்னும் அறிவு, கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனைப்பற்றின அறிவாக இருக்கிறது. சுபாவத்தில் மாற்றத்தை உண்டுபண்ணச் செயலாற்றுவதாக இந்த அறிவு இருக்கிறது. வாழ்க்கையில் இதனைப் பெற்றுக்கொள்ளும்போது, அது ஆத்துமாவை கிறிஸ்துவின் சாயலில் மறுபடியும் சிருஷ்டிக்கிறது. இந்த அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி, தேவன் தமது பிள்ளைகளை அழைக்கிறார். இதைத்தவிர மற்றவைகளனைத்தும் மாயையாகவும் ஒன்றும் இல்லாதவைகளுமாக உள்ளன. (14)

சுபாவத்தைக் கட்டுமானம் செய்வதற்கான உண்மையான அஸ்திவாரமாக ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொரு தேசத்திலும் தேவனுடைய வார்த்தையில் அடங்கியுள்ள அதே கொள்கைகள் இருக்கின்றன. “கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக் கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.” “இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை” (சங்கீதம் 19:8; 15:5). பாதுகாப்பும் நிச்சயமுமான சட்டம் என்னவெனில், தேவன் என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்வதுதான். அப்போஸ்தலர்கள் அவர்களுடைய நாளிலே இருந்த தவறான தத்துவ விளக்கங்களை தேவனுடைய வார்த்தையினால் தான் சந்தித்திருந்தனர். “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது”–1 கொரிந்தியர் 3:11. (15)

கொலோசெய விசுவாசிகள் அவர்களுடைய மாற்றம் ஞானஸ்நானம் ஆகியவைகளின்போது இதுவரை அவர்களுடைய வாழ்க்கையின் ஒருபகுதியாக இருந்த நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் தூரமாக விட்டுவிடுவதாகவும், தங்களுடைய உறவில் கிறிஸ்துவிற்கு உண்மையானவர்களாக இருக்கப்போவதாகவும், தாங்களாகவே ஆணை யிட்டுக்கொண்டனர். அவர்கள் இட்ட ஆணையைக் காத்துக்கொள்ளுவதற்காக அவர்கள் மேற்கொள்ள வகைதேடும் தீமைகளுக்கு எதிராக, தொடர்ச்சியாக முயற்சிசெய்யவேண்டும் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது என்று பவுல் தனது கடிதத்தில் அவர்களிடம் ஞாபகப்படுத்திக் கெஞ்சிக்கேட்டான்.

“நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்த துண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது”—கொலோசெயர் 3:1–3. (16)

“ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2 கொரிந்தியர் 5:17). கிறிஸ்துவின் வல்லமையின் மூலமாக ஆண்களும் பெண்களும் பாவமான பழக்கங்களின் சங்கிலிகளை உடைத்திருக்கின்றனர். அவர்கள் சுயத்தை மறுத்துள்ளனர். புனிதத் தன்மையற்றவர்கள் பக்தியுள்ளவர்களாகி யிருக்கின்றனர். குடிகாரன் தெளிந்த புத்தியுள்ளவனாகியிருக்கிறான். தீய ஒழுக்கமுள்ளவன் தூய்மையானவனாகியிருக்கிறான். சாத்தானின் சாயலைத் தாங்கியிருந்த ஆத்துமாக்கள், தேவனுடைய சாயலில் மறுரூபமடைந்துள்ளனர். இந்த மாற்றம் மட்டுமே அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதமாக உள்ளது. வார்த்தையினால் உண்டாகியுள்ள மாறுதல் வார்த்தையின் ஆழமான இரகசியங்களில் ஒன்றாக உள்ளது. நம்மால் அதனைப் புரிந்துகொள்ள முடியாது. வேதவாக்கியங்களில் அறிவிக்கப்பட்டுள்ளதைப்போல மகிமையின் நம்பிக்கையாகக் கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே அதுவாக உள்ளது. (17)

மனதையும் இருதயத்தையும் தேவ ஆவியானவர் கட்டுப்படுத்தும்போது, மாற்றமடைந்த ஆத்துமா ஒரு புதிய பாடலுடன் எழுகிறது. ஏனெனில் அவனுடைய அனுபவத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறியிருக்கிறது என்பதையும், அவனுடைய மீறுதல்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அவனுடைய பாவங்கள் மூடப்பட்டுள்ளன என்பதையும் அவன் உணருகிறான். தெய்வீகப் பிரமாணத்தை மீறினதற்காக அவனுடைய மீறுதலுக்காக அவன் மனம் வருந்தி, மனிதன் நீதிமானாக்கப்படுவதற்காக மரித்த கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைச் செயலாற்றியிருக்கிறான். “நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்”—ரோமர் 5:1. (18)

ஆனால் இது அவனுடைய அனுபவமாக இருப்பதினால் அவனுக்காக என்ன நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ அதில் திருப்தியுடையவனாகத் தன் கைகளைக் கட்டிக்கொண்டிருக்கவேண்டியதில்லை. ஆவிக்குரிய இராஜ்யத்தில் பிரவேசிக்கத் தீர்மானம் செய்திருக்கும் ஒருவன், அந்தகார இராஜ்யத்தின் வல்லமையினால் பின்தாங்கப்பட்டுள்ள புதுப்பிக்கப்படாத

வல்லமைகளனைத்தும் வெறிகளனைத்தும் அவனுக்கெதிராக அணிவகுத்து நிற்பதைக் கண்டுகொள்ளுவான். (19)

ஒவ்வொரு நாளும் அவன் தனது அர்ப்பணத்தைப் புதுப்பிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் தீமையுடன் போராடவேண்டும். பழைய பழக்கங்கள், பாரம்பரியப் பண்புகள், தவறுசெய்யும் தன்மைகள் ஆகியவை அவனை மேற்கொள்ள முயலும். இவைகளுக்கெதிராக வெற்றியடைவதற்காகக் கிறிஸ்துவின் சுபாவத்துடன் முயன்று எப்பொழுதும் தன்னைக் காவல் செய்பவனாக இருக்கவேண்டும். (20)

"ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷ ணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்.... தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.... ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோசெயர் 3:5–15) என்று எழுதினான். (21)

கொலோசேயருக்கு எழுதின நிருபம் கிறிஸ்துவின் சேவையில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் விலைமதிப்புமிக்க பாடங்களால் நிறைந்துள்ளது. காரியத்தில் ஒருநோக்கம், குறிக்கோளின் உயர்ந்த தன்மை ஆகியவை வாழ்க்கையில் இரட்சகரைச் சரியான விதத்தில் எடுத்துக்காட்டுவதாகக் காணப்படும். மேல்நோக்கிச்செல்லும் பாதையில் உள்ள முன்னேற்றத்தில் அவனுக்கு இடையூறு செய்யும் அனைத்தையும் மறுத்து, அல்லது இடுக்கமான பாதையின் வழியாகச்செல்லும் மற்ற

பாதங்களைத் திருப்புவதை மறுத்து, விசுவாசி அவனுடைய அன்றாட வாழ்க்கையில் இரக்கத்தையும் அன்பையும் தாழ்மையையும் எளிமையையும் சகிப்புத் தன்மையையும் கிறிஸ்துவின் அன்பையும் வெளிக்காட்டுவான். (22)

மிகவும் மேலான தூய்மையான மேன்மைமிக்க வாழ்க்கைக்கான வல்லமை நமது மாபெரும் தேவையாக உள்ளது. உலகம் நமது சிந்தனையில் மிகவும் அதிமானதாகவும், பரலோக இராஜ்யம் மிகவும் குறைவானதாகவும் உள்ளது. (23)

கிறிஸ்தவன் தனக்கென்று தேவனுடைய தரத்தை அடைகின்ற முயற்சியில் எதைப்பற்றியும் நம்பிக்கையிழக்க வேண்டியதில்லை. கிறிஸ்துவின் கிருபை வல்லமை ஆகியவகைளின்மூலமாக சன்மார்க்க ஆவிக்குரிய பரிபூரணம் அனைவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. வல்லமையின் ஆதாரமாகவும் ஜீவனின் ஊற்றாகவும் இயேசு இருக்கிறார். அவர் நம்மை அவருடைய வார்த்தையினிடத்திற்குக் கொண்டுவந்து, பாவத்தால் நோயுற்றிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஆரோக்கியம் அளிக்கும் இலைகளை ஜீவ விருட்சத்திலிருந்து நமக்குக் கொடுக்கிறார். அவர் நம்மை தேவ சிங்காசனத்திற்கு நடத்தி, நாம் அவருடன் நெருக்கமான உறவை அடையும்படி ஒரு ஜெபத்தை நமது வாயில் வைக்கிறார். பரலோகத்தின் எல்லா வல்லமைகளையும் உடையதாக உள்ள ஏதுகரங்களை நமது சார்பாகச் செயல்படும்படி ஏற்படுத்துகிறார். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும், நாம் அவருடைய ஜீவனுள்ள வல்லமையைத் தொடுகிறோம். (24)

“கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளி னாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி” (கொலோசெயர் 3:16) என்கிற விதமாக அதில் முன்னேறும்படி வாஞ்சிப்பவர்களுக்கு தேவன் எல்லையைக் குறிப்பதில்லை. ஜெபத்தின் மூலமாகவும் விழித்திருப்பதின்மூலமாகவும் அறிவிலும், புரிந்துகொள்ளுதலில் வளர்வதன்மூலமாகவும், அவர்கள் மகிமையான அவருடைய வல்லமையின் படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் (கொலோசெயர்1:11) வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறாக, மற்றவர்களுக்காகப் பணி செய்யும்படி ஆயத்தப்படுத்தப்படுகின்றனர். தூய்மைப்படுத்தப்பட்டுப் பரிசுத்தப் படுத்தப்பட்ட மனிதர்கள் அவரது உதவும் கரங்களாக இருக்கவேண்டும் என்பது இரட்சகரின் நோக்கமாக உள்ளது. இந்தப் பெருஞ்சலுகைக்காக “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று

நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை” (கொலோசெயர் 1:12,13) ஸ்தோத்தரிப்போமாக. (25)

கொலோசெயர்களுக்கு எழுதின நிருபத்தைப்போலவே பிலிப்பியருக்கு எழுதின நிருபமும் அவன் ரோமாபுரியில் கைதியாக இருந்தபோது எழுதப்பட்டதாகும். பிலிப்பியிலிருந்த சபை பவுலுக்கு எப்பாபிரோதீத் என்பவனின் கைகளில் அன்பளிப்பைக் கொடுத்தனுப்பியிருந்தது. இவனைப் பவுல்: “என் சகோதரனும், உடன்வேலையாளும், உடன்சேவகனும், உங்கள் ஸ்தானாபதியும், என் குறைச்சலுக்கு உதவிசெய்தவனுமான எப்பாப்பிரோதீத்துவை” (பிலிப்பியர் 2:25) என்று அழைக்கிறான். எப்பாப்பிரோதீத்து ரோமாபுரியில் இருந்தபோது நோய்வாய்ப்பட்டான். அவன் “அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார். ஆகையால் நீங்கள் அவனை மறுபடியும் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங் குறையவும், அவனை அதிசீக்கிரமாய் அனுப்பினேன். ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு, அவன் தன் பிராணணையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்” (பிலிப்பியர் 2: 25–30) என்று எழுதினான். (26)

பிலிப்பிய விசுவாசிகளுக்குப் பவுல் ஒரு நிருபத்தை எப்பாப்பிரோதீத்துவின் கையில் கொடுத்தனுப்பினான். அதில் அவர்கள் அனுப்பின உதவிப் பணத்திற்காக அவர்களுக்கு நன்றி கூறியிருந்தான். மற்றெல்லா சபைகளையும்விடப் பவுலின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பிலிப்பிய சபைதான் மிக அதிகமாகத் தாராளமானதாக இருந்தது. (27)

“மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால்

அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியினால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்"–பிலிப்பியர் 4:15–18. (28)

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். என்கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால், உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி. மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்,... நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்"–பிலிப்பியர் 1:2–9,11. (29)

பவுலின் சிறையிருப்பில் அவனுக்கிருந்த உபத்திரவத்தின்போது அவன் மகிழ்ந்து களிகூருபவனாக இருக்கும்படி தேவகிருபை அவனைத் தாங்கியது. விசுவாசத்துடனும் நிச்சயத்துடனும் அவனுடைய சிறைவாசம் சுவிசேஷம் முன்செல்லுவதற்கான பலனாயிருக்கிறது என்று பிலிப்பிய சகோதரர்களுக்கு எழுதினான். "சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன். அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என்கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி, சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்" (பிலிப்பியர் 1:12–14) என்று எழுதினான். (30)

பவுலின் இந்த அனுபவத்தில் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. ஏனெனில் அது தேவன் செயலாற்றும் விதத்தை வெளிப்படுத்துகிறது. நமக்குக் கலக்கமாகவும் தோல்வியாகவும் காணக்கூடியதிலிருந்து கர்த்தரால் வெற்றியைக் கொண்டுவரமுடியும். விசுவாசக்கண்களினால் காணக்கூடாதவைகளைப் பார்ப்பதற்குப்பதிலாக காணப்படுபவைகளைப் பார்த்து, தேவனை மறந்துவிடக்கூடிய அபாயத்தில் நாம் இருக்கிறோம். வருத்தங்களும் அழிவும் உண்டாகும்போது, தேவன் அலட்சியமும் கொடூரமுமிக்கவர் என்று அவரைக் குற்றப்படுத்த நாம் ஆயத்தமாகிறோம். நமது பயன்பாட்டை ஏதாவது ஒரு வழியில் குறைத்துப்போடுவதை பொருத்தமானதாக அவர் காணும்போது, தேவன் நமது நன்மைக்காகச் செயலாற்றிக்கொண்டிருக்கலாம் என்று சிந்திப்பதை விடுத்து, புலம்புகிறோம். கடிந்துகொள்ளுவது அவரது பெரும் திட்டத்தில் ஒருபகுதியாக இருக்கிறது என்பதையும், சில சமயங்களில், துன்பப்படுதல் என்னும் கோலின்கீழ், கிறிஸ்துவின் தீவிரமான சேவையில் ஈடுபட்டிருக்கும்போது செய்வதைவிட, அவனால் அவனது ஆண்டவருக்கு அதிகமாகச் செயலாற்றமுடியும் என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாக உள்ளது. (31)

கிறிஸ்தவ வாழ்க்கையில் அவர்களுடைய உதாரணமாக பிலிப்பியருக்குப் பவுல் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டி, "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்"(பிலிப்பியர் 2:6–8) என்றான். (32)

"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (பிலிப்பியர் 2:13–16) என்று அவன் தொடர்ந்தான். (33)

முயற்சி செய்யும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் உதவியாக இருக்கும்படி இந்த வார்த்தைகள் பதிவுசெய்யப்பட்டன. பரிபூரணத்தின் தரத்தைப் பவுல் உயர்த்திப் பிடித்து, அதை அடைவது எப்படியென்று

காட்டுகிறான். “அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்”–பிலிப்பியர் 2:12,13. (34)

இரட்சிப்பை ஆதாயப்படுத்தும் பணி கூட்டாகச் செயல்படும் பணியாக உள்ளது. தேவனுக்கும் மனம்வருந்தும் பாவிக்குமிடையில் கூட்டுறவு இருக்கவேண்டியதாக உள்ளது. சுபாவத்தில் சரியான கொள்கைகள் அமைவதற்கு இடையூறு செய்பவைகளை மேற்கொள்ளுவதற்கு அவன் அக்கறைமிக்க முயற்சிகளைச் செய்யவேண்டியவனாக இருக்கிறான். ஆனால் அவன் வெற்றிக்கு முற்றிலுமாக தேவனைச் சார்ந்தவனாக இருக்கிறான். மனித முயற்சி தன்னில்தானே போதுமானதாக இல்லை. தெய்வீக வல்லமையின் உதவி இல்லாதபோது அது ஒன்றையும் அடைவதில்லை. தேவன் செயலாற்றுகிறார். மனிதனும் செயலாற்றுகிறான். சோதனையைத் தடுக்கின்ற தன்மை மனிதனிடத்திலிருந்து வரவேண்டும். அவன் தன்னுடைய வல்லமையை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். ஒருபக்கத்தில் முடிவில்லாத ஞானம், இரக்கம், வல்லமை ஆகியவை உள்ளன. மறுபக்கத்தில் பலவீனம், பாவத்தன்மை முற்றிலும் உதவியற்ற நிலை ஆகியவை உள்ளன. (35)

நாம் நம்மீது வெற்றியடையவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆனால் நமது சம்மதமும் ஒத்துழைப்பும் இல்லாதபோது, அவரால் நமக்கு உதவ இயலாது. மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வல்லமைகள் மனத்திறன்கள் ஆகியவைகளின்மூலமாக தெய்வீக ஆவி செயலாற்றுகின்றது. தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக நமது நோக்கங்கள், வாஞ்சைகள் விருப்பங்கள் ஆகியவைகளை நாமாகக் கொண்டுவரமுடியாது. ஆனால் நாம் விருப்பமுள்ளவர்களாக இருந்தால், “அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்”–2 கொரிந்தியர் 10:5. (36)

சரியான அளவில் உள்ள பலமிக்க சுபாவத்தை அமைக்க விரும்பும் ஒருவன், அவன் மிக நன்றாக சமச்சீரான நிலைமையுள்ள கிறிஸ்தவனாக இருந்து, எல்லாவற்றையும கிறிஸ்துவிற்காகக் கொடுத்துவிடவும் செயலாற்றவும் வேண்டும். ஏனெனில் மீட்பர் பிரிவினையுள்ள சேவையை ஏற்றுக்கொள்ளமாட்டார். சுயத்தைச் சரணடையச் செய்தலின் அர்த்தத்தை அவன் நாள்தோறும் கற்கவேண்டும். அவன் தேவனுடைய வார்த்தையின்

பொருளை அறிந்து, அதன் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதைக் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறாக, அவன் கிறிஸ்தவத்தின் உன்னதமான நிலையின் தரத்தை அடையலாம். இறுதிச்சோதனையின் நேரத்தில் நிற்கும் படியான சுபாவத்தைப் பூரணப்படுத்திக்கொண்டு, நாள்தோறும் தேவன் அவனுடன் செயலாற்றுகிறார். விழுந்துபோன மனிதனுக்கு சுவிசேஷத்தால் என்ன செய்யமுடியும் என்பதைக்காட்டிக்கொண்டு, விசுவாசி நாள்தோறும் மனிதர்களுக்கும் தேவதூதுர்களுக்கும் முன்பாக இந்த மிக உயர்ந்த ரோசதனையைச் செயலாற்றுகிறான். (37)

“நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்” (பிலிப்பியர் 3:12–14) என்று பவுல் எழுதினான். (38)

பவுல் அநேக காரியங்களைச் செய்தான். அவன் தனது உறவைக் கிறிஸ்துவிற்குக் கொடுத்த நேரத்திலிருந்து, அவனது வாழ்க்கை களைப்பில்லாத ஊழியத்தினால் நிறைந்திருந்தது. நகரத்திலிருந்து நகரத்திற்கும் நாட்டிலிருந்து நாட்டுக்கும், சிலுவையின் கதையைக் கூறிக்கொண்டு, சுவிசேஷத்திற்கு மாறினவர்களை வெற்றியாக அடைந்து கொண்டு, சபைகளை ஏற்படுத்திக்கொண்டு, அவன் பயணம் செய்திருந்தான். இந்த சபைகளின்மீது அவன் தொடர்ச்சியான கரிசனையுடையவனாக இருந்து, அவைகளுக்கு உபதேசங்கள் மிக்க அநேக நிருபங்களை எழுதியிருந்தான். சில சமயங்களில் அவனுடைய அன்றாட உணவைச் சம்பாதிப்பதற்காக தனது தொழிலைச் செய்திருந்தான். ஆனால் அவனுடைய வாழ்க்கையின் தீவிரமான வேலைகளுக்கிடையில் தனது ஒரு பெரும் நோக்கத்தைப்பற்றிய பார்வையை ஒருபோதும் இழக்காதிருந்தான். அவன் தனக்கு முன்னாக ஒரு குறிக்கோளை உறுதியாகக்கொண்டிருந்தான். தமஸ்குவின் வாசலில் தம்மை அவனுக்கு வெளிப்படுத்தினவருக்கு விசுவாசமுள்ளவனாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். இந்தக் குறிக்கோளிலிருந்து அவனைத் திருப்ப எதற்கும் வல்லமை இருக்கவில்லை. கல்வாரிச் சிலுவையை உயர்த்துதல் ஒன்றுமட்டுமே அவனுடைய எல்லாவற்றையும் ஈர்க்கின்ற இலட்சியமாக இருந்தது. அதுவே தேவனுடைய வார்த்தைகளையும் செயல்களையும் ஏவுகின்றதாகவும் இருந்தது. (39)

கடினமான நிலைகளிலும் கஷ்டங்களிலும் பவுலை முன்னோக்கிச் செல்லும்படி நெருக்கி ஏவியிருந்த பெரும் நோக்கம், ஒவ்வொரு கிறிஸ்தவ ஊழியக்காரனையும் தன்னை தேவனுடைய சேவைக்கென்று முற்றிலுமாக அர்ப்பணம் செய்யும்படி நடத்தவேண்டும். இரட்சகரிலிருந்து அவனுடைய கவனத்தைத் திருப்பும்படி உலகப்பிரகாரமான கவர்ச்சிகள் முன்வைக்கப்படும். ஆனால் உலகத்திற்கும் தூதர்களுக்கும் மனிதர்களுக்கும்முன் தேவனுடைய முகத்தைப் பார்க்கக்கூடிய நம்பிக்கைக்காக—இந்த நம்பிக்கையை அடைவதற்காக அவசியப்படும் முயற்சிகள் அனைத்தையும் தியாகத்தையும் செய்வது விலைமதிப்புடையதாகும் என்று காட்டிக்கொண்டு, அவன் தனது இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டியவனாக இருக்கிறான். (40)

பவுல் ஒரு சிறைக்கைதியாக இருந்தபோதிலும், அவன் அதைரியமடையவில்லை. அதற்குப் பதிலாக அவன் ரோமாபுரியிலிருந்து சபைகளுக்கு எழுதின கடிதங்களில் வெற்றியின் ஒரு மணியோசை ஒலிக்கிறது. "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்" (பிலிப்பியர் 4:19,23) என்பதாக. (41) ★

# 46

# பரம தேவனால் பாதுகாக்கப்பட்ட பவுல்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 485–488)**

ரோமாபுரியில் பவுல் செய்த ஊழியம் அநேகரின் மாற்றத்திற்கு ஆசீர்வாதமாகத் திகழ்ந்திருந்து, விசுவாசிகளைப் பலப்படுத்தி, தைரியப்படுத்திக்கொண்டிருந்தபோது, அவனுடைய பாதுகாப்பை மட்டு மல்லாமல் சபையின் செழுமையையும் அச்சுறுத்திக்கொண்டிருந்த மேகங்கள் திரண்டன. அவன் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தபோது, காவலாளிகளின் பொறுப்பில் வைக்கப்பட்டான். அவன் நீதியும் நேர்மையும் உள்ளவனாக இருந்து, அவனது இரக்கத்தில் ஒப்பிடுகின்ற அளவிற்கு சுவிசேஷ ஊழியத்தைப் பின்தொடருவதற்கு சுதந்திரமுள்ளவனாக விடப்பட்டிருந்தான். ஆனால் அந்த இரண்டு வருட சிறைவாசம் முடிவடைவதற்குமுன், அந்த அதிகாரி இருந்த இடத்தில் பவுல் சிறப்பான அனுகூலம் எதையும் பெறமுடியாத ஒரு அதிகாரி வைக்கப்பட்டான். (1)

இப்பொழுது யூதர்கள் பவுலுக்கெதிரான அவர்களுடைய முயற்சிகளில் அதிகத் தீவிரம் உள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் நீரோவின் இரண்டாவது மனைவியில் திறமைமிக்க யூத ஸ்திரீயைக் கண்டனர். இவள் யூத மார்க்கத்திற்கு மாறினவளாக, கிறிஸ்தவத்தின் வீரனுக்கு எதிரானவர்களுடைய கொலைகாரத் திட்டங்களுக்குத் தனது செல்வாக்கைக் கொடுத்திருந்தாள். (2)

பவுல் தான் மேல்முறையீடு செய்திருந்த இராயனிடமிருந்து சிறு அளவிலாவது நீதி கிடைக்கலாம் என்ற நம்பிக்கை இல்லாதவனாக இருந்தான். நீரோ, சன்மார்க்க நெறியில் மிகவும் கீழானவனாகவும் சுபாவத்தில் கருத்தற்றவனாகவும் இருந்தான். அதே நேரத்தில், அவனுக்கு

முன்னிருந்த அதிபதிகளைவிட அதிகமான கொடுமைகளைச் செய்யத் திறமை உள்ளவனாகவும் இருந்தான். அவனைவிட மிகவும் சர்வாதிகாரமிக்க அதிபதியிடம் அரசாங்க ஆளுகை ஒப்படைக்கப்படமுடியாததாக இருந்தது. அவனுடைய ஆளுகையின் முதல் வருடம் சிங்காசனத்திற்கு வாரிசாக இருந்த அவனது ஒன்றுவிட்ட சகோதரனுக்கு விஷம்கொடுத்தது அடையாளமாயிருந்தது. நீரோ தனது அன்னையையும் அதன்பின் அவனது மனைவியையும் கொலைசெய்ததில் குற்றத்தின் ஒரு ஆழத்திலிருந்து அடுத்த ஆழத்திற்குக் கீழே இறங்கியிருந்தான். அவன் செய்யாத அக்கிரமம் இருக்கவில்லை. அவன் இறங்காத வெறுக்கத்தக்க செயல் இருக்கவில்லை. மேன்மைமிக்க ஒவ்வொரு உள்ளத்திலும் அவன் வெறுப்பையும் அவமதிப்பையும் மட்டுமே தூண்டியிருந்தான். (3)

அவனது அரண்மனையில் நடத்தப்பட்டிருந்த கொடுமைகளின் விபரம் விவரிப்பதற்கு மிகவும் கீழ்த்தரமானதாகவும், மிகவும் கோரமானதாகவும் இருந்தது. அவன் செய்திருந்த துன்மார்க்கமான செயல்கள், அவனுடைய குற்றங்களில் பங்குபெறும்படி வற்புறுத்தப்பட்டிருந்தவர்களில்கூட வெறுப்பை உண்டுபண்ணியிருந்தது. அடுத்து எவ்வளவு மட்டுமீறிய மூர்க்கமானவைகளைச் செய்யும்படி அவன் கூறுவான் என்னும் தொடர்ச்சியான பயத்தில் அவர்கள் இருந்தார்கள். நீரோ செய்த அப்படிப்பட்ட குற்றங்களுங்கூட அவனுக்குக் கீழிருந்தவர்களின் உறவை அசைக்கவில்லை. உலகமுழுவதற்குமான கட்டுக்கடங்காத அதிபதி என்று நாகரீக உலகம் அவனை ஏற்றுக்கொண்டிருந்தது. இதற்கும் அதிகமாக அவன் தெய்வீக கனங்களைப் பெறுபவனாக்கப்பட்டு, தெய்வமாக வணங்கப்பட்டிருந்தான். (4)

மனிதப் பார்வையின் நிதானிப்பிலிருந்த அப்படிப்பட்ட ஒரு நீதிபதியின் முன் பவுலின் தண்டனை நிச்சயமானதாக இருந்தது. அப்போஸ்தலன் தான் தேவனுக்கு இராஜவிசுவாசம் உள்ளவனாக இருக்கும்வரை அவன் பயப்படுவதற்கு ஒன்றும் இருக்கவில்லையென்று உணர்ந்திருந்தான். கடந்தகாலத்தில் அவனது பாதுகாப்பாளராக இருந்த **ஒருவர்**, யூதர்களின் வன்மத்திலிருந்தும் இராயனின் வல்லமையிலிருந்தும் தொடர்ந்து அவனைக் கேடயமாகக் காப்பார். (5)

தேவன் அவருடைய ஊழியக்காரனுக்குக் கேடயமாயிருந்தார். பவுலின் விசாணையின்போது, அவனுக்கெதிரான குற்றச்சாட்டுகள் நிற்கவில்லை. பொதுவான எதிர்பார்ப்பிற்கு எதிராகவும் நியாயத்தீர்ப்புச் செய்வதில் அவனுடைய சுபாவத்திலிருந்து மாறுபட்டவிதத்திலும் அந்தக் கைதியைக் குற்றமில்லாதவன் என்று நீரோ அறிவித்தான். பவுலின் கட்டுகள் நீக்கப்பட்டன. மறுபடியும் அவன் ஒரு சுதந்தரமான மனிதனானான். (6)

அவனைப்பற்றிய விசாரணை தள்ளிப்போடப்பட்டோ, அல்லது ஏதாவது காரணத்தினால் அடுத்த வருடம்வரை ரோமாபுரியில் தங்கியிருக்கும்படி செய்யப்பட்டிருந்தாலோ, சந்தேகத்திற்கிடமில்லாமல் அதன்பின் நடந்திருந்த உபத்திரவத்தில் அவன் அழிந்திருப்பான். பவுலின் சிறைவாசத்தின்போது, அதிகாரிகளின் கவனத்தைக் கவரவும், பகையை உண்டுபண்ணும்படியும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானதாக இருந்தது. தனது வீட்டிலிருந்தவர்களின் மாற்றம், பேரரசனின் கோபத்தை அதிமாக எழுப்பிவிட்டதினால், கிறிஸ்தவர்கள் அவனுடைய இரக்கமற்ற கொடுமைகளின் பொருளாகும்படி விரைவில் அவன் ஒரு போலிக் காரணத்தைக் கண்டான். (7)

இந்த நேரத்தில் ரோமாபுரியில் ஒரு தீவிபத்து உண்டாகி, ஏறத்தாழ அதன் பாதிப்பாகம் எரிந்துபோனது. நீரோ தானே இந்த நெருப்பை மூட்டிவிட்டதாக வதந்தியிருந்தபோது, சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக வீடில்லாதவர்களுக்கும் ஆதரவில்லாதவர்களுக்கும் உதவி செய்வதினால் பெரியஅளவில் ஈகைசெய்வதுபோல் அவன் தன்னைக் காட்டிக்கொண்டான். என்றபோதும் அவன் குற்றஞ்சாட்டப்பட்டான். மக்கள் எழுச்சியும் சீற்றமும் அடைந்தனர். அவன் தன்னைக் குற்றம் இல்லாதவன் என்று காட்டிக்கொள்ளுவதற்காகவும், தான் பயந்துவெறுத்த ஒரு வகுப்பினரைத் துடைத்து நீக்கவும், நீரோ குற்றத்தைக் கிறிஸ்தவர்களின்மீது திருப்பிவிட்டான். அவனுடைய உபாயம் வெற்றியடைந்தது. ஆண்கள், பெண்கள், சிறுபிள்ளைகள் ஆகிய ஆயிரக்கணக்கான கிறிஸ்துவின் அடியார்கள் மிகக் கொடூரமான விதத்தில் கொல்லப்பட்டனர். (8)

பயங்கரமான இந்த உபத்திரவத்திலிருந்து பவுல் காக்கப்பட்டான். ஏனெனில் அவன் விடுதலையடைந்தவுடனே ரோமாபுரியைவிட்டுச்சென்றான். சுதந்திரத்தின் இந்த இறுதி இடைவேளையை சபைகளுக்கு மத்தியில் ஊழியஞ்செய்வதில் அவனை முன்னேற்றமடையச்செய்தன. கிரேக்க சபைகளுக்கும் கிழக்கத்திய சபைகளுக்கும் இடையில் ஒரு உறுதியான ஒற்றுமையை ஏற்படுத்தவும், விசுவாசத்தைக் கறைப்படுத்தக்கூடிய தவறான கோட்பாடுகளுக்கு எதிராக விசுவாசிகளின் மனங்களைத் திடப்படுத்தவும் அவன் வகைதேடினான். (9)

பவுல் தாங்கியிருந்த சோதனைகளும் கவலைகளும் அவனது உடலை வேட்டையாடியிருந்தன. முதிர்வயதின் பலவீனங்கள் அவன்மீதிருந்தன. இப்பொழுது தன்னுடைய கடைசி வேலையைச் செய்துகொண்டிருப்பதாக உணர்ந்தான். அவனுடைய வேலையின் காலம் குறைந்து கொண்டிருந்ததினால், அவனுடைய முயற்சிகள்

மிகவும் வலிமை அடைந்தன. அவனுடைய பேரார்வத்திற்கு எல்லை இல்லாததுபோல் காணப்பட்டது. நோக்கத்தில் தீர்மானமும், செயலில் விரைவும், விசுவாசத்தில் பலமும் கொண்டவனாக, அநேக நாடுகளில் சபையிலிருந்து சபைக்குப் பயணம்செய்து, விசுவாசிகள் இயேசுவிற்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்கேதுவாக உண்மையான ஊழியம் செய்யவும், அவர்கள் பிரவேசித்துக்கொண்டிருந்த சோதனையின் நேரத்தில் சுவிசேஷத்திற்கு உறுதியாக நின்று, கிறிஸ்துவிற்கு உண்மையான சாட்சி பகரவும் அவர்களுடைய கைகளை திடப்படுத்துவதற்கு, தன் வல்லமைக்குள் இருந்த அனைத்தையும் செய்ய வகைதேடினான். (10) ★

# 47

# பவுலாரின் இறுதி சிறைவாசம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 489–491)**

ரோமாபுரிச் சிறையிலிருந்து பவுல் விடுதலையடைந்தபின், சபைகளுக்கிடையில் அவன் செய்திருந்த ஊழியங்கள் அவனது எதிரிகளின் பார்வையிலிருந்து தப்பவில்லை. நீரோவினால் உண்டான உபத்திரவம் ஆரம்பமானதிலிருந்து கிறிஸ்தவர்கள் ஆபத்தான தனிக்குழுவினர் என்று தடைசெய்யப்பட்டிருந்தனர். சில நாட்களுக்குப்பின் பவுல் ரோமாபுரியை எரிப்பதற்கு தூண்டிவிட்டான் என்னும் குற்றத்தை அவன்மீது சுமத்த விசுவாசமில்லாத யூதர்கள் ஒரு யோசனை செய்தார்கள். அவர்களில் ஒருவன்கூட அவன் குற்றவாளியாக இருந்தான் என்று விநாடிநேரம்கூட நினைக்கவில்லை. ஆனால் அறிவுக்குப் பொருத்தமானதாக மங்கலான விதத்தில்கூட அந்தக் குற்றச்சாட்டின் சாட்சியும் இருக்கவில்லை என்பதையும் ஆனால் அது அவனது வீழ்ச்சிக்கு முத்திரையிடும் என்பதயும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களது முயற்சியின்மூலமாக பவுல் மறுபடியும் கைதுசெய்யப்பட்டு, அவனது கடைசிச் சிறைவாசத்திற்கு விரைந்து கொண்டுசெல்லப்பட்டான். (1)

அவன் இரண்டாவது தடவையாக ரோமாபுரிக்குக் கப்பல் பயணம்செய்தபோது, பவுலுடன் மேலும் பலர் அவனது வீதத்தில் பங்குகொள்ள ஆயத்தமாக இருந்தனர். ஆனால் இப்படி அவர்கள் தங்களுடைய உயிர்களை ஆபத்திற்குள்ளாக்குவதை அனுமதிக்க அவன் மறுத்துவிட்டான். இப்பொழுது அவன்முன் இருந்த வெற்றிவாய்ப்பு அவனது முந்தைய சிறையிருப்பின் காலத்தில் இருந்ததைவிட மிகவும் அனுகூலக்குறைவானதாக இருந்தது. நீரோவினால் உண்டுபண்ணப்பட்ட உபத்திரவம் ரோமாபுரியில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை மிக அதிகமான அளவிற்குக் குறைத்தது. தங்களுடைய விசுவாசத்திற்காக

ஆயிரக்கணக்கானவர்கள் இரத்தசாட்சிகளாகியிருந்தனர். அநேகர் அந்த நகரத்தைவிட்டு வெளியேறினார்கள். அங்கு தங்கியிருந்தவர்கள் பெரிதான மனச்சோர்வினை உடையவர்களாகவும் அச்சுறுத்தப்பட்டவர்களாகவும் இருந்தனர். (2)

பவுல் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்ததும், அவன் அவனுடைய காரியம் முடிவடையும்வரை ஒரு இருண்ட நிலவறையில் இருக்கும்படி வைக்கப்பட்டான். நகரத்திற்கும் நாட்டிற்கும் எதிராக மிகவும் கீழ்த்தரமானதும் பயங்கரமானதுமான குற்றஞ்செய்யும்படி தூண்டிவிட்டான் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, அவன் எல்லோராலும் வெறுக்கப்பட்ட பொருட்களில் ஒன்றாக இருந்தான். (3)

அப்போஸ்தலனுடைய பாரங்களில் பங்குபெற்றிருந்த நண்பர்களில் சிலர், இப்போது பிரிவினைகளினாலும் மற்றவர்கள் பல்வேறுபட்ட சபைகளுக்கு ஊழியஞ்செய்வதற்காகவும் அவனைவிட்டு விலகிச்செல்லத் தொடங்கினார்கள். பிகெல்லுவும் எர்மொகெனேயும் சென்றவர்களில் முதலாவதானவர்களாக இருந்தனர். அதன்பின் துன்பங்கள் அபாயங்கள் ஆகிய மேகங்கள் கனத்தபோது, தேமா போன்றவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்த அப்போஸ்தலனைக் கைவிட்டுச்சென்றனர். கிரெஸ்கே பவுலினால் கலாத்தியாவிற்கும், தீத்து தல்மத்தியாவிற்கும், தீகிக்கு எபேசுவிற்கும் அனுப்பப்பட்டனர். இந்த அனுபவத்தைப்பற்றித் தீமோத்தேயுவிற்குப் பவுல் எழுதும்போது, “லூக்கா மாத்திரம் என்னுடன் இருக்கிறான்” என்று எழுதினான் உழைப்பினாலும் பலவீனங்களினாலும் ரோமாபுரிச் சிறையின் ஈரமிக்க இருண்ட நிலவறையில் அடைக்கப்பட்டிருந்ததினாலும் இந்த நேரத்தில் அப்போஸ்தலனுக்கு அவசியப்பட்டதுபோல தனது சகோதரர்களின் ஊழியம் வேறொருபோதும் அவசியமாக இருக்கவில்லை. நேசிக்கப்பட்ட சீடனும் விசுவாசமிக்க சிநேகிதனுமாக இருந்த லூக்காவின் சேவைகள் பவுலுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. லூக்கா தனது சகோதரர்களுடனும் வெளி உலகத்துடனும் தொடர்புகொள்ள அவனைத் தகுதிப்படுத்தியிருந்தான். (4)

சோதனையான இந்த நேரத்தில் ஒநேசிப்போரு அடிக்கடி அவனைச் சந்தித்ததினால் பவுலின் இருதயம் உற்சாகமடைந்தது. இந்த அனலான இருதயமுள்ள எபேசியன், அப்போஸ்தலனின் சிறையிருப்பில் உண்டாகியிருந்த பாரத்தை இலகுவாக்க அவனுடைய வல்லமையில் இருந்த அனைத்தையும் செய்தான். சத்தியத்திற்காக அவன் சுதந்திரமுள்ளவனாக இருந்தபோது அவனது அன்பான ஆசிரியன் கட்டுகளில் இருந்தான். பவுலின் பங்கைத் தாங்கக்கூடியதாகச் செய்வதற்கு அவன் தன்னிடமிருந்த எந்த முயற்சியையும் விட்டுவைக்கவில்லை. (5)

விசுவாசமிக்க இந்தச் சீடனைப்பற்றி அப்போஸ்தலன் எழுதின கடைசிக் கடிதத்தில்: "ஓநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை; அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான். அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ்செய்வாராக; அவன் எபேசுவிலே செய்த பற்பல உதவிகளையும் நீ நன்றாய் அறிந்திருக்கிறாயே" (2 தீமோத்தேயு 1:16–18) என்று எழுதினான். (6)

அன்பு செலுத்தவேண்டும், அனுதாபம் காட்டவேண்டும் என்ற வாஞ்சையை இருதயத்தில் தேவன்தாமே நாட்டியிருக்கிறார். கிறிஸ்து கெத்சமேனெயில் அனுபவித்த அவரது வேதனையின் நேரத்தில் தமது சீடர்களின் அனுதாபத்திற்காக ஏங்கினார். வெளித்தோற்றத்தில் பவுல் கடினமான நிலை, பாடுகள்பற்றி மந்தமானவனாக இருந்தபோதிலும், அனுதாபத்திற்காகவும் தோழமைக்காகவும் ஏங்கியிருந்தான். தனிமையிலும் கைவிடப்பட்ட நிலைமையிலும் இருந்த நேரத்தில் தனது மெய்ப்பற்றுக்கு சாட்சிகொடுத்துக்கொண்டிருந்த ஒனேசிப்போருவின் சந்திப்பு, பிறருடைய சேவைக்கென்று தன்னுடைய வாழ்க்கையைச் செலவழித்திருந்த ஒருவனுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொண்டுவந்தது. (7) ★

# 48

# நீரோவின் முன் பவுல்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 492–497)**

பவுல் விசாரணைக்காக நீரோவின் முன் அழைக்கப்பட்டபோது, அது மரணதண்டனைக்கு அருகில் இருக்கிறது என்பதாக இருந்தது. அவன் மீது சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளின் கடுமையான தன்மை, கிறிஸ்தவர்களுக்கு எதிராக நிலவியிருந்த விரோதம் ஒரு அனுகூலமான பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லாததாகச் செய்திருந்தது. (1)

குற்றஞ்சாட்டப்பட்டவன் நீதிமன்றத்திற்குமுன் தனக்காகப் பரிந்து பேசும் ஒருவனை ஏற்படுத்திக்கொள்ள அனுமதிப்பது ரோமர்கள், கிரேக்கர்கள் ஆகியவர்களுக்கு மத்தியில் ஒரு சம்பிரதாயமாக இருந்தது. வலிமைமிக்க வாதத்தினாலும் மன உருக்கமிக்க வாக்குவன்மையினாலும் அல்லது மன்றாட்டுக்களினாலும் அப்படிப்பட்ட ஒரு வழக்குரைஞன் கைதிக்கு அனுகூலமான முடிவைப் பெற்றிருந்தான். இதில் தோற்கும்போது, தண்டனையின் கடுமையைக் குறைப்பதில் வெற்றி கண்டிருந்தான். ஆனால் பவுல் நீரோவின்முன் அழைக்கப்பட்டபோது, அவனது ஆலோசகராக அல்லது பரிந்து பேசுபவராகச் செயலாற்ற ஒரு மனிதனும் துணியவில்லை. அவனுக்கெதிராகக் கொண்டுவரப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளின் அல்லது அவன் தனது சுயபாதுகாப்பில் வற்புறுத்தியிருந்த வாதங்களின் ஆவணங்களைப் பாதுகாத்துவைக்க அவனருகில் ஒரு நண்பனுங்கூட இருக்கவில்லை. பரீட்சிக்கப்பட்டிருந்த அந்த நேரத்தில், அவனருகில் நிற்பதற்காக ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு மத்தியிலிருந்தும் ஒருவனும் முன்வரவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப்பற்றிய நம்பக்கூடிய ஒரே ஆதாரம் பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் அவனாலேயே கொடுக்கப்பட்டுள்ளது. "நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக்

கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாகநின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்"–2 தீமோத்தேயு 4:16–17. (2)

நீரோவிற்குமுன் பவுல்! ஒப்புமை எப்படிக் குறிப்பானதாக இருக்கிறது. எந்த ஒரு அகந்தைமிக்க அரசனுக்குமுன் தேவனுடைய மனிதன் தனது விசுவாசத்திற்காகப்பதில்கூறவேண்டியிருந்ததோ, அவன்பூமிக்குரிய வல்லமை, அதிகாரம், செல்வம் ஆகிய உயரத்திற்கும் அதைப்போலவே குற்றம், அக்கிரமம் ஆகியவைகளின் ஆழத்திற்கும் சென்றிருந்தான். வல்லமையிலும் பெரியதன்மையிலும் அவன் எதிர்ப்பில்லாமல் நின்றிருந்தான். அவனுடைய அதிகாரத்தைப்பற்றிக் கேள்விகேட்கவோ அல்லது அவனுடைய சித்தத்தைத் தடைசெய்யவோ ஒருவரும் இருக்கவில்லை. அரசர்கள் தங்களுடைய கிரீடங்களை அவனுடைய பாதத்தில் வைத்திருந்தனர். வல்லமைமிக்க சேனைகள் அவனுடைய கட்டளையின்படி நடந்திருந்தன. அவனுடைய கப்பல் படையின் சின்னங்களே வெற்றியைக் கொண்டுவந்திருந்தன. நீதிமன்ற மண்டபங்களில் அவனது சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. அரசவை அங்கத்தினர்களும் நீதிபதிகளின் முடிவுகளும் அவனது சித்தத்தின் எதிரொலியாக இருந்தன. லட்சக்கணக்கானவர்கள் அவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து குனிந்து வணங்கினார்கள். நீரோவின் பெயர் உலகத்தை நடுங்கச்செய்திருந்தது. அவனுடைய கோபத்திற்கு ஆளாவது என்பது சொத்து, சுதந்திரம், உயிர் ஆகியவைகளின் இழப்பிற்குக் காரணமாக இருந்தது. அவனுடைய கோபம் கொள்ளைநோயைவிட அதிகமாகப் பயப்படவேண்டியதாக இருந்தது. (3)

பணமில்லாமல் நண்பர்களில்லாமல் ஆலோசகர்கள் இல்லாமல் முதியவனாக அந்தக் கைதி நீரோவின்முன் நின்றான். வெட்கம் நிறைந்த வெறிகளின் ஆவணங்களினால் உள்ளூரக் கோபாவேசமான முகத்தை உடையவனான அந்தப் பேரரசனும், இருதயத்தில் தேவ சமாதானத்தைப் பெற்றிருக்கிறான் என்பதைக் கூறுகின்ற முகத்துடன் குற்றவாளியும், ஒருவருக்கொருவர் எதிராக நின்றார்கள். வறுமை, சுயமறுப்பு, பாடுகள் ஆகியவைகளை உடையதாகப் பவுலின் அனுபவங்கள் இருந்தன. தொடர்ச்சியாகத் தவறான எடுத்துக்காட்டுதல், நிந்தைகள் தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவைகளினால் அவனுடைய எதிரிகள் அவனைக் கோழையாக்குவதற்கு முயன்றிருந்தபோது, அவன் அச்சமின்றி சிலுவையின் தரத்தை உயர்த்திப் பிடித்திருந்தான். அவனுடைய ஆண்டவரைப்போலவே

அவனும் ஒரு வீடில்லாது அலைந்து திரிபவனாக இருந்தான். அவரைப்போலவே அவனும் மானுடத்தை ஆசீர்வதிப்பதற்காக வாழ்ந்திருந்தான். ஒரு சலனபுத்தியுடைய வெறிமிக்க கொடுங்கோலனான நீரோவினால் இந்த தேவனுடைய மகனின் சுபாவங்களையும் நோக்கங்களையும் எப்படி வரவேற்கமுடியும்? (4)

நடக்கவிருப்பவைகளையெல்லாம் பார்ப்பதற்காகவும் கேட்பதற் காகவும் ஆவலுள்ளவர்களாக அமைதியற்றவர்களின் விசாரணை மண்டபத்திலிருந்தவர்களின் கூட்டம் எழும்பி ஒருவரையொருவர் முன்செல்ல நெருக்கினார்கள். மேலானவர்களும்—கீழானவர்களும், பணக்காரனும்—ஏழையும், கற்றவர்களும்—கல்லாதவர்களும், அகந்தை மிக்கவர்களும்—தாழ்மையானவர்களும் வாழ்க்கையின் பாதை, இரட்சிப்பு ஆகியவைகளைப்பற்றின உண்மையான அறிவு இல்லாதவர்களாக ஒருமித்திருந்த அனைவரும் அங்கிருந்தனர். (5)

அரசுக்கு எதிராகச்செயல்படுதல், வஞ்சகம், மதப்புரட்டு ஆகிய பழைய குற்றச்சாட்டுகளைப் பவுலுக்கெதிராக யூதர்கள் கொண்டுவந்து, ரோமர்களும் யூதர்களும் ஒன்றுசேர்ந்து ரோமாபுரியை எரிப்பதற்கு (மக்களைத்) தூண்டிவிட்டான் என்ற குற்றத்தை அவன்மீது சாட்டினார்கள். அவனுக்கெதிராக இந்தக் குற்றச்சாட்டுகளை அவன் வற்புறுத்தினபோது, பவுல் தடைபடாத அமைதியைக் காத்திருந்தான். மக்களும் நீதிபதிகளும் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தனர். அவர்கள் பல விசாரணைகளின்போது இருந்திருந்த அநேக குற்றவாளிகளைப் பார்த்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் முன்னிருந்த இந்தக் கைதியைப்போல பரிசுத்தமான அமைதிமிக்க பார்வையை உடைய ஒருவனை அவர்கள் இதற்குமுன் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. குற்றவாளிகளின் முகங்களை வாசித்தறிவதில் பழக்கப்பட்டிருந்த நீதிபதிகளின் கூர்மையான கண்கள், குற்றத்திற்கான ஏதாவது சான்று கிடைக்கும் என்று பவுலின் முகத்தை வீணாக ஆராய்ந்தன. அவனுக்காகப் பேசும்படி அவன் அனுமதிக்கப்பட்டபோது, மிகுந்த அக்கறையுடன் அனைவரும் கவனித்தனர். (6)

ஆச்சரியமிக்க ஒரு திரளான கூட்டத்தினருக்குமுன் சிலுவையின் துகில்கொடியை உயர்த்திக்காட்ட பவுலுக்கு ஒரு வாய்ப்பு மறுபடியும் கிடைத்திருக்கிறது. கிரேக்கர்கள், யூதர்கள், பலதேசங்களிலிருந்துள்ள அந்நியர்களடங்கிய தனக்கு முன்னுள்ள கூட்டதினரை அவன் பார்த்தபோது, அவர்களுடைய இரட்சிப்பிற்காக அவனுடைய இருதயம் வலிமைமிக்க வாஞ்சையினால் கலக்கப்படுகிறது. அந்தச் சந்தர்ப்பம் தன்னைச் சூழ்ந்துள்ள அபாயங்களையும், அவனை சமீபித்துக்கொண்டிருப்பதுபோல்

தோன்றும் பயங்கரமான முடிவு ஆகியவைகளையும்பற்றிய பார்வையை அவன் இழந்தான். பாவமிக்க மனிதர்களுக்காக தேவனுக்கு முன்பாகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கும் பரிந்துபேசுபவரான இயேசுவை மட்டும் பார்க்கிறான். மனித வாக்குவன்மை, வல்லமை ஆகியவைகளைவிட அதிகமான பேச்சுத்திறனுடனும் வல்லமையுடனும் பவுல் சுவிசேஷத்தின் சத்தியங்களை முன்வைக்கிறான். விழுந்துபோன இனத்திற்காகச் செய்யப்பட்ட தியாகத்தை அவன் பேச்சைக் கேட்டிருந்தவர்களுக்கு அவன் சுட்டிக்காட்டுகிறான். மனிதனின் மீட்பிற்காக முடிவில்லாத ஒருவிலை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அவன் அறிவிக்கிறான். தேவ சிங்காசனத்தில் பங்குபெறுவதற்கு அவனுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேவதூதர்களாகிய தூதுவர்களால் பூமி பரலோகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மனிதர்களது செயல்கள் அனைத்தும் அவை நல்லவைகளானாலும் தீயவைகளானாலும் முடிவில்லாத நீதிபதியின் கண்களுக்குமுன் திறந்திருக்கின்றன. (7)

சத்தியத்திற்காகப் பரிந்துபேசுபவன் இப்படிப் பரிந்துபேசுகிறான். விசுவாசமில்லாதவர்களுக்கு மத்தியில் விசுவாசம் உள்ளவனாகவும், இராஜபக்தி இல்லாதவர்களுக்கு மத்தியில் இராஜபக்தி உள்ளவனாகவும், அவன் தேவனின் பிரதிநிதியாகவும் நிற்கிறான். அவனது குரல், பரலோகத்திலிருந்துள்ள குரல்போல் இருக்கிறது. வார்த்தையிலோ அல்லது செயலிலோ பயம், துயரம், அதைரியம் எதுவும் இருக்கவில்லை. குற்றமின்மையின் மன உணர்வின் பலத்துடன், சத்தியத்தின் உடையை அணிந்துகொண்டு தான் தேவனுடைய மகன் என்பதில் அவன் களிகூறுகிறான். போரின் கர்ஜனைக்கு மேலாக அவனுடைய வார்த்தைகள் வெற்றியின் சத்தமாக உள்ளன. அவன் தன்னுடைய வாழ்க்கையைப் பிரதிஷ்டை செய்துள்ள காரியத்தை ஒருபோதும் தோல்வியடையாத ஒரே காரியத்தை அறிவிக்கிறான். அவன் அழிந்தாலும் சுவிசேஷம் அழியாது. தேவன் ஜீவிக்கிறார். அவரது சத்தியம் வெற்றியடையும். (8)

அந்த நாளில் அவனைப் பார்த்தவர்களில் அநேகர், அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள். (அப்போஸ்தலர் 6:15). இதற்குமுன் ஒருபோதும் அந்தக் கூட்டத்தினர் இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்டிருக்கவில்லை. அவை மிகவும் கடினமானவர்களின் இருதயங்களைக்கூட அசைக்கும்படியாகக் கம்பியை மீட்டினது. தெளிவானதும் மனநிறைவை உண்டுபண்ணக்கூடியதுமான சத்தியம் தவறைத் தூக்கி வீசியது. அநேகரின் உள்ளங்களில் ஒளி பிரகாசித்தது. பின்பு, அநேகர் மகிழ்ச்சியுடன் அந்த ஒளிக்கதிர்களைப் பின்தொடர்ந்தனர். சாட்சி தன் கல்லறையில் மௌனமாக இருக்க வேண்டியதாகும்போது, அந்தநாளில் பேசப்பட்டிருந்த சத்தியங்கள்

நாடுகளை அசைப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்டதாகவும், காலம் முழுவதும் ஜீவித்திருக்கக்கூடியதாகவும் ஏற்படுத்தப்பட்டது. (9)

நீரோ சத்தியத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டதைப்போல இதற்குமுன் ஒருபோதும் கேட்டிருக்கவில்லை. அவனுடைய வாழ்க்கையிலிருந்த பெரும் அளவிலான குற்றம் இதற்குமுன் ஒருபோதும் அப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பாவத்தால் மாசுபடிந்திருந்த அவனுடைய ஆத்துமாவின் அறைகளுக்குள் பரலோக ஒளி துளைத்துச்சென்றது. உலகத்தின் அதிபதியாக இருக்கும் அவன், முடிவில் ஒரு அணியில் நிறுத்தப்படுவானென்றும், அவனுடைய செயல்கள் நீதியான பலனைப் பெறுவதற்காக ஒரு நியாயசங்கத்தின்முன் கொண்டுவரப்படவேண்டும் என்னும் எண்ணத்தினால் அவன் நடுங்கினான். அவன் அப்போஸ்தலனின் தேவனுக்குப் பயந்தான். குற்றச்சாட்டுகள் எதுவும் பலனளிக்காதநிலையில் பவுலின்மீது தண்டனையை விதிக்க அவன் துணியவில்லை. இரத்த தாகம் கொண்டிருந்த அவனுடைய ஆவியை, ஒரு திகில் உணர்வு கட்டுப்படுத்தியிருந்தது. (10)

குற்றமுள்ளவனும் கடினமானவனுமாக இருந்த நீரோவுக்கு வினாடி நேரம் பரலோகம் திறக்கப்பட்டு, அதன் சமாதானமும் தூய்மையும் விரும்பப்படக்கூடியதாகக் காணப்பட்டது. அந்த வினாடியில் இரக்கத்தின் அழைப்பு அவனுடைய விரிவாக்கப்பட்டிருந்தது. ஆனால் வினாடி நேரத்திற்கு மட்டுமே மன்னிப்புக் கேட்கவேண்டும் என்னும் எண்ணம் வரவேற்கப்பட்டிருந்தது. திருப்பிக் கொண்டுசெல்லப்படவேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தேவனுடைய தூதுவனுக்குக் கதவு மூடப்பட்டபோது, ரோமாபுரியின் பேரரசனுக்கு மனந்திரும்புதலின் கதவு என்றென்றைக்குமாக மூடப்பட்டது. அவனைச் சூழ்ந்திருந்த இருளுக்குள் மறுபடியும் நுழைந்துசெல்லும்படி பரலோகத்தின் ஒளிக்கதிர் அனுமதிக்கப்படாததாக இருந்தது. தேவ கோபமாகிய நியாயத்தீர்ப்பை அவன் விரைவில் அனுபவிக்கவேண்டியவனாக இருந்தான். (11)

இதற்குப்பின் அதின நாட்கள் செல்லுமுன் நீரோ, கிரேக்க நாட்டிற்கு பயணத்தை மேற்கொண்டான். அங்கு தனது அவமதிக்கக்கூடியதும் கீழ்த்தரமானதுமான கேவலமான செயல்களினால் தனக்கும் தனது இராஜ்யத்திற்கும் அவமானத்தை உண்டுபண்ணினான். தனது அரசவை அங்கத்தினர்கள் புடைசூழப் பெரும் ஆடம்பரத்துடனும் ரோமாபுரிக்குத் திரும்பிவந்து, கலகத்திலும் குடிவெறியுமிக்க காட்சியிலும் அவன் ஈடுபட்டான். இந்த வெறியாட்டத்திற்கு நடுவில் சந்தடியின் அமளி தெருக்களில் கேட்டது. அந்தக் காரணத்தை அறிந்துவரும்படி அனுப்பப்பட்ட ஒரு தூதுவன், கல்பா

என்பவனின் இராணுவத்தலைமையில் ஒரு சேனை ரோமாபுரியை நோக்கி விரைவாகப் படையெடுத்து வந்துகொண்டிருக்கிறதென்றும், பேரரசனுக்கும் அவனது ஆதரவாளர்களுக்கும் மரணத்தை உண்டுபண்ணுகின்ற அபாயம் அரண்மனையை நோக்கி விரைவாகச் சமீபித்துக்கொண்டிருக்கிறது என்றும் அதிர்ச்சியான செய்தியுடன் திரும்பிவந்தான். (12)

ஆபத்தான இந்த நேரத்தில் விசுவாசமிக்க பவுலுக்கு வல்லமையும் மனஉருக்கமுமிக்க ஒரு தேவன் அவன் சார்ந்து நிற்பதற்கென்று இருந்ததைப்போல, நீரோவிற்கு இருக்கவில்லை. கலகக்காரர்களின் கூட்டத்தினரின் கைகளில் பிடிபட்டு அனுபவிக்கும்படி வற்புறுத்தப்படக்கூடிய பயங்கரமான பாடுகளுக்கும் சித்திரவதைகளுக்கும் பயந்து, துர்ப்பாக்கியமான அந்தக் கொடுங்கோலன் தனது கரங்களினாலேயே தனது உயிரை முடித்துக்கொள்ள எண்ணினான். ஆனால் நெருக்கடியான நேரத்தில் அவனது தைரியம் இல்லாமலாகிவிட்டது. முற்றிலுமாக மனிதத்துணை எதுவுமின்றி அவன் மிகவும் கேவலமான முறையில் நகரத்தைவிட்டு ஓடி, அண்மைத் தூரத்திலிருந்த ஒரு நாட்டுப்புற இடத்தில் பாதுகாப்பைத் தேடினான். ஆனால் அது கிடைக்கவில்லை. அவன் மறைந்திருந்த இடம் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டது. அவனைப் பின்தொடர்ந்த குதிரைவீரர்கள் சமீபித்தபோது, ஒரு அடிமையை அழைத்து, மரணத்திற்கேதுவான காயத்தை உண்டுபண்ணிக்கொண்டான். இவ்வாறாக, கொடுங்கோலனான நீரோ, தனது இளம் வயதில், முப்பத்தி இரண்டாவது வயதிலேயே மடிந்தான்! (13) ★

# 49

# பவுலின் கடைசிக் கடிதம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 498–508)**
**திருவசன ஆதாரம் : 2 தீமோத்தேயு**

தனக்கு ஒரு சுருக்கமான இடைவேளைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தவனாக, இராயனின் நியாயவிசாரணை மண்டபத்திலிருந்து பவுல் தனது அறைக்குத் திரும்பிவந்தான். அவனது எதிரிகள் அவனது மரணத்தைச் சூழ்ந்துகொள்ளும்வரை ஓய்ந்திருக்கமாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரை அவனது பேச்சைக் கவனித்திருந்த அவனுக்குமுன்னிருந்த பெரும் கூட்டத்தினருக்கு அறிவிப்பதே பெரிய வெற்றியாக இருந்தது. நீரோவும் கிறிஸ்துவின் எதிரிகள் யாவரும் சேர்ந்து, இடையூறு செய்யவும் அழிக்கவும் வீணாக வகைதேடியிருந்த ஒரு ஊழியமானது வளர்ந்து பலமடைய ஆரம்பித்திருந்தது. (1)

இருண்ட துயரமிக்க அவனுடைய நிலவறையில் இருந்துகொண்டு, நீரோவின் ஒரு வார்த்தை அல்லது சைகையில் அவனது உயிர் தியாகபலியாக செலுத்தப்பட்டுவிடும் என்பதை அறிந்திருந்த பவுல், தீமோத்தேயுவைப்பற்றிச் சிந்தித்து, அவனை அழைக்க ஆள் அனுப்பினான். எபேசு சபையைக் கவனிக்கின்ற பொறுப்பு தீமோத்தேயுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனவே, பவுல் ரோமாபுரிக்குப் பயணம் செய்தபோது, தீமோத்தேயுவை அங்கு விட்டுவந்திருந்தான் வழக்கத்திற்குமாறான ஆழமும் பலமுமிக்க பற்றினால் பவுலும் தீமோத்தேயுவும் ஒன்று சேர்ந்து கட்டப்பட்டிருந்தனர். தீமோத்தேயுவின் தோற்றத்தின்போதிருந்து, அவன் பவுலன் ஊழியங்களிலும் பாடுகளிலும் பங்குபெற்றிருந்தான். அவர்களிருவருக்குமிடையில் இருந்த நட்பு அதிக பலமுள்ளதாகவும் ஆழமானதாகவும் பரிசுத்தமானதாகவும் கனப்படுத்தப்படக்கூடிய ஒரு தகப்பனுக்கு மகன் எப்படிப்பட்டவனாக இருக்கமுடியுமோ அதுபோல வயது முதிர்ந்து உழைப்பினால் நலிந்துபோன

அப்போஸ்தலனுக்கு தீமோத்தேயு இருந்தான். பவுல் அவனுடைய தனிமையில் தீமோத்தேயுவைப் பார்ப்பதற்கு ஏங்கினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமிருக்கவில்லை. (2)

தீமோத்தேயு ஆசியா மைனரிலிருந்து ரோமாபுரிக்கு வந்து சேருவதற்கு சாதகமான சூழ்நிலைகளில் பலமாதங்கள் கடந்துசெல்லவேண்டும். பவுல் தனது ஜீவன் நிச்சயமற்றது என்பதை அறிந்து, தீமோத்தேயு அவனைப் பார்ப்பதற்கு வந்துசேர மிகவும் பிந்தினவனாக இருப்பான் என்று பயந்தான். பெரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டவனாக இருந்த தீமோத்தேயுவிற்குக் கொடுக்கும்படி பவுல் முக்கியமான ஆலோசனைகளையும் போதனைகளையும் உடையவனாக இருந்தான். தாமதமில்லாமல் வந்து சேரும்படி அவனை வற்புறுத்தியிருந்த அதே நேரத்தில் அவனால் கூறமுடியாமல் இருக்கக்கூடியதாக இருந்த, சாகும் தருவாயிலான காட்சியை பிறரைக்கொண்டு எழுதிவைத்தான். அவனுடைய ஆத்துமா தனது சுவிசேஷக் குமாரனின் அன்புமிக்க வரவேற்பினாலும், அவனது கவனத்திலிருந்த சபையின்மீதும் நிறைந்திருந்தது. பவுல் தீமோத்தேயுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பரிசுத்தமான நம்பிக்கையின்மீது இருக்கவேண்டிய மெய்ப்பற்றின் முக்கியத்துவத்தை தீமோத்தேயுவிற்கு உணர்த்த வகைதேடியிருந்தான். (3)

பவுல் தனது கடிதத்தை வந்தனத்துடன் ஆரம்பித்தான். “பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து, உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்” (2 தீமோத்தேயு 1:2–4). அதன்பின் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினான். “அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். அதற்கு நான் பிரசங்கியாகவும்,

அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன். அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோத்தேயு 1:9–12) என்று அறிவித்தான். (4)

பவுல் தனது நீண்ட கால சேவைகளுக்கூடாகத் தனது இரட்சகருடனுள்ள உறவில் ஒருபோதும் தவறாதவனாக இருந்தான். கோபத்தால் முகம் சுளிக்கும் பரிசேயர்களுக்கு முன்பானாலும், அல்லது ரோம நாட்டு அதிகாரிகளுக்கு முன்பானாலும், லிஸ்தீராவிலிருந்த கலகம் செய்யும் கூட்டத்தினருக்கு முன்பானாலும், மக்கெதோனிய நிலவறையில் கைதிகளாக்கப்பட்டிருந்த பாவிகளுக்கு முன்பானாலும், கலவரத்தால் பாதிக்கப்பட்டிருந்த உடைந்துபோன கப்பல் தொழிலாளர்களுக்கு முன்பானாலும், நியாயவாதம் செய்திருந்தபோதானாலும், அல்லது தனது ஜீவனுக்காகப் பரிந்துபேச நீரோவிற்குமுன் நின்றிருந்தபோதானாலும், தான் பரிந்துபேசியிருந்த காரியத்தைப்பற்றி அவன் ஒருபோதும் வெட்கப்படாதவனாக இருந்திருந்தான். எந்த ஒருவருடைய நாமம் ஒருசமயத்தில் அவனை அவமதிப்பினால் நிரப்பியிருந்ததோ, அவருக்காக சேவை செய்வது அவனது கிறிஸ்தவ வாழ்க்கையின் பெரும் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கத்திலிருந்து எதிர்ப்போ அல்லது உபத்திரவமோ அவனை ஒரு பக்கமாகத் திருப்புவதற்குத் தகுதியில்லாததாக இருந்தது. முயற்சியினாலும் தூய்மையான தியாகத்தினாலும் அவனுடைய விசுவாசம் பலமுள்ளதாக இருந்து, அவனைத்தாங்கி பலப்படுத்தியிருந்தது. (5)

"ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி" (2 தீமோத்தேயு 2:1–3) என்றான். (6)

கடினமான நிலைமைகளிலிருந்தோ அல்லது பொறுப்பிலிருந்தோ தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் பின்திரும்பமாட்டான். தெய்வீக வல்லமையை உண்மையுடன் தேடுபவர்களை ஒருபோதும் தோல்வி அடையச்செய்யாத ஆதாரத்திலிருந்த சோதனையை மேற்கொள்ளவும், தன்மீது தேவன் வைத்துள்ள கடமையைச்செய்யவும் அவன் பலத்தை அடைந்துகொள்கிறான். அவன் பெற்றுக்கொள்ளும் கிருபையின் தன்மை தேவனையும் அவரது குமாரனையும் அறிவதற்கான அவனது

தகுதியை விரிவடையச்செய்கிறது. ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊழியத்தைச் செய்ய அவனுடைய ஆத்துமா ஏக்கமுடைய வாஞ்சையுடன் செல்லுகிறது. கிறிஸ்தவப் பாதையில் முன்னேறிச் செல்லும்போது, கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையினால் அவன் பலமுள்ளவனாகிறான். இந்தக் கிருபை அவன் கேட்டிருந்தவைகளுக்கு ஒரு விசுவாசமுள்ள விசுவாசியாக இருக்கும்படி அவனைத் தகுதிப்படுத்துகிறது. அவன் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டுள்ள அறிவை அவமதிக்காமலும் அலட்சியப்படுத்தாமலும் இருந்து, இந்த அறிவை விசுவாசமுள்ளவர்களிடம் ஒப்படைக்கவே, அவன் அதனை மற்றவர்களுக்குப் போதிக்கிறான். (7)

தீமோத்தேயுவிற்கு அவன் எழுதின இந்தக் கடைசிக்கடிதத்தில் இளையவனாக இருந்த அந்த ஊழியக்காரனுக்குமுன் ஒரு கிறிஸ்தவ ஊழியக்காரனாக உள்ள, அவனிடத்தில் அதிகாரமாற்றமாயிருக்கும் கடமைகளைப் பவுல் சுட்டிக்காட்டி உயர்த்திப்பிடித்தான். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு. புத்தியீனமும் அபத்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்"–2 தீமோ. 2:15,22–26. (8)

தவறான ஆசிரியர்கள் சபைக்குள் நுழைய வகைதேடக்கூடியதைப்பற்றி பவுல் அப்போஸ்தலன் எச்சரித்தான். "மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்," "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு" (2 தீமோ. 3:1,2,5) என்றான். (9)

“பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர் களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்க ளாவார்கள். நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது”–2 தீமோத்தேயு 3:13–17. உலகத்திலுள்ள தீமைக்கு எதிரான வெற்றிகரமான போருக்கு ஏராளமான கருவிகளை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இந்தப் போருக்காக நம்மை ஆயுததாரிகளாக்குவதற்கு வேதாகமம் ஆயுதசாலையாக இருக்கிறது. சத்தியத்தினால் நமது அரைகள் இடைக்கட்டப்பட்டிருக்கவேண்டும். நீதி நமது மார்க்கவசமாக இருக்கவேண்டும். விசுவாசம் கேடயமாக நமது கரங்களில் இருக்கவேண்டும். இரட்சண்ணியம் நமது தலைச்சீராவாக நமது நெற்றியில் இருக்கவேண்டும். தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தினால் தடைகளையும் சிக்கவைத்தல்களையும் நமது பாதையிலிருந்து வெட்டி நீக்கவேண்டும். (10)

ஒரு பெரும் ஆபத்துக் காலம் சபைக்குமுன் இருக்கிறது என்பதைப் பவுல் அறிந்திருந்தான். சபைகளுக்குப் பொறுப்பானவர்களாக விடப்பட்டிருப்பவர்களால் விசுவாசமும் அக்கறைமிக்க பணியும் செய்யப் பட்டாகவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்து: “நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு” (2 தீமோத்தேயு 4:1,2) என்று எழுதினான். (11)

பேரார்வமும் விசுவாசமும் உடையவனாக இருந்த தீமோத்தேயுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பக்திவிநயமான இந்தப் பொறுப்பு, சுவிசேஷ ஊழியக்காரனின் பணியின் முக்கியத்துவத்திற்கும் பொறுப்பிற்கும் பலமிக்க சாட்சியாக இருக்கிறது. பவுல் தீமோத்தேயுவை தேவனுடைய மன்றத்திற்கு

முன்பாக அழைத்து, மனிதர்களின் வழக்கில் உள்ள பேச்சுக்களையும் சம்பிரதாயங்களையும்பற்றிப் பேசாமல், வாய்ப்பு தானாக வரும்போதெல்லாம் பெரும் கூட்டத்தினருக்குமுன்பாகவும், வழியிலும், கணப்படுப்பண்டையிலும், நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் முன்பாகவும், தனிப்பட்ட வட்டத்தினருக்கு முன்பாகவும், பாதுகாப்பாயிருந்தாலும், கடினமான நிலையிலிருந்தாலும், அபாயம், நிந்தை, நஷ்டம் ஆகியவைகளுக்கிடையிலும் தேவனுக்குச் சாட்சியாக இருக்கும்படி—தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டான். (12)

தீமோத்தேயுவின் மென்மையான இணங்கும் தன்மை அவனுடைய பணியின் முக்கியமான பகுதியைவிட்டு விலகச்செய்துவிடலாம் என்று பயந்து, பாவத்தைக் கண்டிப்பதில் விசுவாசமுள்ளவனாக இருக்கும்படி அவனை உபதேசித்தான். பெரும் தீமைகளைச் செய்துள்ளவர்களைக் கூர்மையான வார்த்தைகளினால் கடிந்துகொள்ளவேண்டும் என்று உபதேசித்தான். இருந்தபோதிலும், இதனை அவன் எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணிச் செய்யவேண்டும். அவனுடைய கடிந்துகொள்ளுதலை வார்த்தையிலுள்ள சத்தியங்களை விளக்கியும் வலியுறுத்தியும் கிறிஸ்துவின் பொறுமையையும் அன்பையும் அவன் வெளிப்படுத்தவேண்டியவனாக இருந்தான். (13)

பாவத்தை வெறுத்தும் கடிந்துகொண்டும், அதே நேரத்தில் பாவியிடம் இரக்கத்தையும் மென்மையையும் காட்டுவது கடினமான ஒன்றாகும். இருதயத்திலும் வாழ்க்கையிலும் பரிசுத்தத்தை அடைவதற்கு நமது சொந்த முயற்சிகள் எந்த அளவிற்கு அதிகமானதாக இருக்கிறதோ, அந்த அளவிற்குப் பாவத்தைப்பற்றின நமது உணர்வு தீவிரமானதாயிருக்கும். சரியான காரியத்தைவிட்டு விலகிச் செல்லுவதை அங்கீகரிக்காமலிருப்பதில் அந்த அளவிற்கு அதிகமாக நாம் முடிவுள்ளவர்களாக இருப்போம். தவறு செய்பவர்களுக்கு எதிராக, அதிகப்படியான கடுமை இல்லாதவர்களாக இருக்கும்படி நம்மை நாம் காத்துக்கொள்ளவேண்டும். ஆனால் பாவத்தின் அளவுக்குமீறிய பாவத்தன்மையைப்பற்றிய பார்வையை இழந்துவிடாமலிருப்பதற்கும் நாம் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். தவறுசெய்யும் ஒருவரிடம் கிறிஸ்துவைப்போன்ற பொறுமையையும் அன்பையும் காட்டவேண்டியதும் அநீதியுமாக இருக்கிறதென்றும் நிராகரிக்கும்படி அவன் தன்னைத்தான் பார்க்கும் அளவிற்கு பெரிய அளவு சகிப்புத்தன்மையைக் காட்டக்கூடிய அபாயம் இருக்கிறது. (14)

தவறு செய்பவனின் பாவங்களை சகித்துக்கொள்ளக்கூடிய விதத்தில் கெட்டுபோகுமளவிற்கு தவறுபவனுக்கு நேராக சகிப்புத்தன்மையை

அனுமதிப்பதனால், சுவிசேஷ ஊழியர்கள் சில சமயங்களில் பெரும் தீங்கு செய்வதுடன், அவைகளில் கலந்துகொள்ளவும் செய்கின்றனர். இவ்வாறாக, தேவன் ஆக்கினையைச் செலுத்துவதற்கு அவர்கள் சாக்குப்போக்குக் கூறவும், சமாதானம் செய்யவும் நடத்தப்படுகின்றனர். சிறிது காலத்திற்குப்பின்னர் தேவன் அவர்களைக் கடிந்துகொள்ளும்படி ஊழியக்காரருக்குக் கட்டளை கொடுக்கும்போது, ஊழியக்காரர்கள் அவர்களைப் புகழும் அளவிற்குக் குருடர்களாகிவிடுகின்றனர். தேவன் ஆக்கினைக்குட்படுத்துபவர்களுக்கு நேராக பாவமான சலுகையினால், தனது ஆவிக்குரிய உணர்வுகளை மழுங்கச் செய்திருப்பவன், தேவனால் அங்கீகரிக்கப்படுபவர்களுக்கு நேராக கடுமையாகவும் கடினமாகவும் நடப்பதினால், அதற்கப்புறம் ஒரு பெரிய பாவத்தைச் செய்கிறான். (15)

மனித ஞானத்தின் பெருமையினாலும் பரிசுத்த ஆவியின் செல்வாக்கை அவமதிப்பதினாலும் தேவனுடைய வார்த்தையில் விருப்பம் இல்லாமலாவதினாலும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் அநேகர், மற்றவர்களுக்குப் போதனை செய்யத் தகுதி உள்ளவர்களாக உணரும் அநேகர், தேவன் அவசியப்படுபவைகளிலிருந்து திரும்பிச்செல்லும்படி நடத்தப்படுவார்கள். "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" (2 தீமோத்தேயு 4:3,4) என்று அறிவித்தான். (16)

அப்போஸ்தலன் இந்த இடத்தில் வெளியரங்கமாகச் சமய சம்பந்த மில்லாதவர்களைப்பற்றிக் குறிப்பிடாமல், விருப்பங்களைத் தங்களுடைய வழிகாட்டியாகக்கொண்டு, அப்படியாக சுயத்திற்கு அடிமைகளாக்கப் பட்டிருக்கும் பெயர்க்கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுகிறான். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பாவங்களைக் கடிந்துகொள்ளாமலும் அல்லது இன்பங்களை நாடும் நடத்தையைப் பழிக்காமலும் உள்ள கோட்பாடுகளைக் கவனிப்பதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் உள்ளனர். அவர்கள் கிறிஸ்துவின் விசுவாசமுள்ள ஊழியக்காரர்களின் வெளிப்படையான வார்த்தைகளில் வெறுப்புள்ளவர்களாகி, தங்களைப் போற்றி முகஸ்துதிசெய்யும் ஆசிரியர்களைத் தேர்ந்துகொள்ளுகின்றனர். தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக, மனிதர்களின் கருத்துக்களைப் பிரசங்கிப்பவர்கள்—பெயர்க்கிறிஸ்தவர்கள் ஊழியர்களுக்கு நடுவில் இருக்கின்றனர். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்கு விசுவாசமற்றவர்களாக இருந்து, ஆவிக்குரிய வழிகாட்டுதலுக்காக அவர்களைப் பார்ப்பவர்களை அவர்கள் வழிவிலகிச்செல்லச் செய்கின்றனர். (17)

பரிசுத்த பிரமாணத்திலுள்ள கற்பனைகளில் தேவன் வாழ்க்கைக்கான பரிபூரணமான சட்டத்தைக் கொடுத்திருக்கிறார். காலத்தின் முடிவுவரை அதன் ஒரு எழுத்தோ அல்லது எழுத்தின் உறுப்போ மாறாததாக உள்ள இந்தப் பிரமாணம் மனிதர்களின்மீதுள்ள அதன் உரிமையை பரிசுத்தப்படுத்துவதாக இருக்கிறது. வேதத்தை முக்கியப்படுத்தி, அதை மகிமையுள்ளதாக்குவதற்காகக் கிறிஸ்து வந்தார். தேவனிடத்தில் அன்புகூருதல், மனிதனிடத்தில் அன்புகூருதல் என்னும் விசாலமான அஸ்திவாரத்தை அடிப்படையாகக்கொண்டதாக இது இருக்கிறது என்றும் அதன் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது மனிதனின் முழுக்கடமையாக இருப்பதை அது அடக்கிக்கொண்டிருக்கிறது என்றும் அவர் காட்டினார். கிறிஸ்து அவருடைய சொந்த வாழ்க்கையில் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலுக்கு உதாரணம் கொடுத்தார். அது அவசியப்படுபவைகள் புறத்தோற்றமான செயல்களைவிட எவ்வளவு அதிகமாக விரிவானதாக இருக்கிறது என்பதையும், எண்ணங்களையும் இருதயத்தின் விருப்பங்களையும் இனங்கண்டுகொள்ளுகிறது என்பதையும், அவர் தமது மலைப்பிரசங்கத்தில் காட்டினார். (18)

பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்போது, அது தெய்வபக்தியின்மையையும் உலகப்பிரகாரமான இச்சைகளையும் மறுக்கும்படி வழிநடத்துகிறது. "நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ண" (தீத்து 2:12) அது வழிநடத்துகிறது. ஆனால் நீதிக்கெல்லாம் சத்துருவாக இருப்பவன் உலகத்தை அடிமைப்படுத்தி, மனிதர்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாக இருக்கும்படி ஆண்களையும் பெண்களையும் நடத்துகிறான். தேவனுடைய வார்த்தையிலுள்ள ஆராயும் வெளிப்படையான சத்தியங்களுக்குத் திரளானவர்கள் எதிராக இருப்பதையும், அவர்களுடைய விருப்பங்களுக்குப் பொருத்தமான கட்டுக்கதைகளை முன்வைக்கும் ஆசிரியர்களைத் தெரிந்துகொண்டு இருப்பதையும், பவுல் முன்கண்டான். ஜனங்களுக்கு மத்தியில் உள்ள ஊழியக்காரர்கள் மக்கள் ஆகிய இரு சாராரும் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அவர்களுடைய பாதங்களின் கீழிட்டு மிதித்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறாக, இந்த உலகத்தைப் படைத்தவர் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார். சாத்தான் தனது உபாயங்களினால் உண்டாகியுள்ள வெற்றிக்காகச் சிரிக்கிறான். (19)

தேவனுடைய பிரமாணங்களை அவமதிப்பது வளர்வதுடன் மதத்தின்மீதுள்ள சுவையற்ற தன்மையுங்கூட அதிகரிக்கிறது. பெருமை, இன்பங்களின்மீதுள்ள நாட்டம் ஆகியவை அதிகரிக்கின்றன. அபாயமுள்ள தீமைகளைச் சீர்திருத்த என்ன செய்யமுடியும்? என்று எங்குமுள்ள

சிந்தனைமிக்க உள்ளங்கள் கவலையுடன் விசாரிக்கின்றன. இதற்கான மறுமொழி பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவிற்குக் கொடுத்த "வார்த்தையைப் பிரசங்கம் செய்" என்னும் உபதேசத்தில் காணப்படுகிறது. செயலாற்றவேண்டிய பாதுகாப்பான ஒரே கொள்கை வேதாகமத்தில் காணப்படுகிறது. அது தேவனுடைய சித்தத்தின் எழுத்துவடிவமாக இருக்கிறது. தெய்வீக ஞானத்தின் வெளிகாட்டலாகவும் இருக்கிறது. மனித வாழ்க்கையின் பெரும் பிரச்சனைகளை மனிதர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு அது திறந்து, அதன் கற்பனைகளுக்குச் செவிசாய்க்கும் அனைவருக்கும் தவறாக வழிகாட்டப்பட்ட முயற்சியினால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வீணாக்குவதிலிருந்தும் அவர்களைக் காக்கும். (20)

தேவன் தமது சித்தத்தை அறியும்படிச் செய்திருக்கிறார். அவரது உதடுகளிலிருந்து புறப்பட்டிருப்பதைப்பற்றி மனிதன் கேள்விகேட்பது தவறாக இருக்கிறது. முடிவில்லாத ஞானமிக்கவர் பேசியிருப்பதற்குப்பின் அதைப்பற்றித் தீர்வுகாண மனிதனால் கேட்கப்படக்கூடிய சந்தேகமான கேள்விகள் இருக்கமுடியாது. வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்திற்கு திறந்தவிதமாகவும் இசைவுடனும் இருப்பதுமட்டுமே அவனிடத்திலிருந்து அவசியப்படுத்தப்படுகிறது. அதைப்போலவே நியாயவாதம் மனச்சாட்சி ஆகியவைகளின் மிகமேலான கட்டளையாகக் கீழ்ப்படிதல் இருக்கிறது. (21)

பவுல் மேலும் தனது பொறுப்பை, "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" (2 தீமோத்தேயு 4:5) என்று எழுதினான். பவுல் தன்னுடைய கடிதத்தை முடிக்கவிருந்தான். சுவிசேஷத்தின் எளிமையிலிருந்து அவர்களைப் பலவிதத்திலும் நடத்துவதற்கு முயலக்கூடிய சத்துருவின் முயற்சிகளாகிய கட்டுக்கதைகள் மதப்புரட்டுகள் ஆகியவைகளிலிருந்து சபைகளைக் காப்பதற்கு தீமோத்தேயு அவனுடைய இடத்தில் வைக்கப்படவேண்டும் என்று பவுல் வாஞ்சித்தான். கிறிஸ்து எவர்களுக்காக மரித்திருக்கிறாரோ, அவர்களுடைய நல்ல காரியங்களைச் செய்வதற்காகத் தனக்கு எட்டக்கூடிய விதத்தில் உள்ள உபாத்திகள் ஒவ்வொன்றையும் செயல்படுத்த தேவனுடைய பணிக்கென்று தன்னை முற்றிலுமாகக் கொடுப்பதிலிருந்து அவனைத் தடுக்கக்கூடிய உலகப்பிரகாரமான எல்லா அலுவல்களிலிருந்தும் கண்ணிகளிலிருந்தும் அவன் விலகவேண்டும் என்று பவுல் தீமோத்தேயுவை எச்சரித்தான். (22)

பவுலின் வாழ்க்கை அவன் போதித்திருந்த சத்தியங்களுக்கு ஒரு உதாரணமாக இருந்தது. அவனுடைய வல்லமை இதில்தான் வைக்கப்பட்டிருந்திருக்கிறது. அவனது பொறுப்பைப்பற்றி அவனுள் தங்கியிருந்த

ஆழ்ந்த உணர்வினால் அவனுடைய இருதயம் நிரப்பப்பட்டிருந்தது. நீதி, இரக்கம், சத்தியம் ஆகியவைகளின் ஊற்றாக இருந்தவருடன் உள்ள நெருக்கமான உணர்வுடன் அவன் ஊழியம் செய்திருந்தான். அவனுடைய வெற்றிக்கு ஒரே உத்தரவாதமாக இருந்த கிறிஸ்துவின் சிலுவையை அவன் பற்றிக்கொண்டிருந்தான். சுயத்திற்கெதிராக இருந்த போராட்டங்களிலும், தீமைகளுக்கெதிரான போராட்டங்களிலும் இரட்சகரின் மீதிருந்த அவனுடைய அன்பு சாகாத இலட்சியத்தை உடையதாக அவனைத் தாங்கி நிறுத்தியிருந்தது. உலகத்தின் நட்பற்ற தன்மை, அவனுடைய எதிரிகளின் எதிர்ப்பு ஆகியவைகளுக்கிடையில் அவன் கிறிஸ்துவின் சேவையைப் போன்ற சேவையை முன்கொண்டுசென்றான். (23)

அபாயங்கள் மிக்க இந்த நாட்களில், சபைக்குள்ள தேவை என்ன? அது பவுலைப்போல பயன்தரக்கூடிய தாங்களாகவே கற்றுக்கொண்ட வேலைக்காரர்களின் ஒரு சேனையாக உள்ளது. இவர்கள் தேவனுடைய காரியங்களில் ஆழ்ந்த அனுபவமுடையவர்களாக அக்கறையினாலும் பேரார்வத்தினாலும் நிறைந்தவர்களாக உள்ளனர். சுயத்தைத் தியாகம்செய்யும் பரிசுத்தமுள்ள மனிதர்கள் பரீட்சைகளிலும் பொறுப்பிலுமிருந்தும் விலகாத மனிதர்கள், தைரியமும் உண்மையுமிக்க மனிதர்கள் கிறிஸ்துவைத் தங்களின் மகிமையின் நம்பிக்கையாக அமைத்துக்கொண்டுள்ள மனிதர்கள், பரிசுத்த அக்கினியினால் உதடுகள் தொடப்பட்டவர்களாக வார்த்தையைப் பிரசங்கிப்பவர்களாக உள்ள மனிதர்கள் அவசியமாக உள்ளனர். இப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் இல்லாததினால் தேவனுடைய காரியம் பலவீனமடைகிறது. சாவுக்கேதுவான தவறுகள் சாவுக்கேதுவான விஷத்தைப்போல மனித இனத்தின் பெரும் பகுதியினரின் சன்மார்க்க நெறிகளையும் நம்பிக்கைகளையும் அழிக்கின்றன. (24)

விசுவாசமிக்க உழைப்பினால் தேய்ந்துபோனவர்கள்—தரத்தைத் தாங்கி நிற்பவர்கள், சத்தியத்திற்காகத் தங்களுடைய உயிர்களைப் பலியாகக் கொடுத்திருக்கும்போது, அவர்களுடைய தந்தைமார்களின் கரங்களிலிருந்த பரிசுத்தமான விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளுவார்களா? விசுவாசமுள்ளவர்களின் மரணத்தினால் உண்டாயிருக்கும் வேலை இடங்களை நிரப்ப, அவர்கள் தங்களை ஆயத்தம்செய்துகொண்டிருக்கிறார்களா? இளைஞர்களைக் கவர்ந்திருக்கின்ற சுயநலங்களுக்கும் ஆசைகளுக்கும் மத்தியில் பணிசெய்யும்படியான அப்போஸ்தலனின் அழைப்புக்குச் செவிசாய்க்கப்படுமா? (25)

பல்வேறுபட்டவர்களுக்கான நேரடியான தூதுகளுடன் பவுல் தனது நிருபத்தை முடித்து, முடியுமானால் தீமோத்தேயு மழைக்காலத்திற்குமுன்

விரைவாக வந்து அவனைச் சந்திக்கவேண்டுமென்று வற்புறுத்தினான். தனது நண்பர்களில் சிலர் அவனைவிட்டுப் பிரிந்துசென்றதினால் உண்டான அவனுடைய தனிமையைப் பற்றியும், சிலர் பிரிந்துசெல்ல வேண்டியதாக இருந்ததின் அவசியம்பற்றியும், அவன் பேசினான். தீமோத்தேயுவின் ஊழியம் எபேசு சபைக்கு அவசியமாயிருக்கும் என்ற பயத்தினால், அவன் தயங்கிவிடக்கூடாது என்பதற்காக அந்தக் காலி இடத்தை நிரப்புவதற்காக அவன் ஏற்கனவே தீகிக்குவை அனுப்பிவைத்திருப்பதாக அறிவித்தான். (26)

நீரோவிற்குமுன் நிகழ்ந்த அவனுடைய விசாரணையின் காட்சியைப்பற்றியும், தனது சகோதரர்களின் அழிவைப்பற்றியும், உடன்படிக்கையைக் காக்கும் ஒரு தேவனுடைய கிருபையைப்பற்றியும் பேசினபின், உதவிசெய்யும் மேய்ப்பர்களாக இருப்பவர்கள் அடிபட்டு விழுந்துபோனாலுங்கூட, மந்தையைக் கவனிக்கும்படியான தலைமை மேய்ப்பனாக இருக்கக்கூடிய பாதுகாவலனாக உள்ள தீமோத்தேயுவைப் புகழ்ந்து பேசினபின், பவுல் தனது நிருபத்தை முடித்தான். (27) ★

# 50

# பவுலாருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 509–513)**

பேரரசனான நீரோவின் முன் நடந்த பவுல் அப்போஸ்தலனைப்பற்றிய இறுதி விசாரணையின்போது, அப்போஸ்தலனின் வார்த்தைகளின் வலிமையினால், அவன் பலத்தவிதத்தில் உணர்த்தப்பட்டதினால், தேவனுடைய ஊழியக்காரனுக்குத் தண்டனை அளிப்பதா அல்லது அவனை விடுதலைசெய்வதா என்ற முடிவை அவனால் எடுக்கமுடியாமல் போயிற்று. பேரரசனான நீரோ, அந்த வழக்கின் தீர்ப்பைத் தள்ளிவைத்தான். ஆனால் அந்தப் பேரரசனின் பவுலுக்கு எதிரான விரோத மனப்பான்மை விரைவில் திரும்பினது. கிறிஸ்தவ மதம் பரவுவதை—அரசனுடைய வீட்டிலுங்கூடப் பரவுவதை தடைசெய்யமுடியாத அவனுடைய தகுதியின்மையினால் அதிக அளவில் எரிச்சலடைந்த அவன், பொருத்தமான போலிக்காரணம் கிடைத்தவுடன் அப்போஸ்தலனை மரணத்திற்குள்ளாக்கவேண்டும் என்று தீர்மானித்தான். அதற்குப்பின், சில நாட்களுக்குள்ளாக பவுலை இரத்தசாட்சியாக மரிக்கச்செய்கின்ற தண்டனையாகிய அவனுடைய முடிவை அறிவித்தான். ரோம நாட்டுப் பிரஜையை சித்திரவதை செய்ய முடியாதிருந்ததினால் சிரச்சேதம் பண்ணும்படியான தண்டனை அவனுக்குக் கொடுக்கப்பட்டது! (1)

தண்டனைநிறைவேற்றப்படும்இடத்திற்குப் பவுல் ஒரு தனிப்பட்டவிதத்தில் கொண்டுசெல்லப்பட்டான். பார்வையாளர்களாக இருக்கும்படி சிலர்மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஏனெனில் அவனை உபத்திரவஞ்செய்திருந்தவர்கள், அவனது செல்வாக்கின் விரிவைப்பற்றிப் பயமடைந்து, மரணதண்டனையின் காட்சியினால் மாறும்படி ஆதாயப்படுத்தப்பட்டுவிடுவார்கள் என்று பயந்தனர்.

ஆனால் அனைக் கவனித்திருந்த கடுமையான சேனைவீரர்களுங்கூட அவனது வார்த்தைகளைக் கவனித்து, மரணம் நேரிடவுள்ளது என்னும் நிலையிலுங்கூட, அவன் உற்சாகமும் மகிழ்ச்சியும் உள்ளவனாக இருப்பதை ஆச்சரியத்துடன் கண்டனர். அவனது இரத்தசாட்சியாகும் மரணத்தைக் கண்டிருந்த சிலர், அவனைக் கொலைசெய்பவர்களாக இருந்தவர்களிடம் அவன் காட்டியிருந்த மன்னிக்கும் ஆவியானது, இறுதிவரைக் கிறிஸ்துவின் மீதிருந்த அவனுடைய அசையாத நம்பிக்கை ஜீவனுக்கேதுவான வாசனையாக இருப்பதை மெய்ப்பித்தது. பவுல் பிரசங்கித்த ஒருவரை, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டு, அதற்குப்பின் தங்களுடைய விசுவாசத்தை அவர்களுடைய இரத்தத்தினால் முத்திரையிட்டனர். (2)

பவுல் அவனுடைய வாழ்க்கையின் கடைசிநேரம்வரை அவனுடைய வார்த்தைகளின் சத்தியத்தை கொரிந்தியர்களுக்கு: “இருளிலிருந்து வெளிச்சத்தைப்பிரகாசிக்கச்சொன்னதேவன்இயேசுகிறிஸ்துவின்முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால்உண்டாயிராமல்,தேவனால்உண்டாயிருக்கிறதென்றுவிளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்” (2 கொரிந்தியர் 4:6–10) என்று கூறி சாட்சிபகர்ந்தான். அவனது போதுமான தன்மை அவனுக்குள் இராமல், அவனது ஆத்துமாவை நிரப்பியிருந்த தெய்வீக ஆவியின் பிரசன்னத்திலும் ஏதுகரத்திலும் இருந்தது. ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தியிருந்தது. “உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்” (ஏசாயா 26:3) என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறான். பவுலின் முகத்திலிருந்து வெளிக்காட்டப்பட்டிருந்த பரலோகத்திலிருந்துண்டான சமாதானம், சுவிசேஷத்திற்கு அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தியிருந்தது. (3)

பவுல் பரலோகச் சூழ்நிலையைத் தன்னுடன் சுமந்து சென்றிருந்தான். அவன் கிறிஸ்துவுடன்கொண்டிருந்த பிணைப்பின் செல்வாக்கை அவனுடன் கூட்டுச்சேர்ந்திருந்த அனைவரும் உணர்ந்திருந்தனர். அவன் அறிவித்திருந்த சத்தியத்திற்கு அவனுடைய சொந்த வாழ்க்கை உதாரணம் காட்டியிருந்தது

என்னும் உண்மை அவனுடைய பிரசங்கத்திற்கு மனதிருப்தியை உண்டுபண்ணுகின்ற வல்லமையைக் கொடுத்திருந்தது. சத்தியத்தின் வல்லமை இங்குதான் இருக்கிறது. பரிசுத்தமான ஒருவாழ்க்கையின் கல்லாத மனஉணர்வில்லாத செல்வாக்குதான், கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஆதரவாகக் கொடுக்கப்படக்கூடிய மனநிறைவை உண்டுபண்ணும் பிரசங்கமாக இருக்கிறது. மறுமொழி கூறமுடியாததாக இருக்கும்போது, வாதம் எதிர்ப்பை மட்டுமே எழுப்பிவிடலாம். ஆனால் ஒரு பக்திமிக்க உதாரணம் அதனை முற்றிலுமாகத் தடைசெய்யமுடியாத வல்லமையை உடையதாக இருக்கிறது. தவறான எண்ணங்கள், வெறுப்பு, உபத்திரவம் ஆகியவைகளைச் சமாளிக்கும்படி பிரிந்து செல்லவேண்டியவனாக இருந்த அப்போஸ்தலன், அவர்களை வரவேற்பதில் தன்னை சமீபித்துக்கொண்டிருக்கும் தனது பாடுகளைப்பற்றின பார்வையை இழந்தவனாக இருந்தான். தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு அவனைப் பின்தொடர்ந்திருந்த சில கிறிஸ்தவர்களை நீதிக்காக உபத்திரவமடைந்திருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களை திரும்பத்திரும்பக்கூறி பலப்படுத்தவும் தைரியப்படுத்தவும் முயன்றிருந்தான். பரீட்சிக்கப்பட்டு விசுவாசம் உள்ளவர்களாக இருக்கும் தேவனுடைய பிள்ளைகளைப்பற்றிக் கர்த்தர் கூறியிருக்கும் எதுவும் தவறாது என்று அவன் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்தான். பலவிதமான வேதனைகளினால் கொஞ்சகாலத்திற்கு அவர்கள் உலகப்பிரகாரமான வசதிகள் இல்லாத, வாழ வழியில்லாதவர்களாக இருக்கலாம். “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்” (2 தீமோத்தேயு 1:12) என்று அவன் கூறினான். பரீட்சையும் பாடுகளுமான இரவு விரைவில் முடிவடைந்து அதன்பின் சமாதானமும் பூரணமுமான நாளின் மகிழ்ச்சிமிக்க காலை உதயமாகும். (4)

நிச்சயமின்மையுடனும் பயத்துடனும் இல்லாமல், மகிழ்ச்சிமிக்க நம்பிக்கையுடனும் ஏக்கமிக்க எதிர்பார்ப்புடனும், அப்போஸ்தலன் அப்பாலுள்ள நிலையைப் பார்த்துக்கொண்டிருந்தான். இரத்தசாட்சியாக மரிக்கவிருக்கின்ற இடத்தில் அவன் நின்றிருந்தபோது, அவனது மரணதண்டனையை நிறைவேற்றுபவர்களையோ அல்லது அவனது இரத்தத்தை விரைவில் பெற்றுக்கொள்ள இருக்கும் பூமியையோ அவன் பார்க்காமல், அந்த வேனில் கால நாளின் அமைதிமிக்க நீலநிற வானத்திற்கூடாக நித்திய சிங்காசனத்தைப் பார்த்தவாறு இருந்தான். விசுவாசத்தின் இந்த மனிதன் பூமியைப் பரலோகத்துடன் பிணைத்திருந்து, முடிவுள்ள மனிதன் முடிவில்லாத தேவனுடன் பிணைத்திருந்த யாக்கோபின்

ஏணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த கிறிஸ்துவை நோக்கிப் பார்த்திருந்தான். அவன் எந்த ஒருவருக்காக அவனுடைய ஜீவனைக் கொடுத்துக்கொண்டிருக்கிறானோ, அவனுடைய ஆறுதலும் ஆதரவுமாக இருக்கும் ஒருவரை முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் எவ்விதமாகச் சார்ந்திருந்தனர் என்பதை அவனது மனதிற்கு அவர் அழைத்தபோது, அவனுடைய விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது. நூற்றாண்டுகளிலிருந்து நூற்றாண்டுகளுக்கூடாத தங்களுடைய விசுவாசத்திற்கான சாட்சியைக் கொண்டிருந்த இந்தப் பரிசுத்தமான மனிதர்களிடமிருந்து தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்னும் வாக்குறுதியை அவன் கேட்கிறான். சந்தேகவாதக் குழப்பங்களுக்கிடையில் சிலுவையின் ஒளியை உயர்த்திப் பிடிப்பதற்காக, தங்களுடைய உயிர்களை அருமையானவைகளாக எண்ணாமல், மதவிரோதம், அஞ்ஞான மார்க்கத்தின் மூடநம்பிக்கை, உபத்திரவம், அவமதிப்பு ஆகியவைகளைச் சந்திக்க முன்சென்றிருந்தனர். இவர்கள் இயேசு தேவகுமாரனாகவும் உலக இரட்சகராகவும் இருக்கிறார் என்று கூறும் சாட்சியை அவன் கேட்கிறான். சித்திரவதைக்கருவி, கழுமரம், நிலவறைகள், பூமியின் குகைகள் ஆகியவைகளிலிருந்து உண்டாகும் இரத்த சாட்சிகளின் வெற்றியின் ஒலி, அவனது செவிகளில் கேட்கிறது. ஒன்றும் இல்லாதவர்களாக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு, வாதிக்கப்பட்டு இருந்தபோதிலும், விசுவாசத்திற்காகப் பக்திவிநயமான சாட்சியை பயமின்றிக் கொடுத்து, உறுதியானவர்களாக நின்றிருந்தவர்களின் சாட்சியை அவன் கேட்கிறான். தங்களுடைய விசுவாசத்திற்காகத் தங்களுடைய ஜீவனை இழக்கும் இவர்கள், எவரில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தார்களோ, அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க அவர் வல்லவராக இருக்கிறார் என்று அவர்கள் உலகத்திற்கு அறிவிக்கின்றனர். (5)

கிறிஸ்துவின் தியாகபலியினால் மீட்கப்பட்ட, அவருடைய நீதியால் ஆடை அணிவிக்கப்பட்டவனான பவுலுடைய ஆத்துமா, அவனுடைய மீட்பரின் பார்வையில் விலைமதிப்புள்ளதாக இருக்கிறது என்பதற்கு அவன் தனக்குத்தானே சாட்சியை உடையவனாக இருக்கிறான். அவனுடைய ஜீவன் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. மரணத்தைவென்ற அவர், அவரது நம்பிக்கைக்குள் ஒப்படைக்கப்பட்டிருப்பதைக் காப்பதற்கு வல்லவராயிருக்கிறார். “நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்” (யோவான் 6:40) என்னும் இரட்சகரின் வாக்குத்தத்தத்தை அவனது மனம் பற்றிக்கொள்ளுகிறது. அவனது எண்ணங்களும் நம்பிக்கைகளும் கர்த்தரின் இரண்டாம் வருகையின்மீது மையங்கொண்டதாக இருக்கிறது. கொலைஞனின் வாள் இறங்கும்போது, அந்த இரத்த சாட்சியை மரணத்தின் இருள் சூழ்ந்துகொள்ளும்போது, அவனுடைய ஆரம்பகால

எழுப்புதலைப்போல ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் மகிழ்ச்சிக்கு அவனை வரவேற்பவரை—ஜீவனைக் கொடுப்பவரைச் சந்திக்க அவனது கடைசி எண்ணங்கள் முன்குறிக்கின்றன. (6)

தேவனுடைய வசனத்திற்காகவும், இயேசுவைப்பற்றிய சாட்சிக் காகவும் வயது முதிர்ந்த பவுல் இரத்தத்தை ஊற்றினதிலிருந்து, இரண்டாயிரம் வருடங்கள் கழிந்துவிட்டன. இந்தப் பரிசுத்தமான மனிதனின் வாழ்க்கையின் கடைசிக் காட்சிகளை வரவிருக்கும் தலைமுறையினருக்காக விசுவாசமிக்க எந்தக் கரமும் ஆவணமும் பதிவுசெய்யவில்லை. ஆனால் ஆவியின் ஏவுதல் அவனது மரிக்கும்போதான சாட்சியை நமக்கென்று பாதுகாத்துவைத்திருக்கிறது. ஒரு எக்காளச் சத்தத்தைப்போல அவனுடைய குரல் காலங்கள் முழுவதுமாக ஒலித்து, அவனது தைரியத்தினால் ஆயிரக்கணக்கான சாட்சிகளைக் கிறிஸ்துவிற்காக தூண்டி, துயரத்தால் தாக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான இருதயங்களில்: “நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” (2 தீமோத்தேயு 4:6–8) என்கிற அவனுடைய வெற்றி மகிழ்ச்சியை எழுப்பிக்கொண்டிருக்கிறது. (7) ★

# 51

# விசுவாசமிக்க ஒரு துணை மேய்ப்பன்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 514–528)**
**திருவசன ஆதாரம் : 1 பேதுரு**

அப்போஸ்தலனாகிய பேதுருவின் பிற்கால ஊழியம்பற்றி அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்தில் கொஞ்சம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த ஆவியின் ஊற்றுதலைப் பின்தொடர்ந்த பணிமிக்க ஊழிய வருடங்களின்போது வருடாந்திரப் பண்டிகைகளில் தொழுதுகொள்ளுவதற்காக எருசலேமிற்கு வந்திருந்த யூதர்களை சமீபிப்பதற்காக, களைப்பில்லாமல் ஊழியம் செய்திருந்தவர்களுக்கு மத்தியில் அவனும் ஒருவனாக இருந்தான். (1)

சிலுவையின் ஊழியக்காரர்கள் எருசலேமையும் மற்ற இடங்களையும் சந்தித்ததினால், அந்த இடங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகினபோது, பேதுருவிடமிருந்த தாலந்து, ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபைக்கு சொல்லிமுடியாத மதிப்பை உடையதாக இருந்தது என்பது மெய்ப்பிக்கப்பட்டது. நசரேயனாகிய இயேசுவைப்பற்றிய அவனுடைய சாட்சியின் செல்வாக்கு, அதிக தூரத்திற்கு விசாலமாகப் பரவியது. அவன்மீது இரண்டு மடங்கு பொறுப்பு வைக்கப்பட்டிருந்தது. அவிசுவாசிகளுக்குமுன் அவன் மேசியாவைப்பற்றி உறுதியான சாட்சிகொடுத்து, அவர்களது மதமாற்றத்திற்காக அக்கறையுடன் ஊழியம் செய்திருந்தான். அதே நேரத்தில், விசுவாசிகளைக் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தில் பலப்படுத்திக்கொண்டு, விசுவாசிகளுக்கு ஒரு சிறப்பான பணியைச் செய்துகொண்டிருந்தான். (2)

சுயத்தை மறுக்கும்படியும் தெய்வீக வல்லமையை முற்றிலுமாகச் சார்ந்திருக்கும்படியும் பேதுரு நடத்தப்பட்டபின்புதான், ஒரு துணை

மேய்ப்பனாக இருக்கும்படியான ஒரு அழைப்பை அவன் பெற்றுக்கொண்டான். பேதுரு கிறிஸ்துவை மறுதலிப்பதற்குமுன், அவர் அவனிடம்: "நீ குணப்பட்டபின்பு, உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" (லூக்கா 22:32) என்று கூறியிருந்தார். எதிர்காலத்தில் விசுவாசத்தில் வர இருப்பவர்களுக்காக அப்போஸ்தலன் செய்யவேண்டிய விசாலமும் பலமுமிக்க பணிக்கு, இந்த வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. இந்த வேலைக்காக பாவத்தைப்பற்றின பேதுருவின் சொந்த அனுபவம், பாடுகள், மனந்திரும்புதல் ஆகியவை அவனை ஆயத்தம்செய்திருந்தன. அவனுடைய பலவீனத்தைப்பற்றி அவன் அறிந்துகொள்ளும்வரை, விசுவாசிகள் கிறிஸ்துவைச் சார்ந்திருக்கவேண்டியதன் அவசியத்தை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. சோதனையாகிய புயலுக்கு மத்தியில், சுயத்தின்மீது முற்றிலுமாக நம்பிக்கை இல்லாதவனாக, இரட்சகரை சார்ந்திருக்கும்போது மட்டுமே, மனிதனால் பாதுகாப்பாக நடக்கமுடியும் என்பதை அவன் புரிந்துகொண்டுவந்தான். (3)

கடலருகில் கிறிஸ்து அவரது சீடர்களைக் கடைசித் தடவையாக சந்தித்தபோது, மூன்று தடவை திரும்பத் திரும்ப "நீ என்னை நேசிக்கிறாயா?" என்று கேட்கப்பட்ட கேள்வியினால், பேதுரு சோதிக்கப்பட்டு, பன்னிருவர்களுக்கிடையில் திரும்பவும் வைக்கப்பட்டான். அவனுடைய பணி அவனுக்கு நியமிக்கப்பட்டது. அவன் கர்த்தருடைய மந்தையை மேய்க்கவேண்டியவனாக இருந்தான். இப்பொழுது மனமாற்றமடைந்து ஏற்றுக்கொள்ளப்பட்டவனான அவன், தொழுவம் இல்லாதவர்களை இரட்சிக்கத் தேடுபவனாக மட்டும் இராமல், ஆடுகளின் மேய்ப்பனாகவும் இருக்கவேண்டியவனாக இருந்தான். (4)

"நீ என்னை நேசிக்கிறாயா?" என்னும் சேவையின் ஒரே நிபந்தனையை மட்டுமே கிறிஸ்து பேதுருவிடம் குறிப்பிட்டார். பேதுரு மற்றெல்லாவற்றையும் உடையவனாக இருந்தபோதிலும், கிறிஸ்துவின் அன்பு இல்லாமல் அவனால் தேவனுடைய மந்தையின் விசுவாசமிக்க மேய்ப்பனாக இருக்கமுடியாது. நல்ல பணிக்கு அறிவு, அனுதாபம், சொல்வன்மை, பேரார்வம் ஆகியவை முக்கியமானவைகளாக இருக்கின்றன. ஆனால் இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு இல்லாத ஒரு கிறிஸ்தவ ஊழியனின் பணி ஒரு தோல்வியாக இருக்கிறது. (5)

கிறிஸ்துவின் அன்பு என்பது ஒரு விட்டுவிட்டு இயங்குகின்ற உணர்ச்சி அல்ல. மாறாக, அது இருதயத்தில் தங்கியிருந்து, வெளிக்காட்டப்படக்கூடிய, ஒரு வல்லமையான ஜீவனுள்ள கொள்கையாக இருக்கிறது. ஒரு மேய்ப்பனின் சுபாவமும் நடத்தையும் அவன் பரிந்துபேசும் சத்தியத்தின்

எடுத்துக்காட்டாக இருந்தால், கர்த்தர் அந்தப் பணியின்மீது தமது அங்கீகாரத்தின் முத்திரையைப் பதிப்பார். கிறிஸ்துவின்மீதுள்ள பொதுவான நம்பிக்கையில் மேய்ப்பனும் மந்தையும் ஒன்றாகும். (6)

பேதுருவிடம் இரட்சகர் இடைப்பட்டவிதத்தில், ஒரு பாடம் அவனுக்கும் அவனுடைய சகோதரர்களுக்கும் இருந்தது. பேதுரு அவனுடைய கர்த்தரை மறுதலித்திருந்தபோதிலும், அவனிடத்தில் இயேசு கொண்டிருந்த அன்பு ஒருபோதும் தடுமாறாததாக இருந்தது. அப்போஸ்தலன் வார்த்தையினால் மற்றவர்களுக்கு ஊழியம்செய்கின்ற பணியை எடுத்துக் கொள்ளவேண்டியவனானபோது, அவன் மீறுதல் செய்திருந்தவர்களை பொறுமை, அனுதாபம், மன்னிக்கும் அன்பு ஆகியவைகளுடன் சந்திக்கவேண்டியவனாக இருந்தான். தனது பலவீனத்தையும் தோல்வியையும் நினைவில் கொண்டவனாக—அவனது பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த ஆடுகளுடனும் ஆட்டுக்குட்டிகளுடனும், கிறிஸ்து அவனிடம் இடைப்பட்டிருந்த விதத்தில், அவனும் இடைப்படவேண்டியவனாக இருந்தான். (7)

தானாகவே தீமைக்குள் இருக்கிற மனிதர்கள், சோதனைகளிலும் தவறுகளிலும் இருப்பவர்களுடன் மென்மையற்றவிதத்தில் நடந்துகொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். அவர்களால் இருதயத்தை வாசித்தறியமுடியாது. அதன் போராட்டங்ளையும் அதன் வேதனைகளையும் அவர்கள் அறியார்கள். அன்பாக உள்ள கடிந்து கொள்ளுதல்கள், குணப்படுத்துவதற்காகக் காயத்தை உண்டுபண்ணும் அடிகள், நம்பிக்கையைப் பேசுகின்ற எச்சரிப்புக்கள் ஆகியவைகளை அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. (8)

பேதுரு அவனுடைய கவனத்திலிருக்கும்படி ஒப்படைக்கப்பட்டிருந்த மந்தையை விசுவாசத்துடன் காவல்செய்திருந்தான். இவ்வாறாக, இரட்சகரால் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பொறுப்பிற்கு, தகுதி உள்ளவனாக இருந்தான் என்பதை அவன் மெய்ப்பித்தான். இஸ்ரவேலின் நம்பிக்கையாகவும் மனித இனத்தின் இரட்சகராகவுமிருந்த நசரேயனாகிய இயேசுவை அவன் எப்போதும் உயர்த்தினான். எஜமான வேலைக்காரராக இருந்தவரின் ஒழுக்கத்தின்கீழ் அவன் தன்னுடைய சொந்த வாழ்க்கையைக் கொண்டுவந்திருந்தான். தனது வல்லமையின் கீழிருந்த ஒவ்வொரு ஊழியத்தினாலும் தீவிரமான பணிக்கென்று விசுவாசிகளைக் கற்பிக்க அவன் வகைதேடியிருந்தான். அவனுடைய தெய்வபக்திமிக்க உதாரணம், களைப்பில்லாத செயல்கள் ஆகியவை நம்பிக்கைதரும் அநேக வாலிபர்களை—தங்களை முற்றிலுமாக தேவனுடைய பணிக்கென்று ஒப்புக்கொடுக்க ஏவியது. காலம் கடந்து சென்றபோது, ஒரு ஆசிரியன்,

தலைவன் என்னும் செல்வாக்கு அதிகரித்தது. சிறப்பாக யூதர்களுக்கென்று ஊழியம் செய்யவேண்டும் என்ற அவனுடைய பாரத்தை அவன் ஒருபோதும் இழக்காதிருந்த அதே நேரத்தில், அநேக இடங்களில் அவன் தனது சாட்சியைக் கொடுத்த, திரளானவர்களின் விசுவாசத்தைச் சுவிசேஷத்தில் பலப்படுத்தினான். (9)

அவனது ஊழியத்தின் பின்னான வருடங்களில் பேதுரு: பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிற விசுவாசிகளுக்கு எழுதும்படி ஏவப்பட்டான் (1 பேதுரு 1:1). பரீட்சைகளையும் துன்பங்களையும் தாங்கிக்கொண்டிருந்தவர்களின் தைரியத்தை எழுப்பி, விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்கும் பலவிதமான சோதனைகளின் சூழ்நிலைகளில் அபாயத்தில் இருந்தவர்களுக்கு அவர்களுடைய நற்செயல்களைப் புதுப்பிப்பதற்குமான உபாத்திகளாக அவனுடைய கடிதங்கள் இருந்தன. எந்த ஒரு மனிதன் முழுவதுமாகக் கிருபையினால் மறுரூமடைந்திருந்தானோ—எந்த ஒருவனுடைய நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கை நிச்சயமானதாக இருந்ததோ—எந்த ஒருவனில் கிறிஸ்துவின் பாடுகளும் அவருடைய ஆறுதலும் பெருகும்படிச் செய்யப்பட்டிருந்ததோ—அந்த ஒருவனின் உணர்த்துதலை இந்தக் கடிதங்கள் தாங்கியிருந்தன. (10)

முதிர்வயதான தேவனுடைய ஊழியக்காரனாக இருந்த அவன், தன்னுடைய கடிதத்தின் ஆரம்பத்தில் தனது கர்த்தருக்குத் துதியையும் நன்றியறிதலையும் தெரிவித்திருந்தான். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு, தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது"–1 பேதுரு 1:3–5. (11)

புதிதாக்கப்பட்ட இந்த பூமியில், கிடைக்கக்கூடிய நிச்சயமான சுதந்திரத்தின் நம்பிக்கையில், ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் கடுமையான பரீட்சையிலும் துன்பத்திலும் மகிழ்ந்து களிகூர்ந்திருந்தனர். "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பிற்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில்

வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளிலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது, உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாகியிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்" என்று பேதுரு எழுதினான் (1 பேதுரு 1:5–9). (12)

ஒவ்வொரு காலத்திலும் உள்ள விசுவாசிகளின் உபதேசத்திற்கென்று அப்போஸ்தலனின் வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன. "முடிவு சமீபமா யிருக்கிறது" என்னும் நேரத்தில் இருப்பவர்களுக்கு அவை சிறப்பான முக்கியத்துவம் உள்ளதாக இருக்கிறது. முடிவுவரை நிலைத்து நிற்கும்படி, தமது விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும், அவனுடைய உபதேசங்களும், எச்சரிக்கைகளும் அவனுடைய விசுவாசமும் தைரியமுமிக்க வார்த்தைகளும் அவசியமாக உள்ளன. (13)

தடைசெய்யப்பட்டுள்ள கருப்பொருட்களின்மீது அலைந்து திரியும் மனதை விலக்கிவைப்பதும், அல்லது முக்கியமற்ற விஷயங்களில் அதன் சக்திகளைச் செலவிடுவதிலிருந்து தவிர்ப்பதுவும், எவ்வளவு முக்கியமானது என்பதை விசுவாசிகளுக்குப் போதிக்க அப்போஸ்தலன் வகைதேடியிருந்தான். சாத்தானின் கருவிகளுக்கு இரையாகாமலிருக்க விரும்புபவர்கள், ஆத்துமாவின் பாதையை நல்லவிதமாகக் காத்துக்கொள்ள வேண்டும். தூய்மையற்ற எண்ணங்களைக் கொண்டுவரக்கூடியவைகளை வாசிப்பதையும் பார்ப்பதையும் கேட்பதையும் அவர்கள் தவிர்க்கவேண்டும். ஆத்துமாவின் எதிரி கருத்துத் தெரிவிக்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்தின்மீதும் கோணலும் மாணலுமானவைகளின்மீதும் மனதை விட்டுவிடக்கூடாது. இருதயம் விசுவாசத்துடன் காவல் செய்யப்படவேண்டும். இல்லாவிட்டால், வெளியில் உள்ள தீமைகளைத் துயிலெழச்செய்யும்போது, ஆத்துமா இருளில் அலைந்துதிரியும். "ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே

உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றி லேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே"(1 பேதுரு 1:13–16) என்று பேதுரு எழுதினான். (14)

"அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாந்தீர்க்ககிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிற படியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்த்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமா யிருக்கிற உங்களுக்காக, இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்தெழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்"–1 பேதுரு 1:17–21. (15)

மனிதர்களின் இரட்சிப்பை விலைக்கு வாங்குவதற்கு வெள்ளியும், பொன்னும் போதுமானதாயிருந்தால், "வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது" (ஆகாய் 2:8) என்பவரால் அது எவ்வளவு எளிதாக நிறைவேற்றப்பட்டிருந்திருக்கும். ஆனால் மீறுதல் செய்தவன் தேவகுமாரனுடைய விலையேறப்பெற்ற இரத்தம் ஒன்றினால் மட்டுமே மீட்கப்படக்கூடியவனாக இருந்தான். தியாகபலியில் இரட்சிப்பின் திட்டம் இடப்பட்டது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியமுள்ளவர்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரிந்தியர் 8:9) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினான். நமது அக்கிரமங்கள் அனைத்திலிருந்தும் நம்மை மீட்பதற்காக, கிறிஸ்து தாமே—அவரை—நமக்காகக் கொடுத்தார். இரட்சிப்பின் கிரீடமாகிய ஆசீர்வாதமாக இருக்கும்படி, "தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவனாக" இருக்கிறது (ரோமர் 6:23). (16)

"ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்"–1 பேதுரு 1:22. சத்தியம், தேவனுடைய வார்த்தை ஆகியவை கர்த்தர் தமது ஆவியையும் வல்லமையையும் வெளிக்காட்டுகின்ற வாய்க்கால்களாக இருக்கிறது. அவசியமிக்க, தரமிக்க கனியை, மாயமற்ற சகோதர சிநேகத்தை, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவது உண்டாக்குகிறது. இந்த அன்பு பரலோகத்திலிருந்து பிறந்ததாக இருந்து, மேலான இலக்குகளுக்கும் சுயநலமற்ற செயல்களுக்கும் நடத்துகிறது. (17)

சத்தியம் வாழ்க்கையில் தங்கும் ஒரு கொள்கையாக அமையும் போது, ஆத்துமா "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே" மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறது (1 பேதுரு 1:23). இந்தப் புது ஜென்மம் கிறிஸ்துவை தேவனுடைய வார்த்தையாகப் பெற்றுக்கொள்ளுவதில் இருக்கிறது. பரிசுத்த ஆவியின்மூலமாக தெய்வீக சத்தியங்கள் இருதயத்தில் உணர்த்தப்படும்போது, புதிய எண்ணங்களும், துயிலெழும் நிலையிலுள்ள சக்திகளும் தேவனுடன் ஒத்துழைக்கும்படி எழுப்பப்படுகின்றன. (18)

பேதுரு, மற்றும் அவனுடைய உடன் சீடர்களின் காரியங்கள் இவ்வாறாக இருந்தன. அவரால் அழியாத வித்தாகிய வசனமாகிய தேவனுடைய வார்த்தை மனிதர்களின் இருதயங்களில் விதைக்கப்பட்டிருந்தது; ஆனால், அந்த மாபெரும் ஆசிரியரின் அநேக விலைமதிப்புமிக்க பாடங்கள், அப்பொழுது அவைகளைப் புரிந்துகொள்ளமுடியாதவர்களிடம் பேசப்பட்டிருந்தது. அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றபின், அவருடைய போதனைகளைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களின் நினைவுக்குக் கொண்டுவந்தபோது, உறங்கிக்கொண்டிருந்த அவர்களுடைய உணர்வுகள் விழித்தெழுந்தன. ஒரு புதிய வெளிப்படுத்தலாக, சத்தியமாக, கலப்படமில்லாத தூய்மையானதாக இந்த சத்தியங்களின் அர்த்தங்கள் அவர்களுடைய மனங்களில் மின்னி, அதற்கென்று ஒரு இடத்தைத் தானாகவே பிடித்துக்கொண்டது. அதன்பின், அவருடைய வாழ்க்கையின் ஆச்சரியமான அனுபவம் அவர்களுடையதாயிற்று. அவரால் நியமிக்கப்பட்டிருந்த மனிதர்களின்மூலமாக வார்த்தை சாட்சிகொடுத்தது. அவர்கள் சத்தியத்தை அறிவித்தார்கள். "அந்த வார்த்தை மாம்சமாகி,... கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்." "அவருடைய பரிபூரணத்தினால், நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்"—யோவான் 1:14,17. (19)

மேலும் அதைப்பற்றிய சரியான ஒரு புரிந்துகொள்ளுதலின்மூலமாக, நித்தியத்திற்காக அவர்கள் நிச்சயமாகவே செயலாற்றலாம் என்பதற்காக, வேதவாக்கியங்களை வாசிக்கும்படி அப்போஸ்தலன் விசுவாசிகளுக்கு உபதேசித்தான். இறுதியில், வெற்றிபெறக்கூடிய ஒவ்வொரு ஆத்துமாவின் அனுபவத்திலும் குழப்பம், பரீட்சை ஆகியவைகளின் சாட்சிகள் இருக்கும் என்பதைப் பேதுரு உணர்ந்தான். ஆனால் சோதிக்கப்படும் ஒருவனின் மனதில், வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளுதல், இருதயத்தை ஆறுதல்படுத்தி, பலமிக்க ஒருவரின்மீதுள்ள விசுவாசத்தை பலப்படுத்தி, வாக்குத்தத்தங்களை மனதிற்குள் கொண்டுவரும் என்பதையும்கூட அவன் அறிந்திருந்தான். (20)

“மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமை யெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது. அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.” “இப்படியிருக்க, கர்த்தர் தயவுள்ளவர் என்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவிதகபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்” (1 பேதுரு 1:24,25; 2:1–3) என்று அவன் அறிவித்தான். பேதுரு விசுவாசிகளுக்கு எழுதியிருந்த கடிதங்களில், இருந்த அநேகர், அஞ்ஞானிகளுக்கு மத்தியில் வாழ்ந்திருந்து, தங்களுடைய பரம அழைப்பிற்கு உண்மையானவர்களாக இருப்பதை அதிகமாகச் சார்ந்திருந்தனர். கிறிஸ்துவின் அடியார்களாக இருப்பதில் அவர்களுடைய சலுகைகளை அவன் அவர்கள்மீது வற்புறுத்தியிருந்தான். “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள். இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்”–1 பேதுரு 2:9–10. (21)

“பிரியமானவர்களே, அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள், ஆத்துமாவிற்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளைவிட்டுவிலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின்

நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி, நீங்கள் அவர்களுக்குள்ளே நல்ல நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 பேதுரு 1:11,12) என்றும் உபதேசித்திருந்தார். (22)

தீமையான அதிகாரிகளுக்கு நேராக விசுவாசிகள் தாங்கியிருக்கவேண்டிய மனோபவத்தை அப்போஸ்தலன் வெளிப்படையாகச் சுருக்கமாகக் கூறினான். "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவிற்கானாலும்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலும்சரி, கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மை செய்கிற தினாலே, புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது, தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள். தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்"–1 பேதுரு 2:13–17. (23)

வேலைக்காரர்களாக இருந்தவர்கள், எஜமானர்களுக்கு கீழ்ப்படியவேண்டுமென்று உபதேசிக்கப்பட்டனர். "வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல. முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள். ஏனெனில், தேவன்மேல் பற்றுதலியிருக்கிற மனச்சாட்சியினிமித்தம், ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றம்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவம்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவும் இல்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்கென்று பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால்

குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர் இடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்”–1 பேதுரு 2:18–25. (24)

விசுவாசத்தில் இருக்கிற பெண்கள் தங்கள் சம்பாஷணையில் கற்புள்ளவர்களாகவும் தங்களுடைய உடையிலும் நடத்தையிலும் அடக்கமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென்று அப்போஸ்தலன் உபதேசித்திருந்தான். “மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறப்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது”–1 பேதுரு 3:3,4. (25)

அந்தப் பாடம் ஒவ்வொரு காலத்திலும் உள்ள விசுவாசிகளுக்கும் பொருத்தமானதாக இருக்கிறது. “அவர்கள் கனிகளினால் அவர்களை அறிவீர்கள்” (மத்தேயு 7:20). எளிமையும் சாந்தமுமான ஆவியினால் உண்டாகும் உள்ளான அலங்காரம் மட்டுமே விலைமதிப்பிடமுடியாததாக இருக்கிறது. உண்மையான கிறிஸ்தவனின் வாழ்க்கையில், வெளிப்புறமான அலங்காரம், உள்ளான சமாதானம், பரிசுத்த தன்மை ஆகியவைகளுடன் இசைவுள்ளதாக இருக்கிறது. ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால், தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு எனக்குப்பின் செல்லக்கடவன் என்று கிறிஸ்து கூறினார். கிறிஸ்தவனின் வாழ்க்கையை சுயமறுப்பும் தியாகமும் அடையாளப்படுத்திக்காட்டும். சுவையில் மாறுதல் உண்டாயிருக்கிறதற்கான அடையாளம் மீட்கப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள பாதையில் நடக்கும் அனைவரின் உடையிலும் காணப்படும். (26)

அழகை நேசித்து அதை விரும்புவது நியாயமானதுதான்; ஆனால் ஒரு அழியாததாகிய—மேலான அழகை நாம் நேசித்து, அதனைத் தேடவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பூமியில் உள்ள பரிசுத்தவான்கள் அனைவரும் அணியும் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய அழகிய சுத்தமும் பிரகாசமுமுள்ள வெண் வஸ்திரத்தின் மதிப்புடன் புறம்பான அலங்காரம் எதையும் ஒப்பிடமுடியாது. இந்த வஸ்திரம் அவர்களை இங்கு அழகுள்ளவர்களும் பிரியமானவர்களாகவும் ஆக்குவதுடன், இதற்குப்பின் அவர்கள் அரசரின் அரண்மனையில் அனுமதிக்கப்படுவதற்கு (அந்த ஆடை) அவர்களுக்கு அடையாள அட்டையாகவும் இருக்கும். “வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாய் அவர்கள் என்னுடன் நடப்பார்கள்” என்பது அவருடைய வாக்குத்தத்தமாயிருக்கிறது. (27)

கிறிஸ்துவின் சபை நுழைய வேண்டியதாக இருந்த ஆபத்தான காலங்களை தீர்க்கதரிசனப்பார்வையுடன் எதிர்பார்த்து, பரீட்சைகளுக்கும் பாடுகளுக்கும் முன்பாக உறுதியானவர்களாக நிற்கவேண்டும் என்று அப்போஸ்தலன் விசுவாசிகளுக்கு உபதேசித்தான். "பிரிமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" இருக்கும்படி அவர்களுக்கு எழுதினான் (1 பேதுரு 4:12). (28)

பூமிக்குரிய தன்மையின் களிம்பிலிருந்து தேவனுடைய பிள்ளைகள் சுத்திகரிக்கும்படி, பரீட்சை என்பது கிறிஸ்துவின் பள்ளியில் கொடுக்கப்படும் கல்வியின் ஒரு பகுதியாக இருக்கிறது. தேவன் அவருடைய பிள்ளைகளை நடத்திக்கொண்டிருப்பதனால், பரீட்சிக்கும் அனுபவங்கள் அவர்களுக்கு வருகிறது. பரீட்சிக்கும் தடைகளும் ஒழுங்குபடுத்துவதற்காக அவர் தேர்ந்துகொண்டவிதமாகவும், வெற்றிக்காக அவர் நியமித்துள்ள நிபந்தனைகளைாகவும் உள்ளன. மனிதர்களின் இருதயங்களை வாசித்தறிபவர் அவர்களுடைய பலவீனங்களை அவர்கள் அறிந்திருப்பதைவிட அவர் நன்றாக அறிந்திருக்கிறார். சிலரிடம் தகுதிகள் இருப்பதையும், அவைகளைச் சரியானவிதத்தில் பயன்படுத்தினால் அவைகள்மூலம் அவருடைய பணியை, முன்கொண்டு செல்லுவதற்குப் பயன்படுத்தமுடியும் என்பதையும் அவர் பார்க்கிறார். அவர்களுடைய சொந்த அறிவிலிருந்து மறைத்து வைக்கப்பட்டுள்ள குறைகளை அவர்கள் கண்டுபிடிக்கும்படி, அவருடைய தெய்வீக ஏற்பாட்டில் அவர்களை வித்தியாசமான நிலைமைகளுக்கும் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கும் கொண்டுவருகிறார். இந்தக் குறைகளை மேற்கொள்ளவும், சேவைக்கென்று அவர்களைத் தகுதிப்படுத்தவும் அவர் அவர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். அவர்கள் தூய்மை அடைவதற்காக, அடிக்கடி அவர் துன்பமாகிய நெருப்பை எரிய அனுமதிக்கிறார். (29)

தேவனுடைய சுதந்திரவாளிகளின்மீதான அவரது கரிசனை நிற்காததாக இருக்கிறது. அவருடைய பிள்ளைகளின் நிகழ்கால, நித்தியகால நன்மைக்காக, முக்கியமானதாக இல்லாத துன்பங்கள் அவர்கள்மீது வர அவர் அனுமதிப்பதில்லை. கிறிஸ்து, பூமிக்குரிய அவரது ஊழியத்தின்போது, தேவாலயத்தைச் சுத்திகரித்ததைப்போல, தமது சபையைத் தூய்மைப்படுத்துவார். வேதனையாகவும் பரீட்சையாகவும் அவரது மக்களின்மீது அவர் கொண்டுவரும் அனைத்தும் சிலுவையின் வெற்றியை முன்கொண்டு செல்லுவதற்கான ஆழமான பக்தியையும் பெரும் பலத்தையும் ஆதாயமாக அடைந்துகொள்ளுவதற்காக வருகிறது. (30)

பேதுருவின் அனுபவத்தில் கிறிஸ்துவின் பணியில் சிலுவையைப் பார்க்க விரும்பாமலிருந்த ஒரு நேரம் இருந்தது. வரவிருக்கும் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் இரட்சகர் அவரது சீடர்களுக்கு அறியச் செய்திருந்தபோது, "இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்கு சம்பவிப்பதில்லை" (மத்தேயு 16:22) என்று பேதுரு கூறினான். பாடுகளில் கிறிஸ்துவுடன் பங்காளிகளாக இருப்பதிலிருந்து பின்வாங்கச்செய்திருந்த சுய இரக்கம் பேதுருவின் கண்டனத்தை உண்டுபண்ணியிருந்தது. பூமியின்மீதுள்ள கிறிஸ்துவின் பாதை வேதனை, அவமானம் ஆகியவைகளுக்கூடாக இருக்கிறது என்பது சீடனுக்கு மிகவும் கசப்பான ஒரு பாடமாக இருந்தது. அதை அவன் மெதுவாகவே கற்றுக்கொண்டான். ஆனால், சூளையின் நெருப்பின் சூட்டில், அவன் தன் பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டியவனாக இருந்தான். இப்பொழுது ஒரு சமயத்தில் தீவிரமானதாக இருந்த அவனுடைய உருவம் வருடக்கணக்கான அவனுடைய ஊழியத்தின் பாரத்தினால், வளைந்துபோனதாக இருந்தபோது, "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது, நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக, அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:12,13) என்று அவனால் எழுதமுடிந்தது. (31)

கிறிஸ்துவின் மந்தைக்குத் துணைமேய்ப்பர்களாக இருக்கும் சபை மூப்பர்களுக்கு அவர்களுடைய பொறுப்புக்களை எடுத்துக்கூறியபோது, "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து கட்டாயமாயல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனத்தோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால், பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்று அப்போஸ்தலன் எழுதினான். (32)

துணை மேய்ப்பர்களின் ஸ்தானங்களில் இருப்பவர்கள் கர்த்தருடைய மந்தைகளின்மீது விழிப்புடன் காவல் செய்யவேண்டும். இது சர்வாதிகாரமான ஒரு காவலாக இராமல், தைரியப்படுத்தி—பலப்படுத்தி—உயர்த்துகின்ற ஒன்றாக இருக்கவேண்டும். ஊழியம் என்பது பிரசங்கம் செய்வதைவிட அதிகமானது. அதன் பொருள் அக்கறைமிக்க நேரடியான உழைப்பாகும். சபை, தவறுசெய்யக்கூடிய ஆண்களாலும் பெண்களாலும் ஆனதாக உள்ளது. இந்த வாழ்க்கையில் ஒப்புதலுடன் பணிசெய்வதற்கு இவர்கள் எதிர்கால வாழ்க்கையில் மகிமையினாலும் அழியாமையினாலும் முடிசூட்டப்படப்

பயிற்சிபெறவும் ஒழுங்கைக் கற்றுக்கௌள்ளவும் பொறுமையும் வேதனையுமிக்க முயற்சியைத் தேவைப்படுபவர்களாகவும் உள்ளனர். தேவனுடைய ஜனங்களிடத்தில் முகஸ்துதிசெய்யாத உண்மையானவர்களாகவும் அல்லது அவர்களைக் கடினமாக நடத்தாதவர்களாகவும் இருந்து, ஜீவ அப்பத்தினால் அவர்களைப் போஷிக்கக்கூடியவர்களாகவும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் அனுதின மனமாற்றத்தின் வல்லமையை உடையவர்களாகவும், அவர்கள் எவர்களுக்காக ஊழியம்செய்கிறார்களோ, அவர்களிடம் பலமும் சுயநலமற்ற அன்பையும் பேணக்கூடியவர்களான போதகர்கள் தேவையாக உள்ளனர். (33)

விலகிச் செல்லுதல், கசப்பு, குரோதம், பொறாமை ஆகியவைகளை சபையில் சந்திக்கும்போது, துணைமேய்ப்பன் செய்யவேண்டிய புத்திசாலித்தனமான பணி உள்ளது. காரியங்களைக் கிரமமாக வைப்பதற்கு கிறிஸ்துவுடன்—ஆவியுடன் அவன் செயல்படவேண்டியது அவசியமாக இருக்கும். விசுவாசத்துடனுள்ள எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டாகவேண்டும்; பாவங்கள் கடிந்துகொள்ளப்பட்டாகவேண்டும். தவறுகள் சரிசெய்யப்பட வேண்டும். மேடையின்மீதுள்ள ஊழியக்காரனின் பணியில் மட்டுமல்லாமல், சொந்த உழைப்பிலும் இப்படிச் செய்ய வேண்டும்; தாறுமாறான இருதயம் தூதுகளைத் தவிர்க்கலாம். தேவனுடைய வேலைக்காரன் தவறான விதத்தில் நிதானிக்கப்பட்டு விமரிசனம் செய்யப்படலாம். அப்பொழுது அவன்: “பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாகவும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமும் உள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது” (யாக்கோபு 3:17,18) என்று நினைப்பானாக. (34)

“இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று” எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிப்பது சுவிசேஷ ஊழியக்காரனின் பணியாக இருக்கிறது (எபேசியர் 3:11). இந்தப் பணியில் பிரவேசிக்கும் ஒருவர் சுயத்தைத் தியாகம் செய்யாமலிருப்பதைத் தனது பகுதியாகத் தெரிந்துகொண்டு பிரசங்கம் செய்வதில் மட்டும் திருப்தி உடையவராகி, நேரடியான ஊழியத்தை வேறு எவரிடமாவது விட்டுவிட்டால், அவருடைய ஊழியம் தேவனால் ஏற்றுக்கொள்ளமுடியாததாக இருக்கிறது. சரியான விதத்தில் இயக்கப்படவேண்டிய ஊழியம் இல்லாததினால், கிறிஸ்து எந்த ஆத்துமாக்களுக்காக மரித்திருக்கிறாரோ அவர்கள்

அழிந்துகொண்டிருக்கின்றனர். மந்தையின்மீதான கவனத்தைக் கோருகின்ற நேரடியான பணியைச்செய்ய விருப்பமில்லாதவர்களாக இருந்து, ஊழியத்தில் பிரவேசிக்கும் ஒருவர், அவரது அழைப்பைப்பற்றித் தவறாக எண்ணியிருக்கிறார். (35)

சுயத்தை மறந்துவிடுவது உண்மையான மேய்ப்பனின் ஆவியில் ஒன்றாக இருக்கிறது. அவன் தேவனுடைய பணியாகிய ஊழியத்தைச் செய்வதற்காக சுயத்தைப்பற்றிய பார்வையை இழந்துவிடுகிறான். வார்த்தையைப் பிரசங்கிப்பதனாலும், மக்களின் வீடுகளில் நேரடியான ஊழியம் செய்வதனாலும், அவன் அவர்களுடைய அவசியங்கள், அவர்களது துயரங்கள், அவர்களது பரீட்சைகள் ஆகியவைகளை அறிந்து, பெரும் சுமைதாங்குபவருடன் ஒத்துழைத்து, அவன் அவர்களுடைய பாரங்களில் பங்குகொண்டு, அவர்களுடைய துயரங்களில் ஆறுதல்செய்து, அவர்களது ஆத்துமப் பசியை நீக்கி, அவர்களுடைய இருதயங்களை தேவனுக்கென்று வெற்றிகொள்ளுகிறான். இந்த வேலையில் தேவதூதர்கள் அவனுக்கு உதவுகின்றனர். இரட்சிப்பிற்காக ஞானமுள்ளவனாகச் செய்யும் சத்தியத்தில், அவன் தானே கற்பிக்கப்பட்டு அறிவூட்டப்படுகிறான். (36)

சபையில் நம்பிக்கைக்குரிய பதவிகளில் இருப்பவர்களுக்குப் போதனைசெய்வது சம்பந்தப்பட்ட காரியத்தில், சபை ஆராதனையுடன் பங்கு பெறுபவர்களாக இருக்கும் அனைவரும் பின்பற்றவேண்டிய பொதுவான கொள்கைகளை அப்போஸ்தலன் விளக்கினான். கிறிஸ்துவைப்போன்ற தாழ்மையைத் தங்களுடைய மூப்பர்களின் உதாரணத்திலிருந்து மந்தையின் இளைய அங்கத்தினர்கள் பின்பற்றும்படி வற்புறுத்தப்பட்டனர். “அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்டிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கோ தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்”–1 பேதுரு 5:5–9. (37)

ஒரு தனித்தன்மையுள்ள சபையின் பரீட்சை நேரத்தில், பேதுரு இவ்வாறாக விசுவாசிகளுக்கு எழுதினான். அநேகர் ஏற்கனவே கிறிஸ்துவின்

பாடுகளில் பங்குபெறுபவர்களான இருந்தனர். பயங்கரமான உபத்திரவக் காலத்தின்கீழ், சபை செல்ல வேண்டியதாக இருந்தது. குறைந்த சில வருடங்களுக்குள் சபையில் ஆசிரியர்களாகவும் தலைவர்களாகவும் நின்றிருந்தவர்களில் அநேகர், சுவிசேஷத்திற்காகத் தங்களுடைய உயிரைக் கொடுக்கவேண்டியவர்களானார்கள். மந்தையைத் தப்பவிடாமல் பட்சிக்கிற ஓநாய்கள் விரைவில் நுழையவேண்டியவைகளாக இருந்தன. ஆனால் எவர்களுடைய நம்பிக்கைகள் கிறிஸ்துவை மையமாகக்கொண்டிருந்ததோ, அவர்களுக்கு இந்தக் காரியங்களில் ஒன்றும் அதைரியத்தைக் கொண்டுவரமுடியாதவைகளாக இருந்தன. “இயேசு கிறிஸ்துவிற்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே, கொஞ்சக் காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக. அவருக்கு மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக, ஆமென்” (1 பேதுரு 5:10,11) என்னும் தைரியப்படுத்தும் வார்த்தைகளுடனும் நல்ல உற்சாகத்துடனும் பேதுரு விசுவாசிகளின் மனங்களை, இப்பொழுதுள்ள பரீட்சைகள் எதிர்காலத்திலுள்ள பாடுகளின் காட்சிகளிலிருந்து, “அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய” சுதந்திரத்திற்குத் திருப்பினான் (1 பேதுரு 1:4). (38) ★

# 52

# இறுதிவரை உறுதியாக நின்றவன்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 529–538)**
**திருவசன ஆதாரம் : 2 பேதுரு**

பேதுருவுடன் சேர்ந்து விலையேறப்பெற்ற விசுவாசத்தைப் போன்ற விசுவாசத்தை அடைந்திருந்தவர்களுக்கு, பேதுரு எழுதின இரண்டாம் நிருபத்தில், கிறிஸ்தவ குணத்தின் முன்னேற்றத்திற்கான தெய்வீகத் திட்டத்தை அப்போஸ்தலன் முன்வைக்கிறான். (1)

“தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்”–2 பேதுரு 1:2–7. (2)

“இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது”–2பேதுரு 1:8. (3)

இந்த வார்த்தைகள் போதனைகள் நிரம்பினவைகளாக இருந்து வெற்றியின் முக்கியக் கருத்தாக ஒலிக்கிறது. விசுவாசிகளுக்குமுன் அப்போஸ்தலன் கிறிஸ்தவ முன்னேற்றம் என்னும் ஏணியை முன்வைக்கிறான். அதன் ஒவ்வொரு படிக்கட்டும் தேவனைப்பற்றிய அறிவின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டி, அதன்மேலே ஏறிச்செல்லுவதில் நிற்றல் என்பது இருக்கக்கூடாது என்றும் காட்டுகிறான். விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு ஆகியவை இந்த ஏணியின் சுற்றுகளாக உள்ளன. நாம் சுற்றிச்சுற்றி இந்தப் படிக்கட்டுகளின்மேல் படிக்கட்டுகளாக ஏறி, நமக்காக உள்ள கிறிஸ்துவின் தரத்தை அடைந்து, இரட்சிக்கப்படுகிறோம். இவ்வாறாக, அவர் நமக்காக ஞானமும் நீதியும் பரிசுத்தமாக்கப்படுதலும் மீட்புமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். (4)

தேவன் அவருடைய பிள்ளைகளை மகிமைக்கும் புண்ணியத்திற்கும் அழைத்திருக்கிறார். இவைகள் அவருடன் உண்மையாகப் பிணைக்கப் பட்டிருப்பவர்களின் வாழ்க்கையில் வெளிக்காட்டப்படும். பரலோகத்தின் ஈவில் பங்குபெறுவர்களாகி, “விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே” (1 பேதுரு 1:5) பூரணத்தை அடையும்படி, அவர்கள் முன்செல்லவேண்டியவர்களாக உள்ளனர். தேவனுடைய புண்ணியத்தை அவரது ஜனங்களுக்குக் கொடுப்பது தேவனுடைய மகிமையாக இருக்கிறது. ஆண்களும் பெண்களும் மிக உயரமான தரத்தை அடைவதைப் பார்ப்பது அவருடைய வாஞ்சையாக இருக்கிறது. விசுவாசத்தினால் அவர்கள் கிறிஸ்துவின் வல்லமையைப் பெற்றுக்கொண்டவர்களாக இருக்கும்போது, தவறாத அவருடைய வாக்குத்தத்தங்களுக்காக அவர்கள் மன்றாடும்போது, அவைகள் தங்களுடையவைகள் என்று அவர்கள் உரிமைபாராட்டும்போது, மறுக்கப்படமுடியாத ஒரு வாய்ப்புடன் அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தேடும்போது, அவர்கள் அவருக்குள் நிறைவானவர்களாக்கப்படுவார்கள். (5)

சுவிசேஷத்தின் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்ட விசுவாசியின் அடுத்த வேலை, அவனுடைய சுபாவத்துடன் புண்ணியத்தைச்சேர்த்து, இவ்வாறாக, தேவனைப்பற்றிய அறிவை வரவேற்பதற்காக இருதயத்தைச் சுத்திகரித்து, மனதை ஆயத்தப்படுத்துவதாகும். எல்லாவிதமான மெய்யான கல்விக்கும், எல்லாவிதமான மெய்யான சேவைக்கும், இந்த அறிவு அஸ்திவாரமாயிருக்கிறது. இது ஒன்றுமட்டுமே சோதனைக் கெதிரான உண்மையான பாதுகாப்பாக இருந்து, இது ஒன்றுமட்டுமே ஒருவனை சுபாவத்தில் தேவனைப்போலாக்குகிறது. “தேவனைப்பற்றியும்

அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் உள்ள அறிவின் மூலமாக, ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும்" விசுவாசிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 1:3). தேவனுடைய நீதியை அடைந்து கொள்ள உண்மையாக வாஞ்சிப்பவனிடத்திலிருந்து நல்ல ஈவு எதுவும் நிறுத்திவைக்கப்படுவதில்லை. (6)

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவா. 17:3) என்று கிறிஸ்து கூறினார். "ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபை யையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 9:23,24). இந்த அறிவை ஆதாயமாக அடைந்துகொள்ளுபவன், அடைந்துகொள்ளக்கூடிய ஆவியின் அடைந்துகொள்ளுதல்களின் அகலம், ஆழம், உயரம் ஆகியவைகளை மனித மனம் ஆபூர்வமாகவே புரிந்துகொள்ளும். (7)

ஒருவனும் தனது செயல் எல்லையில், கிறிஸ்தவ சுபாவத்தில் பூரணமடைவதில், தோல்வி அடையவேண்டிய அவசியம் இல்லை. வாழ்க்கைக்கும் தெய்வபக்திக்கும் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் விசுவாசி பெற்றுக்கொள்ள, கிறிஸ்துவின் தியாகபலியினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சுபாவமாகிய உதாரணத்தை நம்முன்வைத்த தேவன், பரிபூரணமான தரத்தை நாம் அடையலாம் என்பதை, தொடர்ச்சியாகத் தீமையை எதிர்த்ததினால் பூரணமடைந்த அவருடைய மானுடத்தில் இரட்சகர் காட்டுகிறார்; நாமும் முழுமையான வெற்றியை அடையலாம் என்பதற்கு நமக்குள்ள தேவனின் வாக்குறுதியாக இது உள்ளது. (8)

கிறிஸ்துவைப்போல இருக்கக்கூடிய ஆச்சரியமான சாத்தியதையும் கற்பனையின் கொள்கைகளனைத்திற்கும் கீழ்ப்படியக்கூடிய சாத்தி யதையும் விசுவாசிக்குமுன் உயர்த்திப்பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனிதனால் அவனாலேயே இந்த நிலைமையை அடைவது முற்றிலுமாக அசாத்தியமானதாக இருக்கிறது. அவன் ஒழுக்கத்திற்கும் சத்திய ஆவியின் கட்டுப்படுத்தும் செல்வாக்கிற்கும் கீழ்ப்படிவதனால் உண்டாகும் பலனாக உள்ள தேவனுடைய வார்த்தை அறிவிக்கும் பரிசுத்தத்தை, அவன்

இரட்சிக்கப்படுவதற்குமுன் உடையவனாகவேண்டும். கிறிஸ்துவின் நீதி என்னும் தூபகலசத்தில் தெய்வீக சுகந்த வாசனையாக நிரப்பப்படும் ஒவ்வொரு செயலினாலும் மட்டுமே, மனிதனின் கீழ்ப்படிதல் பூரணமடையமுடியும். ஒவ்வொரு தவறையும் மேற்கொள்ள முயற்சிசெய்வது கிறிஸ்தவனின் பகுதியாக உள்ளது. கிறிஸ்தவன் பாவத்தால் நோயுற்றுள்ள அவனுடைய ஆத்துமாவின் ஒழுக்கக்கேடுகளை சுகப்படுத்துவதற்கு, தொடர்ச்சியாகக் கிறிஸ்துவைநோக்கி ஜெபிக்கவேண்டியவனாக இருக்கிறான். இவைகளின்மீது வெற்றிகொள்ள அவனிடம் ஞானமோ அல்லது அறிவோ இல்லை. இவை கர்த்தருக்குச் சொந்தமானவைகளாக இருக்கின்றன. அவரிடம் தாழ்மையுடனும் நொறுங்கினவர்களாகவும் உதவிதேடுபவர்களுக்கு அவர் அவைகளைக் கொடுக்கிறார். (9)

பரிசுத்தமில்லாமையிலிருந்து பரிசுத்தத்தை அடைய, மறுரூபப்படுத்தும் செயல் தொடர்ச்சியான ஒன்றாக இருக்கிறது. மனிதர் பரிசுத்தமடைய தேவன் நாள்தோறும் உழைக்கிறார். சரியான பழக்கங்களைப் பயிற்றுவிப்பதற்காக விடாமுயற்சிகளைச்செய்து, அவருடன் ஒத்துழைக்கவேண்டும். அவன் கிருபையுடன் கிரியையைச் சேர்க்க வேண்டியவனாக இருக்கிறான். சேர்க்கின்ற பணியில் அவன் இவ்வாறாகச் செயல்படும்போது, பெருகச்செய்யும் திட்டத்தில் அவனுக்காக தேவன் செயலாற்றுகிறார். நொறுங்குண்ட இருதயத்திலிருந்து உண்டாகும் ஜெபத்தைக் கேட்பதற்கும் மறுமொழி கொடுப்பதற்கும் நமது இரட்சகர் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார். அவரிடம் விசுவாசமுள்ளவர்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகச்செய்யப்படுகின்றன. அவர்களைச் சூழ்ந்துள்ள தீமைகளுக்கெதிரான போராட்டங்களில், அவர்களுக்கு அவசியமான ஆசீர்வாதங்களை அவர் மகிழ்ச்சியுடன் கொடுத்திருக்கிறார். (10)

கிறிஸ்தவ முன்னேற்றம் என்னும் ஏணியில் உயரே ஏறிச்செல்ல முயலுபவர்கள் உள்ளனர். ஆனால் முன்னேறிச்செல்லும்போது, அவர்கள் தங்களுடைய நம்பிக்கையை மனித வல்லமையின்மீது வைக்கத்தொடங்கி, விரைவில் அவர்களுடைய விசுவாசத்தைத் தொடங்கினவரும் முடிப்பவருமான இயேசுவைப்பற்றிய பார்வையை இழந்துவிடுகின்றனர். இதன் பலன் தோல்வியாகி, ஆதாயமாக்கப்பட்டிருந்த அனைத்தும் இழப்பாக மாறுகிறது. அவர்களுடைய இருதயங்களிலும் வாழ்க்கையிலும் முன்னேற்றமடைந்துகொண்டிருக்கின்ற கிறிஸ்தவக் கிருபைகளை ஆத்துமாக்களின் சத்துரு கொள்ளையடிக்கும்படி அனுமதித்ததினால், பாதையில் களைப்புற்றவர்களாக மாறினாவர்களின் நிலைமை உண்மையில் வருந்தக்கூடியதாக உள்ளது. "இவைகள் இல்லாதவன்

எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான்" (2 பேதுரு 1:9) என்று அப்போஸ்தலன் அறிவிக்கிறான். (11)

தேவனுடைய காரியங்களில் அப்போஸ்தலனாகிய பேதுரு நீண்டகால அனுபவத்தை உடையவனாக இருந்திருந்தான். பரலோகப்பிராகாரத்தைச் சென்றடைகின்ற ஏணியின் மிக மேலான உயரத்தில் உள்ள வளைவுவரை, எப்பொழுதும் மேல்நோக்கியும் முன்னேறியும் செல்லுகின்ற ஒருவனுக்குமுன் தோல்வி என்பதற்கான சாத்தியதை இல்லை என்பது கேள்விகளுக்கு இடமில்லாதவிதமாக மெய்ப்பிக்கப்படும்வரை தொடர்ச்சியான ஆண்டுகளில் தேவனுடைய இரட்சிக்கும் வல்லமையின்மீதுள்ள அவனுடைய விசுவாசம் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. (12)

கிருபையிலுள்ள ஒரு தொடர்ச்சியான வளர்ச்சி, சத்தியத்தைப்பற்றிய அறிவு ஆகியவைகளின் அவசியம்குறித்துப் பேதுரு அநேக வருடங்களாக விசுவாசிகளை வற்புறுத்தியிருந்தான். இப்பொழுது அவனுடைய விசுவாசத்திற்காக, அவன் விரைவில் இரத்தசாட்சி என்னும் முடிவினை அனுபவிக்க அழைக்கப்படுவான் என்பதை அறிந்து, ஒவ்வொரு விசுவாசியும் சென்றடைய சமீபமாக இருக்கக்கூடிய விலைமதிப்புமிக்க சலுகைகளைப்பற்றி அவர்களுடைய கவனத்தை அவன் மறுபடியும் அழைத்தான். அவனுடைய விசுவாசத்தின் முழு நிச்சயத்தில்—கிறிஸ்தவ வாழ்க்கையில் உள்ள நோக்கத்தில்—உறுதியானவர்களாக இருக்கும்படி, வயது முதிர்ந்த அந்தச் சீடன் சகோதரர்களுக்கு உபதேசம்செய்தான். "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால், நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10,11) என்று அவன் மன்றாடினான். விலைமதிப்புமிக்க வாக்குறுதி! கிறிஸ்தவ பூரணத்தின் உயரத்தை நோக்கி, விசுவாசி முன்னேறும்போது, விசுவாசிக்கு முன்பாக உள்ள நம்பிக்கை மகிமையானதாக இருக்கிறது. (13)

"இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும், உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன்.

மேலும், நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ணுவேன்" (2 பேதுரு 1:12–15) என்று அப்போஸ்தலன் தொடர்ந்தான். (14)

மனித இனத்தைப்பற்றிய தேவனுடைய நோக்கத்தைப் பற்றிப் பேசுவதற்கு, அப்போஸதலன் நல்ல தகுதி உடையவனாக இருந்தான். ஏனென்றால், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, தேவனுடைய ராஜ்யத்துடன் சம்பந்தப்பட்டவைகளை அவன் அதிகமாகக் கண்டும் கேட்டும் இருந்தான். "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்"– 2 பேதுரு 1:16–18. (15)

விசுவாசியின் நம்பிக்கையின் நிச்சயத்தைப்பற்றி இந்தச் சான்று மனநிறைவை உண்டுபண்ணியிருந்தும்கூட, அதைவிட தீர்க்கதரிசனக் காட்சியில் அதிகமான மனநிறைவை உண்டுபண்ணக்கூடிய அதிகமான வேறொரு காட்சி இருந்தது. அதன்மூலமாக அனைவருடைய விசுவாசமும் உறுதிப்படுத்தப்படுவதுடன் நங்கூரமிடப்படவும் செய்யலாம். "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:19–21) என்று அறிவித்தான். (16)

ஆபத்துக் காலங்களில் பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்கும் அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை உயர்த்திக்கொண்டிருந்த அதே நேரத்தில், தவறான தீர்க்கதரிசன தீவட்டிகளுக்கெதிராக அப்போஸ்தலன் சபையை பக்திவிநயத்துடன் எச்சரித்திருந்தான். இந்த "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே

உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்" (2 பேதுரு 2:1). சபையில் எழும்பும் இந்தத் தவறான ஆசிரியர்கள் விசுவாசத்தில் உள்ள தங்களுடைய அநேக சகோதரர்களால் உண்மையானவர்கள் என்று கணக்கிடப்படுபவர்களை, அப்போஸ்தலன்: "இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்" (2 பேதுரு 2:17,20) என்று அறிவித்தான். (17)

காலத்தின் ஊடாக, காலத்தின் முடிவுரைப் பார்த்த பேதுரு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சற்று முன்னால், உலகத்தில் இருக்ககூடிய நிலைமைகளை விவரிக்கும்படி ஆவியினால் ஏவப்பட்டான்: "கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்" (2 பேதுரு 3:3,4) என்று எழுதினான். ஆனால் "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" (1 தெச. 5:3); அப்படியிருந்தாலும், சத்துருவின் கண்ணிகளில் எல்லோரும் அகப்படமாட்டார்கள். பூமிக்குரிய காரியங்கள் யாவும் முடிவை நெருங்கும்போது, காலங்களின் அடையாளங்களை அறிந்துகொள்ளக்கூடிய விசுவாசமிக்கவர்கள் இருப்பார்கள். பெரும் எண்ணிக்கையுள்ள பெயரளவிலானவர்கள் தங்களுடைய விசுவாசத்தை மறுக்கும்போது, முடிவுவரை தாங்கிக்கொள்ளக்கூடிய மீதியானவர்கள் இருப்பார்கள். (18)

கிறிஸ்துவின் திரும்பி வருதலைப்பற்றிய நம்பிக்கையைப் பேதுரு அவனுடைய இருதயத்தில் உயிருடன் காத்திருந்து, இரட்சகரின் நிச்சயமான வாக்குத்தத்தின் நிறைவேறுதலை சபைக்கு நிச்சயப்படுத்தியிருந்தான். "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை

என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:3). பரீட்சிக்கப்பட்டு விசுவாசமிக்கவர்களாக இருப்பவர்களுக்கு அந்த வருகை தாமதமாவதுபோல் காணப்படலாம். ஆனால் அப்போஸ்தலன்: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9) என்று அவர்களுக்கு வாக்குறுதிகொடுத்தான். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்"–2 பேதுரு 3:10. (19)

"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்"–2 பேதுரு 3:11–13. (20)

"ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும்பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு, உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்"–2 பேதுரு 3:14–18. (21)

தேவனுடைய தெய்வீக ஏற்பாட்டினால், பேதுரு ரோமாபுரியில் அவனது ஊழியத்தை முடிக்க அனுமதிக்கப்பட்டான். இது பவுல் கடைசித் தடவையாகக் கைதான நேரத்தில் ரோமநாட்டுப் பேரரசனான நீரோவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. இவ்வாறாக, அநேக வருடங்களாகத் தங்களுடைய ஊழியங்களினால் வெகுதூரமாகப் பிரிக்கப்பட்டிருந்த இரண்டு தேர்ச்சிபெற்ற அப்போஸ்தலர்களும், உலகின் மாபெரும் நகரில், கிறிஸ்துவிற்கான

அவர்களுடைய கடைசிச் சாட்சியைக் கொடுத்து, அதன் மண்ணின்மீது பரிசுத்தவான்களும் இரத்தசாட்சிகளுமான பெரும் அறுவடைக்கு, விதையாகத் தங்களுடைய இரத்தத்தைச் சிந்தவேண்டியவர்களாக இருந்தனர். (22)

கிறிஸ்துவை மறுதலித்தபின், திரும்பவும் சேர்த்துக்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து, பேதுரு பயமற்றவனாக தைரியத்துடன் அபாயத்தைச் சந்தித்து, சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்து, எழுந்தருளிச் சென்றுள்ள இரட்சகரைப் பிரசங்கிப்பதில் மேன்மையான தைரியத்தைக் காட்டியிருந்தான். அவன் தன் சிறை அறையில் வைக்கப்பட்டிருந்தபோது, கிறிஸ்து அவனிடம் கூறியிருந்த வாத்தைகளை அவன் தன் மனதிற்கு அழைத்தான். “நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது, உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்” (யோவான் 21:18). இவ்வாறாக, அவன் எந்தவிதமான மரணத்தை அனுபவிப்பான் என்பதை அந்தச் சீடனுக்கு அறியச் செய்து, சிலுவையின்மீது அவனது கரங்களை அவன் விரிக்கப்போவதையும்கூட, அவர் முன்னதாகவே கூறியிருந்தார். (23)

ஒரு யூதனாகவும் வெளிநாட்டுக்காரனாகவும் இருந்த பேதுரு, சவுக்கால் அடிக்கப்படவும், சிலுவையில் அறையப்படவுமான தண்டனைக் குட்படுத்தப்பட்டான். இந்த பயங்கரமான மரணத்தின் வாய்ப்பு நிலையில், இயேசுவைப்பற்றிய விசாரணையின்போது, அவன் அவரை மறுதலித்ததை நினைத்தான். சிலுவையை ஒப்புகைசெய்ய ஒரு சமயத்தில் ஆயத்தமாக இல்லாதவனாக இருந்த அவன், சுவிசேஷத்திற்காகத் தனது உயிரைக் கொடுப்பதை ஒரு மகிழ்ச்சியாக எண்ணி, தனது கர்த்தரை மறுதலித்திருந்த ஒருவன், அவனது ஆண்டவர் மரித்த அதேவிதமாக மரிப்பதை, ஒரு பெரும் மேன்மை என்று உணர்ந்தான். அந்தப் பாவத்திற்காகப் பேதுரு உண்மையாகவே மனம் வருந்தியிருந்தது, மந்தையின் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் போஷிக்கும்படியுள்ள கட்டளை அவனுக்குக் கொடுக்கப்பட்டதனால், அவன் கிறிஸ்துவால் மன்னிக்கப்பட்டிருந்தான். ஆனால் அவனைத் தன்னால் மன்னிக்க முடியவில்லை. அவனுடைய துயரம், பச்சத்தாபம், ஆகியவைகளின் கசப்பை பயங்கரமான கடைசிச் சாட்சியின் வேதனைகளைப்பற்றிய எண்ணத்தினால்கூடக் குறைக்க முடியவில்லை. தன்னைச் சிலுவையில் தலைகீழாக அறையும்படியான ஒரு கடைசி அனுகூலத்தை அவனுக்குக் காட்டும்படி, அவன்

அவனுடைய மரணதண்டனையை நிறைவேற்றுபவர்களிடம் கெஞ்சினான்; அந்த வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டது; இவ்விதமாகப் பெரும் அப்போஸ்தலனாகிய பேதுரு மரணமடைந்தான். (24) ★

# 53

# அன்பான வேண்டுகோள்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 539–545)**
**திருவசன ஆதாரம் – லூக்கா 9:54–56**

இயேசுவிற்கு அன்பான சீடன் என்று, யோவான் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் மேலாகச் சிறப்பிக்கப்பட்டிருந்தான். அவன் மற்றவர்களைவிட மேலான அளவில் கிறிஸ்துவின்மீதுள்ள நட்பை அனுபவித்திருந்ததுபோல் தோன்றுகிறது. இரட்சகரின் நம்பிக்கைக்கும் அன்பிற்குமான அநேக அடையாளங்களை அவன் பெற்றிருந்தான். மறுரூபமலையில் கிறிஸ்துவின் மகிமையைக் காணும்படி அனுமதிக்கப்பட்ட மூவரில் ஒருவனாக அவன் இருந்தான். கெத்சமனேயில் அவருடைய வேதனையைக் காணும்படியாகவும் அவன் அனுமதிக்கப்பட்டான். கர்த்தர் சிலுவையின்மீது அவரது உடல் வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்த கடைசிநேரத்தில், கர்த்தர் அவருடைய அன்னையை அவனுடைய பராமரிப்பிற்கு ஒப்புவித்திருந்தார்கள். (1)

அன்பான சீடனின்மீதிருந்த இரட்சகரின் பற்று, ஆர்வமிக்கதாகவும் ஈடுபாடுள்ளதாகவும் முழுப்பலத்துடனும் திருப்பப்பட்டிருந்தது. உன்னதமான தூணை திராட்சைச் செடி பற்றிக்கொள்ளுவதைப்போல அவன் பற்றிக்கொண்டிருந்தான். அவனுடைய ஆண்டவருக்காக அவன் நியாயவிசாரணை மண்டபத்தில் துணிச்சலுடன் இருந்து, சிலுவைக்கருகில் தரித்திருந்தான். கிறிஸ்து உயிர்தெழுந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் உத்வேகமிக்க பேதுருவையும் முந்திக்கொண்ட யோவான், அவனுடைய பேரார்வத்தினால் கல்லறையை நோக்கி விரைந்தான். (2)

யோவானுடைய வாழ்க்கை, சுபாவம் ஆகியவைகளில் வெளிக்காட்டப்பட்டுள்ள நம்பிக்கைமிக்க அன்பு, சுயநலமற்ற பிரதிஷ்டை ஆகியவை கிறிஸ்தவ சபைக்குச் சொல்லிமுடியாத பாடங்களை முன்வைக்கின்றன.

அவனுடைய பின்னான அனுபவம் வெளிப்படுத்தியிருந்த சுபாவத்தின் அழகை யோவான் இயற்கையாக உடையவனாக இருக்கவில்லை. இயற்கையில் அவன் தீவிரமான குறைபாடுகளை உடையவனாக இருந்தான். அவன் அகந்தைமிக்கவனாகவும், சுயத்தைச் சார்ந்து தர்க்கம் செய்பவனாகவும், கனத்தை நாடுபவனாகவும் இருந்ததுமட்டுமின்றி, காயப்படும்போது உத்வேகம் உள்ளவனாகவும், சீற்றமடைபவனாகவும் இருந்தான். அவனும் அவனுடைய சகோதரனும் இடிமுழக்கத்தின் குமாரர்கள் என்று அழைக்கப் பட்டிருந்தனர். தீயகுணம், பழிவாங்கும் ஆசை, விமரிசனத்தின் ஆவி ஆகிய அனைத்தும் அந்த அன்பான சீடனிடம் இருந்திருந்தன. ஆனால் இவைகளுக்கடியில் ஆர்வம், உண்மையான அன்புமிக்க இருதயம் இருப்பதை அந்த தெய்வீக ஆசிரியர் அறிந்திருந்தார். இயேசு அவனுடைய சுயத்தைத் தேடுகின்ற தன்மையைக் கடிந்துகொண்டிருந்தார். அவனது ஆசைகளை மனமடியச் செய்திருந்தார். அவனுடைய விசுவாசத்தை சோதித்தார். ஆனால் அவனுடைய ஆத்துமாக எதற்காக ஏங்கியிருந்ததோ அந்த பரிசுத்தத்தின் அழகை மறுரூபமடையச்செய்யும் அன்பின் வல்லமையையும் அவர் அவனுக்கு வெளிக்காட்டினார். (3)

இரட்சகருடனிருந்த நேரடியான உறவின்போது, பல சமயங்களில் அவனது சுபாவத்தின் குறைபாடுகள் பலத்தவிதமாக முன்னணிக்கு வந்திருந்தன. ஒரு சமயத்தில் கிறிஸ்து ஒரு சமாரிய கிராமத்திற்கு, அவருக்காகவும் அவருடைய சீடர்களுக்காகவும் சிற்றுண்டியை ஆயத்தம் செய்யும்படி அவருக்குமுன் அவருடைய தூதுவர்களை அனுப்பியிருந்தார். ஆனால் இரட்சகர் அந்த கிராமத்தைச் சமீபித்தபோது, அவர் எருசலேமிற்குக் கடந்துசெல்ல விருப்பமுள்ளவராக இருப்பவர்போல் தோன்றினார். இது சமாரியர்களின்பொறாமையை எழுப்பிவிடவே, அவர்களுடன்தங்கியிருக்கும்படி அவர்களை அழைப்பதற்குப் பதிலாக, சாதாரணமான வழிப்போக்கனுக்குக் கொடுக்கக்கூடிய உபச்சாரங்களையும் அவர்கள் நிறுத்திக்கொண்டனர். இயேசு அவரது பிரசன்னத்தை ஒருவரிடமும் வற்புறுத்துவதில்லை. சமாரியர்கள் அவரை அவரது விருந்தினர்களாக இருக்கும்படி வரவேற்றிருந்தால், அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்திருக்கமாட்டார்கள். (4)

தமது பிரசன்னத்தில் சமாரியர்களை ஆசீர்வதிப்பதுதான் இயேசுவின் நோக்கம் என்பதை சீடர்கள் அறிந்திருந்தனர். அவரது ஆண்டவரிடம் காட்டப்பட்ட குளுமையான தன்மை, பொறுமை, மரியாதை ஆகியவை சீடர்களைக் கோபத்தினாலும் ஆச்சரியத்தினாலும் நிரப்பினது. குறிப்பாக யாக்கோபும் யோவானும் வெகுண்டனர். அவர்கள் மிகவும் மேலான

விதத்தில் பக்திசெலுத்தும் ஒருவர், இவ்விதமாக நடத்தப்பட்டது உடனடியான தண்டனையில்லாமல் விட்டுவிடப்படுவது ஒரு பெரும் தவறுபோல் அவர்களுக்குக் காணப்பட்டது. அவர்களது பேரார்வத்தில் அவர்கள், எலியாவைப் பிடித்துக்கொண்டுவரும்படி அனுப்பப்பட்ட சமாரிய சேனைத் தலைவனும் அவனுடைய கூட்டத்தினரும் அழிக்கப்பட்டதுபோல, அவர்கள்: “ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?” என்று கேட்டார்கள். அவர்களுடைய வார்த்தைகளினால் இயேசு வேதனை அடைவதைக் கண்டு அவர்கள் அதிசயித்தனர். “நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்” என்று அதட்டி, “மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்” (லூக்கா 9:54–56) என்றார். அவருடைய கடிந்துகொள்ளுதல் அவர்களுடைய செவிகளில் விழுந்தபோது, அவர்கள் மேலும் அதிகமாக ஆச்சரியப்பட்டனர். (5)

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி மனிதர்களை வற்புறுத்துவது அவரது ஊழியத்தின் பகுதியாக இருக்கவில்லை. சாத்தானும் அவனுடைய ஆவியினால் செயலாற்றுபவர்களும்தான் மனச்சாட்சியை வற்புறுத்த வகைதேடுகின்றனர். நீதியின்மேல் பேரார்வம் உள்ளவர்களாக இருப்பதுபோன்ற பாசாங்கில், தீய தூதர்களுடன் அணிதிரண்டு உள்ள மனிதர்கள், மதத்தைப்பற்றிய அவர்களுடைய யோசனைகளுக்கு மனமாற்றம்செய்வதற்காக தங்களுடைய உடன் மனிதர்களின்மீது சில சமயங்களில் பாடுகளைக் கொண்டுவருகின்றனர். ஆனால் கிறிஸ்து எப்போதும் இரக்கத்தைக் காட்டுகிறார். அவருடைய அன்பை வெளிக்காட்டி எப்பொழுதும் வெற்றிபெற வகைதேடுகிறார். ஆத்துமாவில் போட்டியையோ அல்லது பகுதியான சேவையையோ அவர் அனுமதிப்பதில்லை. ஆனால் அவர் மனமுவந்த சேவையை, அன்பின் நெருக்கி ஏவுதலின்கீழ் சரணடைய விரும்புவதை விரும்புகிறார். (6)

மற்றொரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மிக மேலான பதவிகளை வகிப்பதற்கு யோவானும் யாக்கோபும் அனுமதிக்கப்படவேண்டும் என்ற ஒரு விண்ணப்பத்தை அவருடைய தாயாரின்மூலமாக முன்வைத்தனர். அவருடைய இராஜ்யத்தின் தன்மையைப்பற்றி திரும்பத்திரும்பக் கூறப்பட்டிருந்த போதனையை அறிந்திருந்தும்கூட இந்த இளம் சீடர்கள், மனிதர்களுடைய விருப்பங்களின்படி தமது சிங்காசனத்தையும் அரச வல்லமையையும் எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு மேசியாவைப்பற்றிய நம்பிக்கையைப் பேணியிருந்தனர். அந்தத் தாயார் அவர்களுடன் சேர்ந்து,

அந்த இராஜ்யத்தில் அவர்களுடைய குமாரர்களுக்கான கனமுள்ள இடத்தை இச்சித்து, அவள்: "உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள்" –மத்தேயு 20:21. (7)

ஆனால் இரட்சகர் பிரதியுத்தரமாக: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" என்றார். பரீட்சைகள், பாடுகள் ஆகியவைகளைச் சுட்டிக்காட்டியிருந்த அவரது வார்த்தைகளை அவர்கள் ஞாபகத்திற்கு கொண்டுவந்திருந்தும்கூட, "எங்களால் கூடும்" என்று நம்பிக்கையுடன் அவர்கள் பதில் கூறினார்கள் (மத்தேயு 20:22). அவர்களுடைய கர்த்தரின்மீது விழவிருக்கக்கூடிய அனைத்தின்மேலும் பங்குபெறுவதை, தங்களுடைய ராஜ பக்தியை மெய்ப்பிப்பதை மேலான கனமாக அவர்கள் எண்ணினார்கள். (8)

"அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" உங்களால் கூடுமென்று கிறிஸ்து அறிவித்தார்–(மத்தேயு 20:23). அவருக்கு முன்பாக ஒரு சிங்காசனத்திற்குப் பதிலாக ஒரு சிலுவை இருந்தது. அவரது வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் அவரது தோழர்களாக இரண்டு குற்றவாளிகள் இருந்தனர். யாக்கோபும் யோவானும் அவர்களது ஆண்டவரின் பாடுகளில் பங்குபெறவேண்டியவர்களாக இருந்தனர். ஒருவன் பட்டயத்தினால் விரைவாக வரும் மரணத்தையும், மற்றொருவன் எல்லா சீடர்களையும்விட நீண்டகாலமாக உழைப்பிலும் நிந்தையிலும் உபத்திரவத்திலும் அவனுடைய ஆண்டவரைப் பின்தொடரவேண்டியவனாகவும் இருந்தான். "ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல" (மத்தேயு 20:23) என்றார். (9)

அந்த வேண்டுகோளைச் செய்யும்படி அவர்களைத் தூண்டியிருந்த அவர்களது நோக்கத்தை இயேசு புரிந்திருந்து, "புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்

கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத்தேயு 20:25–28) என்றுகூறி, இவ்வாறாக அவர்களைக் கடிந்துகொண்டார். (10)

தேவனுடைய ராஜ்ஜியத்தில் அனுகூலத்தின் மூலமாகப் பதவிகள் ஆதாயப்படுத்தப்படுவதில்லை; அது சம்பாதிக்கப்படுவதுமில்லை, அல்லது ஒருதலைப்பட்சமாகப் பெறப்படுவதும் இல்லை. அது சுபாவத்தின்பலனாக இருக்கிறது. கிரீடமும் சிங்காசனமும் ஒரு நிலைமையை அடைந்ததன் அடையாளமாக இருக்கிறது. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையின்மூலமாக சுயத்தின்மீது வெற்றி அடைந்ததின் அடையாளமாக உள்ளது. (11)

அதற்கு அதிக நாட்களுக்குப்பின், அவரது பாடுகளில் உடன் பங்காளியானதனால், கிறிஸ்துவுடனுள்ள அனுதாபத்திற்கு யோவான் கொண்டுவரப்பட்டபோது, கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு அருகாமையில் கொண்டுவரப்படுவதற்கான நிபந்தனை என்ன என்பதைக் கர்த்தராகிய இயேசு அவனுக்கு வெளிப்படுத்தினார். "ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவன் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்றார் (வெளி. 3:21). கிறிஸ்துவிற்கு மிக அருகில் நிற்கும் ஒருவன், சுயத்தைத் தியாகம் செய்கின்ற அன்பின் ஆவியை மிக ஆழமாகப் பருகினவனாக இருப்பான். அன்பு நமது கர்த்தரை அசைத்ததைப்போல, மானுடத்தை இரட்சிக்கும்படி எல்லாவற்றையும் கொடுக்கவும்—வாழவும்—உழைக்கவும்—மரிக்கும்படிகூடத் தியாகம்செய்யவும், சீடர்களையும் அன்பு அசைக்கிறது. (12)

அவர்களுடைய சுவிசேஷ ஊழியத்தின் ஆரம்பகாலமாகிய வேறொரு சமயத்தில் கிறிஸ்துவை ஒப்புகைசெய்யாது, அவரது பெயரால் பிசாசுகளைத் துரத்தியிருந்து, அவரைப் பின்பற்றுபவனாக இருந்த ஒருவனை யாக்கோபும் யோவானும் சந்தித்தனர். அந்த சீடர்கள் அவனுடைய வேலையைத் தடுத்து, அவ்வாறு செய்வது சரியென்று எண்ணினார்கள்; ஆனால், இந்த விஷயத்தை அவர்கள் கிறிஸ்துவின் முன் வைத்தபோது, இயேசு: "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" என்று கூறி, அவர் அவர்களைக் கடிந்துகொண்டார் (மாற்கு 9:39). ஏதாவது ஒரு விதத்தில் கிறிஸ்துவுடன் நட்புறவுள்ளவர்களாயிருக்கும்படி ஒருவரும் ஒதுக்கித் தள்ளப்படக் கூடாதவர்களாக இருக்கவேண்டும். தங்களுக்குள்ளே ஒரு தனி முழுமையை உடைய குறுகிய ஆவியை உடையவர்களாக சீடர்கள் இருக்காமல் (அதாவது சீடர்களைத் தவிர மற்றவர்கள்

ஒருவரும் இயேசுவின் பெயரால் ஊழியம் செய்யக்கூடாது என்னும் ஆவியை உடையவர்களாக ஒருவரும் இருக்கக்கூடாது), தங்களுடைய ஆண்டவரிடத்தில் காணப்பட்டிருந்த வெகுதூரம் சென்றடையக்கூடிய அதே அனுதாபத்தை வெளிக்காட்டவேண்டியவர்களாக இருக்கவேண்டும். இந்த மனிதனைத் தடைசெய்வதன்மூலமாகத் தங்களுடைய கர்த்தரின் கனத்தைக் காக்கிறோம் என்னும் பார்வையை உடையவர்களாக யாக்கோபும் யோவானும் இருந்தனர். ஆனால் அவர்கள் தங்களுடைய சொந்தப் பொறாமையை உடையவர்களாக இருந்ததை அவர்கள் பார்க்க ஆரம்பித்தனர். அவர்கள் தங்களுடைய தவறை ஒப்புகைசெய்து, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டனர். (13)

கிருபையில் வளருவதற்கும், அவருடைய பணியில் பொருத்தமடைவதற்கும், கிறிஸ்துவின் போதனைகள் முன்வைத்த தாழ்மை, எளிமை, அன்பு ஆகியவைகள் யோவானுக்கு மிக உயர்ந்த மதிப்பை உடையவைகளாக இருந்தன. ஒவ்வொரு போதனையையும் அவன் பொக்கிஷமாகச் சேர்த்துவைத்து, தெய்வீக சாயலுடன் அவனது வாழ்க்கை இசைவுள்ளதாக இருக்கும்படி அவன் தொடர்ச்சியாக முயன்றிருந்தான். உலகத்தின் ஆடம்பரத்தின்மீது நம்பிக்கை வைக்கும்படி போதிக்கப்பட்டிருந்த அவன், அவைகளின்மீது நம்பிக்கைவைக்காமல், “அந்த வார்த்தை மாம்சமாகிக் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது” (யோவான் 1:14) என்பதின்மேல் நம்பிக்கை வைத்திருந்தான். அவன் கிறிஸ்துவின் மகிமையை அறிந்துகொள்ளத் தொடங்கியிருந்தான். யோவான் அவனது ஆண்டவரின்மீது கொண்டிருந்த பற்றின் ஆழம், உள்ளார்வம் ஆகியவை காரணமாக இருக்கவில்லை. ஆனால் அவை அன்பின் பலனாக இருந்தது. இயேசுவைப் போலாகவேண்டும் என்று யோவான் வாஞ்சித்தான். மறுரூபமடையச் செய்யும் இயேசுவின் அன்பின் செல்வாக்கின் கீழ் அவன் எளிமையும் அன்பும் வசீகரமும் உள்ளவனானான். இயேசுவில் சுயம் மறைந்திருக்கிறது. அவனுடைய மற்ற எல்லாத் தோழர்களையும்விட அந்த ஆச்சரியமான அன்பின் வல்லமைக்கு அவன் தன்னைத்தான் இணங்கச்செய்தான். “அந்த ஜீவன் வெளிப்பட்டது;” அந்த ஜீவனை நாங்கள் கண்டோம் (யோவான் 1:16). “அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்” (1 யோவான் 1:2; யோவான் 1:16) என்று அவன் கூறுகிறான். யோவான் ஒரு பரீட்சார்த்தமான அறிவினால் இயேசுவை அறிந்திருந்தான். அவனது ஆண்டவரின் ரூபம் அவனது ஆத்துமாவில் பொறிக்கப்பட்டிருந்தது. அவன்

இரட்சகரின் கிருபையைப்பற்றி சாட்சிகொடுத்தபோது, அவனது உடல் முழுவதிலும் அன்பினால் பரவியிருந்த எளிமையான மொழியானது, பேச்சுத் திறமை உள்ளதாக இருந்தது. (14)

கிறிஸ்துவின்மீதிருந்த யோவானின் ஆழ்ந்த அன்புதான், எப்பொழுதும் அவரது பக்கத்தில் இருக்கவேண்டும் என்ற வாஞ்சையை அவனில் நடத்தியிருந்தது. இரட்சகர் பன்னிருவரையும் நேசித்திருந்தார். ஆனால் யோவான் அந்த அன்பை மிக அதிகமாக ஏற்றுக்கொள்ளுகின்ற ஆவியை உடையவனாக இருந்தான். மற்றெல்லோரையும் விட அவன் இளையவனாக இருந்து, நம்பிக்கைமிக்க ஒரு சிறு பிள்ளையின் நம்பிக்கையுடன் அவன் தனது இருதயத்தைக் கிறிஸ்துவிற்குத் திறந்திருந்தான். இவ்வாறாக, அவன் கிறிஸ்துவுடன் உள்ள அனுதாபத்தில் அதிகமானவனாக, அவன்மூலமாக இரட்சகரின் ஆழமான ஆவிக்குரிய போதனைகள் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. (15)

பிதாவை முன்வைப்பவர்களை இயேசு நேசிக்கிறார். அவரது சீடர்களில் ஒருவராலும் பேசமுடியாதவிதத்தில் யோவானால் பிதாவின் அன்பைக்குறித்துப் பேசமுடிந்திருந்தது. அவனுடைய சொந்த ஆத்துமாவில் அவன் உணர்ந்திருந்ததை, தேவனுடைய சுபாவத்தின் மேன்மைகளை எடுத்துக்காட்டி, அதனைத் தன் உடன் மனிதர்களுக்கு வெளிப்படுத்தினான். கர்த்தருடைய மகிமை அவனுடைய முகத்தில் வெளிக்காட்டப்பட்டிருந்தது. கிறிஸ்துவைப்போலாவதும் அவருடனுள்ள தோழமையும் அவனுடைய சொந்த வாஞ்சையாகும்வரைக்கும் துதித்தலிலும் அன்பிலும் அவன் இரட்சகரைக் கண்டான். அவனது சுபாவத்தில், அவனது ஆண்டவரின் சுபாவம் பிரதிபலித்தது. (16)

“நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதனாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாதபடியினாலே, நம்மையும் அறிய வில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்”-1 யோவான் 3:1,2. (17) ★

# 54

# ஒரு விசுவாசமிக்க சாட்சி!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 546–556)**
**திருவசன ஆதாரம் – 1,2,3 யோவான் நிருபங்கள்**

கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளிச்சென்றபின் யோவான் ஆண்டவருக்காக விசுவாசமும் அக்கறையுமிக்க ஒரு ஊழியக்காரனாக முன்நிற்கிறான். பெந்தெகொஸ்தே நாளில் அவன் மற்ற சீடர்களுடன் சேர்ந்து ஆவியின் அருள்மாரி ஊற்றப்படுவதை அனுபவித்து, காணப்படாதவைகளினிடத்திற்கு அவர்களுடைய எண்ணங்களை நடத்த வகைதேடிக்கொண்டு, புதிதான பேரார்வத்துடனும் வல்லமையுடனும் ஜீவ வார்த்தைகளை மக்களுடன் பேசுவதில் அவன் தொடர்ந்தான். அவன் உள்ளார்வமும் ஆழ்ந்த அக்கறையுமிக்க ஒரு வல்லமைமிக்க பிரசங்கியாக இருந்தான். கேட்பவர்களின் இருதயங்களில் உணர்த்துதலை உண்டுபண்ணக்கூடியவிதத்தில் கிறிஸ்துவின் வார்த்தைகளையும் செயல்களையும்பற்றி ஒரு அழகிய மொழியில், இனிய குரலில் அவன் கூறினான். அவனது வார்த்தைகளில் இருந்த எளிமை, அவன் கூறின வார்த்தைகளில் இருந்த மேன்மைமிக்க வல்லமை, அவனது போதனைகளில் இருந்த ஆர்வத்தின் தன்மைகள், எல்லா வகுப்பினரையும் சமீபிப்பதற்கு அவனுக்கு வழிகொடுத்தது. (1)

அந்த அப்போஸ்தலனின் வாழ்க்கை அவனது போதனைகளுக்கு இசைவாக இருந்தது. அவனது இருதயத்தில் எரிந்து பிரகாசித்திருந்த கிறிஸ்துவின் அன்பு, அவனது உடன் மனிதர்களுக்காகவும், சிறப்பாகக் கிறிஸ்தவ சபையிலிருந்த அவனுடைய சகோதரர்களுக்காகவும் அக்கறைமிக்க—களைப்பற்ற பணியைச் செய்யும்படி, அவனை நடத்தியிருந்தது. (2)

கிறிஸ்து அவர்களை நேசித்திருந்ததைப்போல, அவரது முதல் சீடர்கள் ஒருவரையொருவர் நேசிக்கும்படி அவர் கட்டளையிட்டார். இவ்வாறாக, அவர்களுடைய இருதயங்களில் கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக இருக்கிறார் என்பதற்கு அவர்கள் உலகத்திற்கு சாட்சி கொடுக்கவேண்டியவர்களாக இருந்தனர். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 13:34) என்றார். இந்த வார்த்தைகள் பேசப்பட்டிருந்த நேரத்தில், சீடர்களால் அவைகளைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் கிறிஸ்துவின் பாடுகள், சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல், பரலோகத்திற்கு எழுந்தருளிச் செல்லுதல் ஆகியவைகளுக்குப்பின், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி அவர்கள்மேல் இறங்கினதற்குப்பின், தேவனுடைய அன்பைப்பற்றியும், அந்த அன்பின் தன்மையைப்பற்றியும், அந்த அன்பை அவர்கள் ஒருவரில் ஒருவர் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றியும் உள்ள ஒரு தெளிவான கருத்தை அவர்கள் உடையவர்களானார்கள். அப்பொழுது, யோவானால் அவனது உடன் சீடர்களிடம் இவ்விதமாகக் கூறமுடிந்தது: (3)

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்"–1 யோவான் 3:16. (4)

பரிசுத்த ஆவி இறங்கினபின், ஜீவனுள்ள ஒரு இரட்சகரை அறிவிக்க சீடர்கள் முன்சென்றபோது, ஆத்துமாக்களின் இரட்சிப்பு ஒன்று மட்டுமே சீடர்களின் ஒரே வாஞ்சையாக இருந்தது. பரிசுத்தவான்களுடனுள்ள உறவின் இனிமையில், அவர்கள் மகிழ்ச்சிகொண்டனர். அவர்கள் மென்மை யானவர்களாகவும் சிந்தனை உள்ளவர்களாகவும், சுயத்தை மறுப்பவர் களாகவும், சத்தியத்திற்காக எந்தவிதமான தியாகத்தையும் செய்வதற்கும் விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தனர். அவர்கள் ஒருவருடன் ஒருவருக்குள்ள அன்றாட உறவில், கிறிஸ்து அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்த அன்பை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இந்த அன்பை மற்றவர்களின் இருதயங்களில் எரியச் செய்வதற்காக, சுயநலமற்ற வார்த்தைகளினாலும் செயல்களினாலும் அவர்கள் முயன்றிருந்தனர். (5)

இப்படிப்பட்ட அன்பை விசுவாசிகள் எப்போதும் பேணவேண்டியவர் களாக உள்ளனர். புதிய கட்டளைக்கு விருப்பமுள்ள கீழ்ப்படிதலுடன் அவர்கள் செல்லவேண்டியவர்களாக இருந்தனர். அவர் அவசியப் படுபவைகள் அனைத்தையும் நிறைவேற்றக்கூடியவர்களாக அவர்களைத்

தகுதிப்படுத்தும்படி அவர்கள் கிறிஸ்துவுடன் மிக நெருக்கமாக ஒற்றுமைப் பட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களைத் தமது நீதியினால் நீதிகரிக்கும்படி, அவர்களுடைய வாழ்க்கை இரட்சகரின் வல்லமையைப் பெரிதுபடுத்திக்காட்டுகின்றதாக இருக்கவேண்டும். (6)

ஆனால் ஒருமாற்றம் மெல்லவந்தது. விசுவாசிகள் பிறர்மீதுள்ள குறைகளைக் காணத்தொடங்கினார்கள். தவறகளைப்பற்றியே பேசிக் கொண்டும், அன்பில்லாத விமரிசனங்களுக்கு இடம்கொடுத்துக்கொண்டும், அவர்கள் தங்களுடைய இரட்சகரையும் அன்பையும்பற்றிய பார்வையை இழந்தனர். வெளிப்படையான சமயச் சடங்காச்சாரங்களில் மிகவும் கண்டிப்பானவர்களாகி, விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதைவிட தத்துவ விளக்கங்களைப்பற்றிக் குறிப்பானவர்களானார்கள். மற்றவர்களை ஆக்கினைக் குட்படுத்துகின்ற அவர்களுடைய பேரார்வத்தில், அவர்கள் தங்களுடைய சொந்தத் தவறுகளைப் பார்க்கத் தவறிவிட்டனர். கிறிஸ்து அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்த சகோதர சிநேகத்தை அவர்கள் இழந்து, எல்லாவற்றிற்கும் அதிகமாக வருந்தக்கூடிய விதத்தில், அவர்களுடைய இழப்பைப்பற்றியும் நினைவற்றவர்களாக இருந்தனர். பெரும் மகிழ்ச்சியானது அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து நீங்கிப்போய்க்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணராமலும், அவர்களுடைய இருதயங்களுக்கு வெளியே தேவனுடைய அன்பை வைத்து, இருதயத்தை மூடிக்கொண்டதனால், விரைவில் அவர்கள் இருளில் நடக்கவேண்டும் என்பதையும் அவர்கள் உணரவில்லை. (7)

சகோதர அன்பு சபையில் தேய்ந்துவருகிறது என்பதை யோவான் உணர்ந்து, இந்த அன்பின் தொடர்ச்சியான அவசியத்தை விசுவாசிகளிடம் வற்புறுத்தினான். சபைக்கு அவன் எழுதின கடிதம் இந்தச் சிந்தனை நிறைந்ததாக உள்ளது. “பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்”–1 யோவான் 4:7–11. (8)

விசுவாசிகளில் வெளிக்காட்டப்படவேண்டிய இந்த அன்பைப் பற்றிய சிறப்பான உணர்வில்: "மேலும், நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன், இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது; ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது. ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான். நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள். அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 2:8–11; 3:11,14–16) என்று அப்போஸ்தலன் எழுதுகிறான். (9)

உலகத்தின் எதிர்ப்பு கிறிஸ்துவின் சபையை மிக அதிகமாக ஆபத்திற்குள்ளாக்குவதில்லை. விசுவாசிகளின் இருதயங்களில் பேணப்படும் தீமை அவர்களது சாவுக்கேதுவான ஆபத்தைச் செயலாற்றி, கடவுளின் காரியத்தின் முன்னேற்றத்தின் வளர்ச்சியை மிக நிச்சயமாக, குன்றச்செய்கிறது. பொறாமை, சந்தேகம், குற்றம் கண்டுபிடித்தல், பொல்லாங்கு சொல்லுதல் ஆகியவைகளைப் பேணுவதைவிட, சபையின் ஆவிக்குரிய தன்மையைப் பலவீனப்படுத்துவதற்கு அதிக நிச்சயமான வேறு பாதை எதுவும் இல்லை. அப்படியில்லாமல், தேவன் தமது குமாரனை இந்த உலகத்திற்குள் அனுப்பியிருக்கிறார் என்பதற்கான பலமிக்க சாட்சியாக அவருடைய சபையை அமைக்கும் பல்வேறு சுபாவங்களை உடையவர்களுக்கிடையில் இருக்கக்கூடிய ஒற்றுமை இருக்கிறது. இந்த சாட்சியைக் கிறஸ்துவின் அடியார்கள் சுமந்துகொள்ளுவது அவர்களுடைய சலுகையாக இருக்கிறது. ஆனால் இதைச் செய்வதற்காக அவர்கள் தங்களைக் கிறிஸ்துவின் கட்டளைக்குக்கீழ் வைக்கவேண்டும். அவர்களுடைய சுபாவம் அவருடைய சுபாவத்திற்கும், அவர்களுடைய சித்தம் அவருடைய சித்தத்திற்கும் இசைவானதாக இருக்கவேண்டும். (10)

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்"– யோவான் 13:34. எப்படிப்பட்ட ஒரு ஆச்சரியமான அறிக்கை! ஆனால் ஓ! எவ்வளவு மோசமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது! இன்று தேவனுடைய சபையில், சகோதர சிநேகம் வருந்தக்கூடிய விதத்தில் இல்லாமல் இருக்கிறது. இரட்சகரை நேசிப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அநேகர், ஒருவரை ஒருவர் நேசிக்காமலிருக்கின்றனர். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களின் விசுவாசம் அவர்களுடைய வாழ்க்கையின் பரிசுத்தப்படுத்தும் செல்வாக்கை செயலாற்றுகிறதா என்பதைக் காண அவிசுவாசிகள் பார்த்துக்கொண்டிருந்து, சுபாவத்தில் உள்ள குறைபாடுகளையும், செயல்களில் உள்ள பொருத்தமற்ற தன்மையையும் அறிந்துகொள்ளுவதற்கு அவர்கள் விரைவானவர்களாக உள்ளனர். கிறிஸ்துவின் துகில் கொடியின் கீழ் நின்று, ஒருவரையொருவர் வெறுக்கும் இவர்களைப் பாருங்கள் என்று சத்துரு அவர்களைச் சுட்டிக்காட்டிக் கூறுவதற்கு முடியாதபடி கிறிஸ்தவர்கள் இருப்பார்கள். கிறிஸ்தவர்களனைவரும் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள். பிள்ளைகள் அனைவரும் அழியாமை என்னும் அதே பாக்கியமான நம்பிக்கையை உடைய அதே பரலோகத்தின் மக்கள். அவர்களை ஒன்றுசேர்க்கும் கட்டு, மிக நெருக்கமானதாகவும் மென்மையானதாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்து வெளிக்காட்டின அதே விதமான மென்மையான மன உருக்கத்தை நாம் வெளிக்காட்டவேண்டுமென்றும் அது நம்மை அழைக்கும்போது, தெய்வீக அன்பு, அதன் மிக அதிகமாகத் தொடக்கூடிய வேண்டுகோளை, நமது இருதயத்தில் செயலாற்றுகிறது. தனது சகோதரனிடத்தில் சுயநலமற்ற அன்பை உடையவன் மட்டும்தான், தேவனிடத்தில் உண்மையான அன்பை உடையவனாக இருக்கிறான். உண்மையான கிறிஸ்தவன் வேண்டுமென்றே அவனுடைய ஆத்துமாவை ஆபத்திற்குட்படுத்தமாட்டான், அவசியமில்லாமலும் எச்சரிக்கை இல்லாமலும் கவனமற்றவனாகவும் செல்லவும்மாட்டான். தவறுபவர்களிடத்திலிருந்து அவர்கள் மேலும் சந்தோஷமின்மையிலும் அதைரியத்திற்குள்ளும் அவர்களைவிட்டு அல்லது சாத்தானின் போர்க்களத்தில் விழும்படி விட்டுவிட அவன் தன்னை விலக்கிவைக்கமாட்டான். (11)

கிறிஸ்துவின் மென்மையான வெற்றிகொள்ளும் அன்பை ஒருபோதும் அனுபவித்திராதவர்களால் மற்றவர்களை ஜீவ ஊற்றினிடத்திற்கு நடத்தமுடியாது. இருதயத்தில் உள்ள அவருடைய அன்பு நெருக்கி ஏவும் ஒரு வல்லமையாக இருக்கிறது. அது உரையாடலின் போது அவரை

வெளிப்படுத்தவும், மென்மையிலும் இரக்கமிக்க ஆவியிலும் அவன் எவர்களுடன் தோழமைகொள்ளுகிறானோ அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்தவும், அவரை வெளிப்படுத்த இந்த நெருக்கி ஏவும் வல்லமை மனிதர்களை நடத்துகிறது. தங்களுடைய முயற்சிகளில் வெற்றியடையும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை அறிந்திருக்கவேண்டும். அவரை அறிந்துகொள்ளுவதற்காக அவர்கள் அவருடைய அன்பை அறிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து அன்பு காட்டினதுபோல, அன்புகாட்டவும், கிறிஸ்து செயலாற்றினதுபோல செயலாற்றவும், அவர்களிடம் உள்ள தகுதியினால், பரலோகத்தின் பணியாளர்களாக இருப்பதற்கான அவர்களுடைய தகுதி அளக்கப்படுகிறது. (12)

“வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்” (1 யோவான் 3:18) என்று அப்போஸ்தலன் எழுதுகிறான். பிறருக்கு உதவவும் ஆசீர்வதிக்கவும் வேண்டும் என்ற துடிப்பு உள்ளிலிருந்து தொடர்ச்சியாகக் குதித்தெழும்போது, கிறிஸ்தவ சுபாவத்தின் முழுமை அடையப்படுகிறது. விசுவாசிகளின் ஆத்துமாவைச் சூழ்ந்திருக்கும் இந்தச் சுற்றுப்புற சூழ்நிலைகள்தான், அவனை ஜீவ வாசனைக்குமேல் ஜீவாசனை உடையவனாக்கி, தேவன் அவனுடைய பணியை ஆசீர்வதிக்கத் தகுதிப்படுத்துகிறது. (13)

நமது பிதாவினால் அருளப்படக்கூடிய மிகச் சிறந்த பரிசாக தேவன்மீது மிகமேலான அன்பு, பிறர்மீதுள்ள சுயநலமற்ற அன்பு அகியவைகள் உள்ளன. இது ஒரு உணர்ச்சியின் துடிப்பாக இல்லாமல், தெய்வீகக் கொள்கையாக—ஒரு நிரந்தரமான வல்லமையாக உள்ளது. அர்ப்பணம் செய்யப்படாத இருதயத்தினால், அதைப் பிறப்பிக்கவோ அல்லது ஆயத்தமாக்கவோ முடியாது. எந்த இருதயத்தில் இயேசு ஆளுகை செய்கிறாரோ, அங்கு மட்டுமே அது காணப்படுகிறது. “அவர் முந்தி அன்புகூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்”–1யோவான் 4:19. தெய்வீகக் கிருபையினால் புதுப்பிக்கப்பட்ட இருதயத்தில் அன்பு ஆட்சிசெய்யும், செயலாற்றும் கொள்கையாக இருக்கிறது. அது சுபாவத்தைத் திருத்துகிறது. உணர்ச்சித் துடிப்புக்களைக் கட்டுப்படுத்துகிறது. வெறிகளைக் கட்டுப்படுத்துகிறது. பற்றுகளை மேன்மை மிக்கதாக்குகிறது. ஆத்துமாவில் இந்த அன்பு பேணப்படும்போது, வாழ்க்கையை இனிமையானதாக்கி எப்பக்கத்திலும் தேர்ச்சிபெற்ற செல்வாக்கைப் பொழியச்செய்கிறது. (14)

அன்பின் ஆவியின் செயல்பாட்டின் மூலமாக அவர்களிடம் வரக்கூடிய உயர்வான சலுகைகளைப் புரிந்துகொள்ளுவதற்கு விசுவாசிகளை நடத்த யோவான் முயன்றான். இருதயத்தை நிரப்பும் இந்த மீட்கும் வல்லமை,

மற்ற நோக்கங்களையெல்லாம் கட்டுப்படுத்தி, அதை உடையவர்களை கறைபடியும் உலகத்தின் செல்வாக்கிற்கும்மேலாக உயர்த்தும். இந்த அன்பு முழுவதுமாகப் பாயும்படி அனுமதிக்கப்படும்போது, வாழ்க்கையின் நோக்கத்தின் வல்லமையாகும்போது, தேவன்மீதுள்ள அவர்களுடைய நம்பிக்கை, அவர்களுடன் அவர் இடைப்படும் விதம் பற்றிய நம்பிக்கையும் நிறைவடையும். அப்பொழுது அவர்கள், அவர்களுடைய நிகழ்கால—நித்தியகால நம்மைகளுக்காக உள்ளவைகளையெல்லாம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்து, விசுவாசத்தின் முழுமையான நம்பிக்கையுடன் அவரிடத்திற்கு வரமுடியும். "நியாயத்தீர்ப்பு நாளிலே, நமக்கு தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனை உள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்) என்று அவன் எழுதினான் (யோவான் 4:17,18; 15:14,15). (15)

"ஒருவன் பாவம் செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்." "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்) (1 யோவான் 2:1; 1:9; 2:2). தேவனிடத்திலிருந்து இரக்கத்தை அடைவதற்கான நிபந்தனை மிகவும் எளிதானதாக உள்ளது. மன்னிப்பைப் பெறுவதற்காக கடினமான ஏதாவது காரியத்தை நாம் செய்யவேண்டும் என்று கர்த்தர் அவசியப்படுத்துவதில்லை. தொலைதூரமான—களைப்பை உண்டுபண்ணக்கூடிய புனிதப்பயணங்களையோ அல்லது வேதனைதரும் பரிகாரச் செயல்களையோ பரலோகத்தின் தேவனிடத்தில் நமது ஆத்துமாவை ஒப்படைக்க அல்லது நமது மீறுதலுக்குப் பரிகாரம் காண, நாம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்"–நீதி. 28:13. (16)

மேலே உள்ள பிராகாரங்களில் கிறிஸ்து அவருடைய சபைக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். எவர்களுடைய மீட்பின் விலையாக அவர் தமது இரத்தத்தைக் கொடுத்திருக்கிறாரோ, அவர்களுக்காக அவர் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். அவருடைய பாவ நிவாரண பலியின் வல்லமையை நூற்றாண்டுகளாலும் காலங்களாலும் ஒருபோதும் குறைக்கமுடியாது. நாம் அவரை அவ்விதமாக உறுதியாகப் பற்றிக்கொண்டிருப்பதனால், ஜீவனோ—மரணமோ, உயரமோ—ஆழமோ, கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்காது. நமது இரட்சிப்பு நமது சொந்த முயற்சிகளை சார்ந்ததாக இருந்தால், நாம் இரட்சிக்கப்படமாட்டோம். ஆனால் அது எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் பின்னால் உள்ள ஒருவரைச் சார்ந்திருக்கிறது. அவர்மீதுள்ள நமது பிடி, பலவீனமானதாகக் காணப்படலாம். ஆனால் அவருடைய அன்பு ஒரு மூத்த சகோதரனுடையதைப் போன்றதாக இருக்கிறது. நாம் அவருடனுள்ள ஐக்கியத்தைக் காக்கின்றவரை, அவருடைய கரத்திலிருந்து ஒருவராலும் நம்மைப் பிடுங்கமுடியாது. (17)

வருடங்கள் கடந்துசென்றபோது, விசுவாசிகளின் எண்ணிக்கை வளர்ந்தபோது, யோவான் சகோதரர்களுக்கான அதிகமான மெய்ப்பற்றுடனும் அக்கறையுடனும், உழைத்தான். சபைக்கான காலங்கள் ஆபத்து நிறைந்ததாக இருந்தது. சாத்தானின் பொய்த் தோற்றங்கள் எங்கும் இருந்தன. தவறான விதத்திலுள்ள எடுத்துக்காட்டுதல், தவறு ஆகியவைகளால் சாத்தானின் செய்தியைக் கொண்டுசெல்லுபவர்கள் கிறிஸ்துவின் கோட்பாடுகளுக்கு எதிராக எதிர்ப்பை எழுப்பியிருந்தனர். அதன் பலனாகப் பிரிவினைகளும் மதப்புரட்டுகளும் சபையை ஆபத்துக்குள்ளாக்கியிருந்தன. பெயர்க் கிறிஸ்தவர்களாக இருந்த சிலர், தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவர்களை விடுதலைசெய்திருக்கிறது என்று உரிமைபாராட்டினார்கள். மற்றொரு பக்கத்தில் யூதமார்க்கத்தின் சம்பிரதாயங்களையும் சடங்காச்சாரங்களையும் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமானது என்றும், கிறிஸ்துவின் இரத்தத்தின்மேல் விசுவாசம் வைக்காமல், சாதாரணமாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதுமட்டுமே இரட்சிப்பிற்குப் போதுமானது என்றும் அநேகர் போதித்தனர். கிறிஸ்து ஒரு நல்ல மனிதராக இருந்தார் என்று நம்பி, அவரது தெய்வீகத்தை மறுத்திருந்தனர். தேவனுடைய காரியங்களுக்கு உண்மையானவர்களாக இருப்பதுபோல் பாசாங்குசெய்திருந்த சிலர், ஏமாற்றுபவர்களாக இருந்து, நடைமுறையில் அவர்கள் கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் மறுத்திருந்தனர். மீறுதலில் வாழ்ந்துகொண்டிருந்த அவர்கள், சபைக்குள் மதப்புரட்டுகளைக்கொண்டு வந்துகொண்டிருந்தனர். இவ்வாறாக, அநேகர் சமய நம்பிக்கையின்மை

என்னும் சிக்கலிலும் பொய்த்தோற்றத்திலும் நடத்தப்பட்டுக்கொண்டிருந்தனர். (18)

விஷமிக்க இந்தத் தவறுகள் சபைக்குள் ஊர்ந்துவருவதைக் கண்ட யோவான், துயரத்தால் நிரப்பப்பட்டான். சபை, உள்ளாக்கப்பட்டிருக்கும் ஆபத்துக்களை அவன் கண்டான். அந்த அவசர நிலையை விரைந்தும் முடிவுடனும் அவன் சந்தித்தான். யோவானின் நிருபங்கள் அன்பின் ஆவியை விசுவாசமாக வெளியிடுகிறது. அன்பு என்னும் மையில் தோய்க்கப்பட்ட எழுதுகோலினால் அவன் எழுதினதுபோல் காணப்படுகிறது. தேவனுடைய பிரமாணங்களை மீறிக்கொண்டிருந்தும் பாவமில்லாதவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று உரிமைபாராட்டிக்கொண்டிருந்தவர்களுடன் அவன் தொடர்புகொள்ள நேரிட்டபோது, பயங்கரமான அவர்களுடைய வஞ்சகத்தைப்பற்றி, அவர்களை எச்சரிக்க அவன் தயங்கவில்லை. (19)

நல்ல புகழையும் விசாலமான செல்வாக்கையும் உடையவளாக இருந்த ஒரு சுவிசேஷ ஊழிய உதவிக்காரியாக இருந்த ஒருவளுக்கு எழுதினபோது, "மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான். உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல், மீறிநடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2 யோவான் 1:7–11) என்று அவன் கூறினான். (20)

தேவப்பிரமாணத்தை மீறுபவர்களாக வாழ்ந்துகொண்டிருந்து கிறிஸ்துவில் தங்கியிருப்பதாக உரிமைபாராட்டுபவர்களை அன்பான சீடன் மதிப்பீடு செய்திருந்ததுபோல நாமும் மதிப்பீடுசெய்ய அதிகாரப்படுத்தப் பட்டிருக்கிறோம். ஆரம்பகால சபையின் முன்னேற்றத்தை, அச்சுறுத்தியிருந்த தீமைகளைப்போன்ற தீமைகள், இந்தக் கடைசி நாட்களிலும் இருக்கின்றன. இந்த விஷயங்களைப்பற்றிய அப்போஸ்தலனாகிய யோவானின் போதனைகள் கவனத்துடன் செவிசாய்க்கப்படவேண்டும். நீங்கள் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்னும் குரல் எல்லா இடங்களிலிருந்தும், சிறப்பாக பரிசுத்தமடைதலைப் பற்றிக் கூறிக்கொள்ளுபவர்களிடமிருந்தும் கேட்கப்

படுகிறது; ஆனால், உண்மையான அன்பு அறிக்கைசெய்யப்படாத பாவத்தை மூடமுடியாத விதத்தில், அதிகமான தூய்மை உடையதாக இருக்கிறது. கிறிஸ்து எவர்களுக்காக மரித்திருக்கிறாரோ, அந்த ஆத்துமாக்களை நாம் நேசிக்கவேண்டியவர்களாக இருக்கும்போது, நாம் தீமையுடன் சமரசம் செய்யாதவர்களாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். கலகம் செய்பவர்களுடன் நாம் சேரக்கூடாது. இதனை அன்பு என்று அழைக்கவும் கூடாது. ஆத்துமாவை அழிக்கக்கூடிய தவறுகளுக்கு எதிர்த்துத் தளராமல் நின்றிருந்த யோவானைப்போல, இந்தக் காலத்தில் உலகத்தில் நிற்கக்கூடிய அவருடைய ஜனங்களே தேவனுக்குத் தேவைப்படுகிறார்கள். (21)

கிறிஸ்தவ அன்பை நாம் வெளிக்காட்டவேண்டும்போது, பாவத்துடனும் பாவிகளுடனும் நாம் வெளிப்படையான விதத்தில் இடைப்பட நாம் அதிகாரப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்னும் உண்மையான அன்புடன் இது பொருத்தமற்றதாக இருக்கவில்லை என்றும் அப்போஸ்தலன் போதிக்கிறான். “பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை”–1 யோவான் 3:4–6. (22)

கிறிஸ்துவின் ஒரு சாட்சியாக யோவான், எந்த விதமான எதிர்வாதத்திலும் களைப்பூட்டும் எதிர்ப்பிலும் பிரவேசிக்கவில்லை. அவன் எதனை அறிந்திருந்தானோ—அவன் எவைகளைக் கண்டும் கேட்டும் இருந்திருந்தானோ அவைகளை அறிவித்தான். அவன் கிறிஸ்துவுடன் நெருக்கமான தோழமை உடையவனாக இருந்து, அவருடைய போதனை களைக் கவனித்திருந்தான். அவன் அவருடைய பலத்த அற்புதங்களுக்குச் சாட்சியாக இருந்தான். கிறிஸ்துவின் சுபாவத்திலிருந்த அழகுகளை, யோவான் கண்டதைப்போல சிலரால் மட்டுமே காணமுடியும். இருள் அவனைவிட்டு கடந்துசென்றிருந்தது, மெய்யான ஒளி அவன்மீது பிரகாசித்துக்கொண்டிருந்தது. இரட்சகரின் வாழ்க்கை, மரணம் ஆகியவைகளைப்பற்றிய அவனுடைய சாட்சி தெளிவானதாகவும் வலிமைமிக்கதாகவும் இருந்தது. இரட்சகரின்மீதிருந்த தாராளமான—அன்பு நிரம்பி வழிந்திருந்த—ஒரு இருதயத்திலிருந்து அவன் பேசினான். அவனுடைய வார்த்தைகளை எந்த ஒரு வல்லமையினாலும் தடுக்கமுடியாமலிருந்தது. (23)

“ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே

தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது"–1 யோவான் 1:1,3. (24)

அப்படியே, ஒவ்வொரு உண்மையான விசுவாசியும் அவனுடைய சொந்த அனுபவத்தின் மூலமாக, "தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்" (யோவான் 3:33) என்பதற்குத் தகுதி அடைவானாக. அந்தத் தகுதி இருந்தால்தான் கிறிஸ்துவின் வல்லமையைப்பற்றி அவன் கண்டிருக்கிறதற்கும் கேட்டிருக்கிறதற்கும் உணர்ந்திருக்கிறதற்கும் அவனால் சாட்சிகொடுக்கமுடியும். (25) ★

# 55

# கிருபையினால் மறுரூபமடைதல்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 557–567)**
**திருவசன ஆதாரம் – 1 யோவான் 1:8–10**

சீடனான யோவானின் வாழ்க்கையில் உண்மையான பரிசுத்தமடைதல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கிறிஸ்துவுடன் நெருக்கமான தோழமையை அவன் கொண்டிருந்தபோது, அடிக்கடி இரட்சகரால் எச்சரிக்கைசெய்யப்பட்டிருந்தான்; இந்தக் கடிந்துகொள்ளுதல்களை அவன் ஏற்றுக்கொண்டிருந்தான். தெய்வீகமான ஒருவரின் சுபாவம் அவனுக்கு வெளிக்காட்டப்பட்டபோது, யோவான் தனது குறைபாடுகளைக் கண்டு, அந்த வெளிப்படுத்தலினால் தாழ்மையாக்கப்பட்டான். அவனுடைய மூர்க்கமான ஆவியுடன் இயேசுவின் மென்மையையும் சகிப்புத் தன்மையையும் நாளுக்குநாள் அவன் கண்டு ஒப்பிட்டதுடன், தாழ்மை, பொறுமை ஆகியவைகளைப்பற்றிய அவரது போதனைகளை அவன் கேட்டான். தனது ஆண்டவரின்மீதான அன்பினால், அவன் தன்னைப்பற்றிய பார்வையை இழக்கும்வரை, நாளுக்குநாள் அவனுடைய இருதயம் கிறிஸ்துவிடம் இழுக்கப்பட்டது. தேவகுமாரனுடைய அன்றாட வாழ்க்கையில் அவன் கண்ட அந்த வல்லமை, மென்மை, அந்த மகத்துவம், எளிமை, அந்த பலமும் பொறுமையும் அவனது இருதயத்தைப் போற்றுதலினால் நிறைத்தது. வனையும் கிறிஸ்துவின் வல்லமைக்கு அவன் தனது சீற்றமிக்க—ஆசைமிக்க சுபாவத்தை இணங்கச்செய்தபோது, தெய்வீக அன்பு அவனுடைய சுபாவத்தில் ஒரு மறுரூபத்தைச் செயலாற்றியது. (1)

யோவானுடைய வாழ்க்கையில் செயலாற்றப்பட்ட பரிசுத்தமடைதல் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய விதத்தில் அவனுடைய உடன் சீடனான யூதாஸின் அனுபவம் இருக்கிறது. யூதாஸ் அவனுடைய கூட்டாளியைப்போல தன்னைக் கிறிஸ்துவின் ஒரு சீடன் என்று கூறிக்கொண்டான்; ஆனால் அவன் தேவபக்தியின் ஒரு வேஷத்தை மட்டுமே உடையவனாக இருந்தான். கிறிஸ்துவின் சுபாவத்தின் அழகை உணரமுடியாதவனாக அவன் இருக்கவில்லை. அடிக்கடி அவன்

இரட்சகரின் வார்த்தைகளைக் கவனித்தபோது, மனஉணர்த்துதல் அவனிடம் வந்தது. ஆனால் அவன் தனது இருதயத்தை தாழ்த்தாதவனாகவும் அல்லது தனது பாவங்களை அறிக்கைசெய்ய விருப்பமில்லாதவனாகவும் இருந்தான். தெய்வீக செல்வாக்கைத் தடைசெய்ததனால், அவன் எவரை நேசிப்பதாகக் கூறிக்கொண்டிருந்தானோ—அந்த ஆண்டவரை அவன் கனவீனப்படுத்தியிருந்தான். யோவான் தனது குற்றங்களுக்கு எதிராகப் போராடியிருந்தான்; ஆனால் யூதாஸ் அவனுடைய மனச்சாட்சியைமீறி, சோதனைக்கு இணங்கி, அவனது தீய பழக்கங்களைத் தன்னுடன் பலமாகப் பற்றிக்கொண்டிருந்தான். கிறிஸ்து போதித்திருந்த சத்தியங்களின் நடைமுறைகள் அவனுடைய வாஞ்சைகளிலிருந்தும் நோக்கங்களிலிருந்தும் மாறுபட்டதாக இருந்தது. பரலோகத்திலிருந்துள்ள ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக அவனால் அவனுடைய யோசனைகளை விட்டுக்கொடுக்க முடியவில்லை. ஒளியில் நடப்பதற்குப் பதிலாக, அவன் இருளில் நடப்பதைத் தெரிந்துகொண்டான். தீய ஆசைகள், இச்சை, பழிவாங்கும் வெறிகள், துயரார்ந்த சிந்தனைகள் ஆகியவைகளை சாத்தான் அவனைத் தனது முழுக்கட்டுப்பாட்டுக்குள் ஆதாயப்படுத்திக்கொள்ளும்வரை அவனால் பேணப்பட்டிருந்தன. (2)

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களின் பிரதிநிதிகளாக யோவானும் யூதாசும் உள்ளனர். தெய்வீக மாதிரியைப் பற்றிக் கற்கவும் பின்பற்றவும் இந்த இருவரும் ஒரேவிதமான வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இருவரும் இயேசுவுடன் நெருக்கமான தோழமையை உடையவர்களாக இருந்து, அவருடைய போதனைகளைக் கவனிக்கின்ற சலுகையைப் பெற்றவர்களாக இருந்தனர். ஒவ்வொருவரும் சுபாவத்தில் தீவிரமான குறைபாடுகளை உடையவர்களாக உள்ளனர். சுபாவத்தில் மாற்றத்தை உண்டுபண்ணக்கூடிய தெய்வீக கிருபைக்கான பாதையை இருவரும் உடையவர்களாக இருந்தனர். ஆனால் ஒருவன் தாழ்மையுடன் இயேசுவைப் பின்பற்றிக் கற்றுக்கொண்டிருந்தபோது, அடுத்தவன்—தான் வார்த்தையின்படி செய்கிறவனாக இல்லாமல், கேட்பவனாக மட்டுமே இருக்கிறான் என்பதை வெளிப்படுத்தினான். நாள்தோறும் சுயத்திற்கு மரித்து பாவத்தை மேற்கொண்டிருந்த ஒருவன் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தான். அடுத்தவன், மறுரூபப்படுத்தும் கிருபையின் வல்லமையைத் தடுத்திருந்து, சுயநலமிக்க வாஞ்சைகளின்படி நடந்திருந்து, சாத்தானுக்கு அடிமையாகும்படி அடிமையாகக் கொண்டுவரப்பட்டான். (3)

யோவானுடைய வாழ்க்கையில் காணப்பட்டிருந்ததுபோன்ற சுபாவத்தில் உண்டாகும் மறுரூபம் எப்பொழுதும் கிறிஸ்துவுடன் உள்ள

ஐக்கியத்தின் பலனாக உள்ளது. ஒரு தனிப்பட்டவனின் சுபாவத்தில் குறைபாடுகள் இருக்கலாம். அப்படியிருந்தபோதிலும், அவன் கிறிஸ்துவின் ஒரு உண்மையான சீடனாகும்போது, தெய்வீகக் கிருபையின் வல்லமை அவனை மறுரூபப்படுத்திப் பரிசுத்தப்படுத்துகிறது. கர்த்தருடைய மகிமையை ஒரு கண்ணாடியில் காண்பதுபோல் கண்டு, அவன் எவரைத் துதிக்கிறானோ அவரைப்போலாகும்வரை, அவன் மகிமையிலிருந்து மகிமைக்கு மாற்றப்படுகிறான். (4)

பரிசுத்தமடைதலைப்பற்றிப் போதிக்கின்ற ஒரு ஆசிரியனாக யோவான் இருந்தான். அவன் சபைக்கு எழுதின அவனுடைய கடிதங்களில், கிறிஸ்தவ நடத்தைக்கான தவறாத சட்டங்களை முன்வைத்தான். "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்; அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும் என்று அவன் எழுதினான்"–1 யோவான் 3:3; 2:6. கிறிஸ்தவன் அவனுடைய இருதயத்திலும் வாழ்க்கையிலும் தூய்மையுள்ளவனாக இருக்கவேண்டுமென்று அவன் போதித்தான். வெறுமையான ஒரு பெயரளவிலான அறிவிப்பில் அவன் ஒருபோதும் திருப்தியடையாதவனாக இருக்கவேண்டும். தேவன் அவரிருக்குமிடத்தில் பரிசுத்தராயிருப்பதுபோல, விழுந்துபோன மனிதன் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால், அவனும் தான் இருக்குமிடமெங்கிலும் பரிசுத்தமானவனாக இருக்கவேண்டும். (5)

"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெச. 4:3) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினான். தேவனுடைய மக்களுடனுள்ள தேவனின் இடைப்படுதல் அனைத்திலும் சபை பரிசுத்தமடைவது தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. அவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் அவர்களை நித்திய காலமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலமாக அவர்கள் சுயத்தின் சிறுமையானவைகளை விட்டுவிலகி பரிசுத்தமடையவேண்டும் என்று அவர்களுக்காக மரிக்கும்படி அவர் தமது குமாரனைக் கொடுத்தார். அவர்களிடமிருந்து அவர் ஒரு சொந்தமான பணியையும் சொந்தமான சரணாகதியையும் எதிர்பார்க்கிறார். தேவனை நம்புவதாகக் கூறிக்கொள்ளுபவர்கள், அவரது சாயலுக்கு இசைவாகும்போதும், அவரது ஆவியினால் கட்டுப்படுத்தப்படும்போது மட்டுமே அவர்களால் தேவன் கனப்படுத்தப்படமுடியும். அப்பொழுது அவர்கள் இரட்சகருக்குச் சாட்சிகளாக நின்று, தெய்வீக கிருபை அவர்களுக்காக என்ன செய்திருக்கிறதென்பதை அறியச்செய்யமுடியும். (6)

அன்பின் கொள்கை செயலாற்றப்படுவதன்மூலமாக மட்டுமே உண்மையான பரிசுத்தமடைதல் வருகிறது. “தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்” (1 யோவான் 4:16). எந்த ஒருவனுடைய இருதயத்தில் இயேசு தங்கியிருக்கிறாரோ அவன், நடைமுறைத் தெய்வபக்தியை வெளிக்காட்டுவான். சுபாவம் தூய்மையாக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, மேன்மைப்படுத்தப்பட்டு, மகிமைப்படுத்தப்படும். நீதியின் செயல்களுடன் தூய்மையான கோட்பாடுகள் கலக்கும். பரிசுத்தமான நடத்தைகளுடன் பரலோகக் கற்பனைகள் கலக்கும். (7)

பரிசுத்தமடைதல் என்னும் ஆசீர்வாதத்தை லாபமாக அடைந்து கொள்ளுபவர்கள், முதலில் சுயத்தைத் தியாகம்செய்தல் என்றால் என்ன என்பதன் பொருளைக் கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் சிலுவை ஒரு மையமானதாக இருக்கிறது. இதன்மீது அதிகமான நித்திய கனமகிமை தொங்கிக்கொண்டிருக்கிறது (2 கொரிந்தியர் 4:17). “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” (மத்தேயு 16:24). நமது உடன் மனிதர்களின்மீதான நமது அன்பின் சுகந்தவாசனை நாம் தேவனை நேசிக்கிறோம் என்ற நமது அன்பை வெளிப்படுத்துகிறது. சேவையிலுள்ள பொறுமை ஆத்துமாவிற்கு இளைப்பாறுதலைக் கொண்டுவருகிறது. தாழ்மையான—விழிப்புள்ள—விசுவாசமிக்க உழைப்பு ஆகியவைகளின்மூலமாக இஸ்ரவேலின் நலன் தேர்ச்சியடைந்திருக்கிறது. கிறிஸ்துவின் பாதையைப் பின்பற்ற விருப்பமுள்ளவனாக இருக்கும் ஒருவனை தேவன் தாங்கிப் பலப்படுத்துகிறார். (8)

பரிசுத்தமடைதல் என்பது ஒரு வினாடி நேரம்—ஒரு மணிநேரம் அல்லது—ஒரு நாள் வேலை என்பதாக இல்லாமல், வாழ்க்கை முழுவதும் நடைபெறவேண்டிய செயலாக இருக்கிறது. அது உணர்ச்சியின் மகிழ்ச்சிமிக்க ஓட்டத்தில் ஆதாயப்படுவதாக இல்லாமல், அது தொடர்ச்சியாகப் பாவத்திற்கு மரிப்பது என்பதிலும், தொடர்ச்சியாகக் கிறிஸ்துவிற்காக வாழ்வதிலும் இருக்கிறது. பலவீனமான—விட்டு விட்டு உள்ளமுயற்சிகளினால் தவறுகளைச் சரிசெய்வதும் அல்லது சுபாவத்தில் சீர்திருத்தத்தை உண்டுபண்ணுவதும் முடியாததாக உள்ளது. நீண்டகால முயற்சியிலும் வேதனைதரும் ஒழுக்கத்திலும் கடுமையான போராட்டத்திலும் மட்டுமே நாம் மேற்கொள்ளக்கூடியதாக அது இருக்கிறது. ஒரு நாளில் உள்ள நமது போராட்டம் அடுத்த நாளில் எப்படிப்பட்டதாக இருக்கும்; எவ்வளவு பலமுள்ளதாக இருக்கும் என்பது நமக்குத் தெரியாது. சாத்தான்

ஆளுகைசெய்யும்வரை, பணியச் செய்யப்படவேண்டிய சுயத்தையும், மேற்கொள்ளப்படவேண்டிய பாவங்களையும் உடையவர்களாக நாம் இருக்கிறோம். உயிர் நீடித்து இருக்கும்வரை, நான் எல்லாவற்றையும் அடைந்துவிட்டேன் என்று நாம் கூறக்கூடிய கட்டம், நிற்கும் இடம் இருக்காது. உயிருள்ளவரை உள்ள கீழ்ப்படிதலின் பலன்தான் பரிசுத்தமடைதலாக இருக்கிறது. (9)

அப்போஸ்தலர்களிலும் தீர்க்கதரிசிகளிலும் ஒருவர்கூட பாவமில்லாதவர்களாக இருக்கிறோம் என்று ஒருபோதும் கூறவில்லை. தேவனுக்கு மிக அருகில் வாழ்ந்திருந்த மனிதர்கள், அறிந்து ஒரு தவறான செயலைச் செய்வதைவிட, ஜீவனையே தியாகம்செய்துவிடக்கூடிய மனிதர்களாக இருந்தனர். தெய்வீக ஒளியினாலும் வல்லமையினாலும் தேவன் கனப்படுத்தியிருந்த மனிதர்கள் அனைவரும் தங்களுடைய பாவத் தன்மையை உணர்ந்து, பாவ அறிக்கை செய்துள்ளனர். அவர்கள் மாம்சத்தின்மீது நம்பிக்கை வைக்காமல், தங்களுடைய சுயநீதியை உரிமைபாராட்டாமல், கிறிஸ்துவின் நீதியின்மீது நம்பிக்கைவைத்திருக்கின்றனர். (10)

கிறிஸ்துவைப் பார்க்கும் அனைவரும் அப்படியே இருப்பார்கள். நாம் கிறிஸ்துவிற்கு மிக அருகில் வரும்போது, அவருடைய குணத்தின் தூய்மையை நாம் அறியும்போது, பாவத்தின் அளவுகடந்த பாவத்தன்மையை நாம் மிகத் தெளிவாக அறியும்போது, நம்மை நாம் உயர்த்துவதற்கு மிகக் குறைவாக உணருவோம். தேவனைச் சமீபிப்பதற்கு ஆத்துமா தொடர்ச்சியாகச் செயலாற்றிக்கொண்டிருக்கும்போது, ஒரு தொடர்ச்சியான—அக்கறைமிக்க—இதயத்தை உடைக்கும்—பாவஅறிக்கை, அவருக்குமுன் இருதயத்தைத் தாழ்த்துவதாக இருக்கும். நமது கிறிஸ்தவ அனுபவத்தில் உள்ள முன்னேறும் ஒவ்வொரு அடியிலும் நமது மனவருத்தம் அதிக ஆழமுள்ளதாகும். நமது போதுமான தன்மை கிறிஸ்துவில் மட்டுமே இருக்கிறது என்பதை நாம் அறிந்து, அப்போஸ்தலனின் பாவ அறிக்கையை நாமும் நமது சொந்தமாக்கி, "என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று நான் அறிந்திருக்கிறேன்." "நானோ நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக. அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது" (ரோமர் 7:18; கலாத்தியர் 6:14) என்று கூறுவோமாக. (11)

தேவனுடைய ஜனங்களின் பரிசுத்தமான போராட்டங்களையும் எதிர்வாதங்களின் வரலாற்றையும் பரிவுசெய்யும் தேவதூதர்கள், பதிவு செய்வார்களாக. அவர்களுடைய ஜெபங்களையும் கண்ணீர்களையும்

அவர்கள் பதிவுசெய்வார்களாக; ஆனால் “நான் பாவமில்லாதவன்; நான் பரிசுத்தமுள்ளவன்” என்னும் மனித உதடுகளின் அறிவிப்பினால், தேவன் கனவீனப்படுத்தப்படாமலிருப்பாராக. அப்படிப்பட்ட இறுமாப்பு உள்ள வார்த்தைகளைப் பரிசுத்தப்படுத்தப்பட்டுள்ள உதடுகள் ஒருபோதும் கூறாது. (12)

அப்போஸ்தலனாகிய பவுல் மூன்றாம் வானம்வரை எடுக்கப்பட்டு, சொல்லமுடியாதவைகளைக் காணவும் கேட்கவும் செய்தான். அப்படியிருந்தும் அவனுடைய கணப்பில் இருந்த அறிக்கை: “நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்” என்பதாக உள்ளது (பிலிப்பியர் 3:12). பவுல் போராடின விசுவாசப் போராட்டமாகிய நல்ல போராட்டத்தைப் பரலோக தேவதூதர்கள் பதிவுசெய்வார்களாக. பரலோகத்தை நோக்கிய தளராத உறுதியான நடப்பில் பரலோகம் மகிழ்ந்து களிகூர்வதாக. பந்தயப் பொருளை முன்வைத்து மற்றவைகளனைத்தையும் அவன் களிம்பு என்று ஆலோசிக்கிறான். அவனது வெற்றியைக் கூறுவதில் தேவதூதர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். ஆனால் பவுல், தான் அடைந்துள்ளவைகளைப்பற்றிப் பெருமைபாராட்டுவதில்லை. அழியாமைமிக்க கிரீடத்தைப் பெறுவதற்கான, அவனது மேல் நோக்கி உள்ள போரில் அவன் வற்புறுத்துவதுபோல கிறிஸ்துவின் ஒவ்வொரு அடியானுடைய மனப்பாங்கும் பவுலின் மனப்பாங்கைப் போன்றதாக இருக்கவேண்டும். (13)

பரிசுத்தமாயிருத்தல் என்னும் மேலான தன்மையை அடையவேண்டும் என்னும் விருப்பத்தை உணரும் அனைவரும், தேவனுடைய பிரமாணமாகிய கண்ணாடியில் பார்ப்பார்களாக. அதிகத்தூரமாகச் சென்றடையும் அதன் உரிமைகளை அவர்கள் பார்க்கும்போது, இருதயத்தின் எண்ணங்களையும் விருப்பங்களையும் அறிந்துகொள்ளக்கூடியதான அதன் பணியைப் புரிந்துகொள்ளும்போது, பாவமற்ற தன்மையைப்பற்றி அவர்கள் பெருமைபாராட்டமாட்டார்கள். “நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்” (1 யோவான் 1:8–10). (14)

தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துக்கொண்டு இருந்து, தாங்கள் முற்றிலுமாகக் கர்த்தருடையவர்கள் என்று அறிவித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது உரிமைபாராட்டி, பரிசுத்தம்பற்றிக்

கூறிக்கொண்டிருக்கும் அநேகர் உள்ளனர். இந்தக் கற்பனையின் மீறுதல்காரர்கள், தேவனுடைய பிள்ளைகளுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள அனைத்தையும் தங்களுக்கு உரிமைபாராட்டுகிறார்கள். இது அவர்கள் பகுதியிலுள்ள இறுமாப்பாக உள்ளது. ஏனெனில், தேவன்மீதான உண்மையான அன்பு, எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவதில் வெளிப்படுத்தப்படும் என்று யோவான் நம்மிடம் கூறுகிறான். சத்தியத்தின் தத்துவ விளக்கங்களை நம்பினால் மட்டும்போதாது. கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்திருப்பதை அறிக்கை செய்வதற்கும், இயேசு ஒரு வேஷ தாரி அல்ல என்று நம்புவதற்கும் வேதாகமம் கூறும் மதம் தந்திரமாகப் புனையப்பட்ட கட்டுக்கதையல்ல என்பது போதுமானதல்ல. “அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள் இருக்கிறோம் என்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்” (1 யோவான் 2:4,5; 3:24) என்று யோவான் எழுதினான். (15)

இரட்சிப்பு என்பது கீழ்ப்படிதலினால் சம்பாதிக்கக்கூடிய ஒன்று என யோவான் போதிக்கவில்லை. ஆனால் விசுவாசம் அன்பு ஆகியவைகளின் கனியாகக் கீழ்ப்படிதல் இருக்கிறது. “அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்துதீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவம் செய்கிறதில்லை. பாவம் செய்கிற எவனும் அவரைக் காணவும் இல்லை; அவரை அறியவும் இல்லை” என்று அவன் கூறினான் (1 யோவான் 3:5,6). நாம் கிறிஸ்துவில் தங்கியிருந்தால், நமது இருதயத்தில் தேவ அன்பு வாசம் செய்தால், நமது உணர்வுகள், நமது எண்ணங்கள், நமது செயல்கள் ஆகிய யாவும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கும். பரிசுத்தமாக்கப்பட்ட இருதயம் தேவனுடைய பிரமாணத்திலுள்ள கற்பனைகளுக்கு இசைவாக இருக்கும். (16)

தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய அநேகர் முயன்று கொண்டிருந்தாலும், அவர்களிடம் சமாதானமும் சந்தோஷமும் இல்லை. அவர்களிடமுள்ள இந்த அனுபவம் இல்லாமை விசுவாசத்தைச் செயலாற்றுவதில் உண்டான தோல்வி, இதன் பலனாக இருக்கிறது. அவர்கள் ஒரு உப்பு நிலத்திலும் வறண்ட வனாந்தரத்திலும் நடந்து கொண்டிருப்பவர்களைப்போல உள்ளனர். அதிகமாக உரிமைபாராட்டக்கூடிய

இடத்தில் அவர்கள் கொஞ்சத்தின்மீது உரிமைபாராட்டுகின்றனர். ஏனெனில், தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு எல்லையே இல்லை. அப்படிப்பட்டவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதனால் வரக்கூடிய பாசுத்தமாக்கப்படுதலை எடுத்துக்காட்டுவதில்லை. கர்த்தர் அவருடைய குமாரர்களும் குமாரத்திகளும் சந்தோஷம், சமாதானம், கீழ்ப்படிதல் ஆகியவைகளை உடையவர்களாக இருக்கவேண்டும் என்கிறார். விசுவாசி, விசுவாசத்தைச் செயலாற்றுவதன் மூலமாக இந்த ஆசீர்வாதங்களை உடையவனாகிறான். விசுவாசத்தின்மூலமாக சுபாவத்தில் உள்ள குறைபாடுகள் அனைத்தும் சீர்செய்யப்படலாம். ஒவ்வொரு அசுத்தமும் சுத்திகரிக்கப்படும்; ஒவ்வொரு தவறும் சரிசெய்யப்படும்; ஒவ்வொரு மேலான தன்மையும் முன்னேற்றப்படுத்தப்படும். (17)

பாவத்துடனுள்ள போராட்டத்திலும் கிறிஸ்தவ சுபாவத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கும், பரலோகத்தால் அபிஷேகம் பண்ணப்பட்ட உபாத்தியாக ஜெபம் இருக்கிறது. விசுவாசத்துடனுள்ள ஜெபத்திற்கு மறுமொழியாக வரும், தெய்வீக செல்வாக்குகள் விண்ணப்பம் செய்பவனின் ஆத்துமாவில் அவன் எவைகளுக்காக மன்றாடுகிறானோ அவைகளை நிறைவேற்றும். பாவ மன்னிப்பிற்காக பரிசுத்த ஆவிக்காக, கிறிஸ்துவைப்போன்ற சுபாவத்துக்காக, அவருடைய பணியைச் செய்வதற்கான ஞானத்திற்கும் பலத்திற்குமாக அவர் வாக்குத்தத்தம் செய்துள்ள எந்த ஈவுக்கானாலும் நாம் கேட்கலாம். நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்பது அவரது வாக்குத்தத்தமாக உள்ளது. (18)

மோசே தேவனுடன்கூட மலையின்மீது இருந்தபோது, அவருடைய மகிமை தங்கியிருக்கின்ற ஆச்சரியமான கட்டிடத்தை அவன் கண்டான். தேவனிடமிருந்த, மலையில் தொடர்புகொள்ளும் இரகசியமான மானுடத்திற்கான அவருடைய ஆச்சரியமான உயர்ந்த குறிக்கோளை நாம் தியானம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். காலங்கள் நெடுகிலும் பரலோகத்துடன் தொடர்புகொள்ளுதல் என்னும் கருவியின் மூலமாகக் கிருபையின் கோட்பாடுகளைத் தமது பிள்ளைகளின் மனதிற்கு மெல்லமெல்ல விரிவடையச்செய்து, தேவன் அவருடைய நோக்கங்களைச் செயலாற்றுகிறார். "அவருடைய புறப்படுதல் அருணோதயம் போல் ஆயத்தமாயிருக்கிறது" (ஓசியா 6:3) என்னும் வார்த்தைகளில் அவர் சத்தியத்தைக் கற்றுக்கொடுக்கும் விதம் சித்திரிக்கப்பட்டுள்ளது. தேவனால் ஒருவனுக்கு எங்கு அறிவூட்ட முடியுமோ அந்த இடத்தில் தன்னை வைப்பவன், அதிகாலையின் பகுதி இருளிலிருந்து மத்தியான வேளையின் வெளிச்சத்திற்குள் முன்னேறுபவனைப்போல் இருக்கிறான். (19)

பூரணமான அன்பு, பூரணமான கீழ்ப்படிதல், தேவனுடைய சித்தத்துடன் இசைந்திருத்தல் என்பது, மெய்யான பரிசுத்தமடைதல் என்பதன் பொருளாக உள்ளது. சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக நாம் தேவனுக்குப் பரிசுத்தமடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஜீவனுள்ள தேவனை சேவிப்பதற்கு நமது மனச்சாட்சி செத்த கிரியைகளிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும். நாம் இன்னும் பூரணமானவர்களாகவில்லை. சுயம், பாவம் ஆகிய சிக்கல்களிலிருந்து, நாம் நம்மைத் தூரமாக விலக்கிக்கொண்டு, பூரணமடைதலுக்கு முன்னேறுவது என்பது நமது சலுகையாக உள்ளது. அனைவரும் சமீபிக்கக்கூடிய இடத்தில், பெரும் சாத்தியதைகளான உயர்ந்ததும் பரிசுத்தமானதுமான அடைந்துகொள்ளுதல்கள் வைக்கப்பட்டுள்ளன. (20)

உலகத்தின் இந்தக் காலத்தில் தெய்வீக வாழ்க்கையில், அநேகர் பெருமளவில் முன்னேறாமலிருப்பதற்கான காரணம் என்னவெனில், அவர்கள் எதைச்செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்களோ அதையே தேவசித்தம் என்று அர்த்தப்படுத்திக்கொள்ளுகின்றனர். அவர்கள் தங்களுடைய சொந்த வாஞ்சைகளைப் பின்பற்றிக்கொண்டு இருக்கும்போது, தேவனுடைய சித்தத்திற்கு இசைந்தவர்களாக இருப்பதாக அவர்கள் தாங்களாகவே முகஸ்துதிசெய்துகொள்ளுகின்றனர்; இவர்களுக்கு சுயத்துடன் போராட்டமில்லை. இன்பங்களையும் சுகங்களையும் வாஞ்சிக்கின்ற தங்களுடைய சுயநலத்திற்கெதிரான போராட்டங்களில், தற்காலிகமான வெற்றி அடைந்துள்ள மற்றவர்கள் உள்ளனர். அவர்கள் உண்மையும் அக்கறையும் உள்ளவர்களாக உள்ளனர். ஆனால் காலம்கடந்த முயற்சி, நாள்தோறும் மரித்தல், முடிவடையாத கிளர்ச்சி ஆகியவைகளில் களைப்படைபவர்களாக உள்ளனர். சோம்பேறித்தனம் அழைக்கப்படுவதுபோல் காணப்படுகிறது. சுயத்திற்கு மரிப்பது புறமுதுகிட்டோடச்செய்துள்ளது. அவர்கள் தங்களுடைய மயக்கமான கண்களைமூடி, சோதனையை எதிர்ப்பதற்குப் பதிலாக, சோதனையில் விழுகின்றனர். (21)

தீமையுடன் சமரசம்செய்துகொள்ளுவதற்கான இடமானது தேவனுடைய வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலில் இல்லை. எல்லா மனிதர்களையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுவதற்காக தேவகுமாரன் வெளிக்காட்டப்பட்டார். உறங்கும்படி உலகத்தைத் தாலாட்ட அவர் வராமல், கடைசியில் தேவனுடைய நகரத்தின் வாசலை அடையக்கூடிய, அனைவரும் பயணம்செய்யவேண்டிய இடுக்கமான பாதையைச் சுட்டிக்காட்ட அவர் வந்தார். அவருடைய பிள்ளைகள் அவர் நடத்திச்சென்றிருக்கும் பாதையில் பின்தொடரவேண்டும். சௌகரியத்தையும் அல்லது சுயநலமான நடத்தையையும் எப்படிப்பட்ட விதத்தில் தியாகம்செய்யவேண்டியதானாலும்

எவ்வளவு கிரயம் அல்லது உழைப்பு உண்டானாலும், அவர்கள் சுயத்திற்கெதிரான ஒரு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும். (22)

தேவனுக்கு மனிதர்கள் கொண்டுவரக்கூடிய பெரும் போற்றுதல், அவர்கள் மூலமாக அவர் செயலாற்றக்கூடிய அர்ப்பணிக்கப்பட்ட வாய்க்கால்களாக அவர்கள் ஆகவேண்டும். காலம், நித்தியத்திற்குள் விரைவாகக் கடந்துசென்றுகொண்டிருக்கிறது. தேவனுக்குச் சொந்தமாக இருப்பதிலிருந்து நாம் பின்தங்காதவர்களாக இருப்போமாக. மதிப்பு இல்லாமல் கொடுக்கப்படமுடியாததாக இருந்தாலும், பாழ்க்கடிப்பு இல்லாமல் மறுக்கமுடியாததாக இருந்தாலும், நாம் அவரை மறுக்காமலிருப்போமாக. அவர் முழு இருதயத்தையும் கேட்கிறார்; அதை அவருக்குக் கொடுங்கள். சிருஷ்டிப்பினாலும் மீட்பினாலும் அது அவருடையதாக இருக்கிறது. உங்களுடைய நுண்ணறிவை அவர் கேட்கிறார்; அதை அவருக்குக் கொடுங்கள்; அது அவருடையதாக இருக்கிறது. அவர் உங்களுடைய பணத்தைக் கேட்கிறார்; அதை அவருக்குக் கொடுங்கள். அது அவருடையதாக இருக்கிறது. “நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்திற்குக் கொள்ளப்பட்டீர்களே” (1 கொரிந்தியர் 6:19,20). பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு விசுவாசத்தை நடப்பிப்பதனால், அன்பினால் செயலாற்றும் அவருக்கு சேவைசெய்யும் பரிசுத்தமாக்கப்பட்ட ஆத்துமாவின் வழிபாட்டை அவர் அவசியப்படுகிறார். பரிபூரணம் என்னப்படுகின்ற மிக மேலான உயர்ந்த நோக்கங்களை அவர் நமக்கு முன் உயர்த்திப்பிடிக்கிறார். அவர் நமக்காக தேவசமூகத்தில் இருப்பதைப்போல, நாமும் இந்த உலகத்தில் அவருக்காக முற்றிலுமானவர்களாகவும் முழுமையானவர்களாகவும் இருக்கும்படி அவர் நம்மைக் கேட்கிறார். (23)

“நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது” (1 தெச. 4:3). இது உங்களுடைய சித்தமாகவுங்கூட இருக்கிறதா? உங்கள் பாவங்கள் உங்கள்முன் மலைகளைப்போல் இருக்கலாம். ஆனால் நீங்கள் உங்களுடைய இருதயத்தைத் தாழ்த்தினால்— உங்கள் பாவங்களை அறிக்கைசெய்தால், சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த ஒரு இரட்சகரின் புண்ணியங்களின்மீது நம்பிக்கை வைத்தால், அவர் உங்களை மன்னித்து, எல்லா அநீதியிலிருந்தும் அவர் உங்களைச் சுத்திகரிப்பார். நீங்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு முழுமையாக இசைந்திருக்கவேண்டும் என்று தேவன் கோருகிறார். இந்தப் பிரமாணம் பரிசுத்தமாயிருங்கள், மேலும் பரிசுத்தமாயிருங்கள் என்னும் அவருடைய குரலின் எதிரொலியாக இருக்கிறது. கிறிஸ்துவில் கிருபையின் நிறைவை வாஞ்சியுங்கள். அவருடைய நீதிக்காக உள்ள வல்லமைமிக்க

ஏக்கத்தினால் உங்கள் இருதயம் நிறையட்டும். அதன் செயல் சமாதானம் என்றும், அதன் பலன் சாந்தமும் என்றென்றைக்குமான நிச்சயமாகவும் இருக்கிறது என்றும் தேவனுடைய வார்த்தை அறிவிக்கிறது. (26)

உங்களுடைய ஆத்துமா தேவனுக்காக ஏங்கும்போது, நீங்கள் ஆராய்ந்துமுடியாத அவரது கிருபையின் ஐசுவரியங்களை அதிகமதிகமாக இன்னும் அதிகமாகக் காண்பீர்கள். இந்த ஐசுவரியங்களை நீங்கள் தியானம்செய்யும்போது, நீங்கள் அவைகளை அடைந்துகொண்டு, இரட்சகரின் தியாகத்தின் புண்ணியங்களையும், அவரது நீதியிலுள்ள பாதுகாப்பையும், அவரது ஞானத்தின் சம்பூரணத்தையும், கறைதிரை அற்றவர்களாக உங்களைப் பிதாவின்முன் நிறுத்தக்கூடிய அவருடைய வல்லமையையும் நீங்கள் வெளிப்படுத்துவீர்கள். (25) ★

# 56

# பத்மு தீவு!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 568-577)**
**திருவசன ஆதாரம் - 1 யோவான் 1:1-3**

கிறிஸ்தவ சபை ஏற்படுத்தப்பட்டு அரைநூற்றாண்டுகளுக்கு மேலாகக் கடந்துவிட்ட அந்த நேரத்தில் சுவிசேஷத்தின் தூது தொடர்ச்சியாக எதிர்க்கப்பட்டிருந்தது. அதன் எதிரிகள் ஒருபோதும் இளைப்பாறாதவர்களாக இருந்து, கடைசியில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக ரோம நாட்டுப் பேரரசனின் வல்லமையைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ளுவதிலும் வெற்றியடைந்தனர். (1)

அதைப் பின்தொடர்ந்து பயங்கரமான உபத்திரவத்தில் விசுவாசிகளின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் பலப்படுத்தவும் அப்போஸ்தலனாகிய யோவான் அதிகமாக வேலை செய்தான். அவனது எதிரிகளால் மறுத்துக்கூறமுடியாத ஒரு சாட்சியை உடையவனாக இருந்தான். அது அவனது சகோதரர்களை அவர்கள்மீது வந்த பரீட்சைகளைத் தைரியத்துடனும் இராஜபக்தியுடனும் சந்திக்க உதவியது. தாங்கள் சந்திக்க வற்புறுத்தப்பட்டிருந்த பயங்கரமான எதிர்ப்பினால், தங்களுடைய விசுவாசம் தடுமாறிவிடும் என்பதுபோல விசுவாசிகள் கண்டிருந்தபோது, வயதான இயேசுவின் பரீட்சிக்கப்பட்ட ஊழியக்காரான், சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றின கதையை வல்லமையுடனும் வாக்குவன்மையுடனும் மீண்டும் கூறியிருந்தான். அவன் தனது விசுவாசத்தை அசையாதபடி காத்திருந்தான். “ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான

நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1 யோவான் 1:1,2) என்னும் மகிழ்ச்சிமிக்க தூது அவனது உதடுகளிலிருந்து வந்தது. (2)

மிகவும் வயதுசென்றவனாகும்வரை யோவான் வாழ்ந்தான். எருசலேமின் அழிவு, மிக மேலான தேவாலயத்தின் பாழ்க்கடிப்பு ஆகியவைகளை அவன் சாட்சியாகக் கண்டான். இரட்சகருடன் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்து உயிர்வாழ்ந்திருந்த, சீடர்களில் கடைசியாக வாழ்ந்திருந்தான். இயேசுதான் மேசியா—உலகமீட்பர் என்னும் பெரும் சத்தியத்தை முன்வைப்பதில் அவனுடைய தூது பெரும் செல்வாக்கை உடையதாக இருந்தது; அவனது நேர்மையை ஒருவராலும் சந்தேகிக்க முடியாமலிருந்தது; அவனது போதனைகளின்மூலமாக அநேகர் நம்பிக்கையின்மையிலிருந்து திரும்புவதற்கு நடத்தப்பட்டனர். யூத அதிபதிகள், கிறிஸ்துவின் காரியத்தில் யோவான் கொண்டிருந்த அதிகமான பற்றுக்காக அவனுக்கு எதிரான கசப்பான வெறுப்பினால் நிரப்பப்பட்டிருந்தனர். யோவானின் சாட்சி மக்களின் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கும்வரை, கிறிஸ்தவர்களுக்கு எதிரான அவர்களுடைய முயற்சிகளில் எந்தவிதமான பயனும் உண்டாகாது என்று அவர்கள் அறிவித்தனர். இயேசுவின் அற்புதங்கள், போதனைகள் ஆகியவைகளை மறக்கச்செய்வதற்கு தைரியமிக்க சாட்சியின் குரல் மௌனப்படுத்தப்படவேண்டும் என்று முடிவுசெய்தனர். (3)

அதன்படி யோவான் அவனுடைய விசுவாசத்திற்காக ரோமாபுரிக்கு அழைக்கப்பட்டான். இங்கு அதிகாரிகளுக்கு முன்பாக அப்போஸ்தலனின் கோட்பாடுகள் தவறான விதத்தில் அறிவிக்கப்பட்டன. வஞ்சிக்கின்ற மதப்புரட்டுகளை அவன் போதிக்கிறான் என்று பொய்ச்சாட்சிகள் அவனைக் குற்றஞ்சாட்டினார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளினால் சீடனின் மரணத்தைக் கொண்டுவரலாம் என்று அவனுடைய எதிரிகள் நம்பினார்கள். (4)

யோவான் தனக்காக தெளிவான மனநிறைவை உண்டுபண்ணக் கூடிய பதிலைக் கொடுத்தான். அவனுடைய எளிமையும் கபடுமற்ற வார்த்தைகள் வல்லமைமிக்க சக்தியை உடையவையாக இருந்தன. அவனது பேச்சைக் கேட்டிருந்தவர்கள் அவனுடைய ஞானத்திலும், பேச்சுத்திறனிலும் அதிசயித்தனர். ஆனால் அவனுடைய சாட்சி எந்த அளவிற்கு அதிகமாக மனநிறைவை உண்டுபண்ணுவதாக இருந்ததோ, அந்த அளவிற்கு அவனது எதிரிகளின் வெறுப்பை அதிகமாக்கியது. டொமீஷியன் என்னும் பேரரசன் கோபத்தினால் நிறைந்திருந்தான். அவனால் கிறிஸ்துவிற்காகப் பேசும் உண்மையான சாட்சியின் நியாயத்தை

எதிர்க்கவும் முடியவில்லை; சொல்லப்பட்ட சத்தியத்தோடிருந்த வல்லமைக்கு நிகராகவும் பேசமுடியவில்லை. அப்படியிருந்தும் அவனது குரலை மௌனமடையச்செய்ய அவன் தீர்மானித்தான். (5)

யோவான் ஒரு கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் போடப்பட்டான். ஆனால் கர்த்தர், பயங்கரமாக எரியும் சூளையிலிருந்து அவருடைய மூன்று எபிரெயர்களைக் காப்பாற்றினதுபோல, அவருடைய உண்மையான உழியக்காரனின் உயிரைப் பாதுகாத்தார். நசரேயனாகிய இயேசுவான அந்த வஞ்சகனில் விசுவாசம்வைக்கும் அனைவரும் இவ்வாறாக அழிவார்கள் என்னும் வார்த்தைகள் கூறப்பட்டபோது, என்னுடைய ஆண்டவரை அவமானப்படுத்தவும் சித்திரவதைசெய்யவும் சாத்தானும் அவனுடைய தூதர்கள் யாவரும் செய்தவைகளுக்கெல்லாம் அவர் பொறுமையுடன் கீழ்ப்படிந்தார்; உலகத்தை இரட்சிப்பதற்காக அவர் தமது ஜீவனைக் கொடுத்தார்; அவருக்காகப் பாடுபடும்படி அனுமதிக்கப்பட்டதினால் நான் கனப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்று யோவான் அறிவித்தான். நான் பலவீனமான ஒரு பாவியான மனிதன்; கிறிஸ்து தீமையற்றவராகவும் தீட்டுப்படாதவராகவும் இருந்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை என்றான். (6)

இந்த வார்த்தைகள் அவைகளின் செல்வாக்கை உடையவைகளாக இருந்தன. எந்த மனிதர்கள் யோவானை எண்ணெய்க் கொப்பறையில் போட்டிருந்தார்களோ, அதே மனிதர்கள் அவனை அதிலிருந்து வெளியில் கொண்டுவந்தார்கள். மறுபடியும் உபத்திரவத்தின் கரம் அப்போஸ்தலனின் மீது பாரமாக விழுந்தது. தேவனுடைய வார்த்தைகளுக்காவும், கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்திற்காகவும், பேரரசனின் கட்டளையினால் யோவான் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு, பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டான். இங்கு இனிமேல் அவனுடைய செல்வாக்கு உணரப்படாமல், முடிவில் கடினமான நிலைமையினாலும் துன்பத்தினாலும் இறந்துவிடவேண்டிய நிலை வரும் என்று அவனுடைய எதிரிகள் நினைத்தார்கள். (7)

ஏஜியன் கடலில் இருந்த வறண்டதான —பாறைகள்மிக்க—ஒரு தீவாக இருந்த பத்மு, குற்றவாளிகளை நாடுகடத்தும் ஒரு இடமாக ரோம நாட்டு அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் துயரமிக்க இந்தத் தங்குமிடம், தேவனுடைய ஊழியக்காரனுக்குப் பரலோகத்தின் வாசலானது. வாழ்க்கையின் தீவிரங்களிலிருந்தும், சென்றுபோன வருடங்களின் தீவிரமான வேலைகளிலிருந்தும், மூடப்பட்டவனாக இருந்த அவன், அங்கு தேவன், கிறிஸ்து, பரலோகத்தின் தூதர்கள் ஆகியவர்களுடன் தோழமை உள்ளவனாக இருந்து, எதிர்காலம் முழுவதற்குமுள்ள சபைகளுக்கான உபதேசங்களைப்

பெற்றிருந்தான். இந்த உலகத்தின் முடிவுகாலத்தில் நிகழவுள்ள சம்பவங்கள் அவனுக்குமுன் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தன. அங்கு அவன் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட தரிசனங்களைப் பதிவுசெய்தான். அவன் நேசித்து சேவைசெய்திருந்த ஒருவரைப்பற்றி இனிமேல் அவனது குரல் சாட்சிகொடுக்க முடியாமலிருந்தபோது, அந்த வறண்ட கடற்கரையில் வைத்து, அவனுக்குக் கொடுக்கப்பட்ட தூதுகள், பூமியின்மீதுள்ள ஒவ்வொரு நாட்டைப்பற்றியும் உள்ள கர்த்தரின் நிச்சயமான நோக்கத்தை அறிவித்துக்கொண்டுசெல்லும் ஒரு விளக்கமாக இருக்கவேண்டியதாக இருந்தது. (8)

பத்மு தீவின் பாறைகளுக்கும் செங்குத்தான சிகரங்களுக்கும் மத்தியில் யோவான் அவனைப் படைத்தவருடன் தொடர்புகொண்டிருந்தான். அவன் தனது கடந்தகால வாழ்க்கையைத் திருப்பிப்பார்த்தான். அவன் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களைப்பற்றின எண்ணத்தினால் சமாதானம் அவனுடைய இருதயத்தில் நிரம்பினது. அவன் ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தியிருந்து, “நாம் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்” (1 யோவான் 3:14) என்று கூறமுடிந்திருந்தது. அவனைத் துரத்திவிட்ட பேரரசனைப்போல அது இருக்கவில்லை. அவன் போர்க்களங்களையும், கொலையுண்ட பலரையும், பாழடைந்துபோன வீடுகளையும், அழுதுகொண்டிருக்கும் விதவைகளையும், அநாதைக் குழந்தைகளையும், அவனது மேலான ஆசைகளின் வாஞ்சைகளையும் மட்டுமே ஒப்புயர்வற்ற விதத்தில் கண்டிருந்தான். (9)

இயற்கையின் புத்தகத்திலிருந்தும், ஆவியின் ஏவுதலின் பக்கங்களிலிருந்தும் பதிவுசெய்யப்பட்டிருந்த தெய்வீக வல்லமையின் வெளிக்காட்டல்களால் யோவான் அவனது தனிமையான வீட்டிலிருந்து இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதத்தில் நெருக்கமாக வசிப்பதற்குத் தகுதியடைந்தான். படைப்பின் செயல்களைத் தியானிப்பதும் தெய்வீகக் கலைச்சிற்பியைப் போற்றுவதும் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சென்றுபோன வருடங்களில் அவனுடைய கண்கள், காடுகள் நிறைந்த குன்றுகளாலும், பச்சைநிறப் பள்ளத்தாக்குகளாலும், கனிகள் மிக்க சமவெளிகளின் காட்சிகளினாலும் வரவேற்கப்பட்டிருந்தன. இயற்கையின் அழகுகளில் சிருஷ்டிகரின் ஞானத்தையும் திறமையையும் காண்பது எப்பொழுதும் அவனுடைய மகிழ்ச்சியாக நின்றிருந்தது. அநேகருக்குத் துயரம் தோய்ந்ததாகவும், விருப்பமற்றதாகவும் காணக்கூடிய இந்தக் காட்சிகளினால் அவன் இப்பொழுது சூழப்பட்டிருந்தான். ஆனால் யோவானுக்கு அது வேறுவிதமாக இருந்தது. அவனுடைய சுற்றுப்புறங்கள் வறண்டதும்

பாழானதுமாக இருந்தபோது, அவனுக்குமேலாக வளைந்திருந்த நீல நிற வானங்கள் அவனால் நேசிக்கப்பட்டிருந்த எருசலேமின்மேலே உள்ள வானங்களைப்போலவே ஒளிமிக்கதாகவும் அழகானதாகவும் இருந்தது. வனாந்திரமான கரடுமுரடான பாறைகளில், ஆழங்களின் இரகசியங்களில், அடிவானத்தின் மகிமைகளில், அவன் முக்கியமான பாடங்களை வாசித்தான் தேவனுடைய வல்லமை, மகிமை ஆகியவைகளின் தூதை அவைகள் அனைத்தும் தாங்கியிருந்தன. (10)

தேவனுடைய பிரமாணத்தை மீறுவதற்கு பூமியின் குடிகள் துணிந்ததினால் உண்டான ஜலப்பிரளயத்தினாலான அழிவிற்குச் சாட்சியாக இருந்தவைகளை அப்போஸ்தலன் தன்னைச் சுற்றிலும் கண்டான். தண்ணீர்கள் பொங்கியெழுந்ததினால், பெரும் ஆழத்திலிருந்தும் பூமியிலிருந்தும் மேலே வீசியெறியப்பட்ட பாறைகள், தேவனுடைய கோபம் ஊற்றப்பட்டதன் பயங்கரமான திகில்களைத் தெளிவாக அவனது மனதிற்குமுன் கொண்டுவந்தது. பெருவெள்ளத்தின் இரைச்சலில், ஆழத்தை அழைக்கும் ஆழத்தில், சிருஷ்டிகரின் குரலைத் தீர்க்கதரிசி கேட்டான். இரக்கமற்ற காற்றுகளினால் சீற்றமடையும்படி செய்யப்பட்ட கடல், எதிர்க்கப்பட்ட ஒரு தேவனின் கோபத்தை எடுத்துக்காட்டியிருந்தது. பார்க்கமுடியாத ஒரு கரத்தினால் நியமிக்கப்பட்டிருந்த எல்லைக்குள் அடங்கியிருந்த பலத்த அலைகள், அவைகளின் பயங்கரமான மோதல்கள், ஒரு முடிவில்லாத வல்லமையின் கட்டுப்பாட்டைப்பற்றிப் பேசியிருந்தன. அதற்கும் மாறாக இருக்கிற, பூமியின் தூளில் உள்ளப் புழுக்களைப்போல இருந்தாலும் தங்களிடம் உள்ளதுபோல தோன்றும் ஞானத்தில் மகிமைபாராட்டி பிரபஞ்சத்தின் அதிபதிக்கு எதிராகத் தங்களின் இருதயங்களை வைத்து ஒட்டுமொத்தத்தில் தேவன் தங்களைப்போன்ற ஒருவராக இருக்கிறார் என்று ஒப்பிடும் பலவீனமும் தவறும் உடைய அழிவுக்குரியவர்களின் மதியீனத்தைக் கண்டான். பாறைகளினால் அவனுடைய பலத்தின் பாறையாக இருந்த கிறிஸ்து அவனுக்கு ஞாபகப்படுத்தப்பட்டார். அவருடைய அரணில் அவன் பயமின்றி மறைந்திருக்கமுடியும் என்று உணர்ந்தான். பாறைகளடர்ந்த பத்முவிற்கு நாடுகடத்தப்பட்ட யோவானிடத்திலிருந்து, ஏக்கமிக்க, ஆத்துமாவுடன் மிகுந்த ஆர்வத்துடன் ஏங்குகின்ற ஊக்கமிக்க ஜெபங்கள் தேவனை நோக்கி மேலே சென்றன. (11)

வயது முதிர்ந்த மனிதர்களை தேவனால் எவ்விதமாகப் பயன்படுத்தமுடியும் என்பதற்கான ஒரு சித்திர விளக்கத்தை யோவானின் வரலாறு கொடுக்கிறது. யோவான் பத்முவிற்கு நாடுகடத்தப்பட்டபோது, அவன் ஊழியஞ்செய்வதற்கான வயதைக் கடந்தவன் என்றும், எந்த

நேரத்திலும் விழுந்துவிடக்கூடிய ஒரு முறிந்த நாணலாக இருக்கிறான் என்றும் நினைத்த அநேகர் இருந்தனர். ஆனால் மேலும் பயன்படுத்த அவன் பொருத்தமானவனாக இருக்கிறான் என்பதை கர்த்தர் கண்டார். தன்னுடைய பழைய ஊழியத்திலிருந்து அவன் துரத்தப்பட்டிருந்தபோதிலும் சத்தியத்திற்குச் சாட்சி கொடுப்பதிலிருந்து அவன் ஓயவில்லை. நண்பர்களையும் விசுவாசத்திற்கு மாறினவர்களையும் அங்கும்கூட அவன் உண்டாக்கிக்கொண்டான். அவர் தமது மக்களைத் தம்மிடம் சேர்த்துக்கொள்வதற்காகத் திரும்பிவரும்வரை, அவருடைய மக்களுக்காகப் பரிந்துபேசும் ஒருவராக அவர் இருக்கிறார் என்னும் உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றின அறிவிப்பு, அவனுடைய தூதின் மகிழ்ச்சியாயிருந்தது. யோவான் அவனுடைய முந்தைய வாழ்க்கையின் வருடங்களில் பரலோகத்திலிருந்து பெற்றிருந்த தொடர்பைவிட அதிகமான தொடர்பை முதிர்வயதானபின் பரலோகத்திலிருந்து பெற்றிருந்தான். (12)

தேவனுடைய பணியுடன் எவர்களுடைய வாழ்க்கையின் விருப்பங்கள் பிணைக்கப்பட்டிருக்கிறதோ, அவர்கள் மிக மென்மையாக பேணப்படவேண்டும். இந்த வயதான மனிதர்கள், புயலுக்கும் பரீட்சைக்கும் மத்தியில் விசுவாசமுள்ளவர்களாக நின்றுள்ளனர். அவர்களிடம் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் இன்னும் தேவனுடைய காரியத்தில் தங்களுடைய இடத்தில் நிற்கக்கூடிய தகுதிகளையும் தாலந்துகளையும் உடையவைகளாக உள்ளனர். அவர்கள், இளைஞர்கள் சுமக்கக்கூடியதும் சுமக்கவேண்டியதுமான தாலந்துகளை—பாரமாக சுமைகளைச் சுமக்கமுடியாதபடி தோய்ந்துபோனவர்களாக இருந்தாலும், அவர்களால் கொடுக்கமுடிந்த ஆலோசனைகள் மிக உயர்ந்த மதிப்பை உடையதாக இருக்கிறது. (13)

அவர்கள் தவறுசெய்திருந்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய தோல்விகளினால், தவறுகளையும் ஆபத்துக்களையும் தவிர்ப்பது எப்படியென்று அவர்கள் கற்றுள்ளனர். ஆகையால் ஞானமிக்க ஆலோசனை கொடுக்க அவர்கள் தகுதியானவர்களாக இல்லையா? சோதனையையும் பரீட்சையையும் அவர்கள் தாங்கியிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய திடத்தைக் கொஞ்சம் இழந்திருந்தாலும், கர்த்தர் அவர்களை ஒரு ஓரமாக வைப்பதில்லை. சிறப்பான கிருபையையும் ஞானத்தையும் அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார். (14)

பணி கடினமான விதத்தில் சென்றிருந்தபோது, தங்களுடைய ஆண்டவருக்குச் சேவை செய்வதில் வறுமையை சகித்து, சத்தியத்திற்காகக் கூடினவர்கள் சிலராக இருந்தபோதும் விசுவாசத்துடன் இருந்தவர்கள், கனப்படுத்தப்படவும் மரியாதை செலுத்தப்படவும் வேண்டும். விசுவாசமிக்க

மனிதர்களுடன் தோழமைகொள்ளுவதினால் இளையவர்களான ஊழியக்காரர்கள் ஞானம், பலம், அறிவின் தேர்ச்சி ஆகியவைகளைக் கற்றுகொள்ளவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் தங்களுக்கு மத்தியில் இருப்பதினால் இளையவர்கள் மேலான அனுகூலத்தை அடைந்துள்ளனர் என்பதை அவர்கள் உணருவார்களாக. அவர்களுடைய ஆலோசனைக்கூட்டங்களில் ஒரு கனமிக்க இடத்தை அவர்களுக்குக் கொடுப்பார்களாக. (15)

கிறிஸ்துவின் சேவையில் தங்களுடைய வாழ்க்கையைச் செலவுசெய்தவர்கள் பூமிக்குரிய உழியத்தின் முடிவைச் சிலராகச் சமீபிக்கும்போது, தேவனுடைய பணியைப்பற்றின அவர்களுடைய அனுபவங்களைத் திரும்பவும் எண்ணிப்பார்க்கும்படி, பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்படுவார்கள். அவர்களைப் பரீட்சைகளிலிருந்து விடுவித்த அவருடைய நல்ல தன்மைகள், விசுவாசத்திற்குள் புதிதாக வந்திருப்பவர்களுக்குத் திரும்பத்திரும்பக் கூறப்படவேண்டும். தீமையின் வல்லமையினால் கீழ்நோக்கி அடித்துச்செல்லப்படும் ஆண்களையும் பெண்களையும் காப்பதற்காக, முதியவர்களும் பரீட்சிக்கப்பட்டவர்களுமான ஊழியக்காரர்கள் தங்கள் பகுதியான வேலையைச் செய்து, அவர்களுடைய இடத்தில் நிற்கவேண்டும். அவர்களுடைய போர்க்கவசத்தைக் கீழே வைக்கும்படி அவர் கட்டளையிடும்வரை, அவர்கள் அதை அணிந்தவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். (16)

உபத்திரவத்தின் கீழிருந்த அப்போஸ்தலனாகிய யோவானின் அனுபவத்தில் கிறிஸ்தவனுக்கு ஒரு ஆச்சரியமான பலனும் ஆறுதலும் இருக்கிறது. துன்மார்க்கமான மனிதர்களின் திட்டங்களைத் தேவன் தடைசெய்வதில்லை. ஆனால் பரீட்சை, போராட்டம் ஆகியவைகளின் போது, தங்களுடைய விசுவாசத்தையும் இராஜபக்தியையும் காத்துக்கொள்ளுபவர்களின் நன்மைக்காகச் செயல்படும்படி, அந்த உபத்திரவங்களை மாற்றுகிறார். அடிக்கடி உபத்திரவமான புயல்கள், கசப்புமிக்க எதிர்ப்பு, நியாயமற்ற நிபந்தனைகள் ஆகியவைகளுக்கிடையில் சுவிசேஷ ஊழியக்காரன் தனது பணியைக் கொண்டுசெல்லுகிறான். அப்படிப்பட்ட நேரத்தில் பரீட்சை என்னும் சூளையிலும் துன்பத்திலும் பெற்றுக்கொள்ளும் அனுபவம், வேதனைகளைவிட விலைமதிப்புள்ளதாக இருக்கிறது என்பதை அவன் நினைப்பானாக. இவ்வாறாக, அவர்களுடைய பலவீனத்தையும் தேவனுடைய பலத்தையும் காட்டுவதற்காக, அவர் தமது பிள்ளைகளை அவரருகில் கொண்டுவருகிறார். அவர்மீது சார்ந்திருக்கும்படி அவர் அவர்களுக்குப் போதிக்கிறார். இவ்வாறாக, அவசர நிலைமைகளை

சந்திக்கவும், நம்பிக்கைக்குரிய பதவிகளில் நிரப்பப்படவும், எந்தப் பெரும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களுக்கு வல்லமைகளைக் கொடுத்திருந்தாரோ, அவைகளால் அவர்களை அவர் ஆயத்தம்செய்கிறார். (17)

யுகங்கள் நெடுகிலும் தேவனால் நியமிக்கப்பட்டுள்ள அவருடைய சாட்சிகள், சத்தியத்திற்காகத் தாங்களாகவே அவமதிப்பிற்கும் உபத்திரவத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். யோசேப்பு அவருடைய கற்புநெறியையும் நேர்மையையும் பாதுகாத்திருந்ததினால், அவதூறு பண்ணப்பட்டு உபத்திரவப்படுத்தப்பட்டான். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அவருடைய தூதுவனாக இருந்த தாவீது, அவனுடைய எதிரிகளால் ஒரு பட்சிக்கிற மிருகம்போல வேட்டையாடப்பட்டிருந்தான். தானியேல் பரலோகத்துடனுள்ள அவனுடைய உறவில் உண்மையுள்ளவனாக இருந்ததினால், சிங்கங்களின் கெபியில் போடப்பட்டான். யோபு தனது உலகப் பிரகாரமான ஆஸ்திகள் யாவையும் இழந்து, அவனது உறவினர்களாலும் நண்பர்களாலும் வெறுக்கப்படும்படி சரீரப்பிரகாரமாக வாதிக்கப்பட்டான். அப்படியிருந்தபோதிலும், அவன் தனது நேர்மையைப் பாதுகாத்திருந்தான். தேவன் பேசும்படி கொடுத்திருந்த வார்த்தைகளைப் பேசாமலிருக்கும்படி எரேமியாவைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவனுடைய சாட்சி அரசனையும் பிரபுக்களையும் கோபாவேசத்திற்குள்ளாக்கினதால், அவன் ஒரு வெறுக்கப்படக்கூடிய உளையான கிணற்றில் போடப்பட்டான். கிறிஸ்துவை—சிலுவையில் அறையப்பட்ட அவரை ஸ்தேவான் பிரசங்கித்ததினால் கல்லெறியப்பட்டான். பவுல் புறஜாதியினருக்கு தேவனுடைய விசுவாசமிக்க தூதுவனாக இருந்தபடியினால் சிறைவைக்கப்பட்டு, கோலால் அடிக்கப்பட்டு, கல்லெறியப்பட்டு, முடிவில் கொலைசெய்யப்பட்டான். தேவனுடைய வார்த்தைக்காகவும் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சிக்காவும் யோவான் பத்மு தீவிற்குத் துரத்தப்பட்டான். (18)

தேவப்பிரசன்னம் தங்கியிருக்கிறது என்பதற்கும், அவருடைய கிருபை தாங்குகிறது என்பதற்கும், தேவனுடைய விசுவாசத்திலுள்ள வாக்குத்தத்தங்களுக்கும் மனித உறுதியின் இந்த உதாரணங்கள் சாட்சி பகருகின்றன. உலகத்தின் வல்லமைகளை எதிர்த்து நிற்கும் விசுவாசத்தின் வல்லமைக்கு அவை சாட்சிபகருகின்றன. மிக அதிகமான இருளான நேரத்தில் உணரவும், எவ்வளவு புண்ணாகும்படி சோதிக்கப்பட்டாலும், புயல் அசைத்தாலும், கரையில் நமது பிதா இருக்கிறாரென்று தேவனில் இளைப்பாறியிருப்பதுமே விசுவாசத்தின் செயலாக இருக்கிறது. விசுவாசக் கண்ணினால் மட்டுமே காலத்திற்கு அப்பால் உள்ள நித்திய செல்வங்களின்

விலைமதிப்பை சரியான விதத்தில் அனுமானம் செய்து பார்க்கமுடியும். (19)

பூமிக்குரிய மகிமைகளையும் செல்வங்களையும், பரீட்சைகள் இல்லாத ஒரு வாழ்க்கையின் நம்பிக்கையையும், இயேசு அவரது அடியார்களுக்குமுன் வைப்பதில்லை. அதற்குப்பதிலாக, சுய மறுப்பு, நிந்தைகள் ஆகிய பாதையில் அவரைப் பின்பற்றும்படி அவர்களை அழைக்கிறார். இந்த உலகத்தை மீட்கும்படி வந்தவர், தீமையின் ஐக்கிய சக்திகளால் எதிர்க்கப்பட்டார்; சமாதான பிரபுவிற்கு எதிராக ஒரு இரக்கமற்ற கூட்டத்தில் பொல்லாத மனிதர்களும் பொல்லாத தூதர்களும் அணிதிரண்டனர். அவரது ஒவ்வொரு வார்த்தையும் செயலும் தெய்வீக மனஉருக்கத்தை வெளிப்படுத்தின. அவர் உலகத்துடன் ஒத்தவராக இல்லாமலிருந்தது, மிகவும் கசப்பான சூழ்நிலைகளை எழுப்பிவிட்டது. (20)

கிறிஸ்து இயேசுவிற்குள் தெய்வபக்தியாய் ஜீவிக்கும் அனைவருக்கும் அப்படியே நடக்கும். கிறிஸ்துவின் ஆவியினால் ஊக்குவிக்கப்பட்டு இருக்கும் அனைவருக்கும் உபத்திரவமும் நிந்தையும் காத்திருக்கும். காலங்களை அனுசரித்து உபத்திரவத்தின் சுபாவத்தில் மாறுதல் உண்டாகிறது. ஆனால் உபத்திரவத்திற்கடியில் இருக்கும் கொள்கை ஆபேலின் நாட்களிலிருந்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கொலைசெய்வதாகவே உள்ளது. (21)

யுகங்கள் நெடுகிலும் தேவனுடைய ஜனங்களை சாத்தான் உபத்திரவப் படுத்தியிருந்திருக்கிறான். அவன் அவர்களைச் சித்திரவதை செய்து மரணத்திற்குட்படுத்தியிருக்கிறான். ஆனால் அப்படி மரித்ததினால் அவர்கள் வெற்றிவீரர்களானார்கள். சாத்தானைவிட பலமிக்க ஒருவரின் வல்லமைக்கு அவர்கள் சாட்சி பகர்ந்திருந்தனர். துன்மார்க்கர்கள் சரீரத்தைச் சித்திரவதை செய்து மரணத்திற்கு உள்ளாக்கவும் முயற்சிகள் செய்யலாம்; ஆனால் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கும் அவர்களுடைய ஜீவனை அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. அவர்களால் ஆண்களையும் பெண்களையும் சிறைச்சாலைச் சுவருக்குள் வைத்து அடைக்கமட்டுமே முடியும்; ஆனால் அவர்களால் ஆவியைக் கட்டிவைக்க முடியாது. (22)

தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பரீட்சை உபத்திரவங்களால் தேவனுடைய சுபாவம்—தேவனுடைய மகிமை வெளிப்படுகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் உள்ளவர்கள், உலகத்தால் வெறுக்கப்பட்டு, உபத்திரவப் படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டவர்களாக உள்ளனர். பூமியில் அவர்கள் இடுக்கமான பாதையில் நடக்கின்றனர். துன்பம் என்னும் சூளையில் அவர்கள் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளனர். வேதனைமிக்க போராட்டங்களுக்கூடாக

அவர்கள் கிறிஸ்துவைப் பின்தொடர்ந்து, சுயமறுப்பைச் சகித்து, கசப்பான ஏமாற்றங்களை அனுபவிக்கின்றனர்; ஆனால் இவ்வாறாக அவர்கள் பாவத்தின் குற்றத்தையும் ஆபத்தையும் கற்று, வெறுப்புடன் அதனைப் பார்க்கின்றனர். “இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல” (ரோமர் 8:18) என்று கூறிக்கொண்டு, அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளிகளாக இருந்து, துயரத்திற்கும் அப்பால் உள்ள மகிமையைக் காண்கின்றனர். (23) ★

# 57

# வெளிப்படுத்தின விசேஷம்!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 576–592)**
**திருவசன ஆதாரம் – வெளிப்படுத்தல் 1:14,15,17**

அப்போஸ்தலர்களின் நாட்களில் கிறிஸ்தவ விசுவாசிகள் அக்கறையிலும் உற்சாகத்திலும் நிரப்பப்பட்டிருந்தனர். ஒப்பிட்டுப்பார்க்கும் மிகக் குறைந்த காலத்தில் அவர்கள் தங்களுடைய ஆண்டவருக்காகக் களைப்பில்லாமல் பணியாற்றினதால், பயங்கரமான எதிர்ப்பு இருந்தபோதும், பூமியில் மனிதர்கள் குடியிருந்த பகுதிகள் எங்கிலும், இராஜ்யத்தினுடைய சுவிசேஷம் ஒலிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு காலத்திலுமுள்ள விசுவாசிகளுக்கு தைரியம் கொடுப்பதற்காக இந்த நேரத்தில் இயேசுவின் அடியார்களால் வெளிக்காட்டப்பட்ட பேரார்வம் ஆவியின் ஏவுதல்மிக்க எழுதுகோலினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் காலத்திலிருந்த கிறிஸ்தவ சபைகளுக்கு ஒரு அடையாளமாக இருந்த எபேசு சபையை, கர்த்தராகிய இயேசு பயன்படுத்தி, விசுவாசமும் உண்மையுமுள்ள சாட்சியானவர்: "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து, அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்; நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 2:2,3) என்று அறிவித்தார். முதலில் எபேசுவிலிருந்த சபையின் அனுபவம் சிறு குழந்தையைப்போன்ற எளிய தன்மையையும் ஆர்வத்தையும் உடையதாக இருந்தது. (1)

தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிய அக்கறையுடன் வகைதேடியிருந்த விசுவாசிகளுடைய வாழ்க்கை, ஒரு அக்கறையையும் கிறிஸ்துவின்மீதான உண்மையான அன்பையும் வெளிப்படுத்தியிருந்தது.

அவர்களுடைய இருதயங்களில் தங்கியிருந்த இரட்சகரது பிரசன்னத்தினால் அவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செயலாற்றுவதில் களிகூர்ந்திருந்தனர். மீட்பரின் அன்பினால் நிறைந்திருந்த அவர்களுடைய மேலான இலக்கு அவருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதாக இருந்தது. கிறிஸ்துவின் விலைமதிப்புமிக்க கிருபையின் பொக்கிஷத்தை குவித்துவைக்க அவர்கள் நினைக்கவில்லை. அவர்களது அழைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, "பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும்" என்னும் தூதின் பாரத்தை உடையவர்களாக அவர்கள் இருந்தனர். பூமியின் கடைசி எல்லைகளுக்கும் இரட்சிப்பின் மகிழ்ச்சிமிக்க செய்தியைக் கொண்டுசெல்லுகின்ற வாஞ்சையினால் அவர்கள் அனலடைந்திருந்தனர். அவர்கள் இயேசுவுடன் இருந்தவர்கள் என்னும் அறிவை உலகம் அடைந்தது. தேவகுமாரனின்மூலமாக பாவமிக்க மனிதர்கள், மனம் வருந்தினவர்கள், மன்னிப்படைந்தவர்கள், சுத்திகரிக்கப்பட்டவர்கள், பரிசுத்தமடைந்தவர்கள் ஆகியோர் தேவனுடன் பங்காளிகளாகும்படி கொண்டுவரப்பட்டனர். (2)

நுண்ணுணர்விலும் செயலிலும் சபை அங்கத்தினர்கள் ஒற்றுமைப்பட்டிருந்தனர். கிறிஸ்துவிற்காக உள்ள அன்பு அவர்களை ஒன்று சேர்த்துப் பிணைக்கும் பொன் சங்கிலியாக இருந்தது. அவர்கள் கர்த்தரை அறிவதற்கும், மேலும் பூரணமாக அறிவதற்கும், அவரைப் பின்தொடர்ந்திருந்தனர். அவர்களுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் சந்தோஷமும் அன்பும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அவர்கள் துன்பத்திலிருந்த தகப்பனில்லாதவர்களையும், விதவைகளையும் விசாரித்து, இதைச் செய்யாது தவறுவது, அறிந்துகொண்டிருப்பதற்கு முரணாகவும் தங்களுடைய மீட்பரை மறுதலிப்பதாகவும் இருக்கும் என்பதை உணர்ந்து, உலகத்தால் கறைபடாதவர்களாகத் தங்களைக் காத்துக்கொண்டிருந்தனர். (3)

ஒவ்வொரு நகரத்திலும் ஊழியம் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. ஆத்துமாக்கள் மாற்றம் அடைந்தனர். அவர்கள் தங்கள் பகுதியாக விலைமதிப்பிடமுடியாத பொக்கிஷத்தைப் பெற்றிருப்பதை மற்றவர்களுக்குக் கூறவேண்டும் என்பதை உணர்ந்தனர். அவர்களுடைய மனங்களை ஒளிப்படுத்தியிருந்த ஒளி, மற்றவர்கள்மீது பிரகாசிக்கும்வரை, அவர்களால் ஓய்ந்திருக்க முடியவில்லை. கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கைக்கு அவிசுவாசிகளாக இருந்த திரளானவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். தவறு செய்பவர்களுக்கும் புறம்பாக்கப்பட்டவர்களுக்கும் சத்தியத்தை அறிந்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டிருந்தவர்களுக்கும் தேவனை நேசிப்பதைவிட இன்பங்களை நேசிப்பவர்களுக்கும் உற்சாகமான நேரடியான வேண்டுகோள்கள் கொடுக்கப்பட்டன. (4)

ஆனால் சிறிது காலத்திற்குப்பின் விசுவாசிகளின் பேரார்வம் தேயத்தொடங்கி, தேவன்மீதுள்ள அவர்களுடைய அன்பும் பிறர்மீதுள்ள அன்பும் குறைந்தது. குளுமை சபைக்குள் நகர்ந்துவந்தது. சிலர் சத்தியத்தை அறிந்துகொண்ட ஆச்சரியமானவிதத்தை மறந்துவிட்டனர். பழைய தரத்தைக் காத்திருந்தவர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தங்களுடைய இடத்தில் விழுந்துபோனார்கள். இந்த முன்னோடிகளின் பாரத்தில் பங்குபெற்றிருக்கக்கூடியவர்களாக இருந்த சில ஊழியக்காரர்கள் இப்படியிருந்து, ஞானமிக்க தலைமைக்கு ஆயத்தமாயிருந்திருக்கக்கூடிய சில ஊழியக்காரர்கள் அடிக்கடி திரும்பக் கூறப்பட்டிருந்த சத்தியங்களில் களைப்புற்றவர்களாக இருந்தனர். புதியதும் திடுக்கிடச்செய்வதுமாகிய சிலவற்றின்மீதுள்ள அவர்களுடைய வாஞ்சையினால் அநேக மனங்களுக்கு அதிக விருப்பமுள்ளதாக இருக்கக்கூடிய புதிய கொள்கைகளை ஆனால் சுவிசேஷத்தின் அடிப்படைக்கொள்கைகளுடன் இசைவில்லாதவைகளை அறிமுகம் செய்ய ஆயத்தமடைந்தனர். (5)

அவர்களுடைய நவீன செயல்கள் கடந்தகால அனுபவங்களைப் பற்றிய கேள்வியை எழுப்ப அநேகருக்கு வகைசெய்யும் என்பதையும், இவ்வாறாக, அது குழப்பத்திற்கும் விசுவாசமின்மைக்கும் நடத்திவிடும் என்பதையும் அறிந்துகொள்ள அவர்கள் தங்களுடைய சுய நம்பிக்கையினாலும் ஆவிக்குரிய குருட்டுத்தனத்தினாலும் தவறிவிட்டனர். (6)

இந்தத் தவாறன கோட்பாடுகள் வற்புறுத்தப்பட்டபோது, வேற்றுமைகள் குதித்தெழுந்தன. அநேகர் அவர்களுடைய விசுவாசத்தைத் தொடங்குபவரும் முடிப்பவருமான இயேசுவைப் பார்ப்பதைவிட்டுத் திரும்பினார்கள். கோட்பாடுகளில் இருந்த முக்கியமில்லாத விஷயங்களைப்பற்றிய விவாதம், மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மகிழ்ச்சிதரும் கட்டுக்கதைகள் ஆகியவைபற்றி சிந்தித்தல் ஆகியவை சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகச் செலவிட்டிருந்திருக்கவேண்டிய நேரத்தை ஆக்கிரமித்துக்கொண்டன. சத்தியத்தை விசுவாசத்துடன் முன்வைப்பதனால் உண்டாகும் மன உணர்த்துதலையும் மாற்றத்தையும் அடைந்திருக்கக்கூடிய பெரும் கூட்டத்தினர் எச்சரிக்கப்படாமல் விட்டுவிடப்பட்டனர். பக்தி விரைவாகக் குறையத்தொடங்கியது. தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று உரிமை பாராட்டிக் கொண்டிருந்தவர்களின்மீது ஆதிக்கம் செலுத்த சாத்தான் எழும்பிக்கொண்டிருந்ததுபோல் காணப்பட்டது. (7)

சபையின் வரலாற்றிலிருந்த இந்த நெருக்கடியான நேரத்தில், யோவான் நாடு கடத்தப்படும் தண்டனையை அடைந்தான். அவனுடைய குரல் சபைக்கு இப்போது தேவைப்பட்டதைப்போல மற்றொருபோதும்

தேவைப்பட்டிருக்கவில்லை. அவனுடன் முன்பு தோழர்களாக இருந்தவர்களில் ஏறத்தாழ அனைவரும் இரத்தசாட்சிகளாகியிருந்தனர்.விசுவாசிகளில் மீதியாக இருந்தவர்கள் பயங்கரமான எதிர்ப்பைச் சந்தித்துக்கொண்டிருந்தனர். கிறிஸ்தவ சபையின் எதிரிகள் வெற்றியடைவது வெகுதூரத்தில் இல்லை என்பதுபோலக் காணப்பட்டது. (8)

ஆனால் அந்த இருளில் காணமுடியாதவிதத்தில் கர்த்தரின் கரம் செயலாற்றிக்கொண்டிருந்தது! தேவனுடைய தெய்வீக ஏற்பாட்டினால், கிறிஸ்து தம்மைப்பற்றின ஆச்சரியமானவைகளையும், சபைகள் அறிவூட்டப்பட அவசியமான தெய்வீக சத்தியத்தையும் வெளிப்படுத்தக்கூடிய இடத்தில் யோவான் வைக்கப்பட்டான். யோவானை நாடுகடத்தினதின்மூலமாக தேவனுடைய விசுவாசமிக்க சாட்சியின் குரலை என்றைன்றைக்குமாக மௌனப்படுத்திவிட்டதாக சத்தியத்தின் எதிரிகள் நம்பியிருந்தனர். ஆனால் காலத்தின் முடிவுவரை சபையைப் பலப்படுத்துவதில் தொடரவேண்டியதாக இருந்த செல்வாக்கை உடைய ஒரு தூதை பத்மு தீவில் வைத்து அந்தச் சீடன் பெற்றுக்கொண்டான். அவர்களுடைய தவறான செயலின் பொறுப்பிலிருந்தது அவர்கள் விடுதலைசெய்யப்படாமலிருந்த போதிலும், பரலோகத்தின் நோக்கத்தைச் செயலாற்றுவதில் யோவானைத் துரத்தி விட்டவர்கள், தேவனுடைய கரத்தில் கருவிகளானார்கள். ஒளியை அணைத்துவிட முயன்ற அதே முயற்சி, சத்தியத்தை மிக நன்றாகத் தெரியுமிடத்தில் வைத்தது! (9)

நாடுகடத்தப்பட்ட அப்போஸ்தலனுக்கு மகிமையின் கர்த்தர் ஓய்வுநாளில் தரிசனமானார். யோவான் யூதேயா நாட்டின் நகரங்களிலும் பேரூர்களிலும் இருந்த மக்களுக்குப் பிரசங்கம் செய்திருந்தபோது, அவன் எவ்விதமாகப் பரிசுத்தமான விதத்தில் ஓய்வுநாளை ஆசரித்திருந்தானோ அதேவிதமாகப் பத்மு தீவிலும் ஓய்வுநாளைப்பற்றி அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த விலைமதிப்புமிக்க வாக்குத்தத்தங்களை அவன் தனக்குரியது என்று உரிமைபாராட்டியிருந்தான். “கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப்பின்னாலே எக்காள சத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.... அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்” (வெளிப்படுத்தல் 1:10–13) என்று அவன் எழுதுகிறான். (10)

இந்த அன்பான சீடன் தாராளமான அனுகூலமுடையவனாக இருந்தான். வேதனையினால் இரத்தத்தின் பெரும் துளிகள் முகத்திலிருந்து வடிந்து அடையாளப்படுத்தியிருந்த அவனுடைய ஆண்டவரை அவன் கெத்சமெனெயில் கண்டான்; “மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்”–ஏசாயா 52:14. ஒரு பழைய சிவப்பு நிற அங்கியை அணிந்து, சிரசில் முள்முடி சூட்டப்பட்டு, ரோம நாட்டு வீரர்களின் கரங்களில் இருந்த அவரை அவன் கண்டிருந்தான். பரிகாசம் அத்துமீறல்கள் ஆகிய வார்த்தைகளால் தூஷிக்கப்பட்ட கொடுமையான காட்சிப்பொருளாகக் கல்வாரிச் சிலுவையின்மீது அவர் தொங்குவதை அவன் கண்டிருந்தான். இப்பொழுது யோவான் மறுபடியும் அவனுடைய கர்த்தரைக் காணும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் அவருடைய தோற்றம் எவ்விதமாக வேறுபட்டிருக்கிறது! இப்பொழுது அவர் மனிதர்களால் நிந்திக்கப்பட்டுக் கேவலப்படுத்தப்பட்ட துயரமிக்க ஒரு மனிதராக இல்லை. அவர் பரலோக ஒளியின் ஆடையை அணிந்திருக்கிறார். அவருடைய சிரசும் தலைமயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் இருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்போல் இருந்தது. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தது. அவருடைய சத்தம் பெரு வெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை எந்திக்கொண்டிருந்தார். அவருடைய வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. அவருடைய முகம் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது. வல்லமையாய்ப் புறப்பட்ட பட்டயம் அவருடைய வார்த்தையின் வல்லமையின் அடையாளமாக இருந்தது. உயிர்த்தெழுந்த கர்த்தரின் மகிமையினால் பத்மு தீவு முழுவதும் பிரகாசமடைந்திருந்தது. (11)

“அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக் களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில்விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்” (வெளிப்படுத்தல் 1:14,15,17) என்றார். யோவான் மகிமைப்படுத்தப்பட்ட அவனுடைய கர்த்தருடைய சமுகத்திற்குமுன்

உயிருடன் இருக்கும்படி பலப்படுத்தப்பட்டிருக்கிறான். அதன்பின், பரலோகத்தின் மகிமைகள் ஆச்சரியமான அவனுடைய தரிசனத்துக்குத் திறக்கப்பட்டன. பூமியின் போராட்டங்களுக்கும் அப்பாலுள்ள தேவனுடைய சிங்காசனத்தையும் வெண்ணங்கி தரித்தவர்களான மீட்கப்பட்டவர்களின் கூட்டத்தையும் பார்ப்பதற்கு அவன் அனுமதிக்கப்பட்டான். பரலோக தூதர்களின் இசையையும் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலும் தங்களுடைய சாட்சியின் வசனத்தினாலும் ஜெயங்கொண்டவர்களின் வெற்றிப்பாடல்களையும் அவன் கேட்டான். தேவனுடைய ஜனங்களின் கிளர்ச்சியூட்டும் அனுபவங்களின் காட்சிகளும், காலத்தின் முடிவுவரையுள்ள சபையின் வரலாறும் ஒன்றன்பின் ஒன்றாக முன்கூறப்பட்டு. யோவானுக்கு விவரிக்கப்பட்டன. அவனுடைய காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்தவர்களும் எதிர்காலத்தில் உள்ளவர்களும் அவர்களுக்குமுன்னுள்ள அபாயங்களையும் போராட்டங்களையும்பற்றிய புரிந்துகொள்ளுதலை அடைந்துகொள்ளும் படியுள்ள முக்கியமான விஷயங்களைப் பதிவு செய்யும்படி அவை யோவானுக்கு அடையாளங்களாகவும் உருவகங்களாகவும் காட்டப்பட்டன. (12)

கிறிஸ்தவ சகாப்தம் முழுவதிலுமுள்ள சபைக்கு வழிகாட்டவும் ஆறுதல் தரவும் இந்த வெளிப்படுத்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், அது ஒரு முத்திரையிடப்பட்ட புத்தகம்; அதன் இரகசியங்களை விளக்கமுடியாது என்று மதசம்பந்தமான ஆசிரியர்கள் அறிவித்திருக்கின்றனர். ஆகையால் அதன் இரகசியங்கைள வாசித்தறிய தியானம்செய்ய காலத்தைச் செலவிட மறுத்து, அநேகர் அந்தத் தீர்க்கதரிசன ஆவணத்திலிருந்து திரும்பியிருக்கின்றனர். தேவனுடைய மக்கள் இந்தப் புத்தகத்தை இவ்விதமாகக் கருதவேண்டுமென்று தேவன் விரும்புகிறதில்லை. “சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கிய வான்கள், காலம் சமீபமாயிருக்கிறது” “இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும்,

இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார். இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்” (வெளிப்படுத்தல் 1:1,3; 22:18–20) என்றான். (13)

தேவனுடைய ஆழமான காரியங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. அது ஒரு முத்திரையிடப்பட்ட புத்தகம் என்று கூறுவதுடன், “வெளிப்படுத்தின விசேஷம்” என்னும் அதன் பெயரே முரண்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் என்றால் ஏதோ ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதாகும். இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள இரகசியங்களைக் கர்த்தர் தாமே அவருடைய ஊழியக்காரனுக்கு வெளிப்படுத்தி, அனைவரும் வாசிக்கும்படி அது திறந்திருக்கவேண்டும் என்று வடிவமைத்திருக்கிறார். யோவானின் நாட்களில் வாழ்ந்திருந்தவர்களுக்கு அதன் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டதைப்போலவே, பூமியின் வரலாற்றின் கடைசி நாட்களில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கும் அதன் சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தீர்க்கதரிசனத்தில் வரையப்பட்டுள்ள காட்சிகளில் சில கடந்த காலத்திற்குரியவை; சில நிகழ்காலத்திற்குரியவை. சில அந்தகார வல்லமைகளுக்கும் பரலோகத்தின் பிரபுவிற்கும் இடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பெரும் போரைக் காட்சிக்குக் கொண்டுவரும் நேரத்தில், புதிய பூமியில் உள்ள மீட்கப்பட்டவர்களின் வெற்றிகளையும் மகிழ்ச்சியையும் சில வெளிப்படுத்துகின்றன. (14)

வெளிப்படுத்தின விசேஷத்தில் கொடுக்கப்பட்டுள்ள உருவகங்கள் ஒவ்வொன்றின் பொருளையும் விளக்கமுடியாததனால் அதில் அடங்கியிருக்கும் சத்தியத்தை அறிந்துகொள்ளும் முயற்சியில்—இந்தப் புத்தகத்தை ஆராய முயலுவதில் பயனில்லை என்று ஒருவரும் எண்ணவேண்டாம். யோவானுக்கு இந்த இரகசியங்களை வெளிப்படுத்தின ஒருவர், சத்தியத்தை அக்கறையுடன் தேடுபவர்களுக்கு பரலோக விஷயங்களின் ஒரு முன்சுவையைக் கொடுப்பார். சத்தியத்தை வரவேற்கத் தங்களின் இருதயங்களைத் திறப்பவர்கள் அதன் போதனைகளைப் புரிந்துகொள்ளும்படி தகுதிப்படுத்தப்பட்டு, “இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்” என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். (15)

வேதாகமத்திலுள்ள எல்லாப் புத்தகங்களும் வெளிப்படுத்தின விசேஷத்தில் சந்தித்து முடிவடைகின்றன. தானியேலின் புத்தகம் அதன் இசைந்துரையாக உள்ளது. ஒன்று தீர்க்கதரிசனமாகவும்

மற்றது வெளிப்படுத்தலாகவும் உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் முத்திரிக்கப்பட்டதல்ல; ஆனால் கடைசி நாட்களைப்பற்றின தானியேல் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி முத்திரிக்கப்பட்டதாக இருந்தது. “முடிவுகால மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு”– தானியேல் 12:4. (16)

அவனுக்குமுன் திறக்கப்படவிருந்ததைப் பதிவுசெய்யும்படி அப்போஸ்தலனுக்குக் கட்டளைகொடுத்தது கிறிஸ்துதான். “அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில்எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது.” “மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது; என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்” (வெளிப்படுத்தல் 1:11,18–20) என்றார். (17)

பல்வேறுபட்ட கிறிஸ்தவ காலகட்டங்களில் இருந்த சபைகளின் உருவகங்களாக இந்த ஏழு சபைகளின் பெயர்களும் உள்ளன. ஏழு என்னும் எண் பூரணத்தைச் சுட்டிக்காட்டி, பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களில் உலக வரலாற்றின் பல்வேறுபட்ட காலகட்டங்களில் உள்ள சபைகளின் நிலைமையை வெளிப்படுத்தும்போது, பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்கள், அந்தத் தூதுகள், காலத்தின் கடைசிவரைக்கும் விரிவடைகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. (18)

ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவுகிறவராக கிறிஸ்து பேசப்பட்டிருக்கிறார். இவ்வாறாக, சபைகளுடனுள்ள அவருடைய உறவு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவர் தமது மக்களுடன் தொடர்ச்சியான தொடர்பை உடையவராக இருக்கிறார். அவர்களுடைய உண்மையான நிலைமையை அவர் அறிந்திருக்கிறார். அவர்களுடைய கிரமம், அவா, பக்தி, அவர்களுடைய தியானம் ஆகிவைகளை அவர் பார்க்கிறார். மேலே உள்ள ஆசரிப்பபுக்கூடாரத்தில் அவர் பிரதான ஆசாரியராகவும் மத்தியஸ்தராகவும் இருந்தபோதிலும், பூமியிலுள்ள அவரது சபைகளில் அவர் மேலும் கீழும் உலாவுகிறவராக எடுத்துக்காட்டப்பட்டுள்ளார். அவருடைய

காவல்காரர்களில் எவருடைய விளக்காவது மங்கி எரிகிறதா அல்லது அணைந்துகொண்டிருக்கிறதா என்பதைக் களைப்பில்லாத விழிப்புடனும், இடைவிடாத எச்சரிக்கையுடனும் கவனித்துப் பார்க்கிறார். அந்தக் குத்துவிளக்குகள் சாதாரணமான மனித கவனிப்பிற்கு விட்டுவிடப்பட்டால், விட்டுவிட்டு எரியும் சுடர்கள் மங்கி அணைந்துவிடும். ஆனால் கர்த்தருடைய வீட்டில் அவர் உண்மையான காவல்காரராகவும் இருக்கிறார். அவருடைய தொடர்ச்சியான கவனிப்பும், தாங்கும் கிருபையும், ஜீவனுக்கும் ஒளிக்கும் ஆதாரமாக உள்ளன. (19)

கிறிஸ்து அவருடைய வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறவராக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறார். நம்பிக்கைக்கு உண்மையாக இருக்கும் எந்த சபையும், தான் இல்லாமலாகிவிடுவோமோ என்று அஞ்சவேண்டிய அவசியம் இல்லை என்பதை இது நமக்கு நிச்சயப்படுத்துகிறது. ஏனெனில் சர்வ வல்லமையுள்ளவரின் பாதுகாப்பில் இருக்கும் எந்த ஒரு நட்சத்திரத்தையும் கிறிஸ்துவின் கரத்திலிருந்து பிடுங்கமுடியாது. (20)

“ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது” (வெளிப்படுத்தல் 2:1). இந்த வார்த்தைகள் தேவனால் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரமுள்ள பொறுப்புக்களை உடையவர்களுக்கு—சபையின் ஆசிரியர்களுக்குக் கூறப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தவேண்டியவர்களாக உள்ள தேவனுடைய ஊழியக்காரர்களுடன் சபையில் ஏராளமாக இருக்கவேண்டிய இனிமையான செல்வாக்கு காட்டப்பட்டுள்ளது. வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் அவருடைய கட்டுப்பாட்டின் கீழே உள்ளன. அவைகளை அவர் ஒளியினால் நிரப்புகிறார். அவைகளின் இயக்கங்களை அவர் வழிநடத்துகிறார். அவர் இதைச் செய்யாமலிருப்பாரானால் அவைகள் விழுந்துபோன நட்சத்திரங்களாக இருக்கும். அவருடைய ஊழியக்காரர்களின் காரியங்களும் அப்படிப்பட்டதாகவே இருக்கிறது. அவர்கள் அவருடைய கரங்களில் கருவிகளாக இருந்து, அவர்கள் நிறைவேற்றும் நல்ல காரியங்கள் அனைத்தும் அவருடைய வல்லமையின்மூலமாகச் செய்யப்படுகிறது. அவர்கள்மூலமாக அவருடைய ஒளி பிரகாசிக்கவேண்டியதாக உள்ளது. அவர்களுடைய திறமையாக இரட்சகர் இருக்கவேண்டியவராக இருக்கிறார். அவர் தமது பிதாவைப் பார்த்ததைப்போல அவர்கள் அவரைப் பார்ப்பார்களானால் அவருடைய பணியைச் செய்வதற்கு தகுதிப்படுத்தப்படுவார்கள். அவர்கள் தேவனைச் சார்ந்தவர்களாகத் தங்களைச் செய்துகொள்ளும்போது, உலகத்தில்

பிரதிபலிக்கும்படி அவர் தமது பிரகாசத்தை அவர்களுக்குக் கொடுப்பார். (21)

அப்போஸ்தலனாகிய பவுலினால் முன்னுரைக்கப்பட்டிருந்த அக்கிரமத்தின் இரகசியம் சபையின் ஆரம்பகால வரலாற்றிலேயே அதன் அழிவுக்குரிய வேலையை ஆரம்பித்திருந்தது. பேதுரு விசுவாசிகளை எச்சரித்திருந்த அந்தத் தவறான ஆசிரியர்கள் தங்களுடைய மதப்புரட்டுகளை வற்புறுத்தினபோது, அநேகர் தவறான கோட்பாடு என்னும் கண்ணியில் அகப்படுத்தப்பட்டனர். சிலர் பரீட்சையின்கீழ் தடுமாறி, விசுவாசத்தை விட்டுவிடும்படி சோதிக்கப்பட்டனர். யோவானுக்கு இந்த வெளிப்படுத்தின சுவிசேஷத்தின்மீது அநேகர் ஆதியில் கொண்டிருந்த அன்பை இழந்திருந்தனர். ஆனால் தேவன் அவருடைய கிருபையினால் சபையைப் பின்னிட்டு விழுந்தநிலைமையில் தொடரும்படி விட்டுவிடாமலிருந்தார். முடிவில்லாத மென்மைமிக்க ஒரு தூதினால் அவர் அவர்கள்மீதுள்ள தமது அன்பையும் நித்தியத்தை நிச்சயமாக அடைவதற்கு அவர்கள் செயலாற்றவேண்டும் என்னும் அவருடைய வாஞ்சையையும் வெளிக்காட்டினார். (22)

சபை குறைபாடுள்ளதாக இருந்தது. அதற்குக் கடுமையான கடிந்துகொள்ளுதலும் தண்டனையும் தேவையாக இருந்தது. சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கைகளைப்பற்றின பார்வையை இழந்திருப்பவர்கள் தங்களுடைய இரட்சிப்பின் நம்பிக்கையை இழக்கநேரிடும் என்னும் எச்சரிப்பு, உபதேசம், வேண்டுகோள்கள் ஆகியவைகளின் தூதுகளைப் பதிவுசெய்யும்படி யோவான் ஏவப்பட்டான். கடிந்துகொள்ளுதலின் வார்த்தைகள் அனுப்பப்படவேண்டியது அவசியம் என்று தேவன் காணும் போதெல்லாம் அந்த வார்த்தைகள் மனம்வருந்தும் விசுவாசிக்கு மென்மையான அன்புடனும் சமாதானத்தின் வாக்குத்தத்தத்துடனும் பேசப்பட்டுள்ளது. “இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்”—வெளிப்படுத்தல் 3:20. (23)

போராட்டத்திற்கு மத்தியில் இருப்பவர்கள், தேவன்மீதுள்ள தங்களுடைய விசுவாசத்தைப் பராமரிக்கவேண்டும். திறந்தவாசலை “உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; ... இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்ட மாட்டான்.” “என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும் படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத்

தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.” “நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை.” “இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு” (வெளிப்படுத்தல் 3:8,10,2,11) என்று விசுவாசிகள் எச்சரிக்கப்பட்டனர். (24)

அவருக்காக அவர்கள் அனுபவிக்கவேண்டியவைகளை தன் உபத்திரவத்தில் தனது சகோதரனும் கூட்டாளியுமாயிருந்தவனின் மூலமாகச் சபைக்கு வெளிப்படுத்தினார். சத்தியத்தின்மீது அவர்கள் கொண்டிருந்த அன்பின் காரணமாக, திரளானவர்கள் பாடுகளை அனுபவிப்பதையும், இரத்தசாட்சிகளாக மரிப்பதையும், நாடுகடத்தப்பட்ட முதிர்வயதானவனாக இருந்த யோவான் நூற்றாண்டுகளுக்கூடாக இருந்த இருளுக்கும் மூடபக்திக்கும் ஊடாகக் கண்டான். ஆனால் அவரது ஆரம்பகால சாட்சிகளைத் தாங்கியிருந்த ஒருவர், நூற்றாண்டுகளுக்கூடாகக் காலத்தின் முடிவுவரை உபத்திரவங்களுக்கூடாகக் கடந்துசெல்லவேண்டியவர்களாக இருந்த அவருடைய விசுவாசமிக்க அடியர்களை அவர் கைவிட மாட்டார் என்பதையுங்கூட அவன் கண்டான். “உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்.” “நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்”—வெளிப்படுத்தல் 1:9; 2:10. (25)

தீமைக்கு எதிரான போராட்டங்களை நடத்தியிருந்த விசுவாசிகளனைவருக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை யோவான் “ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப்புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது.” “ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.” “நான் ஜெயங்கொண்டு என்

பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளிப்படுத்தல் 2:7; 3:5,21) என்று சொல்லக் கேட்டான். (26)

தேவனுடைய பரிசுத்தம், நீதி, வல்லமை ஆகியவைகளுடன் அவருடைய இரக்கம், மென்மை, அன்பு ஆகியவை கலந்திருப்பதை யோவான் கண்டான். அவர்களுடைய பாவங்கள் பயப்படுத்தியிருந்த ஒருவருக்குள், பாவிகள் ஒரு தகப்பனைக் கண்டிருப்பதை அவன் கண்டான். அந்தப் பெரும் போரின் நல்ல முடிவுக்கு அப்பால் அவன் "அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளிப்படுத்தல் 15:2,3) பார்த்தான். (27)

யூதா கோத்திரத்துச் சிங்கம், அடிக்கப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டி ஆகியவைகளின் உருவகத்தில் யோவானுக்குமுன் இரட்சகர் வைக்கப்பட்டிருக்கிறார். இந்த அடையாளங்கள், சர்வ வல்லமையும் சுயத்தைத் தியாகம்செய்யும் அன்பும் ஒன்றுசேர்ந்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. அவருடைய கிருபையை நிராகரிப்பவர்களுக்கு, மிகவும் பயங்கரமானவராக இருக்கும் யூதா கோத்திரத்துச் சிங்கம், கீழ்ப்படிதலும் விசுவாசமும் உள்ளவர்களுக்கு தேவ ஆட்டுக்குட்டியாகவும் இருப்பார். தேவனுடைய பிரமாணங்களை மீறுபவர்களிடம் பயங்கரத்தையும் கோபத்தையும் பேசும் அக்கினி ஸ்தம்பம், அவருடைய பிரமாணங்களைக் காத்திருப்பவர்களுக்கு, ஒளி, இரக்கம், விடுதலை ஆகியவைகளின் அடையாளமாக இருக்கிறது. கலகம் செய்பவர்களை அடிக்கும் புயமானது, இராஜபக்தி உள்ளவர்களை விடுவிப்பதாக உள்ளது. விசுவாசமுள்ளவனாக இருக்கும் ஒவ்வொருவனும் இரட்சிக்கப்படுவான். "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்"—மத்தேயு 24:31. (28)

உலகத்திலுள்ள இலட்சக்கணக்கானவர்களுடன் ஒப்பிடும்போது, தேவனுடைய ஜனங்கள் எப்போதும் இருந்துள்ளதுபோல ஒரு சிறு மந்தையாக இருப்பார்கள். ஆனால் அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதுபோல அவர்கள் சத்தியத்திற்காக நிற்பார்களானால் தேவன் அவர்களுடைய அடைக்கலமாக இருப்பார். அவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனின் விசாலமான கேடயத்தின்கீழ் உள்ளனர். தேவன் எப்பொழுதும் ஒரு பெரும்பான்மையானவராக இருக்கிறார். இறந்தவர்களின் சிறைவீட்டிற்குள் கடைசி எக்காளத்தொனி நுழைந்து செல்லும்போது, நீதிமான்கள் வெற்றியுடன் "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே?" என்று கூறிக்கொண்டு வெளியே வருவார்கள். அப்பொழுது தேவனுடனும் கிறிஸ்துவுடனும் காலம் முழுவதிலும் இராஜபக்தியும் உண்மையும் உள்ளவர்களாக இருந்தவர்களுடனும் சேர்ந்து, தேவனுடைய பிள்ளைகள் பெரும்பான்மையானவர்களாக இருப்பார்கள். (29)

வேதனை தரும் போராட்டங்களுக்கு ஊடாகக் கிறிஸ்துவின் உண்மையான சீடர்கள் சுயமறுப்பைத் தாங்கிக்கொண்டு, கசப்பான ஏமாற்றங்களை அனுபவித்துக்கொண்டு, அவரைப் பின்தொடருவார்கள். ஆனால் இது குற்றம், பாவத்தினாலுண்டாகும் ஆபத்து ஆகியவைகளை அவர்களுக்குப் போதித்து, அதனை வெறுப்புடன் பார்க்கும்படிக்கு அவர்களை நடத்துகிறது. கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறுபவர்களாக இருக்கும் அவர்கள், அவரது மகிமையில் பங்குபெறுபவர்களாக நடத்தப்பட்டுள்ளனர். தேவனுடைய மீதியான சபையின் இறுதியான வெற்றியை பரிசுத்த தரிசனத்தில் தீர்க்கதரிசி கண்டு: " அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளிப்படுத்தல் 15:2,3) என்று எழுதுகிறார். (30)

"பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்"—வெளி. 14:1. இந்த உலகத்தில்

அவர்களுடைய மனங்கள் தேவனுக்கென்று அர்ப்பணம் செய்யப்பட்டவையாக இருந்தன. அவர்கள் நுண்ணறிவுடனும் இதயப்பூர்வமாகவும் அவரைச் சேவித்திருந்தனர். எனவே இப்பொழுது அவரால் அவர்களுடைய நெற்றிகளின் மீது அவருடைய நாமத்தை எழுதமுடியும். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். ஒரு இடத்திற்காகக் கெஞ்சி அலைபவர்களைப்போல அவர்கள் உள்ளேயும் வெளியேயும் செல்லுவதில்லை. “அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்” (மத்தேயு 25:34) என்று கிறிஸ்துவால் கூறப்படக்கூடியவர்களின் எண்ணிக்கையில் அவர்கள் உள்ளனர். “உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” (மத்தேயு 25:21) என்று அவர்களை அவருடைய பிள்ளைகளாகக் கருதி, அவர் வரவேற்கிறார். (31)

“ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்” (வெளிப்படுத்தல் 14:4). பரிசுத்தவான்களின் நீதியாகிய வெண்ணங்கியைத் தரித்தவர்களாக, பரிசுத்தமான சேவைக்கென்று—அதற்கேற்ற தன்மை உள்ளவர்களாக இவர்கள் சீயோன் மலையின்மீது நின்றுகொண்டிருப்பதைப் போல தீர்க்கதரிசியின் தரிசனம் அவர்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவரைத் தொடர வேண்டியவர்களாக இருப்பவர்கள், முன்னதாகவே பூமியில் சிடுசிடுப்பில்லாதவர்களாக அல்லது சலனபுத்தி உள்ளவர்களாக இராமல், நம்பிக்கையுடன் அன்புசெலுத்திக்கொண்டு, விருப்பமிக்க கீழ்ப்படிதலுடன், மேய்ப்பவனை மந்தை பின்தொடருவதுபோல, முதலில் பூமியில் அவரைப் பின்தொடர்ந்திருக்கவேண்டும். (32)

“அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரேயல்லாமல்

வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்"—வெளிப்படுத்தல் 14:2–5. (33)

"யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது." "அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது. அதற்குப் பெரிதும் உயரமுமானமதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன." "பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொருவாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது." "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்"—வெளிப்படுத்தல் 21:2,11,12,21; 22:3–5. (34)

"பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்." "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்"—வெளிப்படுத்தல் 22:1,2,14. (35)

"மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்"—வெளிப்படுத்தல் 21:3. (36) ★

# 58

# வெற்றிகரமான சபை!

**(மூலநூல் : The Acts of the Apostles, பக்கம் : 593–602)**
**திருவசன ஆதாரம் - மத்தேயு 25:34,21**

அப்போஸ்தலர்கள் அவர்களுடைய ஊழியங்களிலிருந்து இளைப்பாறி ஆயிரத்தி எண்ணூறுக்கும் அதிகமான வருடங்கள் (இந்நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது) கழிந்துவிட்டன. ஆனால் கிறிஸ்துவிற்காக அவர்கள் செய்திருந்த உழைப்புகள் தியாகங்கள் ஆகியவைகளின் வரலாறு சபையின் விலைமதிப்புமிக்க பொக்கிஷங்களுக்கு மத்தியில் இன்றும் உள்ளன. பரிசுத்தஆவியின் நடத்துதலின்கீழ் எழுதப்பட்ட இந்த வரலாறு ஒவ்வொரு காலத்திலும் உள்ள கிறிஸ்துவின் அடியார்கள் இரட்சகரின் காரியத்திற்காக பெரும் பேரார்வத்துடனும் அக்கறையுடனும் உந்தப்படவேண்டும் என்பதற்காகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. (1)

கிறிஸ்து அவருடைய சீடர்களுக்குக் கொடுத்த வேலையை அவர்கள் நிறைவேற்றினார்கள். சுவிசேஷத்தை அறிவிக்கும்படி இந்த சிலுவையின் தூதுவர்கள் முன்சென்றபோது, இதற்குமுன் ஒருபோதும் அழிவுக்குரிய மனிதனால் வெளிப்படுத்தப்படாமலிருந்தவிதத்தில் தேவனுடைய மகிமை வெளிப்படுத்தப்பட்டது. தெய்வீக ஆவியின் கூட்டுறவுடன் இந்த உலகத்தை அசைத்து அப்போஸ்தலர்கள் உழைத்தனர். ஒரே தலைமுறையில் ஒவ்வொரு நாட்டுக்கும் சுவிசேஷம் சுமந்துசெல்லப்பட்டது.(2)

கிறிஸ்துவால் தெரிந்துகொள்ளப்பட்டிருந்த அப்போஸ்தலர்களின் ஊழியத்தில் உண்டான பலன்கள் மகிமைமிக்கவையாக இருந்தன. அவர்களுடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அவர்களில் சிலர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களுடைய ஆண்டவருடைய காரியத்தில் அவர்களிடமிருந்து பிரித்துவைக்கப்படாமலிருந்த அர்ப்பணம், அவருடைய போதனையின்கீழ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த

பெரும் பணிக்கு ஒரு ஆயத்தத்தைக் கொடுத்தது. அவர்களுடைய நோக்கங்களை ஊக்குவித்துகொண்டும், அவர்களுடைய செயல்களைக் கட்டுப்படுத்திக்கொண்டும், கிருபையும் சத்தியமும் அவர்களுடைய இருதயங்களில் ஆளுகைசெய்துகொண்டுமிருந்தன. அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவிற்குள் தேவனிடத்தில் மறைந்திருந்தது. முடிவில்லாத அன்பின் ஆழத்தில் சுயம் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. (3)

உண்மையானவிதத்தில் பேசுவதும் ஜெபிப்பதும் எப்படி என்பதை அறிந்த மனிதர்களாக சீடர்கள் இருந்தனர். இஸ்ரவேலின் பலமாக இருந்தவரைப் பற்றிக்கொள்ளக்கூடிய மனிதர்களாக இவர்கள் இருந்தனர். இவ்வாறு அவர்கள் தேவனுக்குப் பக்கத்தில் நின்றிருந்து, அவர்களுக்குச் சொந்தமாக இருந்த கனத்தை தேவ சிங்காசனத்துடன் பிணைத்திருந்தனர்! யேகோவா அவர்களுடைய தெய்வமாக இருந்தார். அவருடைய கனம் அவர்களுடைய கனமாக இருந்தது. அவருடைய சத்தியம் அவர்களுடைய சத்தியமாக இருந்தது. சுவிசேஷத்தின்மீதுண்டான எந்தத் தாக்குதலும் அவர்களுடைய ஆத்துமாக்களை ஆழமாக வெட்டுவதைப்போலிருக்க, அவர்களுடைய சகல வல்லமைகளுடனும் கிறிஸ்துவின் காரியத்திற்காக அவர்கள் போரிட்டிருந்தனர். அவர்கள் பரலோக அபிஷேகத்தைப் பெற்றவர்களாக இருந்ததினால், அவர்களால் ஜீவவார்த்தையை உயர்த்திப் பிடிக்கமுடிந்தது. அவர்கள் அதிகமாக எதிர்பார்த்தார்கள். ஆகையால் அதிகமாக முயன்றார்கள். கிறிஸ்து தாமே தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார். வழிகாட்டுதலுக்காக அவர்கள் அவரைப் பார்த்திருந்தனர். சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் அவர்களுடைய தன்மை, எதிர்ப்பைத் தாங்கி நிற்கக்கூடிய அவர்களுடைய வல்லமை, ஆகியவை அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருந்ததற்குத் தக்கதாக இருந்தது. அவர்களுடைய ஒவ்வொரு பிரசங்கத்தின் கருப்பொருளாகவும் தேவனுடைய ஞானமும் வல்லமையுமாக இருந்த இயேசுகிறிஸ்து இருந்தார். இரட்சிக்கப்படும்படிக்கு கட்டளையிடப்பட்ட அவரது நாமம், அவர்களால் உயர்த்தப்பட்டது! உயிர்த்தெழுந்த இரட்சகரான கிறிஸ்துவின் சம்பூரணத்தை அவர்கள் அறிவித்தபோது, அவர்களுடைய வார்த்தைகள் இருதயங்களை அசைத்தன. அதினால் ஆண்களும் பெண்களும் சுவிசேஷத்திற்கு ஆதாயப்படுத்தப்பட்டனர். இரட்சகரின் பெயரைத் தூஷித்து, அவருடைய வல்லமையை நிந்தித்திருந்த திரள்கூட்டமானவர்கள் இப்பொழுது தங்களை சிலுவையிலறையப்பட்டவரின் சீடர்கள் என்று அறிக்கை செய்தனர். (4)

அப்போஸ்தலர்கள் அவர்களுடைய பணியை அவர்களுடைய சுயபலத்தால் நிறைவேற்றாமல் ஜீவனுள்ள தேவனின் வல்லமையினால்

நிறைவேற்றியிருந்தனர். அவர்களுடைய பணி எளிதானதாக இருக்கவில்லை. கடினமும் கசப்புமிக்க துயரமும் உள்ளதாக கிறிஸ்தவ சபையின் ஆரம்ப வேலைகள் இருந்தன. தனிமை, இகழ்ச்சியை உண்டுபண்ணும் செயல், உபத்திரவம் ஆகியவைகளை சீடர்கள் அவர்களுடைய பணியில் தொடர்ச்சியாகச் சந்தித்திருந்தனர். அவர்கள் தங்களுடைய ஜீவனைத் தங்களுக்கு அருமையானதாக எண்ணாமல், கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவிக்கும்படி அழைக்கப்பட்டதில் களிகூர்ந்தனர். தீர்மானமின்மை முடிவுசெய்யமுடியாமை, நோக்கத்திலிருந்த பலவீனம், ஆகியவைகளுக்கு அவர்களுடைய முயற்சிகளில் இடம் காணப்படாமலிருந்தது. அவர்கள் செலவுசெய்யவும் பயன்படுத்தப்படவும் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். அவர்களிடம் தங்கியருந்த அவர்களுடைய பொறுப்பைப்பற்றின மனஉணர்வு அவர்களுடைய அனுபவத்தைத் தூய்மைப்படுத்தி, செழுமைப்படுத்தியிருந்தது. கிறிஸ்துவிற்காக அவர்கள் அடைந்த வெற்றியில் பரலோகத்தின் கிருபை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சுவிசேஷத்தை வெற்றிகரமானதாக்கும்படி சர்வவல்லமையுள்ள தேவனின் வல்லமை அவர்கள்மூலமாகச் செயலாற்றியது. (5)

கிறிஸ்துதாமே போட்டிருந்த அஸ்திவாரத்தின்மீது அப்போஸ்தலர்கள் தேவனுடைய சபையைக் கட்டினார்கள். சபையைக் கட்டுவதை சித்தரித்துக் காட்டுவதில் ஒரு ஆலயத்தைக் கட்டுகின்ற உருவகம் வேதவாக்கியங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருந்தன. கர்த்தருடைய ஆலயத்தை நிர்மாணம் செய்யவேண்டிய கிளையாக கிறிஸ்துவைச் சகரியா உருவகமாகச் சுட்டிக்காட்டுகிறான். அந்த வேலையில் புறஜாதியினர் உதவுவதாக அவர் பேசுகிறான். “இதோ, ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப்படும்; அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பிக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்.” “தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக்கூட இருந்து கட்டுவார்கள். அந்நியரின் புத்திரர் என் மதில்களைக் கட்டுவார்கள்” “அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்”–சகரியா 6:12,15; ஏசாயா 60:10.(6)

இந்த ஆலயத்தைக் கட்டுவதைப்பற்றி எழுதும்போது, பேதுரு: “தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்” (1 பேதுரு 2:4.5) என்றான்.(7)

யுத, புறஜாதி உலகமான கல் குவாரிகளிலிருந்து அந்த அஸ்திவாரத்தின்மேல் கட்டுவதற்காக கற்களைக் கொண்டுவந்து அப்போஸ்தலர்கள் வேலைசெய்திருந்தனர். எபேசுவிலிருந்த விசுவாசி களுக்கு எழுதின கடிதத்தில் பவுல்: “ஆகையால், நீங்கள் இனிஅந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர் களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ் தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்.” (எபேசியர் 2:19–22) என்று எழுதினான். (8)

கொரிந்தியர்களுக்கு: “எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்” (1 கொரிந்தியர் 3:10–13) என்று எழுதினான். (9)

காலாகாலங்களாக இருந்த கன்மலையாகிய நிச்சயமான அஸ்திவாரத்தின்மீது அப்போஸ்தலர்கள் கட்டினார்கள். அவர்கள் உலகத்தி லிருந்து வெட்டியெடுத்த கற்களை இந்த அஸ்திவாரத்தினிடத்திற்குக் கொண்டுவந்தார்கள். கட்டுகிறவர்கள் இடையூறுகள் எதுவும் இல்லாமல் கட்டவில்லை. கிறிஸ்துவின் எதிரிகளிடமிருந்துண்டான எதிர்ப்பினால் அவர்களுடைய வேலை அதிகமான கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தது. தவறான அஸ்திவாரத்தின்மேல் கட்டிக்கொண்டிருந்தவர்களிடத்திலிருந்து உண்டான மதவிரோதம், தவறான எண்ணம், வெறுப்பு ஆகியவைகளை எதிர்த்து, அவர்கள் போராடவேண்டியதாக இருந்தது. சபையைக் கட்டுகிறவர்களாக வேலைசெய்திருந்தவர்களில் அநேகர், நெகேமியாவின் நாளில் சுவரைக் கட்டியிருந்தவர்களுடன் ஒப்பிடக்கூடியவர்களாக இருந்தனர். இவர்களைப்பற்றி: “அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமைசுமக்கிறவர்களும்,

சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்" (நெகேமியா 4:17) என்று எழுதப்பட்டிருக்கிறது. (10)

தேவனுடைய ஆலயத்தை அழிக்க அரசர்களும் ஆளுநர்களும் அதிபதிகளும் வகைதேடியிருந்தனர். ஆனால் சிறைவாசம், சித்திரவதை, மரணம் ஆகியவைகளுக்குமுன் விசுவாசமுள்ள மனிதர்கள் வேலையை முன்கொண்டு சென்றிருந்தனர். அதனால் அதன் உருவம் அழகு உள்ளதாகவும், இசைவான அளவுள்ளதாகவும் வளர்ந்தது. அவர்களைச் சூழ அமைந்திருந்த மூடநம்பிக்கை என்னும் மேககூட்டத்தினால் சில சமயங்களில் வேலைக்காரர்கள் ஏறத்தாழ பார்வையை இழந்தவர்களாக இருந்தனர். சில சமயங்களில் அவர்களுடைய விரோதிகளின் வன்முறையினால் ஏறத்தாழ மேற்கொள்ளப்பட்டிருந்தனர். ஆனால் தடுமாறாத விசுவாசத்துடனும் தோற்காத தைரியத்துடனும் அவர்கள் வேலையை முன்கொண்டு சென்றிருந்தனர். (11)

கட்டுபவர்களின் முன்னணியில் இருந்தவர்கள் ஒருவர்பின் ஒருவராக எதிரியின் கரத்தால் விழுந்தனர். ஸ்தேவான் கல்லெறியப்பட்டான்; யாக்கோபு பட்டயத்தால் கொலைசெய்யப்பட்டான்; பவுல் சிரச்சேதம் பண்ணப்பட்டான்; பேதுரு சிலுவையில அறையப்பட்டான்; யோவான் நாடு கடத்தப்பட்டான்; இருந்தபோதிலும் சபை வளர்ந்தது. விழுந்துபோனவர்களின் இடத்தைப் புதிய வேலைக்காரர்கள் நிரப்பினார்கள். அந்தக் கட்டிடத்தின்மீது கல்லின்மேல் கல் சேர்க்கப்பட்டது. இவ்வாறாக தேவனுடைய சபையாகிய ஆலயம் மெதுவாக உயர்ந்தது. (12)

கிறிஸ்தவ சபையின் அமைப்பின்மீது நூற்றாண்டுகளாகப் பயங்கரமான உபத்திரவம் பின்தொடர்ந்தது. ஆனால் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதைவிட ஜீவனை ஒருபோதும் அருமையாக விரும்பாத மனிதர்கள் இருந்தனர். அவர்களைப்பற்றி: "வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத் தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமா யிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்" (எபிரெயர் 11:36–38) என்று எழுதப்பட்டுள்ளது. (13)

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுபவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணியை நிறுத்துவதற்கு நீதியின் பகைவன் செய்யாமல் விட்ட முயற்சி எதுவும் இருக்கவில்லை. ஆனால் தேவன் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப்பண்ணாதிருக்கவில்லை. “அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை” (அப்போஸ்தலர் 14:17). பரிசுத்தவான்களிடத்தில் ஒருவிசை ஒப்படைக்கப்பட்டிருந்த சத்தியத்தைத் திறமையுடன் பாதுகாக்க ஊழியக்காரர்கள் எழுப்பப்பட்டனர். சோதனைக்கிடையிலிருந்த இந்த மனிதர்களின் தைரியத்தையும், வீரத்தன்மையையும் குறித்த ஆவணத்தை வரலாறு கொண்டுள்ளது. அப்போஸ்தலர்களைப்போல அநேகர் அவர்கள் நின்றிருந்த இடத்தில் விழுந்தனர். ஆனால் ஆலயம் கட்டும் பணி சீராக முன்சென்றிருந்தது. வேலைக்காரர்கள் கொலைசெய்யப்பட்டனர். ஆனால் வேலை முன்சென்றிருந்தது. வால்டென்னியர்கள், ஜான் விக்ளி∴ப், ஹஸ், ஜெரோம், மார்ட்டின் லுத்தர், ஸ்விங்ளி, கிரான்மர், லாட்டிமர், நாக்ஸ், ஹூக்நாட்ஸ், ஜான், சார்லஸ் வெஸ்லி இன்னும் திரளான அநேகர் நித்தியகாலம் முழுவதிலுமாகத் தாங்கி நிற்கக்கூடிய அஸ்திவாரப்பொருட்களைக் கொண்டுவந்தனர். தேவனுடைய வார்த்தையை எங்கும் பரப்புவதற்கு பின்வந்த வருடங்களில் மேன்மையான விதத்தில் முயன்றவர்களும், தங்களுடைய சேவையினால் அஞ்ஞான நாடுகளில் கடைசிப்பெரும் தூதை அறிவிக்க ஆயத்தமாயிருந்தவர்கள் அனைவரும், அந்த வடிவத்தை உயர்த்த உதவினார்கள். (14)

அப்போஸ்தலர்களின் காலங்களிலிருந்து, கடந்துபோன நாட்களில் இருந்து, தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகின்ற பணி ஒருபோதும் நிற்கவில்லை. நூற்றாண்டுகளுக்கு ஊடாக, நாம் பின்பக்கமாகத் திரும்பிப்பார்த்து, தவறு, மூடநம்பிக்கை ஆகிய இருளுக்கு ஊடாக அந்த ஆலயத்தைக் கட்டுவதற்காக இணைக்கப்பட்ட ஜீவனுள்ள கற்களிலிருந்து ஒளிக்கதிர்கள் பிரகாசிப்பதைப் பார்க்கலாம். நித்தியகாலம் முழுவதிலும் இந்த விலைமதிப்புமிக்க ஆபரணங்கள் அதிகரிக்கும் ஒளியுடன் பிரகாசித்து, தேவனுடைய சத்தியத்திற்குச் சாட்சி பகர்ந்துகொண்டிருக்கும். இந்த பட்டை தீட்டப்பட்ட கற்களிலிருந்து வீசும் ஒளி, ஒளிக்கும் இருளுக்கும், சத்தியத்தின் பொன்னுக்கும் தவறின் களிம்புக்கும் இடையில் உள்ள வேற்றுமையை ஒப்பிட்டு வெளிப்படுத்துகிறது. (15)

பவுலும் அப்போஸ்தலர்களும் அவர்களுக்குப்பின் வாழ்ந்திருந்த நீதிமான்களும் ஆலயத்தைக் கட்டுகின்ற பணியில் தங்கள் பங்கை செயலாற்றியிருந்தனர். ஆனால் அந்த வடிவம் இன்னும் நிறைவடையவில்லை. இந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் செயலாற்றவேண்டிய

ஒரு வேலை நமது பங்காக உள்ளது. சோதனை என்னும் நெருப்பில் நிற்கக்கூடிய பொருட்களை நாம் அந்த அஸ்திவாரத்தினிடம் கொண்டுவரவேண்டும். பொன், வெள்ளி, விலைமதிப்புமிக்க கற்களாகிய சித்திரம்தீர்த்த அரண்மனை மூலைக்கற்களைப்போலவும் உள்ளவைகளை நாம் கொண்டுவரவேண்டும் (சங்கீதம் 144:12). இவ்வாறாக, தேவனுக்காகக் கட்டுபவர்களுக்குப் பவுல் தைரியத்தையும் எச்சிரிக்கையையும் தரக்கூடிய வார்த்தைகளை: “அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்” (1 கொரி. 3:14,15) என்று எழுதுகிறார். தேவனுடைய வார்த்தையை முன்வைக்கும் கிறிஸ்தவன் ஆண்களையும் பெண்களையும் சமாதானம் என்னும் பாதைக்குள் நடத்துகிறான். அவன் தாங்கிநிற்கக்கூடிய பொருட்களை அஸ்திவாரத்திடம் கொண்டுவருகிறான். தேவனுடைய இராஜ்யத்தில் அப்படிப்பட்டவன் ஞானமாகக் கட்டுகிறவன் என்னும் கனத்தைப் பெறுவான். (16)

“அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்” (மாற்கு 16:20) என்று அப்போஸ்தலர்களைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்து அன்று சீடர்களை அனுப்பினதுபோல, இன்று அவருடைய சபை அங்கத்தினர்களை அனுப்புகிறார். அப்போஸ்தலர்கள் அடைந்திருந்த அதே வல்லமை அவர்களுடையதாக இருக்கிறது. அவர்கள் தேவனை அவர்களுடைய பலமாகக்கொள்ளுவார்களானால், அவர் அவர்களுடன் செயலாற்றுவார். அவர்கள் வீணாக வேலைசெய்யமாட்டார்கள். அவர்கள் ஈடுபட்டிருக்கும் பணி, கர்த்தர் தமது முத்திரை பதித்துள்ள ஒரு பணியாக இருக்கிறது என்பதை அவர்கள் நினைவுகூருவார்களாக. கர்த்தர்: “ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவை களையெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி, கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்” (எரேமியா 1:7–9) என்று எரேமியாவிடம் கூறினார். அவருடைய பரிசுத்தமான தொடுதல், நமது உதடுகளின்மீது உள்ளது என்னும் உர்ச்சியுடன் அவர் நமக்குக் கொடுக்கும் வார்த்தைகளை அவரது கட்டளையின்படிப் பேச நாம் முன்செல்லுவோம். (17)

ஒரு பரிசுத்தமான பொறுப்பைக் கிறிஸ்து சபைக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய கிருபையின் பொக்கிஷங்களையும் கிறிஸ்துவின் ஆராய்ந்து முடியாத ஐசுவரியங்களையும் உலகத்திற்குக் கொடுக்கக்கூடிய தேவனுடைய வாய்க்காலாக ஒவ்வொரு அங்கத்தினரும் இருக்கவேண்டும். உலகத்திற்கு அவருடைய ஆவியையும் அவருடைய சுபாவத்தையும் எடுத்துக்காட்டக்கூடிய முகவர்களாக இருக்கக்கூடியவர்களைவிட இரட்சகர் அதிகமாக விரும்புகின்றது எதுவும் இல்லை. இரட்சகரின் அன்பை மானுடத்தின்மூலமாக வெளிக்காட்டக்கூடியதைவிட உலகத்துக்குத் தேவைப்படுவது வேறு எதுவும்இல்லை. எந்த ஆண்கள், பெண்கள்மூலமாகக் கிறிஸ்தவ மார்க்கத்தின் வல்லமையைத் தேவனால் வெளிப்படுத்தமுடியுமோ, அப்படிப்பட்டவர்களுக்காகப் பரலோகம் முழுவதும் காத்திருக்கிறது. (18)

ஒரு சிறப்பான பணியைச் செய்யும்படி தேவனால் அதிகாரப்படுத்தப்பட்டு சுவிசேஷத்தை அறிவிக்கின்ற தேவனுடைய ஏதுகரமாக சபை இருக்கிறது. அவள் அவருடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து, அவருக்கு இராஜ விசுவாசம் உள்ளவளாக இருந்தால், இஸ்ரவேலின் கர்த்தராகிய தேவனைக் கனப்படுத்தினால், அவளுக்கு எதிராக நிற்கக்கூடிய எந்த வல்லமையும் இருக்காது. (19)

தேவனுக்காகவும் அவரது காரியத்திற்காகவும் சீடர்களிடமிருந்த பேரார்வம் பலத்த வல்லமையுடன் சுவிசேஷத்திற்குச் சாட்சியாக இருக்கும்படி சீடர்களை அசைத்தது. மீட்கும் கிறிஸ்துவின் அன்பையும் சிலுவையில் அறையப்பட்ட அவரையும்பற்றிய கதையைக் கூறும் தீர்மானம் என்னும் பேரார்வத்தினால் நமது இருதயங்கள் பற்றி எரியவேண்டாமா? கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருப்பது மட்டுமன்றி நமது இரட்சகரின் வருகையை விரைவுபடுத்துவதும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள சலுகையாக உள்ளது. (20)

உலகத்துடனுள்ள சகல உறவுகளிலிருந்தும் பின்வாங்கி, சபையானது கிறிஸ்துவின் நீதியாகிய உடையை அணிந்துகொண்டால், அவளுக்குமுன்பாக ஒரு பிரகாசமும் மகிமையும்மிக்க நாளின் உதயம் இருக்கிறது. அவளுக்கான தேவனுடைய வாக்குத்தத்தம் என்றென்றைக்கும உறுதியாக நிற்கும். அவர் அவளை நித்திய காலத்திற்குமாக உயர்த்தி, அநேக தலைமுறைகளின் மகிழ்ச்சியாக்குவார். தன்னை நிந்தித்து நிராகரிப்பவர்களைச் சத்தியம் கடந்துசென்று வெற்றியடையும். சில சமயங்களில் புறத்தோற்றத்திற்கு வளராமல் நின்றுவிட்டதுபோல் இருந்தாலும், அதன் முன்னேற்றம் ஒருபோதும் தடுத்து நிறுத்திவைக்கப்படவில்லை. தேவனுடைய தூது எதிர்ப்பைச் சந்திக்கும்போது, அது பெரும் செல்வாக்கைச் செயலாற்றும்படி

அவர் அதற்கு அதிகப்படியான வலிமையைக் கொடுக்கிறார். தெய்வீக ஈவுகளைப் பெற்றதான அது, அதன் பாதையில் உள்ள பலத்த தடைகளை வெட்டிச்சென்று ஒவ்வொரு தடையின்மீதும் வெற்றிபெறும். (21)

தேவகுமாரனின் வாழ்க்கையின் உழைப்பின்போதும், தியாகபலியின் போதும் எது அவரைத் தாங்கியிருந்தது? அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு, அதினால் திருப்தியடைந்தார். அவர் நித்தியத்திற்குள் பார்த்து, அவருடைய அவமானத்தின்மூலமாக மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொண்டவர்களின் சந்தோஷத்தைக் கண்டார் மீட்கப்பட்டவர்களின் ஆர்ப்பரிப்பை அவருடைய செவிகள் கேட்டன. அவர்கள் மோசேயின் பாடலையும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலையும் பாடுவதை அவர் கேட்டார். (22)

பரலோகத்தின் ஆசீர்வாதமாக இருக்கும் எதிர்காலத்தைப்பற்றி ஒரு தரிசனத்தை நாம் உடையவர்களாகலாம். எதிர்கால மகிமை, தேவனுடைய கரத்தினால் சித்தரிக்கப்பட்டுள்ள காட்சிகள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவைகள் அவருடைய சபைக்கு அருமை யானவைகளாக உள்ளன. நாம் நித்திய நகரத்தின் நுழைவாயிலில் நின்று, இந்த வாழ்க்கையில் அவருடன் கூட்டுறவுகொண்டிருந்தவர்களுக்கு —கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவிப்பது ஒரு கனம் என்று கருதியிருந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் கிருபைமிக்க வரவேற்பை கேட்கலாம். “வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்” என்னும் வார்த்தைகள் கூறப்படும்போது, அவர்கள் தங்களுடைய கிரீடங்களை மீட்பரின் பாதத்தில் வைத்து, “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்...சிங்காசனத் தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக” (மத்தேயு 25:34; வெளிப்படுத்தல் 5:12,13) என்றார்கள். (23)

அங்கு மீட்கப்பட்டவர்கள் அவர்களை இரட்சகரிடத்திற்கு நடத்தினவர் களை வாழ்த்துகின்றனர். தேவனுடைய ஜீவனுக்கிணையான ஜீவனை மனிதர்கள் பெற்றுக்கொள்வதற்காக, மரித்தவரைத் துதிப்பதில் அவர்கள் ஒன்றுபடுகின்றனர். போராட்டம் முடிந்துவிட்டது; உபத்திரவமும் கலகமும் முடிவுக்கு வந்துள்ளன. அடிக்கப்பட்டு மறுபடியும் உயிருடன் இருக்கும்

ஒரு வெற்றிவீரர் தகுதியானவர்! தகுதியானவர்! என்னும் வெற்றிப் பாடலின் இசை பரலோகம் முழுவதையும் நிரப்புகிறது. (24)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" (வெளிப்படுத்தல் 7:9–10). (25)

"அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார் என்றான்." "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது"–வெளிப்படுத்தல் 7:14–17; 21:4. (26) ★